GALAW | Gary Anandasangaree & Associates
Professional Corporation
• Real Estate • Corporate
• Commercial • Immigration
• Family • Wills & Estate
416 321 1100
10 Milner Business Court Suite 210
Toronto Ontario M1B 3C6

# தாய் வீடு

THAIVEEDU SEPTEMBER 2014 செப்ரெம்பர் HOME & LIVING

INCOME TAX
SELVA VETTYVEL
Broker of Record
Cell: 416.568.4301
Bus: 905.201.9977
HomeLife Future Realty Inc. Brokerage
205-7 Eastvale Drive, Markham, ON L3S 4N8
*Independently Owned and Operated, REALTOR®



# தவில்மேதை தட்சணாமூர்த்தியின் கதை ஆவணப்படமாகிறது

## - இயக்குனர் அம்ஷன் குமாருடன் ஒரு நேர்காணல்

## தாய்வீடு பத்திரிகை நடத்தும் அரங்கியல் விழா - ஒக்ரோபர் 18, 19

RAMAN HOME COMFORT INC
HEATING
Quality Products, Certified Technicians Reliable Service & Reasonable Prices
எமக்கூடாக Furnace வாங்கும்போது ஒன்ராரியோ அரசு வழங்கும் Rebateஐப் பெற்றுக்கொள்ளலாம்
General Contractors For:
• Air Conditioning • Gas Furnaces • Central Vacuum
• Air Cleaners • Gas Fireplaces
• Garage Door Openers • Security Alarm
Tel: 647-893-4414
Email: info@ramanhomecomfort.com
Heating & Air-conditioning contractors
www.ramanhomecomfort.com
Raman Home Comfort Inc
Raman Chelliah
Sales Person
647-893-4414
Scarborough : C105-6055 Steeles Ave. East, Scarborough, ON M1X0A7

Suren Nathan AMP
Mortgage Broker
License# M08004479
Dir. 416-436-1111
Office. 416-548-7475 Fax: 416-548-7496
suren@bonafidemortgage.ca
7 Eastvale Drive,Unit 203, Markham, ON, L3S 4N8
BonaFide Mortgage Solutions Inc. the true freedom...

ALL YOUR REAL ESTATE & MORTGAGE NEEDS
வீடு என்பது தொடுவானம் அல்ல
கலங்கரை விளக்கு...
Thana Yoganathan
416.418.5749 www.thanahomes.com

வீடு வியாபார நிலையம்
வாங்க விற்க
HomeLife Today Realty Ltd.,
Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, ON, M1P 4S6
Bus: 416-298-3200, Fax: 416-298-3440, E-mail: kuna@kunahomes.ca
*Independently Owned and Operated.
Kuna Nagalingam
Sales Representative
Sujatha Kunasegar
Sales Representative
416.402.4545

Your discovery to a new beginning is easier than you think!
Jey Rukmanykanthan B.Sc
(Sales Representative)
Home Life GTA Realty Inc.
Cell: 416 845 5629
email: jey@realtorjey.com

Ahilan Thanabalasingham
Sales Representative
416.617.1767
Office: 416.259.2002
rapid realty inc.
80 Nashdene Road, (Building B), # 211
Toronto, ON M1V 5E4

Pyramid Group
Uthayan Sivarajah
Sales Representative
Dir: 416-301-5555
Sugan Sivarajah
Sales Representative
Dir: 416-890-9999
Raj Sivarajah
Sales Representative
Dir: 416-823-9797
Sivakumar Sivarajah
Sales Representative
Dir: 416-453-7777
HomeLife/ Future Realty Inc., Brokerage
#205-7 Eastvale Drive, Markham, ON L3S 4N8


SERVING YOU IS MY PRIORITY
BECAUSE I CARE
Raj Ariyanayagam
Real Estate Broker
416.930.4663
rajhomes@hotmail.com
PLATINIUM AWARD WINNER 2012
GOLD AWARD WINNER 2009 TO 2011
HOMELIFE
HIGHER STANDARDS
Homelife Today Realty Ltd.
Brokerage*
31 Progress Ave, Unit 210
Toronto, ON. M1P 4S6
416.298.3200
SMARTER
BOLDER
FASTER
MISSISSAUGA
$599,900
Derry & Tenth Line, absolutely gorgeous 4 bdrms and 3 wshrm house, hardwood floor, gourmet kitchen, granite counter top.
TORONTO
$79,900
Pharmacy / Finch
Well established business for sale
TORONTO
$224,900
Markham /401
2+1 bdrms, 2 wshrm.
BRAMPTON
$769,900
Goreway / Castlemore
4 bdrms, 4 wshrms
MISSISSAUGA
$295,000
Bristol / Hurontario N of 403
2 bdrms, 2 wshrms
TORONTO
$314,900
Mccowan / Ellesmere
2+1 bdrms, 2 wshrms
TORONTO
$254,900
Mccowan / Steeles
2+1 bdrms, 2 wshrms
STOUFFVILLE
$706,000
Ninth Line / Reeves Way
4 bdrms, 4 wshrms
VAUGHAN
$629,000
Keele/ Kirby
3+1 bdrms, 4 wshrms, bsmt apt.
TORONTO
$559,000
Warden / Danforth
3 bdrms, 3 wshrms.
TORONTO
$390,000
Mccowan / 401
3 bdrms, 2 wshrms.
*INDEPENDENTLY OWNED & OPERATED. NOT INTENDED TO SOLICIT PROPERTIES CURRENTLY LISTED FOR SALE OR INDIVIDUALS CURRENTLY UNDER CONTRACT WITH BROKERAGE

## கல்வியில் உச்சம் தொடும் தமிழ் மாணவியர்

தமிழர்களின் பாரம்பரிய பரம்பரைச் சொத்துகளில் ஒன்று கல்வி. ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் இலங்கையில் கல்வியறிவு பெற்றோரில் 80 விழுக்காட்டினர் தமிழர்களாகவே இருந்தனர். '70கள் வரை இலங்கைப் பல்கலைக்கழகங்களின் அனுமதியில் அதிக விழுக்காட்டினர் தமிழர்களாக இருந்ததன் விளைவே தரப்படுத்துதல் என்ற இன விகிதாசார அனுமதி முறை.

மிகச் சிறப்பான கல்வி ஆளுமை கொண்ட சமூகமாக ஈழத்தமிழ்ச் சமூகம் அடையாளப்படுத்தப்பட்டிருந்ததை எவரும் மறுக்க முடியாது.

அத்தகைய கல்வி ஆற்றல், புதிய வாழ்புலங்களில் வாழ்ந்துகொண்டிருக்கும் தமிழரிடையே பல இடர்களையும் கடந்து புத்தொளி வீசி வருகின்றது. இது ஆச்சரியமான செய்தியல்ல. எம் இனத்தின் இயல்பு இதுதானாயினும் இது மிக மகிழ்ச்சி தரும் செய்தி.

அண்மையில் ஒன்றாரியோ பெரும்பாகத்தில் (GTA) உயர் பாடசாலைகள் நடத்திய இறுதித் தேர்வில் அதிக மதிப்பெண்களைப் பெற்ற மாணவர்களின் விபரங்கள் வெளியிடப்பட்டன. ரொரான்ரோ பெரும்பாகத்தில் நான்கு அரச கல்விச்சபைகளும் நான்கு கத்தோலிக்க கல்விச்சபைகளும் இயங்குகின்றன. இந்த எட்டுக் கல்விச் சபைகளில் நான்கு கல்விச் சபைகளின் உயர்புள்ளி பெற்ற மாணவர் பட்டியலில் நான்கு தமிழ் மாணவியர் இடம்பெற்றிருந்தமை பெரு மகிழ்ச்சியை ஏற்படுத்துவதுடன் இனம் சார்ந்த பெருமையையும் எமக்குள் ஏற்றுகின்றன.

ரொரான்ரோ கத்தோலிக்கக் கல்விச்சபையைச் சார்ந்த மாணவியான மீனா பாலசுப்பிரமணியம் 100 புள்ளிகள். பீல் கல்விச்சபையைச் சார்ந்த மாணவியான பத்மஜா ஸ்ரீராம் 100 புள்ளிகள். டுறம் கல்விச் சபையைச் சார்ந்த மாணவியான நிதிசா ஜெயகாந்தன் 98.83 புள்ளிகள். பீல் கத்தோலிக்கக் கல்விச்சபையைச் சார்ந்த மாணவியான சரண்யா மகேஸ்வரன் 98 புள்ளிகள் பெற்று உயர்நிலை எய்தியுள்ளனர்.

இந்த நான்கு மாணவியரும் எம்மைப் பெருமகிழ்ச்சியில் ஆழ்த்தியதுடன் இனத்தின் பெருமையையும் உயர்த்தியுள்ளனர்.

நாம் இந்த மண்ணிலே குடியேறிய 30 ஆண்டுகால வரலாற்றில் கல்வித்துறையில் ஆங்காங்கே பல சாதனைகள் நம்மவர்களால் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இப்போது அவை தொடர்சாதனைகளாக பரவலாக எங்கும் நிகழ்த்தப்படுகின்ற நிலை ஏற்பட்டுள்ளது. இந்தக் காத்திரமான கல்விச்சூழல் தொடர்ந்து பேணப்படல் வேண்டும்.

இந்த மாணவியரின் அரிய முயற்சி பின்தொடர்வோருக்குச் சிறந்த வழிகாட்டலாகவும் ஊக்கம் கொடுப்பதாகவும் அமையும்.

இந்த நான்கு மாணவியரையும் தாய்வீடு பாராட்டி வாழ்த்துகின்றது.

இம் மாணவர்களின் வெற்றிகளுக்குக் காரணமான பெற்றோருக்கும் ஆசிரியர்களுக்கும் தாய்வீட்டின் நன்றி கலந்த பாராட்டுகள்.

இம்மாணவியர் தொடரும் உயர்கல்வி, எம் சமூகத்திற்கும் நாம் வாழும் கனடா நாட்டிற்கும் பெரும் பயன் நல்க வேண்டும். இவர்கள் கல்வியால் மனித வளம் சிறக்க வேண்டும்.

இதுவே இவர்களை நோக்கித் தாய்வீடு விடுக்கும் வேண்டுகோள்.

வாழ்த்துகள்!

Publisher & Editor : P.J. Dilipkumar
பதிப்பாளர், ஆசிரியர் : பி.ஜெ. டிலிப்குமார்

ஆலோசகர் குழு : சேரன், துஷி ஞானப்பிரகாசம், ஞானம் லெம்பட், கந்தசாமி கங்காதரன், கருணா, பொன்னையா விவேகானந்தன்

ஓவியங்கள் : ஆசை இராசையா (இலங்கை) ட்ராட்ஸ்கி மருது (இந்தியா), ஜீவா (இந்தியா) கருணா (கனடா), K. கிருஷ்ணராஜா (இங்கிலாந்து) ரமணி (இலங்கை)

புகைப்படங்கள் : கருணா, துசியந்தன் துரைரத்தினம், K. கிருஷ்ணராஜா (இங்கிலாந்து).

தட்டச்சு : கௌரி, ஜீவா, சாம் டானியல்

ஒப்புநோக்கல் : கௌரி, கந்தசாமி கங்காதரன்.

வரைகலை ஆலோசனை : கருணா (டிஜி வரைகலை அமையம்).

ரொறன்ரோ விநியோகம் : இராமநாதன் ரூபன், சசி.

மொன்றியால் தொடர்புகள் : சுகுமாரன் சின்னையா: 1-514-299-3186

ஒட்டாவா தொடர்புகள் : அலெக்ஸ் சிவசம்பு: 1-613 -276-7253

அஞ்சல் முகவரி : Editor
P.O.Box #63581
Woodside Square
1571 Sandhurst Cir.
Toronto, ON. M1V 1V0

Tel : 416-646-3422, 416-857-6406
Fax : 416-849-0594
Web : www.thaiveedu.com
E-mail : info@thaiveedu.com

Printed on recycled paper

# தட்சணாமூர்த்தியின் மேதைமை பற்றி கர்நாடக இசை உலகினர் பலருக்கு தெரியாது




தவில் மேதை தட்சணாமூர்த்தி பற்றிய ஆவணப்படத்தை தமிழின் முன்னணி இயக்குனர்களில் ஒருவரான அம்ஷன் குமார் இயக்குகி வருகின்றார். அவருடனான ஒரு நேர்காணல்.




### எபோலா வைரசு நோய்

- கந்தையா செந்தில்நாதன்


80 வீதத்திற்கும் மேலான இறப்பை ஏற்படுத்தும் இந்த எபோலா வைரசுக் கிருமி மத்திய மற்றும் மேற்கு ஆபிரிக்க நாடுகளில் பரவத்தொடங்கியுள்ளது.




### மாணவர் விசா / Student Visa

- த. வசந்தகுமார்

Student Visa (Study Permit) மூலம் கனடாவிற்கு வருவதற்கான விதிமுறைகளில் பல மாற்றங்களை கனடிய அரசு செய்துள்ளது.




### தமிழரின் சங்ககால விளையாட்டுகள்

- பொன்னையா விவேகானந்தன்

இன்று மேலைநாட்டார் விளையாடும் பல விளையாட்டுகள் சங்ககாலத்திலும் விளையாடப்பட்டுள்ளன.




### தமிழில் முழுமையான நாவல் எதுவும் வந்ததாக எனக்குத் தெரியவில்லை

- நேர்காணல்: மு. புஷ்பராஜன்

எழுத்தாளர் பி.ஏ. கிருஷ்ணன் தாய் வீடு பத்திரிகைக்காக வழங்கிய நேர்காணல்.

ஈராக்கில் இயாஸிடிகள் மீதான இனப்படுகொலைகள் 4
அ. கணபதிப்பிள்ளை

இந்திய - பாகிஸ்தான் உறவு: அமைதியே இலக்காகட்டும் 7
மேனா. உலகநாதன்

உடல் ஆரோக்கிய வரலாறு 9
ரவிச்சந்திரிகா

பதார்த்த சூடாமணி 12
பால. சிவகடாட்சம்

திருமணத்திற்கு முன்னரான உளவளத் துணை 14
எஸ். பத்மநாதன்

எஜமானைப் பிரிவதனால் ஏற்படும் Separation Anxiety 17
அ. ராஜ்குமார்

வீட்டில் கஞ்சா செடி வளர்த்தலும் பாதிப்புக்களும் 30
வேலா சுப்ரமணியம்

நெல் 37
செல்லையா சந்திரசேகரி

காட்டு விலங்குகளும் நகர விலங்குகளும் - 3 54
கந்தசாமி கங்காதரன்

'புலவர் பொன்னையா' கணேசபிள்ளை 112
சோக்கெல்லோ சண்முகம்

ஒப்பனைக் கலைஞர் பிலோமினா 113
ப. ஸ்ரீஸ்கந்தன்

சானா செ. சண்முகநாதன் 114
தெளிவத்தை ஜோசப்

*மேலும் ஆக்க விபரங்கள் 4ம் பக்கம்*

பெயர் தோற்றாத கட்டுரைகளுக்கு ஆசிரியரே பொறுப்பு.
ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியோரே பொறுப்பு.

முகப்பில்: இயக்குநர் அம்ஷன் குமார்

# ஈராக்கில் இயாஸிடிகள் மீதான இனப்படுகொலைகள்

- அ. கணபதிப்பிள்ளை -

ஈராக்கின் பாராளுமன்றத்தில் 'மனிதாபிமானத்தின் பெயரால் எங்களைக் காப்பாற்றுங்கள்'என்ற இயலாமையின் மனித ஒலி கேட்டது. இயாஸிடி (யாஸிடி) சமூகத்தின் பிரதிநிதியான வியான் டாக்கில் (Vian Dakhil) என்ற பெண்மணி தனது இனத்தின் மீது கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் இனப்படுகொலைக்கும் அநீதிகளுக்கும் ஒரு முடிவு கட்டப்படவேண்டும் என்று உலக நாடுகளையும் உள்நாட்டு அரசியற்தலைவர்களையும் கேட்டிருக்கிறார்.

இயாஸிடிகள் அல்லது ஜெஸிடிகள் (Yazidi or Yezidi)ஈராக்கின் வடக்கே வாழ்ந்து வரும் சிறுபான்மை இனம். மதத்தாலும், பண்பாட்டாலும் தனி அடையாளத்தைப் பெற்றுவாழும் ஒரு குழுவினர். நீண்ட காலமாகப் படிப்படியாக அவர்களது தனித்துவத்தை அழிக்க எடுத்த முயற்சிகளின் உச்சக்கட்டமாக அமைந்தது ஈராக்கில் அவர்கள்மீது கட்டவிழ்த்து விடப்பட்ட இன்றைய இனப்படுகொலைகள். இஸ்லாமிய அரசுப் (இசில்) போராளிகள் சுன்னிமுஸ்லிம்களின் பிரதிநிதிகள் போல் நடந்து கொள்ளுவதும், சதாம் ஹீசெயின் நடந்து வந்த பாதையில் அவர்களும் நடந்து கொள்ளுகிறார்களே என்ற சர்வாதிகாரப் போக்கின் தன்மையைத்தான் தெளிவாகக் காட்டுகிறது.

சுமார் 7 லட்சம் பேரை மொத்தசனத்தொகையாகக் கொண்ட இயாஸிடி இனத்தவர்களில் 6 லட்சம் பேர் ஈராக்கில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். மிகுதிப்பேரில் பெரும் பகுதியினர் ஜெர்மனியிலும் மற்றைய தொகுதியினர் உலகெங்கும் பரந்தும் வாழ்ந்து வருகிறார்கள்.

உலகம் முழுவதும் பரந்து வாழ்ந்து வந்தாலும் தமது இனஅடையாளத்தைப் பேணி வருகிறார்கள். இவர்கள் செறிந்துவாழும் சின்சார் மலைப்பகுதி சிரியாவின் எல்லையில் உள்ளது. ஈராக்கின் வடமேற்குப் பகுதி 6000 ஆண்டு பழமையான சுமேரிய நாகரிகத்தின் தொடர்ச்சியாகவும் 5000 முதல் 3800 ஆண்டுக்குமேல் பழமை வாய்ந்த நாகரிகப் பிரதேசமாகவும் இருந்துவந்துள்ளது.

நோவாவின் பெருவெள்ளத்தின் பொழுது நோவாவால் கொண்டுவந்து விடப்பட்டவர்கள் தாங்கள் என இவர்கள் நம்புகிறார்கள். சின்ஜார் (Sinjar) மலைப்பகுதியே இவர்களது குடியிருப்புப் பகுதியாக இருந்தது.

ஈராக்கின் நினேவா மாகாணத்தில் (Nineva Province) வாழும் இவர்கள்மீது ஓட்டோமன் பேரரசுக் காலத்தில் (1819) பெருமளவு தாக்குதல்கள் இடம் பெற்றன. தொடர்ந்து 72 தடவைகள் இவர்கள் தாக்கிக் கொல்லப்பட்டனர். இவர்கள் மீதான 73வது தாக்குதல் 2007ல் நடந்தது. அப்பொழுது கார்க் குண்டுவெடிப்பின் விளைவாகப் பல உயிர்களை இழந்துள்ளனர்.

**சுமார் 7 லட்சம் பேரைக் கொண்ட இயாஸிடி இனத்தவர்களில் 6 லட்சம் பேர் ஈராக்கிலும் மிகுதிப்பேரில் பெரும் பகுதியினர் ஜெர்மனியிலும் ஏனையேர் உலகெங்கும் பரந்தும் வாழ்ந்து வருகிறார்கள்.**

குர்திஸ் இனத்தவர்களுக்கும் சுன்னி முஸ்லிம்களுக்கும் இடையிலான முரண்பாட்டின் விளைவாக சுன்னிகள் குர்திஸ் இனத்தவர்களின் மீது காலத்துக்குக்காலம் தாக்குதல்களை நடாத்தியிருக்கிறார்கள். 1988ம் ஆண்டு குர்திஸ்கள்மீது இரசாயன வாயுவைப் பிரயோகித்தமைக்கு எதிராகச் சதாம் ஹீசைன் ஆட்சியாளர் மீது குற்றம் சுமத்தப்பட்டுத் தண்டனையும் கொடுக்கப்பட்டது.

1975ம் ஆண்டு குர்திஸ் இனமக்களைத் தனிமைப்படுத்தும் நோக்கில் இயாடிஸிகள் அராபியர்களின் வழிவந்தவர்கள் என்று சுன்னிகள் குறிப்பிட்டிருந்தார்கள். சதாம் ஆட்சிக் காலத்தில் 1970-80 இடையில் இவர்கள் வளமான சிஞ்ஜார் மலைப்பகுதியிலிருந்து வசதிகளேயற்ற சின்டர் புளொக் கிராமத்துக்கு (Cinder block village) இடம்மாற்றப்பட்டார்கள். இவர்களது பெயர்களும் அரபுப்பெயர்களாக மாற்றி வைக்கும்படி அறிவுறுத்தப்பட்டது. இவர்கள் பேசும் மொழியை விடுத்து அராபிய மொழியைப் பேசும்படி கட்டாயப் படுத்தப்பட்டனர். இவ்விதம் படிப்படியாக இவர்களது இன அடையாளம் பறிக்கப்பட்டு வந்தமையைக்காணலாம்.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஒரு இனத்தையோ இனக்குழுவையோ அழிப்பது இனப்படுகொலை என்று சொல்லப்பட்டது. பின்னர் இனப்படுகொலைக்கான வரைவிலக்கணம் நுணுக்கமான பலவிடயங்களை உள்ளடக்கி நோக்கப்பட்டது. இரண்டாம் உலக யுத்த காலங்களில் வேண்டுமென்றே ஒழுங்கமைப்புடனான நேக்கிற் செய்யும் மனிதக்கொலைகளை இனப் படுகொலை எனக் குறிப்பிட்டனர். உலகயுத்தமுடிவில் உயிர்வாழுமுரிமை மறுக்கப்படுவதை இனப்படுகொலை என்றனர். பின்னர் திட்டமிட்ட இனஅழிப்பையும் ஒருபகுதியினர் செய்யும் பெரிய அளவிலான மனிதக் கொலைகள் செய்யும் முறையையும் இனப்படுகொலை என்றும் இனத்தை அழிக்கும் உள் நோக்கம் கொண்டிருப்பது இனப்படுகொலை எனவும் குறிப்பிட்டனர். எவ்விதத்தில் பார்த்தாலும் இது இனப்படுகொலை என்பதாகவே சொல்லப்படுகிறது.

இயாஸிடிகள் 'மிகப்பழமையான சமாதானமான மதத்தைப் பின்பற்றும் இனம்' எனச் சொல்லப்பட்டாலும் ஆதாம் ஏவாளுக்குத் தலைகுனியமறுத்த சாத்தானை வழிபடுபவர்கள் என்றே முஸ்லிம்கள் சொல்லுகிறார்கள். இஸ்லாத்துக்கு முந்திய மரபினைப் பேணும் இவர்களின் மதத்தைத் தோற்றுவித்தவர் சேக் அதி இபின் முஸாபிர் (Shikh Adi Ibn Musafir)என்னும் ஒரு சூ.ஃ.பி. 1162ல் வாழ்ந்த இவரது சமாதி மொசூல் நகரில் இருப்பதாகவும் சொல்லப்படுகிறது. இவர் மயில்க் கடவுளின் (Melek Taus) அவதாரமாகச் சொல்லப்படுகிறர்.

முழுமுதற்கடவுளும் ஏழு பரிசுத்த ஆவிகளும் கொண்ட இந்த மதத்தில் ஏழு பரிசுத்த ஆவிகள் மக்களாகப் பிறக்கிறார்கள் என்றும் மக்களுக்குள்ளேயே நல்லவரும் கெட்ட சாத்தான்களும் இருப்பதாகவும் இவர்கள் நம்புகிறார்கள். ஆதாம் ஏவாள் என்ற ஆதித் தாய் தந்தையரில் ஆதாமிலிருந்து நேரடியாகப் பிறந்தவர்கள் தாங்கள் என்கிறார்கள்.அதாவது ஆண்வழிச் சமூகமாகத் தங்களைக் காட்டிக்கொள்ளுகிறார்கள். இவர்களின் கடவுள் படைத்த ஏழு பரிசுத்த ஆவிகளில் 6 பரிசுத்த ஆவிகளும் ஆதாம் ஏவாளுக்குத் தலை வணங்கவே மயில்க் கடவுளான பரிசுத்த ஆவியானது'தான் பிரதான கடவுளுக்கே தலைவணங்குவேன்' என்று கூறியதாலும், மயிலின் இறைச்சி விரைவிற் கெட்டுப் போகாமை, பிறப்பின்மை, மீள்உருவாக்கம் ஆகிய பிரத்தியேக தன்மைகளினாலும் மயில்க் கடவுள் இவர்களது தெய்வமாக மாறியது.

பேசியாவில் (ஈரான்) வாழ்ந்து வந்த ஆரியர்களின் வாரிசான இவர்களிடம் மதரீதியிலான கிரிகைகள் வழக்கில் இருக்கின்றன. சொர்க்கமோ நரகமோ இல்லாத இவர்களது மதச்சடங்குகளுக்காகச் சாதி அமைப்பு முறையினைப் பேணி வருகிறார்கள். மூறிட்கள் சாதாரண மக்கள் என்ற பெரியபிரிவில் பீர்கள் என்று கூறப்படும் பிறப்புக்கிரிகைகளைச் செய்பவர்களும் செய்க்குக்கள் என்று கூறப்படும் விடுமுறையில் கிரிகைகள் செய்யும் சாதிகளும் இருக்கின்றன.

இவர்களது வழக்கத்தின்படி வானத்தைத் தவிர நான்கு பூதங்களில்(நிலம்,நீர், நெருப்பு, காற்று) துப்புவது, சுடுநீர் ஊற்றுவது தடுக்கப்படுகிறது. புதன் கிழமையைப் புனித நாளாகக் கொள்ளும் இவர்கள் மூன்று நேரம் தொழுபவர்களாகவும், பிணங்களைப் புதைக்கும் வழக்கம் கொண்டவர்களாகவும் உள்ளனர். சனிக்கிழமையை ஓய்வு நாளாகவும் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் தமது சமூகத்துக்கு வெளியில் திருமண உறவை வைத்துக் கொள்ளுவதில்லை என்பதனால் பெண்கள் இன்னமும் மாவெள்ளைநிறத் தலைமயிரையும் கொண்டு இனப்புனிதத் தைப் பேணுகிறார்கள்.

*தொடர்தல் 28ம் பக்கம்*

## வீட்டினுள்ளே இன்னும் வருபவை...

**லிபரல் கட்சியும் தமிழ் வேட்பாளர்களும்: ஹரி ஆனந்தசங்கரியின் வெற்றி - ஓர் அகநிலை அலசல்** 8
புஷ்பா கனகரட்ணம்... 

**மனோவள விகாரமும் ஆய்வுத் தகவல்களும்** 23
புஷ்பா கனகரட்ணம்

**எபோலா வைரசுக்காய்ச்சல்** 24
கந்தையா பரநிருபசிங்கம்

**பூர்வகுடிகளின் நடனப்போட்டி** 24
கந்தசாமி கங்காதரன்

**மறைந்தவைகளும் மலர்ந்தவைகளும்** 26
எஸ்.ஆர். ராஜபாலன்

**வீடு வாங்கப் போகிறீர்களா?** 32
வள்ளிக்கண்ணன் மருதப்பன்

**வீடுகளில் ஈரப்பதனை அளத்தல்** 34
பிரபா சின்னா

**Golden Shrimp Plant** 37
செல்லையா சந்திரசேகரி

**வாகனம், தீ விபத்துகள்** 43
செந்தூரன் புனிதவேல்

**காற்றுவடி இயந்திரம்** 44
செல்வி அதினி

**நானும் ஒரு போராளியே** 47

**குடும்ப வன்முறையும் குழந்தைகளைத் துன்புறுத்துதலும்** 48
த. சிவபாலு

**பாவியார் போற இடம் பள்ளமும் திட்டியும்** 51
கதிர் துரைசிங்கம்

**ரொறன்ரோ அரங்குகளில் 'ஒரு துப்பாக்கியும் ஒரு கணையாழியும்'** 52
பொன்னையா விவேகானந்தன்

**தகைப்பும் இளம் பிள்ளைகளும்** 57
ஜீவா திசைராஜா

**பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி** 63
முருகேசு பாக்கியநாதன்

**எந்தையும் தாயும் கூடிமகிழ்ந்து குலாவிய நாட்டில்...** 71
பார்வதி கந்தசாமி

**கன்னட எழுத்தாளர் யு.ஆர். அனந்தமூர்த்தி இயற்கை எய்தினார்** 73
என்.கே. மகாலிங்கம்

**மலையக இலக்கிய ஆளுமை சாரல் நாடன்** 74

**இல்மரினனின் திருமண நிச்சயம்** 77
உதயணன்

**மாறுதல்கள்** 83
தெளிவத்தை ஜோசப்

**குடிபெயர்வும் சமூகஉள நல்வாழ்வும்** 85
சுல்பிகா இஸ்மாயில்

**உள்நாட்டுச் சமாதானம்** 91
சினுவா ஆச்செபெ
தமிழில்: என்.கே. மகாலிங்கம்

**நதியின் பிழையன்று நறும்புனல் இன்மை** 93
தேவகாந்தன்

**சின்னச் சம்பவம்** 97
அ.முத்துலிங்கம்

**இலக்கியத் திறனாய்வியலின் இயங்குநிலை** 103
நா. சுப்பிரமணியன்

**Game Over** 107
நிமால் நாகராஜா

**இசைக்கலாவாணி, கலாபூஷணம் திருமதி இராஜமணி சிங்கராஜா** 110
வி. கந்தவனம்

**'As Soon as possible and As Much as you can'** 118
சிறீதரன் துரைராஜா

# தட்சணாமூர்த்தியின் மேதைமை பற்றி கர்நாடக இசை உலகினர் பலருக்கு தெரியாது

**- இயக்குநர் அம்ஷன் குமார்**

**நேர்காணல் : சுந்தரபுத்தன்**

அம்ஷன் குமார் பார்வையாளர் மத்தியில், சிறந்த திரைப்படம் குறித்த ரசனையையும் கண்ணோட்டத்தையும் உருவாக்கும் முயற்சிகளில் தீவிரமாக ஈடுபட்டுவருபவர்.

திரைப்படங்களைப் புரிந்துகொள்வது தொடர்பாக அறிவூட்டல் வகுப்புகளை நடத்திவருகின்றார். தரமான ரசனை நோக்கிலும், ஆய்வுக் கோணத்திலும் திரைப்படங்களை எவ்வாறு அணுகுவது என்பதே இவரது அறிவூட்டலின் இலக்குகள். 'சினிமா ரசனை' என்ற இவரது நூல் இவ்வறிவூட்டல் தொடர்பில் தமிழின் முன்னோடி நூலாகக் கருதப்படுகிறது.

எழுத்தும் பிரக்ஞையும், பேசும் பொற்சித்திரம், மாற்றுப் படங்களும் மாற்று சிந்தனைகளும், ஒருத்தி (திரைக்கதை வசனம்) ஆகியன இவரது பிற நூல்களாகும். 'சலனம்' திரை இதழின் ஆசிரியர் குழுவில் ஒருவராகவும் பணியாற்றியிருக்கின்றார். லண்டன் விம்பம் நடத்திய குறும்பட விழா உட்பட பல திரைப்பட விழாக்களில் நடுவராகவும் பணியாற்றியுள்ளார்.

மூன்றாம் தியேட்டர், சுப்பிரமணிய பாரதி, சி.வி.ராமன், அசோகமித்திரன், கிராமிய தகவல் மையங்கள், தமிழ் நாட்டில் நவீனக் கலை, சதுப்பு நிலக்காடுகள், உ.வெ. சாமிநாத ஐயர், சுதந்திரத்திற்குப் பின் தமிழ் நாடகங்கள், மணக்கால், எஸ்.ரங்கராஜன், ஆகியவை உள்ளிட்ட இருபதுக்கு மேற்பட்ட ஆவணப் படங்களை இயக்கியுள்ளார். மகாகவி பாரதி பற்றி வெளிவந்த முதல் முழுநீள ஆவணப்படமான 'சுப்பிரமணிய பாரதி' பல விருதுகளைப் பெற்றுள்ளது. அது தவிர பாரதியின் பன்முக ஆளுமைகளை வெளிப்படுத்தும் மூன்று ஆவணப்படங்களை மாணவர் கல்விக்குப் பயன்படும் வகையில் அண்மையில் உருவாக்கியுள்ளார்.

கி. ராஜநாராயணனின் 'கிடை' குறுநாவலைத் தழுவி அம்ஷன் குமார் இயக்கிய 'ஒருத்தி' முழு நீளத் திரைப்படம் சர்வதேச இந்திய திரைப்பட விழாவின் இந்தியன் பனோரமா பிரிவில் திரையிடப்பட்டது. புதுவை அரசு, சிந்தனை வட்டம் நியு ஜெர்சி ஆகியவற்றின் சிறந்த படத்திற்கான விருதுகள் அப்படத்திற்காகக் கிடைத்தன. வாழ்நாள் சாதனையாளர் விருதாக 'லெனின் விருது' இவருக்கு 2012ல் வழங்கப்பட்டது.

இப்போது சென்னையில் வசித்து வரும் அம்ஷன் குமார் எழுத்து, திரைப்படம் ஆகிய துறைகளில் தொடர்ந்து செயல்பட்டுவருபவர்.

**சினிமா, ஆவணப் படம் பற்றிய புரிதலும் தனித்துவமான பார்வையும் கொண்டவர் நீங்கள். எப்போது இதுபற்றிய ஆர்வம் தொடங்கியது. உங்களுடைய முதல் ஆவணப் படத்திற்கு, அதற்கான வாய்ப்பும் தருணமும் எப்படி வாய்த்தது என்று சொல்லுங்கள்.**

திருச்சியில் செயல்பட்டுவந்த சினி போரம் என்கிற சினிமா சங்கத்தில் நான் மாணவப் பருவத்திலிருந்தே அங்கத்தினனாக இருந்தேன். உலக சினிமா பற்றிய பரிச்சயம் எனக்கு அதன் வாயிலாக ஏற்பட்டது. பின்னர் சென்னை வந்தபிறகும் அது தொடர்ந்தது. சினிமா சம்பந்தமான ஏராளமான புத்தகங்களையும் நான் படித்தேன். தமிழில் சினிமா பற்றி வரலாற்று தகவல்கள் தரும் புத்தகங்கள் சில வெளிவந்திருந்தன. ஆனால் சினிமா என்கிற ஊடகத்தை புரிந்துகொண்டு ரசனை அடிப்படையில் எவ்வாறு அணுகவேண்டும் என்பதற்கான புத்தகம் எதுவும் இல்லை. எனவே அந்த தேவையை உணர்ந்து நான் சினிமா ரசனை என்கிற புத்தகத்தை 1990ல் எழுதினேன். அதற்கு பெரிய வரவேற்பு கிடைத்தது. கல்லூரிகளில் அது பாடமாகவும் வைக்கப்பட்டது. எனக்கு அதன்மூலம் விளம்பரப் படங்கள் எடுக்கும் வாய்ப்புகள் கிடைத்தன. சினிமா எடுக்கும் தொழில்நுட்பத்தை அதன் மூலம் கற்றுக்கொண்டேன். ஆனால், தொடர்ந்து விளம்பரப் படங்களை இயக்குவதில் எனக்கு சலிப்பு ஏற்பட்டது. முழு நீளப்படம் ஒன்றை எடுக்க விரும்பினேன். அதேசமயம் வாய்ப்பினைத் தேடி அலைவதில் காலத்தை செலவழிக்க விரும்பாத நான் ஆவணப்படம் எடுக்க நினைத்தேன். வங்க நாடகாசிரியர் பாதல் சர்க்காரின் பயிற்சி பட்டறையில் கலந்து கொண்டிருந்தேன். அவரது நாடக செயல்பாடு பற்றிய ஆவணப்படம் எடுக்க முடிவு செய்தேன். அவரைப் பற்றி யாதொரு ஆவணப்படமும் எடுக்கப்படவில்லை என்பது எனக்கு ஆச்சர்யத்தை தந்தது. நான் எடுத்த மூன்றாம் தியேட்டர் என்கிற அப்படம் 1996ல் மும்பை சர்வதேச ஆவணப்பட விழாவில் கலந்து கொண்டது. அதன்பிறகு பல ஆவணப் படங்களை தொடர்ந்து எடுத்து வருகிறேன். இதுவரை இருபதுக்கும் மேற்பட்ட ஆவணப் படங்களை எடுத்திருக்கிறேன்.

**தமிழில் ஆவணப்படத்திற்கான வரவேற்பும் அதற்கான இடமும் எந்த அளவுக்கு இருக்கிறது?**

நான் ஆவணப் படம் எடுக்க ஆரம்பித்ததற்கு முக்கிய காரணம் அதில் சுதந்திரமாக நம்மால் செயல்பட முடியும் என்பதால் மட்டுமல்ல ஆவணப்படங்களை பற்றிய விழிப்புணர்வும் இங்கே இல்லாதிருந்தது, அதன் மீது எனது கவனம் பதிய மற்றொரு காரணம். சினிமா என்றாலே கதைப் படம்தான் என்கிற எண்ணம் இங்கே வேரூன்றியிருந்தது. ஆர்.வி.ரமணி, நான் மற்றும் ஒரு சிலரே ஆவணப்படங்களை எடுத்து வந்தோம். தற்சமயம் சொர்ணவேல், ஆர்.ஆர். சீனிவாசன், அமுதன், லீனா மணிமேகலை, பிரசன்னா ராமஸ்வாமி, அன்வர், ரவி சுப்ரமணியன் போன்றோர் தொடர்ந்து நல்ல ஆவணப்படங்களை எடுத்து வருகிறார்கள். ஆனால் குறும்படங்களுடன் ஒப்பிடும்பொழுது ஆவணப்படத் தயாரிப்புகள் குறைவானவை. குறும்படம் எடுத்தால் முழுநீளப்படம் எடுக்கும் வாய்ப்பு கிடைக்கிறது. ஆவணப்படம் எடுப்பவர்களுக்கு அந்த வாய்ப்புகள் சுலபமாக வருவதில்லை. ஆவணப்படம் எடுக்க ஆய்வு மனப்பான்மையும் தேவைப்படுகிறது. இது கூடுதலான உழைப்பு.



**இசைக் கலைஞர் தட்சணாமூர்த்தியைப் பற்றிய ஆவணப்படம் எடுப்பதற்கான காரணம் என்ன? இதற்கான ஆயத்தங்களை எப்படிச் செய்தீர்கள். தட்சணாமூர்த்தி பற்றிய தகவல்கள் உங்களுக்கு எளிதாகக் கிடைத்ததா? பொதுவாக ஆவணப்பட உருவாக்கத்தில் இயக்குநர் சந்திக்கும் சவால்கள் என்ன?**

தமிழ் வாசிப்பு உலகத் தமிழர்களிடையே பரந்த விரிந்த தளங்களில் நடைபெற வேண்டும் என்பதற்காக அயராது பாடுபட்டுவரும் லண்டன் ஆர். பத்மநாப ஐயர் ஒரு தேர்ந்த இசைப் பிரியரும்கூட. அவருக்காக மணக்கால் எஸ். ரங்கராஜன் பற்றிய ஒரு ஆவணப்படத்தை எடுத்துக் கொடுத்தேன். ஒருமுறை அவர் தமிழ்நாட்டிற்கு வந்தபொழுது அவரை கலை விமர்சகர் தேனுகாவிடம் அழைத்து சென்றேன். அப்போது அவர்கள் பேச்சு எதிர்பாராதவிதமாக யாழ்ப்பாணம் தவில் மேதை தட்சணாமூர்த்தி பற்றி திரும்பியது. தேனுகாவைப்போல் பலரும் தமிழ் நாட்டில் அவரைப்பற்றி இன்னமும் பாராட்டு முகமாக இருக்கிறார்கள் என்பதையறிந்த ஐயர் அவரைப் பற்றிய படத்தை எடுக்க விரும்பினார். அதை இயக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. புலம் பெயர்ந்த இலங்கைத் தமிழர்களின் மனமுவந்த ஆதரவுடன் இந்தப் படம் தயாராகிறது. பட வாய்ப்பு வரும் வரை நான் தட்சணாமூர்த்தி பற்றி கேள்விப்பட்டிருக்கவில்லை. பின்னரே அவரைப் பற்றிய ஆய்வில் இறங்கினேன். நான் ஏற்கனவே கூறியதைப்போல் ஆய்வு செய்வது ஆவணப்படத் தாயரிப்புக்கு முக்கியம். ஆவணப்படங்களை ஆய்வுப்படங்கள் என்றே சொல்லலாம். தட்சணாமூர்த்தி பற்றிய தரவுகள் எழுத்து வடிவில் மிகக் குறைவாகவே உள்ளன. அவற்றில் முக்கியமானது அகச்சான்றுகளை வைத்து எழுதப்பட்ட பி.எம். சுந்தரம் எழுதிய ஒரு சிறு கட்டுரை. தட்சிணாமூர்த்தி பற்றி செவிவழி செய்திகளே அதிகம். அவை இப்படத்தின் மூலம் பதிவுகளாகின்றன. அவருடன் வாசித்தவர்கள் பழகியவர்கள், உறவினர்கள் ஆகியோர் தங்களது நேர்காணல்கள் வாயிலாகவே அவற்றை வெளிப்படுத்தினர். படப்பிடிப்பின் போதுதான் அவற்றையெல்லாம் என்னால் முழுதாக அறியமுடிந்தது. தமிழகத்திலும் ஸ்ரீலங்காவிலும் லண்டனிலும் படப்பிடிப்பு நடந்தது. தட்சணாமூர்த்தி 1975ல் காலமாகி விட்டார். நாற்பது வருடங்களுக்குப் பிறகும் அவரை அறிந்தவர்கள் பசுமையான நினைவுகள் கொண்டிருந்தார்கள். அவற்றை அவர்கள் படத்திற்காக பகிர்ந்து கொண்டபோது பிரமிப்பூட்டும் கணங்களும் நெகிழ்ச்சியான தருணங்களும் எனது அனுபவங்களாயின. தட்சணாமூர்த்தியின் பல்வேறு பரிமாணங்கள் எனக்கு அறிமுகமாயின.

நான் நிறைய வாழ்க்கை வரலாற்றுப் படங்களை எடுத்திருக்கிறேன். மகாகவி பாரதி பற்றி ஒரு படம் எடுத்தேன். பாரதி பற்றி பலரும் அறிவார்கள். அப்படம் அவ்வறிதலின் சாட்சியமாகும். ஆனால் தட்சணாமூர்த்தியின் மேதைமைபற்றி கர்நாடக இசை உலகினர் உட்பட வெகு பலருக்கு தெரியாது. இப்படம் அவரைப் பற்றி அறியாதவர்கள் மத்தியில் ஒரு பெரும் விளைவினை ஏற்படுத்தும். இனிவரும் காலங்களில் கர்நாடக இசைமேதைகள்பற்றி எவர் பட்டியலிட்டாலும் அதில் யாழ்ப்பாணம் தட்சணாமூர்த்தி முன் வரிசையில் இடம் பெறுவார்.

**இந்த ஆவணப்படத்தை முழுவதுமாக எடுத்து முடித்துவிட்டீர்களா?**

படத்தின் படப்பிடிப்பு முற்றாக முடிந்துவிட்டது. படத்தொகுப்பு வேலை நடைபெற்றுவருகிறது. லண்டனில் படம் வெளியிடப்படுவதற்கான முயற்சிகள் நடைபெற்றுவருகின்றன.

**அடுத்து எடுக்கப்போகும் ஆவணப் படம் எது?**

அடுத்தாற்போல் ஒரு முழு நீளப்படம் ஒன்றை எடுக்கும் முயற்சியில் உள்ளேன். ஏற்கனவே கரிசல் எழுத்தாளர் கி. ராஜநாராயணனின் 'கிடை' குறுநாவலை வைத்து 'ஒருத்தி' என்கிற முழுநீளப்படம் ஒன்றை எடுத்தேன். அது தில்லியில் நடைபெற்ற இந்தியன் பனோரமாவில் தேர்வு செய்யப்பட்டு திரையிடப்பட்டது. புதுவை அரசின் சிறந்த படத்திற்கான விருது அதற்கு கிடைத்தது. நியுஜெர்சி தமிழ் அசோசியேஷனும் அதற்கு சிறந்த படத்திற்கான விருதினை அளித்தது. பல வருடங்கள் கழித்து மீண்டும் படமெடுக்கக் காரணம் இப்போது தமிழ்ப் பட சூழல் நல்ல மாறுதல்கள் கொண்டிருக்கின்றது என்பதால். அந்தப் படம் முடிந்த பிறகு ஆவணப்படத் தயாரிப்பில் மீண்டும் ஈடுபடுவேன். பொருளாதார வசதிகள் பற்றி அதிகக் கவலையின்றி சுதந்திரமாக ஆவணப்படங்களை எடுக்க முடியும். ஆவணப்படங்களை நான் தொடர்ந்து எடுப்பேன்.

**தமிழில் ஆவணப்படம் அதிகமாக இல்லை. இன்னும் நாம் என்ன செய்ய வேண்டியிருக்கிறது?**

நாம் செம்மொழியின் வாரிசுகள். ஆனால் ஆவணம் என்று வந்துவிட்டால் புதைபொருள் ஆராய்ச்சிக்குத்தான் போக வேண்டியுள்ளது. இனிமேலும் நாம் அப்படி இருக்க இயலாது. இன்றையை உலகில் எல்லாமே துரிதமாக நடைபெறுகின்றன. அவற்றை ஆவணப்படுத்தாவிடின் நாம் ஞாபகங்களை இழந்தவர் களாவோம். ஆவண உருவாக்கம் என்பது எழுத்து, காட்சி, ஒலி ஆகிய முப்பரிமாணங்களிலும் நிகழவேண்டும். ஆவணப்படங்களில் ஒலி, காட்சி ஆகியன பதிவாகின்றன. ஒவ்வொரு நிறுவனமும் தனிமனிதனும் இவ்வகையில் இன்று டிஜிடல் தொழில் நுட்ப உதவியுடன் எளிதாக ஆவணப் படங்களை உருவாக்கலாம். எனவே எதையெல்லாம் நாமாகவே செய்ய இயலுமோ அதை செய்யாமல் விடுத்து அரசாங்கம்தான் அதை செய்ய வேண்டும் என்கிற சிந்தனையை நாம் முதலில் விட்டொழிக்க வேண்டும். எங்கெல்லாம் ஆவணப் படங்களை காட்ட முடியுமோ அங்கெல்லாம் பொருத்தமான வகையில் ஆவணப் படங்களை திரையிடலாம். திருமணங்களில் இசை நிகழ்ச்சிகளை வைக்கிறோம். அத்தருணங்களில் ஆவணப்படங்களை திரையிடலாம். விழிப்புணர்வுக்கு மட்டுமல்லாது சிறந்த பொழுதுபோக்கிற்கும் ஆவணப்படங்களை நாடுகிற போக்கினை வளர்த்துக் கொண்டால் அது நம் பண்பாட்டினை பலவிதங்களிலும் உயர்த்தவே செய்யும்.

sundharabuddhan@thaiveedu.com

■ ■ ■

# Brimley Road Medical Centre
# WALK-IN CLINIC & FAMILY PRACTICE

* புதிய நோயாளர்கள் ஏற்றுக் கொள்ளப்படுவார்கள்

*ஆண், பெண் குடும்ப மருத்துவர்களுடன் 7 நாட்களும் சேவை

Dr. உதயன் சோமசுந்தரம், MD,CCFP

Dr. சுபாதினி செந்தில் மோகன், MD,CCFP

Dr. நஸ்ரத் கான், MD,CCFP

| | |
|---|---|
| திங்கள் - வியாழன் | 9:00 - 7:00 |
| வெள்ளி | 9:00 - 5:00 |
| சனி & ஞாயிறு | 9:00 - 2:00 |

* ஆய்வு கூடச் சேவை (Life Lab)

* மருந்தகச் சேவை (IDA Pharmacy)

* இயன் மருத்துவ சேவை (Brimley Physiotherapy)

**(416) 412 3333**

**3333 Brimley Road**
Scarborough, ON M1V 2J7
(Between **Steeles** & **McNicoll**)

Protect More.
SAVE MORE.

Insure your + 
and SAVE*

*Call Allstate First*

Allstate. You're in good hands.



**Suren Navaratnarajah**
Scarborough East Agency
**Mobile: 416-520-6916**
**snavaratnarajah@allstate.ca**
416-283-0544 ext. 5012
Allstate Insurance Company Of Canada
H5-4525 Kingston Rd, Toronto, ON M1E 2P1
(Kingston & Morningside)

*Inclusive of all other discounts applied to Allstate's base rates.
Terms and conditions apply and may vary by region. Rates and discounts subject to change.
®Trademark used under licence by Allstate Insurance Company

### இந்திய - பாகிஸ்தான் உறவு:

# அமைதியே இலக்காகட்டும்

- மேனா. உலகநாதன் -

**எல்லைப் பகுதியில் அவ்வப்போது இந்திய நிலைகளின் மீது பாகிஸ்தான் ராணுவத்தினர் தாக்குதல் நடத்துவதும், அத்துமீறுவதுமாக பதற்றம் நீடிக்கிறது.**

"இலங்கைத் தமிழர்கள் விவகாரத்தில், பதவி யேற்புக்கு வந்திருந்த போதே எனது அரசின் நிலைப்பாட்டை, அதிபர் ராஜபக்சேவிடம் தெரிவித்து விட்டேன். அவரும் அதை உணர்ந் துகொண்டிருப்பார். இலங்கைத் தமிழர் நலன் குறித்து தொடர்ந்து இந்தியா வலியுறுத்தும்"

சம்பந்தன் தலைமையிலான தமிழ்த்தேசி யக் கூட்டமைப்புத் தலைவர்கள் டெல்லி வந்து தம்மைச் சந்தித்த போது, இந்தியா வின் புதிய பிரதமர் நரேந்திர மோடி சொன்ன பதிலின் சாரம் இதுதான்.

சொற்களுக்கான குரலும் முகமும் மாறியி ருக்கிறதே தவிர, சொற்களும் அணுகுமு றையும் மாறவில்லை என்பது புரிகிறது.

முன்னர் மன்மோகன் சொன்னதை இப்போது மோடி சொல்கிறார். ஆக, தமிழர்களைக் காவு கொடுத்தேனும் இலங்கை அரசுடனான நட்பைப் பேண வேண்டும் என்ற அந்தப் பழைய "பாசமிகு" நிலைப்பாட்டில் இருந்து எந்த மாற்றமும் இல்லை என்பதும் இதன் மூலம் தெரிகிறது.

இலங்கை விவகாரத்தில் இத்தகைய பழைய நிலையையே கடைப்பிடிக்கும் மோடியின் அரசு பாகிஸ்தான் விவகாரத்தில் மட்டும் சற்று பதற்றத்தைக் காட்டுகிறது.

இலங்கை அரசின் மீது மோடி அரசு காட் டும் பாசத்திற்கு தமிழர்களின் மீதான பகைமை காரணமாக இருக்கிறது. அதே நேரத்தில், மத ரீதியான வெறுப்புணர்ச்சி பாகிஸ்தானு டனான பகைமைக்குக் காரணமாக இருக் கிறது.

இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுவதை ஒரு நாளும் பார்த்துக் கொண்டி ருக்க மாட்டோம் என்ற அனுசரணைக் குரலை ராஜபக்சே தலைமையிலான இலங்கை அரசு உரத்துக் கூவியிருப்பது, இந்தப் பின்னணி யில்தான்.

தெற்கே இலங்கையும், வடக்கிலும், மேற்கி லும் பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், நேபா ளம், மேற்கு வங்கம் ஆகிய நாடுகள் இந்தி யாவின் உடனடி அண்டை நாடுகளாக இருப் பதால், இந்த நாடுகளின் அக அரசியல் மட் டுமின்றி, அவற்றுடனான புற உறவுகளின் தட்பவெப்ப நிலையும் இந்தியாவுக்கு முக்கி யமானதாக இருக்கிறது.

இவற்றில், இலங்கை (சிங்கள அரசு) மீதும், நேபாளத்தின் மீதும் காட்டும் அக்கறையை யும், அன்பையும் பாகிஸ்தான் மீது இந்தியா வினால் எப்போதுமே காட்ட முடிவதில்லை. தன்னில் இருந்து பிரிந்து போன பகுதி என்ற ஆதங்கம் மட்டுமே அதற்குக் காரணமா? நிச் சயமாக இல்லை என்பதே உண்மை.

அண்டைநாடுகளுடனான அனுசரணையை யும், நல்லுறவையும் மேம்படுத்துவதற்கான அறிகுறிகளை பிரதமர் பதவியில் அமர்ந்த போது கவனத்துடன் அடையாளப்படுத்திய மோடி, அதனைத் தொடர்ந்து பேணுவதில் தடுமாற்றத்தையே வெளிப்படுத்துவதாகத் தெரிகிறது.

இந்திய வெளியுறவுக் கொள்கையின் நிறமும், குணமும் ஆட்சியாளர்களின் மனோபாவத் துக்கு ஏற்ப மாறும் நிலைக்கு, அதன் நம் பகத் தன்மையும், உறுதித் தன்மையும் பல வீனப்பட்டிருப்பது வருத்தத்துக்குரிய உண்மை.

மோடி அரசைப் பொறுத்தவரை, அதன் வெளி யுறவு தொடர்பான அணுகுமுறையில் அதிக அளவு பதற்றத்தையும், தடுமாற்றத்தையும் வெளிப்படுத்துவது பாகிஸ்தான் பிரச்சினை யில்தான். (இலங்கை விவகாரத்தில் தமிழர் களை வஞ்சிப்பது என்ற கொள்கையில் மாற்றமோ தடுமாற்றமோ இல்லைதானே!) அமெரிக்காவிடம் கூட அது சற்று அழுத்தத் தைக் கடைப்பிடிக்கிறது.

காரணம், பாகிஸ்தான் குறித்த புதிய அரசின் பார்வை சிக்கலானது. அதன் விளைவுதான், மறைமுகப் போரில் பாகிஸ்தான் ஈடுபடுவ தாக ஒரு சிறு பொறியை பிரதமர் மோடி கொளுத்திப் போட்டதும், எல்லைப் பகுதி யில் அது அவ்வப்போது நெருப்பாகப் பற்றி எரிந்து கொண்டிருப்பதும் ஆகும்.

எல்லைப் பகுதியில் அவ்வப்போது இந்திய நிலைகளின் மீது பாகிஸ்தான் ராணுவத்தி னர் தாக்குதல் நடத்துவதும், அத்துமீறுவது மாக பதற்றம் நீடிக்கிறது.

காஷ்மீர் பிரிவினையை முன்வைத்துப் போரா டிவரும் ஹுரியத் கட்சித் தலைவர் கிலானி உள்ளிட்ட சிலரை, பாகிஸ்தான் தூதர் அப்துல் பாஷித் சந்தித்துப் பேசியது பிரச்சினையை மேலும் சிக்கலாக்கியது.

ஆகஸ்ட் 25ம் தேதி இஸ்லாமாபாத்தில் இரு நாட்டு செயலாளர்கள் அளவில் நடைபெற இருந்த பேச்சுவார்த்தையை மோடியின் அரசு ரத்துசெய்து விட்டது. இந்தியாவுக்கான பாகிஸ்தான் தூதரின் நடவடிக்கை மீதான அதிருப்தியை வெளிப்படுத்தவே இந்த நட வடிக்கை என்ற விளக்கமும் இந்தியாதரப் பில் அளிக்கப்பட்டது.

ஆனால், இந்தியாவுக்கான பாகிஸ்தான் தூதர் கள் பிரிவினைவாத இயக்கத் தலைவர்க ளைச் சந்திப்பது இது முதல்முறையல்ல.

முந்தைய மன்மோகன் சிங் காலத்தில் மட் டுமின்றி, வாஜ்பாய் காலத்திலும் இதுபோன்ற சந்திப்புகள் நிகழ்ந்திருப்பதை பிரிவினை வாதத் தலைவர்களே சுட்டிக்காட்டியுள்ளனர்.

பின்னர் ஏன் இந்தக் குழப்பமும், பதற்றமும்?

இருநாட்டு ஆட்சியாளர்களும் அரசியல் ரீதி யாக தங்களுக்குக் கிடைக்கும் பலன்களைக் கணக்கிட்டே இத்தகைய காய்நகர்த்தல்களை மேற்கொண்டிருப்பதாகக் கருத வேண்டி இருக் கிறது.

பாகிஸ்தானில் நவாஸ் ஷெரீப்பின் ஆட்சிக் குப் பல்வேறு நெருக்கடிகள். வேலை இல்லா திண்டாட்டம் மற்றும் மின் பற்றாக்குறை உள்ளிட்ட பிரச்சினைகள் பாகிஸ்தானை ஆட்டிப் படைத்து வருகிறது. மேலும் இம்- ரான்கான் கட்சியும், இஸ்லாமிய மதகுரு கத்ரி ஆதரவாளர்களும் நடத்தும் போராட் டங்களைச் சமாளிக்க முடியாமல் நவாஸ் ஷெரிப் திணறி வருகிறார். இம்ரான்கானுக்கு பாகிஸ்தான் ராணுவத்தின் ஆதரவும் உண்டு என்றும் நம்பப்படுகிறது. நவாஸ் அரசு பாகிஸ் தான் மக்களிடையே நம்பிக்கையை விரை வாக இழந்து வருகிறது.

இந்தப் பின்னணியில்தான் பாகிஸ்தான் தொடர் பான முன்னெடுப்புகள் மூலம் அந்நாட்டு மக் களின் கவனத்தை வேறு திசையில் திருப் புவதற்கு நவாஸ் ஷெரீப் அரசு முயன்ற தாகத் தெரிகிறது. ஆனால், நவாஸின் இந் தக் கணக்கைச் சுக்குநூறாக்கி விட்டது செய லாளர்கள் அளவிலான பேச்சுவார்த்தையை ரத்து செய்த இந்தியாவின் நடவடிக்கை.

எனினும், இதனால் இழப்பும், பின்னடைவும் என்னவோ இருதரப்புக்கும்தான்.

இந்தியாவைப் பொறுத்தவரை, இந்து அமைப் புகளின் முழக்கங்களுக்கும், கொள்கைக ளுக்கும் முன்னுரிமை கொடுக்கும் அரசு தற் போது பதவியில் அமர்ந்திருக்கிறது. அதனால், பழைய எம்.ஜி.ஆர் திரைப்படங்களில் நம் பியார் வில்லனாகச் சித்தரிக்கப்பட்டது போல், பாகிஸ்தானை வில்லனாகச் சித்தரித்துச் சண்டைக்குத் தயாராவதுதான், பாரதிய ஜனதா அரசின் இருப்பையும், தேவையை யும் உறுதிப்படுத்திக் கொள்ள முடியும் என நம்பும் நிலை.

இதில், இருநாடுகளுக்கு இடையிலான பிரச் சினையின் உண்மையான சிக்கலைத் தேடிக் கண்டடையும் முயற்சி எந்த அளவிற்கு சாத் தியமாகும் என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

இருநாடுகளுக்கு இடையேயான பிரச்சினை என்பது ஜம்மு காஷ்மீர் பிரச்சினைதான். அதை, இந்தியா - பாகிஸ்தான் நாடுகளின் வெளியுறவுச் செயலாளர்கள் சந்தித்துப் பேசித் தீர்த்துவிட முடியுமா?

இந்தக் கேள்வியை, இந்தியாவுக்கான பாகிஸ் தானின் தூதர் அப்துல் பாஷித் எழுப்பியிருப் பது கவனத்துக்குரியது.

எனவே இதனை வெறும் இந்தியா – பாகிஸ் தான் இடையேயான பிரச்சினையாக மட்டுமே பாராமல், பிரச்சினைக்குரிய பகுதியில் வசிக் கும் மக்களையும் ஒருதரப்பாக வைத்துப் பேச்சு நடத்த வேண்டும் என்பதே,

நடுநிலையாளர்களின் நீண்டகாலக் கோரிக் கையாக இருந்து வருகிறது.

இந்த விவகாரத்தில், இந்தியாவுக்கென்ற தனித்த அடையாளமான சமரச குணபாவத்தின் அடிப்படையில் அணுகி, தென்கிழக்காசியப் பிராந்தியத்தில் அமைதி நிலவ வழிவகுக்க வேண்டும் என்பதும் அவர்களது விருப்பமாக இருக்கிறது.


பயங்கரவாதத்தின் கோரமான தாக்குதல் களால் இருநாடுகளுமே காயப்பட்டிருக்கின் றன. மன்மோகன் சிங் ஆட்சிக்காலத்தில் எடுக்கப்பட்ட சமரச முயற்சி, மும்பைத் தாக் குதலால் முறிந்து போனது. பாகிஸ்தானோ பயங்கரவாத நெருப்பில் வெந்து கொண்டே இருக்கும் மண்ணாகக் கனன்று கொண்டி ருக்கிறது.

பயங்கரவாதத்துக்கும், போருக்கும் பெரிய வேறுபாடு இல்லை. முன்னது சர்வதேச நாடு களால் அங்கீகரிக்கப்படாத மூர்க்கம். பின் னது அங்கீகரிக்கப்பட்ட மூர்க்கம்.

மற்றபடி இவை இரண்டினாலும் ஏற்படும் விளைவுகள் ஒன்றுதான். ரத்தத்தில் மிதந்து மூழ்கிய தமிழர்களின் ஈழத்தையும், தற்போது மூழ்கிக் கொண்டிருக்கும் பாலஸ்தீனியர்க ளின் காசாவையும் பதைபதைப்புடன் பார்த் துக் கொண்டுதான் இருக்கிறோம்.

எனவே, அமைதி ஒன்றை மட்டுமே இலக் காகக் கொண்டு இந்தியாவும், பாகிஸ்தா னும் இந்தப் பிரச்சினையை முன்னெடுத்தால் பூமிப்பந்தின் அமைதி தவழும் நிலப்பரப்பாக இந்தப் பிராந்தியமே மாறும்.

இந்த மண்ணில் இருந்து ஒழிக்கப்பட வேண் டியது பயங்கரவாதம் மட்டுமல்ல, கெட்ட போரெனும் கொடுமையும்தான் என்பதை, இந்திய – பாகிஸ்தான் அரசுகள் மனதில் கொள்ளவேண்டும் என்பதே, மானுடத்தை நேசிக்கும் ஒவ்வொருவரது கோரிக்கையுமாகும்.



menaulaganathan@thaiveedu.com



# லிபரல் கட்சியும் தமிழ் வேட்பாளர்களும்

## ஹரி ஆனந்தசங்கரியின் வெற்றி - ஓர் அகநிலை அலசல்

லிபரல் கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின் ஜஸ்டின் ரூடோ தெரிவித்த பிரதான செய்தி 'அனைத்துத் தொகுதிகளுக்குமான வேட்பாளர் தெரிவு கட்சி அங்கத்தவர்களாலேயே மேற்கொள்ளப்படும்' என்பதுதான்.

இந்தக் கட்டுரை எழுதப்படும்வரை ஏறக்குறைய 85 தொகுதிகளுக்கான தேர்தல்கள் முடிவடைந்துவிட்டன.

கனடியத் தமிழ் சமூகத்தின் மைய அரசியல் சார்ந்த உறவுகள் கடந்த காலங்களில் பெரிதும் லிபரல் கட்சியைச் சார்ந்தே இருந்தன, கடந்த தேர்தலைத் தவிர. ரொறன்ரோ, மார்க்கம் பகுதிகளில் குறிப்பிட்ட சில தொகுதிகளில் வெற்றி தோல்விகளை முடிவு செய்யவல்ல எண்ணிக்கையில் தமிழ் வாக்காளர்கள் இருக்கின்றனர். ஆயினும் வேட்பாளராகக் களமிறங்கும் வாய்ப்பு கடந்த தேர்தல்வரை எத்தமிழருக்கும் லிபரல் கட்சியால் வழங்கப்படவில்லை.

கடந்த தேர்தலில் ரொறன்ரோ பெரும்பாகத்தில் பல நிரந்தரமான தொகுதிகளை லிபரல் இழக்க நேர்ந்தது. தோல்வியடைந்த லிபரல் வேட்பாளர்கள் ஒருங்கிணைந்து கூறிய செய்தி "தமிழ் வாக்காளர்கள் எங்களைப் புறக்கணித்து விட்டார்கள்" என்பதுதான். வாக்குகள் சேகரிக்கச் சென்ற வேட்பாளர்களிடம் தமிழ் மக்கள் வெளிப்படையாகவே தம் ஆதங்கத்தைக் கூறியிருந்தார்கள்.

அடுத்து வரும் தேர்தலில் லிபரல் கட்சியில் ஒருசில வாய்ப்புகளேனும் தமிழருக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கை பலருக்கும் ஏற்பட்டிருந்தது.

இந்நிலையில் ஜஸ்டின் ரூடோவின் வேட்பாளர் நியமனை பற்றிய கருத்து ஒரு சவாலை ஏற்படுத்தியது. இனி தொகுதி சார்ந்த கட்சி அங்கத்தவர்கள்தான் வேட்பாளர்களைத் தெரிவு செய்ய வேண்டும். கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக கட்சியின் தேர்தல் குழுவே வேட்பாளர்களைத் தெரிவுசெய்திருந்தது.

லிபரல் சார்ந்து சில தமிழர்கள் வேட்பாளராகும் முயற்சியில் இறங்கினர். 'அஜின்கோட்' தொகுதியில் களமிறங்க முயன்ற ஒரு தமிழ் வேட்பாளரின் விண்ணப்பம் மீளப் பெறப்பட்டது ( ? ). ஸ்காபரோ மத்திய தொகுதியில் வேட்பாளர் தெரிவுக்காக அங்கத்தவர்களைச் சேகரித்துப் போட்டியில் குதித்தார் தியோ அன்ரனி எனும் தமிழ் வேட்பாளர். வெண்ணை திரளும் நிலையில் சட்டி உடைந்தது போல், இறுதி நேரத்தில் ஏற்பட்ட சுழற்சிகள் காரணமாகத் தன் விண்ணப்பத்தை இவர் மீளப் பெற்றுக்கொண்டார்.

புதிதாக உருவாக்கப்பட்ட ரூச் பார்க் என்னும் தொகுதியில் லிபரல் வேட்பாளராகப் போட்டியிடப் போவதாக ஹரி ஆனந்தசங்கரி அறிவித்தார்.

ஏற்கனவே இத்தொகுதியின் பெரும்பகுதி ரூச் ரிவர் தொகுதியோடு இணைந்திருந்தது. தமிழர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட இத்தொகுதியில் கடந்த தேர்தலின்போது ராதிகா சிற்சபைசன் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டிருந்தார். தொகுதி இரண்டாகப் பிரிக்கப்பட்ட பின் அடுத்து வரும் தேர்தலில் ராதிகா எத் தொகுதியில் போட்டியிடுவார் என்ற கேள்வி எல்லோருக்கும் எழுந்தது. குறிப்பாக ஹரி ஆனந்தசங்கரிக்கு ராதிகாவின் முடிவு அவசியமாகியது.

இந்நிலையில் மார்க்கம் மாநகரசபை உறுப்பினர் லோகன் கணபதி பற்றிக் குறிப்பிட்டாக வேண்டும். மார்க்கம் மாநகரசபையின் உறுப்பினராக இரண்டாம் தடவையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட லோகன் கணபதி லிபரல் கட்சியோடு நெருக்கம் கொண்டவர். அடுத்துவரும் நாடாளுமன்றத் தேர்தலில் ரூச் ரிவர் அல்லது ரூச் பார்க் தொகுதியில் கட்சியின் வேட்பாளர் தெரிவில் போட்டியிடத் திட்டமிட்டிருந்தார். தன் தொகுதியைத் தீர்மானிப்பதற்காக இவருக்கும் ராதிகாவின் முடிவு அவசியமானதாகவிருந்தது. ராதிகாவின் முடிவு உத்தியோகபூர்வமாக வெளியாவதற்கு முன் லோகன் கணபதி ரூச் ரிவர் தொகுதிக்கான வேட்பாளர் தெரிவில் போட்டியிடப்போவதாக அறிவித்து, ஊடகங்களுக்கு அறிக்கையும் அனுப்பிவிட்டார்.



ராதிகா ரூச் பார்க் தொகுதியிலேயே போட்டியிடுவார் என்ற கணிப்பிலேயே லோகன் கணபதியால் இந்த முடிவு எடுக்கப்பட்டது என்றே கருதப்பட்டது.

தன் முடிவை உரிய காலத்தில் வெளியிடாது இழுத்தடித்தமை ராதிகா மீதான விமர்சனங்களையும் தோற்றுவித்தது.

குறித்த ஒரு நாளில் ஆலயமொன்றில் வழிபாட்டை முடித்த பின், அடுத்துவரும் தேர்தலில் ரூச் ரிவர் தொகுதியில் போட்டியிடப் போவதாக ராதிகா அறிவித்தார். இதைத் தொடர்ந்தே 'ஹரி' யின் அறிவிப்பும் வெளியானது.

ராதிகாவின் இந்த முடிவு லோகன் கணபதிக்கு அதிர்ச்சியளித்தது. எனினும் முயற்சியைக் கைவிடாது ரூச் ரிவர் தொகுதியில் தனக்கான அங்கத்தவர்களைச் சேகரித்து வருகின்றார். கட்சிக்கான தெரிவுத் தேர்தலில் லோகன் வெற்றி பெற்றால் இவர் நாடாளுமன்றத் தேர்தலின் போது ராதிகாவுடன் நேரிடையாக மோதுவார்.

ரூச் பார்க் வேட்பாளர் தெரிவு தொடர்பாகத் தொடக்கநாளிலிருந்தே ஹரி ஆனந்தசங்கரியும் தொண்டர்களும் அங்கத்துவர் சேகரிப்பில் தீவிரமாக இறங்கினர். தனக்கு ஆதரவு தருமாறு சமூகத்தின் பல தரப்பினருக்கும் ஹரி வேண்டுகோள் விடுத்தார். ஹரியின் வேண்டுகோளை சிலதரப்பினர் ஏற்றுக்கொள்ளவில்லை. சிலர் மறுத்ததுடன் எதிர்ப்பிலும் ஈடுபட்டனர்.

ஹரியின் தேர்தல் தொடர்பான விளம்பரங்கள், அறிக்கைகள் என்பன சர்ச்சைகளை ஏற்படுத்தினாலும் சமூகத்தின் பல தளங்களில் இருந்தும் ஹரிக்கான ஆதரவுகளும் வெளிப்பட்டன. ஒரு பக்கத்தில் குறித்தவொரு சாராரின் எதிர்ப்புகள் வலுப்பட்ட நிலையில் ஹரிக்கான ஆதரவுத்தளங்கள் மேலும் வலுப்பெற்றன. ஹரியை எதிர்க்கவும் ஆதரிக்கவும் ஊடகங்களும் களமிறங்கின. ஹரிக்கு எதிராகச் செயற்பட்டோரில் சிலர் வேட்பாளர் தெரிவில் ஹரியோடு போட்டியிட்ட இந்தியக் குடியைச் சார்ந்த வேட்பாளரை வெளிப்படையாக ஆதரித்தனர். இது ஹரிக்கு இன்னும் ஆதரவைச் சேர்த்தது.

ரூச் பார்க் தொகுதிக்கான இந்த வேட்பாளர் தெரிவுத் தேர்தல் கனடியத் தமிழ் சமூகத்தவரிடையே பரபரப்பூட்டும் செய்தியானது. இப்பரபரப்பு அனைத்துலகத் தமிழ் சமூகத்தவரிடையேயும் பரவியது. லிபரல் கட்சியின் மேலிடத்தின் பார்வையை மட்டுமல்ல, ஏனைய தேசியக் கட்சிகளின் பார்வையையும் இச்சிறிய நியமனத் தேர்தலின் பக்கம் திருப்பியது.

இத்தேர்தல் தொடர்பான எதிர்பார்ப்பு தேர்தல் நெருங்க நெருங்க பல மடங்கு எகிறியது. அதற்கு வலுவான காரணங்களும் இருந்தன.

பெருமளவு தொண்டர்களைக் கொண்டதாகக் கருதப்பட்ட, ஈழத்தேசியத்தை முழுமையாகச் சார்ந்த கனடா உலகத்தமிழர் அமைப்பு வெளிப்படையாகவே ஹரியை எதிர்த்ததுதான் எதிர்பார்ப்புகளுக்கான பிரதானமான காரணம்.

இவ்வமைப்பினரின் வெளிப்படையான எதிர்ப்பு ஏற்கனவே இவ்வமைப்போடு முரண்பட்டுக் கொண்டிருந்த பலரை உசுப்பிவிட்டது. அவர்களும் வெளிப்படையாகக் ஹரிக்கு ஆதரவு தெரிவித்து அறிக்கைகள் விட்டமையும் இவ்வெதிர்பார்ப்புகளுக்கு மற்றுமொரு காரணம்.

இவ்வெதிர்ப்புகளுக்குச் சளைக்காமல், தம் தொண்டர்களை வலுநிலையாக்கி களமிறக்கினர் ஹரி ஆனந்தசங்கரி. தனக்கு ஆதரவாக வெளிப்பட்ட அனைத்துத் தளங்களையும் பயன்படுத்தினார்.

மறுபுறத்தில், இருதரப்பினருக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளும் பயனின்றி முற்றுப்பெற்றன.

மேற்கூறப்பட்ட இந்த விடயங்களே எழுந்த பெரும் எதிர்பார்ப்புகளுக்குக் காரணங்களாக இருந்தன.

தேர்தல் நாளன்று வாக்களிப்பு மண்டபத்தைச் சுற்றிக் ஹரியின் ஆதரவாளர்களே ஆதிக்கம் செலுத்தினர். ஹரியே வெற்றி பெறுவார் என்ற பெருநம்பிக்கை அவர்களிடத்தே காணப்பட்டது.

தேர்தல் அன்று மாலை 6 மணிக்கு முன்பே வாக்காளர் வாக்களிப்பு மண்டபத்தின் முன் கூடிவிட்டிருந்தனர். 9 மணி வரை வாக்களிப்பு மிக வேகமாக நடைபெற்றது. பெரும்பான்மையாகத் தமிழரும் அதற்கு அடுத்து இந்தியரும் பிற இனத்தோர் சிறுதொகையுமாக வாக்களித்தனர்.

இரவு 11 மணியளவில் பெரும்பான்மை வாக்கு வித்தியாசத்தில் ஹரி ஆனந்தசங்கரி வெற்றி பெற்றார் என்ற செய்தி வெளியானது.

மிகப் பலமானதான தோற்றத்தை வெளிப்படுத்திய எதிர்ப்பை மீறி ஹரி ஆனந்தசங்கரி பெற்ற வெற்றியானது தொண்டர்கள், ஆதரவாளர்கள் மத்தியில் பெரும் உற்சாகத்தை ஏற்படுத்தியது.

இத்தேர்தல் முடிவு 'தமிழர் தலைமைத்துவம் சார்ந்த மாற்றுச் சிந்தனையின் வெளிப்பாடு' எனச் சிலர் கருத்தும் வெளியிட்டனர்.

எது எவ்வாறாயினும் லிபரல் சார்பில் முதற்தடவையாக ஒரு தமிழர் போட்டியிடப் போவது உறுதியாகிவிட்டது. 2015 இல் நடைபெறப்போகும் நாடாளுமன்றத் தேர்தலில் ஹரி வெற்றி பெறுவது கடினமானதாக இருக்காது எனப் பலரும் கருதுகின்றனர்.

அத்தேர்தலில் ஹரி வெற்றி பெற்று, மத்தியில் லிபரல் ஆட்சியமைக்கும் நிலை ஏற்பட்டால், ஹரி அமைச்சராகும் வாய்ப்புகள் உண்டெனவும் ஊகங்கள் வெளிப்பட்டிருக்கின்றன.

கனடிய அரசியலின் தேசிய நீரோட்டத்தில் காலடி எடுத்து வைத்திருக்கும் ஹரி பெரும் சவால்களை எதிர்கொண்டே இத்தடத்தைப் பதித்திருக்கின்றார் என்பதை மறுப்பதற்கில்லை. ஆயினும் நடந்து முடிந்த தெரிவுத் தேர்தல் ஒரிரு ஆயிரம் மக்களை மையப்படுத்தியே நடைபெற்றது என்பதை நாம் உணர்ந்திருக்க வேண்டும்.

முரண்களும் மோதல்களும் தேர்தல் களத்தைப் பெரிதாக்கியதே தவிர, பெரும்பான்மை மக்கள் பங்குகொண்டதல்ல இத்தேர்தல். ஆயினும் கனடியத் தமிழர் இத்தேர்தலின் பின் ஹரியைக் கவனிக்க ஆரம்பித்துவிட்டனர். இனிச் சமூகம் சார்ந்த ஹரியின் செயற்பாடுகளின் தூய்மைத் தன்மை மக்களால் உற்று நோக்கப்படும். அவசியமாயின் விமர்சிக்கப்படும்.

சமூகம் சார்ந்த, கனடியத் தேசிய அரசியல் சார்ந்த தொடர் செயற்பாடுகளே ஹரியின் அரசியல் எதிர்காலத்தை உறுதி செய்யும். இந்த வெற்றிக்குப் பின்னான ஹரியின் அரசியல் பயணம் விழிப்புணர்வோடு முன்னெடுக்கப்பட வேண்டியதொன்றாகும்.

நடந்தவற்றைக் கணக்கிட்டு, நடக்கப்போவதைத் திட்டமிட்டு, நடக்கும் காலத்தைக் ஹரி பயன்படுத்துவார் என நம்புவோம்.

■ ■ ■

# உடல் ஆரோக்கிய வரலாறு

**Thyroid problems:**
தைரொயிட் என்பது கழுத்துப் பகுதியில் காணப்படும் ஒரு சுரப்பியாகும். தைரொக்சின், ட்ரைஅயடோதைரோனின், கல்சிடோனின் என்ற மூன்று முக்கிய ஹோர்மோன்கள் சுரக்கப்படுகின்றன. முதல் இரு ஹோர்மோன்கள் உடலின் வளர்சிதை மாற்றங்களைக் கட்டுப்படுத்துகின்றன. கல்சிடோனின் குருதியிலும் எலும்பிலும் உள்ள கல்சியத்தின் சமநிலையைப் பேணுகிறது.

தைரொயிட் சீராக இயங்குவதற்கு அயடின் என்னும் கனிப்பொருள் அத்தியாவசியமாக இருக்கிறது. அயடின் குறைபாடு இச்சுரப்பியைப் பெருக்கவைக்கிறது. அந்நிலையில் அதன் ஹோர்மோன் உற்பத்தி பாதிக்கப்படுகிறது. ஹோர்மோன்கள் அதிக அளவில் சுரக்கும்போது hyperthyroidism என்றும் குறைவான அளவில் சுரக்கும்போது hypothyroidism என்றும் அறியப்படுகிறது. இவ்விரு நிலைகளுக்கும் வெவ்வேறு மருந்துகள்கொண்டு சிகிச்சையளிக்கப்படுகின்றன.

**Stroke:**
தமிழில் பக்கவாதம் என்று அறியப்படுகிறது. இதன் சரியான ஆங்கிலப் பதம் Cerebrovascular Accident ஆகும். (Cerebro: மூளை, Vascular: குருதிச்சுற்றோட்டம்), சுருக்கமாக CVA என்று சொல்லப்படும். மூளைக்குச் செல்லும் குருதிச் சுற்றோட்டத்தில் திடீரென ஏற்படும் தடை காரணமாக மூளைக்கு அத்தியாவசியமான பிராணவாயு (oxygen) கிடைக்காமல் மூளையின் கலங்கள் பாதிப்படைவதால்/அழிவதனால் ஏற்படுகின்றது. இது உடலின் அங்கங்களைச் செயல் இழக்கச் செய்கின்றது, உற்ற நேரத்தில் சிகிச்சை அளிக்கப்படாவிட்டால் மிகக் கடுமையான விளைவாக மரணம் ஏற்படக்காரணமாகிறது. பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டவரின் உடல், உள ரீதியான செயல்பாடுகள் இயல்பாக இருப்பதில்லை. பேச்சில் குழறலை அவதானிக்கலாம்.

**Glaucoma:**
பார்வைக்குரிய நரம்பில் பாதிப்பு ஏற்படுகிறபோது கிளக்கோமா ஏற்படுகிறது. இந்நோய் மிக மெதுவாக நீண்ட காலமாக எவ்வித அறிகுறிகளும் இன்றி உருவாகிறது. இறுதியில் மீளப் பெறமுடியாத பார்வை இழப்பு ஏற்படுகிறது.

சர்க்கரை நோய், உயர் இரத்த அழுத்தம், ஸ்டீரோயிட் என்னும் மருந்துகளின் நீண்டகாலப் பாவனை, கண்களில் ஏற்படும் காயங்கள் இந்நோய் ஏற்படுவதற்குக் காரணம் ஆகலாம். வயது முதிந்தவர்கள், குறிப்பிட்ட சில இனத்தவர்கள் அதிகம் பாதிக்கப்படுகிறார்கள். மரபணு மூலம் கடத்தப்படுவதற்கும் சாத்தியங்கள் உண்டு.

வருடாந்த கண் பரிசோதனைகள் மூலம் நோய் முற்றுவதன் முன் கண்டுபிடிக்கப்பட்டுத் தகுந்த சிகிச்சை அளிக்கப்படலாம்.

**Hepatitis, Jaundice, liver Disease:**
ஈரலில் ஏற்படும் அழற்சி (inflammation) ஹெப்படைட்டிஸ் ஆகும். இது ஒருவித வைரஸ் மூலம் பரவும் நோய் ஆகும். நோயைப் பரப்பும் வைரசின் தன்மையைப் பொறுத்து ஹெப்படைட்டிஸ் A, B, C, D, E எனப் பிரிக்கப்பட்டுள்ளன. நீர், உணவு, மலம், குருதி, மருந்துகளைச் செலுத்தப் பயன்படுத்தப்படும் ஊசிகள் எனப்பல வகையான ஊடகங்களால் பரவுகின்றன. சம்பந்தப்பட்ட வைரஸ் ஒருவரின் உடலில் நீண்ட காலம் மறைந்து வாழக்கூடும் என்பதால் சில வகை ஹெப்படைட்டிஸ் ஒருவருக்கு இருப்பது அவருக்குத் தெரியாமல் இருக்கலாம்.

இந்நோய் உள்ள ஒருவருக்குச் சிகிச்சை அளிக்கும் பல் மருத்துவர்கள் சரியான பாதுகாப்பு முறைகளைக் கையாளாவிட்டால் அவர்களுக்கே நோய்த்தொற்று ஏற்படும்

**உடல் ஆரோக்கிய வரலாறு - 9**

அபாயம் உள்ளது.

ஈரலினால் சுரக்கப்படும் bile எனப்படும் பித்தம் சமிபாட்டுக்கு அத்தியாவசியமானதாகும். ஈரலில் நோய் ஏற்படும்போது பிலிரூபின் என்னும் பித்தப்பொருள் குருதியில் கலந்து தோல், கண்கள் மஞ்சள் நிறமாகிற நிலை ஜோண்டிஸ் எனப்படுகிறது.

TB எனப்படும் காசநோய், சி.ஃபிலிஸ் என்னும் பால்வினை நோய், சில மருந்துகளின் நீண்டகாலப் பாவனை ஆகியவை ஈரலைப் பாதிக்கின்றன.

அல்ககோலிசம் என்பது மதுவகைகளைக் கட்டுப்பாடின்றி நீண்ட காலமாகப் பயன்படுத்தும் போது ஏற்படும் நோயாகும். இது ஈரலைக் கடுமையாகப் பாதிக்கிறது. இந்நோயின் ஆரம்பத்தில் ஈரல் வீக்கம் அடைகிறது. தொடர்ந்து ஹெப்படைட்டிஸ் உண்டாகிறது. இறுதியில் ஈரல் அழிவது சிரோசிஸ் எனப்படுகிறது. சிரோசிஸ் ஏற்பட்ட ஈரல் மீண்டும் பழைய ஆரோக்கியமான நிலைக்குத் திரும்புவதில்லை.

ஈரல் சம்பந்தப்பட்ட நோய்கள் இலகுவில் கட்டுப்படுத்த முடியாத குருதிப்பெருக்குக்குக் காரணமாகின்றன. இது பல் மருத்துவத்தில் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியது.

**Epilepsy:**
மூளையின் அசாதாரண செயல்பாடுகளினால் உடலில் ஏற்படும் மாற்றங்கள் seizures எனப்படுகின்றன. இந்நிலையில் பிரக்ஞை, தன்னுணர்வு தவறலாம். நரம்புப் பிடிப்பு, தசை இழுத்துக்கொள்வது (spasms) நேரிடலாம். இவை ஒருவரால் கட்டுப்படுத்த முடியாதவையாக, தன்னிச்சையாக நிகழ்கின்றன. இவை நீண்ட காலமாக இருந்து அடிக்கடி வலிப்பு ஏற்படும்போது (chronic seizure disorder) எப்பிலெப்சி எனப்படுகிறது. எப்பிலெப்சி ஒரு நோயை மட்டும் குறிப்பதல்ல. அது மூளை, நரம்பு சம்பந்தப்பட்ட பல நோய்களின் அறிகுறியாக இருக்கிறது.

**Fainting spells or seizures: மயக்கம் அடைதல், வலிப்பு இருக்கிறதா?**

இரத்த அழுத்தம் திடீரெனக்குறைந்து தற்காலிகமாகப் பிரக்ஞை தவறுதல் மயக்கம் ஆகும். இது ஆங்கிலத்தில் syncope (ஸின் கப்பி) எனப்படுகிறது. மயக்கம் ஏற்படப் பல காரணங்கள் உண்டு. சாதாரண பசி மயக்கத்தில் இருந்து பல வகையான கடுமையான நோய்கள் மயக்கத்துக்குக் காரணமாகின்றன.

தலையில் ஏற்படும் காயங்கள், தலைக்குள் வளரும் கட்டிகள், மூளையைப் பாதுகாக்கும் மேலுறைகளில் ஏற்படும் மெனின்ஜைட்டிஸ் நோய், குருதியில் குளுகோசின் அளவு குறைவது, குடிநோய், போதைப் பொருட்களுக்கு அடிமையாதல், புற்றுநோய் சார்ந்த சிக்கல்கள் போன்றவை வலிப்புகளுக்குக் காரணமாகின்றன. சில வலிப்பு நோய்களுக்குக் காரணங்கள் கண்டுபிடிக்கப்படவில்லை.

வலிப்பு ஏற்படும்போது மயக்கம் ஏற்படக்கூடும், ஆனால் அது எல்லாச் சந்தர்ப்பங்களிலும் நிகழ்வதில்லை.

வலிப்பைக் கட்டுப்படுத்தக் கொடுக்கப்படும் மருந்துகளில் சில முரசை வீங்கச் செய்கின்றன. அதனால் சம்பந்தப்பட்டவர்கள் வாயைச் சுத்தமாக வைத்திருப்பது கடினமாக இருக்கும்.

**Neurological disorders, If yes specify: நரம்பு சம்பந்தப்பட்ட குறைபாடுகள் உள்ளனவா? ஆம் எனின் விளக்கமாகச் சொல்லவும்.**

மூளையும் நரம்பு மண்டலமும் உடலின் உட்புறச் சூழலையும், உடலின் வெளியே சுற்றுப்புறச் சூழலையும் உணர்ந்து மதிப்பிட்டு அதற்கேற்ப உடலைச் சீராகச் செயலாற்ற வைக்கின்றன. நரம்பு சம்பந்தப்பட்ட பாதிப்புகள் உடல், உளச் செயல்திறனைப் பாதிக்கின்றன. அந்நிலைகள் பல நோய்களாக உருவெடுக்கின்றன. நரம்பு மண்டலம் சம்பந்தப்பட்ட பொதுவான நோய்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

- **Alzheimer's Disease:** மீளப் பெற முடியாத ஞாபக மறதி நோய் ஒருவரின் சிந்தனை, ஞாபகங்கள், ஆளுமை ஆகியவற்றைப் பாதிக்கிறது.
- **Bell's Palsy:** முகத்தில் உள்ள தசைகள் சீராக இயங்காமல் ஏற்படும் வாதம் பெல்ஸ் போல்ஸி எனப்படுகிறது. முகத் தசைகளுக் குரிய நரம்புகளில் ஏற்படும் சேதம் இதற்குக் காரணமாகின்றன.
- **Cerebral Palsy:** உடலின் அசைவுகளைக் கட்டுப்படுத்தும் மூளையின் பகுதிகளில் ஏற்படும் பாதிப்பு இதற்குக் காரணமாகிறது. இச்சேதம் கருவில் சிசு இருக்கும் போது அல்லது குழந்தை பிறக்கும் போது ஏற்படலாம்.
- **Multiple Sclerosis:** உடலின் அசைவுகள், புலன் சார்ந்த இயக்கங்கள், அறிவாற்றல், உணர்வு சார்ந்த செயல்கள் அனைத்தையும் பாதித்து, சிறிது சிறிதாகக் கடுமையாகும் நோய்.
- **Parkinson's Disease:** நம் உடல் அசைவுகளைக் கட்டுப்படுத்தும் நரம்புக் கலங்கள் பாதிக்கப்படும்போது ஏற்படும் நோய். நடுவயதில் ஆரம்பித்து முதியவர்களிடம் கூடுதலாகக் காணப்படுகிறது.
- **Spina Bifida:** தண்டு வடத்தில் ஏற்படும் பாதிப்பு. இது பிறப்பில் இருந்து காணப்படும்.

பக்கவாதம், எப்பிலேப்சி ஆகியவையும் நரம்பு சம்பந்தப்பட்ட குறைபாடுகளில் அடங்குகின்றன.

**Sleep disorder: தூக்கம் சம்பந்தப்**



ரவிச்சந்திரிகா

**பட்ட குறைபாடுகள் உண்டா?**

- **Sleep talking:** தூக்கத்தில் பேசுவது
- **Sleep walking:** தூக்கத்தில் நடப்பது
- **Nightmares:** கொடுங்கனவுகள்
- **Narcolepsy:** தூக்கத்தையும் விழிப்பு நிலையையும் சீராகக் கட்டுப்படுத்த முடியாத நிலை
- **Insomnia:** சீரான தூக்கமற்ற நிலை
- **Sleep Apnea:** தூக்கத்தில் சுவாசம் தடைப்படுத்தல்

**Do you snore? குறட்டை விடுவதுண்டா?:** தூங்கும்போது சுவாசிப்பதில் ஏற்படும் உரத்த ஒலிகள் குறட்டை எனப்படுகின்றது, இரு பாலாரிடமும், எல்லா வயதினரிடமும் ஏற்படலாம் எனினும். ஆண்களில் அதிலும் அதிக உடல்எடை கொண்டவர்களில் பொதுவாகக் காணப்படுகிறது.

**Mental health disorders, specify:**
உளநலச் சிக்கல்கள் உள்ளனவா? இருப்பின் குறிப்பாகச் சொல்லவும். இத்தலைப்பின் கீழ் கூறப்படுகின்ற நோய்கள் உடலையும் மனத்தையும் பல விதங்களில் பாதிக்கின்றன. சில பொதுவான உளநலம் சார்ந்த சிக்கல்கள் பின்வருமாறு:

- **Schizophrenia:** ஒரு தனிமனிதரின் குணநலன், ஆளுமை ஆகியவற்றில் ஏற்படும் சிக்கல்கள். கோர்வையற்ற சிந்தனை, பொருத்தமற்ற எதிர்வினைகள், அதீத கற்பனைகள் போன்றவை இந் நோயின் இயல்புகள் ஆகும்.
- **Bipolar disorder:** அதீதமான மனச் சந்தோஷமும் கடுமையான மனஅழுத்தமும், மாறி மாறி ஏற்படும் நோய். இரு நிலைகளும் ஒன்றாகவும் காணப்படலாம்.
- **Major depressive disorder:** கடுமை யான மன அழுத்தம் ஒருவர் தன் நாளாந்த வாழ்க்கையை சீராக வாழ முடியாத நிலையை ஏற்படுத்துகிறது.
- **Postpartum disturbances:** பிரசவத்தின் பின் ஒரு பெண்ணுக்கு ஏற்படும் உளச் சிக்கல்கள்
- **Anxiety disorders:** நடக்கப் போகும் ஒரு சம்பவம் குறித்து மனதில் ஏற்படும் அசாதாரணமான அச்சம், பதட்டம் உருவாக்கும் உளச் சிக்கல்கள். மனத்தை ஒருநிலைப்படுத்திச் சிந்திக்க முடியாத நிலை ஏற்படுகிறது. தலைவலி, இதயத் துடிப்பு அதிகரிப்பது, நெஞ்சு வலி, சமிபாட்டுக் கோளாறு எனப் பலவிதமாக உடலையும் பாதிக்கிறது.
- **Eating disorders:** ஒருவர் தன் தோற்றம் குறித்துக் கொண்டிருக்கும் அச்சத்தினால் உணவு உட்கொள்வதைக் கட்டுப்படுத்த எடுத்துக்கொள்ளும் அசாதாரண முயற்சிகளும் அதனால் ஏற்படும் சிக்கல்கள்.

*(தொடர்வோம்)*

**உசாத்துணை:**

- Wilkins, E. M. *Clinical Pracitce of the Dental Hygienist* (2005). Baltimore, MD: Lippincourt Williams &Williams.
- Little, J.W, Falace D.A, Miller C.S, Rhodus N.L. *Dental Management of the Medically Compromised Patient* (2002). St Louis, Missouri: Mosby.
- Learning about glaucoma retrieved on the 6th August 2014 from http://www.glaucomaresearch.ca/en/about/about_glaucoma.shtml
- Sleep disorders problems (2014) retrieved from http://sleepfoundation.org/sleep-disorders-problems

*ravichandrika@thaiveedu.com*

■ ■ ■

பார்வைக்குரிய நரம்பில் பாதிப்பு ஏற்படுகிற போது கிளக்கோமா ஏற்படுகிறது.
இந்நோய் மிக மெதுவாக நீண்டகாலமாக எவ்வித அறிகுறிகளும் இன்றி உருவாகிறது.
இறுதியில் மீளப் பெறமுடியாத பார்வை இழப்பு ஏற்படுகிறது.



**$829,000**

4 Br 2Storey Detached
Box Grove Area
Lots of Upgrades....

**Markham**



**$1,098,000**

5 Br 2Storey Detached
Fin. Bsmt Custom Built
Lots of Upgrades....

**Markham**



**$799,900**

4 Br 2Storey Detached
Basement Apartment..
Lots of Upgrades....

**Markham**



**$539,000**

4 Br 2Storey Detached
Finished Basement.
Lots of Upgrades....

**Ajax**



**$669,000**

4 Br 2Storey Detached
2 Br Basement Apartment..
Lots of Upgrades....

**Mississauga**



**For Lease**
**$1200**

3 Br Bungalow Semi
Brimley & Lawrence

**Toronto**



**For Lease**
**$1250**

3 Br Bungalow Detached
2 Br Basement Apartment
Also Available for $850.

**Toronto**



**$289,900**

Luxury Condo 1+ Den
Prime Location..
Close to Everything..

**Etobicoke**



**$284,900**

Luxury Condo 1+ Den
Prime Location..
Close to Everything..

**Toronto**



**$569,900**

3 Br Bungalow W/ 1.5 Wr
2 Br Bsmt Apt W/ 1.5 Wr
Totally Upgrade top to bott

**Toronto**

Gnani & Judy
# REAL ESTATE
416.937.8090

HOMELIFE
HIGHER STANDARDS



**Gnanendran Narasingham**
**Mobile: 416.937.8090**

**Judy Gnanendran**
**Mobile: 416.629.9797**

**OFFICE: 416.321.6969**
HOMELIFE GTA REALTY INC., 5215 Finch Ave. E. Suite 203, Toronto, ON. M1S OC2
* INDEPENDENTLY OWNED & OPERATED, REALTOR

Esso

**$1.5 MIL**

2.5 MilLitre / Year
$1500/ Day Store
Rental Income..
3/4 hr from Toronto



**$2.8 MIL**

5.5 MilLitre / Year
$2500/ Day Store
More Potential
3/4 hr from Toronto



**$2.8 MIL**

6 MilLitre / Year
$2500/ Day Store
Rental Income...
2 hrs from Toronto

# எபோலா வைரசு நோய்

இதயம் மலர்கிறது - 67



கந்தையா செந்தில்நாதன்
- Echo - Cardiographer -

கடந்த சில வாரங்களாக இந்நோய் பற்றி பத்திரிகைகளிலும், வானொலிகளிலும், தொலைக்காட்சிகளிலும் பரபரப்பான செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன.

தற்சமயம் ஆபிரிக்க நாட்டில் ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் இறந்து போவதற்குக் காரணமாயிருந்த இந்தக் கிருமி மேலும் பரவி வருவது கவலைக்கிடமானது. ஏறத்தாள 90 வீதமான இறப்பு வீதத்தை ஏற்படுத்திய இந்த வைரசுக்கிருமி மத்திய மற்றும் மேற்கு ஆபிரிக்க நாடுகளின் பின் தங்கிய கிராமப் புற மலைக் காட்டுப்பகுதிகளில் ஆரம்பமாகியிருக்கிறது.

இந்த வைரசுக் கிருமி மிருகங்களில் இருந்து மனிதனுக்குத் தொற்றியிருக்கிறது. பழ-வெளவால் இனத்தின் ஒருவகை இந்த வைரசுவின் காவியாக இருக்கின்றது மிகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்டவர்களிற்கு உன்னிப்பான கண்காணிப்பும் பராமரிப்பும் தேவை.

இந்நோய்க்கு எவ்விதமான சிகிச்சையும் கண்டுபிடிக்கப்படவில்லை. நிப்பீடன ஊசியும் இதுவரை ஆக்கப்படவில்லை. 1976ல் இருமுறை நோய் பரம்பல் ஏற்பட்டுள்ளன. கடைசியாக நோய் பரவிய இடம் EBOLA ஆற்றங்கரைக்கு அண்மித்த கிராமமாக இருந்தது. ஆய்வாளர்கள் அன்று EBOLA நதியின் பெயரையே அந்த வைரசுவிற்கு வைத்து விட்டார்கள். இந்த EBOLA Virusல் ஐந்து வகைகள் உண்டு.

### நோய் பரவுதல்:

நோய் தொற்றிய மிருகங்களின் இரத்தம், உடல் உறுப்புக்கள், சுரப்புக்கள் மற்றும் உடற் திரவகங்களின் தொடுகை மூலம் இக்கிருமி மானிட இனத்திற்குத் தொற்றியுள்ளது. இது மனிதனில் இருந்து மனிதனுக்குத் தொற்றக்கூடியது. மனிதக்குரங்குகள், சாதாரண குரங்குகள், பழவெளவால்கள், முள்ளுப்பன்றிகள் என்பனவற்றை இக்கிருமிகள் தாக்கும் பொழுது அவை சுகவீனமுற்று இறக்கின்றன. இதை அறிந்து கொள்ளாத மனிதர்கள் அவ்விலங்குகளை தமது கைகளால் தொடும்பொழுது அக்கிருமிகள் பரவியுள்ளன. தோலில் சிறுகாயங்கள், வெடிப்புக்கள் இருந்தால் அதனூடாக நோய் தொற்றிய மனிதரிடமிருந்தோ, மிருகத்திடமிருந்தோ நோய் பரவிக் கொள்கிறது. சுற்றாடலில் அக்கிருமிகள் விடுபட்டிருந்தாலும் அவை தோலில் உள்ள காயங்களினூடாகத் தொற்றிக் கொள்கின்றன.

இறந்த உடல்களை அடக்கம் செய்யும் பொழுது அங்கு குழுமியிருப்பவர்கள் இறந்த உடலுடன் நேரடித் தொடுகையை ஏற்படுத்தும் போது நோய் தொற்றிக் கொள்ளும் வாய்ப்பும் அதிகமாகிறது.

சுகாதார ஊழியர்கள் அடிக்கடி நோய் உள்ளவர்களுடன் பழகும் பொழுது தொற்றும் வாய்ப்பு அவர்களிடம் அதிகமாக இருக்கிறது கிருமித் தொற்று ஏற்படாதவாறு அதிகபட்ச சர்வதேசப் பாதுகாப்பு முறை பின்பற்றப்படுதல் வேண்டும்.

### குணங்குறிகள்:

எபோலா வைரசு வியாதி மிகவும் உக்கிரமானது. சடுதியான காய்ச்சலுடன் உடற் பலவீனம், தசை வேதனை, தலைவலி மற்றும் தொண்டைப்புண் ஏற்படும். அதனைத் தொடர்ந்து வாந்தி, வயிற்றோட்டம், தோற்புரை நோய், சிறுநீரகம் மற்றும் ஈரல் என்பனவற்றின் செயற்திறன் குறைவுபடுதல் என்பன மேலும் நோயாளியை மிகவும் வருத்திவிடும். சிலரில் உடலின் உள்ளுறுப்புகளில் அல்லது வெளிப்பகுதியில் குருதிப் பெருக்கும் ஏற்படலாம்.

ஆய்வுகூடப் பரிசோதனையில் வெண் குருதிச் சிறு துணிக்கைகள், குருதிச்சிறுதட்டுக்கள் என்பனவற்றில் எண்ணிக்கை குறைந்தும், ஈரலால் வெளியிடப்படும் நொதியங்கள் கூடியும் காணப்படும்.

நோயாளியின் குருதியிலும், உடற் சுரப்புக்களிலும் கிருமிகள் இருக்கும் வரை அவர் நோயைப் பரப்பக் கூடியவராக இருப்பார். இதன் நோயரும்பு கலம் 2 தொட்டு 21 நாட்கள் வரையாகும்.



### நோயை கண்டறிதல்:

இந்நோயின் குணங்குறிகள் போலவே மலேரியா, நெருப்புக்காச்சல், கொலெறா, ஈரல-ழற்சி நோய் போன்ற ஏனைய நோய்களினை ஒத்திருப்பதால் வைத்தியர்கள் மேற்கூறிய ஏனைய நோய்களைக் கண்டு பிடிப்பதற்குரிய பரிசோதனையை மேற்கொண்டு அவை அல்ல என்பதை உறுதிப்படுத்துவார்கள்.

அத்துடன் எபோலா வைரசுவைக் கண்டுபிடிக்கக் கூடிய சோதனையும் நடைபெறும். இதில் ELISA மற்றும் RT-PCR சோதனைகள் மிகவும் முக்கியமானவை. அத்துடன் வேறு பல சோதனை முறைகளும் உண்டு.

சோதனைப் பொருள் கிருமி பரவாதவாறு மிகவும் கட்டுப்பாட்டுடன் ஆய்வு கூடங்களிடையே கொண்டு செல்லப்படும்.

### நிர்ப்பீடனமும், சிகிச்சையும்:

இற்றைவரை அனுமதியுடன் கூடிய நிர்ப்பீடன மருந்து வகைகள் இல்லை. பரீட்சார்த்தமானவை சில இருந்தும் அவை சிகிச்சைநிலைப் பரீட்சார்த்தத்திற்கு (Clinical Trial) உட்படுத்தும் அளவிற்கு இல்லை. மிகவும் சுகவீனமுற்ற நீர்த்தன்மை வற்றிய (severely de-hydrated) உடலைக் கொண்ட நோயாளிகளிற்கு நீர்த்தன்மை வாய் மூலம், ஊசி மூலம் கொடுக்கப்பட்டு நன்கு அவர்கள் பேணப்படல் வேண்டும். நிறுதிட்டமாக இதுதான் மருந்து என்று கூறுவதற்கு இல்லையாதலால் புதிய மருந்துகள் பரீட்சார்த்தமாக கொடுக்கப்பட்டு அவற்றின் செயற்திறன்கள் கணிக்கப்படுகின்றன.

### கட்டுப்படுத்தல்:

மிருகங்களிடையே இந்நோய் காணப்பட்டால் அவை அழிக்கப்பட்டு நிலத்தில் மிக ஆழமாகப் புதைக்கப்படுதல் அல்லது எரிக்கப்படுதல் வேண்டும். இது மிருகங்களில் இருந்து மனிதருக்கு நோய் பரவாது தடுக்கும் முறையாகும். நோயுள்ள பன்றி, குரங்குகள், பழவெளவால்கள் என்பன நோயை மனிதருக்குக் கடத்தலாம். மிருகங்களின் புகலிடங்கள், பண்ணைகள் என்பனவற்றில் வேலை செய்பவர்கள் மிகவும் அவதானமாக நோயுள்ள மிருகங்களை நேர காலத்துடன் கண்டறிந்து அவற்றை அகற்றிவிடுதல் வேண்டும்.

### சிகிச்சை நிலையங்கள்:

மனிதனிடம் இருந்து மனிதனுக்கு நோய் தொற்றாமல் இருப்பதற்கு நோயாளியை தனிமைப்படுத்தல், அவர்களின் இரத்தம், உடற் சுரப்புக்கள் என்பனவற்றைக் கையாள்வதில் அவதானம் தேவை.

சர்வதேச கிருமித்தொற்றுத் தடுத்தல் முறைகளைப் பின்பற்றி நோயைத் தமக்கும் பரவாது, மற்றவர்களுக்கும் பரவவிடாது தடுப்பதற்குரிய எல்லா ஏற்பாடுகளும் செய்தல் வேண்டும். கைகழுவுதல், கையுறை பாவித்தல், முகமூடி, உடற்கவசம் பாவித்தல், கிருமி நாசினியிட்டு துப்பரவு செய்தல் போன்ற பல முறைகளையும் பயன்படுத்துவது நல்லது.

**உசாத்துணை:**
உலக சுகாதார ஸ்தாபனம் செய்தி மடல்

*senthilnathan.kandiah@thaiveedu.com*

■ ■ ■

**Certified First Aid & CPR Course Instructor**
EMS - Toronto
**Dr. Kandiah Senthilnathan** ( SLMC)
Ultra-sonographer (CSDMS)
(Home work help available for Students)
647-801-9252
kandiahsenthilnathan@gmail.com


SUTHAN Namasivayam
Sales Representative
647-988-3866
suthanhome@rogers.com
Find your Dream Home with ME...
Friendly Service & Professional Results...
GUARANTEED RESULTS 100%
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Office : 905-201-9977
Fax : 905-201-9229
* Independently Owned and Operated

# பதார்த்த சூடாமணி

## பகுதி - 8

பால.
சிவகடாட்சம்



*நீற்றுப்பூசணி (கலியாணப்பூசணி)*
*நீற்றுப் பூசனிக்காய் செய்யு*
*நிறைகுண மலசலம் போம்*
*மாற்றிடும் கயமே பித்த*
*மருத்தீடு காய்ச்சல் தாகம்*
*போற்றுறு சரீர நோய்கள்*
*போமேனி திடமே யேறும்*
*வேற்றுமை யில்லா வாத மிகு*
*முண்ண வினிதா மன்றே.*

- பதார்த்த சூடாமணி

### இதன்பொருள்:

நீற்றுப்பூசணிக்கு மலசலம் ஒழுங்காகக் கழியும். கயரோகம் பித்தம் மருத்தீடு காய்ச்சல் தாகம் போன்ற சரீர நோய்கள் தீரும். உடல் வலிமை பெறும். வாதக்குணங்கள் அதிகரிக்கும். உண்பதற்கு இனியதாகும்.

### மேலதிகவிபரம்:

பல்வேறு சத்துக்கள் நிறைந்த நீற்றுப்பூசணிக் காயில் தயமின் எனப்படும் வைட்டமின் B1, நியசின் எனப்படும் வட்டமின் B3, வைட்டமின் C என்பவற்றுடன் பொட்டாசியம் கல்சியம் என்னும் கனியுப்புக்களும் கூடுதலாக உள்ளன. தொண்ணூற்றாறு சதவீதம் தண்ணீரைக்கொண்ட இந்தக்காய் உடல் நிறையைக்குறைக்க உதவும் காய்கறிகளின் பட்டியலில் இடம்பெறுகிறது.

காரத்தன்மை உடைய நீற்றுப்பூசணிக்காய் வயிற்றில் கூடுதலாகச்சுரக்கும் அமிலத்தைச்



சமநிலைப்படுத்துவதால் நெஞ்செரிவு மற்றும் குடற்புண் (peptic ulcer) ஏற்படாமல் தடுக்க உதவுகின்றது. நீற்றுப்பூசணிக்காய்ச் சாறு குடற்புண்ணுக்கு மருந்தாகப் பயன்படுகிறது.

நீரிழிவு நோயாளர் சாப்பிடக்கூடிய காய்கறிகளுள் நீற்றுப்பூசணியும் ஒன்றாகும்.

சிறுநீரககல் உள்ளிட்ட சிறுநீர்த்தொகுதி சம்பந்தப்பட்ட வியாதிகளுக்கும் ஆஸ்த்மா போன்ற சுவாசத்தொகுதி சம்பந்தப்பட்ட வியாதிகளுக்கும் நீற்றுப்பூசணி மருந்தாகப் பயன்படுகிறது. குடற்புழுக்களை அகற்ற நீற்றுப்பூசணியின் விதைகள் பயன்படுகின்றன.

நீற்றுப்பூசணியின் தோலும் விதைகளும் எரிக்கப்படுவதன்மூலம் பெறப்படும் சாம்பலைத் தேங்காய் எண்ணெயுடன் கலந்து தலையில் தேய்த்துக்கொள்வது கூந்தல் வளர்ச்சிக்கு உதவுவதுடன் பொடுகை அகற்றவும் செய்கிறது.

*தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.*

*E-mail: info@thaiveedu.com*
*Fax: 416-849-0594*
*Tel: 416-646-3422*

நீற்றுப்பூசணியின் கடினமான தோலை அகற்றிவிட்டு சிறுசிறு துண்டுகளாகவெட்டிச் சமைக்கவேண்டும். கூடுதல்நேரம் அவிய விட்டால் நீற்றுப்பூசணி நீரில் கரைந்துவிடும்.

முழு நீற்றுப்பூசணிக்காய் குளிர்சாதனப் பெட்டியில் வைக்கப்படாமலேயே நீண்ட காலம் பழுதடையாமல் இருக்கக்கூடியது.

கண்ணூறு நாவூறு படாமல் இருப்பதற்காக நீற்றுப்பூசணியைப் புதிதாகக் கட்டப்பெற்ற வீடு மற்றும் கட்டடத்தின் வெளிப்புறத்தில் கட்டித்தொங்கவிடும் வழக்கம் இந்துமக்களிடம் உள்ளது. இந்தக்காய் மனிதத்தலை வடிவில் இருப்பதும் நீண்டநாள் பழுதடையாமல் இருப்பதும் இதற்குக்காரணமாகலாம்.

சாம்பல் பூசணி, கல்யாணப்பூசணி, வெண்பூசணி என்பன நீற்றுப்பூசணியைக்குறிக்கும் வேறு தமிழ்ப்பெயர்கள்.

Ash-gourd என்பது நீற்றுப்பூசணியின் ஆங்கிலப் பெயர்.
Benincasa hispida (Thunb) Cogn என்பது நீற்றுப்பூசணியின் தாவரவியற்பெயர்.

### பூசணிக்காய் (பறங்கிப்பூசணி):

அனலழலை நீக்கும் அதிபித்தம் போக்கும்
கனலனலே வென்பசியைக் காட்டும்

*புனலாகு மிக்கவைய முண்டாக்கு*
*மென்கொடியே யெப்போதும்*
*சர்க்கரைப் பறங்கிக்காய் தான்*

- பதார்த்தகுண சிந்தாமணி

### இதன்பொருள்:

சர்க்கரைப்பறங்கிக்காய் எனப்படும் பூசணிக்காய் உடல் சூட்டைக் குறைக்கும். கூடிய பித்தத்தைப் போக்கும். பசியைக் கூட்டும். பெருமளவில் நீரைக்கொண்டிருக்கும். கபத்தைத் தோற்றுவிக்கும்.

### மேலதிகவிபரம்:


பூசணிக்காய் என்று இன்று நாம் குறிப்பிடும் காயின் பிறப்பிடம் மத்திய அமெரிக்கா என நம்பப்படுகிறது. மனிதரால் முதன் முதலா



கப் பயிரிடப்பட்ட காய்கறிகளுள் பூசணிக்காயும் ஒன்றாகும். மெக்சிக்கோவில் கண்டறியப்பட்ட பூசணிவிதைகள் கிறிஸ்த்துவுக்கு 5,500 ஆண்டுகளுக்கு முற்பட்டன என்பதும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அமெரிக்கப்பூர்வீகக் குடிகளால் பயிரிப்பட்ட பூசணிக்காயின் விதைகள் அமெரிக்காவைக் கண்டுபிடித்த கொலம்பஸ் மூலமாக ஐரோப்பாவை வந்தடைந்தன. பின்னர் போர்த்துக்கேயர் மூலமாக பூசணிக்காய் இந்தியா இலங்கை போன்ற நாடுகளுக்கு அறிமுகப்படுத்தப்பட்டது. இன்று தமிழ்மக்களின் முக்கிய காய்கறிகளுள் ஒன்றாகப் பூசணிக்காய் திகழ்கின்றது. பறங்கியரால் முதன்முதலில் அறிமுகப்படுத்தப்பட்ட காய் என்பதால் இது பறங்கிக்காய் என்று அறியப்பட்டது. பின்னர் இது பறங்கிப்பூசணி என்று அழைக்கப்பெற்றது. இன்று பூசணிக்காய் என்றால் அது இந்தக்காயையே குறிக்கும். எனினும் பழந்தமிழரின் பூசணிக்காய் இது அல்ல. நமது முன்னோர் பூசணி என்று குறித்தது நீற்றுப் பூசணியை மட்டுமே.

நிலத்தோடு ஒட்டிப்பரந்து வளரும் தாவரங்களில் கனியுப்புச்சத்துக்கள் செறிந்து காணப்படுவது இயல்பு. பூசணிக்காயிலும் அதன் விதைகளிலும் அவ்வாறே பொசுபரஸ் (phosphorus), மக்னீசியம் (magnesium), கொப்பர் (cooper), சிங் (zinc), மற்றும் இரும்புச்சத்துகள் செறிந்து காணப்படுகின்றன. குறிப்பாக எமக்குத் தேவையான அளவு சிங் (zinc) உலோகச்சத்தினை பூசணி விதைகளை உட்கொள்வதன் மூலம் பெற்றுக் கொள்ளமுடியும் என்பது உலக சுகாதார ஸ்தாபனத்தின் பரிந்துரையாகும்.

ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் அமெரிக்க விவசாயிகள் தங்களது கால்நடைகளுக்குத் தீவனமாகப் பூசணிவிதைகளைக் கொடுத்த போதெல்லாம் அவை வழக்கத்திலும் கூடுதலாக சிறுநீர் கழிப்பதை அவதானித்தனர். தமிழ் மருத்துவர்கள் பூசணிக்குடும்பத்தைச் சேர்ந்த வெள்ளரி விதைகளுக்கும் இந்தக் குணம் இருப்பதைப் பலநூற்றாண்டுகளுக்கு




முன்னரேயே அறிந்துவைத்திருந்தனர் என்பதைப் பழந்தமிழ் மருத்துவ நூல்களின் வாயிலாக உறுதிப்படுத்தமுடியும்.

அமெரிக்கப் பூர்வீகக்குடிகள், சிறுவர்கள் இரவில் படுக்கையில் சிறுநீர் கழிப்பதைத் தவிர்ப்பதற்கு அவர்களுக்குப் பூசணிவிதைகளை உண்ணக்கொடுத்தனர். இது படுக்கைக்கு போகுமுன்னரேயே சிறுநீரை முழுமையாக வெளியேற்றிவிடுவதால் படுக்கையில் சிறுநீர்போவது (bed-wetting) தவிர்க்கப்படுகிறது.

புரொஸ்ரேற் சுரப்பி (prostate gland) என்பது ஆண்களில் மாத்திரமே காணப்படும் ஒரு விந்து கூழ்ச்சுரப்பியாகும். நடுத்தர வயதுக்கு மேற்பட்ட ஆண்களுக்கு இந்தசுரப்பி வீங்குவது உண்டு. அடிக்கடியும் குறைவாகவும் சிறுநீர் கழிவது அல்லது கசிவது இந்நோயின் குணங்குறிகளாகும். இதனை Benign Prostatic Hyperplasia (BPH) என்று ஆங்கிலமருத்துவர்கள் குறிப்பிடுவார்கள். பண்டைய தமிழ் மருத்துவர்கள் இந்நோயினைச் சதையடைப்பு என்று குறிப்பிட்டுள்ளார்கள். இரவில் சிறுநீர் கழிப்பதற்காக இரண்டு மூன்று தடவகைளுக்கு மேல் எழுந்துபோகும் ஒரு ஆண் இந்நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார் என்பதை ஊகிக்கமுடியும். இது புரொஸ்ரேற் கான்சரிலும் (prostate cancer) வேறானது.

### இயல்பான புறொஸ்ரேற் வீங்கிய புறொஸ் ரேற்:

அறுபதுகளில் ஜெர்மன் நாட்டவரால் நடத்தப்பெற்ற ஆய்வுகள் மூலம் நாளாந்தம் 5 கிராம் தொடக்கம் 15 கிராம் வரயிலான பூசணிவிதைகளை உட்கொண்டு வரும் ஒருவருக்கு சதையடைப்புக் (prostate) குறிகுணங்கள் குறைந்துவருவது கண்டறியப்பட்டது. இதன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு ஆய்வுகள் ஆரம்ப நிலையில் உள்ள சதையடைப்புக்கு பூசணிவிதைகள் மருந்தாகலாம் என்பதை உறுதிப்படுத்திய தோடு இந்தச் சிகிச்சையினால் குறிப்பிடத் தக்க பக்கவிளைவுகள் எதுவும் இருப்பதாகக் கூறவில்லை.

சமீபகாலமாக பூசணிவிதையில் இருந்து பெறப்பட்ட எண்ணெய் சதையடைப்புக்கு மருந்தாகப் பயன்பட்டு வருகின்றது. ஜெர்மனியில் இந்த பூசணிவித்தெண்ணெயை மருந்துக்கடைகளில் வைத்தியரின் பரிந்துரை இன்றிப்பெற்றுக்கொள்ளலாம். ஒரு நாளைக்கு 500 தொடக்கம் 1000 மில்லிகிராம் என்ற அளவில் பூசணிவித்தெண்ணெய் மூன்று மாதங்களுக்கு எடுத்துவரும் ஒருவருக்கு பகல்நேரத்திலும் இரவிலும் சிறுநீர் கழிக்கப் போகும் தடவைகள் குறைந்தமை ஆய்வுகள்மூலம் தெரியவந்துள்ளது.

சிறுநீரக்கற்கள் தோன்றுவதைத் தவிர்க்கும் ஆற்றலும் பூசணிவிதைக்கு இருப்பதாகக் ஒருசில ஆய்வுகள் கூறுகின்றன. விலங்குகள் மீது மேற்கொள்ளப்பட்ட வேறு சில ஆய்வுகள் நீரிழிவுநோயினால் சிறுநீரகத்தின் செயல்பாடுகளில் ஏற்படக்கூடிய விரும்பத்தகாத பாதிப்புக்களைத் தடுக்கும் குணம் பூசணிவித்துக்கள், விதைச்சாறு, விதை எண்ணெய் என்பவற்றுக்கு இருப்பதை எடுத்துக்காட்டுவனவாக உள்ளன.

குடற்பூச்சிகளை அகற்றவும் பூசணிவிதைகள் மருந்தாகப்பயன்படுகின்றன. இருநூறு கிராம் தொடக்கம் 400 கிராம் வரையிலான உலர்ந்த தோல் உரிக்கப்படாத பூசணிவித்துக்களை இடித்து எடுத்துப் பாலும் தேனும் சேர்த்துப் பிசைந்து காலையில் வெறும் வயிற்றில் சாப்பிடவேண்டும். இரண்டு அல்லது மூன்று மணிநேரம் கழிந்தபின் ஆமணக்கு எண்ணெய் சிறிதளவு குடிக்கவேண்டும். மறுநாள் காலையிலும் இதையே திரும்பவும் செய்யவேண்டும். குடற்பூச்சிகள் அனைத்தும் மலத்துடன் வெளியேற்றப்பட்டுவிடும்.

கெட்ட கொலெஸ்ரெரோலைக் (LDL cholesterol) குறைப்பதாக அறியப்பட்ட பைரோஸ்ரெறோல் (phytosterol) என்னும் இரசாயனங்கள் பூசணிவித்தில் உள்ளன.

Pumpkin என்பது பூசணிக்காயின் ஆங்கிலப் பெயர்.

Cucurbita pepo L, Cucurbita moschata (LAM) DUCHESNE EX POIR ஆகிய இரண்டு இனங்களின் காய்களும் பூசணிக்காய் என்றே அறியப்படுகின்றன.

*Sivakadadcham@thaiveedu.com*

■ ■ ■

# SELS Inc.

## CARRIER & RIDE SERVICES

## OTTAWA ➡ KINGSTON ➡ TORONTO ➡ HAMILTON

**Ottawa Greenboro பஸ் தரிப்பிடத்திலிருந்து புறப்படும் நேரம்:**

திங்கள் - வெள்ளி காலை 10:00 மணிக்கும் மாலை 6:30 மணிக்கும்
ஞாயிறு மாலை 4:00 மணிக்கும் புறப்படும்.

**Toronto வில் இருந்து புறப்படும் நேரம்:**

திங்கள் - வெள்ளி காலை 10:00 மணிக்கும் மாலை 6:30 மணிக்கும்
ஞாயிறு மாலை 4:00 மணி

**Parcels + Courier** எதுவாயினும் உரிய இடத்துக்குப் பாதுகாப்பாகக் கொண்டு போய்ச் சேர்க்கப்படும்.

நீண்ட விடுமுறை மற்றும் வார இறுதி நாட்களில் சிறப்புச்சேவை உண்டு!

**We also do small Moving and Parcel delivery all over Ontario!**

## உங்கள் மனநிறைவே எங்கள் தரம்!

மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள்:

குமரன் (செல்வா) 613.889.8733 / 647.648.0166

மின்னஞ்சல்: **sels4ride@gmail.com**

# N.K.S

Drapery & Blinds Fabric LTD



**திறமையான சேவையால் பல விருதுகளை பெற்ற நிறுவனம்**

உங்கள் வீட்டுக்குனுத் தேவையான சகலவித யன்னல் திரை வகைகளையும், கேட்டின் துணி வகைகளையும் மிகவும் மலிவான விலையில் பெற்றுக் கொள்ள அழையுங்கள்.

## கேதா நடராஜா

**416.321.6420**

**Ketha Nadarajah**
(President)
**Tel: 416.321.6420**
Fax: 416.321.2217
www.nksdrapery.ca

Drapery & Blinds Fabric Ltd., 210 Silver Star Blvd., Unit #825, Scarborough, ON M1V 5J9



Finch & Middlefield
2 Bed + 2Wash &249,000





Markham & Steeles
3 Bed + 3Wash




Staines & Steeles 3+1 Bed + 4 Wash
Finished Basement $649,900



Staines & Steels $699,900
4 Bed + 4 Wash




Finch & Middlefield
2+1 Bed + 1Wash $269,900



Mccowan & Steeles
2+1 Bed + 2 Wash $259,000



Warden & Finch $399,000
Finished Basement 3 Bed + 2Wash



Neilson & Sheppard $278,800
Finished Basement 4 Bed + 2Wash





Markham & Sheppard $349,000
4+1 Bed + 2 Wash



Morningside & Old Finch $429,900
3+1 Bed + 3Wash



Markham & Passmore
3+1Bed + 3 Wash $539,000

**Krish Sivapatham**
Sales Representative
**Direct : 416-895-4457**
**krishome.ca**
Independently owned and operated, Realtor

**2nd TOP PRODUCER**
**& CHAIRMAN CLUB AWARD WINNER 2013**
**TOP 5% SALES REPS IN CANADA**
**2010, 2011, 2012 & 2013**

**HomeLife/ Future Realty Inc.,** Brokerage
205 - 7 Eastvale Dr, Markham, ON, L3S 4N7
Bus:905-201-9977 Fax: 905-201-9229

# திருமணத்திற்கு முன்னரான உளவளத் துணை


எஸ். பத்மநாதன்

திருமணம் என்பது அழகாகத் திட்டமிட்டு, முடிந்த அளவுக்கு தகுதியுடன் செய்யும் ஒரு கருத்துள்ள நிகழ்வாகும். ‘A Practical wedding: Creative Solutions for Planning a beautiful affordable and Meaningful Cele bration’ என்ற அரிய வரைவிலக்கணத்தை Meg knee என்ற அறிஞர் வழங்கியுள்ளார்.

நாம் வாகனம், வியாபார நிலையம், வீடு, செல்போன் போன்ற எதனையும் வாங்க எண்ணினால் பலரிடம் விசாரித்து அறிவுரை பெறுகிறோம். ஆனால், வாழ்நாள் முழுவதும் கூடி வாழப்போகின்ற ஒரு துணையைத் தெரிவு செய்வதில் பெரும் அக்கறை காட்டுவதில்லை.

வாழ்வின் பாதியை நிரப்புவதும், புதிய திருப்பங்களை ஏற்படுத்துவதும் திருமணங்களே யாகும்.

இப்போது காதல் என்பது திடீர்க் கோப்பி (Instant Coffee) போல நடைபெற்றுவிடுகிறது. பல திருமணங்களும் முதன்மையான தாகக் கருதப்பட்டுச் செய்யப்படுவதில்லை. திட்டமிடாத திடீர்த் திருமணங்கள் திடீர்ப் பிரிவு, கோபதாபங்கள், நீதிமன்றங்கள் எல்லாவற்றையும் சந்தித்துவிடுகிறன. திருமணம் நடந்த வேகத்திலேயே விவாகரத்தும் நடந்துவிடுகின்றது.

ஒரு சட்டத்தரணியிடம் இதுபற்றி பேசநேர்ந்தது.

“என்னப்பா, இப்ப நடக்கிற பல திருமணங்கள் நிலைப்பதில்லையே. கொஞ்ச நாட்களிலே பிரிந்து விடுகிறார்களே’ எனக் கேட்ட போது அவர் சிரித்துக்கொண்டே ஒரு கோவையை எடுத்துப் போட்டு விட்டு ‘உதென்ன பெரியவிசயம், இராத்திரி கலியாணம் செய்தவை விடியவே விவாகரத்துக்கு வந்து பதிவு செய்திருக்கினம்’ என்றார். நான் திகைத்துப் போனேன்.

ஒரு சோதிடருக்கு நாலு சோதிடரைக் கண்டு பொருத்தங்கள் பார்த்து, பல்லாயிரம் டொலர் செலவு செய்து, பெரிய பெரிய விருந்துபசாரம் நடத்திப் பின் கூடி வாழ்ந்த சில நாட்களில் விரோதிகளாக மாறிவிடுகின்றனர் சில புதுமணத்தம்பதியினர்.

இத்திருமணத் தம்பதியினர், தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்கள், பொருளாதார பின்னணி, எதிர்கால திட்டங்கள், அவர்களது ஆசைகள், தனித்தன்மை இப்படிப் பல விடயங்களில் ஒத்துப்போகின்றனரா? என்பதைப் பலரும் பார்ப்பதில்லை. முப்பது நாற்பது வருடங்களுக்கு முன் பிறந்த ஆண்கள், பெண்கள் இருந்த நிலை வேறு. வாழ்க்கையை அவர்கள் எடுத்துக்கொண்ட விதம் வேறு. தற்போது எல்லோரும் படிக்கிறார்கள், அதிகம் சம்பளம் பெறுகிறார்கள், எதிலும் தனித்தன்மை கொண்டிருக்கின்றார்கள்.

முன்னைய தலைமுறை பெற்றோர்களுக்கும், பெரியோர்க்கும் கொடுத்த மரியாதை இப்போது இல்லை. எமது இளையோர்கள் பலரும் பெற்றோரின் கட்டுப்பாட்டில் வாழ விரும்புவதில்லை. அவர்களது ஆளுமை (Perso nality) முற்றாக மாறியுள்ளது.

எமது பண்பாடு, கலாச்சாரம், பாரம்பரியம் என்பன சரிந்து வருகின்றன. கால ஓட்டத்தில் அனைத்தும் கரைந்துபோய்விடுமோ என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் இப்போது நடைபெறும் திருமணங்கள் தகுதி கொண்டவையா? என்றே கேட்கத் தோன்றுகிறது.

## திருமணத்திற்கு முன்பதான உளவளத் துணை அவசியமா?

திருமணத்திற்கு முன்பதான உளவளத்துணை ஏன் அவசியம் என வினவினால் பல பயன் மிக்க உண்மைகளை நாம் கண்டறியமுடியும்.

திருமணமான தம்பதியரை நீண்டகாலத்திற்கு இறுக்கமாக இணைத்து வைத்திருப்பது அவர்களது ஒத்துப்போகும் தன்மையே (Compatibility) ஆகும். தம்பதியினர் ஒருவர் மீது ஒருவர் கொண்டிருக்கும் நம்பிக்கையே

இவ் ஒத்துப்போகும் தன்மை. எவரும் சிறப்பான தொடர்பாடல் திறமையுடன் பிறப்பதில்லை. பலர் இந்த திறமையை உருவாக்கிக்கொள்வதுவும் இல்லை. தொடர்பாடல் வழியே இருவருக்குமான புரிந்துணர்வு முறையாக ஏற்படாதவிடத்து வாழ்வு முறிவடைந்துபோகிறது.

அடுத்து எதிர்பார்ப்புக்கள் (Expectations) முக்கியமாகின்றன. கணவன் மனைவியர் எதனை எதிர்பார்க்கின்றார்கள் என்பது பற்றியதான புரிந்துணர்வு இருவருக்கும் அவசியமாகின்றது.

அத்தோடு தம்பதியினரின் ஆளுமைகள் (Personalities) முக்கியம் பெறுகின்றன. வாழ்க்கைத் துணை நலம் என்பது மனைவியை மட்டும் குறிப்பதல்ல. இருவரும் ஒருவருக்



கொருவர் துணையானவர்கள்.

அடுத்து முரண்பாடுகளை சமாளித்தல் (Conflict Management) குடும்ப உறவில் முதன்மை பெறுகின்றது. கூடவே நெருக்கம், பாலியல் சமன்பாடு, நீண்டகால இலக்குகள் என்பன முக்கியம் பெறுகின்றன.

வாழ்வுக்குள் நுழைவதற்கு முன்பதாக இவ்வளவு விடயங்களையும் தகுதி வாய்ந்த உளநல மருத்துவர் வாயிலாக அறிந்து கொள்வது அவசியமாகும்.

அமெரிக்காவில் ‘American Association for Marriage and Family Therapy’ (AAMET) இந்த விடயத்தில் தேவையானோர்க்கு உதவுகிறது. இவர்களது ஆலோசனைகள் சற்று வேறு விதமானவை. இந்த நிறுவனத்தின் ஆலோசனைகளில் கீழ்க்காணும் விடயங்கள் முதன்மை பெறுகின்றன.

- பொருளாதார நிலைமை (Finances)
- தொடர்பாடல் (Communication)
- நம்பிக்கைகளும் பெறுமானங்களும் (Beliefs and valuse)
- பாலியல் கவர்ச்சி (affection and Sex)
- குடும்ப உறவுகள் (Family relationships)
- தீர்மானம் எடுத்தல் (Decision Making)
- கோபம் பற்றிய கருத்து(Dealing with anger)
- இருவரும் ஒன்றாக இருக்கும் நேரம் (Time spent together)
- கல்வியும் அனுபவமும் (Education and experience)
- வேலை செய்யும் சூழ்நிலை (Office Treatment)

எம்மவர்கள் பலரும் இவைபற்றி எதுவும் சிந்திக்காது சாதகத்தினையும் சோதிடரையுமே பெரிதும் நம்புகின்றனர்.

சோதிடர் ஒருவர், ஒரு சதுரத்துக்குள் எல்லா கிரகங்களையும் கீறிவிட்டுத் தமது பாசையில் ஏதோ எல்லாம் சொல்லி நல்ல உறவுகளைச் சேராது செய்து விடுகிறார். தவறான உறவுகளைச் சேர்த்து விடுகின்றார்.

பிள்ளைகளின் வயது முப்பதுக்கு மேற்சென்றாலும் சோதிடரின் சதுரக்குறிப்புக்காக அலைபவர்களே அதிகம். ஒன்றாரியோவில் பல ஆலோசனை மையங்கள் உள்ளன. குறிப்பாக Dr. Dalton Associates நிறுவனம் கடந்த 30 வருடங்களாக இதற்கான சேவையைச் செய்துவருகிறது. இவர்களது கருத்தின்படி திருமணத்திற்கு 5 மாதங்களுக்கு முன்பதாக இத்தகைய ஆலோசனைகளைப் பெறுதல் நலமாகும். இதில் மதம், மற்றும் குழப்பநிலை, பாலியற் தூய்மை (Sexual Purity) போன்ற நுணுக்கமான விடயங்களையும் அவதானிக்க வேண்டும் என்கின்றனர். அத்துடன் மனப்பான்மை, பொதுவிருப்பு வெறுப்பு, ஆளுமை, வயது, முயற்சி என்பவற்றையும் ஆராய முயல்கின்றனர்.

பொதுவாகத் திருமணம் செய்யப்போகும் தம்பதியர், மாறுபாடான விருப்பு வெறுப்புகளைக் கொண்டவர்களாகவும், பல புதிய ஆச்சரியங்களை எதிர்பார்ப்பவர்களாகவும் நம்பிக்கையுடன் வாழ ஆரம்பிப்பவர்களாகவும் மற்றவர்களுக்கு முன்மாதிரியாக வாழபோகின்றவர்களாகவும் குடும்பத்தை இணைக்கப் போகின்றவர்களாகவும் குழந்தைகளைப் பெறப்போகின்றவர்களாகவும் சொத்துக்களை சேகரிக்க முயல்பவர்களாகவும் இருப்பர்.

ஆகவே இவர்களை முதலில் தனித்தனியாக கலந்துபேசி பின்னர் ஒன்றாக இருத்திப் பேச வேண்டியுள்ளது.

பலர் விடைகளை எதிர்கொள்ளத் தயங்கி இதற்குச் செல்வதில்லை. எம்மவர்கள் பெரிதும் இதனை ஒரு வேண்டாத செயலாகவே கருதுவர்.

சமூகத்தில் திருமண ஆலோசனைகள் தேவைப்படுவோர் பல தரங்களில் உளர். திருமணமாகாதவர்கள், திருமணமானவர்கள், கல்யாணம் செய்வதாக உறுதி செய்திருப்பவர்கள், Dating எனப்படும் சந்திப்பு செய்பவர்கள், ஒரே பாலினத்தினர், கலப்புத் திருமணம் செய்யவுள்ளவர்கள், வேறு வேறு கலாசாரத்தினர், வேறுபாடான மதத்தினர், ஓய்வு பெற்றவர்கள், பெரியதொழில் செய்வர்கள், முத்தகுடியினர் (Aboriginals) புதிய குடிவரவாளர் எனப் பல வகையினர் இங்கு வாழ்கின்றனர். இவர்களது அகப் புறச் சூழல்களை அடிப்படையாகக் கொண்டே திருமணம் தொடர்பான சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

திருமணம் என்பது சாதாரண விடயமே அல்ல. இது சட்டரீதியாக, இருவர் நிரந்தரமாக இணைந்து வாழும் தன்மையைக் குறிப்பிடுகின்றது. திருமணம் செய்பவர்கள் பொதுவாகக் குடும்பமாக வாழ்வதற்கு விரும்புகின்றனர். இதனை பொருளாதார, உளவியற் தேவைகளே தீர்மானிக்கின்றன. இவர்களது சொத்துக்கள் இணைக்கப்படுவதும் இதன் மூலமேயாகும். அத்துடன் பாலியல் தேவையும் இதன் மூலமே பூர்த்தியாகின்றது. நான் என்பது நாம் என மாறுகிறது. ஒருவரில் ஒருவர் நம்பிக்கை கொள்ளவைக்கிறது.

நீண்ட தொலைநோக்கினை ஏற்படுத்துகிறது. முரண்பாடுகளை தோற்றுவிக்கிறது அல்லது நீக்குகின்றது. வேலையின் நிமித்தம் பிரயாணம் செய்ய நேரிடுகிறது. பொருளாதர நெருக்கடி எழுகிறது. நோய்களும் ஏற்படுகின்றன. பல உதவிகள் தேவைப்படுகிறன.

இவற்றை மனதிற் கொண்டு ஒவ்வொருவரும் தம்மைத்தாமே சீரமைத்துக்கொள்ள வேண்டியுள்ளது. நிரந்தரமான திருமணம் தொடர்பாக எவ்வளவோ விடயங்களை சிந்திக்க வேண்டியுள்ளது. திருமணத்திற்குத் தயாராக உள்ள ஒவ்வொருவருக்கும் இவை பற்றிச் சிந்தித்துச் சரியான முடிவெடுக்க ஓர் ஆலோசகர் தேவைப்படுகிறார். இவர் அனுபவ முதிர்ச்சி, ஆற்றல், சிபார்சு வழங்கும் திறமை போன்றவற்றில் தேர்ந்தவராக இருக்க வேண்டியுள்ளது.

வெளிநாட்டினரை விடவும் நம்மவர்கள் அதிகம் விவாகரத்துக்களைக் கோருவார்களோ என்ற அச்சம் எழவே செய்கிறது. எமக்குத் தெரிந்த உறவுகளில் குறைந்தளவு ஒரிரு குடும்பங்களாவது விவாகரத்துவரை சென்றிருக்கின்றன.

கனடிய, அமெரிக்கர்கள் இந்தப்பிரச்சினைகளை அறிவியல் ரீதியாகத் திருமணத்திற்கு முன்பதான உளவள ஆலோசனை மூலம் சரிசெய்கின்றனர். இதனை அத்தியாவசியமாகவும் கருதுகிறர்கள். விவாகம் செய்து கொள்ளலாம் என நினைப்பவர்கள், மனம் திறந்து தகுதிவாய்ந்த உளவிலாளரை (qualified Psychologist) சந்தித்து ஒரு பரீட்சை எழுதி ஆலோசனை பெறுகிறார்கள்.

நம்மவருக்கோ திருமணத் தரகர்களின் ஆலோசனைகளே பெரிதாகப்படுகின்றன.

‘வருமுன் காத்தல்’ என்ற முறையில் விலை மதிக்க முடியாத ‘வாழ்க்கை’யை இனிதாக்கிக் கொண்டு, நிம்மதியாக, மகிழ்ச்சியாக வாழவேண்டும். எமது மக்கள் பெரும்பாலும் ஒழுங்கு செய்யப்பட்ட திருமணங்களைச் (Arranged Marriage) செய்வதால் பல பிரச்சினைகள் எழுகின்றன. ‘எனக்கும் அவருக்கும் மனசு ஒத்துப்போகவில்லை’ அவருடைய Taste தெரிவுகள் வேறு, என்னுடைய தெரிவுகள் வேறு என்பவர்களும், ‘ஏமாந்து போய் விட்டேன்’ என்பவர்களும், ‘பாலியல் உறவில் நிறைவு இல்லை’ என்பவர்களும் உளர். படித்தவர்களுக்கே இந்தப் பிரச்சினை என்றால் பாமர மக்கள் நிலையை என்னவென்பது?

தாயகச் சூழலில் இருந்து பெரிதும் மாறுபட்ட கனடிய வாழ்களத்தில் மரபு சார்ந்த பின்பற்றல்கள் பெரிதும் ஒத்துழைக்காது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இந்த மண்ணுக்கே உரித்தான வாழ்வியற் பண்புகளை நாம் புரிந்து கொள்ள இவ்வாலோசனைகள் பெரிதும் உதவும். வாழ்வில் ஏற்படக்கூடிய இடர்களையும் தோல்விகளையும் முற்கூட்டியே உணர்ந்து கொண்டு அவற்றைத் தவிர்க்க சோதிடர்களும் திருமணத் தரகர்களும் உதவமாட்டார்கள். இந்த ஆலோசனைகள் மட்டுமே எமக்கு உதவ வல்லவை.

திருமணம் ஆயிரம் காலத்துப் பயிர். இதற்கெல்லாம் ஆலோசனை தேவைதானா? எனக்கு எந்த ஆலோசனையும் தேவையில்லை என்பவர்களும் நம்மிடையே உளர். பலருக்கு இம்முறை தெரியாமலும் இருக்கலாம். ஆனால், நீண்டகால நன்மையைக் கருதி உளவள ஆலோசனையைப் பெற்று திருமணம் புரிவது என்றும் நன்மை தருவதொன்றாகும்.

*pathmanathan.s@thaiveedu.com*

■ ■ ■


அராலி கலாச்சார ஒன்றியம்
Araly Cultural Organization
கனடா
Araly Cultural Organization Canada
www.araly.org
10th Anniversary Dinner Gala
10வது ஆண்டு விழா
J&J Swagat Banquet Hall
415 Hood Rd, Markham, ON L3R 3X2 (Warden & Denison)
Saturday, September 13, 2014
from 6:30 pm
Entrance : $30
Music program presented by "AGNI MUSIC GROUP".
அக்னியின் இன்னிசை மழையில் நனைந்திட வாருங்கள்
For tickets
V. Selvaratnam : 647 828 4614 | S. Yogalingam: 416 726 4141 | N. Uruthiran: 416 839 1526 | A. Ravinesan: 647 464 9508
GOLD SPONSORS
Vasuki Devadas
Barrister, Solicitor and Notary Public
Vasuki Devadas Law Office
Call: 416-266-1234
Email:vasuki@vdlaw.ca
"For all your legal needs"
Sribales Jeyakumar
Sales Representative
Homelife/Future Realty Inc.,
Brokerage*
Call: 416-834-2828
Email:jeyahome22@hotmail.com
"Highest Standard Agents... Highest results"


வீடு, வியாபாரம், காணி வாங்க விற்க அழையுங்கள்!
Commitment Reliability Professionalism
Pat Pushpakanthan
Full Time Real Estate Broker
PAT WILL BEAT ANY DEAL* !
416 894-1187
Hall of Famer
CENTURION AWARDS
Century 21
BROKERAGE
80 Corporate Dr. Suite 410. Toronto M1H3G5
Off 416-290 1200
VISIT... WWW.PATPUSH.COM
52 acres farm
Hwy 400 north/inisfield
$699k
investment
Markham/dennison
2 bm/ 2 wsrm condo 279k
Whitby/brooklin
4 bm/4wsrm 599k
Birchmount/Lawrence
Bsmnt apt 3 bm home 519k
54 x 129 Feet
Lawrence/Jane
6 car park drive with bsmnt apt
markham/ 14th Ave
4 bm/4wsrm 779k
Brimley/denison
3 bm/ 4wm home 529k
Mccowan/16 th ave
4 bm 4 wsrm 829k
oshawa
579k
4 bm/ 3 wsrm new home
Det home farm
5 acres
Hwy400/89
3/2 bm
135k
493/- monthly mortgage*
Brock/taunton
559k
4bm 4 wsrm
Bur Oak & 9th Line
4 bm/ 3 wm 789k


Buying Or Selling
Residential, Commercial, & Investment Properties
Your home may be worth a LOT More than you think!
$549,900 Ajax
BR : 4, WR: 3
Pickering Beach Rd/ Rollo Dr.
$659,000 Markham
BR : 4, WR: 3
Mccowan/16th Ave
$679,600 Markham
BR : 4, WR: 3
9th Line/Hwy 7
$759,000 Stouffville
BR : 4, WR: 3
Sandiford/Hooverpark
$789,900 Markham
BR : 5, WR: 3
16th Ave / Donald Cousens Pkwy
$849,000 Markham
BR : 4, WR: 4
Hwy 7 & 9th Line
$989,900 Markham
BR : 4+1, WR: 5
9th Line / Highway 7
$998,800 Markham
BR : 4, WR: 4
14th Ave/ 9th Line.
Toronto
SOLD
Morningside / Old Finch
Toronto
$229,000
BR : 2+1, WSRM: 1
Finch/Middlefield
2 Parking Space
Toronto
$162.500
BR : 2, WR: 1
Tapscott/Mclevin
$589,900 Ajax
BR : 4, WR: 3
Westney / Rossland
FULL-TIME REALTOR
Formar Mortgage Consultant
* Mortgage/Re-Financing can be arranged with major Bank... Low Rate
* 1st & 2nd Mortgage
Top 5% Sales Rep.
2012 & 2013
RAJA V.S. RAJAGOPAL
Sales Representative
Some condition apply
C : 416-727-8647
buysellwithrajagopal.com
HomeLife/Future
Realty Inc., Brokerage*
*Independently Owned and Operated
Bus : 905-201-9977 Fax : 905-201-9229
205-7 Eastvale Drive, Markham ON L3S 4N8

# எஜமானைப் பிரிவதனால் ஏற்படும் Separation Anxiety



அ. ராஜ்குமார்
- Veterinary Surgeon -

நாய் ஒரு கூடிவாழும் இனம் என்பதால், வளர்ப்பு நாயினை தனியே வீட்டில் விட்டுச் செல்லும்போது இத்தகைய Aniety (தவிப்பு) மனநிலை தோன்றுகின்றது.

### Separation (பிரிவு) Anxiety (தவிப்பு) என்றால் என்ன? எவ்வாறு கண்டறிவது:

ஒரு நாய் தனது படிமுறைவளர்ச்சியில் பால் பல்லில் இருந்து Adult பல் வளரும்போது Chewing (கடித்தல்) செயற்பாட்டை செய்கின்றது. பல் வளரும்போது பல்லில் தோன்றும் ஒருவித வலியினைப் போக்குவதற்காக இத்தகைய செயற்பாட்டை மேற்கொள்ளும். இது 3 மாதம் தொடக்கம் 8 மாதம் வரையான காலப்பகுதியில் நடைபெறும். இக் காலப்பகுதியில் Chew toysஇனை வளங்குவதன் மூலமும், மேற்பார்வை அற்ற நேரத்தில் கூட்டில் அடைத்து வைப்பதன் மூலமும் தவிர்க்கமுடியும்.

Chew toys இனை வாங்கும்போது கடினமான Rubber toysனை மட்டும் தெரிவுசெய்ய வேண்டும். பொதுவாக Petsmart போன்ற அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் இத்தகைய toysனை வாங்கமுடியும். சிறு பிள்ளைகளுக்கான toys வாங்கும் போது கடைக்கப்பிடிக்கவேண்டிய விதிமுறைகள் போன்று நமது வளர்ப்பு பிராணிகளின் toysற்கும் விதிமுறை உண்டு. எனவே தரமற்ற துணியினால் செய்யப்பட்ட toyனைக் கொடுத்து, இத்தகைய 'toyனை வளர்ப்பு பிராணி விழுங்கிவிட்டது' எனப் பின்னர் பாரிய பிரச்சினையில் சிக்க வேண்டி வந்துவிடும்.

இத்தகைய 3-8 மாத காலப்பகுதி தவிர்ந்த வயதிலும் அல்லது பொதுவாக வீட்டில யாரும் அற்ற நேரத்திலும் (chewing) வீட்டு உபகரணங்களைக் கடிக்கும் செயற்பாட்டில் உங்கள் செல்லப்பிராணி ஈடுபடின் அது Anxiety (தவிப்பு) என்ற நடத்தைப் பிரச்சினையை குறிகாட்டுகின்றது.

### எவ்வாறு எமது செல்லப்பிராணிக்கு சரியான ஆரம்பத்தை கொடுக்க முடியும்?

சரியான Breeder இடம் சென்று puppy (செல்லப்பிராணி) ஐ கொள்வனவு செய்யும் போது நாம் சரியான ஆரம்பத்தைப் பெறமுடியும்.

வீட்டிற்கு வந்த முதல் நாளே செல்லப்பிராணியை தனியே, குறிப்பிட்ட நேரம் Crateல் விடவேண்டும். நாயினம் கூடிவாழும் தன்மை உடைய இனம் என்பதால் இத்தனிமையை விரும்பமாடாது. இத்தகைய நிலையில் முதல் நாளே செல்லப்பிராணி அழுதவுடன் நாம் ஓடிச்சென்று தூக்குவோமே ஆனால் நாம் பிளையான ஒரு பழக்கத்தை பழக்கிவிடுகிறோம் செல்லப்பிராணி தனது அழுகையை



நிறுத்திய பின்னரே அவரை திறந்து விட வேண்டும். பழக்கம் என்பது முதல் நாள் தொடக்கம் சகல வீட்டு அங்கத்தவரும் ஒரே விதமாகக் கடைப்பிடிக்கவேண்டிய ஒரு செயற்பாடு.

நாம் வீட்டிற்கு வெளியே செல்லும்பேதோ வீட்டின் உள்ளே வரும்போதோ எக்காரணம் கொண்டும் செல்லப்பிராணியுடன் கதைத்து மகிழ்விக்கக் கூடாது. இவ்வாறு செய்வதனால் வீட்டில் யாரும் இல்லாத நேரத்தை தனது ஓய்வு நேரமாகச் சிந்தித்துக் கொள்வதற்குப் பழகிக்கொள்ள மறுக்கின்றது.

### நன்நடத்தையினை எவ்வாறு உங்கள் செல்லப்பிராணி பெற்றுக் கொள்வது?

முக்கியமாக நமது செல்லப்பிராணியிடம் கடிகாரம் இல்லை. ஆனால், மிருகங்களின் மூளையில் ஒரு Biological clock என்று சொல்லக்கூடிய ஒருவகைக் கடிகாரம் உண்டு. நேரம் தவறாது உணவு நீர் கொடுப்பது மட்டும் போதாது. ஒரே நேரத்திற்கு வெளியே கூட்டிச்செல்வது அரை மணிநேரமோ ஒரு மணிநேரமோ இத்தகைய நேரஅட்டவணையை சரியாகப் பின்பற்றவேண்டும். இல்லாவிடில் இன்று பின்நேரம் 6 மணிக்கு வெளியே சென்று விட்டு நாளை இரவு 8 மணிக்கு கூட்டிச்சென்று விட்டு நான் ஒரு மணிநேரம் ஒவ்வொரு நாளும் வெளியே கூட்டிச்செல்வதாக எண்ணுவது தவறு. செல்லப்பிராணியைப் பொறுத்தவரை 6 மணிக்கு ஆயின் ஒவ்வொரு முறையும் 6 மணிக்காக இருக்க வேண்டும் இல்லாவிட்டால் ஒவ்வொரு மணி நேரம் பிந்தும்போதும் எதிர்பார்ப்புடன் காத்து இருக்கும்போது Anxiety உருவாகும். முதல்

**இவ் அட்டவணை ஓர் ஒப்பீடு**

| மனிதரின் வயது | 15 Y | 20 Y | 50 Y | 40 Y | 60 Y | 80 Y | 95 Y |
|---|---|---|---|---|---|---|---|
| 25 Kg நிறையுடை நாய் இனம் | 9 M | 14 M | 2 ½ Y | 4 Y | 9 Y | 11 Y | 15 Y |
| இ 25 Kg நிறையுடை நாய் இனம் | 9 M | 14 M | 3 ½ Y | 5 ½ Y | 10 Y | 13 Y | 18 Y |
| பூனை | 6 M | 1 Y | 3 Y | 5 ½ Y | 11 Y | 15 Y | 21 Y |

முதலில் தனியே விட்டுச் செல்ல தொடங்கும்போது சிறிய நேர இடைவேளையில் தொடங்கவேண்டும். ஒரே தடவையில் 6 மணியோ 8 மணி நேரமோ நீங்கள் தனியே விட்டுச் செல்வது Anxietyல் கூட்டுவதற்கு வழிவகுக்கும்.

ஒரு செல்லப்பிராணி தனிமையில் Anxiety னைக் கொண்டதாக காணப்படும்போது இன்னுமொரு செல்லப்பிராணியினை வாங்கி துணைக்கு விடுவதற்கு முறப்படுவது தவறு.

ஒரே தடவையில் இரண்டு செல்லப்பிராணியினை வாங்குவது உதவியாக இருப்பினும் தனியே, சரியான பழக்கவளக்கம் பழகாத சந்தர்ப்பத்தில் இன்னுமொரு செல்லப்பிராணியைக் கொண்டுவருவது எந்த வகையிலும் உதவிபுரியாது.

### வளர்ப்புப் பிராணிகளிடம் தவிர்க்கப்பட வேண்டியவை:

- Table food (வீட்டில் நாம் அன்றாடம் உண்ணும் உணவு)
- Avocado
- Alcohol
- Onions
- Coffee/Tea or Coffeiner
- Grapes – Raisins
- Milk & Ice cream
- Chocolate
- Bones – (Chicken)
- Human Pain medicine

### வளர்ப்பு நாயின் வயதும் நமது வயதும்:

வளர்ப்பு நாயின் வயதை மனிதனின் வயதுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதன் மூலம் வளர்ப்பு நாயின் பழக்கவழக்கங்களை அறிந்து கொள்ளவும் தகாத பழக்கங்களை எவ்வாறு சரி-செய்வது என்று புரிந்து கொள்ளவும் முடியும். இதைவிட வயதின் மாற்றங்களுக்கேற்ப மனிதரில் காணப்படும் மாற்றங்களை வளர்ப்புப் பிராணிகளில் ஒப்பிட்டு அறியவும் முடியும்.

மனிதரைப்போல் அல்லாது வளர்ப்பு நாயின் வாழ்நாள் 12 தொடக்கம் 18 வருடம் வரையான காலப்பகுதியாக காணப்படுகின்றது. 780 Lb நிறையை கொண்ட நாயினம் சாரசரி 10-12 வருடங்ளும் சிறிய நாயினம் 15-18 வருடங்களும் வாழக்கூடியது

*rajkumar.a@thaiveedu.com*

■ ■ ■






**Computek College**

BUSINESS • HEALTH CARE • TECHNOLOGY

Est. 1997

Registered as a private career college under the Private Career Colleges Act, 2005

Enroll in a Diploma Course and receive a




*(Offer valid until Dec 31, 2014)*

NOW ACCEPTING INTERNATIONAL STUDENTS!



Computek College is approved as a Designated Learning Institution (DLI) by Citizenship and Immigration Canada (CIC)

LAID OFF?
UNEMPLOYED?

NEW SKILLS!
NEW CONFIDENCE!!
NEW CAREER!!!



SECOND CAREER
&
OTHER FUNDING , OPTIONS AVAILABLE
CALL FOR DETAILS

DIPLOMA COURSES

| | |
|---|---|
| Enterprise Network Engineering | 50 wks |
| Community Services Worker | 50 wks |
| Int. Application Development | 50 wks |
| Early Childcare Assistant | 38 wks |
| Personal Support Worker | 32 wks |
| Accounting & Payroll Admin | 35 wks |
| Medical Office Admin | 28 wks |
| Network Engineering | 28 wks |
| Computerized Accounting | 26 wks |
| Business Administration | 26 wks |

PART-TIME COURSES ( WEEKEND /EVENING)

Bank Teller, MS Office
Food Handler, Food Service Worker
AccPac, Simply Accounting, Quick books
Exam Prep: A+, MCSA, MCSE
ICDN 1, ICDN 2, Canadian Securities Course
C/C++, C#, Java, VB.net, HTML, SQL
Medical Coding & Billing
CPR & First Aid

WWW.COMPUTEK.EDU

Financial assistance may be available for those who qualify

| Toronto Campus | Markham Campus | Scarborough Campus |
|---|---|---|
| 301-2347, Kennedy Rd. (Kennedy/Sheppard) | 202 - 7 Eastvale Drive. (Markham / Steeles) | 248-2390 Eglinton Ave E Kennedy/Eglinton) |
| 416-321-9911 | 905-471-3344 | 416-285-9941 |

# மாணவர் விசா / Student Visa



த. வசந்தகுமார்

[{d; 1, 2014 திகதியிலிருந்து கனடாவிற்கு Student Visa (Study Permit) எடுக்கும் விதிகளில் பல மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. கனடிய அரசாங்கம் இந்த புதிய விதிமுறைகளை அமல்படுத்துவதன்மூலம் நாட்டின் உயர்ந்த கல்வித் தராதர மதிப்பீட்டை சர்வதேசரீதியில் பாதுகாத்துகொள்வதுடன் தரம் வாயந்த மாணவர்கள் கனடாவில் கல்வி கற்பதற்கான வாய்ப்பினையும் அதிகரித்து அதனை ஊக்குவிக்கின்றது.

புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட விதிமுறைகளின்படி கனடாவில் படிக்க விரும்பும் மாணவர்கள், Citizenship & Immigration Canada (CIC) வினால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் மட்டுமே கல்வியைத்தொடரலாம். இக்கல்வி நிறுவனங்கள் Designated Learning Institutions (DLI) என்று அழைக்கப்படுகின்றன. இக்கல்வி நிறுவனங்களுக்கு ஒவ்வொரு இலக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன O என்ற ஆங்கில எழுத்தில் ஆரம்பித்து தொடரும் இலக்கங்கள் ஒவ்வொரு application form இலும் குறிக்கப்படவேண்டும். Study permit உடன் கனடாவிற்கு வரும் மாணவர்கள் கல்வி நிறுவனங்களில் ஒழுங்காகக் கல்வியைத் தொடரும் போது, ஒரு கிழமைக்கு 20 மணித்தியாலங்கள் வரை பகுதிநேர வேலை செய்து ஊதியம் பெறுவதற்குத் தகுதியுடையவர்களாகின்றார்கள் இதற்கென்று தனியாக Work Permitஇற்கு விண்ணப்பிக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆயினும், Study Permit பெற்று, இங்கு கல்வி கற்க வருபவர்கள், குறிக்கப்பட்ட கல்வியை ஒழுங்காகத்தொடராத பட்சத்தில் அவர்கள் கனடாவிலிருந்து, வெளியேற்றப்படுவதற்குரிய (Lead to removal from Canada) நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

## Financial Support:

கனடாவிற்கு Study Permit எடுக்க விரும்புவர்கள், கீழே குறிக்கப்பட்ட தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் போதிய நிதியிருப்பதை நிரூபிக்க வேண்டும்.

- Tution Fees
- Living expenses for yourself and any family members who come with you to Canada, and
- Return transportation for yourself and any family member who come with you to Canada.
- You must be a law-abiding citizen with no criminal record and not be a risk to security of Canada.

இதில், tuition fees payment எவ்வளவென்பது, தொடரவிருக்கும், கல்விநெறியிலும், கல்வி நிறுவனங்களிலும் தங்கியுள்ளது. தற்போது, சாதாரணமாக, ஒரு வருடக்கல்வியைப் பூர்த்தி செய்வதற்கு அண்ணளவாக, $12,000 - $17,000 வரை தேவைப்படலாம்.

Living expenses ஐப் பொறுத்த மட்டில், ஒரு மாணவருக்கு ஒரு மாதத்திற்கு ஏறக்குறைய $1000 என்ற அடிப்படையில் ஒரு வருடத்திற்கு $12,000 வரை தேவைப்படலாம். இத்தோடு விமானப் பயணச் செலவுகளையும் கருத்திற்கொள்ள வேண்டும்.

## ஆங்கில அறிவு (IELTS) பரீட்சை:

கனடாவில் கற்கை நெறிகள் ஆங்கிலமொழி மூலம் கற்பிக்கப்படுவதால், Study Permit ற்கு விண்ணப்பிப்பவர்களுக்கு தகுந்த ஆங்கில அறிவு இருப்பது அவசியமாகின்றது. ஆங்கில அறிவை பரீட்சிப்பதற்கு IELTS, TOEFL போன்ற பரீட்சைகள் நடத்தப்பட்டாலும் தற்போது, IELTS பரீட்சை உலகளாவில் ரீதியில் பிரபலமடைந்திருக்கின்றது.

British Council ன் உதவியுடன் International English Language Testing System (IELTS) என்ற இந்த பரீட்சை நடத்தப்படுகின்றது. இப்பரீட்சை நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பகுதியும் பரீட்சிக்கப்படுகின்றது. Listening (30 நிமிடங்கள்), Reading (60 நிமிடங்கள்), Writing (60 நிமிடங்கள்), Speaking (11-14 நிமிடங்கள்). மொத்தப் பரீட்சை நேரம் 2 மணி 45 நிமிடங்களாகும். The listening, reading & writing பரீட்சைகள் ஒரே சமயத்திலும், Speaking பரீட்சை அநேகமாக பிறிதொரு நாளிலும் நடாத்தப்படுகின்றன. இந்த Speaking பரீட்சையில், ஒரு Certified IELTS பரீட்சகருடன், ஆங்கிலத்தில் உரையாடவேண்டும். IELTS uses a 9-band scoring system to measure & report test scores. You receive individual band score for listening, reading, writing and Speaking and an overall Band Score on a band scale from one to nine.

There is no pass or fail in IELTS. ஒவ்வொரு கல்வி நிறுவனமும் தத்தமக்குரிய Bandனை நிர்ணயிக்கின்றன. இலங்கையில், கொழும்பு, கண்டி, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் இப்பரீட்சை நடத்தப்படுகின்றது. இப்பரீட்சைக்குரிய விண்ணப்பக் கட்டணம் ஏறக்குறைய $170(Rs.19, 200). Tuition Class ற்கு ஏறக்குறைய $250 - $400 வரை கட்டணங்கள் அறவிடப்படுவதாக அறியப்படுகின்றது. இப்பரீட்சை நடப்பதற்கு 2 மாதங்களுக்கு முன்னரேயே விண்ணப்பிக்க வேண்டும். பரீட்சை முடிவு ஏறக்குறைய 2 கிழமைகளில் அனுப்பிவைக்கப்படும்.

## Study Permit Visa Processing:

Study Permit விசாவைப்பெறுவதற்கு விண்ணப்பித்த நாளிலிருந்து முடிவைப் பெறுவதற்கான காலநேரம், நாட்டுக்குநாடு வேறுபடுகின்றன.

- Sri Lanka - 11 weeks
- New Delhi - India - 3 weeks
- Sydney - Australia - 8 weeks
- London - UK - 7 weeks
- Paris - France - 4 weeks
- New York - US - 19 weeks

Study Permiஇவற்கு விண்ணப்பிப்பவர்கள், இணைக்கவேண்டிய சில பத்திரங்கள் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளன. முழுவிபரத்தினையும், இணையத்தளத்தின் மூலமாக அறிந்துகொள்ளலாம்.

- Application for Study Permit (IMM 1294)
- Completed family imformation (IMM 5645) if applicable.
- Letter of acceptance from the Desigrated Learning Institution where you intend to study.
- Proof of financial Support for the duration of your studies in Canada.
- Application processing fee payment of $150
- Passport
- Two Photos.


மேலே குறிப்பிட்ட அனைத்துப் படிவங்களுடன் மேலதிகமாக கேட்கப்படும் படிவங்களையும் தகுந்த முறையில் பூர்த்தி செய்து சமர்ப்பிப்பதன் மூலம், தாமதங்களைத்தவிர்க்கலாம். ஏதாவது காரணங்களினால் Study Permit மறுக்கப்பட்டு கடிதம் வழங்கப்பட்டால், அக் கடிதத்தை tuition fees செலுத்திய கல்வி நிறுவனத்துக்குச் சமர்ப்பிப்பதன் மூலம் நீங்கள் tuition ற்குச் செலுத்திய முழுத்தொகையினையும் மீளப் பெற்றுக் கொள்ளலாம்.

vasanthakumar.t@thaiveedu.com

■ ■ ■


WE PROVIDE
MORTGAGE
SOLUTIONS
FOR EVERYONE!
LOW RATES STARTS AT
2.74 % For 5 YEAR FIXED*
2.35 % For 5 YEAR VARIABLE*
*OAC
Purchase
Refinance
Renewals / Switches
1st, 2nd, 3rd Mortgage
Equity Lines of Credit
Bad Credit / No Credit
Bankruptcy/Consumer Proposals
Power of Sales
Tax & Mortgage Arrears
Visit us at www.lenderhub.ca
Ram Krish
Mortgage Agent - Mortgage Alliance
Tel: 416-427-5555
Lic # M08002015
MORTGAGE ALLIANCE
10 Milner Business Court, Suite 401
Scarborough, ON M1B 3C6


S.P.IMPORTERS
4 DIFFERENT STORES IN THE SAME PLAZA
YOUR CONVENIENCE
SP
Furniture
2853 Lawrence Avenue East
Brimley & Lawrence
416-266-3077
அனைத்து தளபாடங்களும் மிக மிக மலிவு விலையில்


Buying Or Selling
Residential, Commercial, Land & Investment Properties
Hwy 7 & 9th Line $3,200
For Lease Bedrooms 4, Washrooms 4
Warden / Finch $213,900
For Sale Bedrooms 3, Washrooms 2
Mccowan/Steeles $239,900
For Sale Bedrooms 2, Washrooms 2
Finch & Minefield $249,000
For Sale Bedrooms 2, Washrooms 2
Goreway/Queen $269,900
For Sale Bedrooms 2+1, Washrooms 2
Burnhamthorpe/ Confederation $299,900
For Sale Bedrooms 2+1, Washrooms 1
Morning Side & Old Finch $429,900
For Sale Bedrooms 3+1, Washrooms 3
Salem/Kingston Road $629,800
For Sale Bedrooms 4 Washrooms 4
Finch & Morning Side $698,800
For Sale Bedrooms 4, Washrooms 3
Staines / Steeles $699,000
For Sale Bedrooms 4, Washrooms 3
Passmore/Oasis $699,900
For Sale Bedrooms 3+1, Washrooms 4
Store With Apt/Office $749,000
For Sale
Sheppard/Morningside $749,900
For Sale Bedrooms 5, Washrooms 3
16th Ave / Donald Cousens Pkwy $789,900
For Sale Bedrooms 5, Washrooms 3
Hwy 7 & 9th Line $849,000
For Sale Bedrooms 4, Washrooms 4
HomeLife Higher Standards
Sathy Sivasubramaniam Sales Representative
2004/2006 Silver Award
2006/2009 Platinum Club Award
2010/ 2011/ 2012/ 2013 Chairman Club Award Top 5% Sales Rep in Canada
2011 / 2012 Sales person of the Year
For Sellers:
Free Market Evaluation Available
Competitive commission Packages available
Will pay for Staging & Consultation
Will pay for the Professional Photographer
Virtual Tour
Color Brochure
Will do open house until house get sold.
Will market your home with social medias
For Buyers
Will find the home in any area within your budget
Get you the lowest mtg. rate
1 Year Home Warranty Available for Limited Time
Preferred pricing on Furniture, Appliances & Electronics through "The Brick" up to 35% off
HomeLife/Future Realty
205-7 Eastvale Drive, Markham, Ont L3S-4N8
Office: 905-201-9977 / Fax: 905-201-9229 / Direct: 416-624-5044 E-mail-homelifesathy@gmail.com www.homelifesathy.com

# RES Home Direct

*We make your financial dreams come true...*

**Equitable solutions to all your financial problems!**

## Commericial / Residential, Private 2nd mortgage interest from 6.99%

மனம் கேட்கும் இல்லம் கிடைத்தால் வாழ்கை என்பது சொர்க்கம்தான்

## *Now is the time to buy your Dream home*

- Residential 1st Mortgage with low interest rates
- Home Equity line of Credit and Refinance
- Renewal, Switch, Transfer and Private mortgages
- New Immigrant, Low income, Self Employed & Bankruptcy
- Business Loan, Line of Credit & Credit cards
- Commercial refinance / Construction loan & more
- Commercial Mortgage up to 20 million with low Interest rate
- Store with apartment, Duplex, Triplex Rental Properties.
- Private Funds for Bad credit & Collection Agency settlement.
- We deal with all major banks, trust companies and private lenders.

**Bank Say No? We Say Approved!**

### *Get your debt relief now*

- ✓ *Mortgage Payment in Arrears*
- ✓ *Credit Card Payments In Arrears*
- ✓ *Property Taxes in Arrears*
- ✓ *Rejected by the Bank*
- ✓ *Debt Consolidation*
- ✓ *Collection Agency settlement*
- ✓ *Home Renovation and more...*



***We do purchase & refinance for Gas Stations, Plazas, Churches & Motels***

You will get the best rate regardless of good or bad credit!



**T. Antony Ponrajah**
Mortgage Agent Lic # M08004007
**Tel: 416-431-5115**
Dir : 416-457-0651
Fax : 416-628-3120

*Residential and Commercial property buy & Advice, Contact Us*
**New Town Sq Builder's**
Authorized Mortgage Agent
**40 New Delhi Dr Unit 57, Markham,ON,L3S 0B5**

# Critical Illness Insurance/ Health Benefits

**Are you worried about your mortgage/car loan/medical expenses and any unforeseeable expenses if you are not able to work?**

- Receive up to $2 Million in benefits.
- Rates are very affordable
- Get tax free lump sum payment if you get sick to cover your financial obligations; if not you get your money back.

**Call your living benefit specialist for a free evaluation and NON medical critical Insurance...**



**Protect yourself and your family when the unexpected happens**



**Bamathi Ramthas**
Advisor
**Direct: 905 999 8023**
bamathi@inforcelife.com
facebook.com/BamaRamthas.InforceLife

**Insurance Solutions for**
**Life/Health/Investments**

**INFORCE LIFe**
**Financial Services Inc.**
10 Milner Business Court, Suite 707, Scarborough ON M1B 3C6

**FOR THE HONEST AND PROFESSIONAL ADVICE THAT YOU DESERVE**

KEY TEAM ONE SELL HIGH... BUY LOW... with the Experienced Team

Why Key Team One?

* Guaranteed * Sale in 15 days or Our fee is free!
* Free Home Inspection
* Free Home Evaluation
* Free Professional Home Staging limited time offer!

Top 5% sales representatives within Homelife/Canada for many years

Multi Awards Winners' Team

Friendly | Confidential | Professional Services

More than 18 Years of Combined Experience

BUY OR SELL THROUGH CENTURY 21 INNOVATIVE REALTY INC REALTOR AND GET AN AMAZING CHANCE TO

WIN! 1 of 10 GREAT PRIZES INCLUDING 2015 HONDA CIVIC

Century 21




iPad · iPad Mini · iPhone 5s · iPhone 5c · iPod

HAVE A DREAM HOME?

WE CAN CUSTOM BUILD IT FOR YOU.



Our Guarantee:

- We will find land to build
- State of the art design Home
- Flexible Closing Date
- Arrange construction Loans

CALL US TODAY!

## TORONTO REAL ESTATE NEWS! HOW GOOD IS THE MARKET?

Toronto Real Estate Board President Paul Etherington reported strong year-over-year growth for July 2014 sales and the average selling price. Sales reported by TREB Members through the TorontoMLS system were up by 10 per cent to 9,198. This was the second-best July sales result on record.

"The second half of 2014 started where the first half left off, with very strong demand for the diversity of affordable home ownership options in the Greater Toronto Area. Sales were up strongly for most major home types and market conditions actually tightened, with sales growth outpacing listings growth. The result was average price growth well-above the rate of inflation," said Mr. Etherington.

The average selling price for July 2014 sales was $550,700 – up by 7.5 per cent compared to July 2013. The strongest rate of price growth was reported for the detached market segment in the City of Toronto, with a year-over-year change of 11 per cent. The better-supplied condominium apartment segment experienced average price growth of 5.3 per cent for the GTA as a whole.

"Strong demand for ownership housing will underpin robust average price increases for the remainder of 2014. In fact, the pace of price growth that we have experienced over the past year will continue until growth in listings outpaces growth in sales for a sustained period of time," said Jason Mercer, TREB's Senior Manager of Market Analysis.



Thana Suseendra
(Sales Representative)
Cell: 416.893.4376
Email: sthana@hotmail.com

Naanan Sathiyamoorthy
(Broker)
Cell: 416.795.4663
Email: naanans@yahoo.ca



www.keyteamone.com | www.keyteamone.net
CENTURY 21 INNOVATIVE REALTY INC., Brokerage*
2250 Markham Rd Unit 3 | Toronto, ON M1B 2W4 | Office: (416) 298 - 8383 | Fax: (416) 298 - 8303
*Not intended to solicit buyers or sellers under contract. Independently owned and operated

# மனோவள விகாரமும் ஆய்வுத் தகவல்களும்



புஷ்பா
கனகரட்ணம்
- உளவியல் நிபுணர் -


## மனேபவள விகாரம் (Autism) சில அண்மைக்கால ஆய்வுத் தகவல்கள்:

Autism என்னும் பதம் இப்பொழுது முன்னையதை விட பலருக்கும் ஒரு பரிச்சயமான சொல்லாக போய்விட்டது. இப்பொழுதெல்லாம் அதிகமான குழந்தைகளிலும், அவதானிக்கப்படாத காரணத்தால் சில வளர்ந்தவர் களிலும் இந்த நிலையை அடையாளம் காண்கிறார்கள். Autism பற்றிய அறிவு பெற்றோர்களில் அதிகரித்திருப்பதும், ஆரம்ப நிலையிலேயே அடையாளம் கண்டு சிகிச்சை செய்வதின் முக்கியத்துவம் பற்றி இப்பொழுது தெரிந்திருப்பதுமே Autism என்ற நிலையால் பாதித்திருப்பவர்களின் எண்ணிக்கை அதிகரிப்புக்கு காரணம் என்று கருதப்படுகிறது. ஆண்டுகளுக்கு முன், Autism என்ற நோய் நிலைக்கு சேவைகள் பெறுவதும் கடினமாக இருந்தது. இதனாலேயே Autism என்ற பதம் பெரிதும் புழக்கத்தில் இல்லாமல் இருந்தது என்று கருதப்படுகிறது.

மனேபவள விகாரம் (Autism) சார்ந்த வெவ்வேறு நோய் நிலைகள் குழந்தைகளில் அடையாளம் காணப்படுகின்றன. Autism என்று தனிப்பட பார்க்கும் போது, முக்கியமாக குழந்தைகளின் பரஸ்பர தொடர்பாடலில் பாதிப்பு, ஒரே ரீதியிலான மீள் செய்கைகள், ஒரு கட்டுக்குட்பட்ட விருப்புகள் என்ற ரீதியில் அறிகுறிகளைக் காணலாம். சமூக, தொடர்பாடல் மற்றும் அறிகை (Cognition) சார் வளர்ச்சி சாதாரண குழந்தைகளில் இருப்பது போல் இவர்களுக்கு இருக்காது.

அண்மைக் கால Autism சார்ந்த ஆய்வுகள் தரும் தகவல்கள் சில:-

## நோய் நிலையின் முதல் அறிகுறிகளை எப்போது அவதானிக்கலாம்?

சராசரியாக 5½ வயதில் Autism அடையாளம் காணப்படுகிறது. ஆயினும் 18 மாதங்க ளில் இந்த நோய் நிலையை அடையாளம் காணமுடியும் என்கிறார்கள். இதற்குரிய புதிய உத்திகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. துரிதமான கண்டுபிடிப்பும் விரைவான துறைசார் கணிப்பீடும், பயனுள்ள சிகிச்சையை விரைவாகப் பெற உதவும். எவ்வளவு விரைவில் சிகிச்சை ஆரம்பிக்குமோ, அவ்வளவுக்கு குழந்தைகளின் தொழிற்படும் தன்மையை விருத்தி செய்ய முடியும். Automated Vocal Analysis எனும் முறையானது, சாதாரண குழந்தைகளுக்கும் Autistic குழந்தைகளுக்கும் ஆரம்ப நிலையிலேயே தோன்றத் தொடங்கும் மொழிப்பரிமாற்ற மாற்றங்கள், மற்றும் தாமதங்களை பதிவு செய்யக்கூடிய கருவியாகும். ஓட்டப்பந்தய வீரர்கள் தங்கள் பயிற்சியின் அளவை கணிப்பிட பாவிக்கும் Pedometer போல், Language Environment Analysis (LENA) எனும் இந்த மொழி செயற்பாட்டு கருவியும், Autism உள்ள குழந்தைகளின் பெற்றோர் தம் குழந்தையின் மொழிப் பயிற்சி மற்றும் தாமதங்களை வீட்டில் வைத்தே கணிப்பிடவும், சிகிச்சையினால் ஏற்படும் முன்னேற்றங்களைக் கண்டு கொள்ளவும் உதவும். LENA ஆய்வுகள், குழந்தைகள் பேச ஆரம்பிக்கும் முன்னேயே, அவர்களின் வாய் அசைவுகளிலேயே Autism நிலையால் பாதிக்கப்படக் கூடிய குழந்தைகளுக்கும், மற்றைய குழந்தைகளுக்கும், வேறுபாடு இருப்பதாக கண்டுபிடித்திருக்கிறது.

ஆரம்ப காலத்தில் Autism நிலையின் முதல் அறிகுறிகள் எப்பொழுது தோன்றுகின்றன என்பதை பெற்றோரிடமே கேட்டுத் தெரிந்து கொண்டார்கள். ஆனால் பெற்றோர்களின் தகவல்கள் முற்று முழுதாக நம்பகரமாக இருக்காது. இப்பொழுது Autism பற்றிய அறிவு அதிகம். சாதாரணமாக ஒரு வயதிற்கு முன் அப்பட்டமான வேறுபாடுகளை காணமுடியா விட்டாலும், சூழல் சார்ந்த செயற்திறன் ஒரு முக்கிய அறிகுறி. இதுதான் மிக விரைவாக வீழ்ச்சி அடைகிறது. இந்த வீழ்ச்சி தொடர்ந்தும் 2ம், 3ம் வயதுகளில் குறைந்து கொண்டே செல்கிறது. அதனால் Autism சார்ந்த கணிப்பீடு (screening) குழந்தையின் மூன்றாம் வயதிலும் தொடர வேண்டும். ஏனெனில் Autism திடீரென ஏற்படும் அறிகுறிகள் கொண்ட நிலை அல்ல; படிப்படியான வீழ்ச்சியைக் காட்டுவது.

குழந்தையின் முதலாம் வயதில், 6 மாதத்திற்கும் 12 மாதத்திற்கும் இடையில், அவர்கள் கண்கள் ஏற்படுத்தும் தொடர்பில் (eye contact), சிரிப்பில், பேச்சு வருமுன் இருக்கும் மழலைத் தொடர்பில், சூழல் சார்ந்த பிரதிபலிப்பில் (social responsiveness) வீழ்ச்சி ஏற்பட ஆரம்பிப்பதை அவதானிக்கலாம். சாதாரண மனிதர்களுக்கு அறிந்து கொள்வது கடினமானாலும் ஆய்வு செய்பவர்கள், அவசர சிகிச்சைப் பிரிவில் இருக்கும் குழந்தைகளை பரிசோதித்துப் பார்த்ததில், குழந்தைகள் 1 மாதமாக இருக்கும் போதிலேயே தசைகளின் இறுக்கத்தில் (muscle tone) வேறுபாடு இருப்பதாக கண்டுபிடித்திருக்கிறார்கள். பின்னர் Autism அடையாளம் காணப்பட்ட குழந்தைகளில் பாதிக்கு மேற்பட்டோர் கைகள் சாதாரண குழந்தைகளின் கைகளை விட தொய்வாகவோ அதிகம் இறுக்கமாகவோ இருந்தது அவதானிக்கப்பட்டது. அதே போல் பின்னர் Autism உள்ளதாக அடையாளம் காணப்பட்ட குழந்தைகள், 4 மாத வயதில் அதிக பார்வைத் தூண்டலை (visual stimulation) விரும்பியதாகவும் இது மற்ற 4 மாத குழந்தைகளைவிட வித்தியாசப்பட்ட தாகவும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இது வரை காலமும் கருதியது போல் அல்லாது தெளிவாகத் தெரியும் அறிகுறிகள் (முக உணர்வு வெளிப்பாடு, கண் தொடர்பு) என்பதை விட, தசை இறுக்கம் மற்றும் பார்வை அமைப்பு (visual system) சார்ந்த வேறுபாடுகளே ஆரம்ப அறிகுறிகளாக அடையாளம் காணப்படுகின்றன.

## யாருக்கு Autism ஏற்படும் சாத்தியக்கூறு அதிகம்?

பெண் குழந்தைகளை விட ஆண் குழந்தைகளுக்கே Autism ஏற்படும் சாத்தியக்கூறு அதிகம். பாதிக்கப்பட்டவர்களில் 80% ஆண்கள். பெற்றோர்கள் என்று பார்க்கையில், தாய்மார்களில் மனநலம் சார்ந்த மருந்துப்பாவனை அதுவும் குழந்தை வயிற்றில் இருக்கும் முதல் 3 மாதங்களில் மன அழுத்தம், பதட்டம் போன்ற நிலைகளுக்கான SSRI மருந்து பாவனை (உதாரணமாக Citalopram, Fluoxetine) Autism குழந்தைக்கு ஏற்படுவதற்கான சாத்தியக்கூறை 3 மடங்காக அதிகரிப்பதாகவும், அதுவே கர்ப்பம் தரிக்க ஒரு வருடத்திற்கு முன்னான தாயின் மருந்துப் பாவனை, சாத்தியக்கூறை 2 மடங்காக அதிகரிப்பதையும் ஆய்வுகள் காட்டுகின்றன. எப்படியோ சிகிச்சை இன்றி உளநலப் பாதிப்புற்ற தாய் இருப்பதைக் காட்டிலும், Autism உள்ள குழந்தை உருவாவதின் ஆபத்து அடிப்படையில் குறைவே என்றும் கருத்துத் தெரிவிக்கப்படுகிறது.

இதே போல் பெற்றோர்கள் வயதும் ஒரு காரணியாக கருதப்படுகிறது. பெற்றோராகும் வயது, தாயாக இருப்பினும், தந்தையாக இருப்பினும், அதிகரிக்க அதிகரிக்க, Autism நிலையில் குழந்தை பாதிக்கப்படும் சாத்தியக் கூறும் அதிகரிக்கிறது. ஆண்கள் 29 வயதிற்கு பின் தந்தையாகும் போது இந்த சாத்தியக்கூறு அதிகரிக்கிறது. தாயின் வயது 30இற்கு குறைவாக இருக்கும் போது தந்தை வயது மிக அதிகமாக இருந்தால், தகப்பனின் வயது பாதிப்பை ஏற்படுத்துகிறது. இதுவே தாயின் வயது 30இற்கு மேலாக இருப்பின், தகப்பனின் கூடிய வயது தனியாக ஒரு பாதிப்பை ஏற்படுத்துவதில்லை. மொத்தத்தில், இன்றைய சமூகத்தில், குழந்தைப் பேறு காலம் தள்ளிப்போடப்படும் காரணத்தால் Autism நிலை அடையாளம் காணப்படும் சாத்தியக்கூறு 4.6% ஆக அதிகரிக்கிறது.

அதே போல் மூத்த குழந்தைகள், காலால் பிறக்கும் குழந்தைகள், அல்லது 35 வயதிற்கு மேற்பட்ட தாய்மாருக்கு பிறக்கும் குழந்தைகளில் Autism சார்ந்த நோய் நிலைகள் ஏற்படும் ஆபத்து அதிகம் என அறியப்படுகிறது. காலம் தவறிப் பிறக்கும் குழந்தைகளிலும் (pre-term) இந்த ஆபத்திற்கான சந்தர்ப்பம் அதிகம்.

**Autism எனும் நிலையை முழுமையாக மாற்றிவிட முடியாவிட்டாலும், எவ்வளவுக்கு விரைவாக அடையாளம் கண்டு உதவி பெறுகிறோமோ, அவ்வளவுக்கு அதன் தாக்கத்தை குறைக்கலாம். ”**

## சகோதரர்களுக்கும் Autism ஏற்படுமா? மரபணுக்களா சூழலா?

நோய்நிலைகள், அதுவும் உளநலம் சார்ந்த நோய்நிலைகள் பரம்பரையால் (மரபணுக்களால்) ஏற்படுகின்றனவா, சூழல் காரணிகளால் ஏற்படுகின்றனவா என்பது எப்போதும் சர்ச்சைக்கும் ஆய்வுக்கும் உட்படும் விடயம் தான். Autism சார்ந்தும், இரட்டையர்கள் (twins), மற்றும் சகோதரர்களை வைத்து ஆய்வுகள் நடத்தப்பட்டிருக்கின்றன. Autism உள்ள குழந்தைகளின் இளைய சகோதரர்களுக்கு Autism ஏற்படக்கூடிய சாத்தியக்கூறு அதிகம். ஆண் குழந்தைகளுக்கு இந்த ஆபத்து 25% க்கும் அதிகம். குடும்பத்தில் ஒன்றுக்கும் மேற்பட்டவருக்கு Autism இருப்பின் இந்த விகிதம் 30%ஐ விட அதிகம். இந்தநிலை Autism சார்ந்த மரபணுக்களின் ஆதிக்கத்தைக் காட்டுவதாக இந்த ஆய்வுகள் கூறுகின்றன. வேறு ஆய்வுகளோ இரட்டையர்களை பரிசோதித்ததின் பின், சூழல் காரணிகள் அல்லது வெளிப்புற காரணிகள் 55% சாத்தியக்கூறை விளக்குவதாக கூறுகின்றன. ஒரே வீட்டுக் குழந்தைகள் ஒரே சூழலில் வாழ்வதால், ஒரே அனுபவங்களை பெறுவதால், முக்கியமான காலகட்டத்தில், அதுவும் முதலாம் வயதிற்குள், சூழல் காரணிகள் ஒரு தாக்கத்தை அவர்களில் ஏற்படுத்துவதாக கருதப்படுகிறது. பெற்றோர்கள் வயது, எடைகுறைந்த குழந்தைகள், ஒன்றிற்கும் மேற்பட்ட குழந்தைகள் பிறப்பது, கர்ப்ப காலத்தில் ஏற்படும் தொற்றும் தன்மையான நோய்கள் எல்லாம் மரபணுக்கள் சாராத (non-genetic) வெளிப்புற காரணிகளாக சொல்லப்படுகின்றன.

இன்னொரு ஆய்வு, Autism உள்ள குழந்தைகளுக்கும், அவர்களின் Autism இல்லாத சகோதரர்களுக்கும், உணர்வுகள் வெளிப்படுத்தும் முகங்களை காண்பிக்கும் போது, மூளை செயற்பாடு (brain activity) ஒரே மாதிரியாக இருப்பதை கண்டுபிடித்திருக்கிறது. முன்னைய ஆய்வுகள், Autism உள்ளவர்கள் மற்றையவர்களின் முகஉணர்வுகளை புரிந்து கொள்ள சிரமப்படுவதையும், Autism இல்லாதவர்களுடன் ஒப்பிடும் போது அவர்கள் மூளை உணர்வுகளை அடையாளம் காணும் செய்முறை வேறுபட்டதாக இருப்பதையும் கண்டறிந்திருக்கிறது. Autism உள்ளவர்கள், அவர்கள் சகோதரர்கள், இருசாராருக்குமே அனுதாபம் அல்லது empathyக்குரிய மூளையின் பகுதியில் செயற்பாடு (activity) குறைவாக இருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது. அப்படி எனில் ஏன் எல்லாச் சகோதரர்களுக்கும் Autism ஏற்படுவதில்லை என்பது இன்னமும் விடை அறியா கேள்வி.

ஒரு குடும்பத்தில் Autism ஏற்படுவதற்கான ஆபத்து எவ்வளவு தூரம் இருக்கிறது என்பதை இன்னமும் தெளிவாக அறிய முடியா விட்டாலும், இந்த அவதானிப்பு பெற்றோர்களுக்கும் குழந்தைகளின் வைத்தியர்களுக்கும் அதிகம் தேவை. Autism இருக்கும் குடும்பத்தில் மற்ற பிள்ளைகள் வளர்ச்சிப் படிக்கற்களை உரிய நேரத்தில் கடக்கிறார்களா என வைத்தியர்கள் அவதானிப்பதும், சிறு சந்தேகங்கள், மாற்றங்கள் இருக்கும் போது, துறைசார் நிபுணர்களிடம் (specialists) குழந்தைகளை பரிந்துரைப்பதும் (refer) மிக அவசியம். Autism நிற, இன வேறுபாடு இன்றி பல குடும்பங்களையும் தாக்குகிறது. எவ்வளவுக்கு நோய்நிலைகள் பற்றிய அறிவு இருக்கிறதோ, அவ்வளவுக்கு விரைவில் இயங்கவும், அந்தந்த துறை சார்ந்த நிபுணர்களிடம் செல்ல வைத்தியர்களை பரிந்துரைக்க வைப்பதும் இலகுவாகிறது.

எப்படியோ, விஞ்ஞானம் சார்ந்து, மருத்துவம் சார்ந்து நடைபெறும் ஆய்வுகளையும் வெளிப்படும் கண்டுபிடிப்புகளையும் குருட்டுத்தனமாக நம்பிவிடக்கூடாது. இதற்கு ஒரு பெரிய சான்று, அதுவும் Autism சார்ந்து, வெளிப்பட்ட ஒரு தகவல்தான் MMR Vaccine பற்றியது. Andrew Wakefield என்ற ஒரு வைத்தியர் வேண்டுமென்றே ஆய்வுத் தரவுகளை பொய்யாக்கி வீண் பரபரப்பை ஏற்படுத்தி பிரபலம் அடைய முயற்சி செய்தார். 1998இல் மதிப்புமிக்க Lancet ஆய்விதழில் MMR Vaccineக்கும் (Measles/ சின்னம்மை, Mumps/கூகைக்கட்டு, Rubella) Autismக்கும் தொடர்பு இருப்பதாக பொய் ஆதாரம் காட்டினார். இந்த பெருத்த மோசடியால், ஆயிரக் கணக்கான குழந்தைகளுக்கு பெற்றோர்கள் தடுப்பூசி போடுதற்கு மறுத்ததால் Measles, Mumps, Rubella போன்ற தடுக்கக்கூடிய நோய்களால் பாதிக்கப்பட்டு இறந்தார்கள். 1998இன் இந்த கட்டுரை, 12 வருடங்களுக்கு பின், Lancet ஆய்விதழால் மீளப் பெறப்பட்டது. MMR தடுப்பூசிக்கும் Autism இற்கும் ஒரு தொடர்பும் இல்லை என ஊர்ஜிதப்படுத்தப்பட்டது. ஆனால் நடந்த தவறுக்கு ஈடு இல்லையே.

ஆக, ஆய்வுத் தகவல்கள் எங்கள் அறிவை வளர்க்க உதவினால் அந்த அறிவு எங்கள் ஆரோக்கியத்துக்கும், தக்க தருணத்தில் வேண்டிய உதவியை நாடவும் பயன்படும். Autism எனும் நிலையை முழுமையாக மாற்றிவிட முடியாவிட்டாலும், எவ்வளவுக்கு விரைவாக அடையாளம் கண்டு, உதவி பெறுகிறோமோ, அவ்வளவுக்கு அதன் தாக்கத்தை குறைக்கலாம். இரண்டு வயதளவில் சிகிச்சை ஆரம்பித்தால் அதுவே மிகப் பெரும் பயனைத் தருகிறது.

pushpa.kanagaratnam@thaiveedu.com

■ ■ ■


*தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்.*
*விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.*

***E-mail: info@thaiveedu.com***
***Fax: 416-849-0594 Tel: 416-646-3422***

# எபோலா வைரசுக்காய்ச்சல்



கந்தையா பரநிருபசிங்கம்

குருதிக்கசிவை ஏற்படுத்தக் கூடிய வைரசுக் காய்ச்சல்கள் பல கண்டறியப்பட்டுள்ளன. இவற்றுள் எபோலா வைரசுக் காய்ச்சல் இதனால் பீடிக்கப்பட்ட நோயாளிகளிடத்தில் அதியுயர் இறப்பு வீதத்தை ஏற்படுத்துகின்றது. எபோலா வைரசின் முதல் விருந்தாளி இன்னும் கண்டறியப்படவில்லை. இக்காச்சல் மேற்காபிரிக்கப்பிரதேசத்தில் குறுகிய பிரதேசப்பரம்பலை காலத்திற்குக் காலம் காட்டிவந்திருக்கின்றது. ஆனால் இப்பொழுது இக்காய்ச்சல் பெரும் பிரதேசப் பரம்பலைக் காட்டி நிற்கின்றது. தற்பொழுது இக்காய்ச்சல் சிறாலியோன், கினி, லைபீரியா போன்ற மேற்காபிரிக்க நாடுகளில் பரவியுள்ளதுடன் அந்நாடுகளில் இரண்டு ஆயிரம் வரையிலான மக்களின் உயிர்களைக் குடித்துள்ளது. இக்காய்ச்சல் இந்நாடுகளின் அண்டை நாடுகளிலும் அபாயத்தை ஏற்படுத்தக்கூடிய சாத்தியக்கூறு உள்ளது. மேலும் ஆங்காங்கே இவ்வண்டை நாடுகளில் மக்கள் இந்நோயின் தொற்றுதலுக்கு ஆளாகி-வருவதாக தகவல்கள் கிடைக்கின்றன. இக்காய்ச்சலின் பரவல் முறை உலகளாவிய ரீதியில் பரவலை ஏற்படுத்தும் சாத்தியக்கூறு இல்லாது போனாலும், இந்நாடுகளிலிருந்து உலகின் பல பாகங்களுக்கு நோய்த்தொற்றுடன் பயணிப்பவர்களும், உலகின் பல பாகங்களிலிருந்து இந்நாடுகளுக்கு மருத்துவ உதவியாளர்களாகவோ அல்லது வேறு விடையங்களுக்குச் செல்பவர்களோ இக்காச்சலை உலகளாவிய ரீதியில் பரப்பிவிடக்கூடிய ஏதுநிலை உண்டு. இதன் காரணமாக உலக சுகாதாரஸ்தாபனம் உலக நாடுகளுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது. அத்துடன் ஏற்கனவே உலகின் பல நாடுகள் விழித்துக் கொண்டு தடுப்பு நடவடிக்கையில் இறங்கிவிட்டன. இக்காய்ச்சலுக்குரிய தடுப்பூசி இன்னும் தயாரிக்கப்படாத நிலையில் இந்நோய் பரவாமல் தடுப்பதற்குரிய பிற தடுப்பு வழிகளைக் கையண்டு வருகின்றனர்.

இக்காய்ச்சலின் குணங்குறிகள் இதன் தொற்றைத் தொடர்ந்து ஒரு வாரத்திலிருந்து மூன்று வாரங்கள் வரை மெதுவாக விருத்தியாகும். குணங்குறிகளில் பின்வருவன உள்ளடக்கப்படலாம்.

- சமிச்சுரத்திற்கான குணங்குறிகள் போன்றவை. இவற்றுள் தலையிடி, காய்ச்சல், தொண்டைப்புண், உடற்சோர்வு.
- வாந்தி, பேதி, உணர்விழப்பு.
- தோலுரிவை ஏற்படுத்தும் சொறி.
- தோல் மற்றும் சமிமென்சவ்வுகளிலிருந்து அசாதாரண இரத்தக்கசிவு.

ஒருவருக்கு எபோலா நோய் உண்டா இல்லையா எனக் கண்டறிய பின்வருவனற்றைச் செய்யலாம்.

- நோயாளியின் குணங்குறிகளை அவதானித்தல்
- எபோலா வைரசுக்கு எதிரான எதிருடலிகள் குருதியில் உண்டா என்பதை அறிய குருதிச் சோதனை செய்தல்.

எபோலா நோயால் பீடிக்கப்பட்டவரிடமிருந்து பிறிதொரு மனிதருக்கு எபோலா நோயை உண்டாக்கும் வைரசுக்கள் நோயாளியின் உடற்சுரப்புக்களான உமிழ்நீர், சிறுநீர் போன்றவற்றின் மூலமும், குருதி மற்றும் மலம் மூலமும் கடத்தப்படலாம். இந்த வகையில் சுகாதாரப் பராமரிப்பாளர் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் இந்நோயித்தொற்றிற்கு உள்ளாவது உயர்சாத்தியமானது.

எபோலா நோயாளிகள் பெரும்பாலும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவர். இதன் மூலம் அவர்களுக்குப் பராமரிப்பு வழங்குவதுடன், இந்நோய் பரவுதலையும் தடுக்கலாம். இந்நோயாளிகள் தனிமைப் படுத்தப்பட்டு உடற்சுரப்புக்கள் தொடுகையுறாதவாறு உரிய பாதுகாப்பான உடை அணிந்தே சுகாதாரப்பராமரிப்பாளர்கள் நோயாளியைப் பராமரிப்பர்.

### இந்நோயினால் ஏற்படும் சிக்கல்கள்:

- கடுமையான சிறுநீரகத் தொழிற்பாட்டிழப்பு.
- தீவிர சுவாசித்தல்க் கடினம்.
- அதிர்ச்சி.

சிறுநீரகத் தொழிப்பாட்டிழப்பை நிவர்த்தி செய்ய பதில் சிறுநீரகத்தொழிற்பாடு செய்தல்.

சுவாசக்கஷ்டம் உள்ளவர்களுக்கு இயந்திரக் காற்றோட்டம் கொடுக்கப்படும்.

இந்நோய்க்கு இதுவரை காலமும் தடுப்பூசி கொடுக்கப்படவில்லை. நல்ல செய்தி என்னவெனில், அமெரிக்காவைச் சேர்ந்த ஒரு வைத்தியரும், தாதியும் அண்மையில் மேற்காபிரிக்காவில் இந்நோயினால் பீடிக்கப்பட அவர்கள் இருவரும் அமெரிக்காவிற்கு ஒரு விசேட விமானத்திலும், விசேட அம்புலன்ச் வண்டி மூலமும் உரிய பாதுகாப்பு உடை அணியப்பட்டு கொண்டு வரப்பட்டு பரீட்சாதமான முறையில் தடுப்பு மருந்து கொடுக்கப்பட்டது. இருவரும் இப்போது தேறிவருவதாக அறியப்படுகின்றது. துரதிஷ்டவசமாக இந்தத் தடுப்புமருந்து உலகிலுள்ள சமானியர்களுக்குச் சென்றடைய ஒருவருடம் வரை செல்லாம். என்று சொல்லப்பட்டுள்ளது. இதைப்பார்க்கும் போது ‘சும்மா இருந்த அம்மாளுக்கு அரைப் பணத்தில் தாலி போதாதா?’ என்ற மனோபாவத்துடனையே உலகச்சாமானியர்கள் வாழவேண்டும்!

நாம் விழிப்புடன் இருந்து, எமக்குத் தொற்று வராமல் இருக்க எம்மாலான சமயோசித மற்றும் வைத்திய நடவடிக்கைகளை எடுப்போமாக!

*paranirubasingam.k@thaiveedu.com*

■ ■ ■

# பூர்வகுடிகளின் நடனப்போட்டி



கந்தசாமி கங்காதரன்

கிறிஸ்தோபர் கொலம்பஸ் 1492ல் அமெரிக்காவைக் ‘கண்டுபிடித்த’ பின் பல மில்லியன் கணக்கான மக்களின் வாழ்வியல் முற்றிலுமே மாறிப்போனது. அமெரிக்கக் கண்டம் முழுவதுமே பரந்து வாழ்ந்த வெவ்வேறு பூர்வகுடிகள் அமெரிக்கக் கண்டம் பல நாடுகளாக் கப்பட்ட பின் குறிப்பிட்ட பகுதிகளுக்குள் முடக்கப்பட்டனர், ‘பூர்வகுடிகளின் வாழ்நிலம்’, ‘இது உங்கள் நிலம்’ எனறு சொல்லிச் சொல்லியே அவர்களைச் சுரண்டுகின்ற அரசுகளைத் தான் பார்க்கிறோம்.

கடந்த ஜுலை 25 – 27 வரையில் ஹமில்ரன் நகருக்கு அருகேயுள்ள Brantfordல் பூர்வகுடிகளுக்கென ஒதுக்கப்பட்ட Six Nations Reserveல் Powwow என்றதொரு நிகழ்வு நடைபெற்றது. பூர்வகுடியினரின் கலை, பண்பாட்டைக் கொண்டாடும் இந்நிகழ்வின் சிறப்பு அமெரிக்கா, கனடாவிலிருந்து 400 நடனக் கலைஞர்கள் கலந்துகொண்ட நடனப்போட்டி. ஆண்களும் பெண்களும் சிறுவர்களுமாக பூர்வகுடிகளின் பண்பாட்டு ஆடை, அலங்காரங்களோடு கலந்துகொண்டு நடனமாடிய இந்நிகழ்வு இப்பூர்வகுடிகளின் ஒன்றுகூடலாகவும் கருதப்படுகின்றது. பறவைகளின் இறகுகள், விலங்குகளின் கொம்பு, தோல், ரோமம் போன்றவற்றுடன் பின்னப்பட்ட, கண்ணைக்கவரும் வண்ணமயமான ஆடைகளோடும் இந்த நடனக் கலைஞர்கள் பாரம்பரிய இசைக்கேற்ப நடனமாடினர். பலரின் நடனம் பிரமிக்க வைத்தது. தாளவாத்திய இசையோடு வாயால் எழுப்பப்படும் ஓசைக்கேற்ப சுழன்று சுழன்று மிக வேகமாக வட்டவடிவமாக நகர்ந்து நகர்ந்து ஆடிய ஆட்டத்தைக் காணக் கோடி கண்கள் வேண்டும். ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் பலரும் யாருக்கும் சளைத்தவர்கள் இல்லையென்று தங்கள் நடனத்தால் உணர்த்தினர். 150 ஆண்டுகள் ஆங்கிலேயரால் ஆளப்பட்ட நாம் ஆங்கிலம் கலக்காமல் தமிழ் பேச அல்லாடுகின்றோம். 520 ஆண்டுகளுக்கு மேலாக அந்நிய ஆதிக்கத்தில் வாழ்ந்தும் அவர்களது கலை நிகழ்வில் அந்நியப் பாதிப்பு எதுவுமே இல்லை. பூர்வகுடிகள் அல்லாதோருக்காக ஆங்கிலத்தில் அறிவிப்பு மட்டுமே செய்தனர்.









ஒரு நடனப் போட்டி முடிவடைந்து, நாம் ஏதாவது வாங்கி அருந்தலாமென சிற்றுண்டி விற்பனைப் பகுதிக்குச் சென்றோம். ஒரு மரத்தின் கீழ் ஓய்வெடுத்துக் கொண்டிருந்த இளம் குடும்பத்தில் ஓர் 6 வயது மதிக்கத்தக்க சிறுவன் எழுந்து, தூரத்தே ஒலிக்கின்ற பூர்வகுடிகளின் மேள இசைக்கு அமைவாக ஆடியபடி சற்றுத்தூரம் சென்றுவிட்டு மீண்டும் வந்தமர்ந்தான். ‘நடனம் பயிலுகின்ற தமிழ் இளையோர், எங்கோ ஒலிக்கின்ற ஒரு பாடலுக்குத் தமை மறந்து எழுந்து ஆடுவதை எங்காவது கண்டிருக்கிறோமா?’ என்று யோசித்தபோது, தமது பண்பாட்டைக் காக்கும் உணர்வு இந்தப் பூர்வகுடிகளின் குருதியில் கலந்துவிட்ட ஒன்று என்பது உறைத்தது.

விற்பனைக்கிருந்த பல பொருட்களில் ஒரு டி- சேர்ட் கருத்தைக் கவர்ந்தது. Homeland Security – Fighting Terrorism Since 1492 (தாய் நிலப் பாதுகாவலர் -1492 இலிருந்து பயங்கரவாதத்துக்கு எதிரான போராட்டம்) என்று எழுதிய டி – சேர்ட்டில் துப்பாக்கி தாங்கிய பூர்வ குடியினர் 4 பேரின் படம்.

கனடிய, அமெரிக்க அரசுகளின் பயங்கரவாதிகள் பட்டியல் ஏனோ நினைவுக்கு வந்தது. ஆனால் ஒன்று ரொறன்ரோவின் முன்னணி, பின்னணி நடன மேதைகளும் பண்பாட்டுப் பாதுகாவலர்களும் அடுத்த ஆண்டு இந்நிகழ்வுக்குச் சென்று,உடல், பொருள், ஆவி அனைத்திலும் நடனம் கலந்திருக்கும் இந்தக் கலைஞர்களின் நடனத்தையும் பண்பாட்டைக் பாதுகாப்பது எப்படியென்றும் கண்டுணரப் பரிந்துரை செய்கிறோம்.

gangatharan.k@thaiveedu.com

■ ■ ■



# WE PROVIDE
## MORTGAGE SOLUTIONS FOR EVERYONE!

- Purchase
- Refinance
- Pre Approvals
- Self Employed
- Debt Consolidation
- New Immigrant
- Equity Lines of Credit
- 1st, 2nd, 3rd Mortgages.

MORTGAGE ALLIANCE

**Call Now : 416-505 7333**

Visit us at www.lenderhub.ca

LOW RATES STARTS AT
2.79 FOR 5 YEAR FIXED &
2.35 FOR 5 YEAR VARIABLE



Piraba Ratnam
Mortgage Agent / Mortgage Alliance
LIC # M13001215
10 Milner Business Court, Suite 401
Toronto, Ontario, M1B 3C6

We have solutions for everyone!

10 Milner Business Court, Suite 401
Scarborough, ON M1B 3C6

# வீடு வாங்க விற்க

| LEASE $2,100 | ASKING $464,900 | ASKING $579,000 | ASKING $737,000 | ASKING $269,900 | ASKING $599,900 |
|---|---|---|---|---|---|
|   |  |  |  |  |  |
| MAJOR MACENZIE/HWY 27 | MORNINGSIDE/ OLD FINCH | MIDLAND/EGLINTON | NINTH LINE/REEVES WAY | MCCOWAN/401 | PHARMACY & MCNICOLL |
| BDRM: 3, WSRM: 3 | BDRM: 3, WSRM: 3 | BDRM: 3+3, WSRM: 3 | BDRM: 4, WSRM: 4 | BDRM: 2, WSRM: 2 | BDRM: 3+3, WSRM: 2 |

**LIST WITH KATHIR & START PACKING, VERY LOW COMMISSION**

FREE CLOSING COST ON DIRECT SALE,
CALL FOR DETAILS PLUS GET
LOWEST MORTGAGE RATE
AS LOW AS 2.30%

FREE MARKET EVALUATION

**BUY WITH KATHIR & START MOVING.**



**Kathir Kathirgamanathan** B.A,
Real Estate & Mortgage Broker
Dir: 416-230-6462

**HomeLife/Future Realty Inc.,**
Brokerage *Independently Owned and Operated
O: (905)201-9977 F: (905)201-9229
205-7 Eastvale Dr., Markham,Ont, L3S 4N8

HOMELIFE HIGHER STANDARDS

Some condition apply

# மறைந்தவைகளும் மலர்ந்தவைகளும்

எஸ்.ஆர். ராஜபாலன்



## வீடியோ பதிவுக்கருவிகளும், DVD க்களும் (Video Casette Recorders and DVD's):


திரைப்படங்களைப் பார்த்து மகிழ்வதற்காகத் திரையரங்குகளுக்குச் சென்று அதிகளவு நேரத்தையும் பணத்தையும் செலவிடும் நிலைக்கு ஒரு மாற்றீடான வசதி தேவை என்று மக்கள் உணர ஆரம்பித்தபோது அதற்கான மாற்றீடாக வீடியோ கசெற் பதிவுக் கருவிகள் (VCR) என்ற நவீன ஒளிபரப்பு பதிவுக் கருவிகளின் உற்பத்தி தொடங்கியது.

வர்த்தக ரீதியில் வெற்றி பெற்ற முதலாவது VCR கருவிகள் 1950ம் ஆண்டில் Ampex என்னும் அமெரிக்க நிறுவனத்தினால் உற்பத்தி செய்யப்பட்டன. அதனைத் தொடர்ந்து 1963ம் ஆண்டில் லண்டனில் Nottingham Electronic Valve என்னும் நிறுவனம் Telcan என்னும் வர்த்தக பெயருடைய VCR கருவிகளை அறிமுகப்படுத்தியது.



அதனையடுத்து சொனி (Sony) என்ற உலகப்புகழ் பெற்ற நிறுவனம் 1965ம் வருடத்தில் CV - 2000 என்ற நவீன மயப்படுத்தப்பட்ட வீடியோ பதிவுக்கருவிகளை உற்பத்தி செய்ய ஆரம்பித்தது.

1990ம் வருடப் பகுதி வரை வீடியோப் பதிவுக் கருவிகள் பாவனையில் இருந்தன. ஆனால் சில வீடியோ பதிவுக் கருவிகளில் பயன்படுத்தப்பட்ட VHS ஒளிப்பதிவு நாடாக்களின் தரம் குறைவாக இருந்தது. அதன் காரணமாகச் சில வீடியோ ஒளியிழை நாடாக்கள் அடிக்கடி சிக்கத் தொடங்கின. இதன் விளைவாக அநேக நுகர்வோர் இவை பற்றி முறையிட ஆரம்பித்தனர்.



இந்த பிரச்சனைகளுக்குத் தீர்வு காணும் முகமாக 1994ம் வருடத்தில் தைவான் நாட்டில் Tatung Company என்ற நிறுவனம் Pacific Digital Company என்னும் அமெரிக்க தொழில் நுட்ப நிறுவனத்துடன் இணைந்து DVD கருவிகளை உற்பத்தி செய்தது. ஒரு சில வருடங்களின் பின்பு 2003ம் வருடத்தில் Sony நிறுவனம் நவீன மயப்படுத்தப்பட்ட DVD கருவிகளைத் தயாரித்தது. பின்பு இதே நிறுவனம் மேலும் நவீன மாற்றங்களை உள்ளடக்கிய தரம்மிக்க DVD கருவிகளை ஜப்பானில் அறிமுகப்படுத்தியது.

இதேசமயம் DVD கருவிகளில் பயன்படுத்துவதற்கு குறுந்தகடு என அழைக்கப்படும் DVD தட்டுக்களும் உற்பத்தியாக்கப்பட்டன.




கைக்கு அடக்கமானதாகவும் தரம் வாய்ந்ததாகவும் அமைந்த இந்த DVD தட்டுக்களும், DVDக் கருவிகளும் வர்த்தக ரீதியில் பெரும் வெற்றியை பெற்றன.


“உலகில் உள்ள மிகச் சிறந்த எதனையும் விட மேலும் சிறந்த ஒன்றை உருவாக்க முடியும்” (Even the best can become better) என்ற தொடர் மொழிக்கு ஏற்ப 2009ம் ஆண்டில் Blu Ray DVD என்ற அதி நவீன கருவிகளும் அவற்றில் உபயோகிப்பதற்கு ஏற்ற Blu Ray DVD தட்டுக்களும் கண்டறியப்பட்டுப் பயன்பாட்டுக்கு வந்தன.




மிகவும் உயர்வான தரமுடைய இந்த நவீன சாதனங்கள் இன்று வரை நுகர்வோரின் பலத்த வரவேற்பை தொடர்ந்து பெற்றுவருகின்றன.

## தொலைபேசிகளும் கைத் தொலைபேசிகளும் (Telephones and Mobile Phones):

ஸ்கொட்லாந்து தேசத்தை பிறப்பிடமாகக் கொண்டவரான அலெக்சாந்தர் கிறகெம் பெல் என்பவர் 1876ம் ஆண்டில் தொலைபேசிக் கருவியைத் தனது சொந்தக் கண்டுபிடிப்பு என்று அமெரிக்காவில் உத்தியோகபூர்வமாகப் பதிவு செய்தார்.



ஏற்கனவே 1870ம் வருடத்தில் கனடாவிற்கு இடம் பெயர்ந்த அவர் ஒன்ரோறியோ மாகாணத்தில் Brantford நகரில் வாழ்ந்து வந்தார். அவர் பின்பு நோவா ஸ்கோசியா மாகாணத்திற்கு இடம் பெயர்ந்து 1922ம் ஆண்டு தனது 75 வயதில் மரணம் அடைந்தார்.

கிறகம் பெல்லின் அரிய கண்டுபிடிப்பின் காரணமாக உலகளாவிய ரீதியில் மக்கள் தொடர்புகொள்ளும் முறையில் பாரிய மாற்றம் ஏற்படத் தொடங்கியது. ஆரம்பத்தில் உற்பத்தி செய்யப்பட்ட தொலைபேசி உபகரணங்கள் தரம் குறைந்தனவாக இருந்தன. அதேசமயம் உருவாக்கப்பட்ட தொலைபேசிக் கருவிகளின் உள்ள வட்டமான அமைப்பில் உள்ள துளைகளில் விரல்களைச் செலுத்தி இலக்கங்களைச் சுழற்றித் தொலைபேசித் தொடர்பு ஏற்படுத்த வேண்டி இருந்தது. இவ்வகைத் தொலைபேசிக் கருவிகள் Rotary Phones என் அழைக்கப்பட்டு வந்தன. 1970கள் வரை இவை உற்பத்தி செய்யப்பட்டன.



இதற்கிடையில் 1963ல் அமெரிக்காவில் ரெக்ஸாஸ் மாநிலத்தில் AT & T என்ற தொலைபேசி கூட்டுத்தாபனம் பட்டன்களை அழுத்தித் தொலைபேசி அழைப்பு ஏற்படுத்தக் கூடிய DTMF என்ற வர்த்தக பெயருடைய தொலைபேசிகளை சந்தைப்படுத்தியது.

எனினும் படிப்படியாக ஏற்பட்டுவந்த தொழில் நுட்ப வளர்ச்சி காரணமாக தற்போது நவீனமயப்படுத்தப்பட்ட தொலைபேசிகள் பல்வேறு வடிவங்களில் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

## கைத்தொலை பேசி (Cell Phone or Mobile Phone):

அடுத்த சில வருடங்களில் உலகெங்கும் வர்த்தக ரீதியில் பாரிய வளர்ச்சி ஏற்பட்டது.




இதன் காரணமாக உலகில் எங்கிருந்தாலும் எவரும் எந்த வேளையிலும் எவருடனும் உடனடியாக தொடர்பு கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டது. இத்தேவைக்கான தீர்வு உடனடியாக உணரப்பட்டது.

‘தேவையே புதிய கண்டு பிடிப்புக்களின் தாய்’ (Necessity is the mother of Invention) என்ற தொடர் மொழிக்கு ஏற்ப, 1973ம் ஆண்டில் கைத்தொலைபேசிகள் என்னும் நவீனமயப்படுத்தப்பட்ட தொலைத் தொடர்புச் சாதனங்கள் உருவாக்கப்படுதல் ஆரம்பித்தது.

இலினோயிஸ் மாநிலத்தில் அமைந்துள்ள Motorola என்ற அமெரிக்க தொலைத்தொடர்பு நிறுவனத்தின் பொறியியலாளரும் நிறைவேற்று அதிகாரமுள்ள தலைவருமான யோன் மிச்செல் என்பவரும், கலாநிதி மாட்டின் கூப்பர் என்பவரும் இணைந்து முதலாவது கைத்தொலைபேசியை 1973ம் வருடத்தில் உலகிற்கு அறிமுகப்படுத்தினர். பின்பு 1983ம் ஆண்டில் Motorola நிறுவனம் DynaTAC என்ற நவீனமயப்படுத்தப்பட்ட கைதொலைபேசிகளை உற்பத்தி செய்தது. இதன் வர்த்தக ரீதியான வெற்றியைத் தொடர்ந்து பல நவீன கைத் தொலைபேசிக்கருவிகள் உருவாக்கப்படத் தொடங்கின.

தற்போது உலகளாவிய ரீதியில் Samsung, Nokia, Apple Inc, Sony Mobile Communications போன்ற தொலைத் தொடர்பு நிறுவனங்கள் பல்வேறு வகையான நவீன கைத்தொலைபேசிகளை உற்பத்தி செய்து வருகின்றன.

இவற்றுள் Smart Phones என்ற நவீன வகைக் கைத்தொலைபேசிகள், தொலைத் தொடர்புச் சாதனங்களாக மட்டுமின்றி, மின் அஞ்சல்களைப் பெறுவதற்கும் உதவுகின்றன. சில கைத்தொலைபேசிகள் மூலம் வங்கிக் கணக்குகளுக்கிடையில் பாதுகாப்பான முறையில் பணம் பரிமாற்றம் செய்யும் வசதியும் உண்டு.

உலகளாவிய ரீதியில் அமோக வரவேற்புப் பெற்றுள்ள இத் தொலைத்தொடர்புக் கருவிகள் இல்லாவிட்டால் இன்று உலக அளவில் தொடர்பாடல் பெருமளவில் பாதிப்படையும் நிலை ஏற்பட்டுள்ளது என்பதை அனைவரும் ஏற்றுக் கொள்ளவர்.
2003ம் ஆண்டில் ஒகஸ்ட் 14ம் திகதி ஒன்ரோறியோ மாகாணத்தின் அநேக பகுதிகளில் மின்சாரம் தடைப்பட்டு, கைத்தொலைத் தொடர்புகள் உட்பட அனைத்துத் தொலைத்தொடர்பு சாதனங்களும் முற்றாகச் செயலிழந்தமை எமது ஞாபகத்தில் இன்றும் பசுமையாக இருக்கும். இதனால் ஒன்ரோறியோ மாகாணம் முழுவதும் முற்றாகச் செயலிழந்த அந்த நாட்களில் மக்கள் அனுபவித்த துயரங்கள் வார்த்தைகளில் வடிக்க முடியாதவை.

இதே போன்ற ஒரு நிலை கடந்த 2013ன் இறுதியில் Toronto வில் ஏற்பட்ட போது, தோன்றிய பாதிப்புக்கள் பல்லாயிரக்கணக்கான மக்களைப் பல நாட்களாக துயரத்தில் ஆழ்த்தியதும் குறிப்பிடத்தக்கது.

## தபாற் சேவை, தந்தி சேவை, மின்அஞ்சல் (Postal Service, Telegraph Service, E-mail):

எகிப்து தேசத்தில் பல்வேறு பகுதிகளில் உள்ள ஆட்சியாளார்களுக்கு முக்கியமான கட்டளைகளையும் தகவல்களையும் விரைவாக அனுப்பி வைக்க வேண்டிய தேவை அந்நாட்டு மன்னர்களுக்கு ஏற்பட்டது. இதன் காரணமாகப் பாரவோன் (Pharoah) என்று அழைக்கப்பட்ட எகிப்திய மன்னர்கள் கி.மு. 2400ம் ஆண்டில் Courier Service முறையை அறிமுகம் செய்தனர்.

எனினும் Cyprus the Great என்ற ஈரானிய (பாரசீக) மன்னனே உலகின் முதலாவது தபாற் சேவையை அறிமுகப்படுத்தினார் என்றே கருதப்படுகிறது.

## நவீன தபாற் சேவையின் அறிமுகம்:

1840ம் ஆண்டு வரை ஒருவர் ஒரு கடிதத்தை அனுப்பும் போது அதனைப் பெறுபவரே பணம்செலுத்தி பெறும்முறை நடைமுறையில் இருந்தது. ஆனால் 1840ம் ஆண்டளவில் Sir Rowland Hill என்ற ஆங்கி-






தொடர்தல் 38ம் பக்கம்

HomeLife Future Realty

7 Eastvale Dr #205 Markham, Ontario L3S 4N8 | Office: 905-201-9977 Fax: 905-201-9229

MORTGAGE ALLIANCE

Corporate Office: Suite 200, 2005 Sheppard Ave. E., Toronto ON M2J 5B4
Toll Free: 1-877-366-3487 License #10530

Discuss your **Mortgage** and your **Dream Home** in **ONE meeting!**

*Your Satisfaction Guaranteed!*



Scan 2 Call NOW

5 Year Mortgage Rates

Variable: 2.45%

Fixed: 2.99%

LOKAN SUNDARAM AMP
Real Estate / Mortgage Broker
416-450-3984
lokan.homelife@gmail.com

Visit,
www.lokanhomes.com

**Take advantage before market turns**

Century 21 — Listing Commission Total 3.5%

Affiliate Realty Inc. Brokerage - 416-290-1200

**Lakeridge Road & Myrtle Road**
Photo Not Available
$100
Vacant Land

**Victoria Park & St. Clair**

$279,900
Commercial / Retail Store

**Kingston & Lawrence**

$399,900
Bedrooms: 3, Washrooms: 1

**Victoria Park & St. Clair**

$429,900
Bedrooms: 2+2, Washrooms: 2

**Markham & Sheppard**

$439,900
Bedrooms: 3+2, Washrooms: 2

**9th Line & 16th Ave**

$599,900
Bedrooms: 4+1, Washrooms: 4



416 Punchme

Punch Sockalingam - 416-786-2463
Broker

Due to high volume of calls, prank calls are accepted after midnight please.

# ஈராக்கில் இயாஸிடி...

4ம் பக்கத் தொடர்ச்சி...

கிறிஸ்துவுக்கு 700 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த ஆதி ஈரானிய மதகுருவான சோரோஸ்ரரை (Zoroaster) பின்பற்றுபவர் கள் இவர்கள். கடவுள் ஒருவன் என்றும் இசாட், யாஸ்டான், ஸ்வேதா, கோடா (பேசியன் மொழியில்) என்ற பெயர்களில் அழைக் கப்படுகிறார் என்கிறார்கள். இதனால் இஸ் லாம் மதத்திலிருந்து முழுமையாக வேறுப டுகிறார்கள். இஸ்லாம் விதிப்படி யூதர்களும் கிறிஸ்தவர்களும் டிம்மா (Dhimma) என்ற பாதுகாப்புப்பணம் வழங்கப்பட்டால் முஸ் லிம்களுடன் சேர்ந்து வாழலாம் என்றும் இயாஸிடிகளுக்கு இந்தச்சலுகை இல்லை எனவும் மறுக்கப்பட்டது.

இவர்கள் இனப்படுகொலையைத் தவிர்ப்ப தற்காகத் தங்களை முஸ்லிம்களாகக் காட்டி வாழ்ந்து வந்தவர்கள். 1980ல் இவர்களது தலைவர் எமிர் பின் ஸ்மாயில் (Emir) தமது இனம் ஈரானுக்கு எதிராகப் பேரிடக் கூடாது என்று சொன்னதற்காக சதாமினால் இறப்பு அல்லது வெளியேற்றம் என்ற உத்தரவின் படி சிரியாவூடாகப் பிரான்சுக்குச் சென்றார்.

இயாசிடிகள் தாம்பேணிக்காத்துவரும் கலாச் சாரப் பாரம்பரியங்களிலிருந்து விடுபடாத வர்களாக இருப்பதனால் இவர்களது இன அடையாளங்களை அழிப்பதிலும் அவர்க ளைக் கொல்லுவதிலும் இஸ்லாமிய அரசுப் போராளிகள் (ISIL) முயன்றுகொண்டிருக் கிறார்கள்.

இவர்கள் மீது தொடுக்கப்பட்ட போரும் இனப்படுகொலையும் ஆவணி மாதம் சிரி யாவிலிருந்து ஈராக்குக்கு வந்த இசில் போராளிகளால் தொடக்கிவைக்கப்பட்டது. ஆவணி 15ந்திகதி 80 பேர் வரையில் கொல்லப்பட்டனர். ஒரேஇரவில் 2500 இயா ஸிடிகள் கொல்லப்பட்டும் 3000க்கும் அதி கமான இயாஸிடியப் பெண்கள் கடத்தப்பட் டும் பாலியல் அடிமைகளாக வைக்கப்பட் டுமிருக்கிறார்கள். சிரியாவில் 700பேர் கழுத்து வெட்டப்பட்டனர். 400 பேர் வடஈராக்கில் மிகக்கொடூரமான முறையிற் கொல்லப்பட் டனர்.

ஈராக்கில் இயாஸிடிகள், ஆமினியர்கள், யூதர் கள், கிறிஸ்தவர் போன்ற சிறுபான்மையினர் களுக்கு எதிராகத் திட்டமிடப்பட்ட இந்த மதச்சுத்திகரிப்பு நடப்பதாகச் சொல்லப்படு கிறது. 60 வருடங்களுக்குமுன் பாக்தாத்தில் 20 சதவீதம்பேர் யூதர்களாக இருந்தனர் என்றும் தற்பொழுது 6 பேர் மட்டுமே இருப்பதாகவும் ஆமினியர்களின் தொகை 90 சதவீதத்தால் குறைந்துவிட்டதாகவும் கிறிஸ்தவர்களிற் பெரும்பகுதியினர் வெளி யேற்றப்பட்டுவிட்டதாகவும் குறிப்பிடப்படுகிறது.

இஸ்லாமிய அரசுப் போராளிகள் திட்டமிட்டே இயாஸிடிகளைக் கொல்வதாகச் சொல்லப் படுகிறது. பலர் கழுத்து வெட்டப்பட்டும் கொலைசெய்யப்பட்டனர், உயிருடன் புதைக் கப்பட்டனர். கைப்பற்றப்பட்ட பெண்கள் கற் பழிக்கப்பட்டனர்.அப்பெண்களில் சிலர் தங் களைக் கொன்று விடும்படி தமது இனத்த வரிடம் கேட்டும்கூட முடியாத நிலையில் மலையிலிருந்து குதித்துத் தற்கொலை செய்துள்ளதாகவும் சொல்லப்படுகிறது. அவர்களது இனத்தின் புனிதத்தைக்கெடுக்க கைதிகளாக்கப்பட்ட பல இளம் பெண் கள் போராளிகளுக்கு திருமணம் செய்விக் கப்பட்டும் கர்ப்பிணிகளாக்கப்பட்டும் இருப் பதாகச் சொல்லப்பட்டது. பிடிபட்டோரில் தப்பிப்பிழைத்த எல்லோரும் மதம் மாறும் படி கட்டாயப்படுத்தப்படுகின்றனர்.

ஈராக் பாராளுமன்றத்தில் பிரதமர் நௌரி அல் மலிக்கியின் ராஜினாமாவால் புதிய மாற்றம் ஏற்படக்கூடும் என்ற நிலையில் இயாஸிடிகளைக் காப்பாற்ற பெஸ்மேகா (Peshperga) என்ற குர்திஸ்களின் படைக ளுக்கு அமெரிக்காவும் ஈராக் அரசும் உத வுகிறது. மலையடிவாரத்தில் நீரின்றியும் உணவின்றியும் இறக்கும் தறுவாயில் உள்ள 50,000அகதிகளுக்கு அமெரிக்காவின் உணவுப் பொட்டலங்கள் ஆறுதலளித்தன. 200,000க்கு மேற்பட்டோர் அகதிகளாக்கப்பட்ட இம்மக் கள் ஒரு காலத்தில் குர்திஸ் இனமக்களின் எதிரிகளாக மாற்றப்பட்டவர்கள் என்ற பய உணர்வுடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

நிலஎண்ணெய், நீர் ஆகிய வளங்கள் கொண்ட மொசுலுக்கும் குர்திஸின் கிர்குக் நகருக்குமிடைப்பட்ட பகுதியில் உள்ள அமெரிக்காவின் முழுஎண்ணை நிறுவனங் களை மட்டும் காப்பாற்றி விட்டால் போதும் என்ற நிலையை விடுத்து அமெரிக்கா முழுச்சிறுபான்மையினரையும் காப்பாற்ற வேண்டும் என்ற வேண்டுகோள் விடப்பட் டுள்ளது. அமெரிக்காவின் வான்படையின் உதவியுடன் குர்திஸ் படைகள் ரைகிறிஸ் (Tigris) நதியின் 3.4 கி.மீ. அணையினை இஸ்லாமிய அரசுப் போராளிகளிடமிருந்து கைப்பற்றினார்கள்.

மத்திய கிழக்கில் ஒரு இடதுசாரி நாடெ னப் பெயரெடுத்த சிரியாவைச் சிதறடிப்ப தற்காக அமெரிக்கால் வழங்கப்பட்ட ஆயு தங்களும் பணஉதவிகளும் இன்று ஈராக் கில் இனஅழிப்புக்குப் பயன்படுத்தப்படுகி றது என்ற குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட் டிருக்கிறது. இப்பொழுது இசில்படைகளை அழிக்க அமெரிக்காவுடன் கூட்டுச் சேர விரும்புவதாக சிரியா அறிவித்துள்ளது.

உலகில் சிறந்த ஆன்மீக மதம் என்று பெயரெடுத்த இஸ்லாம் மார்க்கம் அதன் கொள்கையால் பலரைத் தன்னுள் ஈர்த்தி ருக்கிறது. ஆன்மீக மார்க்கம், இவ்வுலக மார்க்கம் ஆகிய இரண்டு பிரிவுகளிலும் சிறப்பான போதனைகளை வழங்கியிருக்கி றது. அதனைச் சிலர் தமது உரிமையாகக் கொண்டாட நினைப்பதுதான் மதப்போருக்கு அடிப்படையாகிறது.

"யார் எவர் அவர்களுடைய வலது கைப் பிடியில் இருக்கிறாரோ அவர்கள் எல்லாம் அவரது அடிமைகள்" என்ற புனித குர்ரா னின் வாக்கியம் (Source: Robert Spencer -Quran 4:3 4:24 33:50)இஸிஸ் (ISIS) போராளிகளுக்கு இவ்விடத்தில் உதவுகிறது.

**இயாசிடிகள், தாம்பேணிக்காத்துவரும் கலாச்சாரப் பாரம்பரியங்களிலிருந்து விடுபடாதவர்களாக இருப்பதனால் இவர்களது இன அடையாளங்களை அழிப்பதிலும் அவர்களைக் கொல்லுவதிலும் இஸ்லாமிய அரசுப் போராளிகள் (ISIL) முயன்றுகொண்டிருக்கிறார்கள்.**

உலக வாழ்க்கையில் இஸ்லாத்தைப்பயன் படுத்தும் பொழுது 4பெண்களை ஒருவர் மணம் செய்யலாம் என்பதும் பல கன்னி கைகளைப் பாலியல்அடிமைகளாக வைத் திருக்கலாம் என்பதும் அங்கு வழக்கிலி ருக்கிறது. உலக வாழ்க்கை சிறக்க இஸ் லாம் கூறும் நன்மார்க்கமானது ஆண் பெண் இருபாலாரும் சோரம் போவதைத் தடை- செய்வதாகும். ஆனால் "ஒருவர் அடிமை யாக்கப்பட்டதும் அவரது முன்னைய திரு மணம் இரத்தாகிறது" என்ற இன்னொரு கருத்தில் திருமணமானவர்கள் குழந்தை உள்ளவர்கள்கூடப் பாலியல்அடிமைகளாக் கப்படுகின்றனர்.

ஆன்மீக நோக்கில் யேசுதாசன், காளிதாசன் என்ற பெயர்கள் மனிதர் இறைவனது பிடி யில் அடிமைகளே என்கிறது. இதன்மூலம் எல்லோரும் இறைவனினால் ஆட்கொள் ளப்படுபவர்கள் என்ற உண்மையையும் வெளிக்கொணர்கிறது. ஆன்மீக நோக்கில் ஒருவர் இறைதூதரை அடைந்ததும் அவ ரது பந்தபாசம் இரண்டும் விட்டுவிலகுகி றது என்ற உண்மை "அடிமைகளாக்கப்பட் டதும் ஒருவரது முன்னையபந்தம் இரத்தா கிறது" என்றதன்மூலம் அங்கு புலப்படுகி றது. ஆன்மீகத்திலிருந்து லௌகீகத்துக்கு (உலக வாழ்க்கை நிலைக்கு) இதனை மாற்றும் பொழுது மனிதர்களுக்கு மனிதர் அடிமை என்ற கருத்தும் கற்பிக்கப்படுகி றது. 'பற்றுக பற்றற்றான் பற்றினை' என்ற இந்துமத தத்துவத்தை உலக வாழ்க்கைக்கு மாற்றினால் காவி உடைகளுக்குப்பின்னால் காதலிகளின் தொகை கூடத்தானே செய்யும்.

இஸ்லாத்தின் விதிகளை (Islamic Law-Sharia) (சட்டத்தொகுப்பு) உருவாக்கிய வர்கள் 'நான் சரியானதாகவும் தவறான- தாகவும் முடிவெடுக்கக் கூடிய மனிதன். எனதுமுடிவுகளில் அல்லா.்வின் வேதமான திருக்குர்ரானுக்கும் நபிவழிக்கும் பொருத் தமானவற்றை எடுத்துக் கொள்ளுங்கள். அல்லா.்வின் வேதமான திருக்குர்ரானுக் கும் நபிவழிக்கும் பொருத்தமற்றவைகளை விட்டுவிடுங்கள்' என்று கூறுகிறார்கள்.

இஸ்லாமிய சாரியா விதிகளில் இஸ்லாத் திலுள்ள பலதாரமணம், ஜிகாத், மனைவி- களை அடித்தல் போன்றவைகளைப்பற்றி காபிர்கள் எவ்விதத்திலும் எக்காரணங்கொண் டும் விமர்சனமோ நையாண்டியோ செய் யக்கூடாது என்ற கட்டுப்பாடும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இஸ்லாத்தின் விதிகளை மதிக்கும்படி உல கத்தலைவர்கள் கேட்கிறார்கள்.அதன்மூலமே ஏனைய மக்களது மத கலாச்சார விதிக ளையும் இஸ்லாமியர்கள் மதிக்கும்படி அதே உலகத்தலைவர்கள் கேட்கிறார்கள். பல தாரமணம் என்ற திருமணஅமைப்பு முறை யினைக் கலாசாரமாகக் கொண்ட மதஞ் சார் அராபியர்கள் மனித உரிமை விதிகள் என்ற சர்வதேச சட்டத்தினுள் உட்படுத்தப் படுகின்றபொழுதில் அதற்கு மதிப்பளிக்க வேண்டிய நிலைக்குட்தள்ளப்படுகிறார்கள். லிபியத்தலைவர் கடாபியோ சர்வாதிகாரி சதாம் ஹுசைனோ சர்வதேச சட்டத்திலி ருந்து தப்பிக்க முடியாத நிலையிலேயே இருந்திருக்கிறார்கள்.

தொடரும் இனப்படுகொலையை ஈராக்அரசு தட்டிக் கேட்குமா என்ற ஆதங்கம் இயா ஸிகளிடமிடையே எழுந்துள்ளது. இந்நிலை யில் குர்திஸ்தானுக்கான அரசியற் சுய நிர்ணய உரிமை கிடைக்கப் பெறுகின்ற பொழுதில் குர்திஸ்கள் இயாஸிடிகளைத் தம்முடன் அரவணைத்துக் கொள்வார்களா என்ற கேள்வியும் எழுப்பப்பட்டிருக்கிறது.

'பனிப்போரால் உலகம் பிளவுபட்டிருக்கும் நிலையைப் பயன்படுத்திய அரசுகள் பல தாங்களாகவே சட்டங்களைக் கையிலெ டுத்துக் கொண்டு இனச்சுத்திகரிப்பில் ஈடு பட்டுவரும் செயலானது கண்டிக்கப்பட வேண்டியது. மதங்களைப் போர்வையாக்கிக் கொண்டு அவற்றுள் மறைந்திருப்பவர்கள் மனிதாபிமான முறையில் சிந்திக்க வேண் டிய காலத்தின் கட்டாயத்துள் தள்ளப்படுகி றார்கள்.

காசாவில் ஒரு பகுதியினர் இன அழிப்புச் செய்யப்படுகிறார்கள். ஈராக்கில் அதே இனம் இன அழிப்பைச் செய்கிறது. இரண்டுமே எவ்விதத்தில் நியாயமானது. காசாவின் அகதிகளைக் காப்பாற்றுங்கள் என்ற குர லுக்கும் இயாஸிடிகளைக் காப்பாற்றுங்கள் என்ற குரலுக்கும் எந்த வேறுபாட்டினையும் காணமுடியவில்லை. அகதிகளாக்கப்பட்ட மக்களின் இரத்தத்தினையும் சதையினை யும் சாப்பிட நினைப்பவர்கள் பெற்றுக் கொடுக்கும் சுதந்திரம் யாருக்கு வேண் டும் என்று மக்கள் என்று கேட்கிறார்களோ அன்றுதான் அவர்களுக்குப் போராளிகள் யார் பயங்கரவாதிகள் யார் என்ற வேறு பாடு தெரியும்.

kanapathipillai.a@thaiveedu.com

■ ■ ■

*தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.*

***E-mail: info@thaiveedu.com***
***Fax: 416-849-0594***
***Tel: 416-646-3422***



# நீங்கள் வாழ்க்கையில் செய்ய வேண்டிய முதலீடுகளில் ஒன்று RESP

- கனடிய அரசினால் வழங்கப்படும் மானியம் 20% - 40%
- கனடிய கல்வி மானியமாக வருடம் 500 டொலர்
- காப்புறுதி நிறுவனம் வழங்கும் விசேட சலுகை 15%
- இவை அனைத்தையும் பெறுவதற்கு
- RESP திட்டத்தை 25 டொலருடன் ஆரம்பியுங்கள்

**RESP! RESP!! RESP!!!**

இன்றே RESP ஆரம்பியுங்கள் அது உங்கள் குழந்தையின் எதிர்காலத்தை வளமாக்கும்

**Thana Manickavasagar**
Broker

5 Top Secrets to save money on Life Insurance

Cell : 416-728-5772
Off : 416-519-3896
Fax : 647-547-8147



We have a plan pay only 10 Years But Coverage Until Your Life

## Life Insurance

- Non Medical Insurance
- Critical Illness Insurance
- Mortgage Insurance
- RRSP - Start from $25
- RESP - Start from $25
- Travel Insurance



MEDICAL INSURANCE FOR SUPER VISA 100%
REFUND IF VISA DENIED

No body beats my price!
No body beats my service!

E-mail : thana7@gmail.com Web : www.thana.ca
*80 Nashdene Road, Unit D218, Scarborough, ON, M1V 5E4*

# வீடு வாங்க விற்க



**Kuga Raveendrarajah**
Real Estate Broker
Dir: 416-843-8585



$459,000

**Brimley / Finch**
**4 Bedrooms 3 Washroom**
**Basement Finished**



$223,000

**Mccowan/Sheppard**
**3 Bedrooms 2 Washroom**
**Upgrade Kitchen**



**Mathan Selvendarakumaran**
Sales Representative
Dir: 416-625-2870

## சேமிப்பின் அடையாளம் அழகானதோர் வீடு

**HomeLife Today Realty Ltd.**, Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, ON, M1P 4S6

Bus: 416-298-3200

*Independently Owned and Operated, Realtor

**தாய் வீட்டில் எனது பயணத்தின் 100வது படி இது.**

2006இல் நான் எழுதிய முதற்கட்டுரை இப்படித்தான் ஆரம்பமானது.

'விடியலைத் தேடி வீடு வாங்கி, விடிய முன் எழுந்து வேலைக்குச் சென்று, பொழுது காணாது இரண்டு மூன்று வேலை செய்யும் கடின உழைப்பாளின் நாங்கள்'

நம்ப முடியவில்லை, நான் இதுவரை 100 கட்டுரைகள் எழுதிவிட்டேனாம். நான் எழுத்தாளன் அல்ல. எனினும், என்னை எழுதத் தூண்டியவை வீடு பராமரிப்புத் தொடர்பாக மக்களிடையே காணப்பட்ட தெளிவின்மைதான்.

இவ்விதழ் வாயிலாக நான் தகவல்களை வழங்கியபோது வாசகர்களிடமிருந்து வெளிப்பட்ட பின்னூட்டல்கள் எனக்கு உற்சாகமூட்டின. தொடர்ந்து எழுதினேன். எழுதிக்கொண்டிருக்கின்றேன். இத்தொடர் எப்போது முடிவுக்கு வரும் என எனக்குத் தெரியாது.

மக்களுக்கான தேவையும், என் வலுவும், தாய்வீடு என்ற களமும் தொடர்கின்றவரை நானும் தொடர்வேன். வீட்டுப் பரிசோதகர் என்பதோடு, வீடு விற்பனை முகவராகவும் என் பணி விரிவடைந்துள்ளதால் மேலும் பல பயனுள்ள விடயங்களை உங்களோடு பகிர்ந்துகொள்ள முடியும் எனக் கருதுகின்றேன்.

கனடாவில் தாய்வீடு இதழ் தவிர வேறெங்கும் நான் எழுதுவதில்லை. ஒரு வணிகனாக, எழுத்தாளனாக இல்லாமல் தாய்வீட்டின் ஓர் அங்கமாகவே என்னை நான் உணர்கின்றேன். இது எனக்குப் பெருமையாகவும் இருக்கின்றது.

எழுத்துலககோடு தொடர்பேற்படுத்தித் தந்த கருணாகரன் மாணிக்கநடராசா வுக்கும் தொடக்கத்தில் 'வீடு' இதழில் களம் தந்த தாம் சிவதாசனுக்கும், தாய்வீடு இதழ் வழியாகத் தொடர்ந்து எழுத ஊக்கம் தரும் டிலிப்குமாருக்கும் உற்சாகம் தரும் வாசகர்களுக்கும் நன்றி.

# வீட்டில் கஞ்சா செடி வளர்த்தலும் பாதிப்புக்களும்

**வீடும் விடியலும் - 100**



வேலா சுப்ரமணியம்
- Certified Home Inspector -

## வீட்டில் கஞ்சா (Marijuana) செடி வளர்த்தலும் பாதிப்புக்களும்:

பொதுவாக எல்லோருமே வீட்டில் முதலீடு செய்து அதன் மூலம் தமது வளத்தைப் பன்மடங்காகப் பெருக்கலாம் என்ற நம்பிக்கையோடு மிக வேகமாக செயற்பாட்டுவருகின்றோம். பலர் அதில் வெற்றியும் கண்டிருக்கிறார்கள், முற்றிலும் உண்மை ஆனால் அதில் இருக்கக் கூடிய தடைக் கற்களை கண்டு கொண்டு அதற்கேற்பச் செயற்பட்டால் பலன்கள் பன் மடங்காகும் என்பதில் ஐயமில்லை.

அந்த வகையில் கஞ்சா வளர்த்த வீடுகளில் சிக்கிக் கொண்டால் வேண்டத்தகாத பல இன்னல்களை எதிர் கொள்ளவேண்டி இருக்கும். கடந்த காலங்களுடன் ஒப்பிடும்போது தற்போது இத்தகைய குற்றச் செயல்கள் கணிசமான அளவு கட்டுப்படுத்தப்பட்டுவிட்டதாகப் புள்ளி விபரங்கள் காட்டுகின்றன. கனடாவில் British Columbia மாகாணமே இதற்குப் பெயர் போன இடமாகக் காணப்படுகின்றது. June 12/2004 ‘Toronto Star’ன் தகவலின் படி தற்போது நாடளாவியரீதியில் சுமார் 50,000 கஞ்சா வளர்ப்புகள் இருப்பதாகக் கணிப்பிடப்பட்டுள்ளது. 2011ம் ஆண்டில் மட்டும் 6,496 கஞ்சாச் செடி வளர்ப்புகள் B.C ல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக RCMP ன் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இதே ஆண்டில் ரொறொன்ரோவில் 131 வளர்ப்புகள் மட்டுமே கண்டு பிடிக்கப்பட்டுள்ளன என்பது ஒருவகை நிம்மதியைத் தரலாம். ஆனாலும் இதனால் ஏற்படக் கூடிய பாதிப்புக்களைத் தவிர்த்து கொள்ள என்ன செய்யலாம்? எத்தகைய பாதிப்புக்கள் ஏற்படலாம்? நாம் செய்ய வேண்டியது என்ன? போன்ற விடயங்களை உற்று நோக்குவது பலருக்கும் நன்மை பயக்கும் எனக் கருதுகிறேன்.

## கஞ்சாச் செடி வளர்க்கும் வீடுகள் என்பது என்ன?

அதாவது மக்கள் குடியிருப்பதற்காகக் கட்டப்பட்டிருக்கும் தனி வீடுகளையோ அல்லது தொடர் மாடிக்கட்டிடங்களையோ கஞ்சாச் செடி வளர்ப்பதற்காக மாற்றியமைத்து சட்ட விரோதமான முறையில் பயிர் வளர்ப்பதையே இது குறிக்கின்றது. இத்தகைய செயல்களுக்குப் பொதுவாக பெரிய வீடுகளே பயன்படுத்தப்படுகின்றன. ஒரு வீட்டை பயிர்ச் செய்கைக்காக மாற்றுவதற்கு வீட்டில் பலவித மாற்றங்களைச் செய்ய வேண்டியிருக்கும். குறிப்பாக உச்ச அளவிலான மின்சாரப் பாவனைக்காக சக்திமிக்க மின்சாரக் கம்பிகளை மாற்ற வேண்டியிருக்கும். இத்தகைய செயற்பாடுகளுக்கு மின்சாரக் கட்டணம் மட்டும் மாதாந்தம் 1500 – 2000 வரை செலவாகும் எனக்கணிப்பிடப்பட்டுள்ளது. எனவே இதனை மறைப்பதற்காகவும் செலவைக் குறைப்பதற்காகவும் மின்சார இணைப்பு மீற்றருக்கு முன்னதாக இருக்குமாறு களவாடப்பட்டிருக்கும்.

## ஆபத்துக்கள்:

கஞ்சா வளர்ப்பினால் ஒரு வீட்டிற்கு நேரடியாக ஏற்படும் பாதிப்பு என்பது ஒருபுறம் இருக்க இத்தகைய சட்ட விரோதச் செயல்களில் ஈடுபடுவர்கள் மேலும் பல சட்ட விரோதச் செயல்களில் தங்களை இணைத்துக் கொண்டவர்களாகவும் ஆபத்தான ஆயுதங்களை கொண்டவர்களாகவும் குற்றச் செயல்கள் பலவற்றைத் தூண்டுபவர்களாகவும் மொத்த அயலவர்களையே இன்னல்களில் மாட்டிவிடக் கூடியவர்களாகவும் இருப்பார்கள் என்பதைக் கவனத்திற் கொள்ள வேண்டும். உங்கள் வீடு மட்டுமல்ல, அத்தகைய வீட்டிற்கு அயலில் இருப்பதே ஆபத்தானது என்பது புரிந்திருக்கும் என நம்புகிறேன்.



‘Noxious Fumes’ எனப்படும் நச்சுவாயு கஞ்சா வளர்க்கும் வீடுகளில் உருவாகும். இத்தகைய வாயு வீடு முழுக்கப் பரந்து இருக்கும் என்பது மட்டுமல்லாது வெளிப்போக்கு காற்றாடிகள் மூலம் வெளியேற்றப் படுவதால் அயல் வீடுகளிலும் பாதிப்பை ஏற்படுத்தும்.

சக்தி வாய்ந்த மின்விளக்குகள் பாவிக்கப் படுவதாலும் குறுக்கு வழியில் மின் இணைப்புகள் ஏற்படுத்தப்படுவதாலும். நெருப்பு அபாயம் ஏற்பட வாய்ப்பு உண்டு. சாதாரண வீடுகளுடன் ஒப்பிடும்போது இத்தகைய வீடுகளில் தீ அபாயம் 40 மடங்கு அதிகமானது எனக் கணிப்பிடப்பட்டுள்ளது.

மின்சார வேலைகளில் அனுபவம் இல்லாதவர்கள் ஏற்படுத்தும் தற்காலிக இணைப்புக்களால் அவர்களுக்கும் அயலவர்களுக்கும் சுற்றம் சூழலில் விளையாடக் கூடிய சிறுவர்களுக்கும் மின்சார அதிர்ச்சி (‘Electrocution’) ஏற்பட வாய்ப்புகள் உண்டு.

கஞ்சா வளர்ச்சிக்காய் பாவிக்கப்படும் மருந்துப் பொருட்களும் கழிவுகளும் முறையற்ற வழிகளில் நிலத்திலும் வெளித் தரைகளிலும், நீர்வடியும் குழாய்களிலும் வீசப்படுவதால் சுற்றுச் சூழல் மாசுபடுகின்றது.

கஞ்சா வளர்ப்பவர்கள் தங்களது அந்தரங்களை மறைப்பதற்காகவும், தங்களைப் பாதுகாக்கவும் உயிர் ஆபத்தான பொறிகளை ‘Booby Traps’ ஏற்படுத்தியிருக்கலாம்.

கஞ்சாப் பயிர்ச் செய்கையால் ஏற்படக் கூடிய அதிக அளவிலான ஈரப்பதன் காரணமாக ‘Mould Mildew’ உருவாகும் தன்மையும், பயிர் வளர்ச்சிக்கும் பாவிக்கப்படும் மருந்துப் பொருட்களும் உடல் நலத்திற்குப் பலவிதமான பாதகங்களை ஏற்படுத்தும். குறிப்பாக ஒவ்வாமை, சுவாசம் சம்பந்தமான நோய்கள் ஏற்படலாம்.

மேற்குறிப்பிட்ட அனைத்து அபாயங்களும் சிறுவர்களை மிக அதிக அளவில் பாதிக்கக் கூடியவை என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

## முதலீட்டில் ஏற்படக் கூடிய பாதிப்புக்கள்:

ஒரு வீடு கஞ்சா வளர்க்கப்பட்டதாக அடையாளப்படுத்தப்பட்டால் அதனை விற்பது என்பது மிகக் கடினமானது. விற்க முடியாமற் போனாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இத்தகைய வீடுகளுக்கு அடமானக் கடன் எடுப்பது மிகக்கடினம். முற்றாக நிராகரிக்கப்படலாம். அல்லது 50%மேல் கட்டுப்பணம் செலுத்துமாறு கேட்கப்படலாம்.

காப்புறுதிக்கட்டணம் மிக அதிகமாக இருக்கும். அல்லது முற்றாக நிராகரிக்கப்படலாம்.

‘Mould Contamination’ தவிர்க்கமுடியாததாக இருக்கும். Dry wall தொடக்கம் Insulation வரை பரந்திருக்கக்கூடிய Mouldஐ முற்றாக அகற்ற அதிகளவு பணச் செலவு ஏற்படும்.

மிக அதிகளவிலான ஈரப்பதன் வீட்டில் இருக்கக்கூடிய தளம், படிகள் உட்பட மரத்தினாலான அமைப்புகள் யாவும் வளைந்தோ, வெடித்தோ அல்லது வேறு வகையில் பழுதடைந்தோ இருக்கலாம். அவற்றை சீர்செய்ய அதிக அளவு செலவு ஏற்படலாம்.

மின்சார இணைப்புகளைச் சீர் செய்ய வேண்டிய நிலை ஏற்படலாம். அதற்கான செலவும் மிக அதிகமாக இருக்கும்.

ஒரு வீடு கஞ்சா வளர்த்த வீடாக அடயாளப்படுத்தப்பட்டால், அத்தகைய பதிவு அந்த வீடு முற்றாக அழித்து மீழக் கட்டப்படும் வரை இருக்கும் என்பதே தற்போதய நிலையாகும். கடன் சம்பந்தமான பதிவுகளானாலும் சரி, காப்புறுதி சம்பந்தமான பதிவுகளானாலும் சரி அவை குறிப்பிட்ட 5, 7 ஆண்டுகளில் மறைந்து போய்விடும். ஆனால் பாதிக்கப்பட்ட ஒரு வீடு முற்றாக திருத்தப்பட்டாலும் பதிவிலிருந்து நீக்கப்

தொடர்தல் 31ம் பக்கம்

வீட்டுப் பரிசோதகர் ஒரு வீடு விற்பனை முகவரானால்
வீடு வாங்க:
வீடு விற்க:
வாங்கப்போகின்றீர்களா?
♦ தரமான வீடு தவறிப்போகாது
♦ பிடித்த வீடு மலிவாய்க் கிடைக்கும்
♦ வாங்கிய பின் ஏமாற்றங்கள் இருக்காது
♦ வளம்சேர்க்கும் வாழ்நாள் முதலீட்டின் முதற்படி
விற்கப்போகின்றீர்களா?
♦ விற்கமுன் வீட்டின் பிழைகள் களைய இலவச ஆலோசனை
♦ விற்றபின் வரும் தடங்கல்களை விற்கமுன் தவிர்க்கலாம்
♦ விற்றபின் வரும் பெறுமதி இழப்புக்களைத் தடுக்கலாம்
♦ சந்தை விலைக்குக் குறையாத பெறுமதியை ஈட்டலாம்
நம்பிக்கை, நாணயம்
10 வருட வீட்டுப் பரிசோதனை அனுபவத்துடன் கூடிய ஒரு வீடு விற்பனை முகவர்
Highest Standard Agents... Highest Results!
Vela Subramaniam B.A. (Hons)
Experienced Home Inspector
Sales Representative
Direct: 416 786-0760
vela4homes@gmail.com
www.dreamgtahomes.com
Homelife/Future Realty Inc. Brokerage
Independently Owned and Operated
Bus: 416 264-0101 Fax: 905 201-9229
205 - 7 Eastvale Dr, Markham, ON. L3S 4N8



# வீட்டில் கஞ்சா செடி...

30ம் பக்கத் தொடர்ச்சி...

படாதிருப்பது துரதிஷ்டவசமானது. சுற்றுச் சூழலை பாதுகாக்கும் பதிவு செய்யப்பட்ட நிறுவனம் ஒன்று (environmental engineering inspector) இத்தகைய வீடுகள் திருத்த வேலைகளின் பின்னர் பரிசீலனை செய்து உறுதிசெய்யப்பட்டால், அத்தகைய பதிவு களில் இருந்து நீக்கப்படலாம் என 2013ல் அரச மட்டத்தில் முன்மொழியப்பட்ட போதும் அது சட்ட அந்தஸ்தை இதுவரை பெற வில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## கஞ்சா வளர்க்கும் வீடுகளை எவ்வாறு கண்டறியலாம்:

குறிப்பிட்ட வீட்டில் ஆள்நடமாட்டம் குறை வாக இருக்கும். ஒருசில மணித்தியாலங்க ளுக்கு மட்டும் வளர்ப்பவர்கள் வந்து போவார்கள்.

வீட்டிற்குள் பிரவேசிக்கும்போது பிரதான வாசலால் செல்லாதது கராஜ் வழியாக, அல்லது பின்வழியாக அல்லது பக்கவழி யாக செல்வார்கள்.


யன்னல்கள் முற்றாக மூடப்பட்டிருக்கும். வெளி வெளிச்சம் வராதவாறு மட்டுமன்றி, வீட்டிற் குள்ளே நடைபெறும் செயல்களை வெளியே இருந்து பார்ப்பது தடைசெய்யப்பட்டிருக்கும்.

வீட்டிலிருந்து அல்லது அயலில் துர்நாற்றம் வீசுவது அவதானிக்கப்படலாம்.

புல்வெட்டுதல், அல்லது பனி அகற்றுதல் போன்ற செயல்கள் செய்வது மிக அரிதாக இருக்கும் அல்லது முற்றாகப் செய்யப்படா திருக்கும்.

குளிர்காலத்தில் கூரையில் இருக்கக்கூடிய பனிப்படிவுகள் மற்றைய வீடுகளுடன் ஒப்பிடும் போது மிக விரைவாக கரைந்து போவதை அவதானிக்க முடியும். பயிர் வளர்ச்சிக்காக அதிகளவு மின்சார வெளிச்சம் பாவிக்கப்ப டுவதும் வீடு சூடாக இருப்பதுமே இதற்குக் காரணமாகும்.

பிரதான மின் இணைப்பு பொருத்தப்பட்டிருக் கும் மீற்றருக்குக் கீழ் பகுதியில் தோண்டப் பட்ட அடையாளங்கள் தென்படலாம். சட்ட விரோத தற்காலிக மின் இணைப்பை ஏற்ப டுத்த இவ்வாறு செய்யப்பட்டிருக்கலாம்.




அதிகளவான Roof vents போடப்பட்டிருக்க லாம். அத்துடன் அத்தகைய vents ஊடாக அதிகளவு நீராவி வெளிவருவதை அவதா னிக்க முடியும்.

கழிவுப் பொருட்கள் வெளியில் வைப்பது குறைவாக இருக்கும். அல்லது வைப்பது முற்றாக நடைமுறையில் இருக்காது. அவ் வாறு வைக்கப்பட்டால் மண், பயிர்சம்பந்தப் பட்ட பொருட்கள் உள்ளடங்கி இருக்கும்.

கழிவுப் பொருட்களை வளர்ப்பவர்கள் தாமே தம்முடன் எடுத்துச் செல்வது பழக்கத்தில் இருக்கும்.

வீட்டில் இருக்கக்கூடிய நடவடிக்கைகள் யாவும் சாதாரண நேரங்களில் அல்லாது முறையற்ற நேரங்களில் நடைபெறும்.

வீட்டு நிர்மாண வேலைகளுக்குரிய சத்தங் களை அயலவர்கள் அவதானிக்கமுடியும். அவையும் முறையற்ற நேரங்களில் ஆகவும் இருக்கலாம்.

வீட்டிற்குள் எடுத்துவரப்படும் பொருட்கள் காற் றாடிகள், பாரிய மின் விளக்குகள், மண் வகைகள், சாடிகள் போன்றவையாக இருப் பதை அவதானிக்க முடியும்.

காவல் துறையினர் பிரவேசிப்பதற்காக பிர- தான வாசலை பல தடவை சேதப்படுத்தி இருப்பதை அவதானிக்கமுடியும்.

பாரிய வெளிச்சங்கள் யன்னல் ஓரமாகப் பட்டுத்தெறிப்பதையும் அதிகளவு நீர்ப்படி மானம் யன்னல் கண்ணாடிகளில் இருப்ப தையும் அவதனிக்கலாம்.

மேற்கண்ட அறிகுறிகள் காணப்பட்டால் கீழ் காணும் இலக்கங்களுக்கு அழைத்து நகர் காவலருக்கோ அல்லது குற்றத்தடுப்புப் பிரிவினருக்கோ அறிவிக்குமாறு பொதுமக் கள் யாவரும் வேண்டப்படுகிறார்கள்.

911 அல்லது 416 808 2222 அல்லது 1800 222 8477.

ஒரு வீட்டைக் கொள்வனவு செய்யும்போது கஞ்சா வளர்ப்பு சார்பாக கவனிக்க வேண்டிய தென்ன? வீட்டை வாடகைக்கு விடுபவர்கள் என்ன செய்யலாம்? ஒரு வீடு விற்பனை முகவரின் பொறுப்பு என்ன? அடுத்த இதழில்…

velasubramaniam@thaiveedu.com

■ ■ ■

அராலி கலாச்சார ஒன்றியம் கனடா

அராலி மக்களின் 10வது வருடாந்த ஒன்றுகூடலும் இராப்போசன விருந்தும்

செப்ரெம்பர் மாதம் 13ம் திகதி

J & J Swagat விருந்தினர் மண்டபத்தில்
மாலை 6:00 மணி

சிறப்பு நிகழ்ச்சியாக அக்கினி இசைக்குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சி.

செல்வரட்ணம்: 647 282 4614, யோகலிங்கம்: 416 726 4141, உருத்திரன்: 416 839 1526, ரவி நேசன்: 647 464 9508.



# வீடு வாங்கப் போகிறீர்களா?



வள்ளிக்கண்ணன் மருதப்பன்
- வீடு விற்பனைப் பிரதிநிதி -

சென்றமாதத் தொடர்...

தொடர் - 07

### ஆய்வுக் கட்டணம்:

உங்களுக்கு நிதி வழங்குபவர், சொத்து பற்றிய மிக அண்மைய அளவீட்டு ஆய்வு அறிக்கை ஒன்றை எதிர்பார்ப்பார். இவ்வறிக்கையை உங்களுக்கு சொத்தை விற்பவரிடமிருந்து பெற்றுக் கொடுக்கலாம். அப்படியல்லாத பட்சத்தில் நீங்களே ஒரு ஆய்வை மேற்கொண்டு அறிக்கை பெறவேண்டும். அதுபோன்ற ஆய்வைப் பெறமுடியாத பட்சத்தில், உரிமம் மீதான காப்புறுதி ஒன்றைச் செய்யவேண்டும். இதன்மூலம் 500 தொடக்கம் 700 டொலர்களை சேமிக்கலாம்.

### மதிப்பீட்டுச் செலவு:

அடிப்படை மதிப்பீட்டுச் செலவு 250 டொலர்களுக்கும் குறைவாகவே இருக்கும்.

### சொத்து காப்புறுதி:

உங்கள் சொத்தே பிணையாக இருப்பதால், உங்கள் நிதி வழங்குனர், சொத்து மீதான காப்புறுதி ஒன்றைச் செய்யும்படி அறிவுறுத்துவார்.

### சேவைக் கட்டணம்:

உங்கள் புதிய வீட்டில் பொருத்தப்படும் தொலைபேசி, தந்தி வழித் தொலைக்காட்சி மற்றும் இன்ன பிற சேவைகளுக்கான கட்டணத்தை நீங்கள் செலுத்த வேண்டிவரும்.

### வழக்கறிஞர் கட்டணம்:

எந்தவொரு நில உரிமை மாற்று நிகழ்வின் போதும், உரிமம் தொடர்பாக ஆராய்வது, கொள்விலை பற்றிய ஆய்வுக்கணிப்பு, ஈட்டுப் பத்திரங்களைத் தயார் செய்தல் மற்றும் தவணைக்காலம் முடிவுறும் நாள் வரை, உரிய ஆவணங்களைப் பாதுகாத்து வைத்திருத்தல் போன்ற தேவைகளுக்காக சட்ட வல்லுனர்களின் சேவை பெறப்படும். அதற்காக அறவிடப்படுவதே இக்கட்டணம். இது, சொத்து விலையின் அடிப்படையில் மாறுவதாக இருக்கும். நீங்கள் விரும்பினால், உங்கள் நிதி வழங்குனரிடம் ஒரு வழக்கறிஞரை சிபாரிசு செய்யச் சொல்லிக் கேட்கலாம். ஆயினும் அவருக்கான கட்டணங்களை நீங்கள் பேசித் தீர்த்துக்கொள்ளலாம்.

### ஈட்டுக்கடன் காப்புறுதி தவணைக் கட்டணம் மற்றும் விண்ணப்பக் கட்டணம்:

கொள்விலையின் 25 சதவீதத்துக்கும் குறைவான முற்கொடுப்பனவை நீங்கள் செய்திருந்தாலோ, அதிக வட்டிவீதத்திலான கடனைப் பெற்றிருந்தாலோ ஈட்டுக்கடன் காப்புறுதி ஒன்றைச் செய்வது கட்டாயமாகும். இதற்கான விண்ணப்பக் கட்டணம், செல்லுபடியாகும் மதிப்பீடு இருந்தால் 75 டொலர்களும், அது இல்லாத பட்சத்தில் 235 டொலர் வரையிலும் அறவிடப்படும். காப்புறுதிக்கான முதல் தவணைக் கட்டணம் கொள்விலையின் 0.5 சதவீதம் முதல் 3,75 சதவீதம் வரையாக இருக்கும். மிகுதிக் கட்டணம், ஈட்டுக் கடனுடன் சேர்க்கப்படும்.

### ஈட்டுத் தரகர் கூலி:

உங்களுக்காக ஒரு நிதி வழங்குனரைத் தேடித்தரும் ஈட்டுத் தரகர்களில் சிலர், மொத்த ஈட்டுப் பெறுமதியின் 2 சதவீதத்தைத் தனக்கான கட்டணமாக அறவிடுவார். ஆயினும். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இவர்கள் மூலம் நிதி வழங்குனர் வருவாய் பெறுவதால், இவர்களுக்கான கட்டணத்தை நிதி வழங்குனரே செலுத்துவார். நல்லதொரு முதலைக் கடனாகப் பெறுபவர்கள், இவர்களுக்கான கட்டணத்தைச் செலவிடவேண்டி வராது.

### இடமாற்றுச் செலவு:

வீட்டுபயோகப் பொருட்களை நீங்கள் தற்போது வசிக்கும் இடத்திலிருந்து புதிய வீட்டிற்கு மாற்றுவதற்குத் தேவைப்படும் தொகை. இதை உங்கள் சொந்த முயற்சியில் செய்து கொண்டாலும் பொருட்களை மாற்றித்தரும் ஒரு 'சேவை நிறுவனத்தின் மூலம்' செய்து கொண்டாலும், இதற்காக ஒரு செலவைச் செய்ய வேண்டிவரும்.

### எஸ்டோப்பல்ஸ் உறுதிப்பத்திரம்:

நீங்கள் கொண்டோமினியம் ஒன்றுக்கு குடிபுகப் போகிறீர்கள் என்றால், (உயரமான கட்டிடங்களாக இருக்கவேண்டிய அவசியமில்லை) இந்த உறுதிப்பத்திரம், உங்கள் கொண்டோமினியத்தின் உரிமையாளர்களின் பொருளாதார மற்றும் சட்ட அந்தஸ்தை உறுதிப்படுத்தும். இதற்காக 50 டொலர்கள் வரை செலவாகும்.



### கொண்டோமினியம் கட்டணம்:

இந்த மாதாந்தக் கட்டணம் கட்டடத்துக்குக் கட்டடம் வித்தியாசப்படும். தரைப்பகுதியைப் பேணுவது, கம்பளங்களைச் சுத்தப்படுத்துவது, பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கான கட்டணம், உடற்பயிற்சி மையத்தைப் பேணுவது போன்றவற்றுக்காக அறவிடப்படும். கட்டட அமைப்பின் அடிப்படையில் சில நூறு டொலர்களையே இதற்காகச் செலவிடவேண்டி வரும்.

### வீட்டுப் பரிசோதனைக் கட்டணம்:

உங்கள் வீட்டின் விஸ்தீரணத்தின் அடிப்படையில், உங்கள் வீடு கட்டப்பட்டுள்ள விதம் மற்றும் அவற்றின் தன்மை பற்றிய பூரண அறிக்கையைப் பெற்றுக்கொள்ள ஏறக்குறைய 300 டொலர்களைச் செலவிடவேண்டி வரும். இதுபோன்ற ஆய்வுகளை, நற்பெயர் கொண்ட ஒரு நிறுவனம் மூலம் செய்துகொள்வது சிறப்பு.

### திருத்தச் செலவு மற்றும் புதுப்பித்தல் செலவு:

மேற்படி உங்கள் வீட்டுக்கான பரிசோத-னை அறிக்கை, சில சிறிய அல்லது பாரிய திருத்த வேலைகளைச் செய்யும்படி அறிவுறுத்தும். அந்தத் திருத்தங்களை மேற்கொள்ளவென ஒரு தொகையை ஒதுக்கி வையுங்கள். நீங்கள் வாங்குவது பழைய வீடெனின் இது கட்டாயமாகச் செய்யப்படவேண்டும்.

### மீள் அலங்கரித்தல் செலவு:

நீங்கள் வாங்கும் வீட்டை உங்கள் ரசனைக்கேற்ப அழகுபடுத்த விரும்புவீர்கள். அவற்றின் உடனடியாகச் செய்ய விரும்பும் மாற்றங்களைப் பட்டியலிட்டு, அவற்றைச் செய்வதற்காக ஒரு தொகையை ஒதுக்கி வையுங்கள்.

### தண்ணீர் தரச் சான்றிதழ்:

நீங்கள் கிணற்றுடன் கூடிய ஒரு வீட்டை வாங்கவிருக்கிறீர்கள் என்றால், அந்தக் கிணற்று நீரின் தரத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழைப் பெற்றுக்கொள்ளவென்று ஏறத்தாள 50 முதல் 100 டொலர் வரை செலவிட வேண்டி வரலாம்.

## ஈட்டுக்கடனைப் பெற்றுக்கொள்ளுதல்

### விண்ணப்பித்தல்:

ஒரு ஈட்டுக்கடனைப் பெறவேண்டி விண்ணப்பிக்கும்போது, உங்கள் தொழில், வருமானம் மற்றும் சொத்துக்கள், கடன்கள் பற்றிய முழு விபரங்களையும் உங்கள் நிதி வழங்குனருக்குப் பூரணமாக வழங்குங்கள். உங்கள் சொந்த நிதி நிலவரம் பற்றியே அவர்கள் கவனம் செலுத்துவார்கள். மொத்த கடன் சேவை வீதத்தைக் கணிப்பதற்காக, உங்கள் மொத்த ஆண்டு வருமானத்தையும் அதிலிருந்து அறவிடக்கூடிய ஈட்டுத் தவணையையும் சொத்து வரியையும் அவர்கள் கணக்கிடுவார்கள். பெரும்பாலும் உங்கள் மொத்த வருமானத்தின் 30 முதல் 35 வீதத்திற்கு மட்டுப்படுத்தப்படும். இத்தோடு, உங்களது ஏனைய கடன் தொகைகளையும் சேர்த்து, மொத்த கடன் சேவை வீதத்தைக் கணிப்பார்கள். இது உங்களது வருடாந்த மொத்த வருமானத்தின் 40 வீதத்தை மீறாததாக இருக்கும்.

### நிதி வழங்குனர்களின் எதிர்பார்ப்பு:

உங்கள் நிதி வழங்குனர்கள், இரண்டு கோணத்தில் இருந்து ஆராய்ந்து, தமது பாதுகாப்பை உறுதிசெய்துகொள்வர். முதலாவது, குறிக்கப்பட்ட மாதாந்தரக் கொடுப்பனவை உங்களால் செலுத்த முடியுமா என்பது, இரண்டாவது, நீங்கள் கடனைத் திரும்பச் செலுத்தத் தவறும் பட்சத்தில், உங்கள் வீட்டை விற்பதன் மூலம், கடன் தொகையை மீளப் பெற முடியுமா என்பது.

### அனுமதிக்கான படிமுறை:

உங்களது மொத்த சொத்துக்களின் பெறுமதியையும், உங்களுக்கு வழங்கப்படும் கடன் தொகையையின் பெறுமதியையும் ஒப்பிட்டுப் பார்ப்பார்கள். அதன்போது உங்கள் வங்கி இருப்பு, முதலீடுகள், ஏனைய அசையாச் சொத்துக்கள், வாகனங்கள், படகுகள், மற்றைய கடன்கள், கடனட்டைக் கொடுப்பனவுகள் போன்ற பல விடயங்களைச் சீர்தூக்கி ஆராய்வார்கள். ஆகையால், எவ்வளவு சொத்துக்களை உங்களால் காட்ட முடியுமோ, அவ்வளவையும் அவர்கள் முன் வையுங்கள்.

உங்கள் முன்னைய கடன் பெறுமதிகள் மற்றும் அவற்றின் அடைப்பனவுகளின் விவரங்கள் - அதாவது, பழைய கொடுப்பனவுகளை நீங்கள் முறையாகச் செய்திருக்கிறீர்களா அல்லது கடனை அடைக்க முடியாது மஞ்சள் பத்திரிகை கொடுத்திருக்கிறீர்களா? என்பன – நீங்கள் பெறப்போகும் ஈட்டுக்கடனுக்கான அளவீடாக உங்கள் நிதி வழங்குனரால் கணிக்கப்படும். அத்தோடு உங்கள் தொழில்தருநர், கடன்தருநர் மற்றும் உங்கள் கடன் செலுத்தும் சக்தியை அளவிடும் நிறுவனங்களிடம் உங்களைப் பற்றிய விபரங்களைச் சேகரிப்பதற்காக, ஒரு பத்திரத்தில் கையொப்பமிடச் சொல்லி உங்கள் நிதி வழங்கும் நிறுவனம் கேட்கும்.

ஏலவே உங்களுக்கு ஏதேனும் கடன் கொடுப்பனவுப் பிரச்சினைகள் இருந்தால், அவற்றை முடித்துவிட்டுப் பின் ஈட்டுக் கடனுக்காக விண்ணப்பிப்பது சிறந்தது. உங்கள் கடன் செலுத்துப் பெறுமானத்தை அளவிட்டுக் கொள்வதற்காக, கடன் தரவுகளைச் சேகரித்து வைத்திருக்கும் கடன் அளவீட்டு நிறுவனத்தை நாடுங்கள். இவ்வகை நிறுவனங்களில் ஒன்றின் விபரத்தை உங்களுக்காகத் தருகிறோம்:

Trans Union
Customer Relations Department,
P.O.Box 338 – LCDI,
Hamilton, Ontario
L8L 7w2

உங்களது தற்போதைய முகவரியுடன், உங்கள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் இரண்டு பிரதிகளையும், கடனட்டை அல்லது ஏதேனும் ஒரு சேவைக்கான கட்டணப் படிவத்தையும் உங்கள் கடன் வரிசைப்படுத்தலுக்கான கோரிக்கைக் கடிதம் ஒன்றுடன் இணைத்து மேற்படி முகவரிக்கு அனுப்பினால் போதும். இரண்டு வாரங்களின் பின், உங்கள் வங்கியாளர்களால் நீங்கள் எவ்விதமாகக் கணிக்கப்படுவீர்கள் என்பதை நீங்களே அறிந்துகொள்வீர்கள்.

ஏதேனும் கடன் நிலுவைகள் காணப்பட்டால், உடனேயே உங்கள் கடன் தாரருடன் தொடர்பு கொண்டு அதை முழுவதுமாகத் தீர்த்துவிடுங்கள். அதே வேளை, ஏதேனும் தவறுகள் இடம்பெற்றிருந்தால், அவை பற்றி எழுத்து மூலமாக சம்பந்தப்பட்டவர்களுக்குத் தெரிவித்து அவற்றைச் சரிசெய்து கொள்ளுங்கள்.

கடன் பெறுவதில் ஏதும் சிக்கல்கள் காணப்பட்டாலும் 'என்னால் வீடு வாங்க முடியாதோ' என்று துவண்டுவிடாதீர்கள். உங்கள் பிரச்சினை பற்றி ஒரு ஈட்டுத் தரகருடன் பேசிப் பாருங்கள். உடனடியாக உங்களால் வாங்க முடியாது போனாலும், உங்கள் ஈட்டுத் தரகர் உங்கள் கடன் பெறுமதிப்பை உயர்த்துவதற்கான நடவடிக்கைகளில் உங்களுக்கு வழிகாட்டுவார். அதன் வழி நடந்தீர்களேயானால், உங்கள் கனவு இல்லம் நிச்சயம் உங்கள் கைகளில் சேரும்.

*தொடரும்...*

vallikkannan@thaiveedu.com

■ ■ ■




நிலையான சொத்துக்களை வாங்க, விற்க அழைக்க வேண்டிய
உங்கள் வீடு விற்பனை முகவர் சுகுமாரன் சின்னையா (சுகு)

ROYAL DE MONTRÉAL 2003 INC.
4372, Papineau, Montréal, Qc, H2H1T5

Sugumaran Sinniah
Chartered Real Estate Broker

திருப்தியான இல்லம்
ஆனந்தமான வாழ்க்கையின் அடிப்படை !

Direct : 514.299.3186

email: seranvib@hotmail.com Office : 514.529.0454 Fax : 514.525.4557



Brock Rd/ Dersan St.




3 Bedrooms, 3 W Rooms
Gorgeous Home With 9 Foot Ceilings
On The Main Flr Open Concept Living Space

10th Line/Main St




4 Bedrooms, 4 W Rooms
Great Rm W/Gas Fireplace.
Dir Access To 2 Car Grge.

Thickson & Carnwith




5 Bedrooms, 4 W Rooms
Rich Hardwood Stairs,Fireplace,
Cathedral Ceiling In Living Rm,

10th Line & Hoover Park




4 Bedrooms, 3 W Rooms
Glass/Stone Mosaic Backsplash,
Stainless Steel Appliances

Williamson & Westney




4 Bedrooms, 3 W Rooms
9Ft Ceilings,Upgraded Kitchen
Cabinets, Boasts Dark Hdwood Floor

Hwy 7/Concession 4




4+4 Bedrooms, 9 W Rooms
An Unbelievably Serene Setting
Nestled On A Quiet Court Location

Bellamy/Lawrence




3+1 Bedrooms, 2 W Rooms
Fully Renovated Home Featuring
Modern Open Concept Kitchen

Brimley/Denison




3+1 Bedrooms, 4 W Rooms
Extra Large Main Floor Family Room.
Updated Kitchen, Furnace, A/C

Mccowan & Highglen




3 Bedrooms, 3 W Rooms
Open Concept Kitchen, Granite
Countertop & Under Mount Sink

Finch Ave/Neilson Rd.




3 Bedrooms, 3 W Rooms
Paradise Home In Convenient
Location, Backs On Green Ravine

Middlefield/ 14th Ave.




3 Bedrooms, 3 W Rooms
Finished Basement, Big Backyard,
New Air Conditioner

Markham Rd/Denison




4+2 Bedrooms, 4 W Rooms
Custom Made Kitchen On The
Main Flr.Hardwood Flooring On Main

14th Ave/ Middlefield




4 Bedrooms, 4 W Rooms
Walk-Out Basement. Lots
Of Potential, Extra Window Installed

9th Line/Buroak




4 Bedrooms, 3 W Rooms
W/O To Interlocked Back Patio
Huge Landscaped Backyard

Mccowan/16th Ave




4+1 Bedrooms, 3 W Rooms
Gourmet Kitchen W/Upgraded Cabinet,
Bright & Spacious Bedrooms

Sell your home

# FASTER

and more **MONEY**

#1 RE/MAX

## Elaguppillai Srinathan (Mike) B.Sc

**Direct 416 - 276-1225**

Your home sold in 30 days or we buy it



KZG 647-200-5833

**Ph1-7800 Woodbine Ave**
**Markham, ON L3R 2N7**
**Office: 905-470-9800**
**Fax: 905-470-7770**

Email: esrinathan@yahoo.com

I can also assist your Mortgage financing, Home Inspection Real Estate lawyer

# வீடுகளில் ஈரப்பதனை அளத்தல்

பிரபா சின்னா



### வளியுடன் நீராவி சேரும் வழிமுறைகள்:

வளியில் உள்ள நீராவியின் அளவே ஈரப்பதன் ஆகும். வளியில் எப்படி ஈரப்பதன் அதிகரிக்கின்றது?

- வீட்டில் வசிப்போரும் அவர்களின் செல்லப் பிராணிகளும் சுவாசிக்கும் போதும் அவர்களிலிருந்து வியர்வை வெளியேறும் போது.
- வீட்டினுள் உள்ள தாவிரங்களின் ஆவியுயிர்ப்பின் போது.
- வீட்டின் நடைபெறும் துணி துவைத்தல், பாத்திரங்கள் கழுவுதல், குளித்தல், சமைத்தல், நீரினால் நிலத்தைத் துடைத்தெடுத்தல், ஈரஉடுப்புகளை வீட்டினுள் காயவிடல் போன்ற செயல்பாடுகளின் போது.
- வீட்டைச் சுற்றியுள்ள நிலத்தில் இருந்து நிலக்கீழ் அறைச்சுவர்களினூடாகவோ, சிறு துவாரங்களினூடாக நீராவி உட்புகும்போது.

உடல் நலத்திற்கும் சுகாதாரத்திற்கும் ஈரப்பதன் அத்தியாவசியமானது. ஆனால் அது அதிகளவிலோ அல்லது மிகக் குறைந்த அளவிலோ இருக்கும்போது தான் பிரச்சினை உருவாகின்றது. ஒரு சில பிரச்சினைகள் பழக்கப்பட்டவையாகவும் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தி விட்டாலும், எனையவை கடுமையான பாதிப்பை ஏற்படுத்துகின்றது. குளிர் காலங்களில் வீடுகளைச் சூடேற்றும் போது யன்னல்கள் கதவுகளை மூடிவைத்திருக்கும் வேளையில் விட்டினுள் உள்ள வளிச்சுற்றோட்டம் குறைக்கப்படும் இந்த வேளையிலேயே பிரச்சினைகள் உருவாகும்.

### அதிகளவு ஈடுரப்பதனால் ஏற்படும் அறிகுறிகளும் பாதிப்பும்:

- யன்னல்களின் உட்பகுதியில் நீர்த்துளிகள் படிந்திருக்கும்.
- சுவர்களிலும் கூரை (Ceiling)யிலும் நீராவி படிந்த கறைகள் ஏற்பட்டிருக்கும்.
- குளியலறையில் பூஞ்சனம் படிந்திருக்கும்.
- துர் நாற்றம் ஏற்படும்.
- ஒவ்வாமை (Allergy)யினால் வீட்டிலுள்ளோர் அவதிப்பட நேரிடும்.
- காலப்போக்கில் வீடும், வீட்டிலுள்ள நில விரிப்பு, தளபாடம் போன்றவை பழுதடையும்.
- வீட்டில் உள்ளோரின் சுகாதாரம் பாதிக்கப்பட்டு நோய்கள் உண்டாகும்.

### ஈரப்பதன் குறைவடைவதனால் ஏற்படும் அறிகுறிகளும் பாதிப்பும்.


- சுவாசத்தோடு சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் உருவாகும்.
- தோல், உதடுகள் காய்ந்து வெடிக்கும்.
- தொண்டையோ, மூக்கழற்சி ஏற்படும்.
- மின் உபகரணங்களில் பிரச்சினைகள் ஏற்படும்.
- சுகாதாரமான வாழ்வு பாதிக்கப்படும்.
- வீட்டிலுள்ள தளபாடம் போன்றவை பழுதடையும்.

### ஈரப்பதன் அளவீடு:

ஈரப்பதனானது சாரீரப்பதனிலேயே RH (Relative Humidity) அளக்கப்படுகின்றது RH என்பது இதன் குறியீடாகும். வளியில் உள்ள நீராவியின் அளவிற்கும், அந்த வளியை முற்றாகச் செறிவாக்குவதற்குத் தேவையான நீராவியின் அளவிற்கும் உள்ள விகிதத்தின் நூற்று வீதமே RH ஆகும்.

RH வளியின் நீராவியின் அளவு / வளியை செறிவாக்கத் தேவையான நீராவியின் அளவு (அதே வெப்பநிலையில்) x 100

வளி நிரம்பிய (உச்ச செறிவு) நிலையில் இருக்கும்போது அதன் RH, 100% மாக இருக்கும். RH ஆனது 100% ஐத் தாண்டி இருந்தல் மேலதிக நீராவி ஒடுங்கி நீர்த்துளிகளாகப் படியும்.




சூடான வளி அதிகளவு நீராவியைக் கொள்ளக்கூடியது. 100% RH உள்ள வளியின் வெப்பநிலையைக் குறைத்தால் RH ஆனது 100 இலும் கூடிவிடும். வெப்ப நிலையைக் கூட்டினால் 100இலும் குறைந்துவிடும்.

### ஈரப்பதனை அளத்தல்:

ஈரப்பதனை ஈரமானி (Hygrometer) கொண்டு அளவிடலாம். வீட்டுக்குப் பொருத்தமான இரண்டு வகை ஈரமானிகள்:

- Mechanical Hygromenter.
- Electronic Hygrometer.

இதில் முதலாவது ரகம் விலை குறைந்தது ($7-30). பிளாஸ்ரிக்கினால் ஆனது. அம்புக் குறியினால் எண்ணிக்கை காட்டப்படும். இதற்கு மின்கலம் (Battery) தேவையில்லை. திருத்தமாக அளவீட்டைக் காட்டும். நாங்களாகவே அதைத் திருத்தலாம்.

இரண்டாவது வகை வினா கூடியது ($15-60) LCD display உண்டு. மின்கலம் (Battery) தேவை. மிகவும் திருத்தமான அளவீட்டைக் காட்டும். நாங்களாகத் திருத்த முடியாது. வெப்பமானி (Thermometer) வாங்கக் கூடிய கடைகளில் இதை வாங்கலாம். வெப்ப மானியும் ஈரமானியும் சேர்த்து ஒரே உபகரணமாகவும் விற்கப்படுகின்றது.

ஒரு வீட்டின் வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு அளவான ஈரப்பதன் இருந்தாலும் ஒரு வீட்டிற்கு ஒரு ஈரமானியே போதுமானதாகும். எங்கே ஈரப்பதன் அறிகுறிகளைக் காணுகிறீர்களோ அந்த இடத்தில் இக்கருவியைப் பொருத்தி வைக்கலாம். இது மிகச் சிறிய கருவியாதலால் ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு எடுத்துச் சென்றும் வைக்கக் கூடியது. அனால், ஒரு விடயத்தை நீங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். என்னவென்றால் புது இடத்திற்கு மாற்றும் பொழுது உடனடியாக அவ்விடத்தில் உள்ள RHஐ இக்கருவியால் காட்ட முடியாது. சரியான அளவீட்டைக் காட்டுவதற்கு 2, 3 மணித்தியாலங்கள் தேவைப்படும்.

### முக்கிய கவனிப்பு:

இக்கருவியை Radiator, Chimney, Heat Register, போன்றவற்றிற்கு அருகில் வைக்கக் கூடாது.

### திருத்தமான அளவீட்டை எடுத்தல்:

உங்கள் ஈரமானி சரியான அளவீட்டைக் காட்டுகின்றதா என்பதை உறுதி செய்து கொள்ளல் வேண்டும். அதாவது உங்கள் கருவி சரியான அளவீட்டைக் காட்டாதவிடத்து அதைக் Calibrate செய்ய வேண்டும்.

Calibrate செய்வது இலகுவான ஒன்று. எல்லா Hygrometers உம் கடையில் வாங்கிய பின், பாவிக்கப்படு முன் Calilrate செய்யப்பட்டாலே திருத்தமான அளவீட்டை எடுக்க முடியும். தொழில்ச் சாலையில் செய்யப்பட்டு வெளியே கொண்டுவரப்படும் பொழுது இருக்கருவிகளில் சில சரியான முறையில் Set பண்ணப் படாதிருக்கலாம். இதைத் சீராகச் set பண்ணுவதே Calibration ஆகும். மிகச் சிறந்த தரமான கருவியும் மிக நீண்ட காலப்பொழுதில் இருக்கும்போது சரியான அளவீட்டைத் தரமுடியாததாக இருக்கலாம். எனவே Calibration என்பது மிக முக்கியமானதொன்று. தெரிந்த RH உள்ள ஒரு சூழலில் இக்கருவியை வைத்து அது சரியான அளவீட்டைக் காட்டுகின்றதா எனப் பார்ப்பதன் மூலம், கருவியை திருத்தமாக Set பண்ணிக் கொள்ளலாம். ஒருவருடத்திற்கு ஒருமுறை Calibrate பண்ணப்பட்டாலேயே திருத்த அளவீட்டைப் பெற முடியும்.

### Calibate செய்யும் படி முறைகள்:

- ½ கப் உப்பை (Table Salt) ஐக் ¼ கப் நீரில் கரைத்தெடுக்க வேண்டும்.
- கரைசல் பாத்திரத்தையும் Hygrometer ஐயும் plastic பையினுள்ளோ அல்லது Pressure Cooker இன் உள்ளோ வைத்து வாயை இறுக மூடிவிட வேண்டும். உப்பு நீர் ஈரமானியில் சிந்தாது பார்த்துக்கொள்ள வேண்டும்.
- இதனை சூரிய வெளிச்சம் நேரடியாகப் படாத இடைஞ்சலில்லாத ஓரிடத்தில் அறை வெப்ப நிலையில் 8-12 மணித்தியாலங்களும் வைக்க வேண்டும்.
- பின், ஈரமானி அளவீட்டைப் பார்த்தல் வேண்டும்.

அளவீடு 75ஐக் காட்டினால் கருவி சரியான முறையில் Calibrate பண்ணப்பட்டிருக்கின்றது. ஆகவே அது திருத்தப்படத் தேவையில்லை. வித்தியாசமான அளவீட்டைக் காட்டினால், திருத்தக் கூடிய Hygrometer ஆயின் அம்புக் குறியை 75 இல் பிடித்து விட்டுத் திருத்தம் செய்ய வேண்டும். திருத்த முடியாத மின் கருவியாக இருந்தால் எவ்வளவால் கூடுகின்றது அல்லது எவ்வளவால் குறைகின்றது என்பதைக் கணக்கிட்டு, அக்கருவி காட்டும் அளவீட்டோடு கூட்டியோ கழித்தோ சரியான அளவீட்டைக் கணித்துக் கொள்ளலாம்.

தேவைப்படக்கூடிய இதமான ஈரப்பதனின் அளவு காலத்துக்குக் காலம், வீட்டுக்கு வீடு அறைக்கு அறை மாறுபடும். கண்ணாடியில் நீர்ப்படிவு ஏற்படாமல் இருப்பதற்கு RH, 30% - 50% அளவில் இருக்க வேண்டும். வெளிவெப்ப நிலை – $10^oC$ க்குக் கீழ் குறையும் பொழுது 30% இருத்தல் போதுமானது.

உங்கள் வீட்டின் RH ஐ நீங்களாகவே குறைக்கவோ அல்லது கூட்டவோ முடியும். கோடை காலங்களில் Dehumidifier பாவித்தோ அல்லது குளிரூட்டியைப் (Air Conditioner) போட்டோ RHஐக் குறைக்க குளிர் காலங்களில் வீட்டினுள் வளர்க்கப்படும் தாவரங்களாலும், நிலக்கீழ் அறை வெடிப்புகளாலும், கூரை leakஇனாலும் அதிகளவு நீராவி வீட்டினுள் சேரும் முதலில் இதைக் கணித்துத் திருத்த வேண்டும் இடைக்கிடை யன்னல் கதவுகளைச் சிறிதளவு திறந்து வைப்பதனாலும், குளியலறை சமையலறைகளில் வெளியேற்றும் பம்பியைப் பொருத்துவதனாலும், HRV கருவியைப் பாவிப்பதாலும்.

### மேலதிக நீராவியை வெளியேற்றி RHஐக் குறைக்காலம்:

வெளியில் இருந்து உலர்ந்த வளி வீட்டினுள் கசிவதனால் வீட்டினுள் RH குறைவடையும். இதற்குரிய துவாரங்களைக் கண்டு பிடித்து Caulking, Weathers stripping முறைகளால் சரிவர அடைப்பதன் மூலம் RHஐக் கூட்டலாம். அத்தோடு இதைச் செய்யும் பொழுது உங்கள் மின்பாவனைக்குரிய கட்டணமும் குறையும். Humidifier பாவித்தும் RH ஐக் கூட்டலாம்.

prabha.sinna@thaiveedu.com

■ ■ ■

தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.

E-mail: info@thaiveedu.com
Fax: 416-849-0594
Tel: 416-646-3422


ROOM OVER THE GARAGE TOO COLD




Call Prabha Sinna 416-556-6115

Atticare Insulation


People don't plan to fail,
but they do fail to plan
You don't have to take life the way it comes to you...
You can design your life to come to you the way you want!
நாளை நம் கையில்
இன்றே செயற்படுங்கள்
Super Visa Insurance
Disability Income Insurance
Critical illness Insurance
Mortgage Insurance
No medical exam Life Insurance
Permanent Life Insurances
Term Life Insurance
Travel & Visitor Insurance
RRSP Loan / Investment
RESP
As an Independent Insurance Broker,
I will shop around for you and get you the best rate…
Super Visa Insurance
100% Refund
Guna Thuraisingham M.A.Sc (Eng.), P.Eng.
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
Tel: 905 230 4986 | guna@gtbrokers.ca
www.gtbrokers.ca
Industrial Alliance
RBC Royal Bank
Assumption Life
Desjardins
Manulife
Foresters


ATTETION HOME OWNERS!
SELLING COMMISSION AS LOW AS 1%
WHEN YOU BUY & SELL WITH ME,
SELLING COMMISSION ONLY $1000
$889,000
McCowan & Steeles
2-Storey Detached
4+3 Bedrooms + 6 Washrooms
$699,000
Kennedy & Denison
2-Storey Link
3+2 Bedrooms + 4 Washroom
$829,000
McCowan & 16th
2-Storey Detached
4+1 Bedrooms + 3 Washroom
$560,000
Sheppard & Markham
2-Storey Detached
$899,000
Keele & Lawrence
2-Storey Detached
Oshawa
SOLD!!!!
Simcoe & Niagara
2-Storey Detached
HOMELIFE
HIGHER STANDARDS
HOMELIFE LANDMARK Brokerage
7240 Woodbine Ave, Suite 103
Markham, ON L3R 1A4
Bus: 905 305 1600
nanadarajah@trebnet.com
NADA G. NADARAJAH B.V.Sc
Real Estate Sales Representative
Call me 416 - 616- 8751

# CANADIAN TAMIL ACADEMY
# கனடாத் தமிழ்க் கல்லூரி

:: 20 ஆண்டுகள் தரமான தமிழ் மொழிக் கல்விச் சேவை
:: கனடியக் கற்பித்தல் அனுபவம் கொண்ட ஆசிரியர்கள்
:: ஒன்ராறியோ பாடத்திட்டத்துக்கு அமைவான கற்பித்தலும் மதிப்பீடும்
:: அமைதியான தூய்மையான உங்கள் வதிவிடத்துக்கு அருகிலான பாடசாலைச் சூழல்

## நுண்கலைத் தேர்வு 2014
## Fine Arts Exam 2014

தொன்மை மிக்க இசை வடிவங்களை எங்கள் மூதாதையர் எமக்குத் தந்து சென்றுள்ளனர். 2500 ஆண்டுகளுக்கு முற்பட்ட இயல், இசை, நாடக வரலாற்றுத் தொடர்ச்சி எமக்குண்டு. தாயின் கருவறை முதல் காலத்தின் எல்லைவரை நுண்கலைகள் எம் வாழ்வோடு இரண்டறக் கலந்துள்ளன. அவற்றைப் புலம்பெயர் வாழ்விலும் விட்டுவிடாது எம்மோடு கொண்டுள்ளோம். எமக்கான கலைகளைப் பெருமைப்படுத்தி அயலார் முன்னிலையில் தமிழர் பண்பாட்டை உயர்த்திடுவோம்.



நடனம் Dance
தண்ணுமை (மிருதங்கம்) Miruthangam
பண்ணிசை Pannisai
வீணை Veenai
புல்லாங்குழல் Flute
நரம்புவாரியம் Violin
கின்னரம் Piano-Keyboard
வாய்ப்பாட்டு Vocal

திறன்களை வெளிப்படுத்தத் தகுதியான களம். கனடாத் தமிழ்க் கல்லூரியின் நுண்கலைத் தேர்வுகளில் பங்கு கொண்டு உங்கள் ஆற்றல்களை வெளிப்படுத்துங்கள்.

விண்ணப்பப் படிவங்களைத் தலைமைப் பணிமனையிலும் www.tamilacademy.org இணையத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

அனைத்து வளாகங்களிலும் இணையதளத்திலும் விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளலாம்

கூடுதல் விவரங்களுக்கு: Tel: **416 757 2006** Fax: 416 757 2541
8 Milner Avenue. Scarborough, ON. M1S 3P8
Web: **www.tamilacademy.org** Email: contact@tamilacademy.org

© 1992 - 2014 Canadian Tamil Academy. All rights reserved.



## வாழ்வின் ஓர் அடையாளம்



...
அங்குத் தூணில் அழகியதாய் நன்மாடங்கள் துய்ய நிறத்தினவாய்
அந்தக் காணி நிலத்திடையே ஓர் மாளிகை கட்டித் தரவேண்டும்
அங்குக் கேணியருகினிலே தென்னைமரம் கீற்று மிளநீரும்

பத்துப் பன்னிரண்டு தென்னைமரம் பக்கத்திலே வேணும்
நல்ல முத்துச் சுடர்போலே நிலாவொளி முன்பு வரவேணும்
அங்குக் கத்துங் குயிலோசை சற்றே வந்து காதிற் படவேணும்
– மகாகவி பாரதி

**www.ranjanfx.com**




**RANJAN FRANCIS XAVIER**

**Cell: 416-816-1220**

## அழகிய பூஞ்செடிகள்

# Golden Shrimp Plant

வீட்டுத் தோட்டம் - 70



செல்லையா சந்திரசேகரி

### அறிமுகம்:

பொன்னிறமான இறால் செடி (Golden Shrimp Plant), வெப்ப மண்டலங்களில் அழகிய பூக்களுக்காக வளர்க்கப்படுகின்ற தாவரமாகும். இதன் குடும்பம் அக்கன்தி-யேசியே (Family Acanthaceae) யைச் சேர்ந்தது. செடியானது வருடம் பூராகவும்



மஞ்சள் நிறமான பூவடியிலைகளையும் சிறிய வெள்ளை நிறமான பூக்களையும் தொகுதிகளாக பிரதிபலிப்பதால் பார்ப்ப-தற்கு அழகிய தோற்றமாக இருக்கின்றன. தொடர்ச்சியான பூவடியிலைகள் இடையே ஊதா நிறமான பொட்டுக்கள் கொண்ட சிறிய வெள்ளை நிறப் பூக்கள் தோட்டப் பிரியரைக் கவரும் வகையில் காணப்படு கின்றன. பூக்கள் சில நாட்களில் உலிர்ந்து போனாலும் பூக்கொத்துக்கள் பல நாட்க ளுக்கு இருந்து நீண்ட காலத்தினைக் கவர்கின்றது.

மெக்சிக்கோ நாட்டின் ஆதியான செடியாக இருந்தது. நாட்டுப்புறங்களிளுள்ள பூங்காக் களில் விசாலமான இடத்தினைப் பற்றி இருப்பதை அவதானிக்கக் கூடியதாயி-ருந்தது.

### இனவிருத்தி:

புதிய செடிகள் வருடத்தின் எந்தக் காலத் திலும் வெட்டுத்தண்டுகள் மூலம் மிகவும் இலேசாக உண்டாக்கப்படுகின்றன. வெட்-டுத்தண்டுகள் ஏறக்குறைய 5அங். அள வாக இருக்கலாம். கணுக்கள் அல்லது இலையரும்புகள் உள்ள பகுதிகளுக்கு அருகாமையில் சரிவான வெட்டுக்களை மேற்கொள்ளலாம். வெட்டுத்துண்டுகளைச் சிறிது வேர்கள் தோன்றக்கூடிய ஓமோனில் நனைத்து ஊன்ற வேண்டும். வேர்கள் தோன்றும் வரை தண்ணீர் நனைந்த தரையில் உண்டாக்கிய பின்னர் வேறு இடத்திற்கு மாற்றீடு செய்யலாம். குளிர் காலங்களில் நிரம்பிய சூரியவொளி கிடைக்க வேண்டும். பூக்கும் வேளைக-ளில் போதிய நீர் கிடைப்பதைக் கவனிக்க வேண்டும்.

வீட்டுத் தோட்டத்தில் வெப்ப காலங்களில் செடியானது ஏதோ விடுமுறையைக் கழிப் பதாக முழுமையாக பூக்களைச் சொரிந்து கொண்டே இருக்கும். பூக்களின் தலைகள் இறால் போன்ற அமைப்பினை எடுத்துக் காட்டுவதால் செடியானது பொன்னிறமான இறால் செடியெனெ பெயர் பெற்றிருக்க-லாம். செடியினை அநேகர் சாடிகளில் வைத்தும் வளர்ப்பது உண்டு. கடும் குளிர் காலங்களில் வீட்டின் உட்புறமாக வைத்து வளர்ப்பர்.

### கத்தரிப்பு:

செடியினைக் கத்தரிப்பு செய்வதால் செடி கள் அடர்த்தியாகவும் நிலத்திற்கு கீழ் மட்டமாகவும் காணப்படுகின்றன. செடி-யானது ஏறக்குறைய 18 அங் உயரமாக



வளரக்கூடியது. கத்தரிப்பானது இலை துளிர் காலத்தின் முற்பகுதியில் செய்வது உகந்ததாகும். காய்ந்த பூக்களையும் தண் டுகளையும் நீக்குவதால் செடிகள் நெருக்க மாகவும் குளிர்ச்சியாகவும் இருக்கின்றன.

### தாக்கும் நோய்களும் பூச்சிகொல்லிகளும்:

இலைகளின் மேற்புறங்கள் கீழ்ப்புறங்கள் நன்கு நீரினால் கழுவியிருப்பதைக் கவ னிக்கவேண்டும். பூச்சிகளை, பூச்சிகொல்லி மருந்துகளால் அகற்றவேண்டும். மலத்தீ-யோன், வேப்பெண்ணெய் சிறந்த தடை மருந்துகளாகின்றன. போசணை உணவு கள் கிடைக்காவிடின் இலைகள் பழுப்பாக இருக்கும்.

*segari@thaiveedu.com*

■ ■ ■

## Family: Poaceae

# நெல்

## (Botanical name: Oryza sativum Eng. Name : Paddy)





நெல் ஒரு தானியப் பயிராகும். இது குடும்பம் (Family Poaceae) போயேசியேயைச் சேர்ந்தது. குடும்பமானது பெரும்பாலான புற்தாவரங்களைக் கொண்டுள்ளது. ஆனால், இவற்றுள் உலகி-லேயுள்ள முக்கிய உணவுப்பொருள்களான அரிசி, கோதுமை, சோளம், தினை போன்றவை அடங்கியிருப்பதும் தாவரங்களில் முதன்மையான இடத்தை வகிப்பதும் ஓர் விந்தையாகவே இருக்கின்றது. இது அநேகமாக வெப்ப மண்டலங்களில் பிரதானமாகப் பயிரிடப்பட்டு எல்லோ-ராலும் உணவுக்குப் பயன்படுத்தும் பயிராகின்றது. எனவே, இதனை முக்கியமாக ஒரு பிரதான உணவு என்ற வகையில் தென்கிழக்கு ஆசியாவில் மயன்மார் தொடக்கம் இந்தோனேசியா வரை ஏறக்குறைய 3000 BC க்கு முன்பாகவே பயிரிட்டனர். ஆதாரங்களின்படி, யாவா நாட்டில் எட்டாவது நூற்றாண்டு காலப்பகுதியில் அரசர்கள் அரிசிக்குரிய வரியினை விதித்திருப்பதாக குறிப்பிடப்பட்டிருக்கின்றது. பின்னர் பிலிப்பைன்ஸ், தைலந்து, பேர்மா, சீனா, இந்தியா, இலங்கை போன்ற நாடுகளுக்கு பலநூற்றாண்டு காலங்களுக்கு முன்னதாகவே பெருமளவில் பயிரிடப் பட்டது.

எனவே, இப்போது இந்தியா, இலங்கையின் நெல் விளைச்சலைப் பற்றி மட்டுமே எடுப்பது சாத்தியமாகின்றது. உண்மையில் ஆதிமுதலாக எப்போது நெல் விளைச்சல் ஆரம்பமானது என்ற சரியான தகவல் இல்லை. இருந்தும் 820 - 1350 ஆண்டுகளுக்கு முன்னதாக இருக்கலாம் என்பது இவர்களது கருத்தாகும். Oryza sativum இருவித இனங்களைக் கொண்டிருக்கின்றது. 1. Japonica சிறிய தானியம் 2. Indica நீளமான தானியம். இலங்கையில் நெல் விளைச்சல் என்று எடுக்கும்போது, 800 BC க்கு முன்னதாகவே பயிரிடும் முறைகள் பற்றிய தகவல் இருப்பதாக சான்றுகள் இருக்கின்றன. நீர்பாசல் முறையில் நீர் சேமித்து வைக்கும் குளங்கள், கால்வாய்கள் போன்ற சாதனங்கள் பெருமளவில் பயன்பட்டன. இலங்கையின் விளைச்சல் உலகின் தரத்தோடு ஒப்பிடும்போது உன்னதமாக இருந்துவந்தது. தென் இந்தியாவின் மருதநில எனப்படும் பகுதிகள் எல்லாம் நெற்பயிர் செய்யும் நிலங்களாகவே இருந்தன. இடி, மழை இரண்டிற்கும் கடவுளான இந்திரன் அரிசியினையும் படைத்திருக்கின்றார் என்பது சமயக்கருத்தாகின்றது. இதோடு பரம்பொருளாகிய இந்திரன், இடி, மழை இரண்டிற்கும் மூலக்கடவுள் என்பதால் தேவையேற்படும் போதெல்லாம் பயிர்களுக்கு நீர் கிடைக்கின்றது என்பது எல்லோரது கவனமாகும்.

நெல் விளையும் பகுதிகளில் நெல் நடுதல், அறுவடை காலங்களில் பண்டிகைகள் கொண்டாடப் பட்டு வந்தன.

■ ■ ■

உங்கள் அனைத்து நிகழ்வுகளையும் பார்ப்பதற்கும் பதிவதற்கும்

**www.inayam.net**

# மறைந்தவைகளும்...

26ம் பக்கத் தொடர்ச்சி...

லேயர் தபால் தலைகளை அறிமுகப்படுத்தி, கடிதத்தை அனுப்புபவரே அதற்கான தலைகளைப் பணம் செலுத்திக் கொள்வனவு செய்ய வேண்டும் என்ற முறையை நடைமுறைக்கு உட்படுத்தினர்.

பல தசாப்தங்களின் பின்பு 1903ம் ஆண்டில் விமானங்களைப் பயன்படுத்தி Air Mail Service க்கான ஏற்பாடுகள் தொடங்கப்பட்டு 1911ம் வருடம் செப்டெம்பர் 9ம்திகதி விமானம் மூலமான முதலாவது தபாற்சேவை நடைபெற்றது.

தபாற்சேவை அறிமுகமாகியதைத் தொடர்ந்து, எல்லாவிதமான தகவல் பரிமாற்றத்திற்கும் தபாற்சேவை மட்டுமே உதவியது. முக்கிய விடயங்களை அறிந்து கொள்வதற்கும், ஏனையோருக்கு அறிவிப்பதற்கும், பரீட்சை முடிவுகளை அறிந்து கொள்ளவும், தொழில் வாய்ப்புக்கான விண்ணப்பங்களை அனுப்புவதற்கும், குறிப்பிட்ட வேலைக்குத் தெரிவாகிய பின்பு அதற்கான நியமன உத்தரவுக் கடிதத்தைப் பெறுவதற்கும் தபாற் சேவை மட்டுமே எமக்கு உதவியது.

## தந்தி சேவை (Telegraph Service):

பிரித்தானியா நாட்டவர்களான William Cooke, Charles Wheatstone என்பவர்கள் இணைந்து 1830ம் வருடத்தில், மின்சாரத்தின் மூலம் தகவல் பரிமாற்ற முறையான தந்தி சேவையை கண்டு பிடித்தனர்.

தந்தி மூலம் தகவல் அனுப்பும்முறை உலகளாவிய ரீதியில் 1845ம் வருடத்தில் வெற்றிகரமாக நிறைவேறியது. மின்னியல் சார்ந்த முறையைச் சரியான விதத்தில் பயன்படுத்திய சாமுவேல் மோர்ஸ் என்ற அமெரிக்கர் இந்தச் சாதனையைப் புரிந்தார்.

இதனையடுத்து 1911ம் வருடம் ஆகஸ்ட் 20ம் திகதி அமெரிக்காவில் நியூயோர்க் நகரில் Times நிறுவனம் பல நாடுகளைக் கடந்து ஒரு தந்தித் செய்தியை வெற்றி-




கரமாக அனுப்பியது. 16 நாடுகளில் உள்ள தொலைபேசி Operators களை ஒருங்கிணைத்து அந்த செய்தியை அனுப்பி 16 ½ நிமிடங்களில் அதற்குரிய பதிலைப் பெற்று Times நிறுவனம் ஓர் உலக சாதனையை ஏற்படுத்தியது.

அதைத் தொடர்ந்து உலகளாவிய ரீதியில் தந்திச்சேவை விரிவாக்கமடைய ஆரம்பித்தது. எனினும் மிகவும் சமீப காலத்தில் சிறிலங்காவிலும் வேறு சில நாடுகளிலும் இந்தச் சேவை முற்றாக நிறுத்தப்பட்டுவிட்டது. கைத்தொலைபேசி மூலமும், மின்னஞ்சல் மூலமும் விரைவான தகவல் பரிமாற்றம் ஏற்படத் தொடங்கிய காரணத்தினால் தந்திச்சேவையின் முக்கியத்துவம் குறையவே இந்நிலை ஏற்பட்டது.

எனினும் தந்திச்சேவை நடைமுறையில் இருந்த காலத்தில் தபால் நிலைய ஊழியர் ஒவ்வொரு தடவையும் எமது வீடுகளுக்குத் தந்தியைக் கொண்டு வரும் போது 'அது என்ன விதமான செய்தியை உள்ளடக்கியுள்ளதோ' என்ற நிலையில் எமது இதயம் படபடத்தை எம்மில் பலர் அனுபவித்திருப்பார்கள்.

பதவி நியமனம் பரீட்சை முடிவுகள் போன்ற மகிழ்ச்சியான தகவல்களை உள்ளடக்கிய தந்திச் செய்தி சிலவேளைகளில் மரணச் செய்திகளையும் தாங்கி வந்ததும் உண்டு.

கனடாவில் Canada Post நிறுவனம் ஏற்கனவே ஆட்டம் காணத் தொடங்கியுள்ளது. நாடாளாவிய ரீதியில் ஏராளமான ஊழியர்களைப் பதவிநீக்கம் செய்துள்ள கனடிய தபாற் சேவை நிறுவனம் தனது சேவைகளைப் பெருமளவில் குறைத்துள்ளது. இதன் ஆயுட்காலம் மிகவும் குறைந்தது என்பதே பொதுவான கருத்தாக உள்ளது.

## மின்னஞ்சல் (E-mail):

உலகில் கணினிகள் வர்த்தக ரீதியாக உற்பத்தியாக்கப்பட்ட பின்பு தற்போது உலக-




ளாவிய ரீதியில் பெருமளவு மக்கள் தனிப்பட்ட கணினிகளையும், மடிக்கணினிகளையும் (LapTops) சொந்தமாக வைத்திருக்கும் வாய்ப்பு உருவாகியுள்ளது. அதேவேளை மின் அஞ்சல் வசதியும் Skype மூலம் ஒருவரை ஒருவர் நேரடியாக பார்த்தவாறு உரையாடக்கூடிய நிலையும் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாகத் தேவைக்கு ஏற்ப எவரும் எவரையும் இலகுவில் தொடர்பு கொண்டு உடனடியாக எந்த தகவலையும் பரிமாறக்கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளது.

மின் அஞ்சல் என்ற தகவல் பரிமாற்ற முறை இன்று உலகளாவிய ரீதியில் விரைவான தொடர்புக்கு அவசியம் என்பது அனைவரும் அறிந்தவிடயம். இதனைக் கண்டுபிடித்தவர் அமெரிக்காவில் வாழும் சிவா ஐயாத்துரை என்ற திறமைசாலியான தமிழகத் தமிழர் என்பது எம்மை வியக்க வைக்கும். இதனை அவர் தனது 14வது வயதில் கண்டுபிடித்தார் என்பது எங்களில் பலரை அதிசயத்தில் ஆழ்த்தும். இவருக்குரிய கௌரவம் வழங்கப்படுவதை ஒரு சிலர் எதிர்த்தும் கூட 1982ம் ஆண்டில் அமெரிக்க அரசு அவருக்கு இந்த கண்டுபிடிப்பிற்கான முழு உரிமையும் வழங்கிக் கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.

## ஸ்கைப் (Skpe):

இந்த தகவல் தொடர்பு முறை 2003ம் ஆண்டில் டென்மார்க் நாட்டவரான Janus Faiis எனபவரும் சுவீடன் தேசத்தவரான Niklas Zennstorm என்பவரும் இணைந்து கண்டுபிடிக்கப்பட்டது. இதன் பயனாக ஒரு மைக்கிரோபோன், Web Cam என்பவற்றின் உதவியுடன் இன்ரநெற்மூலம் எமக்கு வேண்டிய ஒருவரை ஒருவர் பார்த்தபடி உரையாடக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டள்ளது.

## முடிவுரை:

கடந்த 50 வருடங்களில் ஏற்பட்டுள்ள நவீன தொழில் நுட்பங்களின் பிரமாண்டமான பரிணாம வளர்ச்சி மாற்றங்களை அவதானிக்கும் போது அடுத்த பல தசாப்தங்களில் இன்னும் எத்தனையோ அதிசயமான கண்டுபிடிப்புக்கள் அறிமுகம் செய்யப்படலாம்.

rajabalan.sr@thaiveedu.com

■ ■ ■



# iNFORCE LIFe Financial Services Inc.





## வண்ணம் தீட்டும் போட்டி


## Coloring Contest


## Ends September 20, 2014

இவற்றை வண்ணம் தீட்டி இவற்றின் பெயரை தமிழில் எழுதுக


____________


____________


____________


____________

First Prize Winner



Purushoth Thavendran

Second Prize Winner



Tayaany Jeganathan

Third Prize Winner



Dhakshanya Anandbabu

First Name: ____________ Last Name: ____________ Age: ____

Address: ____________ Tel: ____________

E.mail: ____________ Parent Sign: ____________

Cut this page and mail it on or before September 20, 2014 to enter the competition.

**iNFORCE LIFe Financial Services Inc.**
10 Milner Business Court, Suite 707
Scarborough ON M1B 3C6

For More Details:
**Bus: 416 321 6000**
**Direct: 416 909 0400**

**For Kids only. Submit the entry by mail or in person:**

Terms and conditions: By entering the Contest, all entrants agree to be bound by the rules of the contest and release iNFORCE LIFe Finacial Inc. and all parties associated with this Contest from any liability with respect to the contest and the redemption of any Prize. Contest Organizers reserve the right to withhold the Prize or disqualify any Contestant's entry in the event that any Contestant fail or refuse to comply with these contest rules. By entering this contest, Contestants and their legal parent(s) or guardian(s) consent to the Contest Organizers publishing or announcing any Prize winners' name and photograph(s), in future publicity, without permission. All entries become the property of the Contest Organizers and none will be returned. decision made by the Judges are final. iNFORCE LIFe Finacial Inc. and their affiliates family members cannot participate in the competition.

**First Prize**




**Second Prize**




**Third Prize**




உங்கள் கனவு இல்லத்தை வாங்கித்தர
அனுபவம் வாய்ந்த முகவர்
Retail Plaza in GTA For Sale
- Closer to major intersection
- Net Income More than $455,000.00
- Excellent CAP Rate
- 50% VTB available
- First time on the market
10 Acre Commercial Land For Sale
Warden / Davis Dr.
- Permitted Uses: Hotels, Commercial School, Private Nursing Home and More
Banquet Hall For Sale/Lease
- 17,500 SqFt
- Can be accommodated up to 1,000
- Dividable into 3 units (3 Kitchen)
Uthayan Nadarajah, CCIM
Real Estate and Business Broker
Direct: 416-727-9945
uremax@gmail.com
Century 21 Affiliate Realty Inc.
208-80 Corporate Drive, Toronto, ON, M1H 3G5
Ph: 416-290-1200
UthayanCentury21@gmail.com
Century 21


Diabetes, Cholesterol, Heart Disease, High Blood Pressure...
போன்ற காரணங்களால் அல்லது வேறு காரணங்களால் உங்களுக்கு ஆயுள் காப்புறுதி பெறமுடியாமல் இருக்கிறதா? அப்படியாயின் நம்பிக்கையான காப்புறுதி நிறுவனங்களில் இருந்து என்னால் உங்களுக்கு காப்புறுதி பெற்று தர முடியும். இன்றே அழையுங்கள்: 647-888-7016
Also for the following needs call me today...you will be happy you did!
Term Life Insurance - Mortgage Life Insurance - Whole Life Insurance -
Universal Life Insurance (UL), 20 year Pay - Life Insurance
Critical Illness Insurance - Dental & Health - Disability & Long Term Care
Super Visa Insurance for Canadian Visa purpose - Travel Insurance & Visitors Insurance
Group Insurance for Small Business
RESP & SEG Funds
Simple Solutions with Expert Support !!!
MORTGAGE PROTECTION INSURANCE
Medical Insurance for SUPER VISA - 100% Refund if VISA denied.
As we represent the following and many more...You have more choices:
INDUSTRIAL ALLIANCE, MANULIFE, FORESTERS, CANADA PROTECTION PLAN, RBC, BMO
Industrial Alliance
Manulife Financial
Foresters
Canada Protection Plan
RBC Insurance
BMO Insurance
CALL ME TODAY DON'T DELAY. TEL: 647-888-7016
Visit our website: www.insuranceprotection.biz ❖ www.inspro.ca
RAJVI SELVAM
(Raj V. Selvadurai)
Insurance Advisor & SEG Funds Specialist


PRIME+ 0%
Try finding a better home equity line of credit
Enjoy an introductory rate of Prime + 0% on the CIBC Home Power® Plan Line of Credit until May 3, 2015.1
உங்கள் மோட்கேச் தேவைகளுக்கு...
இன்றே அழையுங்கள்...
First Time Buyer
Self Employed
Debt Consolidation
Refinancing
Pre Approval
New immigrant
Start the day off with coffee rewards
CIBC Tim Hortons® Double Double™ Visa® Card
Happiness at the touch of a button!™
அரவின் அப்பாப்பிள்ளை
Aravin Appappillai
Mortgage Advisor
416-275-2007
CIBC


Finding Homes to Fit Your Lifestyle
Suba Aynkharan
Broker
Cell: 416-722-4444
E-mail: suba_ay@hotmail.com
1265 Morningside Ave, Suite 203
Toronto, ON M1B 3V9
Tel: 416-287-2222
Fax: 416-282-4488
Each Office Independently Owned and Operated.
RE/MAX COMMUNITY REALTY INC., Brokerage
-digi Media-



# TIME FOR SOLUTIONS

## மாதாந்தக் கட்டணங்கள், நிதி நெருக்கடிகளுக்கான தீர்வு காண இதுவே தருணம்

உங்கள் அனைத்து மாதாந்தக் கட்டணங்களையும் ஒவ்வொன்றாக செலுத்துவதை விட, அவை அனைத்தையும் ஒன்று சேர்த்து மீள் அடமானக் கட்டணம் மூலம் செலுத்த முடியும். இதன் மூலம் பெருமளவு பணத்தை சேமிக்க முடியும்.

| | | Before | After |
|---|---|---|---|
| Mortgage Payment | 320,000 @ 5.4% | 1,934.67 | - |
| Car Loan | 21,000 @7.5% | 764.25 | 0.00 |
| Line of Credit | 16,000 @ 6.5% | 566.67 | 0.00 |
| Line of Credit 2 | 12,500 @ 7% | 447.92 | 0.00 |
| Credit Card 1 | 8,800 @ 12% | 352.00 | 0.00 |
| Credit Card 2 | 5,200 @ 19% | 238.34 | 0.00 |
| Store Card | 3,000 @ 24% | 150.00 | 0.00 |
| New Mortgage payment | 386,500 @ 2.8% | | 1,584.80 |
| Total Dept | | 386,500.00 | 386,500.00 |
| Total Payment | | **4,450.85** | **1,584.80** |

இதன் மூலம் மாதாந்தம்

**$2,866.05**

சேமிக்க முடியும்

-digi Media Creations-


**Suren Nathan** AMP

Mortgage Broker

License# M08004479

Dir. **416-436-1111**

Office. 416-548-7475 Fax: 416-548-7496

suren@bonafidemortgage.ca,

7 Eastvale Drive,Unit 203, Markham, ON, L3S 4N8




BonaFide Mortgage Solutions Inc.

the true freedom...

# வாகனம், தீ விபத்துகள்



செந்தூரன் புனிதவேல்
- காப்புறுதி முகவர் -

இன்று செல்போன்கள் தவிர்க்க முடியாத ஒரு உபகரணமாகிவிட்டது. ஐந்து வயது குழந்தை விளையாட்டுப் பொருளாக செல் போனைக் கையில் எடுத்தால் அக்குழந்தை அப்புவாக, ஆச்சியாக வந்தபின்னும் செல் போனை கைவிட விரும்பாது.

அண்மையில் 'செல்' பெற்றோல் ஸ்தாபனம், செல்போன்களால் ஏற்பட்ட தீ விபத்துக்குப் பின்னர் பெற்றோல் நிரப்பும் வேளைகளில் செல்போன் பாவிப்பை தவிர்க்கும்படி அறி-வித்துள்ளது. வாசகர்களின் நன்மை கருதி இங்கு சிலவற்றைக் கவனிப்போம்.

முதலாவது சந்தர்ப்பத்தில் பெற்றோல் வாங் குபவர், கார் பொதிகள் வைக்கும் இடத்திற்கு (Trunk) மேல் செல்போனை வைத்துவிட்டு பெற்றோலை நிரப்பும் வேளையில், அழைப்பு வந்து மணி அடிக்கையில் ஏற்பட்ட மின் விளைவால் நெருப்புப்பற்றி வாகனமும் பெற் றோல் நிலையமும் தீப்பிடித்தது.

இரண்டாவது சந்தர்ப்பத்தில்; ஒருவர் முகத் தில் நெருப்புக் காயம் ஏற்பட்டு கஷ்டப் பட்டார். காரணம் அவர் செல்போன் கதைத்துக் கொண்டிருந்தமையால் ஏற்பட்ட தீ விபத்தே.

மூன்றாமவர்; செல்போனை காற்சட்டைப்பை யில் வைத்திருந்தார். பெற்றோல் நிரப்பும் வேளையில் செல்போன் அழைப்பு வந்த போது தீப்பற்றி இடைப்பகுதியும், தொடைப் பகுதியும் தீக்காயங்களுக்குள்ளானது.

நீங்கள் முதலாவதாக தெரிந்திருக்க வேண் டியது 'கைத்தொலைபேசிகள் எரிபொருட் களில் நெருப்பைப் பற்றவைக்கும்' என்னும் செய்தி. கைத்தொலைபேசிகளை இயக்கும் வேளையில் (Switch on) அல்லது மணி அடிக் கும் வேளையில் தீப்பொறி தோன்றுவதற்கு தேவையான சக்தியை அது கொண்டதாயி-ருக்கும்.

கைத்தொலைபேசிகள் காருக்கு பெற்றோல் அடிக்கும் வேளையிலும், புல் வெட்டும் இயந்திரத்திற்கு (lawn mowers) எரிபொருள் நிரப்பும் வேளையிலும் பாவிக்கக் கூடாது. பொதுவாகச் சொன்னால் எளிதாக தீப்பற்றும் இரசாயனப் பதார்த்தங்கள் உள்ள இடங்க ளில் கைத்தொலைபேசிகளைப் பாவிப்பதைத் தவிர்த்துக் கொள்வதவசியம். தொகுத்துக் கூறுவதானால் நாலு நிபந்தனைகளை கடைப் பிடிப்பதவசியம். இல்லாவிடில் நாலு பேருக்கு கடமைப்படவேண்டும் - காலில்லா கட்டிலை தூக்குவதற்கு.

- எரிபொருள் நிரப்பும்போது வாகனத்தை நிறுத்திவிடவும்.
- எரிபொருள் நிரப்பும்போது புகைக்க வேண் டாம்.
- எரிபொருள் நிரப்பும்போது கைத்தொலை பேசியை வாகனத்துள் வைக்கவும், அல் லது தற்காலிகமாக நிறுத்திவிடவும்.
- எரிபொருள் நிரப்பி முடியுமுன் வாகனத்-துக்குள் ஏறிஇறங்க வேண்டாம்.



இத்தகைய தீ விபத்துகள் பற்றி ஒரு விளக் கமான அறிக்கை தயாரிக்கப்பட்டது. 150 வாகன எரிபொருள் நிலைய தீ விபத்துகளை ஆராய்ந்தார்கள். அதன் சாரம் பின்வருமாறு:

நூற்றி ஐம்பது விபத்துகளிலும் அனேகமா-னவை பெண்கள் சம்பந்தப்பட்டதாகவே இருந்தது.

அனேகமாக எல்லா விபத்துகளிலும், வாடிக் கையாளர் எரிபொருளை நிரப்ப விட்டுவிட்டு வாகனத்துக்குள் சென்று, பின்னர் எரிபொருள் நிரம்பியவுடன் திரும்பிச் சென்று குழாயில் கை வைத்தவேளை கையிலிருந்த தற்காலிக மின் சக்தியினால் இந்த தீ ஏற்பட்டுள்ளது என அவதானித்துள்ளனர். நீங்கள் அறிந்தி ருப்பீர்கள் - சில சமயங்களில் கதவுக் குமிழை கையினால் தொடும்போது மின்சாரம் பாய் வது போன்ற உணர்வினை. இத்தகைய தற்காலிக மின்சக்தியால் தான் இத் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இவ்விபத்துகளில் அனேகமானவர்கள் இரப்பர் பாதணிகளை அணிந்துள்ளனர். உடலில் ஏற்பட்ட மின் சக்தி பூமிக்குள் செல்வதை இது தடுத்துள்ளது.

அனேகமான ஆடவர்கள் குளிரைப் பொருட் படுத்தாமல் எடுத்த கருமம் முடியும் வரை வாகனத்துக்குள் செல்வதில்லை. இதனால் இத்தகை தீ விபத்து தவிர்க்கப்படுகிறது.

எரிபொருள் நிரப்பும் வேளையில் கைத் தொலைபேசிகளை ஒருபோதும் பாவிக்க வேண்டாம்.

பெற்றோல் மின் சக்தியில் எரிவதில்லை. பெற் றோல் ஆவியாகிய வாயுதான் தீப்பிடிக்கிறது என்பதை மறக்க வேண்டாம்.

29 விபத்துகளில் எரிபொருளை நிரப்புவதற்கு விட்டுவிட்டு வாகனத்துக்குள் அமர்ந்து, பின் மீண்டும் பெற்றோல் குழாயைத் தொடும் வேளையில் தான் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

எனவே, எக்காரணம் கொண்டும் எரிபொருளை நிரப்புவதற்கு விட்டுவிட்டு வாகனத்துக்குள் ஏறவேண்டாம். தவறியும் வாகனத்துக்குள் செல்லவேண்டிய அவசியம் ஏற்படின், கதவை கையால் தள்ளி மூடவும். கை கதவு இரும் புடன் தொடும்வேளை உடம்பில் உள்ள தற்காலிக மின்சக்தி வெளியேற்றப்படுகிறது.

இது மிகச் சாதாரண விடயமாகப்படினும் பின்விளைவின் கொடூரம் காரணமாகவும் குளிர்காலம் நெருங்குவதாலும் இந்த இதழில் இக் கட்டுரையை சேர்த்துள்ளேன்.

*தமிழாக்கம்: குமார் புனிதவேல்*

senthuran.punithavel@thaiveedu.com

■ ■ ■



# காற்றுவடி இயந்திரம்

வீட்டின் ஜன்னல் வழியே சூரிய ஒளி உள் வரும் போது தூசின் நடமாற்றத்தை அவதானிக்கக்கூடியதாக இருக்கும். வீட்டுக்குள் என்ன அவ்வளவு தூசியா..? வல்லுனர்களின் கணிப்பின்படி சாதாரண வீடொன்றில் ஒரு கன அடி காற்றுக்குள் 3 மில்லியன் வரையிலான தூசுத் துகள்கள் இருக்கும். அதனால்தான் வீட்டுக்குள் தூசைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகளும் அமுலில் உள்ளன.

தூசு என்பது பொதுவாக அழைக்கப்படும் சொல்லாக இருப்பினும் அது பல்வேறு வகையினதை உள்ளடக்கியதாகவே இருக்கிறது. உதாரணமாக: விறகுச் சாம்பல், சிக்கிரட் அல்லது சமையல் புகை, இறந்த தோல் கலன்கள், வளர்ப்புப் பிராணிகளின் மயிர்கள் மற்றும் இறந்த கலன்கள், மோல்ட் நுண்ணுயிர்கள், பூஞ்சணம், தாவரங்களின் பூ மற்றும் தாவர உதிர்வுகள், துணி துகள்கள் போன்ற பலவற்றை உள்ளடக்கியதாகவே தூசு காணப்படுகிறது.

பொதுவாக ஒவ்வாமை வியாதி உள்ள பலருக்கு தூசு உடல் கேடை விளைவிக்கி-றது. ஆஸ்மா, தோல்கடி, கண்கடி, தும்மல், போன்ற வியாதிகளுக்கு ஒரு காரணமாய் அமைவது மட்டுமல்லாது பக்ரீயா போன்ற நுண்ணுயிர்களின் காவிகளாய்க்கூட இவை தொழிற்படுகின்றன.

இதனால்தான் வீட்டுக்குள் காற்றை சுத்தமாகப் பேண பல வழிமுறைகள் முன்வைக்கப்படுகின்றன. பிரதான வழிமுறைகளாக

- காற்று நுண் துவாரங்கள் கொண்ட வடிக்குள்ளால் செலுத்தி வடிகட்டல்.
- காற்றில் உள்ள தூசுகளுக்கு மின்னேற்றி காந்தகவர்ச்சி மூலம் தூசுகளை கவர்தல்
- மேற்கூறிய இரண்டும் இணைந்த செயற்பாடு.

வீடுகளில் மேசைகளில் வைக்கப்படும் காற்றுவடி இயந்திரம் பொதுவாக மூன்று நிலைகளில் தங்கள் காரியங்களை புரிகின்றன. முதலில் Foamக்குள்ளால் காற்று வடிகட்டப்பட்டு அதன் பின்னர் நுண்ணுயிர்களை வடிகட்டக்கூடிய வடிக்குள்ளால் செலுத்தப்பட்டு பின்னர் காபன் வடிக்குள்ளால் செலுத்தப்பட்டு காற்றின் துர்நாற்றம், சில வாயுக்கள் மற்றும் மீறிய தூசுகள் போன்றவை அகற்றப்படுகின்றன.

சந்தையில் பல்வேறு வகையான காற்றுவடி இயந்திரங்கள் விற்பனையில் உள்ளன. இவைகளில் எது தனது தொழிலை செவ்வனவே செய்கிறதென்பது எம்முன்னுள்ள கேள்வி. பொதுவாக குறிப்பிட்ட ஒரு பொழுதில் வடியில் தங்கும் தூசின் அளவைக்கொண்டு இவ் இயந்திரங்களின் திறன் அறியப்படுகிறது. அத்தோடு எவ்வகையான தூசு வடியில் தங்கி நிற்கின்றது என்பதும் கவனத்தில் எடுக்கப்படுகிறது.

காற்றுவடியின் செயல்திறன் அதிகரிக்க வடியில் சேரும் தூசுகளும் அதிகரித்து அடைப்பு ஏற்பட வாய்ப்பு உண்டு. அதனால் அடிக்கடி இந்த வடியை மாற்றவேண்டிய தேவையும் ஏற்படுகிறது. ஆயினும் சிறந்த முறையில் வடிவமைக்கப்பட்ட காற்று வடிகள் நுண் தூசுகளை வடிகட்டக் கூடியனவாயும், தொடர்புப்பரப்பு கூடியனவாயும் இருப்பதினால் கூடியகாலம் பாவிக்கக்கூடியனவாய் உள்ளன. காந்த கவர்ச்சி முறை வடிகள் மிகச்சிறிய தூசுகளை கவர்வதினால் காற்று தடைப்படுதல் மிக அரிதாகவே நிகழ்கிறது. ஆயினும் தூசுத்துகள்கள் வடியில் சேரும் போது மின்னேற்றத்தை இழக்க நேரிடுகிறது. இவ் வடிகளுக்குள்ளால் காற்றும் மிகக் குறைந்தவேகத்தில் செல்லும்போதே மிகச் சிறப்பாக பணியாற்றுகிறது.

தூசுத்துகள்களை அளப்பதற்கான அளவு கோலாக 'மக்ரோன்' அலகு பாவிக்கப்படுகிறது. ஒரு மக்ரோன் என்பது 1/25,400 அங்குலம் ஆகும். 10 மக்ரோன்களுக்கு மேல் உள்ள தூசுகளை எம்மால் பார்க்கக் கூடியதாய் இருக்கும். கூரிய பென்சிலால் இடப்படும் புள்ளியின் விட்டம் கிட்டத்தட்ட 200 மக்ரோனாய் இருக்கும். இப்பொழுது ஓரளவேணும் தூசை அடையாளங்காணக் கூடியதாய் இருக்கிறதா? பொதுவான காற்று வடிகள் கண்ணால் பார்க்கக்கூடிய தூசுகளை வடிகட்டுகின்றன. மிகத் திறனான காற்றுவடி இயந்திரங்கள் 10 மக்ரோன்களுக்கு உற்பட்ட தூசுகளையும் வடிகட்டவேண்டும்.

> "பொதுவாக ஒவ்வாமை வியாதி உள்ள பலருக்கு தூசு உடல் கேடை விளைவிக்கிறது. ஆஸ்மா, தோல்கடி, கண்கடி, தும்மல், போன்ற வியாதிகளுக்கு ஒரு காரணமாய் அமைவதுடன் பக்ரீயா போன்ற நுண்ணுயிர்களின் காவிகளாய்க் கூட இவை தொழிற்படுகின்றன."

செல்வி அதினி

### காற்றுவடி இயந்திரங்களை வாங்கும் போது கருத்தில் கொள்ள வேண்டியவை:

ASHRAE (American Society of Heating Refrigeration and Air-Conditioning Engineers) எனப்படும் அமெரிக்க பொறியாளர் நிறுவனத்தினால் வழங்கப்படும் சான்றுக் குறிப்பு நல்ல காற்றுவடி இயந்தித்தை வாங்குவதற்கு ஏதுவாய் உள்ளது. Clean Air Delivery Rate (CADR) இச் சான்றுக் குறிப்பு, ஒரு நிமிடத்திற்கு காற்றுவடிக்குள்ளால் செலுத்தப்படும் காற்றின் கனஅளவும் அதன்போது வடிகட்டப்படும் தூசுகளின் அளவும் கவனத்தில் எடுக்கப்பட்டு வழங்கப்படுகிறது. CADR அளவு அதிகமாய் இருந்தால், குறைந்தளவு நேரத்தில் குறிப்பிட்டளவு பிரதேசத்தில் உள்ள கூடியளவு தூசு வடிகட்டப்பட்டு காற்று சுத்திகரிக்கப்படுகிறது.

AHAM - The Association of Home Appliance Manufactuers இனால் உறுதிப்படுத்தப்பட்ட காற்றுவடி இயந்திரங்கள் CADR சான்றுக் குறிப்பு தரவுகள் கொடுக்கப்பட்டிருக்கும். எனவே காற்றுவடி இயந்திரங்களை வாங்கும் போது இதை நாமும் கவனத்தில் வைத்திருத்தல் நல்லது.

selvi.a@thaiveedu.com

■ ■ ■

தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.

E-mail: info@thaiveedu.com
Fax: 416-849-0594
Tel: 416-646-3422







## Toronto




**Bedrooms- 3 Washrooms-1**

## Markham




**Bedrooms- 4 Washrooms-4**

## Toronto




**Bedrooms- 2 Washrooms-1**

## Ajax




**Bedrooms- 4 Washrooms-4**

## Brampton




**Bedrooms- 4 Washrooms-4**

## Stouffville




**Bedrooms - 4 Washrooms - 3**

## Scarborough





**Bedrooms- 2 Washrooms-2**

## Scarborough




**Commercial Unit**

## Markham




**Bedrooms- 2 Washrooms-2**

# Experienced Full Time Realtor

TOP PRODUCER 2013

NaNo COMPUTER

HOMELIFE HIGHER STANDARDS



*Homelife/Future Realty Inc., Brokerage**

205-7 Eastvale Dr., Markham ON, L3S 4N8

Bus: (905) 201-9977 Fax: (905) 201-9229

* Independently Owned and Operated.

**RAJ NADARAJAH**

Sales Representative

**Direct: 416-333-6115**

**E-mail: nanohomes@gmail.com**

# முக்கிய அறிவித்தல்

## சிறிலங்காவில் இழைக்கப்பட்ட மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்டவர்களில் நீங்களும் ஒருவரா?



### ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையம்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையத்தின் 25ஆவது அமர்வின்போது பெப்ரவரி 2002ஆம் ஆண்டிற்கும் நவம்பர் 2011ஆம் ஆண்டிற்கும் இடையில் சிறிலங்காவில் இழைக்கப்பட்ட மனித உரிமை மீறல்கள் பற்றிய பன்னாட்டு விசாரணைக் குழுவொன்றை நியமிக்க முடிவுசெய்யப்பட்டது யாவரும் அறிந்ததே.

இவ் விசாரணையின் முதற் கட்டமாக கடந்து ஆகத்து மாதம் 5ஆம் நாள் விடுக்கப்பட்ட அறிவித்தலின்படி சிறிலங்காவில் இழைக்கப்பட்ட கடுமையான, முறைகேடான மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்டவர்கள் தமது சாட்சியங்களை எழுத்து மூலம் ஒப்படைக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கனடியத் தமிழர் பேரவை சிறிலங்கா பற்றிய இந்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் (UNHCR) விசாரணைக் குழுவுக்கு தமிழ்ச் சமூகத்தினர் ஒவ்வொருவரும் தமது சாட்சியங்களை ஒப்படைக்கும்படி கேட்டுக்கொள்கின்றது.

### கடுமையான, முறைகேடான மனித உரிமை மீறல்கள் என்றால் என்ன?

மனித உரிமை மீறல்களின் வரையறையை ஒரு சிறு வட்டத்துக்குள் கொண்டுவர முடியாவிடினும், இப் பன்னாட்டு விசாரணையின் பொருட்டு பின்வரும் மீறல்களால் நீங்களோ, நீங்கள் அறிந்தவர்களோ பாதிக்கபட்டிருப்பின் அதன் சாட்சியங்களை எழுத்து மூலம் ஒப்படைக்கலாம்:

- பொதுமக்கள் மீதான தாக்குதல்கள், குண்டு வீச்சுகள்
- உள, உடல் ரீதியான சித்திரவதை
- பாலியல் துன்புறுத்தல்
- சட்டத்தை மீறிய கைதுகள், தடுத்துவைத்தல்
- சட்டத்தை மீறிய கொலைகள்
- மனிதாபிமான உதவிகளை தடைசெய்தமை
- சமய மரபுகளை பேணத் தடுத்தல், சமய ரீதியான கொடுமைகள்
- பத்திரிகையாளர்களுக்கெதிரான மனித உரிமை மீறல்கள்
- "வெள்ளைக் கொடி" நிகழ்வுகள்
- தடுப்பு முகாம்களில் ஏற்பட்ட துன்புறுத்தல்கள்
- பேச்சுரிமையை மறுத்தலும் தடுத்தலும்
- அரசியற் கொள்கைகள் தொடர்பான மீறல்கள்

சாட்சியங்களை யாரும் ஒப்படைக்கலாம். எந்தவிதமான மனித உரிமை மீறலின் சாட்சியங்களும் வலுவிற் குறைந்ததாகக் கணிக்கப்படமாட்டாது.

### சாட்சியங்களை ஒப்படைக்கும் வழிமுறைகள்

1 கனடியத் தமிழர் பேரவையின் சட்ட வல்லுனர்களின் உதவியுடன் சாட்சியங்களைச் ஒப்படைக்கலாம்.

2 ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையத்துடன் நேரடியாகச் சாட்சியங்களைச் ஒப்படைக்கலாம்.

3 கனடாவில் தமிழ் மக்கள் நலன் காக்கப் பணிபுரியும் வேறு அமைப்புகளின் உதவியுடன் சாட்சியங்களைச் ஒப்படைக்கலாம்.

**சாட்சியங்கள் ஒப்படைக்கக்கூடிய கடைசி நாள்: ஒக்டோபர் 30, 2014**

கனடியத் தமிழர் பேரவை மே 2009இல் இருந்து ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் தமிழ் மக்கள் தொடர்பான வாதங்களை முன் வைக்கும் முயற்சியில் முன்னிடத்தில் இருந்து வருகிறது. சிறிலங்காவில் நடைபெறும் மனித உரிமை மீறல்களுக்கு எதிராகக் கனடியத் தமிழர் பேரவையின் பன்னாட்டு அணி வேறு நாடுகளில் இயங்கும் பல்வேறு அமைப்புகளோடு கைகோர்த்து செயலாற்றி வருகிறது.

தயவுசெய்து இந்த விசாரணை பற்றிய செய்தியை உங்கள் நண்பர்கள், குடும்பத்தவர்கள் மற்றும் உங்களுக்குத் தெரிந்தவர்கள் எல்லோருக்கும் தெரியப்படுத்துங்கள்.

சிறிலங்காவில் அமைதி, மீளிணக்கம் மற்றும் நீதியை நோக்கிய பயணத்தில் கனடியத் தமிழர் பேரவை எடுக்கும் இந்த முக்கிய முன்னெடுப்புக்கு ஆதரவு தருமாறு அன்போடு கேட்டுக் கொள்கிறோம்.

CONGRES TAMOUL CANADIEN • CANADIAN TAMIL CONGRESS

**கனடியத் தமிழர் பேரவை**

Tel: **416-240-0078**
info@canadiantamilcongress.ca
www.canadiantamilcongress.ca

513-10 Milner Business Court
Scarborough, ON M1B 3C6

**UNHRC Contact Info:**
Email: OISL_submissions@ohchr.org
UNHRC by post:
OISL UNOG-OHCHR
8-14 Rue de la Paix
CH-1211 Geneva 10
Switzerland

# நானும் ஒரு போராளியே

வேலை அழுத்தம், அம்மாவுடன் பிரச்சினை, அடுத்த மாத வீட்டுத்தவணை, இருக்கும் ஒரு காதலியுடன் அளவளாவ நேரமில்லை, தலையைப் பித்துக்கொள்ள அருகில் இருக்கும் TIMsல் சென்று அமர்ந்தேன். Double Double சொல்ல ஆசைதான் என்றாலும், பெருத்த என் உடல் எடையைக் குறைக்கும் அதிதீவிர முயற்சியில் இருந்தவன், Green Tea வாங்கி காலியாக இருந்த ஓர் இடத்தில் அமர்ந்தேன். அருகில் இரு தமிழர்கள் மிகுந்த கவலையுடன் ஏதோ விவாதித்துக் கொண்டிருந்தார்கள்... ஏதாவது செய்தாக வேண்டும் என்று திரும்பத் திரும்ப சொல்லிக்கொண்டிருந்தார்கள். நிச்சயமாகத் தெரிந்தது இலங்கைப் பிரச்சினை பற்றித்தான் விவாதித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று, ஏற்கனவே இருந்த கடுப்பில், என்னத்தை கிழிக்கப் போகிறீர்கள் என்று சற்று எரிச்சலுடன் கேட்டேன் அவர்களிடம்... அமைதியாகப் பார்த்த ஒருவர் மெதுவாக என்னிடம் திருப்பிக் கேட்டார் இதுவரை நீர் என்னத்தைக் கிழித்தீர் என்று... நிதி கொடுத்ததில் இருந்து கடுங் குளிரில் கொடி பிடித்தது வரை மூச்சு விடாமல் நான் சொல்வதைக் கேட்டவர், மெதுவாய்த் திருப்பிக் கேட்டார், கடைசி ஐந்து வருடங்கள் என்னதை கிழித்தீர்கள்... என்று.

என்ன செய்து என்ன நடந்துவிடப் போகிறது... எல்லாமும் தான் முடிந்து விட்டதே என்றேன் இயலாமையுடன்... ஏதும் செய்யாமல் இருப்பதை விட ஏதேனும் செய்யலாமே என்றார் அமைதியாக... அவரது அமைதி என்னையும் அமைதியடைய வைத்ததா அல்லது என் இயலாமையா எனத் தெரியவில்லை,

அவர் முகத்தைப் பார்த்தேன், எந்தச் சலனமும் இல்லாமல்...

‘இலங்கை மீதான மனித உரிமை ஆணையகத்தின் விசாரணை பற்றி ஏதேனும் கேள்விப்பட்டீரா’ என்றார்... அமைதியாய் மௌனம் காத்தேன்... அவரே தொடர்ந்தார், OISL என்பது ஐக்கிய நாடுகளின் மனித உரிமைக்கான உயர் ஆணையகத்தின் விசாரணை ஆகும் என்றார்.

முதலில் அமைத்த ஆணையகங்கள் எல்லாம் என்ன ஆயிற்று என்றேன் கோபத்துடன்.

தம்பி, முதலில் அமைத்த ஆணையகத்தின் முடிவின் வெளிப்பாடே இந்த ஆணையகம் ஆகும். மேலும் தொடர்ச்சியான இந்தச் செயல்பாட்டின் மூலமே நாம் அங்கு நடந்த போர்க் குற்றங்களை வெளிக்கொண்டுவர முடியும் என்றார்.

மனம் சற்றே தடுமாறியது... இந்த ஆணையகத்தால் என்ன பயன், அவர்களால் என்னத்தைத் தான் செய்ய முடியும் என்றேன்.

சற்றே பெருமூச்சு விட்ட அவரது நண்பர் தொடர்ந்தார்... 2014 மார்ச் ஐக்கிய நாடுகளின் மனிதவுரிமை பேரவையின் இலங்கை தொடர்பான நிறைவேற்றப்பட்ட ‘நல்லிணக்க பொறுப்புக்கூறும் தன்மையும் மேம்படுத்தவும் இலங்கையின் மனித உரிமைகளும்’ எனும் தீர்மானத்தின்படி இப்பேரவை ஐ.நா. மனித உரிமை ஆணையாளரிடம் ‘கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை (LLRC)’ கவனம் செலுத்திய காலத்தை கருத்தில் வைத்து இலங்கையில் இடம் பெற்றதாக கூறப்படும் அனைத்து மனித உரிமைகள் மீறல்கள் பற்றிய ஓர் அகல்வான விரிவான விசாரணையை மேற்கொண்டு இடம்பெற்றதாக கூறப்படும் மனிதவுரிமை மீறல்கள் பற்றிய தெளிவான நிகழ்வுகளையும் அதற்கான சந்தர்ப்பங்களையும், தண்டனைகளில் இருந்து தப்பிக் கொள்ளலாம் என்னும் ரீதியில் புரியப்பட்ட குற்றங்களையும், பொறுப்புக்கூறுவதற்கான உத்திரவாதத்தையும், இவற்றிற்கு உதவியாக அனைத்து பொருத்தமான நிபுணர்களின் உதவியையும், ஐ.நா.வில் இயங்குகின்ற மனித உரிமைக்கான சிறப்பு உறுப்பினர்களின் பங்களிப்பையும் பெற்றுக் கொள்ளும் படியாகவும் வேண்டி ஆணை பிறப்பித்தது, என்றார் முச்சு விடாமல்...

வெள்ளையர்கள் பேசும் ஆங்கிலம் கூட சில சமயங்களில் புரிந்துவிடுகிறது ஆனால் இவர்களின் தமிழ்தான் புரியவேயில்லை... மண்டையை மட்டும் ஆட்டி வைத்தேன்.

> **இது எம் கண்முன்னே நடந்த திட்டமிட்ட ஓர் அரச பயங்கரவாதம் அல்லவா. சாவுக்கு நீதி கிடைக்குமோ இல்லையோ, நிச்சயமாக குற்றவாளிகளை இவ்வுலகிற்கு அடையாளம் காட்ட வேண்டியது என் கடமையல்லவா?**

ஒரு நிமிட மௌனத்தின் பின் நானே கேட்டேன், விசாரணையின் கால வரையறை என்ன என்று.

விசாரணை கால வரையறை பெப்ரவரி 21, 2002 முதல் நவம்பர் 15, 2011 வரை இருப்பினும், இவ்விசாரணைக்கு இக்காலப்பகுதியை மட்டும் வரையறுத்தும் இவைகளை சிறப்பாக புரிந்துகொள்ள அவசியம் இருப்பின் அவைக்கு அப்பால் இடம்பெற்ற மனிதவுரிமை மீறல்களையும் அதற்கான தகவல்களையும் பயன்படுத்த முடியும் என்றார்.

இந்த ஆணையகத்தின் சட்ட வரையறை என்ன என்றேன்?

ஐ.நா மனித உரிமை ஆணையகத்தின் இலங்கைக்கான விசாரணையில், போரில் ஈடுபட்ட இரு பகுதியினரும் இழைத்ததாக கூறப்படும் மோசமான மனித உரிமை அத்துமீறல்களையும், மோசடிகளையும் அது தொடர்பாக இழைக்கப்பட்ட குற்றங்களையும் விசாரணை செய்ய பணிக்கின்றது, என்றார்.

ஏதும் செய்யாமல் இருந்து விமர்சனம் செய்வதைவிட ஏதேனும் செய்யலாம் என முடிவெடுத்தேன்! என்னால் என்னதான் செய்ய முடியும் எனக்கேட்டேன்!

விசாரணைக் குழுவிற்கு யாரும் முறையீட்டை சமர்ப்பிக்கலாம் என்றார்.

எப்படி என்றேன்!

முறைப்பாட்டாளரின் பெயர், தொடர்புகொள்வதற்கான விபரங்களோடு முறையீடுகள் எழுத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

முறையீடுகள் முழுமையாகவோ, பகுதியாகவோ இரகசியம் பேணப்படவேண்டுமாயின், அவை பற்றி தெரிவிக்கவேண்டும்.

முறையீட்டை மனிதவுரிமை ஆணையகம் பெற்றுக்கொண்டதும், முறைப்பாடு தெரிவித்தவரின் தனிப்பட்ட தகவல், அதில் அடங்கிய மற்றைய பெயர் விபரங்கள் அனைத்தையும் பற்றி இரகசியம் பேணப்படுவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

முறையீடு தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளில் சமர்ப்பிக்கப்படலாம்.

முறையீடு 10 பக்கங்களுக்கு மேற்பட முடியாது.

இவ்விசாரணைக்கு மேலதிக தகவல் தேவைப்படின் முறையீட்டாளருடன் தொடர்பை மேற்கொள்வார்கள்.

ஒளிப்பதிவு, ஒலிப்பதிவு அல்லது புகைப்பட ஆவணங்கள் மின்னஞ்சல் மூலம் சமர்ப்பிக்க முடியாது. இருப்பினும் விசாரணைக்குழுவோடு தொடர்பு கொண்டு இவற்றை அனுப்பிவைக்க ஆவனை செய்யலாம்.

எனவே உங்கள் ஆணையகத்திடம் முறைப்பாட்டை ... 

னைப் பற்றிய முறைப்பாட்டை ஆணையகத்திடம் சமர்ப்பிக்கலாம் என முடிவெடுத்தேன்!

ஆணையகத்தின் மின்னஞ்சல்: (OISL_submissions@ohchr.org),

அவர்களின் முகவரி:
OISL, UNOGOHCHR
8-14 Rue de la Paix
CH-1211 Geneva 10
Switzerand.

வாங்கிக் கொண்டு வெளியே வந்தேன்!

வீடு சென்றவுடன் முதல் வேலையாக ஓர் முறைப்பாட்டை செய்துவிடவேண்டும் என எண்ணியவாறு நடந்தேன்.

Green Tea குடித்து முடியவும், அவர்கள் எனக்கான விளக்கத்தை முடிக்கவும் சரியாக இருந்தது!

எனது தலைவலிகளை சற்றே தள்ளி வைத்து, ஆமியின் செல்லடியில் இறந்த என் நண்பன் என் நண்பனுடனான என் பால்ய கால நினைவுகள், என் கண் முன்னே அவன் இரானுவத்தின் செல்லுக்கு பலியானதும் நினைவில் நிழலாடியது. தூரத்தில் வரும் பாரஊர்தியின் இரைச்சலை இலங்கையின் போர் விமானத்தின் இரைச்சல் போலவே மனம் எண்ணியது. அவன் மரணத்தின் பின் பல்வேறு இடங்களுக்கு இடம் பெயர்ந்து கடைசியில் பாதுகாப்பான நாடொன்றில் குடிபெயர்ந்தாலும் சில நடுக்கங்கள் என்னை மீறி வந்து போயின! எந்த ஒரு முறைப்பாடும் என் நண்பனின் உயிரைத் திருப்பித் தரப்போவதில்லை. எனினும், அவன் சாவிற்கோர் காரணம் வேண்டாமா? நீதிக்கான கதவுகள் திறக்கும் தருவாயில் எப்போதும் போல் எதுவும் செய்யாமல் விமர்சனங்களையும், குறைகளையும் சொல்வது அவனை மீண்டும் மீண்டும் கொல்வதற்கு ஒப்பாகாதா?

இது என் கண்முன்னே நடந்தது திட்டமிட்ட ஓர் அரச பயங்கரவாதம் அல்லவா? அவன் சாவுக்கு நீதி கிடைக்குமோ இல்லையோ, நிச்சயமாக குற்றவாளிகளை இவ்வுலகிற்கு நான் அடையாளம் காட்ட வேண்டியது என் கடமையல்லவா?

என் நடையின் வேகம் கூடியது, மனமும் சற்றே தெளிவுபெற ஓர் முடிவிற்கு வந்தேன்! என்ன நடந்தாலும் சரி, முதல் வேலையாக ஓர் முறைப்பாட்டை ஐ.நா விசாரணைக் குழுவிற்கு சமர்ப்பிக்க வேண்டும். அடுத்து என் சக நண்பர்கள் மற்றும் உறவினர்களிடம் இது பற்றி கலந்துரையாடி அவர்களின் முறைப்பாடையும் ஆணையகத்திடம் சமர்ப்பிக்க தூண்ட வேண்டும்!

குனிந்த தலை சற்றே நிமிர்ந்தது, நடையின் வேகம் இன்னும் கூடியது...

இப்போது நானும் ஒரு போராளியே!

■ ■ ■

## மனித உரிமைக்கான விசாரணையில் (OISL) நீங்களும் துணை நிற்கலாம்

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைக்கான ஆணையத்தின் (OHCHR)
சிறிலங்காவின் மனித உரிமைக்கான விசாரணையில் (OISL) நீங்களும் துணை நிற்கலாம்.

**21 பெப்ரவரி 2002 தொடக்கம் 15 நவம்பர் 2011 வரையிலான காலப்பகுதியில்**

**உங்கள் உறவுகள் கொலை செய்யப்பட்டார்களா?**
**(செல், விமானத் தாக்குதல் உட்பட)**
**காணாமல் போனார்களா? காணாமல் போகடிக்கப்பட்டார்களா?**
**சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டார்களா?**
**பெண்கள் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டார்களா?**
**சிறையில், தடுப்பு முகாம்களில் அடைக்கப்பட்டார்களா?**
**கருத்துச்சுதந்திரம், மத-மொழி சுதந்திரம் அற்றவர்களாக வாழ்ந்தார்களா?**

உங்கள் முறைப்பாடுகளை தெளிவாகவும் விபரமாகவும் சுருக்கமாகவும் அனுப்பிவைக்க நாம் துணை செய்வோம்.

**போரால் பாதிக்கப்பட்டோருக்கும் மனித உரிமைகளுக்குமான நடுவத்துடன் (CWVHR) தொடர்புகொள்ள**

**info@cwvhr.org, Tel: 416 628 1408,**

விசாரணை பற்றி மேலும் தமிழிலும் ஆங்கிலத்திலும் அறிந்துகொள்ள
**CWVHR.org**

எமது மக்களுக்கு நீதி கிடைக்க, எம் உறவுகள் உரிமையோடு வாழ வேண்டுமெனின் இம் முயற்சி அவசியம். இம் மனித உரிமை மீறல்கள் பற்றி, மனித உரிமை விசாரணைக்குழுவுக்கு நீங்கள் சமர்ப்பிக்க வேண்டிய இறுதி நாள்

**30 ஒக்டோபர் 2014**

மின்னஞ்சல் முகவரி (E- mail): oisl_submissions@ohchr.org
அஞ்சலில் அனுப்ப: OISL
(Postal address) UNOG-OHCHR
8-14 Rue de la Paix
CH-1211 Geneva 10
Switzerland

# குடும்ப வன்முறையும் குழந்தைகளைத் துன்புறுத்துதலும்



த. சிவபாலு

குழந்தைகள் துன்புறுத்தப்படுதல் அல்லது குடும்ப வன்முறைகள் என்பன உடல்ரீதியாகவும், உளரீதியாகவும் குழந்தைகளையும் குடும்ப உறுப்பினர்களையும் பாதிக்கும் செயல்களாகும். குழந்தைகள் உள்ளம் பூப்போன்றது என்பார்கள். ஆதற்கு மேலாக வள்ளுவர் சொன்ன விருந்தைப் போன்றது ஏசாமல் பேசாமல் பார்வையாலேயே மனத்தை நேகவைக்கமுடியும் என்றார் வள்ளுவர்.

*மோப்பக் குழையும் அனிச்சம் முகம் திரிந்து*
*நோக்கக் குழையும் விருந்து.*


என்பதனால் மனத்தைப் பாதிக்கும் செயல் என்பது பல்வேறு வகையினவாக அமைகின்றன. குழந்தைப் பிள்ளைகளின் மனதில் ஏற்படும் வடு ஒரு போதுமே அழிந்துவிடாத 'சிலைமேல் எழுத்தாகப்' பதிந்துவிடுகின்றது. குழந்தைகளைத் துன்புறுத்தல் என்பது உதாசீனம்செய்தல், மதிக்காதுவிடுதல், சொல்வதைக் கேட்டகாதுவிடுதல், தட்டிக் கழித்தல், கட்டியணைத்தல், மெய்தீண்டல், பாகுபாடு காட்டுதல் போன்றன அனைத்தும் குழந்தைகளின் மனத்தைப்பாதிக்கும் ஏதுக்களாகும். இத்தகைய நடத்தைகளை மனதில் பதியவிடாது அகற்றுவதற்கு பிள்ளைகளுக்கு தேவையான ஆலோசனைகள், புத்திமதிகள், அன்புகாட்டல், அரவணைத்தல், உற்சாகப்படுத்தல், ஊக்கப்படுத்தல் போன்ற பராமரிப்பு, உபசரிப்பு என்பனவற்றால் நிவாரணம் காணமுடியும். வளர்ந்த பிள்ளைகளே நெறி தவறாது போவதற்கு அவர்கள் இளமைக்காலத்தில் பாதிக்கபடுவதே என்பது ஆய்வுகளின் முடிவாக இருக்கின்றது. குடும்ப உறுப்பினர்கள் அபின், கஞ்சா, போன்ற போதைப் பொருட்களையும் உணர்ச்சியைத் தூண்டிவிடும் மருந்துகளையும் பாவிப்ப குடும்ப வன்முறைக்கும் குழந்தைகளைத் துன்புறுத்தவும் காரணமாகின்றது.

உடலியல் பாதிப்பை ஏற்படுத்தும் காரணிகளாக குட்டுதல், குத்துதல், தள்ளுதல், உதைத்தல், மருந்துகளை கொடுக்காது விடுதல், சக்கரநாற்காலியைத் தராது தடுத்தல், உணவு, நீராகரம் என்பன போன்றனவும், மிரட்டுதல், பயமுறுத்துதல், அசையாது நிற்கவைத்தல், மூலையில் இருத்துதல், சுடுதல், கூரிய ஆயுதத்தல் குத்துதல், அடிப்பதாகப் பயமுறுத்துதல், மிரட்டுதல், ஏமாற்றுதல் என்பன உட்பட பலவழிகளிலும் பிள்ளைகளை பாதிப்பதாக அமையும் செயல்களைக் குறிப்பிடலாம்.

அமெரிக்காவின் 'தேசிய பிள்ளைகளுக்குத் தீங்கிளைத்தல் புள்ளிவிபரத்தின்' 2009 அறிக்கையின்படி ஆண்டுக்கு 3.3 மில்லியன் குழந்தைகள் துன்புறித்தப்பட்டுள்ளனர் அல்லது கவனிக்கப்படாது விடப்பட்டுள்ளனர் என இவ்வறிக்கை காட்டுகின்றது. ஆனால் 6 மில்லியன் குழந்தைகள் பாதிக்கப்பட்டிருக்கலாம் னெவும் ஒரு கணிப்பீடு உள்ளது.

2009ஆம் ஆண்டின் புள்ளிவிபர அறிக்கையின் படி 1995 தொடக்கம் 2007 வரை கவனிப்பின்மை அல்லது துன்புறுத்துதல் என்பனவற்றால் நாளொன்றிற்கு இறந்துள்ள பிள்ளைகளின் விபரத்தை மேலே உள்ள வைரைபு எடுத்துக்காட்டுகின்றது. 1998ல் 3.13 ஆகக் குறைந்திருந்த துன்புறுத்தலால் இறக்கும் பிள்ளைகளின் தொகை 4.82 ஆக அதிகரித்துள்ளது.

தாயின் வயிற்றில் இருக்கும் குழந்தை அங்கேயே கற்கத் தொடங்குகின்றது என்பது மருத்துவவியலாளர்கள், உளவியலாளர்களின் கணிப்பு. தாயின் ஆரோக்கிய வாழ்வு, அவரது பழக்க வழக்கங்கள், மதுப்பழக்கம், புகை பிடித்தல் போன்றன மனவெழுச்சி நிலைகள் போன்றன குழந்தைகளின் உடலிலும், உளத்திலும் தாக்கம் விளைவிக்கின்றன என்பது நிரூபணமான உண்மையாகும். தாமதமாகக் கல்வி கற்கின்ற பிள்ளைகள் அல்லது மூளை வளர்ச்சி குன்றிய பிள்ளைகள் எனப்படுவோரில்




*தாயின் ஆரோக்கிய வாழ்வு,*
*அவரது பழக்கவழக்கங்கள், மதுப்பழக்கம்,*
*புகை பிடித்தல் போன்றன மனவெழுச்சி நிலைகள்*
*கருவிலுள்ள குழந்தைகளின்*
*உடலிலும், உளத்திலும் தாக்கத்தை*
*விளைவிக்கின்றன.*

பலர், தாய்மார் குழந்தைகளை வயிற்றில் வைத்திருக்கும் போது ஏற்படும் மனத்தாக்கங்கள், ஏக்கங்கள், இழப்புக்களால் பாதிக்கப்படுவதினால் இடம்பெறுகின்றன அல்லது அவர்களது மதுப்பழக்கம், புகைபிடித்தல் போன்றனவும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. கற்பமுற்ற தாய்மாருக்கு 'வளைகாப்பு' விழா எடுத்து அணிந்து அவரை மகிழ வைக்கும் ஒரு வைபவம் தமிழ் மக்களிடையே பண்டைக்காலத்திலிருந்தே பின்பற்றப்பட்டு வந்துள்ளமைக்கும் குழந்தை உளவியலுக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளமையைக் காட்ட முடிகின்றது. தாய் மகிழ்வாக இருப்பதனால் பிள்ளையின் உளவளர்ச்சியும் நேர்த்தியானதாக இருக்கும் என்பதோடு மட்டுமலலாது வளையல் ஓசை கருவில் உள்ள குழந்தைக்கு இன்பக்கிளர்ச்சியை ஏற்படுத்துகின்றது என்பதும் அறியப்பட்ட உண்மையாகும். எனவே குழந்தை கருவுற்றதிலிருந்தே பேணி வளர்க்க வேண்டியது முக்கியமானதாகும். தாய்மார் தமது வயிற்றில் இருக்கும் குழந்தைக்காக நல்ல உணவுகளை உண்பது மட்டுமலலாது மன மகிழ்ச்சிதரும் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வைப்பதோடு அதிர்ச்சிதரும் செய்திகளையும் அவர்கள் கேட்டுத் துன்மடையாமலும் இருத்தல் குழந்தையின் உளவிருத்திக்கு மிக மிக முக்கியமானதாகும்.

குழந்தை ஒன்று, தான் பிறந்த உடனேயே யாரும் சொல்லித்தராமலே தானாகவே சுவாசித்து தனது சுவாசப்பையை நிறைத்துக் கொள்கின்றது. அதன் பின்னர் அழவும் தொடங்ககின்றது. குழந்தையின் அடிப்படை ஆழுமையின் தன்மை அல்லது வடிவம் அதன் ஆரம்ப ஆண்டுகளைப் பொறுத்ததாக அமைகின்றது. அதாவது குழந்தை மற்றவர்கள் மீது கொண்டுள்ள நம்பிக்கை அல்லது சந்தேகம், தனது தகைமையைப் பற்றி உணரவும் மூளையின் தொழிற்பாட்டுத் தரத்தின் கொள்ளவு என்பனவற்றைப் பொறுத்ததாகும். சுவாசித்தல், தொட்டு உணர்தல், பார்த்து அறிந்துகொள்ளுதல், உண்ணுதல், சுவையறிதல் என்பனவற்றைக் குழந்தை யாரும் சொல்லித்தராமல் தானாகவே கற்றுக்கொள்கின்றது.


"மனித வாழ்வில் மூளை அணுக்களுக்கிடையேயான தொடர்புகளின் மிக நெருங்கிய தொகுதி மிக உச்சக்கட்டமான வளர்வினை பிறந்த முதலாவது மாதத்தில் கொண்டுள்ளது. அதாவது வளர்ந்தவர்களின் சராசரி மூளைத் தொகுதியின் வளர்விலும் பார்க்க மிகக்கூடதலான அளவு முதல் இரண்டு ஆண்டுகளிலுமே அதாவது மனித வாழ்வின் காலத்தில் அண்ணளவாக 50 விழுக்காடுகள் வரையான வளர்ச்சியினை அடைகின்றது. அது இரண்டு வயதிற்கும் பதினாறு வயதிற்கும் இடையில் மூளை வளர்ச்சிப்பாங்கு குறைவடைந்து செல்கின்றது. அதன்பின்னர் 72 வயது வரைக்கும் ஒரே சீரானதாக அமைகின்றது"என ஹவாட் காடினர் குறிப்பிட்டமையினை நாம் அவதானிக்க முடியும்.

"சில பெற்றோர், பெற்றோரின் பெற்றோர், குழந்தைப் பராமரிப்பாளர்கள், ஏன் சில விளையாட்டுப் பொம்மை உற்பத்தியாளர்களின் நம்பிக்கைக்கு மாறாக பராமரிப்பாளர் அல்லது பெற்றோரின் தனித்துவ தொடர்புகள் குழந்தைகளின் உள விருத்திக்கு முக்கிய பங்களிக்கின்றது. உணவளித்தல், நீராட்டுதல், உடைமாற்றுதல் போன்ற நேரங்களில் பெற்றோர் அல்லது பராமரிப்பாளர்கள் குழந்தைகளுடன் தொடர்ச்சியான புறத் தூண்டிகளைச் செய்கின்றனர். குழந்தையுடன் கதைத்தல் விளையாடுதல் போன்றவற்றால் பொருட்களுக்கும், மக்களுக்குமிடையேயான தொடர்புகளை தெளிய வைக்கிறார்கள். இவை இயல்பாகவே பிள்ளைகளின் உளத்தினை யாரும் அறியாத வகையில் விருத்தி செய்கின்றது" என்பது உஷ்கிறிஸ் (1984) என்பவரது ஆய்வின் முடிவாகும். மிகத் துரிதமாகவும் இடைவெளியற்றதாகவும் விருத்தியடையும் உளத்திற்குத் தீனிபோட்டு வளர்ச்சியடையச் செய்வது யார்? என்னும் கேள்வி எழுகின்றது. பெரும்பாலும் பெற்றோருடன், அல்லது பராமரிப்பாளருடன் பொழுதைக் கழிக்கும் குழந்தையின் அறிவுப்பசிக்கு தங்களை அறியாமலே உணவளிப்பவர்கள் பெற்றோர்களே. பெரும்பாலான பெற்றோர்கள் வேலைக்குச் செல்வதால் சில வேளைகளில் முதியோர்களான பெற்றோரின் பெற்றோர் பிள்ளைகளைப் பராமரிக்கின்ற நிலை காணப்படுகின்றது. அல்லது பராமரிப்பாளர் ஒருவரை நியமித்து அல்லது பராமரிப்பு நிலையத்தில் குழந்தையை ஒப்படைத்துவிட்டுச் செல்லுகின்ற நிலைமையையும் காண்கின்றோம். இப்பருவத்தில் உள்ள குழந்தையின் உளவியற் தேவைகள் என்ன என்பதனை அறியாவிட்டாலும் அவற்றை ஈடுசெய்யும் வகையில் பெற்றோர் குழந்தையின் மீது பாசம் சொரிந்து அளவளாவி உறவாடவேண்டிய கடப்பாடு உடையவர்கள் என்பதனை மறுக்கமுடியாது. ஆனால் பெற்றோர்களின் வேலைப்பழுக்காரணமாக குழந்தைகளுடன் நேரத்தைக் கழிக்கின்ற தன்மை மிக அரிதாகக் காணப்படுவதனையும் மறுப்பதற்கில்லை. தாயைக் கண்டால் பயந்து வீரிட்டு அழும் குழந்தைகள், தந்தையைக் கண்டால் அழும் குழந்தைகள், சில நிறங்களைக் கண்டால் அல்லது சில பொருட்களைக் கண்டால் அல்லது அந்நியரைக்கண்டால், மீசை, தாடியுடன் வருபவர்களைக் கண்டால் அழும் குழந்தைகளைப் பற்றி நாம் அறிந்திருக்கின்றோம். இவற்றின் காரணம் என்ன? யாரும் குழந்தைக்கு இவற்றைச் சொல்லிக் கொடுக்காவிட்டாலும் அவர்கள் அழுவதற்குக் காரணம் என்ன? தந்தையின் முகமோ தாயின் முகமோ பரிட்சயம் இல்லாத குழந்தை அழுவது இயல்பே. அதற்கு யார் காரணம்? குழந்தையா? அல்லது பெற்றோரா?

இவற்றையெல்லாம் அடியொட்டியதாக இவற்றிற்கு மகுடம் வைத்தாற்போன்றதான பாரிய தவறுகள் இன்று குழந்தைகளுக்கு இழைக்கப்படுவதினை நாம் நாளாந்தம் எமது சுற்றாடலிலும், உலகின் பலபாகங்களிலும் இடம்பெறும் நிகழ்வுகளை ஊடகங்கள் படம் பிடித்துக் காட்டுகின்றன. குழந்தைகளைப் பெற்றுவிட்டால் மட்டும் போதாது அவர்களை நன்கு பராமரிக்கவும் தெரிந்துகொள்வும் வேண்டும். இளம் பராயத்தில் அவர்களுக்கு

தொடர்தல் 50ம் பக்கம்

கனடிய தமிழ் வழக்கறிஞர்



The Law Office of
Raphael Maharaja
Barrister & Solicitor

Tel: 416-847-7077
416-847-7093 (Injury Claims)
Fax: 416-847-7088

GTA SQUARE
5215 Finch Ave. East, Unit 219
Toronto, Ontario, M1S 0C2 (Middlefield & Finch)

www.maharajalaw.com

# சக்தி என்றால் காப்புறுதி



காப்புறுதி துறையில்
'32' வருட முழுநேர
உன்னதமான, நெறியான சேவை

'சகல காப்புறுதி நிறுவன பிரதிநிதி'

- இதுவரை 11,000 இற்கு மேற்பட்ட திருப்திகரமான வாடிக்கையாளர்கள்.
- 250 துரித காப்புறுதி இழப்பீடுகள்.
- ஏறத்தாழ 50 நிரந்தர, பகுதி ஊன இழப்பீடுகள்.
- பாரபட்சமின்றி எந்த நிறுவனத் திட்டமாக இருப்பினும் தெளிவான, துல்லியமான, இலகுவில் கிரகிக்கும் வண்ணம், பொறுமையான விளக்கம்.
- பல்வேறு நிறுவனங்கள் மூலம் சிறப்பு விருதுகள் பெற்ற பெருமை.
- எவ்வித வருத்தங்கள் இருப்பினும் அதற்கேற்ப தகுந்த காப்புறுதி திட்டங்கள் அளிக்கும் திறமை.
- உங்கள் காப்புறுதி மனுப்பத்திரம் ஏதாவது நிறுவனம் மூலம் நிராகரிக்கப் பட்டாலும் தகுந்த காப்புறுதி திட்டம், நிறுவனங்களின் நிபந்தனைக்கு அமைய நிச்சயமாக, உறுதியாகக் கொடுக்கப்படும்.
- உடனே அமுலுக்கு கொண்டுவரும் மருத்துவ ரீதியின்றி ஆயுள்காப்புறுதி.

## மருத்துவ ரீதியின்றி ஆயுள் காப்புறுதி

- 85 வயதிற்குட்பட்ட எவரும் **$600,000** வரை மனுச்செய்யலாம்.
- சலரோகம், சலரோக தடுப்பூசி, மாரடைப்பு, இரத்த அழுத்தம் (**BLOOD PRESSURE**), கொழுப்பு சத்து கூடியுள்ளவர்கள் (**HIGH CHOLESTEROL**).
- பகுதி ஊனம், நிரந்தர ஊனம் உள்ளோர்.
- மற்ற காப்புறுதி நிறுவனங்களினால் நிராகரிக்கப்பட்டோர்.
- நிறை கூடியுள்ளோர் (**OVER WEIGHT**)
- அதிகூடியதான கை கால் வலி, மூட்டு வலியுள்ளோர்.

உங்கள் வருத்தங்களை பொறுத்து, நிலவரத்தை பொறுத்து தகுந்த காப்புறுதி திட்டத்தை நிச்சயமாக அளிக்க நான் கடமைப்பட்டுள்ளேன்.

**ஒருவரும் நிராகரிக்கப்படமாட்டார்கள்.**

# சக்திவேல்

**416.706.3530, 905.763.8912**

Fax: 905 428 9307 Email: george14@sympatico.ca

மன்னிக்கவும்!

வாகனக் காப்புறுதி (Car Insurance), தீ காப்புறுதி (Fire Insurance) செய்வதில்லை!



Toronto District School Board

**Toronto District School Board**
**International Languages-Elementary/African Heritage Programs**

# ரொரான்ரோ கல்விச்சபை நடத்தும் தமிழ் வகுப்புகள் ஆரம்பமாகின்றன.

ரொரான்ரோ கல்விச்சபை ஆண்டுதோறும் நடத்தும் தமிழ் வகுப்புகள் செப்ரெம்பர் மாதம் ஆரம்பமாகின்றன. செப்ரெம்பர் 2ம் வாரத்தில் பதிவுகளும் 3ம் வாரத்தில் வகுப்புகளும் நடைபெறவுள்ளன.


கற்பித்தலுக்கான பாடநூல்கள், வள நூல்கள் உட்பட அனைத்து கற்றல் பொருட்களும் (pen, pencil, note books... ) மாணவருக்கு வழங்கப்படவுள்ளன. ஆண்டொன்றிற்கான கற்றல் பொருட்களுக்குரிய கட்டணம் 20 டொலர்கள் மட்டுமே.

இலவசமாக அரசால் நடத்தப்படும் இவ்வகுப்புகள் பயிற்சியும் அனுபவமும் கொண்ட ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகின்றன.

உங்கள் பிள்ளைகள் பயிலும் நாளாந்தப் பாடசாலையில் கூடுதல் தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

வகுப்புகள் நடைபெறும் இடங்கள், காலங்கள் என்பவற்றைத் தெரிந்துகொள்ள அழையுங்கள்,

416 254 6868




**Diploma Courses**
- Office Administration - 24 weeks
- Accounting and payroll - 24 weeks
- Computerized Accounting - 42 weeks

**Certificate Programs**

**Maintanance/Electrical**
- Emerson Control Technique
- Proface-HMI
- RockWell Automation
- PLCs - AllenBradly, Omron, Seimens,and Panasonic

**CAD/CAM Technology**
- Auto CAD
- SolidWorks
- MasterCAM X6
- MicroStation
- Blue Print Reading
- Inventor

**Multi-Media**
- Basic Film Making & Camera
- Web Design
- Video Editing
- PhotoShop
- Illustrator
- QuarkXpress
- 3D ANIMATION

**Steel Detailing using TEKLA**

**Electrical Pre Exam Course (309A)**

**Bank Teller Course**
**Cashier Course**
**Income Tax Course**

**Computer Technology**
- PC technician (A+)
- Programs - C++, Visual Basic, Java
- SQL Database
- Web Development
  - HTML, CSS, JAVASCRIPT
- LINUX systems

**Accounting Softwares**
- Quick Books
- Simply Accounting
- Accpac
- MS Office

**Social Media**
- Facebook, YouTube, LinkedIn, Twitter

(Certificate Courses are taught individually and each courses less than 40hrs)

**EI /Laid off , Second Career Funding Which Covers Tuition , Living Expenses and Transportation up to $ 28000 (Those who eligible)**

PROUD MEMBER OF ONTARIO ASSOCIATION OF CAREER COLLEGES
NATIONAL ASSOCIATION OF CAREER COLLEGES

**beta College**
of Business & Technology

Tel: **416.449-BETA**(2382)
**www.betacollege.ca**
info@betacollege.ca
1085 Bellamy Road, Unit 208, (Bellamy & Ellesmere),
Scarborough, ON, M1H 3C7

# குடும்ப வன்முறை...

48ம் பக்கத் தொடர்ச்சி...

எந்தவித தீங்கும் இழைக்கப்படாது செம்மையான முறையில் வளர்த்தெடுக்கப்படல் வேண்டும். ஆனால் பல பெற்றோர்கள், உறவினர்கள், அயலவர்கள், பராமரிப்பாளர்களினால் பிள்ளைகளுக்குப் பலவிதமான ஊறுகள், இடைஞ்சல்கள், தவறுகள் இழைக்கப்படுவதோடு அவர்களுக்குத் தேவையானவற்றை உரியநேரத்தில் வழங்காது புறக்கணிக்கப்படுவதும் கண்கூடு. பிள்ளைகளுக்குத் தீங்கிழைத்தல் என்பது இன்று பற்பல நிலைகளில், பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு நோக்கங்களோடு இழைக்கப்படுவதனைக் காணமுடிகின்றது.

பிள்ளைகளுக்கு விளைக்கப்படும் அநீதிகளாகவே இவை இனங்காணப்படுகின்றது. பிள்ளைகளுக்கு இழைக்கப்படும் முறைகேடுகள், தவறுகள், உதாசீனம் செய்தல்கள் பலவிதமானவையாகக் காணப்படுகின்றது.

- தேவையானவற்றைத் தராதுவிடல் அல்லது பாராமுகமாக இருத்தல்
- தகுந்தமுறையில் பராமரிக்காது விடுதல்
- தண்டித்தல், துன்புறுத்துதல், கவனயீனமாக நடத்துதல்
- முறைகேடாக உபயோகித்தல்,
- பாலியல் ரீதியில் துன்புறுத்துதல்
- உடலியல் ரீதியில் துன்புறத்துதல்
- உளவியல் ரீதியில் துன்புறுத்துதல்
- வேலையில் ஈடுபடுத்துதல்

போன்ற இன்னோரன்ன செயல்கள் எல்லாம் குழந்தைகளுக்குத் தீங்கிழைக்கும் செயல்களாகவே கருதப்படுகின்றன. மேலை நாடுகளில் இவ்வித செயற்பாடுகள் மிகத் தீவிரமாக வளர்ந்து வருவதாக புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன. மூன்றாம் உலக நாடுகளில் இத்தகைய புள்ளி விபரங்கள் போதியளவு கிடைக்கப்பெறுவதில்லையாயினும் அங்கு அவர்களுக்கான தொல்லைகள் அதிகரித்து வந்தாலும் முறையீடு செய்யும் நிலை மிகக் குறைவாகவே உண்டு.

## தீங்கிழைத்தல், உதாசீனம் செய்தல், துன்புறுத்தல் என்றால் என்ன?

குழந்தைகளை உதாசீனம் செய்தல் அல்லது தவறாக நடத்துதல் என்னும் சொற்பதங்களை ஆங்கிலத்தில் உபயோகிக்கப்படும் ‘child abuse’ என்ற பதத்திற்கு ஓரளவு ஒத்ததாக உபயோகிக்கப் படுகின்றது. இது குழந்தைகள் அல்லது வளர்ந்த பிள்ளைகள் யாரோ ஒருவரின் பராமரிப்பில் ஒன்றில் நம்பிக்கைக்கு அல்லது தங்கியிருக்கும் நிலையில் உள்ள பெற்றோர்கள், சகோதரர்கள், ஏனைய உறவினர்கள், பராமரிப்பாளர்கள், பாதுகாவலரின் கீழ் உள்ள போது ஏற்படும் வன்முறை, அவர்களைத் தவறாக அல்லது கவனயீனமாக நடத்துதல் என்பதைக்குறிக்கும். இவ்விதமான குழந்தைகளுக்குத் தீங்கிழைக்கப்படுதல் எந்த இடத்திலும், எந்தவேளையிலும் இடம்பெறலாம், உதாரணமாக குழந்தை தனது வீட்டில் அல்லது தெரிந்த ஒருவரின் வீட்டில் இருக்கும் வேளையில் இடம்பெறலாம்.

குழந்தைகளுக்குத் தீங்கிழைத்தல் வித்தியாசமான தன்மைகளில் இடம்பெறுகின்றன. ஒரு குழந்தை ஒன்றுக்கு மேற்பட்ட முறைகளில் தீங்கிழைக்கப்படலாம். இவை:

- உடலியல் தீங்கிழைப்பு,
- பாலியல் தீங்கிழைப்பும், தன்னலத்திற்காகப் பயன்படுத்துதலும்,
- தொடர்ச்சியான பாரதூரமான கவனயீனம்,
- உணர்ச்சிக்கு அடிமையாதல் (தன்னிலை இழப்பதால்)

போன்றவற்றினால் குழந்தைகள் தீங்கிழைக்கப்படுகின்றார்கள். இவ்வித தன்மைகள் ஒரு தடவையோ அல்லது தொடர்ந்து பல தடவைகளோ சிற்சிலவேளைகளிலோ அல்லது அடிக்கடியோ இடம் பெறுவதினை அவதானிக்கலாம்.

தொடரும்...


*sivapalu.t@thaiveedu.com*

■ ■ ■

**ATTIC INSULATION**

கோடை காலத்தில் குளிராக்கும் செலவினை குறைக்கவும்
குளிர் காலத்தில் வெப்பமாக்கும் செலவினை குறைக்கவும்
கூரை உக்குதல், பூஞ்சணம் பிடித்தல் போன்றவற்றை தடுக்கவும்
பரண் (ATTIC) உள்ளீடு செய்திடுங்கள்!!!

**SAVE** Heating & Cooling Costs
**PREVENT** Roof Rot & Mold
Do Your Attic Insulation!!!



**We also do Insulation Removal**



Spray Foam Insulation
Attic Walls
Ceiling Garage
Crawl Space

சுப. இரவீந்திரன்
**SuPa. Raventhiran**
**416-939-9353**



**ENERecon Insulation**
Stay Warm in Winter. Be Cool in Summer.
**416-847-7171**
info@enercon.com / www.enercon.com

# பாவியார் போற இடம் பள்ளமும் திட்டியும்

**நிருபர்:** உங்கள் கணவரின் மறைவு பற்றி...

**நடிகை:** கணவர் இறக்கும்போது நான் அவர் அருகில் இருந்தேன். எதுவித கஷ்டமும் இன்றி Peaceful ஆகப் போய் விட்டார். அது எனக்குச் சற்று ஆறுதல் தருகிறது.

**நிருபர்:** உயிருடன் இருக்கும்போது அவர் Peaceful ஆக இருக்கவில்லையே? நீங்கள் இருவரும் Piece, Piece ஆகத்தானே இருந் தீர்கள்.

**நடிகை:** ஆம், பிரிந்து வேறாக இருந்த படியால் தான் இருவரும் Peaceful ஆக இருந்தோம்.

•

**பெண்:** ஒவ்வொரு நாளும் பொழுதுபட Small - Double, Double எண்டு வாற நீங் கள், ஏன் கொஞ்ச நாளாக இந்தப் பக்கம் வாறதில்லை?

**கனகர்:** ‘நித்தம் போனால் முத்தம் சலிக்கும்’, ‘மதியாதார் முத்தம் மிதியாதே’ எண்ட பழமொழிகள் தெரியாதோ? முந்தின மாதிரி என்னை நிமிர்ந்து பார்க்கிறியள் இல்லை, மதிக்கிறியள் இல்லை, அதுதான் வராமல் நிண்டனான். இண்டைக்கு எரி- பொருள் அடிக்க வந்த இடத்திலை வந்- தனான்.

**பெண்:** Lineஇல சனம் நிக்கேக்கை எங் கை நிமிர்ந்து பார்க்கிறது. நித்தமும் உங் களை மதிச்சுக் கதைச்சுக்கொண்டு நிண் டால் மனேஜர் என்னை மிதிச்சுப் போடுவன்.

•

**பொன்னர்:** இஞ்சை வந்த புதுசிலை கனடா றோட் எல்லாம் கம்பளம் மாதிரி Smoothஆய் இருந்தது. கொஞ்சம் பழுது எண்ட உடனை முழுறோட்டையும் புதுசாய் போடுவாங்கள். இப்ப அப்படி இல்லை. பெரிய கிடங்குகளை மட்டும் நிரப்பிச் சமாளிக்கினம், எல்லாம் பள்ளமும் திட்டியும்.



இலங்கை றோட்டுகள் எல்லாம் இப்ப அந்தமாதிரி எண்டு செல்லுகினம்.

**கனகர்:** இலங்கை றோட்டுகள் பள்ள மும் திட்டியுமாய் இருக்கேக்க நாங்கள் அகதிகளாக கனடாவுக்கு புலம்பெயர்ந் தம். குடியுரிமை கிடைச்சு நாங்கள் இஞ்ச வேரூன்ற, கனடா பள்ளமும் திட்டியுமாய்ப் போச்சு.

**பொன்னர்:** ‘பாவியார் போற இடம் பள்- ளமும் திட்டியும்’.

•

**ஆசிரியர்:** வாய்விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப் போகும்.

**மாணவன்:** தப்பு Sir! வாய்விட்டுச் சிரித் தால் நோய் வந்து சேரும்.

ஆசிரியர்: என்னடா உளறுகிறாய்?

**மாணவன்:** வாய்‘விட்டு’ச் சிரிப்பதால் ‘வைரஸ்’களால் பரவும் நோய்கள் உமிழ் நீர் மற்றும் மூச்சு மூலம் தொற்றிக்கொள் ளும் வாய்ப்பு அதிகம் என்று மருத்துவ ஆய்வுகள் அடித்துக் கூறுகின்றன.

•

**பொன்னர்:** முந்தி ஊரிலை கலியாணம் கொண்டாட்டம் எண்டால், குழம்பி சிக்க லோடு இருக்கும் பெண்ணின் தலை மயிரை சீவி இழுத்துப் பின்னல் போட்டு அல்லது கொண்டை போட்டு இலவசமாக அழகுபடுத்த, சொந்தத்தில் அல்லது நண் பர்களுள் பெண்கள் இருப்பார்கள். இப்ப இஞ்சை நல்லாய் இருக்கிற தலைமயிரை குழப்பிவிடவும் குலைத்துவிடவும் Hair stylist எண்டு ஆட்களும் Hair Parlour, Hair Design எண்டு கடைகளும் இருக்கு. எங்கடை பிள்ளைகள் சிகை அழகுபடுத்த வெண்டு அங்கை போய் காசையும் குடுத்து நேரத்தையும் வீணாக்கி குலைச்சுக்கொண் டும் குழம்பிக்கொண்டும் வருகுதுகள்.



கதிர் துரைசிங்கம்

**கனகர்:** மயிரை என்ன வேணும் எண் டாலும் செய்யட்டும். ஆனால், கனடாவிலை தலையைக் குழப்பவும், குடும்பத்தைக் குலைக்கவும் எண்டு ஆட்களும் குழுக்க ளும் இருக்கினம் தெரியுமோ?

•

**பொன்னர்:** எங்கட காலத்துச் சினிமா படங்களிலை காதலன்-காதலி அல்லது கதாநாயகன்-கதாநாயகி பாடும் பாடல்களில் நாதா, சுவாமி, கண்ணா, மன்னவா, அன்பே, அழகே, ஆரமுதே, தேனே என்று அழைக்கும் சொற்பிரயோகங்கள் இருக்கும். ஆனால், இந்தக்கால பாடல்களில் அசுரா, அரக்கா, இராட்சதா, திருடா, குட்டிப்பிசாசே, லூசுப்பெண்ணே, இராட்சசி, திருட்டுக் களுதை என்ற சொற்பிரயோகங்கள் இருக் கின்றதே... ஏன்?

**கனகர்:** அந்தந்தக் காலகட்டத்தில் இருப்பதையும் நடப்பதையும் பிரதிபலிப்பது தான் சினிமாவும் அதில் வரும் பாடல் களும். அன்று ஒருவரை ஒருவர் நன்றாக அறிந்துகொள்ள ‘Dating’ என்று ஒன்டு இருக்கவில்லை. இன்று ‘Dating’ மூலம் ஒருவரோடொடுவர் நன்றாகப் பழகி அவர் களின் குணாதிசயங்களை அறிய வாய்ப் பும் வசதியும் இருக்கிறது. அறிந்தவற்றைப் பிரதிபலிக்கும் சொற்பிரயோகங்கள் தான் பாடல்களில் வருகின்றன.

kathir.thuraisingam@thaiveedu.com

■ ■ ■



## றொறன்ரோ அரங்குகளில்

# ‘ஒரு துப்பாக்கியும் ஒரு கணையாழியும்’

- பொன்னையா விவேகானந்தன் -

செப்டெம்பர் 5ம் திகதி றொறன்ரோவில் A Gun & A Ring (ஒரு துப்பாக்கியும் ஒரு கணையாழியும்) என்ற திரைப்படம் வெளியாகின்றது என்ற செய்தி வெளியானவுடன் மனம் மகிழ்ந்ததோடு எதிர்பார்ப்பும் எகிறிக் குதித்தது.

இருக்காதா பின்னே...

கடந்த ஒரு வருடத்திற்குள், தயாரிப்பு, இயக்கம், நடிப்பு எனப் பல பிரிவுகளில் விருதுகள், சர்வதேச திரைப்பட விழாக்கள் பலவற்றில் திரையிடப்பட்ட செய்திகள், பரவலாக ஐரோப்பிய நாடெங்கும் திரையிடப்பட்டு மக்களிடத்தே பெற்ற பெரும் வரவேற்புகள், மதிப்பாய்வுகள் என இத்திரைப்படம் சார்ந்த செய்திகளும் நிகழ்வுகளும் திரைப்பட ஆர்வலர்களின் எதிர்பார்ப்பைப் பல மடங்கு அதிகரித்திருக்கச் செய்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

இந்நிலையில் ஓராண்டிற்கு முன் இத்திரைப்படத்தைப் பார்த்ததில் என்னைப் பாதித்த என் நினைவுகளில் ஆழத்தில் பதிந்து கிடக்கின்ற உணர்வுகளை உங்களோடு பகிர்ந்துகொள்ள விருப்புகின்றேன்.

விஷ்ணு முரளியின் Eagle eye நிறுவனத்தின் தயாரிப்பில் லெனின் எம். சிவம் அவர்களின் இயக்கத்தில் உருவாகியிருக்கின்ற திரைப்படம் ‘ஒரு துப்பாக்கியும் ஒரு கணையாழியும்.’

பல கனடியக் கலைஞர்களுடன், ஐரோப்பியக் கலைஞர்களும் இப்படைப்பில் நடிகர்களாகவும் தொழில்நுட்பக் கலைஞர்களாகவும் திறம்படப் பங்காற்றியுள்ளனர்.

திரைப்படத்தின் முதன்மையான சிறப்புக் கூறுகளை கீழ்வருமாறு பட்டியலிடலாம்.

உலகளாவிய கவனத்தை ஈர்க்கக்கூடிய வாழ்வு மறுக்கப்படுகின்ற இனத்தின் அவலங்களை பின்னணியாகக் கொண்ட கதைகளின் பிணைப்பு,

அனைத்துலகத் தரத்தை இலக்கு வைத்துப் பின்னப்பட்ட திரைக்கதை,

நறுக்குத் தெறித்தாற்போல் வந்துபோகும் வார்த்தைகள்,

மௌனங்களாலும், பாவங்களாலும், ஒளிப்படக் கருவிகளாலும் சில ஆழங்களை வெளிப்படுத்த முயன்றிருக்கும் நுட்பம்,

உச்சக்கட்டத்தில் கணையாழியும் துப்பாக்கியும் கைமாறும்போது கதைப் பிணைப்புகளின் கனமான முடிச்சுகளைக் கச்சிதமாய் அவிழ்க்கும் நேர்த்தி.

இவற்றோடு சடசடவென காட்சிகளில் வந்துபோகும் நடிகர்களின் பாவங்களும் திரைப்படத்தின் ஓட்டத்தைக் கச்சிதமாக நகர்த்திச் செல்கின்றன.

திரைப்படம் எங்கிலும் ஆறு கதைகள் தனித்தும் பிணைந்தும் காட்சிகளில் கலந்து பயணிக்கின்றன.

- விடுதலை இயக்கமொன்றின் வதை முகாமிலிருந்து தப்பித்த இளைஞனின் புலவாழ்வுத் தோல்வி.
- வதைமுகாம் ஒன்றில் கைதானோரை அடித்துக்கொல்லும் ஒரு கொடூரனின் கனடா வாழ்வு
- போரினால் பாதிக்கப்பட்டு, மறுவாழ்வு தேடி கனடா வந்து அல்லறும் ஒரு பெண்ணையும், இழப்புகளே உருவான ஒரு சூடான் அபலையையும் சுற்றியோடும் உணர்வுகள்.
- மக்கள் சேவையை மனதிருத்தி தாயகத்திலே தங்கிவிட்ட மனைவியைப் பிரிந்து கனடாவில் வாழும் தந்தையும் மகளும்.
- இளையதலைமுறையின் இதயங்களைப் புரிந்துகொள்ளாமல் முடிவுகள் எடுக்கும், போர்ச்சூழல் பாதிப்பும் பிற்போக்குத்தனமும் கொண்ட பெற்றோருடன் ஏற்படும் முரண்பாடு.
- தொழிலுக்காகக் காதலை இழந்த புலனாய்வாளனின் தொழில்சார்ந்த பற்றும் துயரமும்.

இந்த ஆறு கதைகளும் காட்சிப்பின்னல்களின் வழியே எவ்வாறு நகர்கின்றன என்பதுதான் திரைப்படத்தின் விறுவிறுப்பும் எதிர்பார்ப்புமாக அமைகின்றது.

போரியல் வாழ்வின் தொடர்ச்சியில், கட்டுமானம் செய்யப்பட்ட தளங்களில் தடம் பதித்துச் செல்லும் புல வாழ்வியலின் சில யதார்த்தங்களை அம்மணமாக்கியிருக்கின்றது ‘ஒரு துப்பாக்கியும் ஒரு கணையாழியும்.’

திரையில் ஞானமாகத் தோன்றும் பாஸ்கர் போர்ச்சூழலில் இருந்து வெளியேறிய ஒரு போராளியின் வாழ்வை மிக யதார்த்தமான நடிப்பினால் வெளிப்படுத்தியிருந்தார்.

அரியமாகத் தோன்றும் கந்தசாமி கங்காதரன், வன்மம் நிறைந்த மனத்தோடு, வதைமுகாம் ஒன்றின் வதைப்பாளனாக இருந்த நிலையினையும், தொடரும் வெளியுலக வாழ்க்கையினையும் மிக இயல்பாகப் புலப்படுத்தியுள்ளார். உச்சக்காட்சியில் இவரது வன்மம் வெளிப்படும் போது இவர் கொள்ளும் ‘கொடூரக் கோலம்’ ரசிகர்களை அச்சுறுத்துகின்றது. அசத்தியிருக்கின்றார்.

புலனாய்வாளனாக வரும் Jon Berrie என்னும் நடிகர் அற்புதமாக நடித்திருந்தார். இவர் தற்கொலைக்கு முயலும் காட்சியில் நடிப்பு உச்சம் தொட்டுவிடுகின்றது.

தேனுகா கந்தராஜா திருமணம் காரணமாக கனடாவுக்கு வந்து எதிர்கொள்கின்ற இடர்களை நேர்த்தியாக வெளிப்படுத்தியிருக்கின்றார். சூடான் போரல் பாதிக்கப்பட்ட அகதியான Arthur Simeonஐ புரிந்துகொள்ளும் காட்சிகளில் மிளிர்கிறார்.

சேகர் தம்பிராஜா, செல்வஜோதி, கோபி, மதிவாசன், மயூ மனோ, சுதன் போன்றோரும் தம் பங்கைத் திறம்படச் செய்திருக்கின்றனர்.

திரைப்படம் முழுவதும் தோன்றுகின்ற, கனகச்சிதமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கதாபாத்திரங்களின் மிகையற்ற நடிப்பு மிகச் சிறப்பு. ஒவ்வொரு கதாபாத்திரமும் புலம்பெயர்வாழ்வியல் யதார்த்தங்களின் குறியீடு.

இவர்களது பண்பட்ட நடிப்போடு இந்த ஆறு கதைகளின் காட்சிகளையும் கலந்து, இடை நிகழ்ச்சிகள் சிலவற்றை முன்காட்சிகளாக்கி எதிர்பார்ப்பைத் தூண்டி, பின் ஒன்றோடு ஒன்று பொருத்தும் திரைக்கதை தமிழர் திரைக்கதை வரலாற்றுக்குப் புதிது. சாதாரண திரைப்பட ரசிகர்களுக்கு இத்திரைக்கதை, புரிதல் தொடர்பான சிக்கல்களைத் தோற்றுவிக்கக்கூடும் என்பது லெனினுக்குத் தெரியாததல்ல. ஆனால் இத்திரைக் கதையமைப்பே அனைத்துலக அங்கீகாரம் பெறக் காரணம் என்பதை உய்த்துணர்வோர் எவரும் மறுக்கார்.

கதைகளினூடாக நகரும் துப்பாக்கியும் கணையாழியும் புலவாழ்வின் இருவேறு பக்கங்களின் சாட்சிகளாகத் திகழ்கின்றன. கதையோட்டத்தின் கருப்பொருட்களையும் கதைமாந்தரையும் இவையே இணைக்கின்றன.

இராணுவ அடக்குமுறைகளினால் பாதிக்கப்பட்டுப் புலம் பெயர்ந்த, தாயக வாழ்வின் பிற்போக்குத்தளைகளில் இருந்து விடுபடாத பெற்றோரின் கடும் முடிவுகளுக்குத் துணை போக மறுத்து கோபமுறும் இளையதலைமுறைக்கு வன்முறை வடிகால் சமைக்கிறது தாயகப் போரியலின் தீயபக்கம். துப்பாக்கி இதன் குறியீடு.

கொல்லும் தொழிலைக் குலத்தொழிலாகக் கொண்டே இறுதிவரை பயணிக்கிறது துப்பாக்கி.

ஒரு இனம் சார்ந்த இழப்புகளின் எல்லைகளைக் கடந்து, உலகளாவிய மனித இனத்தின் இழப்புகளால் ஒருங்கிணைக்கப்பட்டு புது வாழ்வியல் நெறியோடு பயணிக்கத்தொடங்கும் மனிதப் பொதுமையின் குறியீடு கணையாழி. விற்கப்பட்டும் வீசப்பட்டும் அல்லற்படுகின்ற கணையாழி இறுதியில் அர்த்தம் பெறுகின்றது.

இவையிரண்டுமே கதையின் முக்கிய கதாபாத்திரங்கள். இந்த இரண்டோடும் இணைந்து பயணித்தாற்றான் கதையோடு ஒன்றி உச்சப்பயன் பெறமுடியும்.

தொழில்நுட்பம் சார்ந்து சில குறைகள் இல்லாமல் இல்லை. அவை பொருளாதாரப் பின்னணி கொண்டவை என்பதால் அவற்றை இதில் சுட்டிச் செல்வது பொருத்தமாகாது.

புலம்பெயர்ந்து வாழும் தமிழ்ச்சமூகத்தின் உயர்படைப்பாக வெளிவந்திருக்கும் இத்திரைப்படம் ‘கதை சொல்லும் உத்தி’ ஊடாக உலகக் கவனத்தை ஈர்ந்திருக்கின்றது. கதையெங்கும் இழையோடும் ஒரு இனத்தின் அவலம் உலக உணர்வுகளில் நிச்சயமாய் ஒரு பாதிப்பை ஏற்படுத்தும். இதுவரை திரையிடப்பட்ட இடங்களில் அவ்வாறான ஒரு பாதிப்பை இத்திரைப்படம் ஏற்படுத்தியுள்ளது.

இத்திரைப்படத்தை நாம் ஒவ்வொருவரும் பார்த்தாக வேண்டும் என்பதற்கு இரண்டு முதன்மையான காரணங்கள் உண்டு.

- அனைத்துலகத் தரத்தை எட்டுமளவிற்கு கனடா தமிழ் கலைஞர் உருவாக்கியிருக்கும் திரைப்படம். அவர்களது ஆற்றலை அளவிட்டுப் பாராட்ட வேண்டியது எம் கடமை.
- இது போன்ற திரைப்படங்கள் உருவாக வேண்டுமானால் பொருளாதார நோக்கில் படைப்பாளிகள் நிறைவடைய வேண்டியது அவசியம். நாம் அதற்கு உதவ வேண்டும்.

செப்டெம்பர் 5 முதல் இரு வாரங்கள் உங்களுக்கருகாமையில் ‘ஒரு துப்பாக்கியும் ஒரு கணையாழியும்’ என்ற இந்தத் திரைப்படம் திரையிடப்படுகின்றது.

எம் கலை வளர்ச்சிக்கான உங்கள் பங்களிப்பை இந்த இரு வாரங்களுக்குள் வழங்கி விடுங்கள்.

*vivekanandan.p@thaiveedu.com*





உங்கள் பிள்ளைகளின் முன்னேற்றமான எதிர்காலம் இங்கு ஆரம்பமாகிறது

# NETKRAM

**GIVING THE GIFT OF EDUCATION**

ADVANCE AND NEW

கணித வகுப்புகள், ஆங்கில வகுப்புகள், பிரஞ்சு வகுப்புகள், பாடசாலை வீட்டுவேலை வகுப்புகள்.

## MATH CLASSES

For Grade 1 - 12

INDIVIDUAL APPROACH FOR EACH STUDENT
(ADVANCE EXPLANATION)

தனிப்பட்ட முறையிலும் வகுப்புகள் நடத்தப்படும்

**SPECIAL KIDS COMPUTER CLASS**

- PROGRAMING LOGIC
- SKILL BUILDING ACTIVITIES

**FRENCH & ENGLISH READING CLASSES**

## HOME WORK CLASSES

Math
English
French
Other Subjects

GRADE 1 TO GRADE 6 ENGLISH AND FRENCH MEDIUM

மாதாந்தத் தேர்வுகள் கணினி மூலம் கற்பிக்கப்படும்

உயர்தர வகுப்புகள்

Math for HIGH SCHOOL
French for HIGH SCHOOL
English for HIGH SCHOOL

எமது உயர்வகுப்பு மாணவர்கள் அதி உயர் புள்ளிகள் பெற்று (Honor) சித்தியடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது

சிறந்த முறையில் வடிவமைக்கப்பெற்ற பாடநெறி முறைகளும், வழிநடத்தலும் அதி உயர் புள்ளிகள் பெற்ற மாணவர்களுக்கு தொழிற் பயிற்சியளிக்கப்படும்

## ADVANCE CLASSES

- UML
- PHP
- ASP.NET
- ASP
- JAVA
- C++, C#
- VISUALBASIC.NET
- DATABASES
- PC-TECHNICIAN
- A+ CERTIFICATION

OFFICE 2010/2007
WORD
EXCEL
POWERPOINT
ACCESS
OUTLOOK
} Microsoft Office Specialist (MOS) Certification

INTERNET PROGRAMMING ( I )
HTML
CSS
XML
INTERNET PROGRAMMING ( II )
Javascript
Server Side Web Development
} Internet Webmaster Certification

JOB TRAINING FOR QUALIFIED STUDENTS

**COMPUTER**

மின்கணினியில் பிரச்சனையா?
சிறந்த முறையில்
திருத்தி அமைத்து கொடுக்கப்படும்

-REPAIR -SALES
-UPGRADE
-SERVICES

opening hours
Mon - Thu : 4:00 PM - 9:00 PM
Sat - Sun : 9:00 AM - 5:00 PM

www.netkram.com

Contact : 905 - 471 - 1230
30 New Delhi Drive, Unit 68
Markham and 14th Avenue



வர்த்தக நிறுவனங்கள் வாங்க, விற்க

**Home Life**
GTA Realty Inc., brokerage
206-1711 McCowan Road, Scarborough, ON. M1S 3YS
Bus: 416-321-6969 Fax: 416-321-6963

HOMELIFE HIGHER STANDARDS

**Baskaran Sinnadurai**
Commercial & Residential Sales Representative
**416-880-8585**



FIRST TOP PRODUCER
2013
HOMELIFE GTA




பாஸ்கரன் சின்னத்துரை
மீண்டும் 2013 இல்
முதலாவது ரொப் பிரடியூசராக
தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

# காட்டு விலங்குகளும் நகர விலங்குகளும் - 3



கந்தசாமி
கங்காதரன்

அமெரிக்கக் கண்டத்துக்கேயுரிய விலங்குகளில் ஸ்கங்க் தனித்துவமானது. மிக முக்கியமான, மனிதர்களுக்கு மட்டுமல்லாது ஏனைய விலங்குகளுக்கும் பிடிக்காத தனித்துவத்தைக் கொண்டது ஸ்கங்க். தனக்கு ஆபத்து ஏற்படுகிறதென்று ஸ்கங்க் உணர்ந்தால் தனது வாலுக்கு அடியில் உள்ள இரண்டு சுரப்பிகளிலிருந்து எண்ணெய்ப் பிசுபிசுப்பான ஒரு திரவத்தைப் பீய்ச்சி அடிக்கும். அதுவும் உலகிலுள்ள சகிக்க முடியாத மணமெல்லாம் ஒன்று சேர்ந்தாற் போல ஒரு மணம். இந்த மணத்தைச் சகிக்க முடியாமல் பல விலங்குகளே ஸ்கங்கைப் பார்த்தால் கடன்பட்டார் போல முகத்தை வேறுபக்கம் திருப்பிக் கொண்டு போய்விடும். மனிதர்கள் எம்மாத்திரம்? இந்த துர்நாற்றமே ஸ்கங்கின் பாதுகாப்புப் பொறிமுறை, சிலர் இதைச் சிறுநீர் என நினைப்பர். இது சிறுநீர் அல்ல. இதற்கெனவே அமைந்த இரு சுரப்பிகளிலிருந்தே இந்தத் திரவம் பீய்ச்சப்படுகிறது. எதிராளி இந்தத் துர்நாற்றத்திலிருந்து சுதாரிப்பதற்குள் ஸ்கங்க் ஓடித் தப்பிவிடும். கணவாயும் ஸ்கங்கின் இதே பாதுகாப்புப் பொறிமுறையைக் கொண்டுள்ள ஒரு விலங்கு.

எங்களில் பலருக்கு நாயைக் கண்டால் கல்லெறியும் பழக்கம் உண்டு. இப்படியான சேட்டைகளை ஸ்கங்கோடு வைத்துக்கொள்ளவே கூடாது. தேவையில்லாமல் ஸ்கங்கைச் சீண்டவும் கூடாது. 'இந்தக் கோட்டைத் தாண்டி நான் வரமாட்டேன், நீ வந்தாலும் நான் ஒன்றும் சொல்லமாட்டேன்' என்று இருப்பது தான் உங்கள் மூக்குக்கு நல்லது. ஸ்கங்க் அச்சம்கொண்டு தனது பின்பக்கத்தையும் தலையையும் உங்களை நோக்கித் திருப்பி 'U' வடிவத்தில் வளைந்து நிற்கின்றதென்றால், ஆர்வக்கோளாறால் 'அடுத்தது என்ன?' என்று வேடிக்கை பார்க்கவேகூடாது. தலைதெறிக்க அவ்விடத்திலிருந்து ஓடித் தப்புவதே கெட்டித்தனம். 3 மீற்றர் (10 அடி) தூரத்துக்கு இலக்குத் தப்பாமல் தனது பேராயுதத்தைப் பீய்ச்சும் வல்லமை பெற்றது ஸ்கங்க். 'U' வடிவத்தில் உடலை வளைத்து முன்னங்கால்களிலொன்றை நிலத்தில் அடிக்கின்றதென்றால் அந்தப் பிரதேசத்திலுள்ள எல்லோருமே மூக்கைப் பொத்தப்போகிறார்கள் என்று கொள்க. மூக்கை அரிக்கும் இந்த துர்நாற்றத்தைப் போக்குவது மிகக் கடினமான வேலை.

ஒரு தடவையில் 2 – 10 வரையிலான குட்டிகளை ஈனும் ஸ்கங்க் பெருப்பாலும் குறிப்பிட்ட ஒரு பிரதேச எல்லைக்குள்ளேயே



வாழும். ஏனைய விலங்குகள் தோண்டிய வளைகளிலும் மரப் பொந்துகளிலும் தமது விதிவிடத்தை அமைத்துக் கொள்ளும். மே மாதமளவில் குட்டிகளை ஈனும் சில மாதங்களிலேயே, பெரும்பாலும் செப்ரெம்பருக்கு முன்பாக குட்டிகள் தம்வழியே போய்விடும். குளிர்காலத்தில் பெண் விலங்குகள் 12 – 13 வரையில் ஒன்று சேர்ந்து ஒரே வளையினுள்ளேயே உறங்கும். ஆண் விலங்குகளும் தமக்கென ஒரு வளையில் கூடி ஒன்றாக உறங்கும். ஆனால் இந்த உறக்கம் Hibernation எனப்படும் ஆழ்நிலை உறக்கம் அல்ல. கடும் குளிரிலிருந்து தம்மைக்காத்துக் கொள்ளவே இந்நடவடிக்கை. கறுப்பில் ஓரளவு அகலமான வெள்ளைக்கோடு, அல்லது மெல்லிய இரு வெள்ளைக்கோடுகள் இருக்கும். சில விலங்குகளில் கோடுகளுக்கும் பதிலாக புள்ளிகள் இருக்கும். பெரும்பான்மையான விலங்குகள் கறுப்பு / வெள்ளையாக இருக்க, சில விலங்குகள் மண்ணிறம், நரை நிறத்திலும் காணப்படும்.

ரக்கூன் மனிதர்களைக் கண்டால் அலட்சியப்பார்வை பார்க்கும். ஸ்கங்க் மனிதர்களைக் கண்டதாகவே காட்டிக்கொள்ளது. 'அது எம்மைக் காணவில்லையோ!' என்று நாம் நினைக்கலாம். உண்மையில் அதற்கு நாம் தொலைவில் வருவதைக் கண்டுணர முடியாது. தெருக்களில் அடிக்கடி வாகனங்களில் அடிபட்டு இறக்கும் ஸ்கங்க் அடிபட்டதும் தனது சுரப்பியிலிருந்து திரவத்தைப் பீய்ச்சியடிக்கும். அந்தப்பகுதி முழுவதுமே நாற்றம் வீசும். கோடைகாலத்தில் அடிக்கடி நடக்கும் நிகழ்வு இது. ஸ்கங்க் பார்வைத் திறன் குறைந்த ஒரு விலங்கு. 3 மீற்றருக்கு அப்பால் தெளிவாகப்பார்க்கமுடியாது. இதுவே அதிக விலங்குகள் வாகனங்களில் மோதி இறப்பதன் காரணம்.

ஸ்கங்க்குகளும் ரக்கூன் போலவே புற்றரையைத் தோண்டி ஆனந்தம் அடையும் விலங்கு புழுக்கள், மண்புழுக்கள், பூச்சிகளைத் தேடியே இவ்வாறு தோண்டுகிறது. பழங்கள், விதைகள், சிறுபூச்சி, புழுக்கள், சிறுவிலங்குகள், பறவைகள், மீன், இறந்த விலங்குகள் என்று எதையுமே விட்டுவைக்காத அனைத்தும் உண்ணி ஸ்கங்க். சராசரி ஆயுட்காலம் 3 ஆண்டுகள்.

ஸ்கங்க் உங்கள் வீட்டின் பின்னால் மரத்தாலான தளத்தின்கீழோ, அல்லது வளையொன்றிலோ குடியேறியிருப்பது உறுதியானால், அவற்றை வெளியேற்ற அவசரப்படக்கூடாது. குட்டிகள் சுயமாக நடமாடத் தொடங்காமலிருந்தால் அவை இறக்கக்கூடும். ரக்கூனின் இருப்பை அறிவதற்கும் அதனை வெளியேற்றுவதற்குமான வழிமுறையே இங்கு செய்யப்படவேண்டும். செப்ரெம்பர் மாதமளவில் உங்கள் வீட்டில் / வளவில் குடியேறிய ஸ்கங்கை வெளியேற்றும் நடவடிக்கையைத் தொடங்கலாம். வெளியேற்றுவது என்பதிலும் வெளியே போன விலங்கை உள்ளே வராமல் தடுப்பது என்பதே பொருத்தமானது. எக்காரணம் கொண்டும் ஸ்கங்க் அச்சமுறாமற் பார்த்துக்கொள்ள வேண்டும். அச்சமுற்றால் விளைவு மூக்கைப் பொத்துவதாகவே முடியும். ஆனால் எடுத்ததெற்கெல்லாம் நாம் கோபப்படுவது போல ஸ்கங்க் கோபப்பட்டு தனது வாசனைத் திரவியத்தைப் பயன்படுத்தாது. 5-6 தடவை பயன்படுத்தினால் முடிந்துவிடும். மீண்டும் சுரப்பதற்கு 10 நாட்கள் வரையில் செல்லும். எனவே தனக்கு உண்மையிலேயே அச்சுறுத்தல் என்றுணர்ந்தால் மட்டுமே ஸ்கங்க் தனது திரவியத்தை ஏவும். ஸ்கங்கின் திரவியம் பட்ட ஆடைகள் எளிதில் கழுவிப்பயன்படுத்த முடியாது. எறிவதுதான் ஒரே தீர்வு. மனிதர்களுக்குப் பட்டால் போக்குவது மிக மிகக் கடினம். தக்காளி சோஸ் கொண்டு கழுவச் சொல்வார்கள். ஸ்கங்கின் வாசனைத் தாக்குதலுக்குள்ளாவது போன்ற ஒரு துன்பியல் நிகழ்வு வெறெதுவுமில்லை. இந்தச் சங்கடங்கள் இல்லாதிருக்க சிறந்த வழி ஸ்கங்குடன் சேட்டை விடாமலிருப்பது மட்டுமே.

gangatharan.k@thaiveedu.com

■ ■ ■

இந்திய மருத்துவம்

உடலும் - மனமும்

- மருத்துவ ஆலோசனைகள்
- மூலிகைகள்
- மருத்துவம் கற்றுக் கொள்ள
- மருத்துவ தொழில் ஆலோசனை பெற

நேரில் சந்திக்கவும்:

இராஜசேகர் ஆத்தியப்பன்
416-995-0416
ayurvetha@gmail.com
www.ayurexpress.net

BHARATHANATTIYAM
நாட்டிய கலாஷேத்திரா
NATTIYA KALAKSHETRA SCHOOL OF FINE ARTS
Teacher
Mrs. Thenujah Thirumaran
இந்தியாவிலேயே புகழ்பெற்ற பாடசாலைகளுள் ஒன்றான
ருக்மினிதேவி அருண்டேலின் கலாக்ஷேத்ராவில்
Diploma பட்டம் பெற்ற பரதநாட்டிய ஆசிரியர்.

Teaching in English and Tamil

வகுப்பு நடைபெறும் இடம்:

Morning side & Ellesmere
Markham & 14th Avenue

Call: 905-554-5846
Fax: 416 849 0594
Email: sothisiva@hotmail.com

# உங்கள் மோட்கேஜ் சம்பந்தமான சகல தேவைகளுக்கும்...

## உங்கள் தேவை இவற்றில் ஒன்றா?

- வீட்டு விலை உயர்வை சாதகமாக்கி உங்களின் கடன்களில் இருந்து விடுபடவேண்டுமா?
- வீட்டின் Equity யைப் பயன்படுத்தி உயர் வட்டியில் உள்ள கடனில் இருந்து விடுபட வேண்டுமா?

|  | Outstanding Balance | Interest Rate | Before | After |
|---|---|---|---|---|
| Mortgage Payment | 350,000 | 4.20% | 1,704.16 | 0.00 |
| Car Loan | 25,000 | 6.78% | 491.34 | 0.00 |
| Line of Credit - 1 | 20,000 | 7% | 600.00 | 0.00 |
| Line of Credit - 2 | 12,000 | 6% | 360.00 | 0.00 |
| Credit Card - 1 | 9,000 | 19% | 384.36 | 0.00 |
| Credit Card - 2 | 5,000 | 12% | 196.57 | 0.00 |
| Store Card | 3,500 | 22% | 172.35 | 0.00 |
| *Current Total Debts:* | *$424,500* | *Current Total Payments* | *3,908.78* |  |
| ***New Mortgage:*** | ***$424,500*** | **2.80%** |  | ***1,704.59*** |

| | |
|---|---|
| Old Payment | 3,908.78 |
| New Payment | -1,740.59 |
| **Save up to** | **$2,168.19** |

NOW is the time to take advantage of LOW INTEREST RATES! Starting at **2.80%**

- வீட்டுத்திருத்த வேலைக்கு தேவையான பணத்தை வீட்டில் இருந்து எடுக்க வேண்டுமா?
- சொந்த தேவைக்காக (*Proposal Payment*, பிள்ளைகளின் படிப்பு, அரங்கேற்றம், சுற்றுலா) பணத்தை வீட்டில் இருந்து எடுக்க வேண்டுமா?
- பிறிதொரு வீட்டை வாங்க தேவையான முற்பணத்தை வீட்டில் இருந்து எடுக்க வேண்டுமா?
- உயர் வட்டியில் உள்ள மோட்கேஜ்ஜை குறைந்தவட்டியிலுள்ள மோட்கேஜ்ஜாக மாற்ற வேண்டுமா?
- சொந்த தொழில் செய்பவர்கள் வீடுவாங்க மோட்கேஜ் எடுக்க வேண்டுமா?
- புதிதாக கனடாவுக்கு வந்தவர்கள் மோட்கேஜ் எடுக்க வேண்டுமா?
- வெளிநாட்டில் உள்ளவர்கள் கனடாவில் வீடுவாங்க மோட்கேஜ் எடுக்க வேண்டுமா?
- பெற்றோர் பிள்ளைகளுக்கு வீட்டை மாற்றி மோட்கேஜ் எடுக்க வேண்டுமா?
- கிறடிற் பிரச்சினை (*Consumer Proposal, Late payments, previous bankruptcy*) ஆனால் வீடு வாங்க மோட்கேஜ் எடுக்க வேண்டுமா?
- அவசர தேவைக்கு *2nd Mortgage* எடுக்க வேண்டுமா?

## என்னை முதலில் அழையுங்கள்

# 416.873.5780



VERICO® MORTGAGE BROKERS NETWORK

Each VERICO Broker is an independent owner operator. ® registered trademark of VERICO Financial Group Inc.

VERICO The Mortgage Leaders Inc. (Lic. #10238)

**Kethes Sivasubramaniyam** AMP

*Mortgage Agent - (Lic # M08006105)*

5200 Finch Ave. East, Unit 310A, Toronto, ON. M1S 4Z5


Thurairajah RAMESH
PARVIN Vaezzadeh
TEAM RAMESH
WORKING FOR YOU
ROSKY Navaratnam
Sutha Perinpanayagam
Affordable 4BR House in Ajax
2000 Sq. Ft. 4 BR + 4WR House
Professionally Finished Basement W/ Full WR
Very Spacious Kitchen W/ SS Appliances
Hardwood Floor in the Main Floor
Close to Hwy 401, Costco, Walmart & More..
Asking Price $539,000
Quite & Decent Neibourhood.....
17 Durling Rock St.
Salem & Rossland
PLEASE CONTACT
416-879-2000
Thurairajah RAMESH
ROSKY Navaratnam
PARVIN Vaezzadeh
SUTHA Perinpanayagam
Sales Representatives
b: 416-321-6969 c: 416-879-2000
Homelife GTA Realty Inc. Brokerage


உங்கள் குழந்தைகளின்
எதிர்கால வளர்ச்சிக்கு
இன்றே திட்டமிடுங்கள்
RESP கல்விச் சேமிப்புத் திட்டம்
Rathina Arun
Advisor
Bus: 416 321 6000 ex 412
Direct: 416 843 4083
www.inforcelife.com
rathina@inforcelife.com
Insurance Solutions for
LIFE | HEALTH | GROUP
Investments
iNFORCE LIFe
Financial Services Inc.
QUALITY ADVICE YOU CAN TRUST!
Give us a call today for your FREE and NO OBLIGATION quote!

# தகைப்பும் இளம் பிள்ளைகளும்

# (Stress and young children)

ஜீவா திசைராஜா



பிள்ளைகளின் உலகம் சந்தோஷமாகவும் கவலைகளற்றும் இருக்கும் என பொதுவாக வளர்ந்தோர் எண்ணுவதுண்டு. பிள்ளைகள் தொழில் செய்ய வேண்டிய தேவை இல்லை, கட்டணங்கள் செலுத்தத் தேவையில்லை. எனவே அவர்கள் கவலைப்படுவதற்கு என்ன உள்ளது? இவ்வாறு தான் அநேகர் நினைப்பதுண்டு.

பிள்ளைகள் கவலைப்படுவதற்கு அநேக விடயங்கள் உள்ளன என்று கூறுவது ஆச்சரியமாகத் தான் இருக்கும். மிகவும் சிறு பிள்ளைகட்குக் கூட கவலைகள் இருப்பதுடன், ஓரளவிற்கு தகைப்பை (Stress) உணர்கின்றார்கள். தகைப்பு என்பது எம்மேல் சுமத்தப்படும் சுமைகளை நாம் எவ்வாறு சந்திக்கக் கூடியவர்களாக இருக்கிறோம் என்னும் நிலையே ஆகும். வளர்ந்தோரைப் போலவே பிள்ளைகளும் தகைப்பை எதிர்நோக்குகின்றார்கள். ஆனால் அதனை அவர்கள் உணர்ந்து கொள்வதற்கும் அதனை வெளிப்படுத்துவதற்கும் அதிலிருந்து விடுபடுவதற்கும் வளர்ந்தோரின் உதவி நிச்சயம் தேவை.

தகைப்பு (Stress) எனும்போது அது என்ன காரணத்தினால் ஏற்படுகின்றது என்பதை அடிப்படையாக வைத்தே அது வரையறுக்கப்படுகின்றது. தகைப்பிற்கான காரணங்கள் உள்வாரி (internal), வெளிவாரி (external) என வரையறுக்கப்படுகின்றது.

## உள்வாரியான காரணங்கள்:

பசி, வலி, சத்தத்தினால் இலகுவாகப் பாதிக்கப்படல் (Sensitive to noise), வெப்பநிலை மாற்றங்கள், அளவுக்கதிகமான சமூக தொடர்புகள், களைப்பு, ஒருவர் வாழும் சூழலின் அளவுக்கதிக பரபரப்பு அல்லது உற்சாகமற்ற சூழல் என்பன கூறப்படுகின்றது.

## வெளிவாரியான தகைப்புக் காரணங்கள்:

குடும்பத்திலிருந்து பிரிக்கப்படுதல், குடும்ப கட்டமைப்பில் மாற்றம், மற்றவர்களுடன் வாக்குவாதப்படல் அல்லது முரண்படல், வன்முறைகளுக்கு முகம் கொடுக்க நேர்தல், மற்றவர்களின் அடக்குமுறைகட்கு (Aggression/ bullying) உட்படல், முக்கியமான சொத்துக்கள் அல்லது வளர்ப்புப்பிராணிகளை இழத்தல், விரைவாக காரியங்களை செய்து முடிக்க வேண்டும் எனும் பதகளிப்பு, எதற்கும் அவசரப்படுதல், ஒருவரது நாளாந்த வாழ்வு நிகழ்வுகளில் ஒழுங்கீனம் (disorganization) போன்றன கூறப்படுகின்றது.

## பிள்ளைகள் தகைப்பினை எவ்வாறு அனுபவிக்கிறார்கள்?

நிபுணர்கள் தகைப்பு அனுபவங்களை இரண்டு பிரிவாகப் பிரிக்கின்றார்கள்.

- திடீரென ஏற்படும் தீவிரமான தகைப்பு (Acute stress) (உதாரணமாக: குறுகிய காலத்தில் பெற்றோருக்கு ஏற்படும் சுகவீனங்கள்),
- தொடர்ந்து விட்டு விட்டு ஏற்படும் தீராத தகைப்பு (Chronic stress). (உதாரணமாக பிள்ளையின் வாழ்வில் முக்கிய பங்கு வகித்த பாட்டன், பாட்டி, சகோதரர் போன்றோரின் இறப்பு). இந்த தீராத தகைப்பு தொடர்ந்து காணப்படுவதால் பிள்ளையின் வாழ்வில் இது அழிவை ஏற்படுத்தக் கூடிய விளைவுகளை ஏற்படுத்துவதுடன், மூளையின் செயலாற்றலைப் பாதித்து நோய் எதிர்ப்புத் தன்மையையும் குறைக்கின்றது.

## தகைப்பின் வெளிப்படையான விளைவுகள்:

தகைப்பின் வெளிப்படையான விளைவுகளாக: அழுதல், உள்ளங்கை வியர்த்தல், வீட்டை விட்டு ஓடிப்போதல், தன்னைப் பாதுகாப்பதற்காக சத்தமிடுதல், முன்னும் பின்னுமாக ஆடிக் கொண்டிருத்தல் (Rocking), அல்லது தன்னைத் தானே ஆறுதல்படுத்திக் கொண்டிருத்தல், தலையிடி, வயிற்றுவலி, நரம்பு தொடர்பான நுண்ணிய நடத்தைகளில் ஈடுபடுதல் (உதாரணமாக: தலைமயிரை முறுக்குதல், தலைமயிரை இழுத்தல், வாயை மென்று கொண்டிருத்தல், தோலையும் விரல் நகங்களையும் கடித்தல்), எதிர்பாராத விதமாக மலசலம் உடைகளில் கழிய நேரிடுதல் (toilet accidents), நித்திரை குழம்புதல் போன்றன கூறப்படுகின்றன. அளவுக்கதிக வெட்கம், அளவுக்கதிக துக்கம், பொது இடங்களில் சகஜமாகப் பழகாத நிலை, உணவு மற்றும் பொருட்களில் அளவுக்கதிகமாக பற்று அல்லது வெறுப்பு இருத்தல், அடுத்த நிலை என்னவாக இருக்கும் என்பதைப் பற்றிய கவலை போன்றன.
வயது கூடக் கூட பிள்ளைகள் நடந்த சம்பவங்களை பற்றி கேட்டறிந்து பிரச்சனையைத் தீர்க்கக் கூடிய உணர்வு ரீதியான வழிமுறைகளைப் பின்பற்றுவர்.

அநேக பிள்ளைகள் ஆக்கபூர்வமாக விளையாடுவதற்கோ அல்லது பாடசாலை முடிந்த பின் இளைப்பாறவோ நேரமின்றி காணப்படுகிறார்கள். தாம் ஈடுபட்டுள்ள எண்ணற்ற செயல்பாடுகளைப் பற்றி முறைப்படும் அல்லது அவற்றிற்குச் செல்ல மறுக்கும் பிள்ளைகள் தாம் அளவுக்கதிகமான வேலைகளைக் கொண்டிருக்கிறார்கள் என்பதையே தெரியப்படுத்துகிறார்கள்.

பாடத்திற்குப் புறம்பான மேலதிக விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு நடவடிக்கைகளைப் (Extra curricular activities) பற்றி உங்கள் பிள்ளைகள் என்ன நினைக்கிறார்கள் என்பதைப் பற்றி அவர்களுடன் பேசுங்கள். அவர்கள் அதனைக் குறித்து முறைப்பட்டால் ஓர் செயல்பாட்டை நிறுத்துவதால் ஏற்படும் சாதக, பாதகங்களைக் குறித்து கலந்துரையாடுங்கள். நிறுத்துவது ஒரு தெரிவாக இல்லாவிடில், உங்கள் பிள்ளைக்கு அதிக பதகளிப்பை ஏற்படுத்தாதவாறு பிள்ளையின் நேரத்தையும் பொறுப்புகளையும் சமாளிப்பதற்கு உதவுமுகமாக வழிவகைகளை கண்டறியுங்கள். இதன் மூலம் அவர்கள் அதிக பதகளிப்படைவதை தவிர்க்க முடியும்.

உங்கள் வேலையிடங்களில் ஏற்படும் பிரச்சினைகள், உறவினரின் நோய் பற்றி நீங்கள் கதைப்பதை, உங்கள் வாழ்க்கைத் துணைவருடன் நிதி தொடர்பான விடயங்களைப் பற்றி சண்டையிடுவதை உங்கள் பிள்ளைகள் கேட்பதுண்டா?

பிள்ளைகள் அருகிலிருக்கும் போது பெற்றோர் இந்த விடயங்களை குறித்து பேசுவதையிட்டு அவதானமாக இருக்க வேண்டும். பெற்றோரின் பதகளிப்பை தம்முள் எடுத்துக் கொள்ளும் பிள்ளைகள் தமக்குள் தாமே கவலைப்பட ஆரம்பித்து விடுவார்கள்.

உலகச் செய்திகளும் தகைப்பை ஏற்படுத்தும். தொலைக்காட்சியில் துன்பகரமான காட்சிகள் அல்லது இயற்கை அழிவுகள், யுத்தம், பயங்கரவாதம் என்பனவற்றைப் பார்க்கும் போது தமது சொந்த பாதுகாப்பு மற்றும் தாம் விரும்பும் மக்களின் பாதுகாப்பு பற்றி கவலைப்படுவார்கள். உங்கள் பிள்ளைகள் என்ன பார்க்கிறார்கள், கேட்கிறார்கள் என்பதையும் அவர்கள் தொலைக் காட்சியில் என்ன பார்க்கிறார்கள் என்பதையும் கண்காணித்துக் கொண்டு வந்தால் என்ன நடக்கின்றது என்பதை அவர்கள் விளங்கிக் கொள்ள நீங்கள் உதவலாம்.

அத்துடன் நோய், அன்புக்குரிய ஒருவரின் இறப்பு அல்லது விவாகரத்து போன்ற சிக்கலான காரணிகளைக் குறித்து அறிந்து வைத்திருங்கள். இவை ஒவ்வொரு நாள் அழுத்தங்களுடன் சேரும்போது இந்த அழுத்தம் அளவுக்கதிகமாகின்றது. மிகவும் நியாயமான சகல சலுகைகளுடன் கூடிய விவாகரத்து கூட பிள்ளைகளின் குடும்பத்தில், அதாவது அவர்களது அடிப்படை பாதுகாப்பு முறையில் ஓர் இக்கட்டான மாற்றத்தை ஏற்படுத்துவதால், பிள்ளைகளுக்கு ஓர் கஷ்டமான அனுபவத்தைக் கொடுக்கலாம். பிரிந்த அல்லது விவாகரத்து பெற்ற பெற்றோர், பிள்ளைகளை ஒரு பக்கம் சாரும்படியோ அல்லது மற்றைய வாழ்க்கைத் துணைவரைப் பற்றி நேர்மாறான கருத்துக்களைத் தெரிவிப்பதையோ தவிர்க்க வேண்டும்.

பிள்ளைகள் தகைப்பை பல்வேறு வழிகளில் எதிர்நோக்குகின்றார்கள். சிலர் அளவுக்கதிகமாக களைப்படைவதுடன் நன்றாக சமாளிக்கக் கூடியவர்களாகவும் இருக்கின்றனர். ஏனையோர் அடிக்கடி மனநிலை மாறுபவர்களாகவும் (Mood swings), நித்திரை செய்வதில் ஒழுங்கீனங்களுடன், அவர்களது வயதுக்கு ஒவ்வாத (விரல் சூப்புதல், இரவில் படுக்கையை நனைத்தல், பெற்றோருடன் அளவுக்கதிகமாக ஒட்டிக் கொள்ளுதல் போன்ற) நடத்தைகளையும் கொண்டிருப்பர்.

***பிள்ளைகளின் உலகம் சந்தோஷமாகவும் கவலைகளற்றும் இருக்கும். அவர்கள் தொழில் செய்ய வேண்டியதில்லை, கட்டணங்கள் செலுத்தத் தேவையில்லை. எனவே அவர்களுக்குக் கவலைப்படுவதற்கு என்ன உள்ளது? இவ்வாறு தான் அநேகர் நினைப்பதுண்டு. இது முற்றிலும் தவறானது.***

பிள்ளைகளின் நடத்தையில் ஏற்படும் எந்தவொரு திடீர் மாற்றமும் அது அவர்களின் அபிவிருத்தி கட்டங்களுடன் தொடர்புடையதாய் இல்லாவிடில் கவனமெடுக்கப்பட வேண்டியதாகும். இந்த சில அறிகுறிகள் ஒன்று சேர்ந்ததாகவோ அல்லது இவற்றுள் ஒரு அறிகுறியோ திடீரென்று ஏற்பட்டால், அதிக கவனம் எடுக்கப்பட வேண்டியதாகும். பிள்ளையின் வாழ்வில் தகைப்பு ஏற்படுவதால் பிள்ளை பதகளிப்பிற்கு உள்ளாகி அல்லது உடலியல்ரீதியில் சுகவீனத்திற்கு உட்பட்டால் ஓர் நிபுணத்துவம் பெற்றவரின் (பாடசாலை ஆலோசகர், பிள்ளையின் வைத்தியர்) உதவியைப் பெறுவது அவசியமாகும்

## தகைப்பிற்கு இலகுவாக உட்படும் பிள்ளைகள்:

தகைப்பின் அனுபவத்தை பிள்ளைகள் அநேக வடிவங்களில் எதிர்நோக்குவதுடன், பிள்ளைக்கு பிள்ளை, அதாவது பிள்ளையின் உடல், உள வளர்ச்சி மட்டம், பிள்ளையின் முன்னைய வாழ்க்கை அனுபவங்கட்கு ஏற்பவும் அது வேறுபடுகின்றது. தகைப்பிற்கு இயைபாக்கம் அடைவது (Adapting) அல்லது தகைப்பினை சமாளிப்பது என்பது பிள்ளையின் திறன்கள் மற்றும் இயலுதன்மையில் (capabilities) தங்கியுள்ளது. ஆய்வுகளின்படி 6 வயதிற்குக் குறைந்த பிள்ளைகள் பின்வரும் சந்தர்ப்பங்களுக்கு ஈடு கொடுக்க முடியாதவர்களாக உள்ளனர்.

- ஒரு நிகழ்வை முழுமையான முறையில் சிந்தித்தல்
- புதிய, ஆர்வமூட்டும் அல்லது பதகளிப்பை (anxiety) ஏற்படுத்தக் கூடிய நிகழ்வு ஏற்பட்டால் எவ்வாறு நடந்து கொள்வது என்பதை தெரிவு செய்வது
- தமது சொந்த உணர்வுகளுக்கு அப்பாற்பட்ட ஓர் நிகழ்வை வேறுபிரித்து அறிந்து கொள்ளல்

தகைப்பு ஒருவரில் சாதகமானதும் பாதகமானதுமான செல்வாக்குகளை ஏற்படுத்தக் கூடும். பிள்ளை எவ்வளவுக்கு குறைந்த வயதுடையதாக இருக்கிறதோ அதற்கேற்ப புதிய நிகழ்வுகளின் தாக்கம் அதிகமாக இருப்பதுடன் தகைப்பு அதிக வலிமையானதாகவும் பாதகமானதாகவும் இருக்கும். சில தகைப்புகள் பிள்ளையின் நாளாந்த வாழ்க்கையில் சாதாரணமாக இருப்பதுடன் சாதகமான தாக்கத்தையும் கொண்டிருக்கும். எனினும், அளவுக்கதிகமான தகைப்பானது பிள்ளைகள் புதிய சூழ்நிலைகளை அனுசரித்துச் செல்வதை பாதிக்கின்றன.

தகைப்பின் பாதகமான விளைவுகளானவை, 10 வயதிற்குக் குறைந்த பிள்ளைகள், குறைமாதத்தில் பிறந்த பிள்ளைகள், முரட்டுத் தன்மையுள்ள பிள்ளைகள், ஆண்பிள்ளைகள் அல்லது பிறப்பிற்கு முன்னர் தகைப்பை எதிர்நோக்கிய பிள்ளைகளில் அதிகமாக இருக்கும் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. வறுமையில் வாழும் பிள்ளைகள், வன்முறை சமுதாயங்களில் வாழும் பிள்ளைகள், பாடசாலைகளில் பயமுறுத்தப்பட்டு தொல்லைக்குட்படும் (Bullied) பிள்ளைகள் ஆகியோரும் வெளிவாரியான தகைப்பிற்கு உட்படுகிறார்கள்.

வயதிற்கேற்ப பிள்ளைகளின் தகைப்பு அறிகுறிகளை பின்வருமாறு நோக்கலாம்:

## 5 வயது வரைக்குமான பிள்ளைகளின் தகைப்பு அறிகுறிகள்:

பேச்சு வளர்ச்சியடையாத நிலையில் தமது துக்கத்திற்கான காரணத்தை எல்லாப் பிள்ளைகளாலும் கூறமுடியாது. எனினும் அவர்களின் நடத்தைகள் அவர்களது தகைப்பு மட்டத்தை வெளிப்படுத்திக் காட்டும்.

பச்சிளம் குழந்தைகள், தளர்நடை போடும் குழந்தைகள், முன்பள்ளிப் பருவத்தினர் ஆகியோர் பெற்றோருடன் ஒட்டிக் கொள்ளுதல், சாதாரண நிலையை விட அளவுக்கதிகமாக அழுதல், காரணமில்லாமல் கோபத்தை வெளிப்படுத்தல் (temper tantrums), பின்வாங்கும் நடத்தைகளை வெளிக்காட்டல் (விரல் சூப்புதல், படுக்கையை நனைத்தல், இருட்டைக் கண்டு அச்சப்படல் போன்றன), முன்னும் பின்னுமாக ஆடிக் கொண்டிருத்தல், எதிர்பாராத விதமாக ஆடைகளுடன் மலசலம் கழித்தல். அழுதல், காரணமில்லாமல் கோபத்தை வெளிப்படுத்தல், இரவில் அடிக்கடி நித்திரை கலைதல், என்பன அபிவிருத்திக் கட்டத்தின் சாதாரண நிகழ்வுகளாகும்.

நிற்பதற்கு, நடப்பதற்கு, கதைப்பதற்கு அல்லது ஏனைய அபிவிருத்தி கட்டங்களை கற்கும் போது பிள்ளைகள் விரக்தியடைவது சாதாரணமாகும்.

அவர்கள் ஓர் சில நாட்களுக்கு அதிகமாக அழுவார்கள் பின்னர் அதிலிருந்து விடுபட்டு சாதாரணமாக இயங்கத் தொடங்குவார்கள். இவ்வாறான அறிகுறிகளிலிருந்து அவர்கள் மீளாவிட்டால் இது தகைப்பின் அறிகுறியாக இருக்கலாம்.

இந்த வயதிற்குரிய தகைப்பின் ஏனைய அறிகுறிகள்: கோபம், அடிக்கடி விபத்திற்குட்படல், திடீர் அல்லது பலத்த சத்தங்களுக்கு

தொடர்தல் 58ம் பக்கம்

# தகைப்பும் இளம்...

57ம் பக்கத் தொடர்ச்சி...

இலகுவில் பாதிப்படைதல், போன்றன ஓர் பச்சிளம் சிசு அல்லது தளர்நடை பயிலும் குழந்தையின் தகைப்பிற்கான ஓர் அறிகுறி யாகும்.

## 6-11 வயதுடைய பிள்ளைகளின் தகைப்பு அறிகுறிகள்:

பாடசாலை செல்லும் வயதுடைய பிள்ளை-கள் தாம் தகைப்பிற்குட்பட்டுள்ளார்கள் என உங்களுக்கு கூறக் கூடியவர்களாக இருப்பர். அவர்கள் வாயால் கூறமுடிந்தாலோ அல்லது கூற முடியாவிட்டாலும் கூட உடலியல்ரீதி-யான வருத்தங்களை தெரியப்படுத்துவதுடன் வித்தியாசமான நடத்தைகளையும் வெளிப்-படுத்துவர்.

தகைப்பிற்குட்படும் பாடசாலை செல்லும் பிள்ளைகள், வயிற்று வலி, தலை வலி, மூச்சுக்குழாய் நோய்கள் ஏற்படல், நித்திரை செய்வதில் பிரச்சனைகள், உணவில் விருப்ப-மின்மை அல்லது எந்த நேரமும் உணவு உண்பதில் விருப்புக் கொண்டிருத்தல், நோய் களிலிருந்து குணமடைதல் தாமதமாக இருத்தல், தெத்திப் பேசுதல், அடிக்கடி சிறுநீர் கழிக்க வேண்டியிருத்தல் அல்லது பற்களை நறும்பிக் கொண்டிருத்தல், (குறிப்பாக தூக்-கத்தின்போது) தமது மூக்கை தோண்டுதல், நகங்களைக் கடித்தல், இரவில் பயங்கரமான கனவுகளைக் காண்தல் போன்ற அறிகுறிக-ளைக் கொண்டிருப்பர். தமது வயதிற்கொவ்-வாத நடத்தைகளான இரவில் படுக்கையை நனைத்தல், காரணமின்றிய அளவுக்கதிக கோபம் அல்லது குழந்தைகளைப் போல் பேசுதல் (baby talk) போன்றவற்றையும் கொண்டிருப்பர்.

தகைப்பிற்குட்படும் பிள்ளைகள் பொய் சொல்லுதல், மற்றவர்களை துன்புறுத்தல், அதிகாரத்திற்கு கீழ்ப்படியாதிருத்தல், கோபத்-தை வெளிப்படுத்தல், அடிக்கடி எரிச்சலடைதல், அழிவை ஏற்படுத்தக் கூடிய நடத்தைகளில் ஈடுபடல், மற்ற பிள்ளைகளை அடித்தல், பாடசாலைக்குப் போக மறுத்தல், பாடங்களில் மதிப்பெண் குறைதல். எந்நேரமும் குறை-கூறிப் புலம்பிக் கொண்டிருத்தல், மனஅழுத் தத்திற்கு உட்படல் (Depressed), சாதாரண நடவடிக்கைகளில் ஆர்வம் இழத்தல், கவலை-யடைந்து காணப்படல் போன்ற நடத்தை-களையும் வெளிக்காட்டுவர். இவர்களால் ஒரு விடயத்தில் மனதை ஒருமுகப்படுத்த முடி-யாமல் இருப்பதுடன், அழுதல், சோம்பேறித் தனமாக இருத்தல், அடிக்கடி விபத்திற்குட்-படல், நண்பர்களை இழத்தல் போன்ற நடத்தைகளையும் கொண்டிருப்பர்.

## 12-18 வயதுடைய பிள்ளைகளின் தகைப்பு அறிகுறிகள்:

வளரிளம் பருவ (Adolescents) மற்றும் முன்வளரிளம் பருவ (Pre adolescents) பிள் ளைகள், மற்ற எல்லா பிள்ளைப்பருவத்தினரை விட அதிகளவில் தொடர்பாடக் கூடியவர்க-ளாக இருந்த போதிலும் குறைந்தளவிலேயே தொடர்பாடுபவர்களாக உள்ளனர். அத்துடன் தம்மை எதுவும் பாதிக்கவில்லை என மறுப் பதுடன் பேசுவதற்கும் மறுப்பர்.

தகைப்பிற்குட்படும்போது, வளரிளம் பருவத்-தினர் ஆரம்ப பாடசாலை வயது பிள்ளைக-ளைப் போலவே தமது தகைப்பு நிலையைக் கையாள முனைவர். எனினும் அவர்களது பின்வாங்கும் செயல்முறைகள், இரவில் படுக்கையை நனைத்தல், குழந்தைகளைப் போல பேசுதல் என்பதாக இராது. இவர்கள் வளர்ந்தோரின் பொறுப்புக்களை ஏற்க விரும்-பாததுடன் அதிகமாக விளையாட்டில் ஈடுபட விரும்புவார்கள்.

தகைப்பிற்குட்படும் வளரிளம் பருவத்தினர் தமது ஆரோக்கியம் அல்லது வாழ்க்கையை பணயம் வைக்கும் ஆபத்தான நடத்தைகளிலும் ஈடுபடுவர். இவர்கள் தற்கொலை செய்யும் எண்ணங்களைக் கூட கொண்டிருப்பர்.

## ஆசிரியர்களும் பெற்றோரும் பிள்ளைகளுக்கான தகைப்பை பல வழிகளில் தடுக்கவும் குறைக்கவும் முடியும்:

- தகைப்பை எதிர்நோக்க பிள்ளைக்கு உதவுங்கள். உதாரணமாக முதன் முதலில் பிள்ளையின் தலைமயிரை வெட்டுதல், பிள்ளைக்கு இளைய சகோதரனோ, சகோதரியோ பிறக்கப் போகும் நிலை போன்ற சந்தர்ப்பங்களில் அது தொடர்பாக பிள்ளைக்கு விளக்குவதன் மூலம் பிள்-ளைகளை தயார்படுத்தலாம். பிள்ளைகளை அளவுக்கதிகமாக தயார்படுத்தலானது சிலவேளை அந்த நிகழ்வை விட அதிக தகைப்புக்குள்ளாக்கலாம்.
- பிள்ளைகள் தமது உள்ளுணர்வுகளை வெளிப்படுத்தக் கூடிய விளையாட்டுக்களை ஊக்குவிக்கும் சூழலை ஏற்படுத்தலாம்.
- பிரச்சனைகளை சமாளிக்கும் வழிமுறை-களை இனங்காண பிள்ளைகளுக்கு உத வுங்கள். உதாரணமாக, அவர்களை யாராவது பரிகாசம் செய்தால் உதவி கேட்கும்படியும் கூறுங்கள். உங்களுக்கு அது விருப்பமில்லை என கூறுதல், அந்த இடத்தை விட்டு அகன்று செல்லல். சமா ளிக்கும் வழிமுறைகள் போன்றன பிள்ளை-களுக்கு தகைப்புள்ள நிலைமைகளில் மிகவும் பயனுள்ளதாகும்.
- பிள்ளைகள் பொருத்தமான வழிமுறை-களில் தமது உணர்வுகளை இனங்கண்டு, ஏற்றுக் கொண்டு வெளிப்படுத்த உதவுங் கள்.
- தமது உடலையும் உள்ளத்தையும் தளர்த்-தும் (Relaxation techniques) நுட்பங்களை பிள்ளைக்கு கற்பியுங்கள். 'ஆழமாக மூன்று தரம் மூச்செடுத்தல்', 'பின்னிருந்து எண்களை எண்ணுதல்', 'உங்கள் தசைநார்களை இறுக்கி பின் தளர்த்துதல்', விளையாட்டுக் களியை (Play dough) வைத்து விளையா டச் செய்தல், 'நடனம்', 'ஓர் விருப்பமான இடத்தை கற்பனைசெய்து அந்த இடத் திற்கு மனதினால் செல்லுதல்'
- தகைப்பு முகாமைத்துவத்தை ஊக்குவிக்கு-முகமாக 'நிச்சயமாக நிகழும்' (Positive talk) என்ற வகையான சொற்களை கூறிப் பழகல். உதாரணமாக: "நான் முயற்சிப்-பேன், என்னால் இதைச் செய்ய முடியும் என நான் நினைக்கிறேன்".

இத்தகைய வழிமுறைகளை மேற்கொள் வதன் மூலம் சிறு பிள்ளைகட்கு ஏற்படும் தகைப்புக்களை குறைக்க உங்களால் உதவ முடியும்.

**உசாத்துணை:**

- http://www.athealth.com/Consumer/disorders/childstress.html
- http://kidshealth.org/parent/emotions/feelings/stress.html
- http://www.relaxationexpert.co.uk/SignsOfStressInChildren.html
- http://www.extension.umn.edu/distribution/familydevelopment/components

jeevathisairajah@thaiveedu.com

■ ■ ■

**McCowan & Steele**

**Basement வாடகைக்கு**

(செப்ரெம்பர் முதல்)

1 Bed Room Basement (தனி வழி)

**Ragulan: 647 782 2777**

**Protection for you and your loved ones!**

NOBLE REIGN

NR

**NOBLE REIGN INC**

**SECURITY & COMMUNICATIONS**

Since 1999

**416.826.5831** www.noblereign.com

SERVING OUR COMMUNITY FOR MORE THAN 15 YEARS

**We are moving to:**

**3341 Markham Rd. Unit B101**

**Blue Building - Markham & Steeles**

**Scarborough, M1X 0A6**






TRUE HAIR REPLACEMENT
& COSMETICS CENTRE INC.

Thinning hair?

We specialize in laser hair rejuvenation for women and men with beginning stages of thinning hair.

Get your confidence back.

Schedule a private and confidential consultation and let us give you a FREE scalp + hair analysis.

Specializing in hair transplant + non-surgical.

Visit our website
www.truehair.ca

அறுவைச் சிகிச்சையற்ற சிகை மாற்றீடு

சேவைகள்:

- அறுவைச் சிகிச்சையற்ற சிகை மாற்றீடு அறுவைச்சிகிச்சைவழி சிகை நடுகை
- பெண்களுக்கான சிகையுதிர்வு தொடர்பான தீர்வுகள்
- சிகை நடுகைத் திருத்தங்கள்
- சிகை வேர்த்தொகுதி அகழ்வு
- தோல் பராமரிப்பு

TRUE HAIR REPLACEMENT

TRUE HAIR REPLACEMENT
& COSMETICS CENTRE INC.
Tel: 416-492-7873
Fax: 416-492-8664
www.truehair.ca



STOUFFVILLE





Free Hold Town House
$388,000

Ellesmere Rd / Markham




Bungalow House
$429,000

WHITBY




5 Bed & 4 Washroom
$489,000

AJAX




6 Bed & 4 Washroom
$489,900

Book Now with $10,000 Only

4 Bedroom
4 Washroom
FREE HOLD
Townhouse
1770 Sq.feet
Huge Backyard
Pickering
$439,000



Free Upgrade for $12,000 - Move in for Spring 2015
New Appliances & Deck or Hardwood



HomeLife Galaxy Real Estate Ltd.
111 Grangeway Ave,Toronto, ON M1H 3E9.

கண்ணன்
Call: 647-829-7979

Kannan Maheshwaran
Sales Representative
valvaikannan@gmail.com


HONDA
CIVIC HOLIDAY
BONUS
JULY 30 - AUGUST 5
GET
$500*
BONUS ON ALL
2014 HONDA CIVIC MODELS!
CIVIC SALES EVENT
on Monday
August 4th.
Open on Civic Day
from 9.00 am to 6.00 pm
2014 CIVIC DX
$39 @ 0.99% APR
WEEKLY
LEASE FOR 60 MONTHS
WITH $0 SECURITY DEPOSIT.
EXCLUDES LICENSE AND HST.
$0 DOWN PAYMENT
PLUS GET
$500*
FROM 7.3 CITY / 5.5 HWY (L/100 KM)
CIVIC 16
Canada's
best-selling car
16 years in a row.
Shan சர்வானந்தன்
Direct : 416 720 1184
atheesans@formulahonda.com
2240 Markham Road,
Scarborough, ON
M1B 2WA (Markham & Finch)
Office: 416 754 4555
www.formulahonda.com
ராஜா தர்மலிங்கம்
Direct : 647 833 4998
rajah@formulahonda.com

## Warden / St. Clair



**$199,900**

Condo Apt 1 Bedroom, 1 Washroom, Low Maintenance, Gym Facilities, Ensuite Laundry, Walking Distance To Warden Subway


## King W / Thornton



**$243,000**

Semi-Detached2-Storey 3+1 Bdrm, 4 Washrooms, Open Concept Kitchen With A Large Breakfast Area, Full Finished Basement

## Ellesmere / Neilson



**$279,900**

Condo Townhouse3-Storey, 3Bdrm, 2 Washrooms, Laminate Floors, Unit Backs Onto Open Space, Easy Access To 401,Ttc

## Morningside Ave/Lawrence



**$294,900**

Condo Townhouse2-Storey, 3+1 Bedroom, 2 Washrooms, New Big & Bright Kitchen, Laminate Floor, Steps to Everything


## Taunton / Simcoe



**$319,998**

Detached2-Storey, 3+1 Bdrm,4 Washroom, Open Concept Main Floor,Eat In Kitchen, Main Floor Laundry, Private Back Yard


## Sandlewood / Richvale



**$329,900**

Semi-Detached2-Storey, 3 Bdrm, 2 Washroom, Fully Fenced Pie Shaped Lot, Finished Basement W/ Ceramic Floors & Wood Stove

## Warden / Finch



**$409,999**

Condo Townhouse2-Storey, 4 Bdrm, 2 Washroom, Updated Ceramic Tile And Laminate Floor, Updated Kitchen, Walk To All Amenities

## Salem / 401




**$419,000**

Semi-Detached2-Storey, 3 Bdrm, 3 Washroom, Tastefully Upgraded And Designed With Top Of The Line Appliances, Hardwood Floor

## E. Morningside/ S. Coronation



**$449,000**

Detached Backsplit 3, 4 Bedroom, 2 Washrms, Landscaped Yard, 2 Gas Fireplaces, Hardwood & Laminate Floors, New Furnace & Cac 2013

## 9th Line & S Of 16th Ave



**$474,000**

Att/Row/Twnhouse3-Storey, 3 Bdrm, 3 Washrooms, Upgraded W/ Hardwood & Ceramic Floor On M/F, Huge Kitchen W/ Eat-In & Centre Island

## 9th Line / Hwy 7




**$499,000**

Semi-Detached2-Storey, 3+1 Bdrm, 4 Washrooms, Open Concept Layout, Sun-Filled With Many Large Windows, Modern Kitchen

## Westney N Of Rossland



**$499,000**

Detached2-Storey, 4 Bdrms, 3 Washrooms, Double Car Garage, Mn Flr Laundry/W/Access To Garage, Built By Great Gulf Homes

## Mccowan/Major Mackenzie



**$535,000**

Att/Row/Twnhouse3-Storey, 2+1 Bedrooms, 4 Washrooms, Smoothed Ceiling On Each Floor, Beautifully Upgraded Washrooms


## Yonge & Old Colony



**$548,500**

Att/Row/Twnhouse2-Storey, 3 Bdrm, 3 Washrms, Open Concept Over 1900 Sqft, 9 Ft Ceilings, Hardwood Flooring Through Out The Main Floor

## Littles Rd. & Sewells Rd



**$578,800**

Detached 2-Storey, 4+1 Bdrm, 4 Washrooms, Large Lot With 53Feet Frontage, 2407 Sq.Ft, Upgraded Kitchen With Granite Counter Top

## 9th Line And Bur Oak



**$569,900**

Att/Row/Twnhouse2-Storey, 4 Bdrm, 3 Washrooms, 9Ft Ceilings, Hardwood Flrs On Main Flr And 2nd Flr Foyers, Granite Kitchen Counters

## Dufferin & Clark



**$579,900**

Detached2-Storey, 3+1 Bdrm, 4 Washrooms, Sought After Vaughan, New B/I Dishwasher, Close To Schools, Shopping & Mall

## Woodbine & 16th Ave



**$599,000**

Condo Townhouse2-Storey, 3+1 Bdrm, 4 Washrooms, Approx 2000 Sf, Main Flr W/9' Ceiling, Fin Bsmt Open Concept W/1 Bdrm & 4Pc Bath

## S.Lawrence/E.Beechgrove



**$629,000**

DetachedBungalow-Raised, 3Bdrm, 3Washrms, Granite Island & Counters,3 Luxurious Baths/W/ Jacuzzi & B/I's, Modern Outside Venetian Stucco

## Mavis & Novo Star



**$689,900**

Detached2-Storey, 4+1 Bdrm, 4 Washrooms, Great Functional Layout With Separate Living, Dinning And Family Room, Close to 407 &401

# Yathavann Selvarajah

Sales Representative



RE/MAX

**RE/MAX CROSSROADS REALTY INC.,**

BROKERAGE

Never too busy, for any of your Referrals!

**416-992-4474** (24 hrs)

**416-491-4002** (Office)

www.buzzmetoronto.com

Not intended to solicit properties currently listed for sale

# FLY MORE AND PAY LESS

AIR CANADA · SriLankan

TORONTO → PARIS/FRANKFURT/LONDON → COLOMBO — $1175* Taxes included

Lufthansa · AIR CANADA

TORONTO → FRANKFURT → CHENNAI/MUMBAI/DELHI — $1090* Taxes included

JET AIRWAYS

TORONTO → BRUSSELS → MUMBAI → COLOMBO — $1160* Taxes included

JET AIRWAYS

TORONTO → BRUSSELS/LONDON → MUMBAI → CHENNAI — $1125* Taxes included

*Seasonality restrictions apply. Price subject to availability

# Dream Vacation Packages

## INDIA

Incredible India



India's History goes back at least five thousand years making it oldest culture in the world. Its chequered fortune is reflected in the infinite verities of its monuments - forts, Palaces and temples.

In this tour we will take you some of the classical and best-known sites of India including the Capital City - Delhi where every crumbling wall has a story to tell. The city has lived through wars and resurrection, repeatedly rising from the ashes. The city of Royal Splendor - Jaipur with its magnificent fort - Amber Fort and Hawa Mahal - The landmark of this beautiful Pink city.

Agra - City of love and home to one of the seven wonders of the world - the Taj Mahal.

The temples of Khajuraho, where Life, in every form and mood, has been captured in stone. Varanasi - Oldest city in the world, the city of Nirvana and Ghats where people still are having their daily prayers and rituals and Temples and centuries old culture. The mix of all these attractions makes a perfect blend of Classical Journey.

- Day1: Delhi
- Day2: Delhi /Jaipur
- Day3: Jaipur
- Day4: Jaipur /Agra
- Day5 : Agra / Khajuraho
- Day6 : Khajuraho
- Day7: Khajuraho/Varanasi
- Day8: Delhi

## THAILAND

amazing THAILAND



Thailand is often referred to as a golden land, not because there is precious metal buried underground but because the country gives off a certain lustre, be it the fertile rice fields of the central plains, white sandy beaches or the warm hospitality of its citizenry. Thailand's cool season runs from November until the end of February. With its low humidity, relatively low temperatures and clear skies, the cool season is the best time to visit, though regular days of high 20s and low 30s might leave you wondering just who came up with the term 'cool'. It's also the peak tourist season, so expect lots of new friends at the more popular spots like the islands and major towns.

- Day 1: Arrive in Saigon
- Day 2: Saigon / Phnom Penh
- Day 3: Phnom Penh
- Day 4: Phnom Penh / Siem Reap
- Day 5: Angkor Wat
- Day 6: Angkor Wat
- Day 7: Siem Reap
- Day 8:Bangkok
- Day 9:Bangkok/Pataya
- Day 10: Depart from Bangkok

## SERANDIB TRAVEL 1

*Your Satisfaction is Our Success*

உங்கள் மனநிறைவே எங்கள் வெற்றியின் இரகசியம்

7 Eastvale Dr, Suite 207
Markham, ON. L3S-4N8

**Tel: 905.472.7500/416.750.0009**

**Toll Free: 1.888 .207.0902**

www.serandibtravel.com
info@serandibtravel.com

SriLankan · AIR INDIA · Emirates · ETIHAD · AIR CANADA · QATAR · JET AIRWAYS · GULF AIR · KUWAIT AIRWAYS · IATA · tico.ca

வெளிநாட்டவர்களின் தமிழ்ச் சேவை வரிசையில்

# பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி



முருகேசு பாக்கியநாதன்

### அறிமுகம்:

வடமராட்சி என்பது யாழ் குடாநாட்டின் தலையாகும். இப்பிரதேசம் சகலவழிகளிலும் புகழ் பூத்து வளர்ந்த ஒரு பாரிய நிலப்பரப்பாகும். குறிப்பாகக் கல்விக்குப் பெயர்போன இடம் என்று போற்றப்பட்டது. அத்தோடு இப்பிரதேசத்தினை யாழ்ப்பாணத்தின் மூளை என்பர். ஆங்கிலேயர் வருமுன்பே இங்கு ஒரு கல்விப் பாரம்பரியம் வேர்விட்டு வளர்ந்துள்ளது. இங்கு பல திண்ணைப் பாடசாலைகள் இருந்துள்ளன.

ஆங்கிலேயர் வருகையின் பின்னர் பருத்தித்துறை மெதடிஸ்த்த மிஷன் மகளிர் பாடசாலை, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி, உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் மகளிர் கல்லூரி, கரவெட்டி திருஇருதயக் கல்லூரி ஆகிய பெரிய கிறிஸ்தவ கல்லூரிகளும் மெதடிஸ்த மிஷனாலும், அமெரிக்க மிஷனாலும், கத்தோலிக்க மிஷனாலும் முறையே நிறுவப்பட்டன. வேறு பல பாடசாலைகளும் மிஷனரிகளால் தமிழ்ப் பாடசாலைகளாக ஆரம்பிக்கப்பட்டன. இதனை விட சைவர்களால் ஆரம்பிக்கப்பட்ட பல பாடசாலைகள் இங்கிருந்து பல கல்விமான்களை உருவாக்கிக் கொண்டிருந்தன. அவற்றில் சில பாடசாலைகளை நோக்கும் போது நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி, துன்னாலை ஞானாசாரியார் கல்லூரி, வதிரி தேவரையாழி இந்துக் கல்லூரி, பருத்தித்துறை வேலாயுதம் வித்தியாலயம், புட்டளை மகா வித்தியாலயம் இவ்வாறாகப் பல பாடசாலைகள் அமைந்துள்ளன. வடமாகாணத்திலேயே அதி கூடிய பாடசாலைகள் கொண்ட கல்வி வலையமாக வடமராட்சி அமைந்துள்ளதிலிருந்து இப்பகுதியின் கல்வி எவ்வாறு இருந்தது என்பதனை அறிந்துகொள்ளலாம். முன்பொரு காலத்தில் அரசதிணைக்களங்கள், வங்கிகள் போன்றவற்றில் வடமராட்சி மக்களே அதிகமாகக் தென்னிலங்கையிலும் ஏனைய இடங்களிலும் கடமையாற்றினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இதற்கு முக்கிய காரணம் ஹாட்லிக் கல்லூரியின் தரமான மாணவர்கள் உருவாக்கமேயாகும்.

### ஹாட்லிக் கல்லூரி:

மேற்கூறிய காரணிகளுக்கு ஹாட்லிக் கல்லூரி பெரும் பங்காற்றியிருக்கிறதென்றால் அதில் மிகையில்லை என்றே கூறவேண்டும். இப்பாடசாலை 1938ம் ஆண்டு வெஸ்லியன் மெதடிஸ்த்த மிஷன் திருச்சபையால் நிறுவப்பட்டது. யாழ்ப்பாணத்தில் மெதடிஸ்த்த சபையால் நிறுவப்பட்ட நான்காவது பாடசாலையாகும். பருத்தித்துறையில் ஹாட்லிக் கல்லூரி அமைந்துள்ள வளாகத்தில் நிறுவப்பட முன்னர் 1823ல் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்பாடசாலை அமைந்துள்ள வளாகத்தில் பெண்களுக்கும் ஆண்களுக்குமான ஒரு ஆரம்ப பாடசாலை முதலில் அமைக்கப்பட்டதனை மெதடிஸ்த்த பெண்கள் உயர் பாடசாலை பற்றிய கட்டுரையில் பார்த்தோம். மேற்படி இரண்டு பாடசாலைகளுடன் யாழ் மத்திய கல்லூரி, யாழ் வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை ஆகிய நான்கு பாடசாலைகளையும் நிறுவியவர் வண. பிதா டாக்டர் பீற்றர் பேசிவல் அவர்களாகும். இந்த நான்கு பாடசாலைகளோடு மட்டும் அவர் நின்றுவிடவில்லை. குடாநாடெங்கும் நிறுவப்பட்ட மெதடிஸ்த்த மிஷன் பாடசாலைகள் அத்தனைக்கும் காரணகர்த்தாவானவர்கள் அவர் மதத்தவர்களும் பேர்சிவல் பாதிரியார் அவர்களுமேயாகும். இந்த வகையில் யாழ் மக்கள் அவருக்கு பாரிய நன்றிக்கடன் செலுத்தக் கடமைப் பட்டவர்களாயுள்ளனர். கிறிஸ்த்தவர்கள் மட்டுமல்லாது சைவ சமயத்தவர்கள் பலரும் கல்வியால் பயன்பெற்றனர். வடமராட்சியில் புலோலி, மாதனை, கற்கோவளம், துன்னாலை மேற்கு, கட்டைவேலி, தம்பசிட்டி, வதிரி, நெல்லியடி ஆகிய இடங்கள் உட்பட பத்து தமிழ்ப் பாடசாலைகளை ஹாட்லிக் கல்லூரி நிறுவிய அந்தக் காலப் பகுதியை அண்மித்ததாக மெதடிஸ்த சபையினர் நிறுவினார்கள். இப்பாடசாலைகள் பிற்காலத்தில் வளர்ச்சி பெற்று சிறந்த கல்வியினை வழங்கும் கூடங்களாயின. இவ்வாறாக வதிரியில் 1858ம் ஆண்டு உருவாக்கப்பட்டதே 'வதிரி வடக்கு டிவிசன் மெதடிஸ்த்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை' என்ற பாடசாலையாகும். இப்பாடசாலை சமூகத்தில் ஒடுக்கப்பட்டவர்கள் எனப்படுவோர் வாழ்ந்தபகுதியில் அவர்களுக்கென ஒரு தனிப் பாடசாலையாக நிறுவப்பட்டது. வடக்குக் கிழக்கு மாகாணத்திலே சிறுபான்மைத் தமிழரை மையப்படுத்தி உருவாகிய முதல் கிறிஸ்தவ பாடசாலை இப்பாடசாலையாகும். இப்பாடசாலை அமைக்கப்பட்டது கல்வி மறுக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட தமிழர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்தது எனலாம். இதன் மூலம் இச்சமூகத்தினரிடையே ஒரு கல்விப் பாரம்பரியம் ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்தே அதே சமூகச் சைவ சமயத்தவர்களுக்கென திரு. சூரன் அவர்களால் வதிரி தேவரையாழி இந்துக் கல்லூரி 1914ம் ஆண்டு தொடங்கப்பெற்று கடந்த ஒரு நூற்றாண்டாக சிறந்த கல்வித் தொண்டாற்றி வருவது குறிப்பிடத்தக்கது.



### கிறிஸ்து தேவாலய பாடசாலை (Christ Church School):

கிறிஸ்து தேவாலய பாடசாலை எனப்பட்ட ஹாட்லிக் கல்லூரி யாழ்ப்பாணத்தின் முன்னணிக் கல்லூரிகளில் ஒன்றாகத் திகழ்ந்தது. இக்கல்லூரியானது முதலில் நிறுவப்பட்ட போது மெதடிஸ்த்த மகளிர் உயர் பாடசாலையும் ஆண்கள் பாடசாலையும் ஒன்றாக மகளிர்பாடசாலை வளாகத்திலேயே அமைந்திருந்தது பற்றி மேலே நோக்கினோம். 1874ம் ஆண்டு ஆண்கள் பாடசாலை தனித்துப் பிரிக்கப்பட்டு தற்போதைய ஹாட்லிக் கல்லூரி அமைந்துள்ள வளாகத்திற்கு மாற்றப்பட்டு 'கிறிஸ்து தேவாலய பாடசாலை' என்னும் பெயர் கொண்ட பாடசாலையென அழைத்தனர். அப்போது சாமுவேல் ஹென்ஸ்மன் என்பவர் அதிபராகவிருந்தார். பின்னர் 1916ம் ஆண்டு ஈ.எஸ். ஏப்ரகாம் அவர்கள் அதிபராகவிருக்கும் போது ஆசியாவின் கிழக்குப் பகுதிக்கு மெதடிஸ்த்த மிஷனரியினரின் செயலாளராகக் கடமையாற்றிய வண. மார்ஷல் ஹாட்லி என்பவர் பாடசாலைக்கு வருகை தந்து விஞ்ஞான ஆய்வு கூடத்திற்கான அடிக்கல்லை நாட்டினார். அவரது ஞாபகார்த்தமாக 'கிறிஸ்து தேவாலய பாடசாலை' என்ற பெயரினை மாற்றி 'ஹாட்லிக் கல்லூரி' என்ற பெயர் சூட்டப்பட்டது.

இன்று வரை இங்கு 20 அதிபர்கள் கடமையாற்றியுள்ளார்கள். முதல் அதிபராக ஹாட்லியின் ஆரம்பகர்த்தாவாக இருந்த டாக்டர் வண. பீற்றர் பேசிவல் அவர்களே சில காலம் 1838 – 1860 வரை மகளிர் பாடசாலை மற்றும் ஆண்கள் பாடசாலை இரண்டிற்கும் அதிபராகவிருந்தார். இதே காலப்பகுதியை அண்டி 1834 – 1851 காலப்பகுதியில் யாழ். மத்திய கல்லூரிக்கும் அதிபராகவிருந்து ஒரே நேரத்தில் இரண்டு பாடசாலைகளையும் நிர்வகித்தார். இரண்டாவதாக 1861 – 1868 காலப்பகுதியில் அதிபராகக் கடமையேற்றவர் வண.டி.பி.நைல்ஸ் அவர்களாகும். இவரும் 1870 - 1872 காலப்பகுதியில் யாழ். மத்திய கல்லூரியில் அதிபராகக் கடமையாற்றினார். இவர் ஓர் இலங்கைத் தமிழராவார். தமிழர்களில் முதல் பாதிரியாராகவும் முதல் அதிபராகவும் கடமையாற்றிய தமிழர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது. பேர்சிவல் பாதிரியார் அவர்கள் அதிபராக இருந்திருப்பினும் அவருக்கு வேறு பாடசாலைகளின் கடமைகள் மற்றும் மிஷனரிக் கடமைகள் இருந்ததனால் டி.பி. நைல்ஸ் அவர்களே முழுமையான பாடசாலை நிர்வாகத்தினையும் கவனித்துக் கொண்டார்.

### கடமையாற்றிய அதிபர்கள்:

| | |
|---|---|
| வண.டாக்டர் பீற்றர் பேசிவல் | 1838 – 1860 |
| வண. டி.பி. நைல்ஸ் | 1861 – 1868 |
| சாமுவேல் ஹென்ஸ்மன் | 1868 – – |
| ஜே.சி.ரி.ஷெறாட் | – – 1878 |
| விபரங்கள் தெளிவில்லை | 1879 – 1905 |
| எஸ்.ஏ. போல்பிள்ளை | 1906 |
| எஸ்.எஸ். கணபதிப்பிள்ளை | 1906 – 1912 |
| ஈ.எஸ். ஏப்பிரகாம் | 1912 – 1915 |
| சி.பி. தாமோதரம் | 1915 – 1943 |
| கே. பூரணம்பிள்ளை | 1943 – 1967 |
| எஸ். இரட்ணசபாபதி | 1967 – 1971 |
| சி. இராஜதுரை | 1971 – 1973 |
| பி. ஏகாம்பரம் | 1973 – 1975 |
| டப்பிள்யு.என்.எஸ் சாமுவேல் | 1975 – 1985 |
| பி. பாலசிங்கம் | 1985 – 1993 |
| கே. நடராஜா | 1993 – 1997 |
| பி. வேணுகோபாலவாணிதாசன் | 1997 – 1999 |
| என். குணசீலன் | 1999 – 2000 |
| எம். சிறிபதி | 2000 – 2002 |
| வி. பத்மநாதன் | 2003 – 2005 |
| என். தெய்வேந்திரராஜா | 2005 – |

1906ம் ஆண்டு வரையும் வெளிநாட்டவராட்சிக் காலத்திலும் பீற்றர் பேசிவல், சாமுவேல் ஹென்ஸ்மன், ஆகிய இரு வெளிநாட்டவர்களே அதிபர்களாகக் கடமையாற்றியுள்ளனர். நாம் ஏற்கனவே பார்த்த ஏனைய பாடசாலைகளில் வெளிநாட்டவராட்சிக் காலம் வரையிலோ அன்றி அதற்குப் பின்னர் சில காலமோ வெளிநாட்டவர்களே அதிபர்களாகக் கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது. ஆனால் இங்கு இரண்டாவது அதிபராக 1861 – 1868 வரை கடமையாற்றிய வண. டி.பி. நைல்ஸ் என்னும் தமிழர் இருந்துள்ளார். இவரின் பின்பு சாமுவேல் ஹென்ஸ்மன் என்னும் வெளிநாட்டவர்களே அதிபராகக் கடமையாற்றினர். அடுத்தாகக் அதிபராகக் கடமையாற்றியவர் ஜே.சி.ரி. ஷெறாட் என்பவர் இவர் அதிபர் பூரணம்பிள்ளை அவர்களின் தாய் வழிப்பேரனாவார். இவரது காலத்தில் 7ம் வகுப்பு வரையுமே வகுப்பு இருந்துள்ளது. அப்போது இவரே தலைமை ஆசிரியராகக் கடமையாற்றினார். அப்போது இரண்டு வகுப்பறைகளும் ஒரு பெரிய மண்டபமுமே இருந்தன. இவரே மேலும் வகுப்பறைகளைப் புதிதாக அமைத்துக் கொண்டார். இவரது நிர்வாகத்திறனால் பாடசாலையின் கல்வித் தரம் வளர்ந்தது. இதனால் இப்பாடசாலையினை 'ஷேறாட் பாடசாலை' என்றும் அக்காலத்தே அழைத்தனர். 1906ல் இருந்து தமிழர்களே அதிபர்களாகக் தொடர்ந்து கடமையாற்றியுள்ளார்கள் என்பதனால் அக்கல்லூரியே சிறந்த அறிவாளிகளையும் ஆசிரியர்களையும் உருவாக்கி, அவர்களையே அதிபர்களாக்கினார்கள் என்பதனை அறியமுடிகின்றது. இதனால் வடமராட்சியைச் சேர்ந்த அதிபர்களாக அவர்கள் அமைந்தமையினால் மிகுந்த அர்ப்பணிப்புடன் கடமையாற்றி சிறந்த மாணவர்களை உருவாக்கினர். ஹாட்லிக் கல்லூரியின் கல்விப் பாரம்பரியம் என்பது யாழ் குடாநாட்டில் மட்டுமல்ல இலங்கை முழுவதும் மிகவும் பிரபல்யமாகியது என்பது, பல தென்னிலங்கைச் சிங்களவர்கள் இங்கு கல்வி கற்றதன் மூலம் அறிந்து கொள்ளலாம். அக்காலத்தே முன்னணிப் பாடசாலைகளாகத் திகழ்ந்த யாழ். பரியோவான் கல்லூரி, யாழ். சம்பத்தரிசியார் கல்லூரி, யாழ்.மத்திய கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆகிய பாடசாலைகளிலும் பல சிங்கள மாணவர்கள் படித்தது குறிப்பிடத்தக்கது. ஹாட்லிக் கல்லூரியில் இன்றைய அரசின் முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்காவும் முன்னாள் அனுராதபுரம் பாராளுமன்ற உறுப்பினரும் அமைச்சரும் சபாநாயகராகவும் விளங்கிய கே.பி.இரட்நாயக்கா ஆகியவர்கள் படித்தது குறிப்பிடத்தக்கது. இதனைவிட பல சிங்கள இனத்தவர்கள் விடுதியில் தங்கிப் படித்துள்ளனர்.

### திரு.கே.பூரணம்பிள்ளை அவர்களது பொற்காலம்:

திரு.எஸ்.ஸ்ரீபன். பூரணம்பிள்ளை அவர்கள் 1943 – 67 வரை 24 வருடங்கள் அதிபராகக் கடமையாற்றிய காலம் ஹாட்லிக் கல்லூரியின் இரண்டாம் பொற்காலம் எனலாம். முதற் பொற்காலமாக 1915 – 43 வரை 28 ஆண்டுகள் தொடர்ந்து அதிபராக இருந்த சி.பி. தாமோதரம் அவர்கள் காலத்தினையும் ஹாட்லியின் வரலாற்றினை ஆய்ந்தவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். கே.பி காலத்தே அங்கு படித்த மாணவர்கள் மிகவும் கொடுத்து வைத்தவர்கள் என்றே கூறவேண்டும்.

இவர் வடமராட்சியின் துன்னாலை பெற்றெடுத்த புதல்வனாவார். துன்னாலை கட்டைவேலியில் மெதடிஸ்த்த பங்கு (பரிஷ்) ஒன்று அமைக்கப்பட்டு அங்கு சில குடும்பங்கள் மெதடிஸ்த்த சமயத்திற்கு மாறி சிறந்த கல்வியினைப் பெற்று முன்னேறியிருந்தனர். அதில் பூரணம்பிள்ளை அவர்களது குடும்பமும் ஒன்று. துன்னாலை மேற்கில் ஒரு மெதடிஸ்த தமிழ்க் கலவன் பாடசாலையும் நிறுவப்பட்டிருந்தது. இங்கேயே பூரணம்பிள்ளை அவர்கள் தனது மூன்றாம் வகுப்பு வரை தனது இளமைக் கல்வியைத் தொடங்கினார். இப்பாடசாலை இவரது வீட்டிற்கு அருகில் இருந்தது. பின்னர் பருத்தித்துறை, மெதடிஸ்த்த மிஷன் பெண்கள் உயர் பாடசாலையில் கல்வியைத் தொடர்ந்து, உயர் கல்வியை ஹாட்லிக்கல்லூரியில் தொடர்ந்தார். ஹாட்லியில் இவரது தாய்வழிப்பேரனார் ஜே.சி.ரி.ஷெறாட் அவர்கள் தலைமை ஆசிரியராகவும் இவரது தந்தை எஸ்.எஸ். கணபதிப்பிள்ளை அவர்கள் அதிபராகவும் கடமையாற்றியவர்களாவர். பி.ஏ பட்டதாரியான எஸ்.எஸ். கணபதிப்பிள்ளை அவர்கள் அப்புக்காத்தாகவும் இருந்தார். அத்தகைய ஒரு தலைமைத்துவப் பண்புகொண்ட பின்னணியுடைய குடும்பத்தில் இருந்து பூரணம்பிள்ளை அவர்களும் வந்தமையினால் பேரனார் கட்டிக்காத்ததும், தந்தை வகித்த அதிபர் பதவிக்கும் மிகப் பொருத்தமானவராக இருந்தார்.

ஹாட்லிக் கல்லூரியில் கற்கும்போது மேற்றிகுலேஷன் பரீட்சையில் சித்தியெய்தி இந்தியப் பட்டதாரியாக வெளிவந்தார். இதன் பின்பு சிறந்த அதிபராகத் திகழ்ந்த சி.பி. தாமோதரம் அவர்கள் கடமையாற்றிய போது 11 வருடங்கள் ஆசிரியராகக் கடமையாற்றினார். இவரை ஆசியர்களும் மாணவர்களும் கே.பி. சேர் என்றே அழைத்தனர். அதன் பின்னர் தாமோதரம் அவர்கள் 1943 இல் ஓய்வு பெற்றபோது பூரணம்பிள்ளை

தொடர்தல் 64ம் பக்கம்

# பருத்தித்துறை ஹாட்லி...

63ம் பக்கத் தொடர்ச்சி...

அவர்கள் அதிபராகக் கடமையேற்றார். கே.பி அவர்களின் உடற் தோற்றம் ஒரு தனித் தன்மை வாய்ந்தது. ஒரு ஆளுமை மிக்க தோற்றமுடையவர். ஆஜானுபாகுவான உயரம் கொண்டவர், வசீகர முகத்தோற்றம், யாரையும் வசீகரிக்கும் புன்சிரிப்பு, மேற்கத்தைய உடையணிந்து கையில் நடைத் தடியுடன் உலாவருவார். இத்தகைய ஒரு தனித்தோற்றமும் அவரது குடும்பப் பாரம்பரிய ஆளுமையும் அவரது தனிப்பட்ட ஒழுக்கமும், நேர்மையும் அவரை ஒரு சிறந்த அதிபராக வடபகுதியில் உயர்த்திக் காட்டியது. அதன் காரணமாக ஒரு கல்வி மேம்பாடுடைய ஒழுக்கமான மாணவர் சமுதாயத்தினை கட்டியெழுப்ப முன்னின்றுழைத்து



அதில் வெற்றியும் கண்டார். மிகவும் கண்டிப்பு நிறைந்த அதிபராக ஆசிரியர்களிடத்திலும் மாணவர்களிடத்திலும் பெற்றோர்களிடத்திலும் தனது ஆளுமையை வெளிப்படுத்தி அதன் மூலம் சிறந்த பலனையும் அறுவடை செய்துகொண்டார். தாய் வழிப் பேரன் ஜே.சி.ரி.ஷெறாட் பாடசாலை என்று ஹாட்லி எவ்வாறு அழைக்கப்பட்டதோ அதே போன்று கே.பி பாடசாலை என்று சொல்லுமளவிற்கு அவரது செல்வாக்கு அங்கு ஓங்கி நின்றது.

கல்வியின் தரத்தினை நிலைநிறுத்த வேண்டுமாயின் பாடசாலையின் மாணவர் தொகை 650ற்கு மேற்படக்கூடாதென்றும் ஒரு வகுப்பில் 35 மாணவருக்கு மேற்பட இருத்தலாகாதென்றும் அவ்வாறெனில்தான் ஒரு ஆசிரியர் சிறந்த கல்வியினை மாணவருக்கு ஊட்டுவதற்கு வசதியாகவிருக்கும் என்ற அறிவிப்பினை நடைமுறைப்படுத்தி வந்தார். அத்தோடு ஆரம்பக் கல்வியை ஹாட்லியின் சகோதரக் கல்லூரியான G.B.S அல்லது M.H.S என்னும் Girls Boarding School அல்லது Methodist Girls High School என வழங்கி வந்த பாடசாலையில் பாலர் வகுப்பிலிருந்து 5ம் ஆண்டு வரை ஆண் பெண் இருபாலாருக்கும் கல்வி புகட்டப்பட்டது. ஹாட்லியில் 5ம் வகுப்பிலிருந்து வகுப்புக்களை நடாத்தியதனால் கே.பி அவர்கள் நிர்ணயித்த மாணவர் தொகைக்குள் மாணவர்களை அடக்கக் கூடியதாக இருந்தது. அப்போது மாணவர்களை பாடசாலையில் சேர்க்கும் போது பிரவேசப் பரீட்சை வைத்து அதில் சித்தியடையும் மாணவர்களை மட்டுமே கே.பி அவர்கள் காலத்தில் பாடசாலையில் சேர்த்துக் கொண்டார்கள். எவரது சிபாரிசிலும் பிள்ளைகளைச் சேர்ப்பதற்கு மறுத்தேவிடுவார். எனினும் கெட்டித்தனமுள்ள வசதி குறைந்தவர்களுக்கும் சமுகத்தில் ஒதுக்கப்பட்டவர்களுக்கும் கே.பியின் இளகிய மனத்தில் ஒரு மென்மையான இடம் இருந்ததனால் அவர்களுக்கென சில ஒதுக்கீடுகளைச் செய்து அதில் வளைந்துகொடுக்கும் தன்மையுடன் செயற்பட்டு பிள்ளைகளைத் தெரிவு செய்வார். பிள்ளைகளின் கல்வியில் ஒவ்வொருவரிலும் தனிக்கவனம் செலுத்துவார். தவணை பரீட்சையின் முன்னேற்ற அறிக்கை ஒவ்வொருவருடைய அறிக்கையையும் தனித்தனியே பார்வையிட்டு தேவைக்கேற்ப குறிப்புக்களை எழுதி தேவையேற்படுமிடத்து பெற்றோரை அழைத்து பிள்ளைகளின் படிப்பு விடையமாக தனிப்பட்ட முறையில் ஆலோசனை வழங்கி அனுப்புவார்.

## சில முக்கிய நிகழ்வுகள்:

கல்வியின் தரத்தினை உயர்த்த மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர் ஆகியோரது பங்களிப்புடன் செயற்பட்டார். ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்பட வேண்டும் என்பதனை வலியுறுத்தினார். தனிப்பட்ட ஒழுக்கம் (Self Discipline), நேரந்தவறாமல் பாடசாலை வருகை தருவது (Punctuality), வரவொழுங்கு (Attendance), திட்டமிடல் (Planning), எதனையும் நேர்சீராகச் செய்தல் (Streamlining), மற்றையோரை மதிப்புக் கொடுத்தல் (Respect Others), உதவி செய்து வாழ்தல் (Help Others), விளையாட்டு வீரத் தன்மையுடன் நடத்தல் (Sportsmanship), வெற்றி தோல்வி இரண்டையும் சமனாக ஏற்றல், ஒழுங்குபடுத்தும் வல்லமை (Organizing Capacity), எதனையும் வெற்றியுடன் சாதிக்கஉந்துதல் (Motivation to Achieve) ஆகிய நற்பழக்க வழக்கங்களை தானும் கடைப்பிடித்ததோடு ஆசிரியர்களையும் மாணவர்களையும் அவ்வாறே செயற்பட வைத்தார். பாடசாலை ஆசிரியர்களுள் 50% வீதத்திற்கு கூடுதலானோர் பழைய மாணவர்களாக இருக்க வேண்டுமெனவும், அப்போதுதான் அவர்கள் அர்ப்பணிப்புடன் செயலாற்றுவர் என்று எண்ணினார். 25% வீதத்திற்கு கூடுதலானோர் வெளிப் பாடசாலை ஆசிரியர்களாக இருப்பின் அதன்மூலம் புதிய நோக்குக்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என நம்பினார். படிப்பில் எவ்வளவு கவனம் செலுத்தினரோ அதேயளவு விளையாட்டிலும் மாணவர்கள் கவனம் செலுத்த வேண்டும் என்ற கருத்தினால் படிப்பிலும் விளையாட்டிலும் ஹாட்லியை ஒரு முதன்மை இடத்தில் வைத்துவிட்டே சென்றார்.

- 1944ல் முதன்முதலாக H.S.C பரீட்சைக்கு மாணவர்கள் தோற்றினார்கள்.
- 1944 – மாணவர் தலைவர்கள் (Prefect System) நடைமுறைப்படுத்தப்பட்டது.
- 1945 - கூட்டுறவு இயக்கம் (Co-Operative Movement) மாணவரிடையே தொடங்கப்பட்டது.
- 1946 – வரலாற்று மன்றம் (Historical Union) தொடங்கப்பட்டது.
- 1948 – நாடக மன்றம், நிழல்பட மன்றம் (Dramatic Society, Photographic Society) தொடங்கி ஆங்கில, தமிழ் நாடகங்கள் மேடையேற்றப்பட்டன.
- 1950 – டாக்டர் ராஜா ஹேவவித்தாரண என்னும் சிங்கள பழைய மாணவர் பெயரில் வழங்கப்படும் எஸ்.எஸ்.சி பரீட்சையில் அகில இலங்கையில் கூடிய புள்ளி எடுத்த மாணவர் எஸ். சற்குணநாதனுக்கு வழங்கப்பட்டது.
- 1952 – முன்னாள் யாழ் பல்கலைக்கழக உபவேந்தர் எந்திரி ஏ.துரைராஜா அவர்கள் மாணவராக இருந்தபோது பேராதனைப் பல்கலைக்கழகம் வழங்கும் புலமைப் பரிசினை முதல்முறையாக வென்றார்.
- பாடசாலைப் பரிசோதகர்களின் பரிசோதனையின்போது ‘Good School, Work is well done and Efficiently Supervised’ என்று நற்சான்று கொடுக்கப்பட்டது.
- 1953 – நூற்றாண்டு விழா கொண்டாட்டம் கொண்டாடப்பட்டது. இதன்போது மூன்றடுக்கு கட்டடம் ஒன்றிற்கு அத்திவாரம் இடப்பட்டு அதற்கு சி.பி. தாமோதரம் கட்டிடம் என்ற பெயர் சூட்டப்பட்டது. அத்தோடு நூற்றாண்டு ஞாபகார்த்தமாக தபால் முத்திரை ஒன்று வெளியிடப்பட்டது.
- 1957 – விஞ்ஞான மன்றம் (Science Society) நிறுவப்பட்டது. இதனைவிட தமிழ் இலக்கிய மன்றம், மாணவர் அரசியல்மன்றம் போன் றனவற்றினையும் நிறுவி மாணவர்களை வழிப்படுத்தினார்.
- 1962 – ஜி. பாலசிங்கம் வடமாகாண சிறந்த கிறிக்கற் வீரராகத் தெரிவு செய்யப்பட்டார். அத்தோடு அகில இலங்கையின் சகல துறை கிறக்கற் வீரராக (All Rounder) தெரிவுசெய்யப்பட்டார். அவ்வாண்டு அவுஸ்திரேலியா சென்ற பாடசாலை துடுப்பாட்டக் குழுவிற்கு உதவிக் கப்ரனாகத் தெரிவு செய்யப்பட்டார்.
- 1962 - பல்கலைக்கழகத் தெரிவில் அகில இலங்கை ரீதியில் கந்தையா தயாநிதி என்னும் மாணவன் அதிகூடிய புள்ளிகள் பெற்று தெரிவானார்.
- 1967 – பூரணம்பிள்ளை அவர்கள் 24 வருட நிறைந்த சேவையுடன் ஓய்வு பெற்றார். (பின்பு, அவரது சேவையினை யாழ். பரி யோவான் கல்லூரி நாடியது. அங்கு 9 வருட குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய சேவையை ஆற்றிவிட்டு இளைப்பாறினார். இவ்வேளையில் மகளைப் பார்ப்பதற்காக லண்டன் சென்று சிலகாலம் அங்கு தங்கியிருந்த வேளை, 2001ம் ஆண்டு ஏப்ரல் 22ம் நாள் இறைவனடி சேர்ந்தார்.




### பூரணம்பிள்ளை அவர்களுக்கு முந்திய சில முக்கிய நிகழ்வுகள்:

- 1848 பாடசாலை மத்திய ஆணையம் பாடசாலையை அங்கீகரித்து அதற்குரிய நிதி உதவியை (School Grant) வழங்கியது.
- 1896 பாடசாலை கல்கத்தா பல்கலைக்கழக தேர்விற்கு பங்குபற்ற தரம் உயர்த்தப்பட்டது.
- 1917 விஞ்ஞான ஆய்வுகூடம் கட்டித் திறக்கப்பட்டது. வேறு ஆறு வகுப்பறைகள் திறக்கப்பட்டன.
- 1919 கேம்பிறிட்ஜ் பரீட்சைக்கு மாணவர்கள் தோற்றினார்கள்
- 1920, ஒரு ஹாட்லி பழைய மாணவருக்கு பல்கலைக் கழகக் கல்லூரிக்கான விஞ்ஞான புலமைப்பரிசில் கிடைத்தது.
- 1920 பல மாணவர்களுக்கு சிரேஷ்ட மாணவர்களுக்கான கேம்பிறிஜ் பரீட்சையில் திறமைச் சித்தி கிடைத்தது.
- 1920 சில வகுப்பறைகள் புதிதாக அமைக்கப்பட்டன.
- 1920 விளையாட்டு மைதானம் வாங்கப்பெற்று பாவனைக்கு விடப்பட்டது.
- 1923 வடமாகாணப்பாடசாலைகளுக்கு இடையேயான உதைபந்தாட்டப் போட்டியில் சாம்பியனாகியது.
- 1923 மாணவர் சாரணர் இயக்கம் தொடங்கப்பட்டது.
- 1930 பாடசாலைத் துடுப்பாட்டம் தொடங்கப்பட்டது.
- 1930 மாணவர் விடுதிக்கான கட்டடம் கட்டிமுடிக்கப்பட்டது.
- 1933 ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் நிறுவப்பட்டது.
- 1936 பேராசிரியர் சி.ஜே. எலியேசர் அவர்கட்கு பல்கலைக் கல்லூரிக்கு புலமைப் பரிசில் கிடைத்தது.
- 1938 கொழும்பு பழைய மாணவர் சங்கம் தொடங்கப்பட்டது.

### பிரசித்தி பெற்ற பழைய மாணவர்கள்:

**அமைச்சு நிரந்தரச் செயலாளர்:**
கோ.ஆழ்வாப்பிள்ளை. விவசாய, உணவு, வர்த்தக அமைச்சு, வி.என் சிவராஜா – செயலாளர் வடக்குக் கிழக்கு மாகாண சபை, டி.ஆர்.ஓ.

**பொலிஸ் மாஅதிபர்:**
ருத்திரா இராஜசிங்கம், ரி.ஈ. ஆனந்தராஜா

**அமைச்சர்கள்:**
ரட்னசிறி விக்கிரமநாயகா – பிரதம மந்திரி, கே.பி.இரட்நாயக்கா – சபாநாயகர், விளையாட்டு அமைச்சர். இயன். கே. கரன் பொருளாதாரத்துறை அமைச்சர், செனற் சபை உறுப்பினர், ஹம்பேக்.

**பாராளுமன்ற உறுப்பினர்:**
வீ. ஆனந்தசங்கரி

**பல்கலைக்கழக உபவேந்தர்கள்:**
கே.டி. அருள்பிரகாசம், கிழக்குப் பல்கலைக்கழகம். எந்திரி ஏ. துரைராஜா, யாழ் பல்கலைக் கழகம், பேராசிரியர் சி.ஜே. எலியேசர் உதவி உப வேந்தர், இலங்கைப் பல்கலைக் கழகம், விஞ்ஞான பீடாதிபதி, கணித பேராசிரியர்

**நகரபிதா:**
கே. கணேசலிங்கம், கொழும்பு மேயர்

**நீதித்துறை சார்ந்தோர்:**
எம். ஈஸ்வரபாதம், மஜிஸ்ரேட் நீதிபதி. ஏ.ஞானதாசன், உதவி சொலிசற்றர் ஜெனரல், ஜனாதிபதி சட்டத்தரணி. ஆர். பரமகுரு, மாவட்ட நீதிபதி. கே.சி.ஜி. ஜெயக்குமார் – அரச சட்டத்தரணி. அன்னலிங்கம் பிரேமசங்கர் – உயர் நீதி மன்ற நீதிபதி. பி. சுவர்ணராஜா – உயர் நிதிமன்ற நீதிபதி,

**பல்கலைக் கழகம்:**
பேராசிரியர் டி. ஜெயதேவன் வெஸ்ட் இன்டீஸ், உதவி நில அளவீட்டு ஆணையாளர், பேராசிரியர் கே.கணபதிப்பிள்ளை – தமிழ் துறைத் தலைவர் பேராதனை பல்கலைக் கழகம். பேராசிரியர் எம். நடராஜசுந்தரம் நிர்வாகப் படிப்பு பீடாதிபதி, யாழ் பல்கலைக் கழகம். பேராசிரியர் வி.நந்தகுமார் புவியியல் துறைத் தலைவர், பேராதனைப் பல்கலைக் கழகம் பேராசிரியர் வி. நித்தியானந்தம் பொருளியல் துறை.

**விமானப்படை:**
பி.பி. பிறேமச்சந்திரா எயர் வைஸ் மாஷல் - இலங்கை விமானப் படை

**வங்கி:**
சி.லோகநாதன் - இலங்கை வங்கி தலைவர்.

**அரச துறை இயக்குனர்:**
ஏ.பி. கந்தசாமி – காலநிலை அவதான திணைக்கள இயக்குனர். ஏ. மகேஸ்வரன் மேலதிக செயலர், நீர்பாசன திணைக்கள இயக்குனர். கே.சி. பிறைசூடி மதுவரி அத்தியட்சகர். கே.சி. கணநாதன் சிறைச்சாலை அத்தியட்சகர். சுலோச்சனா யோகநாதன் உதவி இயக்குனர் நாயகம் சுகாதார அமைச்சு

**மதம்:**
கிங்ஸ்லி.ரி. முத்தையா, தலைவர் ஸ்ரீலங்கா மெதடிஸ்ட் சேர்ச்.

**வர்த்தகம்:**
கே. மதிவாணன் கொழும்பு ஈஸ்ட் வெஸ்ட் வர்த்தகக்கம்பனி, உதவித்தலைவர் இலங்கை கிறிக்கற் சபை. ஜே.எம். இராஜரட்ணம், உதவித் தலைவர் சிங்கர் கம்பனி ஸ்ரீலங்கா.

இவைகளை விட தனித்தனியே குறிப்பிட முடியாத வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள், எந்திரிகள், சட்டத்தரணிகள், பிரபல ஆசிரியர்கள், அரசஉத்யோகத்தர்கள், பிரபல வர்த்தகர்கள் ஆகியோரும் அடங்குவர்.

## போரும் ஹாட்லியும்:

இலங்கைப் படையினரின் முகாம் அமைப்பதற்காக 1984 முதல் 1990 வரை பாடசாலை மூடப்பட்டு புட்டளை மகாவித்தியாலயத்திற்கு மாற்றப்பட்டது. அப்பாடசாலை முற்பகலிலும் பிற்பகலில் ஹாட்லிக் கல்லூரியும் மிகுந்த சிரமத்தின் மத்தியில் நடைபெற்று வந்தது. பின்பும் 1996ல் இருந்து 2002 வரையும் மீண்டும் பாடசாலையினை இராணுவம் ஆக்கிரமித்துக் கொண்டது. இப்பகுதி உயர் பாதுகாப்பு வலையமாகப் பிரகடனப்படுத்தப்பட்டு மீண்டும் பாடசாலை புட்டளைக்கு மாறியது. 2005ல் முகாமிற்கு குண்டு வீசப்பட்டதனால் பாடசாலையின் ஒரு பகுதி கட்டிடங்கள் பாதிப்படைந்தன. போரின் பாதிப்பு பாடசாலையின் பௌதிக வளங்களையும் கல்வியையும் பாதிக்கவே செய்தன. தற்போது பாடசாலை புத்தூக்கத்துடன் இயங்கி வருகின்றது.

*உசாத்துணை:*

- http://www.hartleycollege.org/hweb/hartley/history.shtml
- http://archives.dailynews.lk/2008/07/26/fea04.asp
- http://en.wikipedia.org/wiki/Hartley_College,_Point_Pedro
- http://www.hartleycollege.com/hweb/milestones/
- எம்மை வாழவைத்தவர்கள் - பொ.கனக சபாபதி

packiyanathan.m@thaiveedu.com

■ ■ ■

**Our goal is to help our clients to save more, and get more result.**

GLORIOUS

GRAPHICS PRINT VIDEO PHOTO WEB

gloriousprinters.com 905.471.2500

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்

gloriousweb.ca

printglorious@gmail.com | info@gloriousprinters.com

9889 Markham rd (hwy 48) Unit 9, Markham ON, L6E 0B7

Logo Designs

MARATHON BISTRO

WAVE TECH Professional Electronics Analysts

MASTERCOLORPHOTOGRAPHY

STARTER

$350

PER YEAR



RESPONSIVE WEBSITE

- 5 Static HTML Pages
- *FREE* Email Account
- *FREE* Domain Registration
- *FREE* Web Hosting Space
- Online Inquiry
- Social Network Integration

Graphic Design Services

Custom Logo Design
Print Art Design

OTHER SERVICES:

WESTERN UNION

FedEx Federal Express

glorious.printers

**Custom Card Design**

Premium quality cards for:
Wedding, Puberty, Birthday
Anniversary, and other
special occations.



**Gift Items**




**Custom Framing**

Photo Enlargement
Canvas / Matte Print
Album Design
Old Photo Scanned
Photo Repair
CD Photo Compilation
Large Format Printing

திருமண - பூப்புனிதநீராட்டு
விழா-அழைப்பிதழ்கள்

நினைவுமலர்கள்
விளம்பர பிரசுரங்கள்
தன்னறிமுக அட்டைகள்
விளம்பர பலகைகளும்
மற்றும் அனைத்துவிதமான
அச்சுவேலைகளுக்கும்
அழகான முறையில்
குறித்த நேரத்தில்
அச்சிட்டு தரப்படும்



# தமிழரின் சங்ககால விளையாட்டுகள்

## - பொன்னையா விவேகானந்தன்

இயற்கை அழகு நிறைந்த பேரரங்கு அது.

அங்கே ஒரு எழில் உலாக் காட்சி (Fashion Show) நடைபெறுவதற்கான எல்லா ஏற்பாடுகளும் முடிந்துவிட்டன. அவையோர் ஆவலோடு காத்திருக்கின்றனர். ஒப்பனைகளால் தம்மை பேரழகாக்கியபடி அழைப்பை எதிர் நோக்கியிருக்கின்றனர் உலா மகளிர்.

அழகறிந்து அளவுணர்ந்து மதிப்பிட மங்கையரை மட்டுமே கொண்ட நடுவர் குழு காத்திருக்கின்றது.

இதோ உலா ஆரம்பமாகி விட்டது.

ஒரு பெண் ஒயிலாக நடந்து வருகின்றாள். அவள் சூடியிருக்கும் பூக்களும் ஆடையழகும் அவையோரை ஈர்த்திழுக்கின்றன.

ஒளி வீசும் தன்மை கொண்டதாக வண்ண வண்ணப் பூக்கள் ஐவகை அழகு நிறைந்த அவள் கூந்தலில் செருகப்பட்டிருக்கின்றன.

இரு கைகளிலும் நிறைந்த வளையல்கள். அழகு வழிய, எழிலாகக் கைகளை வீசி நடக்கின்றாள். ஒழுங்குபடுத்தப்பட்ட இனிய ஓசைகளை வளையல்கள் எழுப்பின. அவள் வீசி நடந்தது வெறுங்கையல்ல. தேன் சிந்தும் பேரழகுப் பூக்களைக் கொண்ட பூங்கொத்தினை ஏந்திய கை.

நிலம் நோகா மெல்லிய நடைதான் நடந்தாள். ஆயினும் காற் சலங்கைகளின் எழி-லோசை உயிர்வரை சென்று உரசியது.

பிசகாத கால இடைவெளியில் கை வீசியும் கால் நடந்தும் இன்னிசை சிந்தி அவள் காட்டிய பேரழகு அங்கிருந்தோர் அனைவரையும் கட்டிப் போட்டது.

உலா மகளிரின் அழகை மதிப்பிட்டு, அவர்களது எழிலைப் பேணியவர்களான நடுவர், உலா வந்தவளுக்குப் புள்ளியிட்டு அடுத்தவருக்காகக் காத்திருக்கின்றனர்.

இது அண்மையில் நடைபெற்ற எழில் உலாக் காட்சி அல்ல. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் சங்ககாலத்தில் இடம்பெற்ற நிகழ்ச்சி. இது இக்காலத்தில் புகழ் பெற்றுத் திகழ்கின்ற Fashion Show என்பதை ஒத்த விளையாட்டாகும்.

சங்ககாலத்தில் மகளிரின் அழகை மகளிரே ஆராய்ந்து மதிப்பிட்டனர் எனக் குறுந்தொகை கூறுகின்றது.

*'கடலங் கானல் ஆயம் ஆய்ந்த என் நலம் இழந்து'*. - குறுந்தொகை 245

இப்படி ஆராய்ந்து மதிப்பிடுவதற்கு ஏதுவாக மகளிர் தம்மை ஒப்பனை செய்துகொண்டு ஒய்யாரமாக நடந்து காட்டியிருக்கின்றனர். இச் செய்தியை அகநானூறு வெளிப்படுத்துகின்றது.

*'கானப் பாதிரி கருந் தகட்டு ஒள்வீ*
*வேனில் அதிரலொடு விரைஇக் காண்வரச்*
*சில் ஐங் கூந்தல் அழுத்தி மெல் இணர்த்*
*தேம்பாய் மராஅம் அடைச்சி வான்கோல்*
*இயங்குவளை தெளிர்ப்ப வீசிச் சிலம்புநகச்*
*சில் மெல் ஒதுக்கமொடு மென்மெல இயலி'*

- அகம் 261

### விளையாட்டு - சொல்லும் பொருளும்:

விளையாட்டுகள் வேட்டைச் சமூக வாழ்தளங்களிலேயே தோற்றம் கொண்டிருக்க

தொடர்தல் 67ம் பக்கம்

# சங்ககால விளை...

66ம் பக்கத் தொடர்ச்சி...

வாய்ப்புகள் உள்ளன. விலங்குகளை வேட்டையாடுதலும், ஆயுதங்களைக் கையாளுதலும், உடல் வலிமையைப் பேணுதலும் விளையாட்டுகளுக்கு வழிவகுத்திருக்கக் கூடும். எனினும் மனித குலம் பண்பாட்டுப் படிகளில் ஏறத் தொடங்கிய காலத்திலேயே விளையாட்டுகளும் முதன்மை பெற்றன எனலாம்.

ஓரினமானது மரபுத் தொடர்ச்சியின் வழியாகப் பின்பற்றிவரும் விளையாட்டுகள், அவ்வினத்தின் பண்பாட்டினைப் புரிந்து கொள்ளவும் அக்காலச் சமூகக் கொள்கைகளை வரையறுக்கவும் வல்ல இனம்சார் அடையாளங்களாகவே திகழ்கின்றன.

விளையாட்டு என்பதற்கான விளக்கத்தைச் சங்கப்புலவோர் வரையறுத்துக் கூறவில்லை. உவகை என்னும் மெய்ப்பாடு தோன்றுவதற்குரிய நான்கு வகைக் களங்களைத் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார். அதில் ஒன்று விளையாட்டு. இதிலிருந்து மன மகிழ்ச்சியை விளைவிக்கும் ஒரு செயலே விளையாட்டு எனக் கருதலாம்.

மொழிப்புலவர் ஞா. தேவநேயப் பாவாணர் விளை என்றால் விருப்பம் எனப் பொருள் கொண்டு விரும்பியாடும் விளையாட்டு என்று விளக்குகிறார்.

தொல்காப்பியம் உரியியல் (*தொல்: 319*) என்ற பகுதியில் கெடவரல், பண்ணை எனும் இரு சொற்களால் விளையாட்டைக் குறிக்கின்றது. இத்தொல்காப்பியக் குறிப்பு அக்காலத்தே விளையாட்டுகள் மக்களிடத்தே செல்வாக்குப் பெற்றிருந்தமையை உணர்த்துகின்றது. கெடவரல் என்பது நிலத்தில் விளையாடும் விளையாட்டையும் பண்ணை என்பது நீரில் விளையாடப்படும் விளையாட்டையும் குறிக்கும் என்பர்.

சங்க இலக்கியத்தில் விளையாட்டு என்பது பெரும்பாலும் நிலத்தில் ஆடப்படுகின்ற விளையாட்டுகளைக் குறித்தது. ஆடுதல் என்ற சொல் நீரோடு இணைந்த விளையாட்டுகளையே பெரிதும் குறித்தது.

## சங்கத் தமிழரின் விளையாட்டுக் கொள்கைகள்:

சங்கத் தமிழர் பெரிதும் சமூகம் சார்ந்த செயற்பாடாகவே விளையாட்டைக் கருதினர். குழுநிலை விளையாட்டுகளும், மைதானங்களின் நடுவே இடம்பெற்ற வீர விளையாட்டுகளும் சமூகச் செயற்பாடுகளாகவே திகழ்ந்தன. அரசுகள், ஊர் மன்றங்கள், பெரு விளையாட்டுகளை நடத்தி வென்றோருக்கு மதிப்பளித்தன.

சமூக அங்கத்தவர் எல்லோரும் தத்தம் வயது, பால் என்பவற்றிற்கேற்பப் பல்வேறு விளையாட்டுகளில் ஈடுபட்டனர். பெண்களை 'வீட்டுக்குள் வளர்த்தல்' (இச்செறித்தல்) என்னும் நிலை அக்காலத்தில் காணப்பட்டாலும் சிறுமியர், இளம் மகளிர் பல்வேறு விளையாட்டுகளில் ஈடுபட்டிருக்கின்றனர். ஆண்களைப் போலவே பெண்களும் பல விளையாட்டுகளில் ஈடுபட்டுள்ளனர்.

'சிறுமியர் வெளியிற் சென்று தம் தோழியரோடு விளையாடுவதே அறம். அவ்வாறு விளையாடுவதால் உடலும் உள்ளமும் ஆக்கம் பெறும். மாறாக வீட்டுக்குள் இருந்தால் அது அறமும் இல்லை, ஆக்கமும் தேய்ந்து விடும்' என்ற செய்தி நற்றிணை என்னும் இலக்கியத்தில் இடம் பெற்றுள்ளது.

*விளையா டாயமொடு ஓரை யாடாது*
*இளையோர் இல்லிடத் திற்செறிந் திருத்தல்*
*அறனும் அன்றே ஆக்கமுந் தேய்ம்மெனக்...*

- (நற்றிணை 68)

வெற்றியையும் தோல்வியையும் ஒத்த உணர்வோடு நோக்கும் பாங்கு சங்க இலக்கியங்களில் உணரப்படுகின்றது.

உயிருக்குப் பேரிடர் ஏற்படுத்தும் விளையாட்டுகள் அக்காலத்தே இருந்திருக்கின்றன. எனினும் மனித உயிரை இலக்கு வைத்து விளையாட்டுகள் நிகழ்த்தப்பட்டதாகச் சான்றுகள் இல்லை.

'உவகை ஊட்டுதல்' என்னும் நிலையில் இருந்து பொருளியற் சார்புநிலைக்குச் சில விளையாட்டுக் கூறுகள் சங்ககாலத்திலேயே மாற்றங் கண்டன. வேளாண் சமூக அமைப்பினூடாகத் தனியுடமை உணர்வு அரும்பத் தொடங்கிய பின் சில விளையாட்டுகளின் வாயிலாக பொருள் இழப்பதுவும் பெறுவதும் இயல்பாயிற்று. காய்களை இழந்து பெறுகின்ற பல்லாங்குழி இத்தகைய ஒரு விளையாட்டே என்கிறார் தொ. பரமசிவன்.

அக்கால அரசுகளால் ஆதரிக்கப்பட்ட சதுரங்கமே பின்னாளில் சூதாட்டமாயிற்று என்பர்.

இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு உலகெங்கும் காணப்பட்ட வளர்ச்சியடைந்த சமூகங்கள் பலவகையான விளையாட்டுகளில் ஈடுபட்டிருந்தன. அவர்களைப் போலவே தமிழரும் பல்வகை விளையாட்டுகளை உருவாக்கி விளையாடிய செய்திகளை சங்க இலக்கியங்கள் தருகின்றன. விளையாட்டுகள் பற்றிய விபரங்களைப் பெற்றுக்கொள்ள சங்க இலக்கியங்களைத் தவிர பிற சான்றுகள் பெரிதும் கிடைக்கவில்லை. சங்கச் செய்திகளை அடிப்படையாகக் கொண்டே இக் கட்டுரை எழுதப்படுகின்றது. பெரும்பாலான விளையாட்டுகள் பற்றிய குறிப்புகள் இவ்விலக்கியங்கள் வாயிலாகக் கிடைத்துள்ளன. ஆயினும் கட்டுரைச் சுருக்கம் கருதிச் சிலவே இங்கு தொகுக்கப்பட்டுள்ளன.

## விளையாட்டு வகைகள்:

சங்க இலக்கியங்கள் பல வகையான விளையாட்டுகளைக் குறிப்பிடுகின்றன. சங்கால விளையாட்டுகள் நில விளையாட்டு, நீர் விளையாட்டு என இருவகையாகக் கருதப்பட்டன.

நில விளையாட்டுகளை சிறுவர் விளையாட்டு, சிறுமியர் விளையாட்டு, மகளிர் விளையாட்டு, காளையர விளையாட்டு, முதியோர் விளையாட்டு, காதலர் விளையாட்டு, மொழி விளையாட்டு, திளைப்பு விளையாட்டு, காட்சி விளையாட்டு என வகைப்படுத்தியுள்ளனர். இப் பகுப்புகளுக்குள் பல்வகை விளையாட்டுகள் அடங்கும்.

அசதியாடல், அம்புலி அழைத்தல், அலவன் ஆட்டல், உலாவல், ஊசல், எண்ணி விளையாடல், எதிரொலி கேட்டல், ஏறுகோள், கண் புதைத்து விளையாடல், கவண், கழங்கு, குதிரையேற்றமும், யானையேற்றமும், குரவை, சாம விளையாட்டுகள், குறும்பு விளையாட்டுகள், சிறுசோறு, சிறுதேர், சிறுபறை, சிற்றில் சிதைத்தல், சுண்ண விளையாட்டு, சூது, செடி கொடி வளர்ப்பு, பந்து விளையாட்டு, பறவைகளைக் காணுதலும் அவற்றைப் போலச் செய்தலும், பறவை வளர்ப்பும் விலங்கு வளர்ப்பும், பாவை விளையாட்டு, பிசி நொடி விளையாட்டு, மணற்கு வியலில் மறைந்து விளையாடல், மலர் கொய்தலும் மாலை தொடுத்தலும், மல், வட்டு, வள்ளை, வில், வேட்டை என்பன அக்காலத்தே விளையாடப்பட்ட விளையாட்டுகள் சிலவாகும்.

நீர் விளையாட்டுகளாவன, தைநீராடல், நீச்சல் நடனம், நீச்சல், பந்து, பின்படகு, முன் படகு, வளிப்படகு, பண்ணை, பாய்ச்சல், புனலாடல், மிதவை, மூழ்கல் போன்றவை ஆகும்.

இவற்றில் சில விளையாட்டுகள் பற்றித் தெரிந்துகொள்வோம்.

## உடல் வித்தை விளையாட்டு:

இந்த விளையாட்டு இப்போது Gymnastic என உலகெங்கும் கொண்டாடப்படுகின்றது.

ஒரு மயில் மாம்பழத்தை உண்டுகொண்டிருக்கையில் அது தவறி ஒரு சிறு சுனையில் வீழ்ந்துவிடுகின்றது. அதை எடுப்பதற்காகச் சுனையில் இறங்கும் மயில் அச்சுனை நீரைப் பருகுகின்றது. அந்தச் சுனையில் பழுத்த மிளகும், பலாவும் விழுந்து ஊறிவிட்டிருக்கின்றது. அதனால் அச்சுனை நீரோ போதையூட்டும் கள்ளாகிவிட்டது. அச்சுனை நீரை அருந்திய மயில், வியலூர் என்னும் ஊரில் இன்னிசை முழக்கத்தோடு ஆடுமகள் ஒருத்தி கயிற்றில் ஏறி ஆடுவது போல் இருந்தது என்கிறது குறிஞ்சிப்பாட்டு (191-194).

வைகை ஆற்றில் நீராடிய மகளிர் இசைக் கருவிகள் முழங்க ஒருவர் தலைமேல் ஒருவர் நின்று உடல் வளைத்து வித்தை காட்டியிருக்கின்றனர். இதைச் 'சென்னியர்' ஆடல் என்கிறது பரிபாடல் (77-80)

## ஊன்றித் தாண்டல் (pole vault):

இது இக்கால உலக விளையாட்டுகளில் சிறந்துவிளங்கும் விளையாட்டு. சங்ககாலத்தில் குன்றக் குறவர்களின் சிறுவர்கள் இந்த விளையாட்டை விளையாடியிருக்கின்றார்கள்.

மந்தி தன் வயிற்றில் குட்டியைப் பற்றிக் கொண்டு, மூங்கில் நுனியைப் பற்றி வளைந்து தாவித் தவ்வுவது கண்ட குன்றத்துக் குறவரின் புதல்வர் தாமும் மூங்கில் கொம்பைப் பற்றி வளைந்து ஆடி, வெற்றி கண்டு, அந்த வெற்றியை வெளிப்படுத்தக் கைகொட்டி மகிழ்ந்தனர் என நற்றிணை (95) கூறுகின்றது.

*செம்முகத் துய்த்தலை மந்தி வன்பறழ் தூங்கக்*
*கழைக்கண் இரும்பொறை ஏறி விசைத் தெழுந்து*
*குறக்குறு மாக்கள் தாளம் கொட்டும் குன் றகம்*

- நற்றிணை 95

## வல்லாட்டம்:

வல்லாட்டம் ஒரு முதியோர் விளையாட்டாகும். ஊர்ப் பொதுமன்றத்தில் இதற்கான வல்லப் பலகை இருந்திருக்கின்றது. முதியோர் மிகுந்த கவனத்தோடு ஆடியிருக்கின்றனர். இவ்வல்லாட்டம் போட்டி விளையாட்டாகவும் ஆடப்பட்டிருக்கின்றது.

*கொழுங் குடி போகிய பெரும் பாழ் மன்றத்து,*
*நரை முதாளர் அதிர் தலை இறக்கி,*
*கவை மனத்து இருத்தும் வல்லு வனப்பு அழிய,*
*வரி நிறச் சிதலை அரித்தலின்,*

- (அகநானூறு 377)

## வட்டு விளையாட்டுகள்:

வட்டு என்பது ஒருவகைப் பந்தை ஒத்த பொருளாகும். பல வகையான வட்டு விளையாட்டுகள் சங்ககாலத்திலே குறிப்பிடப்பட்டிருக்கின்றன. பெரும்பாலும் வட்டு விளையாட்டுகளை ஆண்களே விளையாடினர்.

## குணில் வட்டு (Hockey):

குணில் என்பது நுனியில் வளைந்த தடியாகும். உருளும் மணிவட்டைக் குணில் கொண்டு அடித்தனர். அது மேலும் வேகம் கொண்டு ஓடியது. இந்த விளையாட்டு இக் காலத்தில் விளையாடப்படும் கொக்கி விளையாட்டுக்கு ஒப்பானது. இச் செய்தியை,

'உருள்கின்ற மணி வட்டைக் குணில் கொண்டு துரந்ததுபோல்' என்ற வரியால் சிலப்பதிகாரம் குறிப்பிடுகின்றது.

## வட்டுநா விளையாட்டு (Golf):

வட்டை நாக்குப் போன்ற தடியால் அடிக்கும் விளையாட்டு 'வட்டுநா விளையாட்டு' எனப்பட்டது. அரக்கினால் சிவப்பு புள்ளிகள் இடப்பட்ட வட்டினை நாக்குப் போல் வளைந்த நுனி கொண்ட கோலால் அடித்தனர். உலகப் புகழ் பெற்ற விளையாட்டான கோல்ப் (Golf ) விளையாட்டில் பயன்படுத்தப்படும் கோலும் நாக்குப் போன்றே வளைந்துள்ளது. நற்றிணை இவ்விளையாட்டு பற்றிய குறிப்பைத் தருகின்றது.

*வங்கா வரிப் பறைச் சிறு பாடு முணையின்,*
*செம் பொறி அரக்கின் வட்டு நா வடிக்கும்*
*விளையாடு இன் நகை*

- (நற்றிணை 341)

## பந்தாட்டம்:

சங்ககாலத்தில் பெரிதும் விரும்பி விளையாடப்பட்ட விளையாட்டு பந்தாட்டம் ஆகும். பெரும்பாலும் பெண்களே இவ்விளையாட்டை விளையாடினர். இவ்விளையாட்டு வீட்டு முற்றத்திலும், மாடங்களிலும், மணல் மேடுகளிலும் ஆடப்பட்டது. நூலினால் செய்யப்பட்ட இந்தப் பந்தில் பல வேலைப்பாடுகள் இருந்தன. வானைத் தொடுமளவுக்கு பந்தை எறிந்தனர் என்ற செய்தியை குறிஞ்சிக் கலி (4:22-23, 21:6-7) குறிப்பிடுகிறது. காலால் பந்தை உதைத்து விளையாடினர் என்பதை நற்றினை (324:7-9) சொல்கிறது.

*'தந்தை இடனுடை வரைப்பின் ஆடுபந்து உருட்டுநள் போல ஓடி'* - நற்றிணை 324-7

இது நீரில் விளையாடப்பட்ட பந்தாட்டத்தை நீர்ப்பந்தாட்டம் என அழைத்திருக்கின்றனர்.

## மொழி விளையாட்டு:

பல்வகை மொழி விளையாட்டுகள் அக்காலத்தில் விளையாடப்பட்டிருக்கின்றன. நன்கு வளர்ச்சியடைந்த மொழிகளிடையேதான் மொழி விளையாட்டுகள் காணப்படும். பொது மக்கள் பேசும் மொழி பொதுமொழி எனப்பட்டது. புலவர்கள் மதிநலத்தால் பேசும் மொழி மதிமொழி எனப்பட்டது. மதிமொழியில் செதுமொழி, முதுமொழி, புதுமொழி என்னும் வகைகள் உண்டு.

புலவோர் செந்தமிழில் எழுதிய பாடல்கள் செதுமொழி எனப்பட்டன. பழங்காலப் புலவோர் மூதறிவால் எழுதிவைத்த பாடல்கள் முதுமொழி ஆயின. பின்னாளில் தோன்றிய புலவோர் திரிசொல்லும் கலந்து எழுதிய பாடல்கள் புதுமொழி எனப்பட்டன.

*'பொது மொழி பிறர்க்கு இன்றி*
*முழுது ஆளும் செல்வர்க்கு*
*மதி மொழி இடல் மாலை*
*வினைவர் போல், வல்லவர்*
*செது மொழி சீத்த செவி செறு ஆக,*
*முது மொழி நீரா, புலன் நா உழவர்*
*புது மொழி கூட்டுண்ணும்,*
*புரிசை சூழ், புனல் ஊர்!'*

- (கலித்தொகை 68)

மொழிக்கு விழாக் கொண்டாடிய முன்னோர் மொழி வழி விளையாட்டுகளையும் உருவாக்கினர். சிறியோரும் பெரியோரும் இவ்விளையாட்டுகளால் மகிழ்ந்தனர். அதன்வழி மொழியை வளர்த்தனர்.


## பிசிமொழி விளையாட்டு:

பிசி என்பது விடுகதை. தொல்காப்பியம் இதனை இரு வகையாகக் கூறுகின்றது.

'ஒப்பொடு புணர்ந்த உவமத்தானும் தோன்றுவது கிளந்த துணிவினானும் என்றிரு வகைத்தே பிசிநிலை வகையே'

- தொல்காப்பியம் 3-478

ஒருவர் விடுகதை சொல்வார். மற்றொருவர் அதனை விடுவிப்பார். அல்லது எதிர் விடுகதை சொல்லி, அவரவர் விடுகதையை அவரவரே விடுவித்துச் சமனாக்குவார்.



“ குறிப்பாகப் பெரும் செல்வாக்கும் பெற்றிருக்கும் எழில் உலாவரங்கு (Fashion Show) சங்ககாலப் பெண்களால் நடத்தப்பட்டது என்பது பெருவியப்பளிக்கின்றது. ”

தொடர்தல் 68ம் பக்கம்

# சங்ககால விளை...

67ம் பக்கத் தொடர்ச்சி...

## பிணைமொழி விளையாட்டு:

புதிதாகப் பிணைத்து இட்டுக்கட்டிச் சொல்வது பிணைமொழி. இதனைத் தொல்காப்பியம் பண்ணத்தி எனக் குறிப்பிடுகிறது.

*'பாட்டிடைக் கலந்த பொருள வாகிப்*
*பாட்டின் இயல பண்ணத்தி இயல்பே'*
- செய்யுளியல், 180.

இதற்கு, 'பழம்பாட்டினூடு கலந்த பொருளே தனக்குப் பொருளாகப் பாட்டும் உரையும் போலச் செய்யப்படுவன பண்ணத்தி என்றவாறு' என்று பேராசிரியர் உரை எழுதியிருக்கிறார்.

இக்காலப் பிணைமொழிக்கு ஓர் எடுத்துக்காட்டு,

*எங்கே போகிறாய் - ஊருக்குப் போகிறேன்*
*என்ன ஊர் - மயிலாப்பூர்*
*என்ன மயில் - காட்டு மயில்*
*என்ன காடு - ஆர்க்காடு*
*என்ன ஆர் - அடையார்*
*என்ன வடை - ஆமை வடை*
*என்ன ஆமை - குளத்து ஆமை*
*என்ன குளம் - செட்டிகுளம்*

விடை கிடைக்கும்வரை இப்படியே தொடர்ந்து விளையாடுவர்.

## நாப்பயிற்சி விளையாட்டு:

நாவுக்கு உச்சரிப்புப் பயிற்சி தரும் விளையாட்டுகளைப் பேசுமொழி விளையாட்டாகக் கொள்ளலாம். இவற்றைச் சேர்ந்தாற்போல் திரும்பத் திரும்பச் சொல்ல வேண்டும்.

*'ஓடுற நரியிலை ஒருநரி சிறுநரி, சிறுநரி முதுகிலே ஒருபிடி நரைமயிர்'*

*'மலையிலே ஒருகல் உருளுது புரளுது'*

*'கடலையிலே ஒருகல் உருளுது புரளுது, தத்தளிக்குது தாளம் போடுது'*

*'இது யாரு தச்ச சட்டை, எங்க தாத்தா தைச்ச சட்டை'*

*'ஊர் பூவரச மரமெல்லாம் என் பூவரச மரம்'*

இதைத் திரும்பத் திரும்ப விரைவாகச் சொல்லும்போது 'ஊர்ப் புருசனெல்லாம் என் புருசன்' என வாய் குழறிவிடும் என்பர்.

## ஓரையாடுதல்:

ஓரை என்பது சங்ககால இளம் மகளிர் விளையாடிய விளையாட்டுகளில் ஒன்றாகும். ஓரை என்றால் ஒலி எழுப்புதல் என்று பொருள். இது ஆரவாரம் எழுமாறு ஆடப்படும் ஆட்டங்களைக் குறித்ததாகக் கொள்ளலாம்.

கடல் அலை பாயும் மணலிலும், ஆற்று மணலிலும், சேற்று நிலத்திலும், முற்றத்தில் பரப்பப்பட்ட மணலிலும் இது விளையாடப்பட்டதாகச் சங்கப் பாடல்கள் தெரிவிக்கின்றன.

ஆமை, நண்டு ஆகியவற்றைக் கோல் கொண்டு அலைத்து விளையாடுவது ஓரையாடுதல் என்ற விளையாட்டில் ஒருவகையாகும். இவ்விளையாட்டை 'அலவனாட்டல்' என்று பட்டினப்பாலை குறிப்பிடுகின்றது.

'ஓரையாயத் தொண்டொடி மகளிர்' என ஓரையாடும் மகளிரை புறநானூறு 176 குறிப்பிடுகின்றது.

## வண்டலிழைத்தல்:

வண்டலிழைத்தல் என்பது பழங்கால விளையாட்டுகளில் ஒன்றாகும். மணலை நீளமாகக் குவித்து அதில் ஒரு குச்சியையோ அல்லது விதையையோ மறைத்து வைப்பர். மற்றொருவர் இருகைகளையும் கொண்டு மூடிய மணலுக்குள் மறைக்கப்பட்டதைத் தேடி எடுப்பர். அவ்வாறு எடுத்துவிட்டால் எடுத்தவர் வெற்றி பெற்றவராகக் கருதப்படுவர்.

இவ்வாறு வண்டல் இழைத்த ஒருத்தி, வண்டலுக்குள் ஒரு புன்னை விதையைப் புதைக்கையில் தாய் அழைக்க, ஓடிவிடுகிறாள். பின் அவ்விதை முளைத்து மரமாகிறது. பின்னாளில் அதே மரத்தருகில் காதற் தலைவன் அணைக்க முற்படுகிறான். அவள் புன்னை மரத்தைக் காட்டி, 'இதோ என் தங்கை, அவள் முன் இவ்வாறு செய்யலாகாது' எனத் தடுக்கிறாள். இது நற்றிணை கூறும் ஓர் அழகிய காட்சி.


இவ்விளையாட்டு இப்போது 'கிச்சுக் கிச்சுத் தாம்பளம்'' எனக் கிராமப்புற மக்களால் அழைக்கப்படுகின்றது.

## நீர் விளையாட்டுகள்:

பழங்காலத்தோர் நீர் விளையாட்டுகளுக்குப் பேரிடம் வழங்கியிருக்கின்றனர். இவ்விளையாட்டுகளைக் 'களிநீராடல்' என அழைத்திருக்கின்றனர். நீர் விளையாட்டுகள் பல, கட்டுரையின் தொடக்கத்தில் பட்டியலிடப்பட்டுள்ளன. சில நீர் விளையாட்டுகள் பற்றி நோக்குவோம்.

## புனல் நயந்து ஆடல் (synchronized swimming நீச்சல் நடனம்):

இந்நீர் விளையாட்டு அக்காலத்தில் சிறப்புற்று விளங்கியிருக்கின்றது. கழார் என்னும் ஊரிலுள்ள காவிரியாற்று நீர்த்துறையில், அரசன் கரிகாலன், அவன் மகள் ஆதிமந்தி முன்னிலையில், ஆட்டனத்தி என்ற நீச்சல் வீரனும், காவிரி என்னும் நீச்சல்மகளும் இணைந்து நீச்சல் நடனம் ஆடிக் காட்டினர் என அகநானூறு கூறுகின்றது.



> **'உள்ளத்தில் உவகை ஏற்படுத்துதல்' என்ற சமூகச் சமதன்மை நிலையில் இருந்து பொருளியல் தாக்கத்தினூடாக விளையாட்டு முறைகள் மாறத்தொடங்கின.**

'அத்தி தன் காலில் அணிந்திருந்த கழல் அணியை நீரில் மூழ்கிக்கொண்டு காலை நீருக்குமேல் தூக்கி ஆட்டிப் புரட்டிக் காட்டினான். வயிற்றில் கட்டிய ஆடை நழுவாமல் இருக்கக் கச்சம் கட்டியிருந்தான். அத்துடன் பாண்டில் என்னும் அணிகலனும் அணிந்திருந்தான். அந்தப் பாண்டில் அணியில் மணிகள் கோக்கப்பட்டிருந்தன. அந்த மணிகள் ஒலிக்கும்படி வயிறு மட்டும் மேலே தெரியும்படி உருண்டு ஆட்டிக் காட்டினான். இப்படி ஆடிய அத்தியோடு கூடி ஆடியவள் காவிரி. அத்தியை விரும்பிய காவேரி நீரோட்டத்துடன் அவனை ஒளித்துக் கொண்டு சென்றாள்' என அகநானூறு மேலும் கூறுகின்றது.

*'கல்லா யானை கடி புனல் கற்றென,*
*மலி புனல் பொருத மருது ஓங்கு படப்பை,*
*ஒலி கதிர்க் கழனி, கழாஅர் முன்துறை,*
*கலி கொள் சுற்றமொடு கரிகால் காண,*
*தண் பதம் கொண்டு, தவிர்ந்த இன் இசை*
*ஒண் பொறிப் புனை கழல் சேவடிப் புரள,*
*கருங் கச்சு யாத்த காண்பின் அவ் வயிற்று,*
*இரும் பொலம் பாண்டில், மணியொடு தெளிர்ப்ப,*
*புனல் நயந்து ஆடும் அத்தி அணி நயந்து,*
*காவிரி கொண்டு ஒளித்தாங்கு'*
- (அகம் 376)

## பண்ணை:

மகளிர் நீரில் பாயும் விளையாட்டுக்குப் பண்ணை என்று பெயர்.

சங்க காலத்தில் ஆற்றங்கரையிலிருந்த மருதமரத்தில் ஏறி ஒருத்தி பண்ணை பாய்ந்தாள். அது மயில் ஒன்று விண்ணிலிருந்து மண்ணுக்குத் தோகை விரித்தபடி இறங்குவதைப் போன்றிருந்தது. அவள் அணிந்திருந்த அணிகலன்கள் மயிலின் தோகையில் காணப்பட்ட வண்ணப்புள்ளிகளைப் போன்றிருந்தன என ஐங்குறுநூறு கூறுகின்றது.

*'விசும்பிழி தோகை சீர் போன்றிசினே*
*பசும்பொன் அவிரிழை பைய நிழற்ற*
*கரைசேர் மருதம் ஏறிப் பண்ணை பாய் வோள்*
*தண்ணறுங் கதுப்பே'*
— ஐங்குறுநூறு 74.

மரந்தை என்னும் ஊரில் சங்ககால மகளிர் கடலிற் பாய்ந்து விளையாடினர். அப்போது அவர்கள் அணிந்திருந்த பூக்கள் கடலலையில் மிதந்து வந்தன என நற்றிணை (395) கூறுகின்றது.

## படகு விளையாட்டுகள்:

சங்ககாலத்தோர் பலவகையான படகு விளையாட்டுகளை விளையாடியிருக்கின்றனர் பின் படகு(rowing), முன்படகு(canoeing), வளிப்படகு (wind-surfing) என்பன முதன்மையான படகு விளையாட்டுகளாக இருந்தன. படகை அக்காலத்தோர் புணை என்றும் அழைத்தனர்.

படகை முன்புறமாகச் செலுத்துவதும், பின்புறமாகச் செலுத்துவதும் இக்காலத்திலும் உண்டு. முன்படகைத் தலைப்புணை என்றும், பின்படகைக் கடைப்புணை என்றும் அழைத்திருக்கின்றனர்.

'பலர் புணை செலுத்தி நீரில் விளையாடினர். தலைவன் செலுத்திய புணையை ஒருத்தி பின் தொடர்ந்தாள். அவன் தலைப்புணையில் முன்னோக்கிச் சென்றால் அவளும் தலைப்புணையில் முன்னோக்கி வந்து அவனைப் பின் தொடர்ந்தாள். அவன் கடைப்புணையில் பின்னோக்கிச் சென்றால் அவளும் கடைப்புணையில் பின்னோக்கிச் சென்று அவனைத் தொடர்ந்தாள். அவன் புணையைக் கைவிட்டு நீரோடு மிதந்து சென்றால், அவளும் அவ்வாறே செய்து அவனைத் தொடர்ந்தாள்' என்ற செய்தியைக் குறுந்தொகைப் பாடல் தருகின்றது.

*'தலைப் புணைக் கொளினே,*
*தலைப் புணைக் கொள்ளும்*
*கடைப் புணைக் கொளினே,*
*கடைப் புணைக் கொள்ளும்*
*புணை கைவிட்டுப் புனலோடு ஒழுகின்,*
*ஆண்டும் வருகுவள் போலும்'*
- (குறுந்தொகை 222)

## நீச்சல் பந்தாட்டம்:

இவ்விளையாட்டைக் காதலர் பெரிதும் விளையாடியிருக்கின்றனர். நீராடும் காதலர் ஒருவர்மீது ஒருவர் பந்தை வீசி விளையாடுவர். 'பூநீர் பெய் வட்டம்' என்று அந்தப் பந்து அழைக்கப்பட்டிருக்கின்றது. பல வகை வண்ண நீரினால் நிரப்பப்பட்ட பந்துகளை ஒருவர் மீது ஒருவர் வீசிக்கொள்வர். பந்து மோதியதும் உடைந்து வண்ண நீர் சிந்தும். இக்காலத்தில் வட இந்தியாவில் கொண்டாடப்படும் 'கோலி' விழாவை ஒத்ததாக இது காணப்படுகின்றது. இதன் தொடர்ச்சியாக இன்றும் மாமன் முறை கொண்டோர் மீது மஞ்சள் நீர் ஊற்றும் வழக்கம் காணப்படுகின்றது. இச்செய்தியைப் பரிபாடல் தெரிவிக்கின்றது.

*'கண் ஆரும் சாயற் கழித் துரப்போரை*
*வண்ண நீர் கரந்த வட்டு விட்டு எறிவோரும்'*
- (பரிபாடல் 11)

*'உறைத்தும் செறுத்தும் உணர்த்துவானைப்*
*புல்லாது ஊடிப் புலந்து நின்றவள்*
*பூ எழில் வண்ண நீர் பூரித்த வட்டு எறிய.'*
- (பரிபாடல் 12)

## நிறைவுரை:

சங்ககால மக்கள் விளையாட்டின் வழியாகப் பெருமகிழ்வு கொண்டனர். ஒருவரோடு ஒருவர் இணக்கமாகக்கூடி வாழ விளையாட்டு பெருந்துணை செய்தது. நல்ல தோழியரையும் பாங்கர்களையும் (நண்பர்) விளையாட்டுகளே உருவாக்கின. போர் நிறைந்த அக்காலத்தில் உள்ளம், உடல் ஆகிவற்றின் வலிமைகளைப் பேண விளையாட்டுகள் பெரிதும் பயன்பட்டன. ஏறு தழுவல், மற்போர், வாட்போர் யானை, ஏற்றங்கள் என்பன சிறந்த வீரரை அரசருக்கும், மணப்பெண்களுக்கும் அடையாளம் காட்டின.

இக்காலத்தில் உலகெங்கும் போற்றப்படுகின்ற பல விளையாட்டுகள் வேற்றுலகத் தொடர்புகள் பெரிதும் அற்றிருந்த சங்ககாலத்திலும் விளையாடப்பட்டிருக்கின்றன என்பது ஆச்சரியம் தருகின்ற உண்மையாகும். குறிப்பாக பெரும் செல்வாக்கும் பெற்றிருக்கும் எழில் உலாவரங்கு (Fashion Show) சங்ககாலப் பெண்களால் நடத்தப்பட்டது என்பது பெருவியப்பளிக்கின்றது.

தற்போதைய உலகப்புகழ் பெற்ற விளையாட்டுகள் பல அக்காலத்தில் எம்மாலும் விளையாடப்பட்டுள்ளன என்ற தகவல்கள் இனம் சார்ந்து எம்மைப் பெருமைப்படுத்துபவனவாக உள்ளன.

ஒத்த தன்மை நிலவிய பண்டைய சமூகத்தில் வேளாண் சமூகநிலை ஏற்றத்தாழ்வுகளுக்கு வித்திட்டது என்பர். இச்சமூக மாற்றங்கள் விளையாட்டிலும் தாக்கங்களை ஏற்படுத்தின. 'உள்ளத்தில் உவகை ஏற்படுத்துதல்' என்ற சமூகச்சமதன்மை நிலையில் இருந்து பொருளியல் தாக்கத்தினூடாக விளையாட்டு முறைகள் மாறத்தொடங்கின. பொருள் இழத்தலும் ஈட்டலும் சில விளையாட்டுகள் புகுந்துகொண்டன. வன்முறையின்றி சொத்துகளைக் கவரவும் சூது போன்ற விளையாட்டுகள் பயன்படுத்தப்பட்டன. இந்த மாற்றங்களுக்கு அதிகாரமும் பொருளியற் சமச்சீரின்மையும் உதவின.

எம் பண்பாட்டு விழுமியங்கள் பலவற்றையும் சுமந்து சமூக ஒருமைப்பாட்டைப் பேணப் பயன்பட்ட பல விளையாட்டுகளை நாம் தொலைத்துக்கொண்டிருக்கின்றோம். பல தொலைந்தே போய்விட்டன. பெரும் பண விளையாட்டுகளும், உலகமயமாதலும் தனித்துவமான விளையாட்டு வடிவங்களை மெல்ல மெல்ல அழித்து வருகின்றன.

எம் தொன்மங்கள் சுமந்த இவ்விளையாட்டுகளை மீண்டும் மீட்டெடுக்க முடியுமா? என்பது ஐயமேயாயினும் அவை பற்றிய வரலாற்றை அழியவிடாது பேணிக்காப்பது எம் கடன்.

**உசாத்துணை:**
- தமிழக வரலாறு மக்களும் பண்பாடும்: கே. கே. பிள்ளை
- பண்பாட்டு அசைவுகள்: தொ பரமசிவன்
- தமிழர் நாகரிகமும் பண்பாடும்: முனைவர் அ. தட்சினாமூர்த்தி
- பழந்தமிழர் விளையாட்டுகள்: முனைவர் இரா. குணசீலன்
- சங்க இலக்கிய விளையாட்டுக் களஞ்சியம்: சு. சிவகாமசுந்தரி
- புறநானூறு
- பரிபாடல்
- நற்றிணை
- பட்டினப்பாலை
- அகநானூறு
- குறுந்தொகை
- புறநானூறு
- http://ainthamtamilsangam.blogspot.ca/2013/12/blog-post.html
- http://ta.wikipedia.org/wiki/தமிழர்_விளையாட்டுகள்_(சங்ககாலம்)
- http://www.tamilvu.org/library/libindex.htm
- http://www.tamilvu.org/library/libindex.htm
- http://ta.wikipedia.org/wiki/சங்ககால_விளையாட்டு
- http://www.tamilauthors.com/01/24.html



vivekanandan.p@thaiveedu.com

# வாகன விபத்தில் காயமடைந்துவிட்டீர்களா?



அனுபவசாலிகளின் ஆலோசனை பெற்றபின் உங்கள் முடிவை எடுங்கள்!

## FIREMAN STEINMETZ
PERSONAL INJURY LAWYERS

CERTIFIED AS A SPECIALIST IN CIVIL LITIGATION

SPECIALIZING IN SERIOUS PERSONAL TRAUMATIC INJURIES AS RESULT OF A

**MOTOR VEHICLE ACCIDENT**

FRACTURES - SPINAL CORD INJURY - BRAIN OR HEAD INJURY
SCARRING OR DISFIGUREMENT - INTERNAL INJURIES OR DEATH



**Jack J. Fireman Q.C. LLM.**
Jack J. Fireman Q.C. has been voted to the "Most Frequently Recommended Lawyer" catergory in L'Expert since 1997 as voted by the his peers from Ontario



**Harry F. Steinmetz**
Mr. Steinmetz is a member of the Advocates Society, the Canadian Bar Association, the Metropolitan Toronto Lawyers Association and the Medico-Legal society.

## உங்களுக்குத் தெரியுமா?

- நடந்த விபத்து உங்கள் தவறில்லாவிடின் உங்களால் பணமாக வலி, வருத்தும், வாழ்வில் இழந்த மகிழ்ச்சி ஆகியவற்றுக்காக பணமாக **$330,000.00** வரையும், சம்பள இழப்பீடுகள் அத்துடன் **$86,000.00** வரை இழப்பாகவும் மற்றும் பல்வகையான இழப்புகளுக்கு நஷ்டஈடுகள் பெறமுடியும்.
- நடந்த விபத்து உங்கள் தவறாக இருப்பின் உங்களால் **$86,000.00** வரையும் வருமான இழப்பீடாக வாரத்திற்கு **$400** வரையும் இன்னும் பலவகை இழப்பீடுகளையும் பெறமுடியும்.

**If the impairment catastrophic your claim can be:**
- Medical and Rehabilitation expenses up to **$1,000,000.00**
- Personal care expanses up to **$1,000,000.00**

***OVER 50 YEARS COMBINED EXPERIENCE***
**even if you are:**
unemployed - employed - passenger - pedestrian
cyclist - traveling in public transit - student - housewife

You may be eligible for benefits to THOUSANDS of dollars

*if you have optional insurance you can calm up to **$1,000.00** IRB'S-per week
வரை இழப்பதந்த அனுமதியாதீர்கள்!

**இலவச ஆலோசனைகளுக்கு இன்றே அழையுங்கள்**

# தீபன்

**24 Hours Direct Line**
**(416) 505 - 9804**
**(416) 624 - 4751**

Thiparanjan Sivarajalingam
Accident Benefit Specialist
Licensed Paralegal
(Member of The Law Society of upper Canada)
**www.thipaninjuryclaim.com**
**thiparanjan@gmail.com**

அனுபவம் இல்லாதவர்களின் ஆலோசனையின் கீழ் விழுந்திடாதீர்கள்

TORONTO | SCARBOROUGH | MISSISSAUGA

---

An Ontario Secondary Private School Registered Under the Ministry of Education

# Delta Academy Inc.

**Delta Academy Inc.**

## Offers the Following OSSD Credit Courses

Our goal is not the quantity of students but quality of education. We ensure that the students are trained to work independently and be prepared to the next grade level with the help of our highly qualified and experienced teachers.



BSID # 667561

| Grade 10 | |
|---|---|
| English | ENG2D |
| Principle of mathematics | MPM2D |
| Science | SNC2D |
| **Grade 11** | |
| English | ENG3U |
| Functions | MCR3U |
| Biology | SBI3U |
| Chemistry | SCH3U |
| Physics | SPH3U |
| Accounting | BAT3U |
| Economics | CIA3U |
| **Grade12** | |
| English | ENG4U |
| Advanced Functions | MHF4U |
| Calculus and Vectors | MCB4U |
| Data Management | MDM4U |
| Biology | SBI4U |
| Chemistry | SCH4U |
| Physics | SPH4U |
| Accounting | BAT4M |
| Economics | CIA4U |

**ART COURSES**

| Grade 9 | |
|---|---|
| Vocal | |
| Violin | |
| Veena | AMU10 |
| Piano Keyboard | |
| Dance | ATI101 |
| Miruthangam | AMP10 |
| **Grade 10** | |
| Vocal | |
| Violin | |
| Veena | AMU20 |
| Piano Keyboard | |
| Dance | ATI201 |
| Miruthangam | AMP20 |
| **Grade 11** | |
| Vocal | |
| Violin | |
| Veena | AMU3M |
| Piano Keyboard | |
| Dance | ATI3M1 |
| Miruthangam | AMP3M |
| **Grade 12** | |
| Vocal | |
| Violin | |
| Veena | AMU4M |
| Piano Keyboard | |
| Dance | ATI4M1 |
| Miruthangam | AMP4M |

**Classes begins on**
**February, July, September**
**Register with us early as the space is limited.**
**All courses are 110 hours.**
**Course fee is $500 (Including registration )**

**Contact**

# 416.751.2011

**deltaacademyinc@hotmail.com**
**1160 Birchmount Road, Unit 1B, Scarborough ON M1P 2B8**

# ஹார்மனி ஹோல் என்ற முதியோர்க்கான நிலைய மண்டபத்தில் நடைபெற்ற குழந்தை சண்முகலிங்கத்தின் 'எந்தையும் தாயும்' நாடகம்.














படம்: ஈகுருவி

# எந்தையும் தாயும் கூடிமகிழ்ந்து குலாவிய நாட்டில்...



பார்வதி கந்தசாமி

தமிழுக்காக வியூகம் அமைத்து அதை வளர்க்க வேண்டும் என்று புலம்பெயர்ந்த நாடுகளில் பாடுபட்டுவரும் கலைஞர்களில், இலங்கை வானொலி புகழ் கலைஞராக நன்கு அறியப்பட்ட சோக்கல்லோ சண்முக நாதன் முக்கியமானவர். தொடர்ச்சியாக வில்லிசைப் பாடல்களை ஆக்கி மேடையேற்றி வரும் சோக்கல்லோ அவர்கள் ஒரு சிறந்த நாடகக் கலைஞரும் கூட. அண்மையில் குழந்தை சண்முகலிங்கத்தின் நாடகமான 'எந்தையும் தாயும்' என்ற நாடகத்தை தான் முக்கியமான பாத்திரத்தை ஏற்று நடித்தும் நெறிப்படுத்தியும் கனடா ஹார்மனி ஹோல் என்ற முதியோர்க்கான நிலைய மண்டபத்தில் மேடை ஏற்றினார். குழந்தை அவர்களின் மண்சுமந்த மேனியர் என்ற நாடகம் இலங்கை தமிழ் நாடகத்துறையிற் பெரும் புரட்சியை ஏற்படுத்திய, மரபுக் கலைகளை உள்வாங்கி மக்களின் தாங்கொணாத் துயரங்களை வெளிக்கொணர்ந்து புகழ் பெற்ற நாடகம் ஆகும். எந்தையும் தாயும் நாடகமும் இலங்கையில் பல மேடையேற்றங்களைக் கண்ட ஒரு சிறந்த நாடகமாகும்.

ஹார்மனி ஹோல் நிறுவனத்தின் தமிழ் முதியோர் நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளர் ஊர்மிளா செல்வநாயகம் இந்நாடகத்தை அங்கே மேடையேற்ற ஒழுங்கு செய்தமை பாராட்டுதற்குரியது. முதியோர் தேவைகளை அறிந்து அவற்றிற்குரிய விதத்தில் சேவை வழங்கும் அவரது முயற்சிகள் கவனத்துக்குரியவை. முதியோர் நிகழ்ச்சித் திட்ட உதவி இணைப்பாளர்களாக ராஜியும் ஔவை விக்னேஸ்வரனும் சேவையாற்றுகின்றார்கள். ஔவை விக்னேஸ்வரன் கொழும்பில் 'எந்தையும் தாயும்' நாடகம் மேடையேற்றப்பட்டபோது செல்வரத்தினத்தின் மனைவி மகேஸ்வரரியின் பாத்திரத்தை ஏற்று நடித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. செல்வரத்தினத்தின் பாத்திரத்தை சொக்கல்லோ சண்முகநாதன் ஏற்று நடித்திருந்தார்.

இந்த நாடகம் அண்மையில் காலம் சென்ற ஈழத்து முதுபெரும் நாடக, திரைப்படக் கலைஞர் நாகரத்தினம் கேகையலிங்கத்திற்கான சமர்ப்பணமாக மேடையேற்றுவதாக அறிவிக்கப்பட்டு அவருக்கு அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

நாடக அரங்கக் கல்லூரியில் அதை நிறுவிய தரசீசியஸ் - குழந்தை சண்முகலிங்கத்திடமும் அங்கே அதிதிகளாகப் பயிற்று வித்த குருமகள், மௌனகுரு, ஏ.ரீ. பொன்னுத்துரை போன்றோரிடமும் பயிற்சி பெற்ற சோக்கல்லோ இந் நாடகத்தை இலங்கைக் கலாச்சார அமைச்சின் கலைக் கழகத்திலும் கொழும்புத் தமிழ்ச் சங்கத்திலும் மேடையேற்றியவர். கலைக்கழகத்தில் சங்கரப்பிள்ளையாக நடித்துச்சிறந்த நடிகர் விருதையும் பெற்றவர். அதே திறமையான நடிப்பை இங்கும் காணமுடிந்தது. அங்கே இந் நாடகம் 5 விருதுகளைப் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. இந்நாடகத்தின் கதை மக்கள் மனதைத் தொட்டிருந்தது. இந்நாடகம் எழுதப்பட்ட காலம் பொம்மர் அடி, துப்பாக்கிச் சூடுகள் பலமாக நடந்த இந்திய இராணுவம் இலங்கையில் செய்த அட்டூளியங்களைக் கைவிட்டு இந்தியாவிற்குப் புறப்பட்டுச் சென்ற பின்னான தொடர்ச்சியான காலம். இந்திய விட்டுச் சென்றது இலங்கை இராணுவத்துக்கு கட்டுப்பாடில்லாத தாக்குதலைத் தமிழ் மக்கள்மீது கட்டவிழ்த்துவிட வாய்ப்பாக இருந்தது. வெளிநாட்டவருடன் பேசவும் கொழும்பு செல்லவேண்டிய காலம். தொடர்புகள் துண்டிக்கப்பட்ட காலம். தமிழ் முதியோர் பட்ட அவலங்களோ சொல்லமுடியாதவை. தமிழ் முதியோர் 'நம் முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்த பூமியில்' தனிமையில் ஏங்கித் தவித்துத் தனிமையிலேயே ஆதரவற்ற நிலையில் இறந்து கிடக்கும் நிலை கண்டு பாரதியார் கண்டிருந்தால் அவர் நெஞ்சிலிருந்து உதிரம் கொட்டியிருக்கும். காலனித்துவக் காலத்தில் காவுகொண்டு செல்லப்பட்ட தமிழ்க் கூலிகள் அழும் குரல் ஆயிரம் ஆயிரம் மைல்களுக்கு அப்பால் வந்து பாரதியார் காதுகளில் புகுந்து மனதைப் பிழிந்தபோது அவர் பாடிய பாடல் இச் சந்தர்ப்பத்தில் எனக்கு ஞாபகத்திற்கு வருகின்றது.

நாடகத்தில் வசதியாக வாழ்ந்த சங்கரப்பிள்ளை பிள்ளைகளை வெளிநாட்டுக்கு அனுப்பிவிட்டுத் தனிமையில் தேநீர் கொடுக்கக் கூட ஆளில்லாமல் இருக்கிறார். காணும் இளசுகளை மூத்தமகன் மோகன் வந்துவிட்டான் என நினைக்கிறார். இது இவரின் பிரமை. 'கொள்ளிக்கு மூத்தமகன்' என்ற சைவத்தமிழர் எண்ணத்தாலாக இருக்கலாம். நான்கு வீடுகள் தள்ளி இருக்கும் ஐயாத்துரை குடும்பம் அவருக்கு அவ்வப்போது உதவுகிறது. "எல்லாரும் பிள்ளைகளைப் பரதேசங்களுக்கு அனுப்பிப் போட்டு, இஞ்சை தனிச்சு மலட்டுக் கட்டையளா(ய்) இருக்குதுகள். அயலட்டேலை இருக்கிறவனுக்குத்தான் எல்லாக் கரைச்சலும்...!" யாழ்ப்பாணத்திலிருந்து தொலைபேசி கூடப் பயன்படுத்த முடியாத காலம். இறுதியில் சங்கரப்பிள்ளை யாரும் அருகில் இல்லாத நிலையில் இறந்துவிடுகிறார்.

இந்த நாடகத்தில் நடித்தவர்களில் ருக்மணிகாந்தனும் சோக்கல்லோவும் முன்பும் இலங்கையில் இதே நாடகத்தில் நடித்தவர்கள். இதில் ஐயாத்துரையாக நடித்தவர் வி.ரி, இராஜேந்திரன். இவர் மிக நேர்த்தியாகத் தன் கதாபாதத்திரத்தைச் செய்து பார்ப்போரின் உள்ளங்களைத் தொட்டிருந்தார். அக்காலப் பெண்பிள்ளை வேடம் தாங்கிய யாழினி யூட் அத்தனாசியார் சில்லையூர்ச் செல்வராசனின் மகள் யுவதிப் பாத்திரத்தை நனறாகவே நடித்திருந்தார். அவரது தம்பி கண்ணனாக நடித்த சிறுவன் முகிலன் ஜெயரூபன் கனடாத் தமிழ்ச் சிறுவர்களை உற்சாகப் படுத்தப் பொருத்தமான தமிழ் ஆற்றல், கலையம்சம் கொண்ட கனடாவில் பிறந்த 11 வயதுச் சிறுவன். இவர் தமிழ்ப் பற்றுக் கொண்டமைக்கும் அதீத வல்லமைக்கும் அடிப்படை சுப்பிரமணியம் இராஜரத்தினத்தின் அக்ரிவ் பிறெயின் சென்ரலில் நடக்கும் தமிழ் வகுப்புக்கள்தான் எனக் கூறப்பட்டது. முகிலன் தமிழை வாசிப்பதிலும் உச்சரிப்பிலுமிருந்து அவர் யாழ்ப்பாணத்திலிருந்து நேராக வந்து நடிப்பது போலவே இருந்தது. புலம் பெயர்ந்த நாட்டில் வாழும் முகிலனது அபார திறமையைப் பாராட்டவேண்டும்.

சிங்கப்பூர் பென்சன்காரரின் மனைவி மகேஸ்வரியாக நடித்த நளினி குகசீலனின் பாரதி பாடலான 'எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி...' என்ற பாடல் அவரது சங்கீத ஞானத்தையும் குரல் வளத்தையும் உறுதிப்படுத்தியது.

கீபோட் இசையமைப்பாளராக மொன்றியேல் சுதாகர் நாடகத்துக்குச் சிறப்புக் கூட்டினார். மேடை நிர்வாகம், ஒலி - ஒளி அமைப்புக்களை என். கே. கமல் செய்து நெறியாள்கையும் செய்திருந்தார்.

தமிழர் பண்பாடு பற்றியும் பண்பாட்டின் அங்கமான மொழி பற்றியும் அதன் சிதைந்து கொண்டு போகும் போக்குப் பற்றியும் புலம்பெயர்ந்த மக்களிடையே கவலைத்தொனி பரவுகிறது. வற்றாத நதியெனத் தமிழ்நதி கிளைகள் விட்டு ஓடிக்கொண்டிருப்பதற்குப் புலம்பெயர்ந்த நாட்டுப் பனித்திணைத்தளமும் பிரவாகிக்கக்கூடிய ஒரு தளமாகிறது என்பது பாரதி "தேமதுரத் தமிழோசை உலகனைத்தும் பரவும்வகை செய்தல்வேண்டும்" என்ற தூர நோக்கை மெய்ப்பிக்கப் பொருத்தமானதாகின்றது. தமிழுக்கான வியூகம் அமைத்து அதை வளர்க்க வேண்டும் எனப் பல நாடுகளிலும் புலம்பெயர்ந்த, குடிபெயர்ந்த தமிழினம் கங்கணங் கட்டவேண்டும். தாய் மொழியின் சீர்மையைப் பேணிப் பாதுகாப்பது தமிழரது இருப்பையும் அடையாளத்தையும் உறுதிப்படுத்துவதற்கு இன்றியமையாததாகும்.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற அந்தப் பண்படுத்தப்பட்ட பண்பாட்டு விழுமியத்தைப் பறைசாற்றும் நாம் ஈழத்துக் கலைஞர்களை ஊக்குவிக்கத் தவறுகிறோம். எங்களிடம் இருக்கும் திறமைகளை இனங்காணத் தவறுகிறோம். எங்கள் குழந்தைகளிடம் எமது பாரம்பரியக் கலைகளை வளர்ப்பதற்கு முன்னிற்கும் எங்கள் கலைஞர்களை நாம் இனங்கண்டு அவர்களை மதிக்கவேண்டும். அத்தகைய கலைஞர்கள் எங்கள் குழந்தைகளை வழிப்படுத்தக் கூடிய, சமுகத்திற்கு விழிப்பூட்டக் கூடிய நாடகங்களைச் செய்கின்றனர். தமிழரின் பண்டைய கலைப் பொக்கிசங்களைப் பாதுகாக்கின்றனர். தமிழர் மரபுக் கலைகளான கூத்து முதலியவற்றிலும் தமிழ்க் குழந்தைகளைப் பங்கு கொள்ள வைக்கவேண்டும். பிற நாட்டுக் கலைஞர்களுக்கு வாரி இறைக்கும் எமது சமுகம் எங்களுக்காகவும் எங்கள் குழந்தைகளுக்காகவும் சற்றுச் சிந்திப்பார்களா?

எங்கள் பிரச்சாரங்களை நாங்கள் நாடகத்தின் மூலம் ஜனரஞ்சக ஆற்றுகையாகச் செய்வதை அறிவோம். கூத்து இவற்றிற்கு அடிப்படையாக இருந்தது. எங்களிடம் தெற்காசியாவிலே புகழ் பூத்த நாடகக் கலைஞர்கள் நடிகமணி வி.வி. வைரமுத்து, நாடக கவிமணி எம்.வீ. கிருஷ்ணாழ்வார், கலையரசு சொர்ணலிங்கம், பொன்னாலைக் கிருஷ்ணன் போன்றவர்கள் இருந்தனர். பேராசிரியர்கள் க.கணபதிபிள்ளை, சு. வித்தியானந்தன் முயற்சியால் 1950ல் சொந்தப் பண்பாடுபற்றிய பிரக்ஞை ஈழத்து மக்களுக்கு ஏற்பட்டது. இந்த மாற்றத்தின் பிரதிபலிப்புக்கள் நாடகத்துறையில் வெகுவாக ஏற்பட்டன. பேராசிரியர் சிவத்தம்பியும் கலைக் கலைக்கழகத்தின் செயலாளராக இருந்து மரபுவழி நாடகங்களைப் பிரபரல்யப்படுத்த அடிப்படையாக இருந்து உதவினர்.

பேராசிரியர் சரத்சந்திரா பல்கலைக் கழக மாணவரை கொண்டு கிராமிய மணம் வீசும் சிங்களக் கூத்துக்களடியாக சிங்கபாகு, மனமே போன்ற திறமான நாடகங்களை அரச உதவியுடன் மேடையேற்றியமை தமிழ்நாடக உலகிலும் விழிப்புணர்வை ஏற்படுத்தியது. வித்தியானந்தன் பல்கலைக்கழகத் தமிழ் மாணவர் மூலம் கர்ணன்போர், நொண்டி நாடகம், இராவணேசன், வாலிவதை போன்ற கிராமியக் கூத்துக்களடங்கிய நாடகங்களை மேடையேற்றிக் கிராமியக் கலைகளுக்கு உயிரூட்டினார். பின்னர் மௌனகுரு, தாசீசியஸ், குழந்தை சண்முகலிங்கம், பிரான்சிஸ் ஜெனம், சுந்தரலிங்கம், பாலேந்திரா, சிதம்பரநாதன், விந்தன், பாலசுகுமார், சுமதி சிவமோகன், ஜெயசங்கர் போன்றோர் முற்போக்கு நாடகங்களை மரபு தழுவி வளர்த்தவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்.



பண்பாட்டு விழுமியம், மரபுப் பெருமியம் பற்றி நாம் அடிக்கடி பேசிக்கொள்கிறோம். பெருமையும் கொள்கிறோம். புலம்பெயர்ந்த நாடுகளில் மரபுக் கலைகள் பேணப்பட்டு வருகின்றன என்பதற்குப் பரதக்கலையும் சங்கீதக்கலையும் சாட்சியாக நின்றபோதும் முன்னின்றபோதும் அப்பாடல்களை ஆங்கிலத்தில் பிரதி செய்தே மாணவர் படிப்பதைக் காணமுடிகிறது. மரபுக் கலையை வளர்த்து எங்கள் கலைஞர்களைப் போற்றிப் புகழ்ந்து அவர்களுக்கு ஆதரவு தந்து எங்கள் இருப்பை இங்கு நிலை நிறுத்துவோம். சோக்கல்லோவின் முயற்சி பாராட்டுக்குரியதும் பெருமைப் படவேண்டியதும் ஆகும். 'எந்தையும் தாயும்' நாடகம் புலம்பெயர்ந்த நாடுகளில் பல மேடைகளில் முதியோர் அல்லாதவர்களுக்காக மேடையேற்றப்பட வேண்டியது. சமூகம் சார்ந்த பொறுப்புக்களைக் காலத்துக்கு ஏற்ப கைக்கொள்ள வேண்டிய விழுமியத்தை உணர்த்தி நிற்கும் நாடகம் கனடாவில் மேடை காண்பது பொருத்தமானது.

*parvathy.kanthasamy@thaiveedu.com*

■ ■ ■

# Dr. REFINANCE

# Dr. றீபைனான்ஸ்

புற்றுநோயாக புரையோடிக்கிடக்கும்
உங்களின் பணநெருக்கடியை விசேட
**அறுவைச்சிகிச்சை** மூலம்
அறவே ஒழித்து ஆரோக்கியமான
வாழ்வைப்பெற அழையுங்கள்

## Mortgage

Home equity Loan

2nd Mortgage and

Other Financial needs



$ 1000.00 முதல் ஒரு லட்சம் டொலர் வரை
மோடகேஜ் பிரேக் ஆகாமல் கடனாக பெறவும்
68 பேமன்ற்ஸ்களையும் ஒரே பேமன்றாக செய்யவும்

## சிவா இரத்தினசிங்கம்

Brokerage #11156 Licence: M08882133

**416-520 1214**

**416-430 0111**

**2857 Lawrence Ave. Unit-6. Scarborough**

## கன்னட எழுத்தாளர்

# யு.ஆர். அனந்தமூர்த்தி இயற்கை எய்தினார்

- என்.கே. மகாலிங்கம் -

எங்களுக்கு மலையாள இலக்கியம், திரைப் படங்கள் அறிமுகமான அளவு கன்னட இலக் கியமோ திரைப்படமோ அறிமுகம் இல்லை. தெலுங்கில் பாடிய தியாகைய்யரைத் தெரிந் தளவு கன்னடத்தில் பாடிய கர்நாடக சங்கீ தத்தின் பிதாமகன் என்று அழைக்கப்படும் புரந்தரதாஸரைத் தெரியவில்லை. ஆண்டா ளின் பாசுரங்களைத் தெரிந்தளவு அக்கா மகாதேவாவின் வஜன கவிதைகள் அறிமுகம் இல்லை. தமிழ் பக்தி இலக்கியத்தை அறிந் தளவு ஹரிதாஸரைத் தெரியவில்லை. இந் திய அளவில் எட்டுமுறை ஜனாதிபதி விருது பெற்ற நவீன கன்னட இலக்கியக்காரர்கள் பலரைத் தெரியவில்லை. தமிழ் இலக்கியத் திற்காக ஜனாதிபதி விருது பெற்றவர் எத் தனை பேர்? இரண்டே இரண்டு பேர். அகி லனும், ஜெயகாந்தனும். அவ்வளவுந்தான்.

கன்னட இலக்கியக்காரர்கள் சிலரின் அறி முகமும் நூல்களும் சாகித்ய அகடமி வெளி யிட்ட நூல்களாலும் காலச்சுவடு பதிப்பகம் போன்ற சில பதிப்பகங்கள் வெளியிடும் நூல்களாலும் இணையத்தளங்களாலும் நிலைமை கொஞ்சம் மாறி வருகிறது. அதே போல நஞ்சுண்டன், பாவண்ணன் போன்ற வர்களின் மொழிபெயர்ப்புக்களாலும் தமி- ழவன், ஜெயமோகன் ஆகியோரின் அறிமு கங்களாலும் மாறி வருகிறது.

அப்படித்தான் இரண்டு கிழமைகளுக்கு முன் னர் (ஒகஸ்ற் 22, 2014) காலமான யு. ஆர்.அனந்தமூர்த்தியும் தமிழுக்கு அறிமுக மானார். அதேபோல அவரின் சமகாலத்தவர் களான நாடக இயக்குநர் கிரிஷ் கர்நாட் டும் அறிமுகமானார். கவிஞர் இலங்கேஸ், எம்.எல்.பைரப்பா, சந்திரசேகர கம்பார, போன் றோர்களும் அறிமுகமானார்கள். அதற்கு முந்திய தலைமுறையினரான குவேம்பு, மாஸ்தி வெங்கடேச ஐயங்கார், சிவராமக- ரந்த் போன்றவர்களும் அறிமுகமாகி வரு கிறார்கள்.

உடுப்பி ராஜகோபாலாச்சரிய அனந்தமூர்த்தி 1932 டிசம்பர் 21ல் கன்னடத்திலுள்ள தீர்த்த களி என்ற சிற்றூரில் பிறந்தார். புரோகிதம் செய்த மரபார்ந்த வைதீக மாதவாச்சாரிய வைஷ்ணவ குரு பரம்பரையினரைச் சேர்ந்த குடும்பம் அவருடையது. அவரின் ஆரம்ப கல்வியும் சம்ஸ்கிருத பாடசாலையாகவே இருந்தது. பின்னர் மைசூர் பல்கலைக் கழகத் தில் ஆங்கில இலக்கியத்தில் இளநிலை, முதுநிலைக் கல்வி கற்று அதே பல்கல்க ழகத்தில் விரிவுரையாளராகவும் பேராசிரிய ராகவும் ஆனார். அங்கிருந்து பொது நல வாய நாட்டினருக்கான புலமைப் பரிசில் பெற்று பர்மிங்காம் பல்கலைக் கழகத்திற்குச் சென்று 1966ல் முனைவர் பட்டம் பெற்றார். அப்போது இலங்கையைச் சேர்ந்த நமது பேராசிரியர் க.கைலாசபதியும் முனைவர் பட்ட ஆய்வு செய்தவர் என்பது குறிப்பிடத் தக்கது. இவர்கள் இருவரும் நெடுங்கால நண்பர்கள். இருவருமே தம் தம் மொழி இலக்கியத்தில் நல்ல செல்வாக்குச் செலுத் தியவர்கள். இருவரும் சோஸலிச சித்தாந் தத்தால் கவரப்பட்டவர்கள்.

யு.ஆர்.அனந்தமூர்த்தி லோகியாவின் சோச லிசக் கருத்துக்களின் மீது ஈடுபாடுகொண் டவர். தன் பதினேழாவது வயதிலேயே நில வுரிமைப் போராட்டத்தில் பங்குகொண்டவர். நேருவின் கொள்கைகளை எதிர்த்தவர். எம்.என்.ராய் போன்றவர்களிடமிருந்து உல கியல் தத்துவத்தைப் பெற்றுக் கொண்டவர். இந்துத்துவ எதிர்ப்பாளர். சமூகக் கேடுகளில் மரபு, மதம், ஆன்மீகம் போன்றவற்றின் பங்களிப்பைக் கேள்விக்குட்படுத்தியவர்.

இவர் சம்ஸ்காரா, பாவ, அவஸ்தே, பாரதி புரம், ஹடசிரார்த்தா என்ற நாவல்களை எழுதியிருக்கிறார். அத்துடன் கன்னட மொழி யில் நவ்யா–நவீனத்துவ-இயக்கத்தை உரு வாக்கிய முன்னோடிப் படைப்பாளிகளில் இவரும் ஒருவர். ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக கன்னட இலக்கியத்திற்கு சிறப் பான ஓர் இடத்தைப் பெற்றுக் கொடுத்தவர்.

சம்ஸ்காரா என்ற நாவலால் இவர் மிகவும் புகழடைந்தார். இந்த நாவலை இவர் முனை வர் பட்டம் படிக்கும் காலத்தில்(1965) எழுதி விட்டார். அது 1966ல் வெளியிடப்பட்டது. அந்த நாவலை ஆங்கிலத்தில் ஏ.கே.ராமா னுஜன் மொழிபெயர்த்தது அவருக்குச் சர் வதேசப் புகழைப் பெற்றுக் கொடுத்தது. இது தமிழிலும் இந்திய மொழிகள் பலவற்றிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.


ஐந்து நாவல்கள், ஒரு நாடகம், எட்டு சிறு கதைத் தொகுதிகள், மூன்று கவிதைத் தொகுதிகள், எட்டுக் கட்டுரைத் தொகுதிகள் வெளிவந்துள்ளன.

அத்துடன் பட்டாமிராமரெட்டியின் இயக்கத் தில், கிரிஷ் கர்னாட் திரைக்கதை எழுத, கவிஞர் பி.லங்கேஸ் போன்றவர்கள் நடிக்க சம்ஸ்காரா திரைப்படமாகவும் எடுக்கப்பட் டுள்ளது. இப்படம் சமாந்தர சினிமாவைக் கன்னடத் திரையுலகத்திற்கு அறிமுகப்ப டுத்தியது என்று கூறப்படுகிறது. அத்துடன் இது 1970 திரைப்படத்திற்கான ஆகச் சிறந்த தேசிய விருதையும் பெற்றுள்ளது.

அதேபோல காதாசிரார்ஸ்தா என்ற இவரின் குறுநாவல் கிரிஷ் காசரவல்லி என்பவரால் இயக்கப்பட்டது. அது 2002ல் பரிசில் நடை பெற்ற சினிமாவின் நூற்றாண்டுக் கொண் டாட்டத்தின்போது காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

அவற்றைவிட அவஸ்தே, சம்ஸ்காரா, மௌனி, தீட்ஷ போன்றவையும் திரைப்படமாகியுள்ளன.

சமஸ்காரா என்றால் சடங்குகள். கலாசாரம், சவஅடக்கம் என்ற அர்த்தங்களும் உள்ளன என்றும் சொல்லப்படுகின்றது. சம்ஸ்காரா அலிகரி அல்லது கருத்துருவத் தன்மை கொண்ட படைப்பு. நவீனத்துவத்தின் தத்து வக்குரல் இருத்தலியல் என்று சொல்லப்ப டுகிறது. இதுவும் அப்படிப்பட்ட ஒன்று. கச் சிதமான வடிவம், உணர்வெழுச்சி இல்லாத கறாரான நடை, மனிதனின் சாராம்சமான மன எழுச்சிகள் மீதான அவதம்பிக்கை, மரபு மறுப்பு நோக்கு, அழகிய படைப்பு அதன் அம்சங்கள் என்று ஜெயமோகன் சொல்கிறார் ஜெயமோகன். தாகூரின் கோரா,



எஸ்.எல். பைரப்பா ஆகியோரின் நவீனத்துவப் படைப்புகளுடன் இதை ஒப்பிடுப்படுகிறார்.

இவரின் சமகாலத்தில் புகழ்பெற்ற நாடக இயக்குநர் கிரிஷ் கர்னாட், கவிஞர் பி.லங் கேஸ், எல்.எம்.பைரப்பா, சந்திரசேகர கம்பரா போன்றோர் உள்ளனர். இப்படிப் பலர் ஒரே மொழியில் ஒரே காலத்தில் எழுதி ஒரு மொழிக்கு பங்களிப்பதற்கு அந்த மொழி எத்தனை கொடுப்பனவு செய்திருக்கவேண்டும்!

இவர் பெறாத விருதுகள் குறைவே. இந்தி யாவின் உயர்ந்த விருதான ஜனாதிபதி விருது பெற்றுள்ளார். பத்துபூஷண் பெற்றவர். 2013ல் மான் புக்கர் பரிசிற்காகப் பரிந்து ரைக்கப்பட்டு, இறுதித் தேர்விலும் இருந்தவர்.

1987- 1991 மகாத்மா காந்தி பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராக, 1992 நஷனல் புக் ரஸ்றின் தலைவராக, 1993 இந்திய சாகித்யஅகடமி தலைவராக, இரு முறை இந்திய திரைப்பட, தொலைக்காட்சி நிறுவனத்தின் தலைவராக, 2012ல் கர்நா டக நடுவண் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராக இருந்துள்ளார்.

ஜவர்ஹர்லால் பல்கலைக் கழகம் போன்ற இந்திய பல்கலைக் கழகங்களிலும் சில அமெரிக்கப் பல்கலைக் கழகங்களிலும் வருகைதரு பேராசிரியராகப் பணியாற்றியி ருக்கிறார். சோவியத் நாடுகள், சீனா, ஜேர் மனி முதலிய பல நாடுகளுக்கும் சென்றி ருக்கிறார்.

இவர் நேரடி அரசியலிலும் பங்குபற்றியிருக் கிறார். 2004 நடைபெற்ற லோக் சபா தேர் தலில் ஜனதா தால் கட்சி சார்பாக தேர்த லில் நின்று தோல்வியுற்றார். முக்கியமாக பிஜேபிக்கு எதிராக நிற்க வேண்டும் என் பதற்காகவே அவர் நின்றதாகச் சொன்னார். ஆனால் அதே கட்சி பின்னர் பிஜேபியுடன் கூட்டுச் சேர்ந்தது வேறு கதை. தன் நண் பர்கள் அப்படிச் செய்ததைத் தான் மன் னிக்கவே மாட்டேன் என்று சொன்னார். பின் னர், காங்கிரஸ் அரசியலில் ஈடுபட்டிருக்கி றார். 2006 ராஜ்ய சபா தேர்தலில் நின்றும் தோற்றார்.

ஈழத்திலோ தமிழ் நாட்டிலோ பெயர்பெற்ற இலக்கியக்காரர்கள் எவரேனும் தேர்தலில் நின்றதோ தோல்வியுற்றதோ நானறிந்தவரை இல்லை. ஆனால் தீவிரமான அரசியல் பேசியிருக்கிறார்கள். எழுதியும் இருக்கிறார் கள். தோல்வி கசப்பானது. வெறுப்பையும் அவமதிப்பையும் தருவது. அந்தரங்கங்களை வெளிப்படுத்துவது. அவற்றிற்குப் பயப்படு வர்கள் தேர்தலில் நிற்க முடியாதுதான். ஆனால் இவர் நின்றார்.

இவர் கருத்துரீதியான சர்ச்சைகளிலும் ஈடு படத் தயங்காதவர். அதனால் பலவேளை பல சிக்கல்களில் சிக்கியும் கொண்டிருக்கி றார். எம்.எல்.பைரப்பாவின் 'ஆவரண' என்ற நாவல் இந்து அடிப்படைவாதக் கருத்துக் களை வரலாற்றைத் திரித்துச்சொல்லியுள் ளது என்று இவர் சொன்ன கருத்துக்காக ஊடகங்களில் இவர் பெரிதும் தாக்கப்பட்டார். பைரப்பாவுக்கு நாவலே எழுதத் தெரிய வில்லை என்ற இன்னுமொரு கருத்துக்கா கவும் இவர் ஊடகங்களில் தாக்கப்பட்டார்.

மகாபாரதத்தில், பிராமணர்கள் மாட்டிறைச்சி சாப்பிட்டார்கள் என்று குறிப்பிடப்பட்டிருக் கின்றது என்று இவர் சொன்ன கருத்துக் காகவும் அடிப்படைவாத இந்துக்கள் இவ ரைத் தாக்கியுள்ளனர்.

பிஜேபி, ஆர்எஸ்எஸ் ஆகிய கட்சிகளின் தீவிர எதிர்ப்பாளர் இவர். அதனால் பிஜேபி தலைவரான மோடி பிரதமரானால் அவர் இந்தியாவில் இருக்கமாட்டார் என்று சொல் லியிருக்கிறார். அதை வைத்துக் கொண்டு பிஜேபிக்காரர் அவரைக் கிண்டல் அடித்த துடன், மிரட்டியும் இருக்கின்றனர். நாட்டை விட்டு வெளியேறி பாகிஸ்தானுக்குச் செல்ல ஒருவழிப் பாதை ரிக்கற்றும் அனுப்பியிருக் கின்றனர். இந்தியாவை விட்டு தான் எங்கே போவது என்றும் அதைத்தான் உணர்ச்சி வசப்பட்டு சொன்னதாகவும் பின்னர் கூறி னார். அவர் இறந்தபோது வெடி கொளுத் திக்கொண்டாடியுள்ளனர் சிலர். அதேவேளை அவர் இறந்ததை அறிந்த மோடி 'அவரின் இழப்பு கன்னட இலக்கியத்தின் இழப்பு' என்றும் அவர் குடும்பத்திற்குத் தன் ஆழ்ந்த கவலையையும் தன் ருவிற்றர் மூலம் தெரி வித்துள்ளார்.

இறுதியில் நீரிழிவு நோய் முற்றி, சில காலம் சிறுநீரகம் பாதிக்கப்பட்டு டயலிஸ்-குருதிச் சுத்திகரிப்பு- செய்திருக்கிறார். இறுதியில் மாரடைப்பால் இறந்திருக்கிறார்.

அவர் எஸ்தர் என்ற கிறிஸ்தவப்பெண்ணைக் காதலித்துத் திருமணம் செய்து கொண் டார். அவர்களுக்கு இரண்டு குழந்தைகள். மகன் சாரத், மகள் அனுராதா.

தன்னை காந்தியவாதி என்று சொல்லிப் பெருமைப்பட்டுக் கொள்ளும் அவருடைய இறப்பு எங்களையும் கன்னட இலக்கியத்தை அறிவதற்கும் வாசிப்பதற்கும் தூண்டும் என்று எதிர்பார்க்கிறேன்.



mahalingam.k@thaiveedu.com

**தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.**

**E-mail: info@thaiveedu.com**
**Fax: 416-849-0594 Tel: 416-646-3422**

# மலையக இலக்கிய ஆளுமை சாரல் நாடன்

- தெளிவத்தை ஜோசப் -

அறுபதுகளில் தன்னை ஒரு சிறுகதை எழுத்தாளனாகத் தீவிரமாக்கிக் கொண்டிருந்தவர் சாரல் நாடன்.

மலைநாட்டு எழுத்தாளர்களை ஊக்குவிப்பதற்காக வீரகேசரி நடத்திய முதல் சிறுகதைப்போட்டியில் 'கால ஓட்டம்' என்னும் தனது சிறுகதைக்கு இரண்டாம் பரிசு பெற்றிருந்தார். முதற் பரிசு எனது பாட்டி சொன்ன கதை.

சிந்தாமணி, வீரகேசரி, மலைமுரசு, தினகரன், சுதந்திரன் போன்ற பத்திரிகை சஞ்சிகைகளில் பத்துக்கும் மேற்பட்ட சிறுகதைகளை எழுதி இருப்பவர் இவர்.

இலக்கியம் ஏன் என்னும் தலைப்பைக் கொடுத்து 'யாழ் இளம் எழுத்தாளர் சங்கம் ஒரு கட்டுரைப் போட்டியை நடத்தியது. (1960) பெனடிக் பாலன் முதற் பரிசையும், சாரல் நாடன் இரண்டாவது பரிசையும் பெற்றனர்.

திருவாளர்கள் இரா. சிவலிங்கம், செந்தூரன் போன்ற மலையகக் கல்விக்கண் திறக்கப் பாடுபட்டவர்களால் புத்துணர்வு பெற்ற ஹட்டன் ஹைலண்ட்ஸ் கல்லூரியின் கல்விப் பின்புலம் இவரை எழுத்தாளனாக உருவாக்கத் தொடங்கியிருந்த காலம் அது.

ஹைலண்ட்ஸ் கல்லூரி உருவாக்கிய சிறப்புக்குரிய மாணவர்களின் முன்வரிசைக்காரர் இவர். சிவலிங்கம், செந்தூரன், ந.அ. தியாகராஜன், நவாலியூர் நா. செல்லதுரை, நயினாதீவு வெ. குலசேகரம் ஆகியோரின் ஆசிரியத்துவம் இவரை வழிநடத்த உதவி இருக்கிறது.

கல்லூரிச் சஞ்சிகைகளில் கவிதை எழுத தொடங்கியதன் மூலம் வளர்ச்சி பெற்ற இவரது எழுத்துக்கள் இவரை இன்று ஒரு தவிர்க்க முடியாத எழுத்தாளராகவும் வரலாற்றில் வாழ்பவராகவும் ஆக்கியிருக்கின்றது.

சாமிமலை சிங்காரவத்தைத் தோட்டத்தில் கணக்கப்பிள்ளையாக சேவையாற்றிய சிவகங்கையைச் சேர்ந்த கருப்பையா – வீரம்மாள் தம்பதிகளின் ஒரு மகனாக 9.5. 1944ல் பிறந்தவர் சாரல் நாடன். மற்ற ஐந்து பிள்ளைகளும் பெண்கள். பெற்றோர் இவருக்கிட்ட பெயர் நல்லையா. எழுத்துக்காக இவர் இட்டுக் கொண்ட பெயர்தான் சாரல் நாடன் என்பது. ஆரம்பகால மலை முரசு இதழ்களில் கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகளைக்கூட மு.க. நல்லையா என்ற பெயரிலேயே எழுதிவந்தார்.


தோட்டத்துப் பாடசாலையில் ஆரம்பித்த கல்வி ஹட்டன் ஹைலண்ட்சில் பல்கலைக்கழக புகுமுக வகுப்புடன் முடிவு பெற்றது.

'மாணவப் பருவத்தில் இருந்தே அவரது ஆற்றலை அறிந்திருந்த நான் அவரது பல்கலைக்கழகப் படிப்பு குறித்துக் கனவுகள் கண்டு வந்தேன். அவரோ தொழில் தேடிச் சென்றுவிட்டார்' என்ற ஆதங்கத்தை இரா. சிவலிங்கம் அவர்கள் வெளியிட்டுள்ளார்.

பாடசாலைக் கல்வியை முடித்துக் கொண்டதும் பி.டி. ராஜன் அவர்களின் கண்டி அசோக வித்தியாலயத்தில் ஆசிரியராகவும் வித்தியாலய விடுதியின் பதிவாளராகவும் பணியாற்றும் வாய்ப்புக் கிடைத்தது. வாசிக்கவும் நிறைய நேரமிருந்தது. குடும்பச் சூழல் காரணமாக அசோகாவிலிருந்து விலகி மின்சிங்லேன் தோட்டத்துப் பெக்ரியில் டீமேக்கர் வேலை பழகத் தொடங்கினார். தோட்டங்கள் வெள்ளைக்காரர்களின் ராஜ்யமாக இருந்த அந்த நாட்களில் ஒரு தோட்டத்தின் ஆபீசில் அல்லது பெக்ரியில் வேலை பழக அனுமதி பெறுவது என்பது நிறையவே தகுதிகளையும், சலுகைகளையும் வேண்டி நிற்கும்.

நான் ஊவாக்கட்டவளைத் தோட்டத்து ஆபீசில் வேலை பழகத் தொடங்கிய 59ல் என்னுடைய ஆஞா (தந்தை) அந்தத் தோட்டத்தின் ஆசிரியர் என்னும் சலுகையும் என்னுடைய எஸ்.எஸ்.சி. பரீட்சையில் பாசான அரசாங்க சர்டிபிக்கேட்டின் தகுதியும் இருந்தது. அதேபோல் சாரல் அவர்களுக்கும் அப்பா கணக்கப்பிள்ளை ஹைலன்ட்சில் சர்டிபிக்கேட் ஆகியவை உதவியிருக்கலாம் என்று நான் நினைப்பதுண்டு.

டீமேக்கர் பயிற்சி முடிந்தபின் பூண்டுலோயா டன்ஸினேன் தோட்டத்தில் சின்ன டீமேக்கர் பதவி பெற்று படிப்படியாக உயர்ந்து பெரிய டீமேக்கர் ஆனார் சாரல். தேயிலைத் தொழிற்சாலையின் தலைமை அதிகாரி என்னும் 'பெரிய டீமேக்கர்' பதவியின் மகிமை பெரியது. மகத்தானது. தோட்ட முதலாளியான துரைகூட சில சமயங்களில் குனிந்து நின்று ரகசியம் பேசும் தகைமை கொண்ட பதவி அது. ஒரு முப்பதாண்டு காலம் டன்ஸினேனின் தேயிலை தொழிற்சாலை சாரலது ஆட்சிக்கு உட்பட்டிருந்தது என்பது மிகைக்கூற்றல்ல.



கார், பங்களா, இல்லாத ஒரே பெரிய டீமேக்கர் சாரலாய்த்தான் இருக்க வேண்டும்.

டன்சினேனுக்குப் பிறகு 'நியூ பீகொக்' 'டிறெய்டன்' 'கெலிவத்தை' ஆகிய தோட்டங்களில் தொழிற்சாலை உயர் அதிகாரியாகப் பணியாற்றி 2000ம் ஆண்டில் ஓய்வு பெற்றார்.

சாரல் நாடன் 1994ல் நியூ பீகொக் தோட்டத்துக்குப் பெரிய டீமேக்கராக மாற்றல் பெற்று வந்தபோது அந்தத் தோட்டத்தின் பெரிய டாக்டராக இருந்தவர் நாவலாசிரியரும் சிறுகதையாளரும், இன்றைய 'ஞானம்' ஆசிரியருமான தி. ஞானசேகரன் அவர்கள். பெரிய டாக்டர் பதவி என்பது ஊருக்கு ராஜா போன்ற பெரிய பதவி. மதிப்பும் மரியாதையும் கொண்ட மா பதவி.

ஈழத்தின் தலை சிறந்த எழுத்தாளர் இருவர். ஒரே தோட்டத்தின் சக்திமிக்க உயர் அதிகாரிகளாக...

'மறக்கமுடியாத நாட்கள் அவை' என்று இருவருமே அடிக்கடி கூறுவதுண்டு. தன்னுடைய 'கவ்வாத்து', 'லயத்துச் சிறைகள்' போன்ற நாவல்கள் உருவாகக் காரணமானதும் அந்த நாட்கள்தான் என்று தனது 'இலக்கியத்தடம்' நூலில் பதிக்கின்றார் வைத்திய கலாநிதி தி. ஞானசேகரன் அவர்கள்.

அறுபதுகளில் ஒரு படைப்பாளியாகத் தீவிரமாக இயங்கிய சாரல்நாடனே எழுபதுகளில் காணவில்லை.

தேயிலை தொழிற்சாலையின் பெரிய பெரிய இயந்திரங்களும் றோதைகளும், புகை மண்டலங்களும் சாரலையும் அவருடைய எழுத்துத்திறமைகளையும், இலக்கியப் பணிகளையும் மூடி மறைத்து வைத்துக்கொண்டன.

அவரை அப்படியே விட்டிருந்தால் இன்று நாம் அவரைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்க மாட்டோம். வரலாறும் அவரைச் சுலபமாக மறந்துவிட்டிருக்கும்.

அவருடைய நண்பரும் அடிக்கடி அவரைச் சந்திப்பவரும், பழகுபவருமான அந்தனி ஜீவா என்பதுகளில் அவரை மீண்டும் இலக்கியத்துக்குள் கொண்டு வந்து சேர்த்து ஒரு பெரும் பணியாற்றியுள்ளார்.

நல்லதோர் வீணையை நலங்கெடப்புழுதியில் வீழ்ந்து விடாமல் கரை சேர்த்த காரியத்துக்கான பெருமை மலையகக் கலை இலக்கியப் பேரவையின் ஸ்தாபகரும் செயலாளருமான அந்தனிஜீவா அவர்களைச் சாரும்.

பேரவையின் தலைவராக சாரல்நாடனை பதவியேற்க வைத்து, சி.வி. சில சிந்தனைகள் நூலை எழுத வைத்து என்று அவருடன் இணைந்து இயங்கியவர் அந்தனி ஜீவா.

துணையாக நின்றவர் கவிஞர் சு. முரளிதரன் அவர்கள். அந்தனி ஜீவாவின் மலையக வெளியீட்டகம் சி.வி. வேலுப்பிள்ளை அவர்களின் இலக்கிய ஆளுமைகள் பற்றிய சி.வி. சில சிந்தனைகள் நூல் 1986ல் வெளியிட்டது.

'இது என்னுடைய முதல் நூல்... அந்தனி ஜீவாவின் தொடர்பு ஏற்பட்டிருக்காவிட்டால் எழுத்து முயற்சியில் நான் ஈடுபடுவதென்பது அபூர்வமே. எழுத்து என்பது நெருப்பைப் போல. எந்தநேரமும் ஜுவாலை விட்டெரியாவிட்டாலும், கனலாய், அலையாய் தழலாய் தணலாய் தொடர்ந்து நீறு பூத்து நிற்கும் தன்மையுடையது...' என்று முன்னுரையில் குறிக்கின்றார் சாரல் நாடன்.

'தனது எழுத்தாற்றல், தேயிலைத் தொழிற்சாலையின் புகைக்குள் மங்கிவிடவில்லை என்பதை இந்த நூல் உறுதி செய்கிறது' என்று பதிப்புரையில் குறிக்கின்றார் துரைவிதான் வெளியிட்ட மலையகம் வளர்த்த தமிழ் நூலில் (1997)

பெரும்பாலான மலையக எழுத்தாளர்கள் ஆர்வம் காட்டாத ஆய்வுத்துறைகளில், மலையகம் மலையக அரசியல், மலையக இலக்கியம் பற்றிய வரலாற்றுத் தேடல் முயற்சியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர் சாரல்நாடன்.

1988ல் வெளியான தேசபக்தன் கோ.நடேசய்யர், தொடர்ந்து வெளிவந்த மலையகத் தமிழர், மலையக வாழ்மொழி இலக்கியம், மலையகம் வளர்த்த தமிழ், பத்திரிகையாளர் நடேசய்யர், மலையக இலக்கியம் தோற்றமும் வளர்ச்சியும், இன்னும் ஒரு நூற்றாண்டுக்காய், மலையகத் தமிழர் வரலாறு என்னும் நூல்கள் அவருடைய ஆய்வுப்புலமையை பறைசாற்றுபவைகளே. 'மலைக்கொழுந்தி' சிறுகதைத் தொகுப்பு (1994) 'பிணந்தின்னும் சாத்திரங்கள்' - குறுநாவல்கள் தொகுதி (2002) ஆகிய இரண்டு புனைவு நூல்களுடன் 15 நூல்களின் ஆசிரியர் இவர்.


தனக்கென ஒரு வீடுகட்டி வாழ்ந்த கொட்டகலைப் பிரதேசத்தில், 'சாரல் பதிப்பகம்' என்ற வெளியீட்டகத்தை 2000ம் ஆண்டில் ஆரம்பித்து மலையக இளங்கவிஞர்களின் கவிதைகளை சு. முரளிதரன் அவர்களைத் தொகுக்கச் செய்து விருட்சப்பதியங்கள் என்னும் தலைப்பில் சாரல் வெளியீட்டகத்தின் முதல் நூலாக வெளியிட்டார் சாரல் நாடன்.

இரண்டாயிரமாம் ஆண்டு பணி ஓய்வு பெற்றதும் வேறு வழியின்றி சாரல் பதிப்பகத்தை தொடங்கினேன். எனது வெளியீட்டகத்தின் மூலம் மலையக எழுத்துக்களை அரங்கேற்றுவது ஒன்றையே நோக்காகக் கொண்டிருந்தேன். கொட்டகலையில் பணியாற்றிக் கொண்டிருந்த சு. முரளிதரனையும் மொழிவரதனையும் என்னோடு இணைத்துக்கொண்டேன்' என்று எனக்கெழுதியபோது குறித்துள்ளார் சாரல் நாடன் அவர்கள்.

சு. முரளிதரன், மல்லிகை சி. குமார், மொழிவரதன், சாரலில் நூல்கள் சி.சி. வியின் வாழ்வற்ற வாழ்வு நாவல் என்று 13 நூல்களை வெளியிட்டுள்ள பெருமை கொண்டிருக்கிறது சாரல் நாடனின் சாரல் வெளியீட்டகம்.

கொட்டகலை இலக்கிய வட்டம் ஒன்றினையும் 2001 ஜுனில் நிறுவி ஒவ்வொரு நோன்மதி தினத்திலும் எழுத்தாளர்களை ஒன்று கூட்டி இலக்கியக் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளக் களமமைத்தவர் சாரல். கொட்டகலை இலக்கிய வட்டத்தின் தலைவராக சாரல் நாடனும் செயலாளராக ஊடகவியலாளர் அரு. பொன்னம்பலமும் செயலாற்றினர்.

மலையக இலக்கியத்தின் வளர்ச்சிக்கும் செழுமைக்குமென உழைத்த சாரல் நாடன் அவர்கள் தனது 70 வது வயதில் 31. 07. 2014ல் ஒருவருமே எதிர்பாராத முறையில் திடீரென அமரரானார். சாரல் நாடனுடைய மரணம் அவருடைய அன்பு மனைவி திருமதி புஷ்பம் சாரல் நாடன், பிள்ளைகள் ஸ்ரீகுமார், ஜீவகுமார், மற்றும் உறவினர்களுக்கு மட்டுமின்றி மலையக இலக்கியத்திற்குக் குறிப்பாகவும், ஈழத்து இலக்கியத்திற்குப் பொதுவாகவும் ஈடு செய்ய முடியாத ஒரு பேரிழப்பு ஆகும்.



theliwathai.joseph@thaiveedu.com



A new spirit of living in
Islington Village
(Bloor & Islington)
OPEN HOUSE
September
7
TRIDEL HEAD OFFICE,
4800 Dufferin Street, North York
Time : 1.00 PM to 5.00 PM
All Are
WELCOME
COMING SOON
416.321.6969
TRIDEL®
BUILT FOR LIFE
HOMELIFE
HomeLife/GTA Realty Inc. Brokerage*
5215 Finch Ave. E. Suite 203
Toronto, ON. M1S 0C2
Tel: 416-321-6969
Fax: 416-321-6963
*Independently Owned and Operated

# சொந்தமான ஒரு வீடு
# உங்கள் வாழ்க்கையின்
# மிகப்பெரியதோர் முதலீடு

## வீடு வாங்க விற்க



**ஈசன் குலசேகரம்**
Sales Representative

**416 835 1700**
info@esanhomes.com

- வீடுகள்
- தொடர்மாடி வீடுகள்
- வியாபார நிலையங்கள்
- காணி முதலீடுகள்
- வாங்குதல் - விற்றல்

அனைத்துக்குமான
ஆலோசனைகளுக்கும்
நம்பிக்கையான சேவைகளுக்கும்
எம்மை நாடுங்கள்..

**விக்கி வேலாயுதன்**
Sales Representative

**416 457 7162**
vvelauthan@yahoo.com



RE/MAX
RE/MAX Vision Realty Inc., Brokerage

**Office: (416) 321-2228**
**Fax: (416) 640-1126**

www.esanhomes.com

2210 Markham Road # 1 , Toronto, ON M1B5V6

## - பின்லாந்தின் பசுமை நினைவுகள் - 37

# இல்மரினனின் திருமண நிச்சயம்

- உதயணன் -

இக்காவியத்தின் 18ம் பாடலில் இருந்து 25ம் பாடல்வரை ஒரு திருமண நிகழ்ச்சி வர்ணிக்கப் படுகின்றது. 16ம் நூற்றாண்டில் இருந்து 19ம் நூற்றாண்டு வரை (அதற்குப் பின்னரும்கூட) சேகரிக்கப்பட்ட பல்லாயிரக் கணக்கான நாடோடிப்பாடல் அடிகளின் அடிப்படையில் தொகுக்கப்பட்ட கலேவலா என்னும் உலகளாவிய காவியத்தில் நிகழும் ஒரு திருமணம் இது. திருமண மண்டபம் கட்டப்பட்டது. அழைப்புகள் அனுப்பப்பட்டன. திருமண விருந்துக்கு உணவு சமைக்க மாமிசம் வேண்டும், அல்லவா? அதற்காக முதுகு முகிலில் முட்டிய மாபெரும் முரட்டுக் காளையை நூறு பேர் கொம்புகளைப் பிடித்துவர, ஆயிரம் பேர் வாய்ப்பூட்டைப் பிடித்துக் கொண்டு வந்தார்கள். அவ்வளவு மாமிசத்தையும் உண்பதற்கு உவப்பாக இன்னும் ஏதாவது தேவையே! காடுகளை அழித்து விறகுகள் கொணர்ந்து, கிணறுகளை ஒழித்து நன்னீர் கொணர்ந்து சாடி சாடியாக மதுபானம் காய்ச்சித் திருமண விழாவைக் கொண்டாட ஆயத்தங்கள் ஆரம்பமாகின்றன. இந்த ஆரவாரக் கல்யாணத்தில் நாங்களும் கலந்து கொள்ளலாம்.

லொவ்ஹி (Louhi) என்னும் பெயருடைய வடநிலத் தலைவி ஒரு திறமைமிக்க மந்திரவாதி, நீண்ட பல்லுடையவள், நீக்கல் பல்லுடையவள் என்று வர்ணிக்கப்படுபவள். அவளுக்குப் பல அழகான பெண்கள் இருந்தனர். அவர்களில் ஒரு மகளுக்குத் திருமணம். அந்த மகள் ஒய்யாரமாக வானவில்லின் வளைவில் அமர்ந்திருப்பாள். அவளை மணம் முடிக்க வைனாமொயினன், இல்மரினன் ஆகிய இரு மாப்பிள்ளைகள் போட்டி போடுகின்றனர்.

வைனாமொயினன் ஒரு கப்பலைக் கட்ட வேண்டியிருந்தது. அதற்குச் சில சக்தி வாய்ந்த மந்திரச் சொற்கள் தேவைப்பட்டன. அந்த மந்திரப் பாடல்களுடன் அந்தரோ விபுனன் என்னும் அரக்கன் பாதாள உலகில் மல்லாந்து கிடந்தான். அவனுடைய தோள்களில் அரச மரம் முளைத்திருந்தது. புருவத்தில் மிலாறுவும் தாடையில் பூர்ச்சமும் தாடியில் அலரிப் பற்றையும் நெற்றியில் ஊசியிலை மரமும் பற்களில் பசுமை மரமும் வளர்ந்து இருந்தன. வைனாமொயினன் அவனருகில் வந்து, வாளை உருவி, அரசு முதலான மரங்கள் அனைத்தையும் வெட்டி வீழ்த்தினான். இளித்தபடி படுத்துக் கிடந்த விபுனனின் வாய்க்குள் இரும்புத் தண்டத்தை இறக்கினான். "பூமியின் கீழே நெடும் தூக்கத்தில் இருக்கும் அடிமையே, எழுந்திரு!" என்று கத்தி எழுப்பினான்.

அந்த அரக்கனுடன் போராடித் தனக்குத் தேவையான மந்திரச் சொற்களைப் பெற்று வந்து ஒரு கப்பலைக் கட்டி முடித்துவிட்டு வடநாட்டுக்குப் புறப்பட ஆயத்தமானான். கப்பலுக்கு நீலத்திலும் சிவப்பிலும் வர்ணம் தீட்டி, பொன்னிலும் வெள்ளியிலும் அலங்காரம் செய்தான். ஒரு நாள் காலை, தேவதாரு மரத்தின் உருளையில் நிறுத்தியிருந்த அந்தக் கப்பலுக்குச் சிவப்பிலும் நீலத்திலும் பாய்களைக் கட்டிக் கடலில் இறக்கினான்.

பின்னர் இறைவனை நினைத்துப் பிரார்த்தனை செய்தான். "இந்த அகன்ற பெரும் நீர்ப் பரப்பினில், பரந்து வீசும் பாரிய அலைகளில், கடவுளே, இந்தக் கப்பலில் அமரும்! இளைத்த எனக்கு உரமாக வாரும்! சிறிய மனிதனான எனக்குச் சிறந்த சக்தியைத் தாரும்! எனது கைவிரல்கள் படாமலே காற்றுக் கப்பலைத் தாலாட்டிச் செல்லட்டும்! அலைகள் இதனை அணைத்து வடநாட்டுக்கு இழுத்துச் செல்லட்டும்!"

கலேவலாவின் முக்கிய நாயகர்களில் இன்னொருவனான இல்மரினன், திறமைமிக்க தேவகொல்லன் என்னும் தனிச் சிறப்புடையவன். அவன் அழிவில்லாத, ஆதிகாலத்து உலோக வேலைக் கலைஞன். வானத்தைச் செய்தவன், விண்ணுலகின் மூடியைச் செய்தவன் என்றெல்லாம் வர்ணிக்கப்படுபவன். இரும்பைப் படிமானமாக்கியவன், வடநாட்டில் 'சம்போ' என்னும் அற்புத ஆலையை உலையில் உருவாக்கியவன் என்றெல்லாம் புகழப்படுபவன். விண்ணுலக ஒளிகளை வடநிலப் பாறைகளிலிருந்து விடுவித்தது போன்ற அருஞ்செயல்களை இயற்றியவன்.

அவனுக்கு அன்னிக்கி என்னும் பெயருடைய ஒரு சகோதரி இருந்தாள். அவள் அதிகாலையிலேயே எழுந்து கடமைகளைக் கவனிப்பதால் 'வைகறை வனிதை' என்னும் சிறப்புப் பெயரைப் பெற்றவள். அவள் அந்தத் தீவின் பனிப் புகார் படிந்த கடல்முனை ஓரத்தில் துணிகளைக் கழுவுவாள் அவற்றைச் சிவப்பு நிறப் படிக்கட்டில் காயப் போடுவாள்.

அன்று அவள் துணிகளைக் கழுவியபோது கடலைப் பார்த்தாள். மேலே கதிரவன் பிரகாசித்தது. கீழே கடலலை மினுமினுத்தது. தூரத்தில், பின்லாந்து ஆறு சங்கமிக்கும் இடத்தில், வைனோ நாட்டுக் கரையோரத்தில் என்னவோ ஒரு கறுப்புப் புள்ளி தெரிந்தது. அருகில் வந்த பின்னர்தான் விபரம் தெரிந்தது. அது வீட்டுக் கப்பலோ அந்நியரின் கப்பலோ அல்ல. அது நித்திய முதிய வைனா மொயினனின் கப்பல். அது அவள் அருகில் வந்தது. அவள் ஒரு சொல் சொன்னாள் இரு சொல் சொன்னாள் மூன்றாம் சொல்லில் இவ்விதம் கேட்டாள்: "நீர் மகனே, நிலமகனே, மணமகனே, எங்கே போகிறாய்?"

"துவோனியின் கறுப்பு நதியில் மீன் பிடிக்கப் போகிறேன்," என்றான் வைனாமொயினன்.

அவள் சிரித்தாள். "வெறும் பொய்யைச் சொல்லாதே! மீன் சினைக்கும் காலம் எனக்கும் தெரியும். அப்பா மீன் பிடிக்கப் போகையில் படகில் வலை கயிறு ஈட்டி எல்லாம் இருக்கும். சரி சரி, எங்கே போகிறாய்?"

சிவப்பு வாயுள்ள வாத்து வேட்டைக்குப் போவதாக அவன் மீண்டும் பொய் சொன்னான். கப்பலில் குறுக்குவில்லோ வேட்டை நாயோ இல்லாததால் அதையும் அன்னிக்கி நம்பவில்லை. அடுத்ததாக அவன் போருக்குப் போவதாகச் சொன்னதையும் அவள் நம்பவில்லை. ஏனென்றால் கப்பலில் ஆட்களோ வாள்களோ இருக்கவில்லை.

கடைசியில் வைனாமொயினன் உண்மையைச் சொன்னான். இருண்ட வடநாட்டில் இனிய மங்கையைத் தான் மணக்கச் செல்வதாகச் சொன்னான்.

அன்னிக்கி உண்மையை அறிந்ததும் துணி தோய்த்தலைக் கைவிட்டுவிட்டுத் தமையன் இல்மரினனிடம் ஓடினாள். இல்மரினன் கொல்வேலைத் தலத்தில் ஓர் இரும்புபாசனம் அடித்து வெள்ளியைப் பூசிக் கொண்டிருந்தான். அவனுடைய தலையில் மூன்றடிக்குச் சாம்பல் இருந்தது. தோளில் ஆறடிக்குக் கரித்தூள் இருந்தது.

"இல்மரினனே, சகோதரனே, நீ வடநாட்டிலே ஒரு சம்போவை அடித்துக் கொடுத்த போது, அங்கே ஒரு பெண்ணை விரும்பியதும் அவளை மனைவியாகத் தரும்படி கேட்டதும் நினைவிருக்கிறதா?" என்று கேட்ட அன்னிக்கி தொடர்ந்தாள். "ஆனால் நீ ஓயாமல் சுத்தியலால் தட்டிக்கொண்டே இருக்கிறாய். கோடையில் குதிரைக்குக் காலணி, குளிர் காலத்தில் இரும்பில் பல பொருட்கள் என்று ஏதாவது செய்து கொண்டே இருக்கிறாய். மூன்று வருடங்களுக்கு முன்னர் நீ விரும்பிய பெண்ணை அழைத்து வருவதற்கு இரவிலே பனிச்சறுக்கூர்தியைக் கட்டு. பகலில் அதற்குப் பக்கங்களைப் பொருத்து. அந்தப் பெண்ணை அடைய வைனாமொயினன் முந்திவிட்டான். பொன் முன்னணியத்துக் கப்பலில் செப்புத் துடுப்போடு புறப்பட்டு நீலக் கடலில் வடநாட்டுக்குப் போகிறான் அவன்."

**குதிரை விரைந்தது.**
**மணல் தரையிலும், ஒலிக்கும் புற்றரை**
**மேட்டிலும், பூர்ச்சமரக் குன்றிலும்,**
**கடற்கரை அருகிலும் பயணம் தொடர்ந்தது.**
**கண்களில் மண் வந்து வீழ்ந்தது.**
**மார்பினில் கடலலை பாய்ந்தது.**

இல்மரினனின் முகத்தில் கவலையின் இருள் கவிந்தது. சுத்தியலும் மற்றும் கருவிகளும் கைநழுவி விழுந்தன. "அன்னிக்கி, அருமைச் சகோதரி, உனக்கு நகைகள் எல்லாம் செய்து தருவேன். உடனே சவுனாவைச் சூடாக்கு. விறகுகளை எரித்து வெப்பமாக்கு. குளிர் காலத்துக் கரியெல்லாம் எனது உடலில் இருக்கிறது. அதை உடலிலிருந்து நீக்க, கழுவிப் போக்கச் சாம்பலில் சவர்க்காரமும் செய்து கொண்டுவா!" என்றான்.

அன்னிக்கி ஓடினாள். காற்று வீழ்த்திய விறகுகளையும் இடிமுழக்கத்தால் சிதறி விழுந்த விறகுகளையும் பொறுக்கிச் சேர்த்தாள். நீர்வீழ்ச்சியில் பொறுக்கிய கற்களை சவுனா அடுப்பில் அடுக்கிச் சூடேற்றினாள். இனிய அருவியிலிருந்து தண்ணீரை அள்ளிக் கொண்டு வந்தாள். நீராவிக் குளியலின் போது விசிறிக் கொள்வதற்குப் பசுமையான பற்றைகளில் நறுமணமான இலைக்கட்டுகளை ஒடித்துச் சேர்த்தாள். மாப்பிள்ளை தன்னைக் கழுவிச் சுத்தமாக்குவதற்குச் சாம்பலிலிருந்து நுரைக்கும் சவர்க்காரம் செய்து முடித்தாள். "இனிமையான இலைக் கட்டுகள் ஆயத்தமாக இருக்கின்றன. விரும்பிய வரைக்கும் குளி, சகோதரா! சணல் போல் வெண்மையாகும் வரை தலையைக் கழுவு! பனிமழை போல் வெளுக்கும்வரை முகத்தைக் கழுவு!" என்று சொன்னாள்.

இல்மரினன் சவுனாவில் குளித்துவிட்டு வீட்டுக்கு வரும்போது அடையாளம் தெரியாமல் ஓர் அந்நியனைப்போலக் காட்சியளித்தான். முகம் அவ்வளவு அழகாக இருந்தது. கன்னங்கள் அவ்வளவு சிவப்பாக இருந்தன. அன்னிக்கி சணலில் தைத்த மேற்சட்டை ஒன்றைக் கொணர்ந்தாள். அன்னை தைத்த அளவான காற்சட்டையை அடுத்தாய்க் கொணர்ந்தாள். தாய் கன்னியாக இருந்த காலத்தில் பின்னிய சுத்தமான காலுறைகளைப் பின்னர் கொணர்ந்தாள். அதன்மேல் அணிய ஜேர்மன் சப்பாத்துகள். புயங்களில் போட நீல நிறத்தில் அரைக்கைச் சட்டை. அதற்கு ஈரல் நிறத்தில் பட்டியும் இருந்தது.

இவற்றுக்கு மேலே சணல் மேலாடை. இவை அனைத்தையும் மூட ஒரு நீண்ட மேலாடை. இது புத்தம் புதியது வீட்டிலே தைத்தது. இதற்கு நான்கு பட்டிகள் நூறு மடிப்புகள் ஆயிரம் தெறிகள். தாய் சிறு பெண்ணாக இருந்த காலத்தில் பொன்னலங்காரத்துடன் செய்த பட்டியை இடுப்பில் கட்டினான். இலாப்புலாந்தில் செய்யப்பட்ட பொன்வேலை செய்த கையுறைகளை கைகளில் அணிந்தான். அவனுடைய சுருண்ட தங்க நிறத் தலை மயிரை மறைத்து உயரமான ஒரு தொப்பி. அவனுடைய தந்தை மாப்பிள்ளையாகப் போன காலத்தில் அணிந்தது அது.

இல்மரினன் தனது சேவகர்களுக்கு இவ்வாறு ஆணையிட்டான்: "எங்கள் ஆறு குதிரைகளில் சிறந்தது ஒன்றைக் கொண்டு வந்து சறுக்கூர்தியில் கட்டுங்கள். குயில் போலக் கூவும் ஆறு மணிகளையும் நீலப் பறவைபோல ஒலிக்கும் ஏழு மணிகளையும் ஏர்க்காலில் பூட்டுங்கள். அழகிய மனிதர் அதைப் பார்க்கட்டும். நங்கையர் கண்டு நெஞ்சுருகட்டும். கரடித் தோலைக் கொண்டு வாருங்கள்! நான் அமர்வதற்கு அதை வண்டியில் விரியுங்கள்! கடல் விலங்கின் தோலால் வண்டியை மூடுங்கள்!!"

பின்னர் இல்மரினன் மானிட முதல்வனை வணங்கினான். இடிமுழக்கங்களின் தலைவனைத் தொழுதான். "மானிட முதல்வனே, புத்தம்புது பனிமழை பொழியட்டும்! எனது பனிச்சறுக்கூர்தி அதில் வழுக்கி விரையட்டும்!"

பனிமழை பொழிந்தது. புதர்ச் செடித் தண்டுகளையும் சிறுபுதர்ச் செடித் தண்டுகளையும் மூடிப் பொழிந்தது. இல்மரினன் வண்டியில் ஏறினான். "அதிர்ஷ்டமே, கடிவாளத்தில் ஏறு! இறைவனே, வண்டியில் அமர்வீர்!" என்று பிரார்த்தித்தான்.

குதிரை விரைந்தது. மணல் தரையிலும், ஒலிக்கும் புற்றரை மேட்டிலும், பூர்ச்சமரக் குன்றிலும், கடற்கரை அருகிலும் பயணம் தொடர்ந்தது. கண்களில் மண் வந்து வீழ்ந்தது. மார்பினில் கடலலை பாய்ந்தது.

வைனாமொயினனின் கப்பல் ஓடியது. கரையெல்லாம் ஒலித்தது. இல்மரினனின் சறுக்கூர்தி விரைந்தது. பூமியே அதிர்ந்தது.

லொவ்ஹியும் மகளும் வெளியே தோட்டத்துக்கு வந்து கடல் பக்கமாகப் பார்த்தார்கள். நூறு பலகைகளால் கட்டப்பட்ட ஒரு கப்பல் காதலர் குடாவின் பக்கமாய் வந்து கொண்டிருந்தது. அதில் செப்புத் துடுப்புகளைக் கைகளில் ஏந்திய பெருமகன் ஒருவன் இருந்தான். இந்தப் பக்கம் தேன் சிந்தும் திடலிலே ஒரு சிவப்பு நிறப் பனிச்சறுக்கூர்தி வந்து கொண்டிருந்தது. அதன் ஏர்க்காலில் ஆறு தங்கக் குயில்களும் ஏழு நீலப் பறவைகளும் பாடிக் கொண்டிருந்தன. வண்டியில் அமர்ந்து இருந்தவன் ஒரு சிறந்த நாயகன்.

லொவ்ஹி மகளிடம், "இவர்களில் யாருடைய அணைப்பில் அன்புக் கோழியாக இருக்க நீ விரும்புகிறாய்? கப்பலில் வரும் முதிய வைனாமொயினன் பொருட்களுடன் வருகிறான். பெரும் திரவியத்துடன் வருகிறான். வண்டியில் சறுக்கி வரும் இல்மரினன் வெறுமனே வருகிறான். வண்டியில் மந்திரம்தான் இருக்கிறது. இருவரும் உள்ளே வந்ததும், இரண்டு கைபிடிகள் உள்ள சாடியில் தேன் கொண்டு வந்து, நீ யாரை விரும்புகிறாயோ அவர் கையில் கொடு!" என்றாள்.

அந்த அழகான மங்கை இவ்வாறு சொன்னாள்: "அம்மா, பொருளுக்காகவோ அறிவுக்காகவோ நான் கல்யாணம் செய்யமாட்

தொடர்தல் 78ம் பக்கம்

# அஹ்தியின் மரண...

77ம் பக்கத் தொடர்ச்சி...

டேன். அழகிய நெற்றியும் அருமையான உடற்கட்டும் கொண்டவனையே நான் விரும்புவேன். சம்போவையும் அதன் பலநிற மூடியையும் செய்த இல்மரினனையே நான் மணப்பேன். தையலைத் தனத்துக்காக விற்கக் கூடாது. கன்னியைத் தானமாய்க் கொடுக்க வேண்டும்."

"அருமைப் பெண்ணே, ஆமம்மா, நீ போய் அந்த இல்மரினனின் வெயர்வை நெற்றியைத் துடைத்து அவனுடைய அழுக்குத் துணிகளையும் துவைத்துக் கொடு. போ... போ!" என்றாள் லொவ்ஹி.

"நான் வைனாமொயினனை மணக்கவே மாட்டேன். ஒரு கிழவனை மணந்தால் வாழ்வில் தொல்லைதான் மிஞ்சும்," என்றாள் மகள்.

முதிய வைனாமொயினன் தனது சிவப்புப் படகைச் செப்புத் துறைமுகத்தில் இரும்பு உருளைகளில் நிறுத்திவிட்டு வீட்டுக்குள் வந்தான். வரும்போதே இவ்வாறு கேட்டான்: "இளம் பெண்ணே, என்னுடன் வருகிறாயா? என்றைக்கும் என் சினேகிதியாக இருக்கலாம். வாழ்நாள் முழுக்க என் துணைவியாக இருக்கலாம். எனது கையணைப்பில் கோழியாய் இருக்கலாம்."

அப்போது வட நாட்டு அழகி, "கடல் மனி தரைப்பற்றி நான் பெருமைப்படுவதில்லை. காற்று அவரின் மனதைக் கடல் பக்கமே திருப்பும். கடற்காற்று அவரின் நினைவைக் கெடுக்கும். உன் சினேகிதியாகவோ வாழ்க்கைத் துணைவியாகவோ உனது கையணைப்பில் கோழியாகவோ நான் வருவதற்கில்லை," என்று சொன்னாள்.

அதன்பின் இல்மரினன் வேகமாய் வந்து வீட்டின் கூரையின் கீழ் நின்றான். வந்ததும் சாடியில் தேன் கொணர்ந்து அவனுடைய கையில் தரப்பட்டது. ஆனால் அவன், "எனது மணப்பெண்ணை நான் காணும் முன்னர், நீண்ட காலமாக நான் காத்திருந்த கன்னியைக் கண்ணால் காணும் முன்னர், இந்த நிலாவொளியில் எந்தப் பானமும் அருந்தேன்," என்றான்.

வடநாட்டுத் தலைவி, "நீ காத்திருந்த கன்னி ஒரு கடுமையான தொல்லையில் இருக்கிறாள். அவள் இன்னும் காலணிகளை அணிந்து முடியவில்லை. நீ போய்ப் பாம்புகள் புரளும் வயலை உழுதுவிட்டுத் திரும்பிவா. அப்போது மணப்பெண் உனக்காக ஆயத்தமாக இருப்பாள். ஆனால் கலப்பையை அசைக்காமல் உழவேண்டும். முன்னொரு முறை செப்பு அலகுடைய கலப்பையால் பேயொன்று இவ்வயலை உழுதது. என் சொந்த மகனே பாதியை உழுதான். மீதியை விட்டான்," என்று சொன்னாள்.


இல்மரினன் லொவ்ஹியின் மகள் இருந்த அறைக்குச் சென்றான். "இரவின் அரிய நங்கையே, மங்கிய பொழுதின் மங்கையே, நான் இங்கு வந்ததும், சம்போவைச் செய்து அதற்கு ஒரு பலநிற மூடியை அடித்ததும் உனக்கு நினைவிருக்கிறதா? ஒரு நல்ல கணவனான என்னிடம் ஓர் அன்புக்குரிய மனைவியாக வாழ்நாளெல்லாம் வந்திருக்கச் சம்மதித்து இறைவனின் பேரால் நீ சத்தியம் செய்தது நினைவிருக்கிறதா? ஆனால் நான் பாம்புகள் நிறைந்த வயலை உழாவிட்டால் உன்னை எனக்குத் தரமாட்டாளாம் உன் தாய்," என்று சொன்னான் இல்மரினன்.

"இல்மரினனே, நீ தங்கத்தில் ஒரு கலப்பையைச் செய்து அதற்கு வெள்ளியால் அலங்காரம் செய்! பாம்பு வயலை அதனால் உழலாம்," என்று அந்த இளம்பெண் அறிவுரை சொன்னாள்.

இல்மரினன் பொன்னிலும் வெள்ளியிலும் கலப்பை செய்தான். இரும்பிலே காலணி செய்தான். உருக்கிலே பாதவுறை செய்தான். இரும்பில் கவசமும் உருக்கில் பட்டியும் மற்றும் இரும்புக் கையுறைகளையும் செய்தான். அதன்பின் தீயுமிழும் குதிரையைத் தெரிந்தான். வயலைப் புரட்டப் புறப்பட்டுச் சென்றான்.

வயலில் தலைகள் நெளிந்தன. மண்டையோடுகள் இரைந்தன. "பாம்பே, பாதையை விட்டு விலகிநில்! பற்றைக்குள் நுழைந்து புல்லுக்குள் மறைந்து போ! இதன்மேல் நீ தலையைத் தூக்கினால் இறைவன் உன்னை உருக்குமுனை அம்புகளால் அடிப்பார். இரும்புக் குண்டு மழை பொழிந்து உன்னை அழிப்பார்."

அதன்பின் இல்மரினன் பாம்புகளைப் புரட்டி வயலை உழுது முடித்தான். வீட்டுக்குத் திரும்பி வந்து வடநாட்டு முதியவளிடம் பெண்ணைக் கேட்டான். அவள், "உனக்கு இன்னுமொரு வேலை இருக்கிறது. அதையும் முடித்துவிட்டு வந்தால்தான் மகளைத் தருவேன். மரண உலகில் மரணக் காடு இருக்கிறது. அதில் வாழும் மரணக் கரடியையும் மரண ஓநாயையும் பிடித்து அடக்கு! அதன்மேல் உனக்கு என் மகள் கிடைப்பாள்! அவற்றைப் பிடிக்கச் சென்றவர் நூறு பேர். திரும்பி வந்தவர் யாருமேயில்லை," என்றாள்.



பாம்புகள் நிறைந்த வயலை இல்மரினன் உழுதான்

இல்மரினன் லொவ்ஹியின் மகள் இருந்த அறைக்குச் சென்றான். "உன் தாய் எனக்கு இன்னுமொரு வேலை தந்திருக்கிறாள். மரண உலகத்துக் கரடியையும் ஓநாயையும் பிடித்து அடக்க வேண்டுமாம்."

அவனுக்கு மணமகள் அறிவுரை சொன்னாள். "இல்மரினனே, மூன்று நீர்வீழ்ச்சிகள் விழுந்தோடும் இடத்தில் ஒரு பாறை இருக்கிறது. அந்தப் பாறையில் உருக்கில் கடிவாளமும் இரும்பில் வாய்ப்பூட்டும் அடிப்பாய்! அவற்றால் மரண உலகத்துக் கரடியையும் ஓநாயையும் பிடிப்பாய்!"

வடநாட்டு வனிதையின் வார்த்தைகளின்படி அவன் கடிவாளமும் வாய்ப்பூட்டும் செய்தான். பின்னர் இந்த மந்திரம் சொன்னான்: "பனிப் புகாரப் பெண்ணே, முகிலின் மகளே, உனது சுளகால் முடுபனியைக் காடெல்லாம் தூவு! பனிப் புகாரை நிலமெல்லாம் வீசு! காட்டு மிருகங்கள் என்னைக் காணாது இருக்கட்டும்! எனது காலடி ஓசையைக் கேட்காது இருக்கட்டும்!"

இப்படி அவன் துவோனியின் கரடியையும் ஓநாயையும் பிடித்தான். வீட்டுக்கு வந்ததும் இப்படிச் சொன்னான்: "கரடியையும் ஓநாயையும் பிடித்து அடக்கினேன். முதியவளே, கொண்டுவா உன் மகளை!"

"பொறப்பா. உனக்கு இன்னுமொரு வேலை இருக்கிறது," என்றாள் லொவ்ஹி. "துவோனி ஆற்றிலே ஒரு கோலாச்சி மீன் இருக்கிறது. வலை வீசாமல் அதைப் பிடித்துக் கொண்டு வந்தால், நீல வாத்துப் போன்ற என் மகள் உனக்குக் கிடைப்பாள். இதைப் பிடிக்கச் சென்றவர் நூறு பேர் இருக்கலாம். திரும்பி வந்தவர் எவருமேயில்லை." [கோலாச்சி மீன் ஸ்ரீ hauki (pike, Esox lucius)].

இல்மரினன் மிகுந்த துயருடன் வடநாட்டு மங்கையிடம் சென்றான். "முன்னரிலும் பார்க்கப் பெரிய வேலை ஒன்று கிடைத்திருக்கிறது. துவோனியின் கறுப்பு நதியில் கொழுத்த கோலாச்சியை வலை வீசாமல் பிடிக்க வேண்டுமாம்."

"இல்மரினனே, கலங்காதே!" என்றாள் மணமகள். "தீயுமிழும் கழுகு ஒன்றைப் பிரமாண்டமான அளவில் செய். அதனால் கொழுத்த கோலாச்சியைப் பிடிக்கலாம்."

இல்மரினன் ஒரு பெரிய கழுகைச் செய்தான். அதற்கு உருக்கில் நகங்களையும் கப்பலின் இரும்புப் பக்கங்களால் சிறகுகளையும் படைத்தான். பின்னர் கழுகின் முதுகில் ஏறி அமர்ந்து, "எனது கழுகே, எழு! பற! கறுப்பு நதியின் கொழுத்த கோலாச்சியைக் கதற அடி!" என்று சொன்னான்.

கழுகு எழுந்தது. வானில் பறந்தது. பயங்கரப் பற்களுள்ள பாரிய மீனைத் தேடித் திரிந்தது. கழுகின் ஒற்றைச் சிறகு நீரில் தோய்ந்தது. மற்றச் சிறகு வானைத் தேய்த்தது. அதனுடைய நகங்கள் கடலில் முட்ட அலகு உயர்ந்த குன்றைத் தொட்டது. இவ்விதமாக இல்மரினன் கடலைக் கலக்கினான். நீரில் இருந்தொரு நீர்ச் சக்தி எழுந்து இல்மரினனை எட்டிப் பிடித்தது. கழுகு அதன் கழுத்தில் பாய்ந்து தலையைத் திருப்பி ஆற்றின் அடியில் கருஞ் சேற்றில் அமிழ்த்திற்று.

கோலாச்சி மீன் இல்மரினனை இலக்கு வைத்து விரைந்து வந்தது. ஆனால் கழுகு முன்னே பாய்ந்து அறைந்தது. அந்த மீன் ஒன்றும் பெரியதுமல்ல. ஆனால், அத்தனை சிறியதுமல்ல. அதன் நாக்கு இரண்டு கோடரிப் பிடிகளின் நீளம் இருந்தது. குப்பைவாரியின் பிடியளவு நீளமான பற்கள். கடைவாய் மூன்று நீர்வீழ்ச்சிகளின் அகலம். முதுகு ஏழு தோணிகளின் நீளம். அது இல்மரினனை அடித்து உண்ண முன்னேறி வந்தது.

கழுகு தாழ்ந்து பறந்து மீனை அடித்தது. கழுகின் போராட்டம் பெரியதாய் இருந்தது. கழுகின் சொண்டு அறுநூறு அடி நீளம். அதன் கடைவாய் ஆறு நீர்வீழ்ச்சிகளின் அளவு. நாக்கு ஆறு ஈட்டிகளின் நீளம். நகங்கள் ஐந்து அரிவாள்களின் அளவு. கழுகு பாய்ந்து மீனின் செதிலைக் கிழித்தது. கோலாச்சி கழுகை நீருக்குள் இழுத்தது. கழுகு மீனை மேலே எடுத்ததால் சேறும் கலங்கி மேலே வந்தது.

கழுகு உயர்ந்து பறந்து திரும்பிச் சுழன்று தனது ஒற்றைக் கால் நகங்களால் மீனின் முதுகைப் பற்றியது. மற்றக் கால் நகங்களை இரும்பு மலை உச்சியில் கொழுவி மீனை மேலே இழுத்தது. ஆனால் வழுக்கல் பாறையில் நகங்கள் வழுக்கின. மீனும் கழுகின் பிடியிலிருந்து வழுக்கி நீருள் சென்றது. ஆனால் கழுகின் கீறலும் காயமும் மீனின் முதுகில் தெரிந்தன.

இரும்பு நகக் கழுகு மீண்டும் முயன்றது. அதன் இறகிலும் கண்களிலும் தீ பறந்தது. இம்முறை கோலாச்சியை நகங்களால் பற்றி அலைகளின் மேலே கொண்டு வந்தது. இந்த மூன்றாவது முயற்சியில் கழுகு பெரிய கோலாச்சி மீனைச் சுமந்து பறந்து சிந்தூர மரக் கிளையில் அமர்ந்தது. அங்கே மீனின் தசையைத் தின்று பார்த்தது. வயிற்றைப் பிளந்தது. நெஞ்சைக் கிழித்தது. தலையை அடித்து நிலத்தில் போட்டது. அதனைப் பார்த்த இல்மரினன் இவ்வாறு சினந்தான்:

*'ஓ,நீ இழிந்த ஊனுண் கழுகே,*
*எந்த இனம்நீ இயைந்துபுட் குலத்தில்*
*எவ்வகைப் பிராணிநீ இருக்கும் வகையில்*
*சுவையை இவ்விடம் சுவைத்துப் பார்த்தாய்*
*கோலாச்சி வயிற்றைக் குறுக்கே கிழித்தாய்*
*பிளந்தே எடுத்தாய் பெரியநெஞ் செலும்பை*
*அடித்து நொருக்கி அதன்தலை போட்டாய்.'*

- (பாடல்: 19: அடிகள் 298 - 304)

இரும்பு நகங்களைக் கொண்ட அக்கழுகு சீற்றம் கொண்டு, வானில் எழுந்து, மேக மண்டல வெளியினில் பறந்து சென்று மறைந்தது. அப்போது மேகம் கலைந்தது வானம் முழங்கியது வானத்தின் மூடி வளைந்தே வந்தது மானிட முதல்வனின் மாவில் தெறித்தது திங்களின் கூரிய கொம்புகள் உடைந்தன.

இல்மரினன் மீனின் தலையுடன் லொவ்ஹியிடம் சென்று, "விரியன் வயலை உழுது முடித்தேன். புழுக்கள் நிறைந்த பூமியைப் புரட்டினேன். மாய உலகின் ஓநாய் பிடித்தேன். துவோனியின் கரடிகள் அனைத்தும் கட்டினேன். மரண ஆற்றின் நதியிலிருந்த பெரிய செதில் கொண்டகொழுத்த கோலாச்சியையும் பிடித்துக் கிழித்தேன். இப்போது உன் அரிவை அளிக்கப்படுவளா? தையலாள் எனக்குத் தரப்படுவாளா?" என்று கேட்டான்.

வடநாட்டுத் தலைவி வருமாறு சொன்னாள்: "ஆனாலும் நீ ஒரு பிழை செய்தாய்! மீனின் தலையைப் பிய்த்தாய்! வயிற்றைப் பிளந்தாய்! நெஞ்சைக் கிழித்தாய்! அதன் தசையைச் சுவைத்தாய்!"

அப்போ(து) கொல்லன் இல்மரினன் "எத்தகைய மிகச் சிறந்த இடங்களிலும் விளை-சேதம் இல்லாத வெற்றி ஒன்றில்லை. இது துவோனலா என்னும் மரண ஆற்றின் பாதாளக் கிடங்கில் பெறப்பட்டது. நான் எதிர்பார்த்து இருந்த பெண் ஆயத்தமானாளா? நான் காத்திருந்த காரிகை தயார் நிலையில் உள்ளாளா?" என்று கேட்டான்.

வடநிலத் தலைவி வருமாறு உரைத்தாள் இயம்பினள் அவளே, இயம்பினள் இவ்விதம்:


*ஆயத்த மானாள் அணங்(கு)எதிர் பார்த் தோள்*
*தயாரா யுள்ளனள் தனிக்காத் திருந்தோள்*
*அளிக்கப் படுவள் அரியஉன் தாரா*
*தரப்படு வாள்உன் தனிவாத் துனக்கு*
*இல்மரி னன்னும் இகல்கொல் லற்கு*
*என்றுமே அருகில் இருந்திட அமர்ந்து*
*முழங்கால் மனையளாய் அமர்ந்தே இருக்க*
*கொள்கரத் தணைப்பில் கோழியாயிருக்க!*

(பாடல் 19: அடிகள் 345 - 354)

வடநிலத் தலைவி லொவ்ஹியின் முடிவின்படி இல்மரினனுக்கும் அவளுடைய மகளுக்கும் திருமணம் நிச்சயம் செய்யப்பட்டது. வைனாமொயினன் வடநில மங்கையைத் திருமணம் செய்ய முடியாமல் போனதால், ஆழ்ந்த துயரும் தாழ்ந்த தலையுமாய் வீடு திரும்பினான்.

"ஆ, நான் எவ்வளவு துர்ப்பாக்கியசாலி. இளம் வயதிலேயே ஒரு பெண்ணை மணக்கத் தெரியாமல் போய்விட்டதே! மனிதன் வாழ்க்கையில் எதற்காகவும் வருத்தப்படலாம். ஆனால் இளமையில் திருமணம் செய்வதற்கோ இளமையில் குழந்தைகளைப் பெறுவதற்கோ அவன் வருந்தமாட்டான்," என்று கூறிய அவன், "ஒரு முதியவன் ஒரு பெண்ணை அடையவோ நீச்சல் போட்டியில் வெல்லவோ படகுப் போட்டியில் வெற்றிபெறவோ விரும்பினால், அவன் ஓர் இளைஞனுடன் போட்டியிடவே கூடாது," என்று சொல்லிக்கொண்டே அவன் வீடு நோக்கிப் பயணமானான்.

*(தொடரும்)*



uthayanan@thaiveedu.com


தாய் வீடு
THAIVEEDU HOME & LIVING
சனி 18 OCTOBER 1:30 pm
சனி 18 OCTOBER 6:00 pm
ஞாயிறு 19 OCTOBER 4:00 pm
தாய்வீடு
பத்திரிகை நடத்தும்
அரங்கியல் விழா
York Woods Library Theatre
1785 Finch Ave W, Toronto
416-857-6406
info@tamilartsgroup.com

# கடன்தொல்லை?




- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

**நாங்கள் ஒரு புதிய ஆரம்பத்திற்கு வழிகாட்டுகிறோம், இனி**

- நிம்மதியான தூக்கம்
- மீண்டும் தொலைபேசி அழைப்புகளுக்கு பதிலளிக்கலாம்
- ஏக்கத்தை விட்டொழிக்கலாம்
- உங்கள் மேலிருக்கும் அந்தச்சுமையை அகற்றிவிடலாம்
- உங்களைப் பற்றி பெருமையாயும், ஆனந்தமாயும் உணருங்கள்
- இனி கட்டவேமுடியாத Billகளைப்பற்றி கவலையில்லை.
- நண்பர்கள், உறவினர்களிடம் கடன் வாங்கும் சிறுமையும் இனி இல்லை

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**SRI**


**CREDIT SOLUTION CENTRE**

Trustee in bankruptcy இணைந்து ஒரே கூரையின் கீழ் இயங்கும் ஒரு தமிழர் நிறுவனம்

80 Corporate Drive, Suite 309
Scarborough, ON M1H 3G5
Tel: **416.439.0224**
Fax: 416.439.0226
creditsolutioncentre@gmail.com



digi


Foundation of Your Financial Freedom!
LIVE LIFE FULLY COVERED
COVERAGE FOR YOUR MOST PRECIOUS ASSET.
YOU & YOUR FAMILY
கவலை அற்ற நிம்மதியான வாழ்க்கை வாழ்ந்திட...
சிறந்த ஆலோசனைகளுக்கும் உங்களுக்கு ஏற்ற காப்புறுதியை
செய்வதற்கும் எங்கள் முகவர்களில் ஒருவரை அழையுங்கள்.
Life Insurance
Non-Medical Insurance
Travel Insurance
Critical Illness Insurance
Disability Insurance
Mortgage Insurance
RESP - Education Saving Plan
Dental & Drug Insurance
RRSP's & Investments
Final Expense Products
(Through Funeral Homes)
Mega Financial Group
416 666 1120 • 416 293 5559
PH28-4168 Finch Ave. E. Scarborough, ON
Now Hiring
FULLTIME / PART TIME AGENTS
FASTEST GROWING INSURANCE AGENCY
Well Established Name / Multicultural Agents / Great Support
Call Raj Nadarajah for more info
416 666 1120
Desjardins
RBC Insurance
Canada Life
Manulife Financial
La Capitale
Empire Life
Sun Life Financial
ASSURANT



# மார்க்கம் செய்திகள்
# கவுன்சிலர் லோகன் கணபதி

## A Strong Voice for a Diverse Community

Tel: 905.479.7748 Email: lkanapathi@markham.ca facebook: logan.kanapathi

- மார்க்கம் 7ஆம் வட்டாரத்தில் 15 இற்கும் மேற்பட்ட பசுந்தரைகள் அமைத்த-தோடு, மார்க்கம் வாழ் மக்களுக்கான முதல் கிறிக்கெட் மைதானத்தை உருவாக்கியமை.
- 72 மில்லியன் டொலர் செலவில் பல வசதிகள் கொண்ட சன சமூக நிலையமும் நூலகமும் அமைப்பதற்கான பணிகள் துரிதகதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.
- மார்க்கம் வரவுசெலவுக் குழுவின் உபதலைவராகச் செயற்பட்டு 2009, 2010, 2012 ஆண்டுகளில் சோலைவரி அதிகரிக்காமல் பார்த்துக்கொண்டதுடன் (0% Tax Increase) அதன் பின் ரொரான்ரோ பெரும்பாகத்திலேயே மிகக் குறைந்த அளவு சோலைவரியை அதிகரித்தமை.
- மார்க்கம் மாநகரசபையைப் பிரதிநிதித்துவப்படுத்திச் சென்னை, குஜராத், டெல்லி, மும்பை, பூனே, அஹமதாபாத் போன்ற இந்திய நகரங்களுக்குச் சென்ற தூதுக்குழுவில் உறுப்பினராக இணைந்து, புதிய வணிக உறவை வளர்க்கும் முயற்சியில் ஆக்கபூர்வமாக ஈடுபட்டமை.
- பல ஆண்டுகளாகத் தொடர்ந்த ஸ்ரீல்ஸ் வீதி விரிவாக்க முயற்சியில் வெற்றி பெற்று, இவ்வாண்டு விரிவாக்கப் பணிகள் ஆரம்பிக்கப்பட இருக்கின்றமை.
- ஏப்ரல் 2009இல் வடஅமெரிக்காவிலேயே முதன்முதலாக சிறுபான்மை இன ஒழிப்பு படுகொலையை எதிர்த்து இலங்கை அரசுக்கெதிரான தீர்மானத்தை மார்க்கம் மாநகர சபையில் நிறைவேற்றியமை.
- வட அமெரிக்காவில் முதன் முதலாக தமிழர் மரபுரிமை நாளை மார்க்கம் மாநகரசபை வாயிலாகப் பிரகடனம் செய்தமை.
- முதன் முதலாகக் கனடிய மண்ணில் தமிழ்ப்பெயர் கொண்ட வீதிகளை உருவாக்கியமை. வன்னி வீதி, ட்ரிங்கோ வீதி, யாழ் சீடாவூட் பார்க், என்பன உருவாக்கப்பட்டுள்ளன.
- வீட்டிற்கொரு காய்கறித் தோட்டம் என்ற வீட்டு விவசாய முறையை 7ம் வட்டாரத்தில் முதன்முதலாக அறிமுகப்படுத்திப் பலரும் பயன்பெற உதவியமை.



























# VISION. EXPERIENCE. RESULTS.



36

# மாறுதல்கள்

தெளிவத்தை ஜோசப்

மாரிமுத்துவின் மாதுளைச் செடி நிறைய சிவப்புச் சிவப்புப் பூக்கள். மாத்தளை மாரியம்மனுக்கு நேர்ந்துவிட்ட காய் சிவப்புக் கலந்த மஞ்சளாய் மாறிக்கொண்டிருந்தது. இதுவும் கூட ஆரம்பத்தில் வெடித்துச் சிரிக்கும் சிவப்பாய் இருந்ததுதான். முற்ற, முற்ற தேனடை போல் அடுக்கடுக்காக உள்ளே விதைகள் உருவாக உருவாக இப்படி நிறம் மாறி வருகிறது.

சிவப்புக்கு ஒரு அலாதி கவர்ச்சி இருக்கிறது தான்! கலர்களுக்குள்ளே ஒரு சக்தி மிக்கக் கலர் அது. நரம்புகளுக்குள் ஓடி ஓடி நம் உடலை இயங்கச் செய்யும் குருதிகூட சிவப்பைத்தான் தனக்கான நிறமாகத் தெரிவு

செய்துகொண்டிருக்கிறது. அது ஒரு இயக்கச் சக்தி என்பதனால்தான் இடதுசாரிகள் சிவப்பைத் தங்களுக்கான அடையாளமாக் கிக்கொண்டிருக்கின்றனர். வேகத்தின் சின்னம் அது. வேகத்தைக் கட்டுப்படுத்தும் சின்னமும் அதுதான்.

கண்ணைக் குத்தும் சிவப்பில் தன்னை மறந்து லயித்துக்கிடந்த மாரிமுத்துவிடம் அவசரமாக ஓடி வந்து நின்றாள் புஷ்பம்.

'அந்தப் புள்ளைக்கு சொகமில்லை போலிருக்குங்க' என்றாள். அவளின் குரலில் ஒரு படபடப்பு இருந்தது.

'எந்தப் புள்ளை, என்ன சொகமில்லை, யாரு சொன்னா உனக்கு, காலம்பெற தேத்தண்ணியும் கையுமா வந்து நிப்பேன்னு பாத்தா ஊர்க்கதையோட வந்து நிக்கிறே' என்றான் எரிச்சலுடன்.

'... முன்னுக்கிருக்கே அந்தப் பொம்பளை அதோட சீலைக்கட்டும் அதுவும் நம்ப ரம்யாக்குஞ்சை எந்த நேரமும் ஒரு ஆசை யோடப்பாக்குது. ஓடியாந்து தூக்கிறுமோன்னு பயமா இருக்கு, அதுக்கு என்னென்ன வியாதிகள் இருக்கோ தெரியலை. பிள்ளைக்குத் தொத்திக் கிட்டா...' என்னும் அந்தப் பெண்ணின் நேற்றைய குரல் இன்னும் அவன் மனதை அரித்துக் கொண்டே இருக்கிறது. அந்த உறுத்தல்தான் அவனுக்கு. அவளும் அந்தப் பிள்ளையைப் பற்றியே விடிந்தும் விடியாததுமான நேரத்தில் பேசிக்கொண்டு ஓடி வந்ததில் எரிச்சலுற்றுக் கத்திவிட்டான். 'பாவம் உள்ளே போய் அழுதுக்கிட்டே வேலை செய்யும். நாமதான் போய் ஆறுதலா நாலு வார்த்தபேசி சமாதானம் செய்ய வேண்டும்...' என்று எண்ணியவாறு எழுந்து நின்றான்.

வாழை இலை இடுக்குக்குள் முன்வீடு தெரிகிறது. மோட்டார் சைக்கிளில் அந்தத் தம்பியும் குழந்தையை தலையணையுடன் அணைத்தப்படி பின்னால் அந்தப் பிள்ளையும் அமர்ந்திருப்பது தெரிகிறது. காற்றில் அசைந்த வாழை இலை காட்சியை மறைக்கவே வேலியைத் தாண்டி வெளியே வந்தான். அதே நேரம் கண்களும், மூக்கும், கன்னங்களும் அழுததால் சிவந்து மின்ன தேனீர் கோப்பையுடன் வெளியே வந்தாள். புஷ்பம். முன் வீட்டிலிருந்து மோட்டார் சைக்கிளும் பாதைக்கிறங்கி அவனை நோக்கி வந்தது.

'என்ன தம்பி ஏதும் அவசரமா... இந்தக் காலம்பறவே...'என்று இவன் ஏதோ கேட்கத் தொடங்கவும் திரும்பிய பைக்கை பிறேக் கடித்து நிறுத்தினான் அவன்.

'எதுக்கு நின்று லேட் பண்றீங்க... புள்ளை வலீல துடிக்குது... போங்க கெதியா, டக்டரைப் பிடிச்சாகணும்... புள்ளய காட்டணும் ஒரு உருப்படாத மூலைக்குள்ள கொண டாந்து வச்சிக்கிட்டு... வெட்டிப் பேச்சு வேற...' என்று படபடத்தது அந்தப் பெண். அதைவிட வேகமாகப் படபடத்துக் கொண் டோடியது பைக்.

தேனீர் கோப்பையுடன் விக்கித்துப்போய் நின்றவளை தோளில் அணைத்தப்படி உள்ளே கூட்டிச் சென்றான் மாரிமுத்து.

'ஏதாச்சும் சொன்னா ஏன் சொல்றான், எதுக் குச் சொல்றான்னு யோசிக்கத் தெரியாது.

கண்ணைக் கசக்கி மூக்கை பெணைஞ்சி இப்படி செவந்து போகத்தெரியும்... இப்பப் பாத்தியா மூஞ்சிலடிச்சாமாதிரி பேச்சை... நீதான் பாப்பா பாப்பான்னு உயிரை விடுறே... அந்த பொண்ணுக்கு நம்பளை எல்லாம் கண்டாலே புடிக்குதில்லே. அதான் கத்திட் டேன்... தேத்தண்ணியைக் குடிப்போம் மூஞ் சைக் கழுவிக்கிட்டு வா... என்று ஆறுதல் கூறினான்.

தோளில் கிடந்த கையை விலக்கி அவனது பிடியிலிருந்து விடுபட்டு விலகி நின்று கொண் டாள் அவள்.

'சரி...சரீ... சத்தம் போட்டதுக்கு மன்னிப் புக் கேட்டுக்கிறேன்' என்றபடி தோளிலிலி ருந்து தள்ளிவிடப்பட்ட கையால் இடுப்பைச் சுற்றி அணைத்துக் கொண்டான். தேனீர் கோப்பை தடுமாறியது. சிதறிய தேனீர் கையில் விழுந்து சுட்டது.

மற்ற கையால் கோப்பையை வாங்கிக் கொண்டான். குரலில் தயக்கத்துடன் நேற்று அந்தப்பெண் இவளைப் பற்றிக் கூறியவற்றை அவளிடம் கூறினான். கோபப்படுவாள் என்றே எண்ணினான்.

ஆனால் அவளோ எதுவித சலனமுமின்றி 'சொன்னா சொல்லிட்டுப் போகட்டுங்க...' என்றாள்.

தங்கராசு வவுனியாக் கடைக்கு வந்து இரண்டு வாரம் போலாகி விட்டது. கடை வேலைகள் ஒன்றும் சரியாக பிடிபடவில்லை. ஆனால் பழக்கி எடுக்கும்படி பதுளை பணித்திருந்தது. இப்போதைக்கு எடுபிடி வேலைகள் தான். நேரத்துக்குச் சாப்பாடு, மாற்றிக் கொள்ள உடுப்பு, தலை சாய்க்கப் பாய் தலையணை என்று குறையேதுமில்லை.

தோட்டத்துச் செக்ரோலில் பெயர் என்ன ஆகும் என்று யோசிப்பான். போலீஸ்காரர் கள் அப்பாவைத் தொந்தரவு செய்வார்களோ என்று வருத்தப்படுவான். அம்மாவைப் பற்றி, தங்கையைப் பற்றி, மீனாட்சியைப் பற்றி, கனவு கனவாக வரும். வாழ்க்கை எப்படி எப்படி எல்லாம் மாறுகிறது என்று யோசிப் பான். இன்னும் பெரிய பெரிய மாற்றங்கள் வரப்போவது தெரியாமல் தூங்காது கண் விழித்துக் கிடப்பான்.

தோட்டத்தைத்தான் துண்டாடப் போகின்றார் களே. பாதித் தோட்டத்தை கிராமத்து மக் களுக்குப் பகிர்ந்தளித்து விடுவார்கள். தோட்டத்து மக்களில் பாதிப் பேர் பரதேசி களாய் அலையப் போகின்றார்கள்... என்ன செய்வார்களோ தெரியவில்லை...என்று தவித் துப் போவான்.

ஒரு நாள் பதுளைக் கடையில் இருந்து இராமர் பேசினான். காசியர்தான் எடுத்தார்.

'தங்கராசுவைக் கொஞ்சம் பேசச்சொல்வீர் களா சார்' என்றான்.

'டெலிபோன் எல்லாம் குடுக்க ஏலாது வை... வச்சிறு' என்று போனை வைத்துவிட்டார். மீண்டும் போன் அடித்தது. அவனாகத்தான் இருக்கும் என்ற அலுப்புடன் சற்றே அதட் டும் குரலில் ஹலோ என்றார். பிறகு சொல் லுங்க சர் என்று குழைந்தார்.

மறு முனையில் பரமசிவம் முதலாளி.

'தங்கராசைப் பேச சொல்' என்றார். ரிசீவர் கை மாறியது.

'செலாங்க முதலாளி' என்றான்.

'நல்லாருக்கியா... இந்தா ராமர் ஏதோ பேசணும்கிறான் பேசிக்கோ' என்றார்.

பிறகு ராமர் பேசினான்.

'அரசாங்கம் தோட்டத்தை பாரம் எடுப்பதால் ஏதேதோ நடக்கிறது. ஒன்றும் விளங்கவில்லை. இன்னும் யாரும் வேலைக்குப் போகவில்லை.

அம்மா அப்பா தங்கை, மீனா உட்பட ஒருத் தருக்கும் ஒரு பிரச்சினையும் இல்லை.போலீஸ் காரர்கள் ரொம்ப பிஸி அதுனால உன் னைத் தேடற மாதிரியும் தெரியலை உங்க வீட்டுக்கு வந்து விசாரிக்கவும் இல்லை யாம். என்று கூறி முடித்தான் ராமர்.

அந்த அளவில் தங்கராசு திருப்தியடைந்தி ருந்தான். 'போலிசுக்குப் பயந்து அவன் பதுளைக்கு ஓடி வந்து விட்ட அன்று இரவு மீனாட்சியின் லயம் தீப்பற்றி எரிந்த கதை இப்போதைக்கு அவனுக்குத் தெரிய வேண் டாம்' என்று கூறியிருந்தார் பரமசிவம் முத லாளி. மீனாட்சிக்கு ஏதும் நடந்திருக்கலாமோ என்ற பயத்தில்பதுளைக்கு ஓடி வந்து விடுவானோ என்ற பயம் அவருக்கிருந்தது.

ஒரு நாள் மறுபடியும் அந்த சைக்கிள் தம் பிகள் வந்து கடை முன் நின்றனர். காசாளர் எழுந்து வெளியே ஓடிவந்தார். 'தங்கரா சண்ணனைக் கூட்டிக் கொண்டு வரட்டாம்' உத்தரவு வந்திருக்கிறது...' என்றார்கள்.

அவர் சற்றே தயக்கம் காட்டினார். 'இல் லையப்பு எங்கள் பொஸ் பையன் பத்திரம் பையன் பத்திரம் என்று அடிக்கடி போன் பண்ணுகிறவர்...' என்று இழுத்தார்.

'பத்திரமாகவென்றால்...'கன்னத்தில் அறை வதைப் போலிருந்தது அந்தக் கேள்வி.

'இது நடைமுறைக்கு சற்று வித்தியாசமானது... வரச்சொன்னால் வந்துவிட வேண்டும் இல் லாவிட்டால் கொண்டும் போவம், கொன்றும் போட்டிருவம்...இங்கேதான் கேட்டுக்கொண்டு நிக்கிறம்... கூட்டிப் போவதைப் போலவே கூட்டி வந்தும் விடுவம், இதுபற்றி எங்கள் பெரியவர் உங்கள் பெரியவரிடமும் பேசி யுள்ளார்... அனுப்புங்கள்...' என்று துரிதப் படுத்தினான்.


உள்ளே போய் சட்டையை மாட்டிக்கொண்டு வெளியே வந்த தங்கராசுவை பாரில் ஏற்றிக் கொண்டார்கள். மிதி வண்டிகள் மின்னலென ஒடிந்தொடிந்து ஓடத் தொடங்கின.

'சைக்கிள் ஓட்டுவியா...' ஓட்டிக் கொண்டி ருந்தவன் கேட்டான். 'ஓ... நன்றாக ஓட்டு வேன் ஆனால் என்னிடம் சைக்கிள் இல்லை. தோட்டத்தில் யாரிடமும் சைக்கிள் இல்லை. எங்கள் மாஸ்டரிடம் ஒரு பச்சைகலர் ரலி இருந்தது... அவ்வளவு தான்...'

'சைக்கிள் ஓட்டத் தெரியும் என்கின்றாய் ஆனால் சைக்கிள் இல்லை. சுடத்தெரியாது என்கின்றாய் ஆனால் துப்பாக்கி வைத்தி ருந்தாய்...' என்றான் கேலியுடன்.

இந்தத் துவக்குச் சங்கதியை அவர்கள்

தொடர்தல் 74ம் பக்கம்




# மாறுதல்கள்...

73ம் பக்கத் தொடர்ச்சி...

இன்னும் மறக்கவில்லை.

தோட்டத்தில் யாரும் துப்பாக்கி வைத்தி ருக்கக்கூடாது. எங்கள் கருவாட்டுக் கங் காணியார் மட்டும் ஒரு ஒற்றைக் குழல் துப்பாக்கி வைத்திருந்தார். காட்டுப் பன்றி விரட்ட துரையிடம் அனுமதி பெற்றிருந்தார். அதை வைத்துக் கொண்டு அதைத்தூக்கி கொண்டு நீட்டி, நீட்டிக் காட்டி அவர் போடும் டிராமா சொல்லி மாளாது…’

நன்றாகத்தான் பேசுகின்றாய் தங்கராசு ஆனாலும் உன் பெயர்தான் பிடிக்கவில்லை... உனக்கொரு நல்ல பெயர் வைப்பம்…’

‘ஏன் என் பெயருக்கென்ன. நல்ல பெயர் தானே… ஏன் பிடிக்கவில்லை…’

‘அதைப் பிறகு சொல்கின்றேன். மறக்காமல் கேள்… உனக்கும் அது தெரிந்திருக்க வேண்டும்.. இப்போது சொல் கருவாட்டுக் கங்காணி என்றாயே அது என்ன பெயர். கங்காணி என்றுதான் கேள்விப்பட்டிருக்கின் றோம்.

‘ஓ அதுவா’ என்று சிரித்தான் பிறகு கூறினான் ‘அது ஒரு பட்டப் பெயர். காரணப் பெயர் மாதிரி. அந்தக் கங்காணிக்கு கருவாடு என்றால் உயிர். தோட்டத்துப் பெண்கள் சதா வெத்திலை மெல்லுவதைப்போல் அவர் கருவாட்டை மென்று கொண்டே இருப்பார். சதைப்பற்றான சுட்டக் கருவாட்டுத் துண் டொன்று அவரது கறுப்புக் கோட்டின் வலது கை கீழ்ப் பொக்கட்டில் எப்போதும் இருக் கும். ரெண்டாம் பேருக்குத் தெரியாமல் நைசாகக் கையை பொக்கட்டுக்குள் விட்டு நுனி விரல் நகத்தால் ஒரு பொட்டுப் போல் கிள்ளியெடுத்து வாயிலடக்கிக் கொள்ளு வார். உதட்டுக்கும் பல்லுக்குமிடையில், அல்லது நாவினடியில் என்று கிள்ளிச் செருகிய அந்தக் கறுவாட்டுத் தசை எச்சி லுடன் ஊறி ஊறி... கன்னத்தைச் சொடுக் கிச் சொடுக்கி நோகாமல் தெரியாமல் மென்று கொண்டே இருப்பார்.

அவரது மலைப் பெண்கள் அவருக்கு சில ருக்கு ரகசியமாக வைத்த பெயர்… பிறகு முழுத் தோட்டத்துக்குமே பெயராகி விட்டது. கருவாட்டுக் கங்காணி என்றால் தான் புரி யும்…’

‘மணக்காதா…’

‘மணக்காதான்னா… ஓ நாற்றமடிக்காதான்னு கேக்குறீங்களா! பழகிட்டா, ஆசைப்பட்டுட்டா பிறகு நாத்தம் என்னங்க... நாத்தம்…’

பேச்சு பிராக்கில் அவர்கள் வெகுதூரம் வந்திருந்தனர். கடைத்தெருதாண்டி, இங் கொன்று அங்கொன்றாக வீடுகள் தாண்டி இப்போது உயர்ந்த மரங்களடர்ந்த காட் டுக்குள் வந்துகொண்டிருந்தனர்.

அடர்ந்து வளர்ந்திருந்த மரங்கள் ஆகா யத்தை மறைத்துக் கொண்டிருக்கும் ஒரு பொட்டல் நிலம்.

ஆறேழு பேர் நின்று கொண்டிருந்தனர். அவர்களின் நடுவில் இறக்கிவிடப்பட்டான் தங்கராசு.

யார் எவர் என்பதெல்லாம் அவனுக்கு தெரி யவில்லை. அதற்கான வாய்ப்பும் இல்லை. ஆனால் அவனை கூட்டி வந்தவர்கள் ஒரு பணிவான மரியாதையுடன் ஒதுங்கி நின்று கொண்டதிலிருந்து இவர்கள் பெரியவர்கள் என்பது மட்டும் புரிந்தது.

ஒரு வானுயர்ந்த மரத்தின் ஆளுயரத்தாழ் வானக் கிளையில் நாலைந்து சிலம்புக் கம்புகள் சாய்த்து வைக்கப்பட்டிருந்தன.

கட்டுமஸ்தான கரிய உடல் கொண்ட இளை ஞன் ஒருவன் அதிலிருந்து ஒரு கம்பை இழுத்தெடுத்துக் கொண்டான். காட்டு மரங் களிடையே பூத்துக் குலுங்கும் காற்றை விஸ்க், விஸ்க்கென்று அந்தச் சிலம்புக் கழியால் கிழித்தெறிந்தான். க்றீம், க்றீம் என்று கிளம்பும் அந்தக் கம்பின் ஓசை தங்கராசுவின் புஜங்களைக் குலுக்கியது. இருந்த இடத்திலிருந்து முன் நகர்ந்தான். அவனைச் சுற்றி நின்றவர்கள் நகர்ந்து இடம்விட்டனர். கம்புகள் சாய்த்திருந்த மரத் திடம் சென்றான்.

ஒரு கம்பை எடுத்து கால் நுனியில் ஊன்றி நெற்றிவரை நிறுத்தினான். நெற்றிக்கு மேலும் மூன்று ஜான் போல் உயர்ந்திருந்தது கம்பு. சரியில்லைதான் என்றாலும் மற்றவைகள் இதைவிடவும் உயரம்கூட என்பதை அனு-மானித்தான். வானம் தெரியவில்லை என் றாலும் அண்ணாந்து வானம் நோக்கினான்.

பிறகு குனிந்து மண்ணைத் தொட்டு நெற் றியிலிட்டுக் கொண்டான். விரல்களிடையே கம்பைச் சதிராடிச் சதிராடி டக்கென வலது கையால் இறுகப்பற்றி காற்றில் வீசி வீசி ஒரு பம்மலுடன் சுற்றிச் சுற்றி வந்து கம் புடன் நின்ற மற்றவர் முன் தக்கென்று குதித்து நின்றான். மற்றவரும் தயாராகவே இருந்தார்.

கம்புடன் கம்பு மோத, காடதிர்ந்தது. இரு வரும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுப்ப தாய் இல்லை. ஐந்து நிமிடம் பத்து நிமி டம், பதினைந்து நிமிடம் என்று கம்புடன் கம்பு மோதிக் கடகடத்தது. மின்னலும் இடி யுமாக சீறிக் கிளம்பியது. சுற்றி நின்றவர்கள் ஒரு சில வேளைகளில் எழுந்து நின்று கைதட்டினர். ஒரு மணி நேரம் போல் அடித் தடித்து ஆடியவர்கள் லேசாகக் களைக் கத் தொடங்கினர். திடீர் திடீரென சுதாக ரித்துக் கொண்டு வேகமாகவும் மோதினர். அப்போது தான் அது நடந்தது தங்கராசுவின் கம்பு மற்றவருடைய கம்பை தட்டித்தூக்கி வானம் நோக்கி வீசியது. எகிறிப் போன கம்பு கீழே வர சில நிமிடங்கள் சென்றன.

*(தொடரும்)*



theliwathai.joseph@thaiveedu.com



# குடிபெயர்வும் சமூகஉள நல்வாழ்வும்

## குடிவரவாளர் நல்வாழ்வு 5

- சுல்பிகா இஸ்மாயில் -

‘நற்பிரஜையாக வாழ்தலே சமூகஉள நல்வாழ்வின் நோக்கமும் அடைவு மாகும்’

“இலங்கையில் போரின் அவலங்களுக்குள் நாங்கள் வாழ்ந்த போது நாங்கள் எங்களது அறநெறி அல்லது தார்மீகப் பண்புகளை பெருமளவில் இழந்திருந்தோம். அல்லது இழக்கும்படி நிர்ப்பந்திக்கப்பட்டிருந்தோம். எதனையும் எங்களது நலனை முன்னிறுத்தியே பார்க்கப் பழக்கப்பட்டோம். அடுத்த வீட்டில் உள்ளவரின் அவலங்கூட எங்களுக்குப் பெரிதாகத் தெரியவில்லை. மேலும் சிலரது அழிவிலும் அவதியிலும் எங்கள் நல்வாழ்வு உள்ளது என்பதையும் ஏற்கப் பழகியிருந்தோம். அவர்கள் பற்றிய எந்த அக்கறையும் எங்களுக்குத் தேவையில்லை என்பதை நாங்கள் திடமாக நம்பினோம். அதனை நியாயப்படுத்தவும் நாங்கள் கற்றுக் கொண்டிருந்தோம். என்னைப் பொறுத்தவரை எனது வாழ்க்கையின் மிக மிக மோசமான தார்மீக அல்லது அறப்பண்பு வீழ்ச்சியுற்ற அல்லது ஒருவகையில் எனது உள்ளம் நோயுற்ற (psychologically illbeing) காலப் பகுதியாகவே நான் அதனை பார்க்கின்றேன். எப்போதும் எரிச்சல் உணர்வும் கோபமும் விரக்தியும் உடையவனாகவே நான் இருந்திருக்கின்றேன். யாரையும் நான் நம்பவில்லை. நம்பிக்கை கொள்ளுதல், அன்பு காட்டுதல், மன்னித்தல், மற்றவர்களது நலனில் அக்கறை கொள்ளுதல் என்பன போலியான விடயங்களாகவும் ஒரு வகையில் “டாம்பீகமானதாகவும் தோன்றியது” என்கிறார் தன்னை ஓர் ஆத்மிகவாதியாக அடையாளம் காணும் ஐயாத்துரை.

பத்தாம் ஆண்டு வரை மட்டுமே கல்வி கற்ற இவர் வாழ்க்கையே உலகளாவிய அறிவை தனக்கு அளித்ததாகக் கூறுகின்றார். மேலும் உண்மையில் ‘உளம் நோயுறும் நிலையை’ நற்பிரஜைக்குரிய நல்ல பண்புகளை கொண்டிராத நிலை என எடுத்துக் காட்டுகின்றார். மறுபுறத்தில் ‘தீய’ பண்புகள் பலவற்றைக் கொண்டிருப்பதே உள நோயுறுதலின் அறிகுறிகளாகவும் அவர் முன் வைக்கின்றார். அவ்வகையில் ‘நல்லவராக’ வாழ்வதே சமூக உளவியல் நல்வாழ்வாகவும் அடையாளப் படுத்துகின்றார் அவர்.

நல்லவராக அல்லது நற்பிரஜையாக வாழ்தல் என்பது தனிப்பட்ட வகையிலும் சமூக ரீதியாகவும் சமூகமான திருப்தியான பயன்பாடு மிக்க வாழ்வை மேற்கொள்ளுதலைக் குறிக்கின்றது. தனிப்பட்ட வகையில் தார்மிக அறநெறிகளை உருவாக்கி உள்வாங்கி அதன் வழி நடத்தலுடன் இதனை தொடர்புபடுத்தி நோக்கப்படுகின்றது. தனக்கும் தன்னைச் சார்ந்தவர்களுக்கும் தனது சமூகத்தினருக்கும் இயற்கைக்கும் தீங்கு விளைவிக்காது நன்மை பயக்கும் வகையில் அமைதியான ஆக்கபூர்வமாக வாழ்வை மேற்கொள்ளுதலே நற்பிரஜையாக வாழும் ஒருவரின் நோக்கமாகவும் அடைவாகவும் ஆத்மீக நோக்குகள் முன்வைக்கின்றன.

ஐயாத்துரை, நற்பிரஜைகளின் பண்புகள் எவ்வாறான விளைவுகளை அவர்களது வாழ்வில் ஏற்படுத்துகின்றது என்பதைப் பின்வருமாறு எடுத்துக் கூறுகின்றார்.

“ஒழுக்க சீலர்களாக அல்லது நல்லொழுக்கமுள்ளவர்களாக வாழ்வதே நல்வாழ்க்கையின் முக்கிய விடயமாகும். அவ்வாறானவர்களின் அகத்தின் மையப் பண்புகள் கடவுள் பண்புகளை அண்மிக்கும்போது அவர்களது நல்வாழ்வு பூரணத்துவ நிலையை அடை-கின்றது. கடவுள் பண்புகள் ஒருவரை சுய நல நோக்குகளிலிருந்தும் சமூகத்தினால் ஏற்படுத்தப்படுகின்ற மன அழுத்தங்களிலிருந்தும் விடுவிக்கின்றது. இதனால் உளம் கனதியற்றதாகி இலகுவாகின்றது. பதட்டங்களற்று வாழ்வை முன்னெடுக்க உதவுகின்றது” என்கிறார் அவர்.

இவ்வகை ஆத்மிக விடயங்களே அறவழிகாட்டியாக அமைந்து மனிதனின் உளவியல் நல்வாழ்வுக்கு ஓர் அர்த்தத்தினையும் மேம்பாட்டினையும் கொடுக்கின்றது என்றும் அவர் வாதிடுகின்றார்.

அறவழிகாட்டி (moral compass) என்பது சமூகத்தின் தேவைகள், விழுமியங்கள் சார்ந்து மனித குலத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தக் கூடாது என்ற நோக்குடன் உருவாக்கப்பட்ட வழிமுறைகளையும் அதனோடு சார்ந்த பெறுமனங்களையும் உள்ளடக்குகிறது. இது தனிமனித அறம், சமூக அறம் என்ற நிலைகளுக்கிடையில் ஒரு சுமூக நிலையைப் பேணிக் கொண்டு தனி மனிதனுக்கும் அவன் சார்ந்த குழுவுக்கும் வழிகாட்டுகின்றது. இந்த சுமூக நிலை (harmony) மனிதரில் சாந்தம், கட்டுப்பாடு போன்ற தன்மைகளை பரிணமிக்கச் செய்வதால், உளரீதியான சமநிலை அல்லது சுமூக நிலை உருவாக்கப்படுகின்றது. இந்நிலையில் திருப்தியும் அதன் பாற்பட்ட மகிழ்ச்சியும் விளைவாகின்றது என்கின்றனர் Southwick, Charney 2012.

ஐயாத்துரை ஆத்மீகத்துடன் தொடர்பாக அறவழிகாட்டி பற்றிய தனது புரிதலை பின்வருமாறு விளக்குகின்றார்.

“ஆத்மிக வழிபாடு (சமய வழிபாட்டை நான் குறிப்பிடவில்லை) என்று நான் குறிப்பிடுவது உளத்தை நல்வழிப்படுத்துகின்ற நற்பண்புகளை உருவாக்குவதற்கும் அதன் வழியில் அமைதி நிலை அடைவதற்குமாக மனிதர்கள் மேற்கொள்ளும் எல்லா விடயங்களையும் தான்.... உதாரணமாக ஒருவர் அன்புள்ளவர், மற்றவர் தேவை பற்றிய கரிசனை உள்ளவர். அவர் ஏழைகளுக்கும் துன்பத்தில் உழலுபவர்களுக்கும் உதவி செய்கின்றார், ஆறுதல் அளிக்கின்றார் என்றால் அதனை நான் ஆத்மீக வழிபாடாகப் பார்க்கின்றேன். இதனைச் செய்வதற்கு அவர் கட்டமைத்துக் கொண்ட அறவழிகாட்டியே அடிப்படையாக உள்ளது. அந்த அறவழிகாட்டி தெளிவாகவும் தீர்க்கமாகவும் திறமையாகவும் சிந்திப்பதற்கான உள ஆற்றலையும் உளச் சூழ்நிலையையும் அவருக்கு வழங்குகின்றது. மேலும் இது சீரான ஒரு வாழ்க்கை முறைமை ஒன்றையும் உருவாக்க வழிசெய்கின்றது”.

மேற்குறித்த கருத்தினை விரிவாக நோக்கும்போது அறவழிகாட்டியானது ஒருவரது உள்ளத்தினைப் பலப்படுத்துகின்றது (mental strength). பலமான உள்ளம் சவால்களை எதிர்கொள்வதற்கும் பிரச்சினைகளைக் கையாள்வதற்குமான உளசக்தியையும் (will power) மனத்திடத்தையும் (courage) வழங்குகின்றது எனலாம்.

அதேவேளை தீயபண்புகள் இவற்றைச் சீர்குலைக்கின்றன என்பதை ஐயாத்துரை பின்வருமாறு தனது அனுபவத்தினூடாக விளக்குகின்றார்.

“தனிப்பட்ட வகையில் நான் பெரும்பாலான வேளைகளில் நேர்மையற்றவனாகவும் (dishonest) சூட்சுமமானவனாகவும் (manipulative) இருந்திருக்கின்றேன். உள்ளம் உண்மைகளை அறிந்திருந்தும் அவற்றை வெளிப்படையாக மறுத்துரைத்திருக்கின்றேன். திரிபுபடுத்தி வெளிப்படுத்தியிருக்கின்றேன். அவ்வாறெல்லாம் செய்த பின் ஒரு போதுமே அந்தரங்கத்தில் நான் நிம்மதியாக இருந்ததில்லை. குற்றப்பட்ட மனதுடனே வாழ்ந்திருக்கின்றேன். சோகமும் வெறுப்புணர்வும் என்னைச் சூழ்ந்தே இருந்திருக்கின்றது. எனது உள ஆரோக்கியம் கெட்டு இருந்ததோடல்லாமல் உடல் ஆரோக்கியமும் பாதிக்கப்பட்டு இருந்தது. அக்கால கட்டங்களில் தான் எனக்கு உயர் இரத்த அழுத்தமும் நீரிழிவு நோயும் ஆரம்பித்தன.”

தேவ குணங்கள் நல்வாழ்வை உருவாக்குவதாகவும் துர்க்குணங்கள் துர்வாழ்வை உருவாக்குவதாகவும் வாதிடுகிறார் அவர்.

“எல்லாக்கால கட்டங்களிலும் மனிதர்களின் உணர்வுகளும் நடத்தைகளும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. குடிபெயர்வுக்குப் பின்னர் தனிமையும் வேறுபட்ட சமூக சூழ்நிலைமையும் பல்வேறு பாடங்களை எனக்குக் கற்றுத் தந்தது. எனக்கு மனிதர்கள் தேவை என அது உணர்த்தியது. இங்கு சமூகமாக /குழுவாக வாழ நான் நிர்ப்பந்திக்கப்பட்டபோது என்னை மட்டுமே சுற்றியிருந்த எனது சிந்தனைப் போக்குக்கு அது மிக மிகச் சவாலாக இருந்தது. நான் எதிரிகளாகப் பார்த்தவர்களே எனக்கு உறுதுணையாக இருந்த போது அது எனது மனதைத் தொட்டது. விரோத உணர்வுகள் என்னை விட்டு அகல ஆரம்பித்தபோதே எனது மனம் இலகுவானதை என்னால் உணர முடிந்தது. அவர்களது நிபந்தனையற்ற அன்பு என்னையும் மாற்றியது. அவர்களுக்காகவும் விட்டுக் கொடுக்கவும் அன்புகாட்டவும் அக்கறைப்படவும் அவர்களிடமிருந்தே கற்றுக் கொண்டேன். முதலில் இது எனது சுயநலத்தின் அடிப்படையில் எனக்குள் உருவாகியது. எனினும் காலஞ்செல்லச் செல்ல உண்மையாயிருப்பது, நேர்மையாயிருப்பது, ஆதரவளிப்பது போன்றன மனதுக்கு திருப்தியையும் மகிழ்ச்சியையும் அளிப்பதை உணரத் தொடங்கினேன். எனது இந்த உள நலம் எனக்கு மட்டுமல்லாது எல்லோருக்கும் நன்மையாகவும் பயன்படுவதாகவும் இருந்தது. எனது நலத்திற்கும் அப்பால் நான் எனது உறவினர், ஊரவர் என விரிந்து சிந்திக்கும் மனப்பக்குவத்தைப் பெற்றிருக்கின்றேன். இதன் பின்னர் தான் நல்லவனாக இருத்தலே சமூக உள நல்வாழ்வைத் தருகின்றது என்ற பிடிவாதமான உணர்வைக்கொண்டிருக்கின்றேன்” என்கிறார் அவர்.


கீழைத்தேய கலாச்சாரங்களில் சிறந்த ஒழுக்க நெறிகளைக் கடைப்பிடித்து பண்பாளனாகவும் பண்பட்டவராகவும் இருத்தல், வாழ்தல் உளவியல் நல்வாழ்வுக்குரிய முதன்மை விடயமாக நோக்கப்படுகின்றது. இதன் அடிப்படையில் கீழைத்தேய ஆய்வாளர்கள் ஆத்மபலம் அல்லது உளஉறுதிநிலைக்கும் (mental strength) நல்லொழுக்கத்திற்கும் இடையில் சாதகமான நேரடியான தொடர்புள்ளது எனவும் அவர்கள் வாதிடுகின்றனர். மேலைத்தேய தத்துவஞானி Plato (Plato 1973, 136) நல்லொழுக்கமற்றவர்களின் உள்ளம் சந்தோசமற்றதாகவும் திருப்தியற்றதாகவும் இருப்பதுடன் அவர்கள் உடல் ஆரோக்கியமற்றதாகவும் இருக்கும் எனக் குறிப்பிடுகின்றார். ‘பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட அறநெறிகளை ஒரு வழிகாட்டியாகக் கொள்ளுதல் சுயமரியாதையாலும் பகுத்தறிவாலும் நிலைப்படுத்தப்படுகின்றது’ என்கிறார் அவர். சாதக உளவியலாளர்களான (positive psychologist) Peterson, Seligman (2004) போன்றோர் ‘நல்லொழுக்கப் பண்புகளின் பலமானது உளவியல் நல்வாழ்வின் அடையாளமாக இருக்கின்றது’ என எடுத்துக் காட்டுகின்றனர்.

ஒவ்வொருவரும் அறம் சார்ந்து தமது நடத்தைகளையும் எண்ணங்களையும் உணர்வுகளையும் உரைத்துப் பார்க்கின்றனர். அதனடிப்படையில் அவை அநீதியானவையாக அறியப்பட்டால் அது மகிழ்ச்சிக்கும் நல்வாழ்வுக்கும் எதிரான மன உளைச்சல்களை அவர்களில் தோற்றுவித்து விடுகின்றது.

*(தொடரும்).*



zulfika.ismail@thaiveedu.com





# தமிழில் முழுமையான நாவல் எதுவும் வந்ததாக எனக்குத் தெரியவில்லை

- பி.ஏ. கிருஷ்ணன்

- நேர்காணல்: மு. புஷ்பராஜன்

- ஆக்கஉதவி: எஸ்.கே.விக்னேஸ்வரன்

'புலி நகக் கொன்றை', 'கலங்கிய நதி' ஆகிய நாவல்கள் மூலம் நவீன தமிழ் படைப்புலகில் அழுத்தமாகத் தன் காலடிகளைப் பதித்தவர் பி.ஏ. கிருஷ்ணன். ஆங்கிலத்திலும் தமிழிலும் நன்றாக எழுதக்கூடியவர். 'தமிழில் நன்றாக எழுதுகிறான்' என்று கூறப்படுவதையே பெருமையாகக் கொள்பவர். பழைய, நவீன இலக்கியங்களில் ஆழ்ந்த ஈடுபாடு உடையவர்.

நான்கு தலைமுறைகளாக ஒரு சாபத்தின் நிழலில் வாழ்வதாகக் கருதிக் கொள்ளும் புலி நகக் கொன்றை நாவல், தென்கலை ஐயங்கார் வாழ்க்கையயின் வெட்டுமுகத்தைக் கூறுவதுடன் இந்திய சுதந்திரப் போராட்டத்தின் பல்வேறு அடுக்குகளை தலைமுறை மாற்றங்களுடன் முன்வைக்கிறது.

கலங்கிய நதி சுதந்திரத்திற்கு பின்னைய இந்திய மக்கள் வாழ்விற்கும் இந்திய அதிகார அடுக்குகளில் நிறைந்திருக்கும் ஆணவம் மற்றும் ஊழலுக்கும் இடையிலான முரண்பாடுகள் பற்றியது.

அரசியல், வரலாறு, சினிமா, ஓவியம், அறிவியல் என பல்வேறு துறைகளை அளாவிப் படர்வது இவரது கட்டுரைகள், 'திரும்பிச் சென்ற தருணம்', 'அக்கிரகாரத்தில் பெரியார்', 'மேற்கத்திய ஓவியங்கள்' – ஓர் எளிய அறிமுகம் ஆகியவை தொகுப்புகளாக வெளிவந்துள்ளன. முழுமை நோக்கி முன்னகராத தமிழ் வாழ்வின் முறைகள் மீதான கோபம் கூரிய எள்ளலாக வெளிப்படுவது இவரது படைப்பின் பொது இயல்பு.

'ஆழ்ந்த விரிந்த ஆளுமை படைத்தவர்' எனச் சு.ரா. வினால் குறிப்பிடப்பட்ட இவர், கனடா வந்திருந்த பொழுது 'தாய் வீடு' பத்திரிகைக்காக வழங்கிய நேர்காணல்.

**'புலிநகக் கொன்றை' உங்கள் முதல் நாவல். ஆங்கிலத்திலும் பின்னர் தமிழிலும் எழுதியுள்ளீர்கள். தமிழில் இந்த நாவலுக்கு இன்று இருக்கும் இலக்கிய மதிப்பீடு இதை எழுதும்போது கிடைக்கும் என்று எதிர்பார்த்தீர்களா?**

நான் ஆங்கிலத்தில் எழுதும் போது, அதை திரும்ப தமிழில் எழுதுவேன் என்று நினைக்கவில்லை. தமிழில் திரும்ப எழுதும் போது, அதை இன்னொரு நாவலாக எழுதவேண்டும் என்றுதான் நினைத்தேன். ஆனால் எழுதி முடித்தபோது, இரண்டு நாவல்களும் கிட்டத்தட்ட ஒரே மாதிரியாகவே அமைந்துவிட்டன. நான் தமிழில் நன்றாக எழுதுவேன் என்பதில் எனக்குச் சந்தேகம் இல்லை. ஆனால் வாசகர்கள் ஏற்றுக் கொள்வார்களோ என்ற சந்தேகம் எனக்கு இருந்தது. நான் எழுதிய முதலாவது அத்தியாயத்தை சு.ராவிடம் காண்பித்தேன். அவருக்கு ரொம்பவும் பிடித்திருந்தது. அதற்குப்பிறகு நான் அதை முற்றாக எழுதி முடித்துவிட்டு 'காலச்சுவடு' பதிப்பகத்திற்கு அனுப்பிவைத்தேன். அவர்களுக்கும் பிடித்திருந்தது. நாவல் வெளிவந்த பின்பு அதற்கு வரவேற்பு கிடைக்கும் என்று எதிர்பார்த்தேன். ஆனால் இவ்வளவு வரவேற்புக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கவில்லை. காரணம் தமிழ் நாட்டின் சமீபத்திய வரலாறு சார்ந்து தமிழர்களால் எழுதப்பட்ட நாவல்கள் என்று அதிகம் இல்லாததுதான் என்று தோன்றுகிறது..

**புலிநகக் கொன்றையின் வெற்றி அதன் வரலாற்று உள்ளடக்கம் காரணமாகவா அல்லது அதன் கலாபூர்வமான வெளிப்பாடு காரணமாகவா? இவற்றில் எது என்று நினைக்கிறீர்கள்?**

இரண்டும்தான் என்று நினைக்கிறேன். எனக்கே இந்த நாவலைப்பார்க்கையில் எப்படி இவ்வளவு அழகாக வந்திருக்கிறது என்று தோன்றுகிறது. நாவலை எழுதிய தருணங்களை மிகவும் மகிழ்ச்சிகரமான தருணங்களாக நான் உணர்ந்திருக்கிறேன். தமிழில் எழுதும்போது எனது அலுவலகத்தின் கடினமான நெருக்கடிகளிலிருந்து மீண்டுவந்திருந்தேன். எழுதுவது ஆறுதலாக இருந்தது.

**'அப்பாவின் காலடியிலிருந்து தமிழ் கற்றதாக' பல தடவைகள் கூறியிருக்கிறீர்கள். தமிழில் மிகவும் பாண்டித்தியம் பெற்றவர் உங்கள் தகப்பனார். அவரிடம் தமிழ் கற்ற உங்களுக்கு ஏன் தமிழில் எழுதுவதில் தயக்கம் ஏற்பட்டது? ஆங்கிலத்தில் எழுதுவதற்கு இருந்த நம்பிக்கை ஏன் தமிழில் எழுதுவதற்கு வரவில்லை? இது தொழில் சார்ந்த புறச்சூழல் காரணங்களாலா? அல்லது உங்கள் இயல்பு சார்ந்த காரணங்களாலா?**

எனது தகப்பனார் மரபுசார்ந்த தமிழ்ப் புலமை பெற்றவர். ஆனால் பாரதிக்கு அப்பால் அவர் போகவே இல்லை. புதுமைப்பித்தன் அவருடைய நெருங்கிய நண்பராக இருந்தாலும், நாவல் சிறுகதைகளின் பக்கம் போனதே இல்லை. அவரிடம் மரபு சார்ந்த தமிழ் படித்தது எனக்கு மிக உதவியாக இருந்தது. ஆனால் ஓர் எழுத்தாளனாக மக்களால் மதிக்கப்படுவதற்கு தமிழறிவு மட்டும் போதுமானது என்று நான் நினைக்கவில்லை. ஆங்கிலத்தில் பின்னால் நான் படித்தவை மிக அதிகம். தமிழை விட மிக மிக அதிகம். அதனாலேயே ஆங்கிலத்தில் எளிதாக எழுத முடியும் என்ற நம்பிக்கை என்னிடம் இருந்தது. மேலும் ஆங்கிலத்தில் எழுதினால் உலக அளவில் தெரியப்படலாம் என்ற சபலமும்தான்.

**படைப்பு என்ற அளவில் அது தமிழர்களின் வரலாறு மட்டுமல்லாது, பாரம்பரியமான ஐயங்கார்களின் குறிப்பாக தென்கலை ஐயங்காரரின் வாழ்வின் வெட்டுமுகமாக இருக்கிறது. அதற்கும் உங்கள் வாழ்விற்குமுள்ள உறவு தான் என்ன?**

இதற்கு என்ன பதில் சொல்வதென்று தெரியவில்லை. புலிநகக் கொன்றை நாவலில் நடக்கும் சம்பவங்களில் 95 சதவீதம் எனது கற்பனை. நாலைந்து சம்பவங்கள் உண்மை. பல பெயர்கள் எங்கள் குடும்பத்தை சேர்ந்த பெயர்கள். எனக்குத் தெரிந்தவர்களின் பெயர்களும் உண்டு. நாவல் 1972ம் ஆண்டு முடிந்து போகிறது. எனக்கு அப்போது 25 வயது. ஆனால் நாவல் தொடங்குவது 18ம் நூற்றாண்டின் மத்தியில்!

இருந்தாலும், எந்தப் படைப்பாளியும் தன்னுடைய வாழ்க்கையில் அனுபவங்களை தனது எழுத்தில் கொண்டு வராமல் இருக்க முடியாது என்றுதான் நான் நினைக்கிறேன். எழுதத் தொடங்கினாலே எழுத்தாளனின் வாழ்வு அவனை அறியாமலே எழுத்தில் புகுந்து கொள்ளும்.

**இந்த நாவலில் ஒரு சாபம் பற்றிப் பேசுகிறீர்கள். அது இந்திய அரசியலோடு சம்பந்தப்பட்டு இணைந்த சாபம். அதாவது இந்திய சுதந்திர முயற்சிகளுக்காகத் திரட்டிய பணத்தை ஏமாற்றி எடுத்துக்கொண்டதால் வந்த சாபம் அல்லவா?**

நீங்கள் கூர்ந்து படித்தால் நான் சாபத்தை நம்பவில்லை என்பது தெரியும்.

**அந்த நாவலின் பாத்திரங்கள் பலர் இதை நம்புகிறார்கள். பழி. போராட்டத்தை ஏமாற்றியதான பழி.**

தொடர்தல் 87ம் பக்கம்

# தமிழில் முழுமை...

86ம் பக்கத் தொடர்ச்சி...

சில பாத்திரங்கள் நம்புகிறார்கள். பொன்னா பாட்டி, அவளது வாரிசுகள் சில பேர் நம்புகிறார்கள். நம்பாதவர்களும் நிறையப் பேர் இருக்கிறார்கள். சாபம் இருக்கிறதா இல்லையா என்பது பற்றி நான் பேசவில்லை. நாவலின் பாத்திரங்கள் பேசிக் கொள்கிறார்கள். அதை நம்புவதும் நம்பாமல் இருப்பதும் வாசகர்களைப் பொறுத்தது.

ஆனால் அந்த நாவலின் பிரதான பாத்திரம் அந்த சாபத்தை நம்புகிறது. அத்துடன் அந்த சாபமும் நாவலில் பிரதான பாத்திரம் வகிக்கிறது.

அப்படியா? உண்டியல் கடை குடும்பத்தினர் அற்ப ஆயுசில் இறந்து போய் விடுவார்கள் என்று ஒரு தரப்பினர் நினைத்தால், மறு தரப்பினர் அவ்வாறு நினைக்கவில்லை. பொன்னா பாட்டி கூட நூறு வருடங்களுக்கும் மேல் இருக்கிறாள். அவளை சாபம் ஒன்றும் செய்ததாகத் தெரியவில்லை.. நாவலை எழுதத் தொடங்கும்போது சாபம் இப்படி பூதாகாரமாக வளரும் என்று நான் நினைக்கவில்லை!.

**உங்களது இரண்டாவது நாவலான ‘கலங்கிய நதி’யில் அசாம் தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட அதிகாரியை மீட்பதற்காகச் செயற்படுபவர் நீங்கள் தான் என நாவலாசிரியர் பற்றிய குறிப்பில் உள்ளது. அரசில் உயர் பதவி வகித்தவர்கள் தீவிரவாதம் பற்றிய கண்ணோட்டம் பொதுவாகவே ஒரே மாதிரியானது. ஆனால் உங்கள் நாவலில் போராட்டம் பற்றி அனுதாபத்துடன் அணுகும் பார்வை உள்ளது. அவர்கள் பற்றிய நியாயங்களையும் பேசுகிறது. இது இந்திய அதிகார வர்க்கத்தின் கருத்துடன் முற்றாக மாறுபடுவது. அது உங்களிடம் உண்மையிலேயே உள்ளதா? அல்லது நாவலுக்காக அப்படி எழுதியுள்ளீர்களா?**

அது உண்மையில் என்னிடம் உள்ள இயல்புதான். எந்தத் தீவிரவாதமும் அடிப்படை காரணங்கள் வலுவாக இல்லாமல் மக்களிடையே இயங்க முடியாது. தீவிரவாதம் மக்களை எங்கு கொண்டு சேர்க்கும் என்பது வேறு. அதைப்பற்றி நாம் பேசவேண்டியதில்லை. ஆனால் அடிப்படைக் காரணங்கள் வலுவாக இருக்கும் முக்கியமான கால கட்டத்தின்தான் தீவிரவாதம் வலுக்கிறது. அதைப்பற்றிப் பேசாமல் தீவிரவாதத்தின் வெளிப்பாடுகளைப் பற்றி மட்டும் பேசுவது சரியாக இருக்காது.

இந்திய அதிகார வர்க்கம் பல தரப்பட்ட மனிதர்களைக் கொண்டது. எல்லோரும் ஒரே அச்சில் வார்த்தெடுத்தவர்கள் அல்ல. அவர்கள் மத்தியிலும் தீவிரவாதிகள் சொல்வதில் நியாயம் இருக்கிறது என்று நம்புபவர்கள் இருக்கிறார்கள். என்னைப் பொறுத்தவரையில் அரசு சொல்வதே சரியானது என்று நான் ஒருபோதும் நம்பியதில்லை. முன் முடிவோடு நான் எந்தப் பிரச்சினையையும் அணுகியதில்லை. அதனாலேயே அஸ்ஸாம் மக்களைப் பற்றி படித்துத் தெரிந்து கொண்டு அவர்களோடு பழக வேண்டும் என்ற எண்ணத்துடன்தான் நான் அங்கு சென்றேன். அஸ்ஸாம் மக்கள் மிக மிக அருமையானவர்கள். மிகவும் ஆழமான உணர்ச்சிகள் கொண்டவர்கள். எல்லாவற்றையும் உணர்வுபூர்வமாக அணுகக் கூடியவர்கள். அன்பு செலுத்தினால் பதிலுக்கு அதைவிட பத்து மடங்கு அன்பு செலுத்துவார்கள். வெறுத்தால் பத்து மடங்கு வெறுப்பை கொட்டுவார்கள். என்னை மிகுந்த மரியாதையோடு நடத்தினார்கள்.

**இந்தப் பயணக் கைதிகள் விவகாரத்தில் இந்திய அதிகாரிகள் உங்களை மாட்டிவிட்டதாக ஒரு கருத்து உங்கள் நாவலில் வருகிறதே, அது உண்மை தானா?**

இல்லை. மாட்டிவிடவில்லை. அது கற்பனை. அப்போது எனது மேலதிகாரியாக இருந்தவர் R.K. நாராயன் என்ற ஓர் அருமையான மனிதர். கதைக்காக நிறையக் கற்பனைச் சம்பவங்களைச் சேர்த்து எழுதியிருக்கிறேன். ஆனால் முக்கியமாக ஒன்றைச் சொல்ல வேண்டும். கதையில் இரண்டு திரிகள் இருக்கின்றன. ஒன்று அதிகாரியின் கடத்தல். மற்றது இலஞ்சம். இரண்டும் உண்மை. அதிகாரி மீண்டு வந்து விட்டார். லஞ்சப்பணம் முழுவதும் வரவில்லை. நான் திரும்பத் திரும்பச் சொல்லியும், அரசாங்கம் கவலைப்படவில்லை.

**ஆக, உங்கள் முயற்சி வீணடைந்து விட்டதாக சொல்கிறீர்களா?**



இல்லை அப்படி சொல்லமாட்டேன். பல கோடி ரூபாய்கள் திரும்ப வராவிட்டாலும், சில கோடி ரூபாய்களை அரசிற்கு மீட்டுத் தந்திருக்கிறேன்.

**தீவிவாதிகளுடன் தொடர்பு வைப்பதில் உங்களுக்கு மார்க்சியம் உந்து சக்தியாக இருந்ததா?**

மார்க்சியம் பல வகைகளில் உதவி செய்தது. முதலாவதாக, ஒரு இயக்கம் வலுப்பெறுவதற்குக் காரணம் என்ன என்பதைத் தேடுவதற்கு மார்க்சியப் பாடம் உறுதுணையாக இருந்தது. குறிப்பாக இயக்கம் வலுப்பெற்றத்தின் பொருளாதார அடிப்படை என்ன என்பதை பார்க்க மார்க்சியம் உதவியது. இரண்டாவதாக, பல தரப்பட்ட மக்களிடையே இருக்கும் உறவுகளையும் உராய்வுகளையும் தெளிவாகப் பார்ப்பதற்குத் தேவையான கண்ணாடியாக அது இருந்தது. மூன்றாவதாக, மார்க்ஸ் எதையும் சந்தேகப்படு என்கிறார். எனக்கு சந்தேகம் மிகுந்த வசதியாக இருந்தது! ஆனால் எனக்கு மார்க்சியம் கொடுத்த முக்கியமான வலு அது மனித குலத்தின் மீது வைத்துள்ள அசைக்க முடியாத நம்பிக்கைதான். மார்க்சியமும் காந்தியமும் சேர்ந்து வழங்கிய நம்பிக்கை அது என்று சொல்லலாம்.

**மனித குலம் எப்போதும் முன்னேறும் என்ற நம்பிக்கையுடன் அஸ்ஸாம் தீவிரவாதிகளை சந்திக்கும் வேளையில் ஒரு காந்தீயவாதியையும் சந்திக்கிறீர்கள். அவரை அந்த சூழலுக்கு முற்றிலும் மாறான, காந்தீயத்தில் நம்பிக்கைகொண்ட ஒருவராக காண்கிறீர்கள் அப்படியான மனிதர்களை இன்றைய உலகில் காணமுடியுமா?**

முடியும். நிச்சயம் அப்படி இன்று பலர் இருக்கிறார்கள். தமிழ்நாட்டில் கூட, மார்க்சைப் படிப்பது போலக் காந்தியை திரும்பத் திரும்ப படித்துச் செயல்படுபவர்கள் இருக்கிறார்கள். உலகம் முழுவதும் இருக்கிறார்கள். தகவல் புரட்சியினால் நடந்தவை எல்லோரையும் விரைவில் சென்றடைந்து விடுவதற்கான வாய்ப்புகள் அதிகரித்துள்ளன. அடக்குமுறையை அமைதியாக எதிர் கொள்ளும் வாய்ப்புகள் அதிகரித்துக் கொண்டு வருகின்றன. காந்தியத்திற்கு எப்போதும் ஒரு இடம் இருக்கும் என்றே நினைக்கிறேன்.

**ஆனால் இன்றைய நிலையில் பாரதி சொன்ன கிருதயுகம் என்ற நிலை வருவதற்கான நம்பிக்கை இருப்பதாக தெரியவில்லையே!.**

முக்கியமான கேள்வி. நாம் நம்மைச் சுற்றி நடப்பவைகளை வைத்து உலகத்தை தீர்மானிக்கிறோம். அது ஒருவகையில் சரிதான். எனக்குத் தெரிந்ததை வைத்துத்தான் என்னால் மற்றவர்களை மதிப்பிட முடியும். ஆனால் எதிர்காலத்தில் வரலாற்றாசிரியர்கள் இன்றைய உலகத்தைப் பார்க்கும் போது, அதன் அசாதாரண அமைதியைப் பற்றித்தான் பேசுவார்கள். கடந்த நூறாண்டுகளில் நடந்து முடிந்த போர்களின் பின்னணியில் பார்க்கும் போது, இன்று நடக்கும் சண்டைகள் சிறிய வட்டங்களில் நடந்து முடிந்து விடுகின்றன. எனவே உலகம் அமைதியை நோக்கி முன்னேறுவதாக என்னால் சொல்ல முடியும்.

அமைதிக்கு மற்றொரு முக்கியமான காரணம் அணு ஆயுதங்களினால் நேரக் கூடிய அபாயங்களை உலக நாடுகள் நன்றாக அறிந்திருப்பதால்தான். பைத்தியக்காரர்கள் கையில் அவை கிடைத்தால் அணு யுத்தம் நடக்க வாய்ப்புகள் இருக்கின்றன என்பது உண்மை. அப்படி ஏதாவது நடந்தால் அதை ஒரு விபத்து என்றுதான் எடுத்துக்கொள்ள வேண்டும். ஏதும் செய்ய முடியாது. ஓர் எரிகோள் பூமியில் விழுந்து பூமியே இல்லாமலாகி விடக்கூடிய வாய்ப்பு இருப்பது போல. என்னைப் பொறுத்தவரை உலகம் அமைதியை நோக்கி முன்னேறுவதாகத்தான் நான் நினைக்கிறேன். அமெரிக்கா தனது மேலாண்மையை தக்க வைத்துக் கொள்ள எவ்வளவு முயன்றாலும் உலகம் அமைதியை நோக்கிச் செல்லும்.

**நம்பிக்கை சரி, ஆனால் நடைமுறையில் மக்கள் அழிக்கப்படுவது தொடர்ந்து கொண்டிருக்கிறது.**

நிச்சயமாக. உதாரணமாக முள்ளிவாய்க்கால் படுகொலைகள் நடந்த இடத்தில் நான் இதை சொல்ல முடியாது. ஆனால் நான் கூறுவது உலகம் முழுவதையும் கணக்கில் எடுத்துக் கொண்டு.

**மனிதருக்கு நிலத்தின் மீதான ஆசை தான் கலவரங்களுக்கு காரணம் என்பது உங்கள் கருத்து. வெறுமனே நிலத்தின் மீதான ஆசையை நீங்கள் வலியுறுத்துவதால் பெரும்பாலான இன்றைய கலவரங்களுக்கு காரணமான மொழி, மதம், பொருளாதார நலன்கள் என்பவற்றின் பங்களிப்பு எதுவாக இருக்கும் என்று கருதுகிறீர்கள்?**

நான் கலவரங்களுக்குக் காரணம் நிலமும் ஒன்று என்று தான் சொல்லியிருக்கிறேன். நிலம் மட்டும் என்று சொல்லவில்லை. உதாரணமாக அஸ்ஸாம் போராட்டம் இஸ்லாமியர்களுக்கு எதிராகத் துவங்கியது. ஆனால் அடிப்படைக் காரணம் நிலம்.

**நிலம் சார்ந்த கலவரங்களுக்கு தீர்வு இல்லை என்று கூறுகிறீர்கள். அப்படியானால் நிலம் சார்ந்து நடக்கும் போர்களுக்கு முடிவு என்ன?**

நாவலின் ஒரு பாத்திரம் அப்படி ஒரு கருத்தைச் சொல்கிறது. அதை நீங்கள் என்னுடைய கருத்தாகக் கொள்ளக் கூடாது. பொதுவாகச் சொல்ல வேண்டுமென்றால் நிலம் சார்ந்த கலவரத்திற்கான தீர்வு மிகவும் கடினமானது. நாம் நியாயமானது என நினைக்கும் தீர்வு ஒரு நாளும் வரப் போவதில்லை. அஸ்ஸாமிலும் சரி இந்தியத் துணைக் கண்டத்திலும் சரி நிலம் பற்றிய நமது எதிர்பார்ப்புக்களும் ஏமாற்றங்களும்தான் இன்றைய பிரச்சினைகளுக்கு காரணமாக இருக்கின்றன. இந்தியாவில் அகண்ட பாரதம் என்றால், பாகிஸ்தானில் தில்லிச் செங்கோட்டையில் எங்கள் கொடி பறக்கும் நாள் தொலைவில் இல்லை என்கிறார்கள். ஆனால் உலகம் முன்னேறும்

*தொடர்தல் 88ம் பக்கம்*

# தமிழில் முழுமை...

87ம் பக்கத் தொடர்ச்சி...

போது இருதரப்பினரும் அறிவு பெறலாம்..

இந்தியா, சீனா, ரஷ்யா, பிரேசில் மற்றும் அண்டைய நாடுகள் சேர்ந்த ஒரு கூட்டமைப்பு வருமானால் இத்தகைய தகராறுகள் குறைந்துவிடும். நாம் அதை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறோம் என்றுதான் நினைக்கிறேன். ஹிட்லர் நிலத்துக்காகத்தானே சண்டையிட்டார்? இனி ஐரோப்பாவில் அப்படி ஒரு சண்டை வராது. அவர்கள் அதற்கு ஒரு தீர்வைக் கண்டு விட்டார்கள். சின்ன சின்னச் சண்டைகள் வந்தாலும் பெரிதாக வரப்போவதில்லை. இப்போது ரஷ்யா, கிரிமியாவை இணைத்த போதும் கூட அது ஒரு பெரிய யுத்தத்திற்கு இட்டுச் செல்லவில்லை, இல்லையா?

**பொதுவாக நீங்கள் மார்க்சியத்தில் நம்பிக்கை கொண்டவர் என்ற முறையில், அமெரிக்க இரட்டைக் கோபுரத் தாக்குதலின் பின், ஆயுதப் போராட்டங்கள் சாத்தியமில்லை என்ற கருத்து வலுப்பெற்று வந்திருக்கிறது. அது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

ஆயுதப் போராட்டம் முழுவதுமாக நிறுத்தப்படும் என்று நான் நினைக்கவில்லை. அதற்கான தேவைகள் இருந்து கொண்டுதான் இருக்கும். ஆனால் ஆயுதப்போராட்டமின்றி சமாதானமாக பிரச்சினைகளை தீர்ப்பதற்கான ஒரு வெளியும் எப்போதும் இருந்து கொண்டிருக்கும். அதைத்தான் காந்தி கொண்டுவந்தார்.

**திரும்பவும் இலக்கியத்திற்கு வருவோம். உங்களது படைப்புக்களில் நகைச்சுவை உணர்வு அதிகமாக இருக்கிறது. இவை பாத்திரங்களை சிதைக்கும் என்று நீங்கள் கருதவில்லையா?**

எல்லாப் பாத்திரங்களும் அப்படி இருப்பதாக நான் நினைக்கவில்லை.ஆனால் எல்லாப் பாத்திரங்களுமே புத்திசாதுரியமாக பேசுகிறார்களே என்ற விமர்சனம் இருக்கிறது. வாழ்க்கையின் பல பிரச்சினைகள் எதிர் கொள்வதற்கு நகைச்சுவை அவசியம் என நான் நினைக்கிறேன்.

**மூன்றாவது நாவல் ஒன்றை எழுதிக்கொண்டிருப்பதாக கேள்விப்படுகிறேன். அதைப்பற்றிக் கொஞ்சம் சொல்வீர்களா?**

ஆம். அது கடந்த மூன்று வருடங்களாக... இன்னமும் தொடக்க நிலையிலேயே இருக்கிறது! 18ம் நுற்றாண்டின் இறுதியிலும் 19ம் நுற்றாண்டின் தொடக்கத்திலும் தமிழகத்தில் மட்டுமல்ல தென்னிந்தியாவிலும் பெரிய மாற்றங்கள் ஏற்பட்டன. நாலாவது மைசூர் யுத்தத்தில் திப்பு சுல்தான் தோற்கடிக்கப்படுகிறார். அந்தச் சந்தர்ப்பத்தில் இந்தியாவில் இருந்த வெளிநாட்டுப் பாத்திரங்களைப் பார்த்தீர்கள் என்றால் எல்லோரும் சர்வதேசப் பாத்திரங்கள். அந்த யுத்தத்திற்குத் தலைமை தாங்கிய கார்வாலிஸ் பிரபு அமெரிக்கச் சுதந்திரப் போராட்டத்தில் பிரிட்டன் சார்பில் சண்டையிட்டவர். திப்புவை எதிர்த்துப் போரிட்டவர்களில் ஆர்தர் வெல்லெஸ்லி ஒருவர். இவர்தான் 1815ல் நெப்போலியனை வாட்டர்லூ போரில் வெற்றி கொண்டவர். ஆக, அந்த நாளில் இங்கிலாந்தின் தரப்பில் இருந்த தலைவர்கள் பல நாடுகளில் சண்டையிட்டவர்கள். அவர்களுக்கு வரலாறு பற்றி ஒரு நல்ல புரிதல் இருந்தது. இங்கிருந்து சண்டை போட்டவர்களுக்கு வரலாறு பற்றி எதுவும் தெரியாது. உலகம் எங்கே போய்க் கொண்டிருக்கிறது என்ற புரிதல் கிடையாது. திப்பு சுல்தானுக்கு ஓரளவு புரிதல் இருந்தது. மருதுபாண்டியர்களுக்கும் ஊமைத்துரைக்கும் இருந்தது. ஆயினும் அவர்களுக்கும் என்ன செய்யவேண்டும் என்பது பற்றிய தெளிவு இருந்திருக்கவில்லை. நடந்த போராட்டம் ஒரு உலகளாவிய ஒரு பெரிய சக்திக்கும் உள்ளூர் சக்திக்கும் இடையில் நடந்த போராட்டம். அதில் மக்களும் கலந்து கொள்கிறார்கள். அந்தப் போராட்டம் எப்படி நடந்தது, அன்றைய சமூகம் அதை எப்படி எதிர் கொண்டது என்பதெல்லாம் பதிவாகி இருக்கின்றன. இவற்றையெல்லாம் அடிப்படையாகக் கொண்டு நாவலை எழுத விரும்புகிறேன்..

**அதையும் முதலில் ஆங்கிலத்தில் தான் எழுதுவீர்களா?**

இரண்டிலும் எழுதுவேன்.



> தமிழைப் பொறுத்தவரை ஒரு முழுமையான நாவலாக எதுவும் வந்ததாக எனக்குத் தெரியவில்லை. நாவல் இலக்கியத்தில் நாம் இன்னும் நீண்ட தூரம் போக வேண்டும் என்று நினைக்கிறேன்.

**உங்கள் நாவல்கள் தமிழிலா ஆங்கிலத்திலா அதிகளவில் வாசகர்களைச் சென்றடைந்திருக்கிறது?**

ஆங்கிலத்தில் உலகம் முழுவதும் பரவலாகப் போயிருக்கிறது. ஆனால் ஆங்கிலத்தில் எழுதுவது கடலில் உப்பைக் கரைப்பது போல. தமிழில் அப்படி இல்லை. ஆங்கிலத்தில் என்னைப் போன்று பல எழுத்தாளர்கள் இருப்பார்கள். இந்த இரண்டு நாவல்கள் தொடர்பாக ஆங்கிலத்தில் படித்தவர்கள் கடிதங்கள் எழுதிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் தமிழர்கள் தரும் வரவேற்புதான் எனக்கு உற்சாகத்தைத்தருகிறது!

**ஒரு தடவை 'நூல் ஆசிரியர்களை விட அவர்களின் நூல்களை நான் அதிகம் விரும்புகிறேன். நேரில் சந்திக்கும்போது அவர்கள் ஏமாற்றம் அளிக்கிறார்கள் என்று கூறியுள்ளீர்கள். ஆனால் டெல்லியிலுள்ள எழுத்தாளர்கள் அவ்வளவு ஏமாற்றம் அளிப்பவர்களாக இல்லை என்று நினைக்கிறேன்...**

ஆம்.. இப்போது எனக்குப் பலருடன் நெருக்கமான நட்பு இருக்கிறது. எனக்கு எழுத்தாளர்களை நெருங்குவதில் உள்ள தயக்கத்துக்கு காரணம் தனிப்பட்ட முறையிலான பயம்தான்! அதனால் நெருங்கிப் போவதை அவ்வளவாக விரும்பவில்லை.

**உங்களது இலக்கிய மதிப்பீட்டின்படி உங்களுக்கு ஏமாற்றம் அளிக்காத படைப்பாளிகளாக யார்யாரைச் சொல்லுவீர்கள்?**

தமிழைப் பொறுத்தவரை ஒரு முழுமையான நாவலாக எதுவும் வந்ததாக எனக்குத் தெரியவில்லை. நாவல் இலக்கியத்தில் நாம் இன்னும் நீண்ட தூரம் போக வேண்டும் என்று நினைக்கிறேன். நல்ல நாவல்கள் நிறைய வந்திருக்கின்றன. ஆனால் மிகச் சிறந்த, உலகத்தரம் வாய்ந்த நாவல் என்று எதுவும் வரவில்லை. தமிழில் மிகச் சிறந்த பல சிறுகதைகள் வந்துள்ளன. இன்றைய எழுத்தாளர்களில் தமிழகத்தின் சொத்து என்றால் நிச்சயமாக ஜெயமோகனைத்தான் சொல்லவேண்டும். அவரால் நிறைய இளைஞர்களும் எழுதத் தொடங்கியிருக்கிறார்கள்.

**அவரது கலை இலக்கிய மதிப்பீடுகள் தொடர்பாக உங்கள் பார்வை என்ன?**

அவருடைய பல மதிப்பீடுகள் மீது எனக்கு உடன்பாடு கிடையாது. ஆனால் அவர் எதை எழுதினாலும் வெளிப்படையாக எழுதுகிறார். அதை எதிர்த்து நீங்கள் சொன்னால் அதை உள்வாங்கிக் கொள்கிறார். நீங்கள் எந்த நிலையிலிருந்து பேசுகிறீர்கள் என்பதை அவர் புரிந்துகொள்ள முயல்கிறார். தமிழ் நாட்டில் அவர் என்ன சொல்கிறார் என்பதைப் புரிந்து கொள்ளாமலே அவர் மீது வசை பாட ஆரம்பித்து விடுகிறார்கள். அவரது குலம் என்ன கோத்திரம் என்ன என்று பேச ஆரம்பித்து விடுகிறார்கள்.

எனக்கு நடந்ததைச் சொல்கிறேன். சு.ராவின் 'குழந்தைகள் பெண்கள் ஆண்கள்' நாவல் பிடிக்கவில்லை என்று ஜெயமோகன் சொன்னார். ஆனால் எனக்குப் பிடித்திருந்தது. ஏன் என்று கேட்டார். காரணங்களைக் கொடுத்தேன். விவாதம் முடிந்துவிட்டது, இதற்காக அவரை நானோ என்னை அவரோ ஜென்ம வைரியாகப்பார்க்கவில்லை.

**தமிழ் நாட்டில் இப்போதெல்லாம் சக படைப்பாளியின் படைப்பை விமர்சிப்பது என்பதே அருகிப்போய் விட்டதாக நீங்கள் நினைக்கவில்லையா?**

நிச்சயமாக... அருகிப்போய்விட்டது. ஆதனால் தான் அவர் முக்கியம் என்று நினைக்கிறேன். அவர் நிறையத் தவறான விமர்சனங்களைச் செய்கின்றபோதும், அவர் முக்கியம். தமிழகத்தில் விமர்சனத்தை எதிர் கொள்ளும் சக்தி இல்லை. அதற்கு முக்கியமான காரணம் தமிழ்நாட்டில் எந்தப் பத்திரிகையும் விமர்சனத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை.' நன்றாக எழுதியிருக்கிறார்.. எல்லோரும் வாங்கிப் படியுங்கள்' என்ற தரத்தில்தான் விமர்சனங்கள் இருக்கின்றன. அரசியல் சார்ந்த விமர்சனங்கள் வருகின்றன. அவை இலக்கிய விமர்சனங்கள் அல்ல.

**அண்மையில் புதுமைப்பித்தனின் 'பொன்னகரம்', 'துன்பக்கேணி' ஆகிய சிறுகதைகள் ஒரு கல்லூரிப் பாடத்திட்டத்திலிருந்து அகற்றப் பட்டதை கேள்விப்பட்டிருப்பீர்கள். இந்தப் போக்கு என்ன விளைவை ஏற்படுத்தும்?**

எதிர்ப்புக்கள் காரணமாக இந்தக் கதைகள் திரும்பச் சேர்த்துக் கொள்ளப்பட்டு விட்டன. ஆனால் மற்றொரு கதை அகற்றப்படலாம். இலக்கியத்தைப் பற்றிய புரிதலே இல்லாதவர்கள் பல்கலைக் கழகங்களில் அதிகாரம் செலுத்தும் வரை இத்தகைய கூத்துக்கள் நடந்து கொண்டே இருக்கும்.. உலகம் முழுவதும் நடக்கும். தமிழகம் அசாதாரணமானது. இங்கு அதிகம் நடக்கும்.

**சாதியை அடிப்படையாக வைத்து படைப்பை விமர்சித்தல்...**

குழுக்கள் மூட்டிய தீயில் குளிர் காய்பவர்கள் தொடர்ந்து இதைச் செய்து கொண்டு வருகிறார்கள். ஆனால் வாசகர்கள் படைப்புகளை இத்தகைய மதிப்பீடுகளை வைத்து அளவிடுவதில்லை.

**இப்போது அசோகமித்திரன் பற்றி... அவரது எழுத்துக்களில் பிராமணக் கூறுகள் இருப்பதாக சொல்லப்படுவது பற்றி...**


அவர் பிறப்பால் பிராமணர். பிரமாணச் சூழலில் வளர்ந்தவர். அவரது நாவல்களில் பிராமணக் கூறுகள் இருக்கத்தான் செய்யும். அவரைத் தாண்டி அவர் என்ன சொல்கிறார், அவர் காட்டும் உலகில் பிராமணர்களைத் தவிர மற்றவர்கள் எவ்வாறு இயங்குகிறார்கள், அவர்கள் நேர்மையாகப் படைக்கப்பட்டிருக்கிறார்களா போன்ற கேள்விகளையே ஒரு தேர்ந்த விமரிசகன் எழுப்பிப் பதில் தேடுவான்.

**இன்று 'அடையாள இலக்கியம்' தமிழ் நாட்டில் உருவாகியிருப்பதும் மதிப்பீடு செய்வது பற்றியும் என்ன சொல்கிறீர்கள்?**

அவ்வாறு உருவாவதும், மதிப்பீடு செய்யப்படுவதும், அவசியம். காலத்தின் தேவை. ஆனால் அடையாள இலக்கியமாக படைக்கப்பட்ட நாவல் காலத்தைக் கடந்து நிற்குமா அல்லது ஓர் ஆவணமாகப் பின் தள்ளப்படுமா என்பதை அதன் அடையாளம் தீர்மானிக்காது. அதன் தரம் தீர்மானிக்கும்.

**தாய்வீடு பற்றி...**

தாய்வீடு பத்திரிகையின் சில இதழ்களைப் படிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. செய்வதைச் செவ்வனே செய்யும்கலை உங்களுக்கு ஆகி வந்திருக்கிறது. தமிழ் பேசும் உலகத்தின் குரல் உங்கள் பத்திரிகை வாயிலாக ஒலித்துக் கொண்டே இருக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. தாய்வீட்டிற்கு எனது வாழ்த்துகள்.



pushparajan.m@thaiveedu.com

## நலம் நாடுவதும் அதுவே

உங்கள் மாற்றத்தின் மாற்றத்திற்கு
என்னை அழையுங்கள்



வீடு
வியாபார நிலையங்கள்

வாங்க
விற்க

HOMELIFE
HIGHER STANDARDS

No credit
Bad credit
No Problem

## Kathir

Buy or Sell call 24-7

Subramaniam Kathirgamanathan P.Eng.
HomeLife GTA Realty Inc. Brokerage.

**Cell: 416 856 6900**
kathirhomes@gmail.com

Bus:416 321 6969
Fax:416 321 6963

## Ceycan Transcontinental Shipping Inc.

*Sole agents for Ceylon Shipping Lines in Canada*




For further information contact
**Kumar @ 905 673 9873**

SRI LANKA'S
BEST CLEARING FACILITIES IN
COLOMBO, KANDY & BATTICALOA

Vancouver : Randy - 604 273 4911 / Edmonton, Calgary : Desmond 780 918 2501
Montreal : Gana - 514 573 0093 / Ottawa : Ignetius (Iggy) - 613 799 3519

INTERNATIONAL OFFICES :

**United Kingdom**
Transcontinental Shipping
Ashley House, 235 High Road
Suite 412, Woodgreen, London
Tel: 0208 889 8486

**Colombo**
Ceylon Shipping Lines Ltd.
760, Dr. Danister De Silva Mawatha
Colombo - 09
Tel: (011) 2680301 - 308

**Kandy**
Ceylon Shipping Lines
175 Paranagantota Road,
Mawilmada, Kandy
Tel: (812) 234356/57/59

**Batticaloa**
Ceylon Shipping Lines Ltd.
134 Main Street
Addalaichenai - 09
Tel: (067) 2277302

1981 Boylen Road, Unit #5, Mississauga, Ontario L5S 1R9
Email : ceycantrans@gmail.com web: ceycantranship.com




# இதயங்களை வெல்வோம்!
# இலக்கை அடைவோம்!

ELECT

# RAJ

## SUBRAMANIAM P.ENG.

**WARD 5 COUNCILLOR**
**TOWN OF MARKHAM**




- No to tax increase
- Enhance local employment
- Transparent & accountable governance
- Improved public transit & traffic infrastructure
- Protection of green space & preserving heritage sites

- வரி அதிகரிப்பு இல்லை
- உள்ளூர் தொழில் வாய்ப்பை உறுதிப்படுத்தல்
- வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்பு கூறும் ஆட்சி
- மேம்படுத்தப்பட்ட பொதுப் போக்குவரத்து மற்றும் உட்கட்டுமானங்கள்
- பசுமை பரப்பு மற்றும் மரபுரிமை இடங்களை பேணிப் பாதுகாத்தல்

FOR MORE INFO:

**289-800-7605**

raj@raj2014.ca

www.raj2014.ca

Raj graduated from Carleton University with an Engineering degree in 1998, and in 2003 obtained his Professional Engineering license. He has been working in the corporate world for more than 17 years and has been involved with a multitude of industries including manufacturing, telecommunication, software consulting firms, financial companies, as well as government.
He is a community activist for social & economic development and Markham resident for last 10 years. He is your next door neighbour in Ward 5 and will advocate for enhancing Markham living for all. His goal as a councillor is to build Markham as the place for our children, family members & seniors to shine.




இது ஒரு கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரம்

# உள்நாட்டுச் சமாதானம்

## - சினுவா ஆச்செபெ -

### தமிழில்: என்.கே. மகாலிங்கம்



சினுவா ஆச்செபெ 1930-2013. நைஜீரியா நாவலாசிரியர், சிறுகதை எழுத்தாளர், கவிஞர், விமர்சகர். இவர் ஈபோ இனத்தைச் சேர்ந்தவர். நைஜீரியாவின் தென்கிழக்கு மாநிலமான அன்அம்ராவில் பிறந்தவர். நைஜீரியா உள்நாட்டுப் போரில் ஈபோக்களுக்கான தனிநாடாக பியஃப்ரா பிரகடனப்படுத்தப்பட்டபோது அதில் இணைந்து செயற்பட்டவர். ஆபிரிக்காவின் முன்னோடி எழுத்தாளர். ஆபிரிக்காவின் வாய்மொழிக் கதைசொல்லல் மரபையும் காலனித்து ஆங்கில மொழியையும் உள்வாங்கி மிகத் திறமையாக ஆங்கிலத்திலேயே கதை சொல்லும் ஆற்றல் பெற்றவர். ஆபிரிக்க இலக்கியத் துக்கெனத் தனித்துவமான, சிறப்பான கலை, பண்பாடு, நாகரிகம் இருக்கின்றன என்பதை பெருமையுடன் காட்டியவர். இவருடைய நாவலான 'Things Fall Apart' – தமிழில் சிதைவுகள் என்ற பெயரில் மொழியாக்கம் பெற்றுள்ளது. அந்த நாவலே நவீன ஆபிரிக்க நாவலில் அதிகம் வாசிக்கப்பட்ட நாவல். அதுவொரு செவ்வியலாக இப்பொழுது கணிக்கப்படுகிறது. அந்த நாவலை விட, அவர் 'No Longer at Ease' – வீழ்ச்சி என்று தமிழில் மொழியாக்கம் பெற்றுள்ளது, 'Arrow of God', 'A Man of the People', 'Anthill of the Savannah' என்ற நாவல்களையும் எழுதியுள்ளார். இவர் 'மான் புக்கர்' பரிசு போன்ற பல பரிசுகளைப் பெற்றவர்.)



ஜொனாதன் இவெக்பு, தான் மிகவும் அதிர்ஷ்டம் செய்தவன் என்று நினைத்துக் கொண்டான். 'உயிர் பிழைத்திருந்தமைக்கு நல் வாழ்த்துக்கள்!' என்பது சமாதானம் வந்த அந்தக் குழப்பமான ஆரம்ப நாட்களில் அவனுடைய பழைய நண்பர்களுக்குச் சொல்லும் புதுப்பாணி வாழ்த்துக்கள் என்பதிலும் பார்க்க, தனிப்பட்டரீதியில் அவனுக்கு அதுவொரு பெரிய விஷயம். அந்த வாழ்த்துக்கள் அவனுடைய நெஞ்சில் ஆழமாகப் பதிந்திருந்தன. யுத்தத்திலிருந்து விலைமதிப்பற்ற ஐந்து ஆசிர்வாதங்களைப் பெற்று அவன் தப்பிப் பிழைத்திருந்தான். அவனுடைய தலை, அவனுடைய மனைவியின் தலை, அவனுடைய நான்கு பிள்ளைகளில் மூன்று பேர் என்று பிழைத்திருந்தார்கள். உபரியாக அவனுடைய பழைய சைக்கிளும் தப்பி விட்டது. அதுவுமொரு அதிசயம் தான். ஆனால் ஐந்து உயிர்கள் பாதுகாக்கப்பட்டதை அதனுடன் ஒப்பிட முடியாது.

சைக்கிளுக்கென்று ஒரு தனி வரலாறு இருக்கிறது. போரின் உச்சத்தில் ஒருநாள் 'அவசரமான இராணுவ நடவடிக்கைக்காக' சைக்கிள்களைக் கைப்பற்றும்படி ஆணை பிறப்பிக்கப்பட்டது. அதன் இழப்பு அவனுக்கு பெரிதாக இருந்தபோதும், அந்த அதிகாரியின் நேர்மையில் சந்தேகம் கொண்டிருக்காவிட்டால் அவன் ஒன்றையுமே யோசிக்காமல் அதைக் கொடுத்திருப்பான். அந்த அதிகாரி அணிந்திருந்த கந்தல் உடையோ அவன் ஒரு காலில் அணிந்திருந்த நீல நிற கன்வஸ் சப்பாத்தோ, அல்லது மற்றக் காலில் அணிந்திருந்த பழுப்பு நிற கன்வஸ் சப்பாத்தால் வெளியே தெரிந்த கால்விரல்களோ அவசரம் அவசரமாக தன் சட்டையில் பைரவோல் - பேனையால் கீறியிருந்த இராணுவத்தின் தர வரிசையைக் குறிக்கும் இரு நட்சத்திரக் குறியோ அல்ல, ஜொனாதனை தொந்தரவு பண்ணியது. அப்படி அணிந்த, அல்லது அதிலும் பார்க்க மோசமாக உடையணிந்த, நல்ல, வீரதீரச் செயல்கள் செய்த பல படைவீரர்களையும் அவனுக்குத் தெரியும். பிடிமானமோ உறுதியோ அற்ற பக்குவமின்மைதான் ஜொனாதனுக்குப் பிடிக்காத விஷயம். அதனால் ஜொனாதன் என்ன செய்தான் என்றால் அவ்விடத்தில் கூடாரம் அடித்து இருந்த படையதிகாரிகளுக்கு அவனுடைய மனைவி மேலதிகமாகக் கொஞ்ச மீனும், சோளவுணவும் விற்றுக் கிடைத்த இரண்டு பவுண் பணத்தை, அதை அவள் விறகு வாங்க வைத்திருந்தாள் அவனுக்கு இலஞ்சமாகக் கொடுத்து தன்னுடைய சைக்கிளைத் திரும்பப் பெற்றுக் கொண்டான். சிறிய காட்டைத் துப்புரவாக்கி கூடாரத்தில் இருந்து இறந்த படையினரைப் புதைத்திருந்தனர். அன்றிரவு ஓரிடத்தில் அந்தச் சைக்கிளைப் புதைத்து வைத்தான். அந்த இடத்தில் தான் அவனுடைய இளைய மகனும் புதைக்கப்பட்டிருந்தான். படையினர் சரணடைந்த ஒரு வருஷத்தின் பின் அவ்விடத்தைத் திரும்பவும் தோண்டி அதை எடுத்தான். அதை இயக்குவதற்கு தெங்கெண்ணைப் பசைப் போட்டால் மட்டும் போதுமானதாக இருந்தது. 'கடவுளை எதுவுமே வியப்பளிக்காது' என்று அதைப் பிரமிப்புடன் கொண்டான்.

அதை உடனடியாக வாடகை வண்டியாக ஓட விட்டான். கூடார அதிகாரிகளையும், அவர்கள் குடும்பங்களையும் நாலு மைல் தூரத்தே இருந்த தார் போட்ட தெருவுக்கு ஏற்றி இறக்கி பியாஃபரன் பணம் கொஞ்சம் சேகரித்தான். ஒவ்வொரு பயணத்திற்கும் அவனுடைய பொதுவான கட்டணம் ஆறு பவுண்கள். பணம் உள்ளவர்கள் அதைக் கொடுத்து விடத் தயங்குவதில்லை. இரண்டு கிழமை முடிவில் அவன் நூற்றுப் பதினைந்து பவுண் சேகரித்து விட்டான். அவனைப் பொறுத்தவரையில் அதுவொரு சிறியதொரு செல்வம்.

அதன் பின் அவன் எனுகு என்ற இடத்திற்குச் சென்றான். அவ்விடத்தில் அவனுக்கு இன்னொரு அற்புதம் காத்துக் கொண்டிருந்தது. நம்ப முடியாததொன்று அது. தன்னுடைய கண்களைத் துடைத்துக் கொண்டு அதைத் திரும்பவும் பார்த்தான். அவன் முன்னால் அது இன்னும் நின்று கொண்டிருந்தது. ஆனால், சொல்லாமலே, அந்தப் பெரிய பாக்கியம் கூட குடும்பத்தில் தப்பிய அந்த ஐந்து தலைகளிலும் பார்க்க மிகவும் கீழானது என்றுதான் சொல்ல வேண்டும். இந்தப் புத்தம் புதிய அதிசயம் ஒகுப் ஓவர் சைட் என்ற இடத்திலிருந்த அவனுடைய சின்னஞ் சிறிய வீடு தான். உண்மையில் கடவுளுக்கு எதுவுமே வியப்பளிப்பதில்லை!

போர் தொடங்குவதற்குச் சிறிது காலத்திற்கு முன்னர், இரண்டு வீடுகளுக்கு அப்பால் ஒரு செல்வந்தன் கொங்கிறீற்றால் கட்டியிருந்த மிகப் பெரியதொரு மாளிகை ஒரு மலை போல கற்குவியலாகக் கிடந்தது. ஆனால் இங்கே ஜொனாதனின் துத்த நாகத் தகரத்தாலும் களிமண் தூண்களாலும் கட்டியிருந்த சிறிய வீடு அப்படியே உடையாமல் இருந்தது! ஆனால் கதவுகளும் யன்னல்களும், ஐந்து கூரைத் தகரங்களும் மட்டும் காணாமல் போய் இருந்தன. அவை அத்தனை பெரியவையா? இன்னும் ஆயிரக் கணக்கானவர்கள் தங்கள் காட்டுப் பகுதிகளிலிருந்து எனுகுவுக்கு வருவதற்கு முன்பே நேர காலத்துடன் வந்து அக்கம் பக்கத்தில் கிடந்த பழைய துத்த நாகத் தகரங்களையும் நனைந்து போய்க் கிடந்த கடதாசி மட்டைகளையும் அவர்கள் பொறுக்குவதற்கு முதலே இவன் பொறுக்கி எடுத்துக் கொண்டான். ஒரு பழைய சுத்தியலையும் மழுங்கிய சீவுளியையும் கறள் பிடித்த சில ஆணிகளையும் தன்னுடைய பழைய ஆயுதப் பைக்குள் வைத்திருந்த ஏழைத் தச்சன் ஒருவனை கண்டு பிடித்து, அவனுக்கு ஐந்து நைஜீரியன் ஷிலிங் அல்லது ஐம்பது பியாஃபிரன் பவுண்களைக் கொடுத்து, தன்னிடம் இருந்த பலகைகள், கடதாசி மட்டைகள், உலோகங்களையும் கொடுத்து கதவுகளையும் யன்னல்களையும் செய்யச் செய்தான். அந்த ஐந்து பவுண்களைக் கொடுத்து விட்டு, பெரும் மகிழ்ச்சியடைந்திருந்த தன்னுடைய குடும்பத்துடன் அங்கே குடியேறினான்.

அவனுடைய பிள்ளைகள் இராணுவ இடுகாட்டிலிருந்த மாமரங்களிலிருந்து மாங்கனிகளைப் பறித்து படையினரின் மனைவிமாருக்கு சில பென்னிக் காசுகளுக்கு விற்றார்கள். அந்தக் காசுகள் உண்மையான காசுகள். அவனுடைய மனைவி அவசரம் அவசரமாக காலை உணவான அகரா அவரை உருண்டைகளைச் தெங்கெண்ணையில் பொரித்துச் செய்யும் பலகாரம் செய்து அயலவருக்குக் கொடுத்தாள். திரும்பவும் வாழ்க்கை திரும்பியது. அவனுடைய குடும்பம் ஈட்டிய வருமானத்துடன் தன்னுடைய சைக்கிளை எடுத்துக் கொண்டு கிராமங்களுக்குச் சென்று புதிய தெங்கெண்ணை வாங்கி வந்தான். அண்மையில் தான் கீழ்த் தெருவிலிருந்த பொதுக் குழாய்களில் தண்ணீர் வரத் தொடங்கியிருந்தது வாங்கி வந்த தெங்குக் கள்ளை தன்னுடைய அறையில் வைத்து அதில் தாராளமாகத் தண்ணீர் கலந்தான். அதன் பிறகு படையினருக்கும், நல்ல பணம் கையில் வைத்திருந்த அதிர்ஷ்டக்கார மக்களுக்குமாக ஒரு மதுவகத்தைத் திறந்தான்.

அங்கே என்ன நடக்கிறது என்று பார்ப்பதற்காக சுரங்கத் தொழிலாளியாக அவன் வேலை செய்த நிலக்கரி கூட்டுத்தாபனப் பணிமனைக்கு முதலில் ஒவ்வொரு நாளும் சென்றான். பிறகு ஒன்று விட்டு ஒருநாள் சென்றான். பிறகு ஒரு கிழமைக்கு ஒரு தரம் சென்றான். இறுதியில் தன்னிடமுள்ள சிறிய வீடே அவன் நினைத்ததிலும் பார்க்க பெரியதொரு வரம் என்று அவனை நினைக்க வைத்தது. அவனுடன் வேலைபார்த்த சக சுரங்கத் தொழிலாளிகள் அங்கு முழு நாளும் காத்திருந்த பின்னர் போவதற்கு வேறொரு இடமும் கிடைக்காமல் பணிமனைகளின் கதவுக்கு வெளியே தூங்கினார்கள். போன்விற்றா பேணிகளில் தங்களால் சேகரிக்க முடிந்த பொருட்களைக் கொண்டு சமைத்துச் சாப்பிட்டார்கள். கிழமைகள் செல்லச் செல்ல ஜொனாதன் கிழமைக்கொரு தரம் அங்கே செல்வதையும் முற்றாகக் கைவிட்டு தெங்குக் கள்ளு மதுவகத்திலேயே இருந்து கொண்டான். அது ஏன் என்று இன்னும் ஒருவராலும் சொல்ல முடியவில்லை.

கடவுளுக்கு எதுவுமே வியப்பளிக்காது. திறைசேரிக்கு வெளியே ஐந்து நாட்கள் வெயிலில் வரிசைகளிலும் எதிர் வரிசைகளிலும் நின்று முடிவில்லாமல் இழுபறிப்பட்ட பின் வந்தது, எதிர்பாராத ஒரு பேரதிர்ஷ்டம். அதாவது கலகக்காரரின் பணத்தைத் திருப்பிக் கொடுத்ததற்காக அவனுடைய கைக்குள் இருபது பவுண் பணம் கருணை மானியமாக அவன் கைக்குள் வைக்கப்பட்டது. அவனுக்கும் அவனைப் போன்றவர்களுக்கும் அந்தத் தொகை கிடைத்தது கிறிஸ்மஸ் போல இருந்தது. அதை அவர்கள் எக்றாசர் என்றே அழைத்தனர். ஏனென்றால் எக்ஸ்கிறாஸியா என்ற முறையான அதிகாரபூர்வமான பெயரை

தொடர்தல் 92ம் பக்கம்

# உள்நாட்டுச் சமா...

91ம் பக்கத் தொடர்ச்சி...

அவர்களால் உச்சரிக்க முடியவில்லை.

அந்தப் பவுண் தாள்கள் அவனுடைய கைக்குள் வைக்கப்பட்டதுமே ஜொனாதன் கையை இறுக்கமாகப் பொத்திப் பிடித்துக் கொண்டு, முஷ்டியையும் பணத்தையும் காற்சட்டைப் பைக்குள் புதைத்துக் கொண்டான். அவன் மிகக் கவனமாக இருக்க வேண்டியிருந்தது. ஏனெனில் இரண்டு நாட்களுக்கு முன்பு ஒருத்தன் இருபது பவுண் பணத்தை வாங்கியவுடனே இன்னொரு இதயமற்ற போக்கிரி ஒருவன் அவனிடமிருந்து அதைப் பறித்துக் கொண்டான். பறிகொடுத்தவன் மாகடல் போன்ற அந்த மக்கள் வெள்ளத்தின் முன் ஒரு கணத்திலேயே பித்துப் பிடித்தவன் போல சோர்ந்து விழுந்து விட்டான். ஒருத்தன் உச்ச வேதனையில் விழுந்து கிடக்கும் போது அவனைக் குறைகூறுவது சரியல்ல. ஆனாலும் அன்று வரிசைகளில் நின்ற பலர் அவனுடைய கவனயீனத்தை மெதுவாகக் குத்திக் காட்டினர். அதுவும் விசேசமாக, அவன் தன்னுடைய காற்சட்டைப் பையை வெளியே இழுத்து கள்வன் ஒருவனின் தலையே அதற்குள் போகக் கூடிய அதிலிருந்த பெரிய ஓட்டையைக் காட்டியபோதுதான் அப்படிச் சொன்னார்கள். ஆனால் பணம் மற்றப் பைக்குள் தான் இருந்தது என்று சொல்லி அதையும் வெளியே இழுத்துக் காட்டினான். அந்தப் பையும் மற்றப் பையுடன் ஒப்பிடும்போது ஓட்டைகள் அதிகம் எதுவும் இல்லை. அதையும் காட்டி பணத்தை யாரோ திருடி விட்டார்கள் வலியுறுத்திச் சொன்னான். ஆகவே ஒருவன் பணத்தைப் பொறுத்தளவில் மிகக் கவனமாக இருக்க வேண்டும்.

ஏதாவது ஒருவர் கையைக் குலுக்குவதற்காகத் தந்து விடப் போகிறார்கள் என்று நினைத்து, வலது கையிலிருந்த பணத்தைத் தன்னுடைய இடது கைக்கு மாற்றி இடது பைக்குள் வைத்துக் கொண்டான். ஆனால் அந்தத் தேவை வராமல் இருப்பதற்காக, அவனை நோக்கிய கண்களுக்கு மேலாக தன் பார்வையை உயரமாக வைத்து எல்லோருடைய கண்களையும் விலக்கிக் கொண்டு வீடுவரை வந்தான்.

இயல்பாகவே அயர்ந்து தூங்கக் கூடியவன், அவன். ஆனால் அன்றிரவு அயலில் நடக்கும் எல்லாச் சத்தங்களுமே ஒன்றன் பின் ஒன்றாகக் குறைந்து கொண்டு போவது அவனுக்குக் கேட்டன. தூரத்தே ஏதோ உலோகத்தில் ஒவ்வொரு மணித்தியாலமும் இரவு காவல்காரன் தட்டும் சத்தம் கூட ஒரு மணிக்குப் பிறகு அமைதியாகி விட்டது. இறுதியில் அவன் துயில்வதற்கு முன்பு மனதில் வந்த கடைசி எண்ணமாகவும் அதுதான் இருக்க வேண்டும். ஏனென்றால், அவனைத் திரும்பவும் சடுதியாக யாரோ எழுப்பியபோது அவன் அத்தனை தூரம் ஆழ்ந்து தூங்கி இருக்க முடியாது.

'யார் தட்டுவது?' என்றாள் அவனுக்குப் பக்கத்தில் நிலத்தில் படுத்திருந்த அவனுடைய மனைவி.

'எனக்குத் தெரியாது,' என்று மெதுவாகக் குசுகுசுத்தான் அவன்.

இரண்டாம் முறை தட்டிக்கேட்டபோது பெரும் சத்தமாகவும் அதிகார தோரணையுடனும் லொடலொடத்த கதவு விழுந்து விடுமாப்போலவும் அது இருந்தது.

'யார் தட்டுவது?' என்று சொன்னபோது அவனுடைய குரல் வரண்டு, நடுங்கியது.

வந்தவர்கள் கொச்சையான பிஜின் மொழியில், 'கள்ளனும் அவனுடைய ஆட்களும். நீ கதவைத் திறக்கப் போகிறாயா, இல்லையா?' என்றது அந்தக் குரல் அமைதியாக. அதைத் தொடர்ந்து மிகப் பலமான சத்தத்துடன் கதவு தட்டப்படுவது கேட்டது.

மரியா தான் முதன் முதலில் சத்தம் போட்டாள். அதன் பிறகு அவனும் பிள்ளைகளும் சத்தம் போட்டார்கள்.

*'பொலிஸ்! கள்ளர்! அயலவர்கள்! பொலிஸ்! நாங்க தொலைஞ்சம். நாங்க செத்தம்! அயலவர்களே நீங்க நித்திரை கொள்றீங்களா? எழும்புங்க, பொலிஸ்!'*

'முடிஞ்சுதா?' வெளியிலே கேட்ட குரல். 'உங்களுக்கு நாங்க ஏதாவது உதவி செய்ய வேணுமா? சரி சரி. எல்லாரும்!' என்று கேட்டது வெளியே இருந்த குரல்.

*'பொலிஸ்! கள்ளன்! அயலவர்களே! நாங்க முடிஞ்சம்! பொலிஸ்!..'*

தலைவனைத் தவிர குறைந்தது ஐந்து குரல்கள் அங்கே கேட்டன.

ஜொனாதனும் அவனுடைய குடும்பமும் கிலியால் முழுமையாக முடங்கிப் போனார்கள். மரியாவும் குழந்தைகளும் காணாமல் போன ஆன்மாக்கள் போல மற்றவர்களுக்கு கேட்காத அளவு விம்மி விம்மி அழுதார்கள். ஜொனாதன் தொடர்ந்து முனகிக் கொண்டிருந்தான்.

கள்வர்களின் எச்சரிக்கைக்குப் பிறகு வந்த அமைதி பயங்கரமாக அதிர்ந்து கொண்டிருந்தது. ஜொனாதன் எல்லாற்றையும் பேசி ஒரு முடிவுக்கு கொண்டு வரச் சொல்லி அவர்களின் தலைவனைக் கெஞ்சினான்.

அந்தத் தலைவன் தன் கொச்சைப் பிஜின் மொழியில், 'என் நண்பனே!' என்றான் கடைசியாக. 'நாங்க அவங்களைக் கூப்பிட மாட்டம். அவங்க இப்ப நல்லா நித்திரை கொள்ளுவாங்க.. அப்ப நாங்க செய்ய? நீங்க படைவீரரைக் கூப்பிடப் போறீங்களா? அல்லது உங்களுக்காக நாங்களே கூப்றதா? பொலிஸைப் பாக்கிலும் படைவீரர் திறம். இல்லையா?'

'அப்பிடித்தான்,' என்றார்கள் அவனுடைய ஆட்கள். இப்பொழுது முன்னரிலும் பார்க்க இன்னும் அதிகமான ஆட்கள் இருக்கிறார்கள் போல அவர்களின் குரல்களிலிருந்து ஜொனாதனுக்குத் தெரிந்தது. ஜொனாதன் பெரிதாக முனகினான். அவனுடைய கால்கள் தொய்ந்தன. தொண்டை அரத்தாள் போல கரகரத்தது.

'என் நண்பனே, நீ ஏன் கதைக்கிறாய் இல்லை. நாங்க படைவீரனை கூப்பிட நீ ஏன் விடுகிறாய் இல்லை?'

'இல்லை.'

'அப்படியென்றாச் சரி. இப்ப நாங்க வந்த விஷயத்தைக் கதைப்பம். நாங்க கூடாத கள்ளர் இல்லை. நாங்க தொந்தரவொண்டும் குடுக்க மாட்டம். பிரச்சினைகள் முடிஞ்சது. யுத்தம் முடிஞ்சுது. எல்லாக் கரைச்சலும் முடிஞ்சுது. இப்ப உள்நாட்டு யுத்தம் இல்லை. உள்நாட்டுச் சமாதானம் மட்டுந்தான். இல்லையா?'

'அப்பிடித்தான்!' கூட்டத்தினர் எல்லோரும் பயங்கரமான சத்தத்துடன் ஒன்றாகச் சத்தமிட்டார்கள்.

'உங்களுக்கு என்னிடமிருந்து என்ன தேவை? நான் ஒரு ஏழை மனிதன். என்னிடமிருந்த எல்லாம் யுத்தத்தில் போய் விட்டது. என்னிடம் ஏன் வந்தீர்கள்? யாரிடம் பணம் இருக்கிறது என்று உங்களுக்குத் தெரியும்தானே. நாங்கள்...'

'சரி, சரி. உன்னிடம் கனக்கக் காசு இருக்கு என்று சொல்றார்கள். எங்களிடம் ஒரு சதம் கூட இல்லை. ஆகவே நீ இந்த யன்னலைத் திறந்து நூறு பவுண் தா. நாங்க உடன போய் விடுவம். அப்படி இல்லாட்டி நாங்க உள்ள வந்து இதப் போல காட்டுவம்..'

ஆகாயத்தில் தானியங்கித் துப்பாக்கிச் சூடுகள் ஏராளம் ஒலித்தன. மரியாவும் குழந்தைகளும் சத்தமாக அழ வெளிக்கிட்டார்கள்.

'ஆ, மிஸ்ஸி நீ திரும்பவும் அழ வேண்டாம். அது தேவையில்ல. நாங்க நல்ல கள்ளர்கள். நாங்க எங்களுக்கான கொஞ்சக் காசை எடுத்துக் கொண்டு உடன போய் விடுவம். துன்புறுத்த மாட்டம். நாங்க துன்புறத்த மாட்டம், இல்லையா.'

எல்லோரும் 'இல்லவே இல்லை,' என்று சேர்ந்து சத்தமிட்டார்கள்.

'என் நண்பர்களே,' என்று ஜொனாதன் ஆரம்பித்தான், கம்மிய குரலில். 'நீங்கள் சொல்வது எனக்குக் கேட்கிறது. அதற்கு நன்றி. என்னிடம் நூறு பவுண் காசு இருந்தால்...'

'என் நண்பனே இங்க பார். எங்களுடன் விளையாடத. நாங்க இந்த வீட்டுக்கு வந்தது விளையாட இல்ல. நாங்க உன்ர வீட்டுக்குள்ள போய் விடுவம். ஆக...'

'என்னைப் படைத்த கடவுளே, நீங்க உள்ள வந்து நூறு பவுண் எடுத்தால், எடுத்துக் கொண்டு என்னையும் என் மனைவியையும் குழந்தைகளையும் சுடுங்கள். கடவுளில சத்தியமாச் சொல்றன். என்னிடம் இருக்கிறது இன்றைக்கு அந்த எக்றாஸரால் எனக்குக் கிடைத்த இருபது பவுண் மட்டுந்தான்...'

'சரி, நாங்க போக வேணும். உன்ர யன்னலைத் திறந்து அந்த இருபது பவுணை எடுத்துக் கொண்டு வா. அதை வைத்து ஒரு மாதிரி நாங்க சமாளித்துக் கொள்றம்.'

அங்கிருந்த கூட்டத்தில் இப்போது மாறுபட்ட கருத்துள்ள உரத்த முணுமுணுப்புக்கள் கேட்கத் தொடங்கின. 'இவன் பொய் சொல்றான். அவனிடம் கனக்கக் காசு இருக்கு.. நாங்க உள்ள போய் நல்லாத் தேடிப் பாக்கிறம்... இருபது பவுண் மட்டுமா?'

'வாயை மூடுங்க! தலைவனின் குரல் உரத்துக் கேட்டது. தனித்த சூடு ஒன்று ஆகாயத்தில் கேட்டது போல. உடனே முணுமுணுப்புக்கள் அடங்கியது. 'அங்கயா நிக்கிற? அந்தக் காசை உடன கொண்டு வா.'


'இந்தா வாறன்,' என்று ஜொனாதன் பாயில் தனக்குப் பக்கத்தில் வைத்திருந்த சிறிய மரப்பெட்டியில் அதன் திறப்பைப் போட்டு திறப்பதற்கு இருளில் தடுமாறிக் கொண்டிருந்தான்.

காலையில் முதல் வெளிச்சம் வந்தவுடனே அயலவர்களும் மற்றவர்களும் அவனுக்கு வருத்தம் தெரிவிப்பதற்காக அங்கே வந்து கூடி விட்டார்கள். அப்போது அவன் ஐந்து கலன் டெமிஜோன் போத்திலை தன்னுடைய சைக்கிள் கரியரில் வைத்துக் கட்டிக் கொண்டிருந்தான். அவனுடைய மனைவி திறந்த வெளி அடுப்பில் அகரா அவரை உருண்டைகளை அகலமான களிச் சட்டியிலுள்ள கொதி எண்ணையில் புரட்டிப் போட்டுக் கொண்டிருந்தாள். மூலையில் அவனுடைய மூத்த மகன் பழைய பியர் போத்தில்களிலிருந்த நேற்றைய தெங்குக் கள் அடிமண்டியை அலசிக் கழுவிக் கொண்டிருந்தான்.

'அது அப்படி ஒரு பெரிய விஷயமே இல்லை,' என்று அவனுக்கு அனுதாபம் தெரிவித்தவர்களுக்கு அவன் சொல்லிக் கொண்டிருந்தான். அவனுடைய கண்கள் போத்திலைச் சுற்றிக் கட்டிக் கொண்டிருந்த கயிற்றில் இருந்தன. 'எக்ஸ்றாஸர் என்றால் என்ன? போன கிழமையும் அதில்தானா நான் தங்கியிருந்தன்? அல்லது யுத்தத்தில் அழிந்து போன எல்லாவற்றிலும் அது பெரிசா? அந்த எக்ஸ்றாஸர் நெருப்பில் எரிந்து போகட்டும். மற்றவை போனவை போல அதுவும் போகட்டும். கடவுளுக்கு எதுவுமே வியப்பளிக்காது.'



mahalingam.k@thaiveedu.com

## நூல் விமர்சனம்: 8



| | |
|---|---|
| படைப்பாளி: | நாஞ்சில் நாடன் |
| நூல்: | நதியின் பிழையன்று நறும்புனல் இன்மை |
| வெளியீடு: | தமிழினி |
| பதிப்பு: | 2005 |

உள்ளது உள்ளபடி

# நதியின் பிழையன்று நறும்புனல் இன்மை

(கட்டு ரைத் தொகுப்பு)

கருத்து நீர் நிறைந்த இந்த நூல்நதியில் நிறையப் பேர் குதித்து நீராடியிருப்பர் என்பது சந்தேகமானது.

**- தேவகாந்தன் -**

'நதியின் பிழையன்று நறும்புனல் இன்மை' என்னும் 2005ல் வெளிவந்த நாஞ்சில் நாடனின் கட்டுரைத் தொகுப்பினை மீளவாசிக்கும் சந்தர்ப்பம் அண்மையில் எனக்கு வாய்த்தது. முதல் தடவையில் அத்தலைப்புச் செய்த இடையூறுபோல் இரண்டாவது தடவையில் நான் பட்டுக்கொள்ளவில்லை.

இரண்டாயிரத்து ஆறாம் ஆண்டிலேயே என்னிடம் வந்துவிட்ட இந்தப்புத்தகம், தொடர்ந்த ஓரிரண்டு ஆண்டுகளாக என் நூல் நிலையத்தில் இருந்திருந்தும், அதை வாசிக்கத் தடையாக இருந்தது அதன் தலைப்புத்தான். இது சூழலியல் சார்ந்த கட்டுரைத்தொகுப்போன்ற ஒரு மயக்கமாகும் அர்த்தத்தைக் கொண்டிருந்தது. நதிகளில் நீரற்றுப்போயிருக்கும் வரட்சி வனவழிப்பு, காற்றின் மாசு இவற்றினாலான இயற்கை வளங்கள் அழிவதினால் ஏற்பட்டிருக்கிறதென்றும், அதற்கான காரணங்களை மனிதர்களே பொறுப்பேற்க வேண்டுமென்றும் குற்றம் சாட்டுகிற தொனி அந்தத் தலைப்பில் இருந்ததாக எனக்கு முதன்முதலில் தோன்றியிருந்தது. ஓரளவு இந்த அர்த்தம் செறிந்த இதே தலைப்பிலான கட்டுரையொன்று இதில் இருக்கிறது. எனினும் சுற்றுச் சூழல்பற்றி இலேசாகக் குறிப்பிட்டுச் செல்லும் இக்கட்டுரை, அதிகமாகவும் புகைந்துகொள்வது செல்போன்களின் மீதுதான். 'நதியின் பிழையன்று நறும்புனல் இன்மை' என்ற இந்த அடியிலிருந்து கம்பராமாயணத்தின் அந்த முழுச் செய்யுளையும் ஞாபகம் கொள்கிறபோது, விதியை வலியுறுத்தும் ஒற்றையடியாகக்கூட இதற்குப்பொருள் கொண்டிருக்க முடியும். அதனால்தான் நான் குழம்பியது.

ஆனால் சங்க இலக்கியத்தைத் தெரிந்தும், பிற்கால இலக்கியங்களில் ஆழ்ந்தும், மரபான வாழ்நிலைகளின் பிடிப்பை அழுத்தமாகக் கொண்டும் இருந்திருந்தாலும், தேவையற்ற மரபுகளை மீறும் நாஞ்சிலின் எழுத்தின் பரிச்சயம் நினைவுவர, தாமதமாகவே தான் அந்த முதல் தடவையில் நான் அவரது நூலை வாசிக்க எடுத்தது.


இலக்கியம் சாராத கட்டுரைகள்கூட இலக்கியமாக முடியுமென்பதற்கான நிச்சயம் எனக்கு அப்போதுதான் ஏற்பட்டது. அத்தனை செழுமையும், சுவையும், ஆய்வுப் போக்கிலான நேர்த்தியும் கொண்டவை பெரும்பாலான அக் கட்டுரைகள்.

பல்லாண்டுகளுக்குப் பிறகான இப்போதைய வாசிப்பு முந்திய அபிப்பிராயங்களை மேலும் உயர்த்திவிடவே செய்திருக்கின்றது.

கடந்த சில ஆண்டுகளாக பல்வேறு தருணங்களிலும் கட்டுரையென்கிற பதத்துக்குப் பதிலாக, உரைக்கட்டு என்ற சொல்லையே நான் பாவித்து வந்திருக்கிறேன். கட்டுரையென்கிற பதத்திலிருக்கும் ஒரு பழகிய, இறுகிய அர்த்தம், உரைக்கட்டு என்ற பதத்தில் இருக்கவில்லைப் போல எனக்குத் தோன்றியது. கட்டப்பட்ட உரை என்பதிலிருந்து, உரையால் கட்டப்பட்டது என்ற பதத்தில் ஒரு கலாபூர்வமான செழுமையின் இருப்புக்கு இடமிருப்பதால் இயல்பாகவே அத்தோற்றம் எனக்குள் விளைந்தது.

இவ்வுரைக் கட்டு என்ற சொல்லுக்கு மிகப் பொருத்தமானவை இந்நூலிலுள்ள பலவும். 'கட்டுரை வடிவமென்பது எழுத்தாளர்களுக்கு எளிதில் கைகூடும் வித்தையாக மாறிப்போய் நூற்றாண்டுகள் பல கடந்துவிட்டன' என்ற ஓவியர் வே.ஜீவானந்தனின் முன்னுரையின் முதலடியை மறுப்பதினூடாகவே நாஞ்சில் நாடனின் உரைக்கட்டு வன்மையை என்னால் மதிக்க முடியும். நாஞ்சில் நாடன் மட்டுமேயல்லதான், ஆனாலும் எல்லா எழுத்தாளருக்குமே கட்டுரை கைகூடும் வித்தையாக மாறிப்போய்விடவில்லை என்பதே என் தாழ்மையான அபிப்பிராயம்.

ஆறு வகையான பகுதிகளில் ஐம்பத்தைந்து தலைப்புகளைக் கொண்டிருக்கிறது இந் நூல். முதல் பகுதியே கட்டுரைகளைக் கொண்டிருப்பது. ஆதிக உரைக்கட்டினைக் கொண்டிருக்கும் பகுதியும் இதுதான். முன்னுரைகள் பிறர்க்கு, முன்னுரைகள் தனக்கு என்பவை பகுதிகள் இரண்டாவதும் மூன்றாவதுமாய் வருபவை.



நான்காம் பகுதி மதிப்புரைகளைக் கொண்டது. ஆ.மாதவன், செம்பூரான், பா.விசாலம், பாவைசந்திரன், திலீப்குமார், நீலபத்மநாபன் மற்றும் ஆ.இரா.வெங்கடாசலபதி ஆகயோரின் 'அரேபியக் குதிரை', 'இது எங்கள் பம்பாய்', 'மெல்லக் கனவாய்ப் பழங்கதையாய்', 'நல்லநிலம்', 'கடவு', 'நீலபத்மநாபன் இலக்கியத்தடம்', 'முச்சந்தி இலக்கியம்' ஆகிய நூல்களுக்கான மதிப்புரைகள் இவை. பிறகுறிப்புகள், அஞ்சலி ஆகியனவை அடுத்தடுத்து வருபவை

இவற்றுள் முதலாவது பகுதியையே முதன்மையான விமர்சனத்துக்காக நான் எடுத்திருக்கிறேன்.

முதலாவது தலைப்பு,'தமிழில் சிறுபத்திரிகைகள்-காலச்சுவடு'என்பது. சுந்தரராமசாமியின் ஆசிரியத்துவத்தில் 1988 ஜனவரியிலிருந்து 1989 அக்டோபர்வரை வெளிவந்த எட்டு இதழ்களையும், பின்னர் கண்ணன், லட்சுமிமணிவண்ணன், மனுஸ்யபுத்திரன் ஆகியோரை ஆசிரியர் குழுவாகக் கொண்டு 1994 அக்டோபர் முதல் 1997 ஜனவரிவரை வெளிவந்த எட்டு இதழ்களில் ஏழு இதழ்களையும் தன் விசாரிப்புக்கு எடுத்திருக்கிறார் நாஞ்சில் நாடன்.

பதினாறாம் இதழ் ஏன் விசாரிப்புக்கு எடுக்கப்படவில்லையென்பதற்கு காரணம் எதுவும் கூறப்படவில்லை. நூலில் இந்த விசாரிப்பை அறிமுகமென்கிறார் நாஞ்சில். ஒருசிற்றிதழ்க் கருத்தரங்கில் இந்தஅறிமுகம் ஏன் என்பது தான் எனக்கு விளங்கவில்லை.

மற்றும்படி எடுத்துக் கொண்ட பொறுப்பை-அதில் அவர் மிகஆழமாகச் செய்திருக்கிறார் என்றே எனக்குத் தோன்றுகிறது. கவிதைகள், சிறுகதைகள், மதிப்புரைகள், நேர் காணல்கள் என்ற பகுப்புகளில் அவர் வெளியிட்டிருக்கும் அபிப்பிராயம் ஆழமானது. அது 'எம்.ஏ.நு.'.மானின் நேர்காணல் மிக ஆழமானவிசயங்களை விவாதித்தது என்று சொல்லமுடியாது' என்கிற அளவுக்கு ஆழமானது.

பதினெட்டுப் பக்கங்களில் பதினைந்து இதழ்களை விசாரிப்புச் செய்ததென்பதில் கட்டுரை தன் பணியினைச் செவ்வனே நிறைவேற்றியிருக்கிறதென்று தயங்காமல் சொல்ல முடியும்.

இலக்கியச் சமூகத்தில் நடந்த சில விவாதங்களைப்பற்றி விவாதிக்கத் தகுந்த கருத்துக்களோடு முன்வைப்பது அடுத்ததான 'தன்படைவெட்டிச் சாதல்' என்ற தலைப்பிலான உரைக்கட்டு. நாஞ்சிலின் கருத்தை மறுக்கமுடியுமெனினும், நாஞ்சில் கருத்துக் கூறுவதையே மறுத்துவிடமுடியாது. 'தன் படைசார்ந்து பேசுதல்' வெளிப்படையாகவே இதில் தெரிந்தபோதும் எடுத்துரைப்பு சிறப்பாக இருக்கிறது.

'நாடு இவர்களுக்கு என்ன செய்யப்போகிறது'என்பது இலக்கியவாதிகளும் சில-படைப்புகளும் பற்றிய விசாரம். இது தன் மனதுதிறந்து பேசும் படைப்பாளியின் வெளிப்படையினாலும், அதற்கான மொழியினாலும் சிறப்புடையது.

எனக்கு இத் தொகுப்பில் மிகப் பிடித்தமான விசாரிப்பு 'மங்கலம், குழூஉக் குறி, இடக்கரடக்கல்' என்ற உரைக்கட்டில் உண்டு. 'வாசச் சமையலும் ஊசக் கறியும்'கூடப் பிடிக்கும்தான். மிகச் சிறப்பாக வந்திருப்பது 'கோணல் பக்கங்கள் 3' என்பது. சாருநிவேதிதாவையும், அவரது எழுத்துக்களை, குறிப்பாக 'கோணல் பக்கங்க'ளையும் பற்றிய சரியானபார்வையை முன்வைக்கிற கட்டுரை.

நாஞ்சில் நாடனின் நடை மட்டுமில்லை, அவரது தார்மீகக் கோபங்களும்கூட இத் தொகுப்பில் நியாயமான பல்வேறு இடங்களில் வெளிப்படுகின்றன. மட்டுமில்லை. ஆங்காங்கே செறிவாய் விழுந்திருக்கும் நகைச்சுவை இதன் இன்னொரு சிறப்பு. இந்த நகைச் சுவையில் சிரிப்பு வராமல் சிந்திப்பவருவது மேலும் அதன் சிறப்பு.

இந்தத் தொகுப்பிற்கு இலக்கியத் தோட்டத்தின் அ-புனைவு நூலுக்கான பரிசு கிடைத்ததாக ஞாபகம். ஆயின், தகுதியான நூல் தான். கருத்து நீர் நிறைந்த இந்த நூல் நதியில் நிறையப் பேர் குதித்து நீராடியிருப்பர் என்பது சந்தேகமானது.




devakanthan@thaiveedu.com

உங்கள் அனைத்து நிகழ்வுகளையும் பார்ப்பதற்கும் பதிவதற்கும்

www.inayam.net

# கடந்த மாதத்தில்... நினைவில் நிற்கும் நிகழ்வுகள் சில...









ஓகஸ்ட் 16, ஸ்காபரோ - ஸ்ரீசத்யசாயிபாபா நடுவத்தில் கனடா - திருகோணமலை நலன்புரிச்சங்கத்தினரின் ஆதரவில், திருகோணமலை, கோணேசர் கோயில் வரலாற்றைக் கூறும் தொல்லிலக்கியங்கள், கல்வெட்டுகள், ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பான ‘திருக்கோணேஸ்வரம்’ நூல் வெளியீடு சிறப்புற நிகழ்ந்தது. செல்வி. சிவை சுபதரனின் தமிழ்ப் பண்ணிசையைத் தொடர்ந்து திரு. சண்முகம் குகதாசன் வரவேற்புரை நிகழ்த்தினார். கோணேசர் கோயில் ஆட்சிக்குழுச் செயலாளர் திரு. க. அருள்சுப்பிரமணியம் நூலின் தேவையை விளங்கக்கூறி அறிமுகவுரை நிகழ்த்த, பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்களும் முனைவர். நா. சுப்பிரமணிய ஐயர் அவர்களும் ஆய்வுப்பேருரை நிகழ்த்தினர். விழாவின் ஏற்பாட்டாளர் திரு.கே.கே. தயாநிதி திருகோணமலை நலன்புரிச் சங்கத்தின் சார்பில் நன்றி நவில, நூற் படிகள் வழங்கலோடு விழா நிறைவுற்றது.
(படம்: கந்தசாமி கங்காதரன்)





ஓகஸ்ட் 23 - மகா கணேசேஷ்திரம் அதிபர் திரு. எம். கணேசதாசன் மகாதேவன் அவர்களின் மாணவன் செல்வன். ஜிவாகரன் நித்தியானந்தத்தின் மிருதங்க அரங்கேற்றம் பெரிய சிவன் கோயில் மண்டபத்தில் நடைபெற்றது. *(படம்: கண்ணன்)*




ஓகஸ்ட் 30 - சக்தி சங்கீதக் கல்லூரி அதிபர் திருமதி. பராசக்தி விநாயகதேவராஜா அவர்களின் வாய்ப்பாட்டு மாணவனும் கலைக்கோயில் நுண்கலைக் கல்லூரி அதிபர் திரு. குகேந்திரன் கனகேந்திரன் அவர்களின் மிருதங்க மாணவனுமான செல்வன். சாகித்யன் லோகபாலேந்திரனின் வாய்ப்பாட்டு, மிருதங்க அரங்கேற்றம் சீன கலாச்சார மண்டபத்தில் நடைபெற்றது.

**உங்கள் விழாக்களின் படங்களும் இங்கு இடம்பெறவேண்டுமாயின், விழா பற்றிய விபரங்கள், புகைப்படம் எடுத்தவரின் பெயர் மற்றும் உங்கள் தொடர்பிலக்கங்களுடன் events@thaiveedu.com என்னும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.**



ஒகஸ்ட் 23 - Morningside பூங்காவில் நடைபெற்ற கனடா-நெடுந்தீவு மக்கள் ஒன்றியத்தின் ஒன்றுகூடலும் விளையாட்டுப் போட்டியும்
(படம்: கணன் சுவாமி)



ஒகஸ்ட் 16 - Downsview Dells பூங்காவில் நடைபெற்ற உருத்திரபுரம் அபிவிருத்திக் கழகத்தின் கோடைகால ஒன்று கூடல்



ஒகஸ்ட் 23 - Rowntree Mills பூங்காவில் நடைபெற்ற மீன்பாடும் தேனாட்டாரின் 'பாடும் மீன்களின் பொழுது' - ஒன்றுகூடல் - 2014

**உங்கள் விழாக்களின் படங்களும் இங்கு இடம்பெறவேண்டுமாயின், விழா பற்றிய விபரங்கள், புகைப்படம் எடுத்தவரின் பெயர் மற்றும் உங்கள் தொடர்பிலக்கங்களுடன் events@thaiveedu.com என்னும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.**




# உங்கள் கடனை Consumer Proposal மூலம் செலுத்தும் போது 85% வரை பணத்தினைச் சேமிக்கலாம்

## Consumer Proposal is up to 85% cheaper than repaying your debts on your own

கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
**We will stop all interest on your debts immediately**

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள்,சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்
**We will stop collection calls, court action & wage garnishments immediately**

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
**We will protect all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC, Life Insurance, Stocks, Bonds & Shares)**

மாதாந்த ரீதியில் ஒரே கட்டுப் பணத்தில் எல்லாக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்
**We will make one monthly payment to all your creditors**

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்
**No need to file for Bankruptcy**

**WE WORK EXCLUSIVELY FOR YOU, AND SAVE YOU THOUSANDS OF DOLLARS**

பலவருடகால அனுபவமுள்ள

## Suren Sornalingam BBA

Post Graduate Diploma in Business Management
Federal Government Registered & Certified (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation



**CREDIT RECOVERY CANADA**
55 Town Centre Court, Suite 700,
Scarborough, ON.
M1P 4X4

Tel: 416-264-1272
Fax: 416-332-0914
Web: www.creditrecoverycanada.com

# சின்னச் சம்பவம்

- அ. முத்துலிங்கம் -




சின்னச் சம்பவம் என்று ஒன்றும் உலகத்தில் கிடையாது. வழக்கம் போல வாடகைக் கார் நிறுத்தத்தில் காரை நிறுத்தி வைத்துக் கொண்டு வாடிக்கையாளருக்கு காத்திருந்தேன். எனக்கு முன்னால் இரண்டு கார்களும் பின்னால் நாலு கார்களும் நின்றன. பகல் பத்து மணி. மே மாதம் என்பதால் குளிரும் இருந்தது. வெப்பமும் இருந்தது. அன்று கொஞ்சம் வெப்பம் வெற்றி பெற்ற நாள். ரொறொன்ரோவின் அலுவலக அவசரம் முடிந்துவிட்டதால் சிறிது அமைதி நிலவியது. ஒரு பெண் தூரத்திலே நடந்து வந்தாள். ரோஸ்டரில் வாட்டிய முழுக்கோதுமை ரொட்டியின் நிறம். கையிலே கைப்பை இல்லை. காலிலே ஓட்டக்காரர் அணியும் காலணி. மெலிந்த தேகம் ஆனால் எங்கேயெங்கே சதை வேணுமோ அங்கேயங்கே அது இருந்தது. தினம் தேகப் பயிற்சி செய்யும் உடம்பு. சமீபத்தில் வந்த போது முகத்தைப் பார்த்தேன். பெரிய அழகி என்று சொல்ல முடியாது. தேனின் மேல் சூரிய ஒளிபட்டது போல கண்கள். எந்த ஓர் ஆணையும் வசப்படுத்தும் கவர்ச்சி இருந்தது. எனக்கு முன்னால் தரித்திருந்த கார்களை விலக்கி விட்டு நேராக என்னிடம் வந்தாள். ஒரு கையை இடுப்பில் வைத்து சற்று சாய்ந்து நின்று காலை வணக்கம் சொன்னாள். நானும் சொன்னேன். அவள் எங்கேயும் பயணம் போகப் போவதாக இல்லை. வழிகேட்பதற்காக இருக்கலாம்.

'ஒரு சிகரெட் இருக்குமா?' என்றாள்.

புத்திசாலியான பெண் என்று உடனேயே தெரிந்தது. அங்கே நின்ற 7 வாடகைக் கார்ச் சாரதிகளில் சிகரெட் குடிப்பவன் நான் மட்டுமே என்பதை எப்படியோ ஊகித்து கண்டு பிடித்து என்னிடம் நேரே வந்திருக்கிறாள். சிகரெட் பக்கெட்டை நீட்டினேன். ஒரு சிகரெட்டை மட்டும் உருவி எடுத்து உதட்டிலே பொருத்தி வைத்துக்கொண்டு நின்றாள். என்னுடைய லைட்டரால் பற்றவைத்தேன். நன்றி என்று விட்டு நகராமல் அதே இடத்தில் நின்றாள். அவள் வந்த விசயம் முற்றுபெறவில்லை என்று நினைக்கிறேன்.

'உங்களிடம் இரண்டு டொலர் இருக்கிறதா?' ஒரு பெண் முன்பின் தெரியாத ஒருவரிடம் இரண்டு டொலர் கேட்டால் அவருக்கு யாசிப்பவரிடம் கேள்விகேட்கும் உரிமை கிடைத்து விடுகிறது. 'எதற்கு என்று சொன்னால் தருகிறேன்.' 'இரண்டு டொலரை வைத்து என்ன செய்யமுடியும்? கோப்பி குடிப்பதற்குத்தான்.' 'கோப்பிக்கடை தூரத்தில் அல்லவா இருக்கிறது. நான் உங்களை அங்கே கொண்டு போய்விடுகிறேன்.' 'கோப்பிக்கு காசில்லை. டாக்சிக்கு கொடுக்க பணம் எங்கிருந்துவரும்?'

நான் அவளைப் பார்த்தேன். உடம்பை ஒட்டிப் பிடிக்கும் பழைய ஜீன்ஸ் அணிந்திருந்தாள். பழசாக்கப்பட்ட ஜீன்சை புதிதாக கடையில் வாங்கினாளா அல்லது திருப்பி திருப்பி அணிந்து பழசாகினதா என்பதைக் கண்டு பிடிக்க முடியவில்லை. தவறான சலவையில் சிவப்பும் மஞ்சளும் கலந்தது போன்ற ஒரு நிறத்தில் தொளதொளவான டீசேர்ட். அதிலே TAIBU என்ற வார்த்தை எழுதியிருந்தது. இரண்டு டொலர் காசைக் கொடுக்கமுன்னர் அதற்குப் பெறுமதியான விவரங்களை பெற்றுவிட வேண்டுமென்பது என் கொள்கை.

'TAIBU என்றால் என்ன?'

'ஓ, அதுவா?' சிரித்தாள். முதல் முறையாக அவள் பற்கள் வெளியே தெரிந்து பளிச்சிட்டன. 'என் கணவருடைய டீசேர்ட். ஸ்வாஹிலி மொழியில் TAIBU என்றால் 'உடல் நலம் பெறுக' என்பதுபோல ஒரு வாழ்த்து. அவர் கென்யாக்காரர்' என்றாள். ஒவ்வொரு விவரத்தையும் நான் பிடுங்கமுன்னர் அவளாகவே சொன்னாள். ஆரம்பத்திலிருந்து அடி மனதில் இருந்த கேள்வியை கேட்டேன். 'நீங்கள் தமிழா?' 'நான் தமிழ்தான், கொஞ்சம் பேசவரும், சொல்வது முழுக்க புரியும். அப்படித்தான் அப்பாவுடன் சம்பாசணை செய்வேன். இது என்ன வகுப்பறையா? கையை தூக்காமல் கேளுங்கள்.' 'இங்கே கனடாவில் பிறந்தீர்களா?' 'இங்கேதான். இன்னும் எத்தனை கேள்விகளுக்கு பதில் சொன்னால் காசு கிடைக்கும்?' என்றாள். அவள் சிகரெட் எரிந்து கடைசி நிலையை எட்டியிருந்தது.

நான் இரண்டு டொலர் காசைக் கொடுத்து விட்டு சொன்னேன். 'நீங்கள் ஏதோ பெரிய சங்கடத்தில் மாட்டியிருக்கிறீர்கள். எங்கே போகவேண்டுமோ அங்கே டாக்சியில் கொண்டுபோய் இறக்கி விடுவேன். பணம் வேண்டாம்.' அவள் என்னை நிமிர்ந்து நேராகப் பார்த்தாள். 'உங்கள் கருணையான உள்ளத்துக்கு நன்றி. இது நான் உண்டாக்கிய பிரச்சினை. நானே தீர்க்கவேண்டும். என் கணவர் என்னை வீட்டைவிட்டு துரத்திவிட்டார். இரவு முழுக்க சித்திரவதை செய்தார். எல்லோரையும் பொறாமைப்பட வைக்கும் அருமையான வேலை எனக்கு இருந்தது. அதைத் துறந்துவிட்டு அவருக்கு அடிமையாக வாழ்கிறேன். இது என் தேர்வு.' உடனே எது செய்யக்கூடாதோ அதைச் செய்ய ஆரம்பித்தேன். புத்திமதிகள் என் வாயை நிரப்பின. 'இது கனடா. உங்களை ஒருவர் தொடமுடியாது. பொலீஸை தயங்காமல் அழையுங்கள். அவர்கள் நிமிடத்தில் வந்து அவரைக் கைது செய்து போவார்கள்.' 'எனக்குத் தெரியும். இதற்கு முன்னரும் அவர் என்னைத் துரத்தியிருக்கிறார். இன்றிரவு வந்து என்னிடம் கெஞ்சுவார். நான் அவரை நேசிக்கிறேன். அளவுக்கு அதிகமாக நேசிக்கிறேன். நான் செத்துப்போவேன், ஆனால் அவரை பொலீஸில் பிடித்துக் கொடுக்க மாட்டேன்.' சம்பாசணை முடிந்துவிட்டது என்பதுபோல சட்டென்று திரும்பி நடந்தாள். நான் கொடுத்த இரண்டு டொலரை எறிந்து எறிந்து ஏந்தினாள். அது சூரிய ஒளியில் மின்னியது.

பத்தடி தூரம் போனவள் எதையோ நினைத்து மறுபடியும் திரும்பினாள். 'இன்றிரவு நீங்கள் தூங்கச் செல்லும்போது 'அட பெயரைக் கேட்க மறந்துவிட்டோமே' என்று வருத்தப் படுவீர்கள். நீங்கள் நல்லவர். அந்த துக்கம் உங்களுக்கு வேண்டாம். 'என் பெயர் அல்கா' என்று சொல்லி கையை நீட்டினாள். குளிர்ந்த பூவைத் தொட்டதுபோல இருந்தது. 'அல்காவா? அப்படி ஒரு தமிழ் பெயரா?' என்றேன். 'என் அப்பாதான் இன்றைக்கும் அவர் வைத்த பெயரால் என்னைக் கூப்பிடுவார். வாயில் நுழையாத பெயர். அதன் சுருக்கம்தான் இது. உலகத்துக்கு நான் அல்கா.' இப்படிச் சொல்லிவிட்டு நடந்தாள். அவள் தலை மறைந்ததும் மற்ற டாக்சி ஓட்டுநர்கள் அத்தனை பேரும் என்னை வந்து சூழ்ந்து கொண்டார்கள்.

நான் 20 வருடமாக ரொறொன்ரோவில் டாக்சி ஓட்டுகிறேன். 25வது வயதில் ஆரம்பித்த வேலை இன்றும் தொடர்கிறது. இந்த இருபது வருடத்தில் எத்தனையோ அனுபவங்கள் கிடைத்திருந்தாலும் இன்றைக்கும் ஆச்சரிய மேற்படுத்தும் சம்பவங்கள் நடந்த வண்ணம்தான் இருக்கின்றன. சில அதிர்ச்சியை தரும். சில சொல்லமுடியாத நிறைவைத் தரும். துக்கம் தந்தவையும் இருக்கின்றன ஆனால் அவ்வப்போது ஏற்படும் புதிர்களும் மர்மங்களும் என் வேலையை சுவாரஸ்யமாக்கியிருக்கின்றன.

எங்கள் கம்பனியில் 96 டாக்சி ஓட்டுநர்கள் வேலை செய்தார்கள். வெள்ளையர், கறுப்பர், இந்தியர், சீனாக்காரர், பிலிப்பினோக்காரர், பாகிஸ்தானியர் என்று பல நாடுகளிலிருந்து வந்தவர்கள். தமிழர்கள் நாலே நாலு பேர். வாடிக்கையாளர்கள் டெலிபோனில் கம்பனியை அழைப்பார்கள். கம்பனியிலிருந்து எங்களுக்கு ரேடியோத் தகவல் வந்ததும் நாங்கள் குறிப்பிட்ட முகவரிக்கு போவோம். முதல் நாளைப்போல அடுத்த நாள் இருக்காது. ஆனால் அவ்வப்போது நடக்கும் சில சம்பவங்கள் ஆச்சரியத்தை கொடுக்கும். நேற்றிரவு நடந்ததும் புதுமையான அனுபவம். ரேடியோவில் தகவல் வந்தபோது இரவு 11 மணி. ஒரு விலாசத்தை தந்து அங்கு போகச் சொன்னார்கள். ஆனால் அந்த வீட்டுக் கார் பாதையில் வாகனத்தை நிற்பாட்டாமல் வெளியே ரோட்டில் நிறுத்தவேண்டும் என்பது கட்டளை. இப்படியான சமயங்களில் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். ஒரு வீட்டு நம்பரைக் கொடுத்து இன்னொருவர் அழைக்கிறார் என்பதால் எந்த வீட்டிலிருந்து அழைத்தவர் வருவார் என்பது தெரியாது. எஞ்சினை ஓடவிட்டபடியே காத்திருந்தேன். இருட்டான இடம். வீட்டின் முன்னே உயரமான செடிகள் வளர்ந்திருந்தன. செடிகள் அசைந்த அடுத்த கணம் ஓர் உருவம் சட்டென்று காருக்குள் ஏறி உட்கார்ந்து 'ஓடு, ஓடு' என்றது. 'எங்கே போகவேண்டும்?' 'நேரே போ. நேரே போ. வேகம், வேகம்.' சில மைல்கள் தூரம் போனதும் திரும்பி பார்த்தேன். பள்ளி மாணவி. சீனப் பெண், மகத்தான பூவாகப் பூக்க ஆரம்பித்திருந்தாள். 'எங்கே போகிறீர்கள்?' அவளுடைய வகுப்பு தோழிகள் பியர் பார்ட்டி வைக்கிறார்கள். அதில் கலந்து கொள்ள பெற்றோருக்கு தெரியாமல் போகிறாள். சட்டப்படி நான் சவாரியை மறுக்கலாம். அவள் முகத்தில் காணப்பட்ட குதூகலத்தை கெடுக்க விரும்பவில்லை. கள்ள நோட்டு கொடுத்து சாமான் வாங்கியது போல மகிழ்ச்சி கிடைத்தது. குற்றவுணர்ச்சியாகவும் இருந்தது. 'எப்படி வீட்டுக்கு திரும்புவீர்கள்?' அவள் பதில் பேசவில்லை. செல்போனில் மூழ்கிக் கிடந்தாள். அவளுடைய பெற்றோர்கள் வீட்டிலே ஒன்றும் அறியாமல் தூங்கிக்கொண்டிருந்தார்கள்.

வாடகைக்கார் ஓட்ட வந்த முதல் நாள் நடந்த சம்பவத்தை நினைக்கும்போது இப்போது சிரிப்பு வந்தது. மற்றைய சாரதிகள் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென எனக்கு நிறையப் புத்திமதி சொல்லியிருந்தனர். என்னுடைய முதல் சவாரி ஓர் இளைஞன். காரில் ஏறியவுடனேயே நான் கேட்டுக் கொண்டிருந்த ரேடியோ சானலை மாற்றச் சொன்னான். மாற்றினேன். பின்னர் இன்னொரு சானலுக்கு மாற்றச் சொன்னான். அதையும் செய்தேன். அதுவும் பிடிக்கவில்லை. தானே திருக வந்தான். 'நான் உங்கள் சாரதி, உங்களுக்கு ரேடியோ போடுபவர் அல்ல. எங்கே போகவேண்டும். அதைச் சொல்லுங்கள்' என்றேன். அவன் சொல்லவில்லை. 'நேரே போ, வலது பக்கம் போ, இடது பக்கம் போ' என்று என்னை அதிகாரம் செய்தான். பல இடங்களில் என்னை நிறுத்தி, நிறுத்தி ஓடவைத்தான். இறுதியில் ஒரு பெட்ரோல் ஸ்டேசனில் இறங்கப் போவதாகச் சொன்னான். நிறுத்தியதும் கதவைத் திறந்து குதித்து குறுக்குப் பாதையால் ஓடினான். நான் திகைத்துப்போய் பார்த்துக்கொண்டு நிற்க மறைந்துவிட்டான். வேலை தொடங்கிய முதல் நாள் நட்டம் 140 டொலர்.

டாக்சிக்காரருக்கு எல்லோரும் டிப் தருவதில்லை. சிலர் தாராளமாகத் தந்திருக்கிறார்கள், ஆனால் நான் டிப் கொடுத்த சம்பவங்கள் பல உள்ளன. பனிக்காலம் வந்தால் மதியம் முடிந்தவுடனேயே இரவு தொடங்கிவிடும். 12 மணிநேரம் வேலை செய்த களைப்பில் கென்னடி – எக்லிண்டன் சந்திப்பில் காரை ஓட்டிக் கொண்டிருந்தேன். பனியகற்றும் வாகனங்கள் உர்ரென்று சத்தமிட்டுக்கொண்டு நகர்ந்தன. பனி கொத்துக்கொத்தாக நிற்காமல் கொட்டியது. 'இடரினும் தளரினும் எனதுறுநோய் தொடரினும்' வேலை செய்தால்தான் பணம். ஒரு வெள்ளைக்காரப் பெண் கைகாட்டி நிறுத்தினாள். கையுறை இல்லை. தொப்பி இல்லை. நீண்ட ஓவர்கோட் அணிந்திருந்தாள். அந்த இடம் பாதுகாப்பானது அல்ல. எதற்காக அங்கே தன்னந்தனியாக நிற்கிறாள்? நான் காரை நிறுத்தியதும் அதைக் கட்டி பிடிப்பதுபோல அணுகி அதன் வெப்பத்தில் குளிர் காய்ந்தாள். 'என்னிடம் காசில்லை' என்றாள். அடுத்த நிமிடம் அவள் கண்களிலே பொலபொலவென்று நீர் கொட்டியது. இரண்டு பக்கமும் பார்த்தேன். ஏதாவது தந்திரமாக இருக்கும் என்று பட்டது. ஆனால் அவள் பாசாங்கு செய்யவில்லை, நிசமாகத்தான் அழுதாள். 'என்ன பிரச்சினை? இது ஆபத்தான இடம்' என்றேன். 'என் அப்பா என்னை வீட்டை விட்டு துரத்திவிட்டார். அம்மா அழுது கொண்டிருக்கிறார். எனக்கு இரவு தங்க இடமில்லை.'

அவளுக்கு 17, 18 வயதுதான் இருக்கும். மேல் பள்ளியில் படிக்கிறாள் என்று ஊகிக்க முடிந்தது. என்ன உதவிசெய்வது என்று என்னால்

தொடர்தல் 98ம் பக்கம்

# சின்னச் சம்பவம்...

97ம் பக்கத் தொடர்ச்சி...


முடிவெடுக்க முடியவில்லை. என் வாழ்க்கையில் என்றென்றும் மறக்கமுடியாத ஒரு வாசகத்தை அந்தப் பெண் அப்போது சொன்னாள். ‘இந்த மோசமான குளிரில் என்னை விட்டுவிட்டுப் போகவேண்டாம். நான் செத்துப்போவேன். எப்படி வேண்டுமென்றாலும் என்னை உபயோகித்துக் கொள்ளலாம். ஓர் இரவு மட்டும் தங்க ஏற்பாடு செய்யுங்கள்.’ பச்சைக் கண்களுக்கு பக்கத்தில் அத்தனை சிவப்பு உதடுகளை நான் கண்டதே கிடையாது. இந்தப் பெண் என்னை பெரும் சிக்கலில் மாட்டிவிடக்கூடும். உதவி செய்யாவிட்டால் இன்னும் மோசமாக ஏதாவது அவளுக்கு நடக்கலாம். ஒரு ஹொட்டலில் அன்றிரவு தங்க ஏற்பாடு செய்வதாகச் சொன்னேன். அவள் நன்றி சொல்லிக்கொண்டு சடக்கென்று காரில் ஏறினாள்.

‘என்ன காரணத்துக்காக அப்பா உங்களை வீட்டைவிட்டு துரத்தினார்? காதல் விவகாரமா?’ ‘இல்லை. இல்லை. காதல் விவகாரம் என்றால் அவர்கள் சந்தோசப்படுவார்கள்.’ ‘பரீட்சையில் பெயிலாகிவிட்டீர்களா?’ ‘அதற்கு வாய்ப்பே இல்லை. நான் தொடர்ந்து A எடுக்கும் மாணவி.’ ‘நடுநிசியில் ஒரு தகப்பன் தன் மகளை எதற்காக வீட்டைவிட்டு துரத்தினார்?’ ‘நிலவறை திறப்பை கைமறதியாக வைத்துவிட்டேன்.’ ‘அதற்காகவா? எதற்கு நிலவறைத் திறப்பு உங்களுக்கு தேவைப்பட்டது?’ ‘ஏணியை எடுப்பதற்கு.’ ‘ஏணி எதற்கு?’ ’அப்பதானே சீலிங்குக்குள் போய் தேட முடியும்.’ ‘எதற்கு சீலிங்குக்குள் நுழைந்து தேடுகிறீர்கள்?’ ‘அங்கேதானே போதை மருந்து ஊசி கிடக்கிறது.’

டாக்சி ஓட்டுநர் கூட்டத்திலே எங்கள் தொழிலின் மேன்மைகள் விவாதிக்கப்படும். ஏற்றத் தாழ்வில்லாமல் சம உரிமை கொடுத்து நடத்தும் தொழில் இது. முதல் நாள் உலகப் புகழ் விஞ்ஞானி ஒருவர் எங்கள் டாக்சியில் பயணம் செய்வார். அடுத்தநாள் அதே இருக்கையில் செக்ஸ் தொழில் செய்யும் பெண் உட்கார்ந்திருப்பார். இருவரையும் நாங்கள் சமமாகத்தான் நடத்துவோம். ஏறக்குறைய ஒரே வயது ஆண்கள் கூட்டமாக ஏற முயற்சித்தால் அந்த சவாரியை நான் தவிர்த்துவிடுவேன். அதுவும் இரவு நேர மென்றால் எச்சரிக்கை தேவை. அன்று டண்டாஸ் ரோட்டில் போய்க் கொண்டிருந்த போது இரவு பதினொரு மணி. இரண்டு இளைஞர்கள் கைகாட்டி நிறுத்த ஒருவர் முன் சீட்டில் பாய்ந்து ஏறினார், மற்றவர் பின் சீட்டில் அமர்ந்தார், ஆனால் கதவைச் சாத்தவில்லை. சட்டென்று எங்கிருந்தோ இன்னும் இரண்டு பேர் உண்டாகி காரில் ஏறிவிட்டார்கள். இதெல்லாம் முன்னேற்பாடு என்பது எனக்கு தெரியவில்லை. கெட்ட சம்பவம் நடப்பதற்கு காத்திருந்தது. ‘எங்கே போகவேண்டும்?’ நடுக்கம் தெரியாமல் இருக்க உரத்துப் பேசினேன். ‘இந்த ரோட்டு போகும் இடத்துக்கு.’ கார் எஞ்சின் சத்தத்துக்கு போட்டியாக நெஞ்சு அடித்தது. தப்பிப்பதற்கான உத்திகளை மனம் உற்பத்தி செய்தது. ஒரு பழைய கட்டிடத்துக்கு பின்னே காரை விடச் சொன்னார்கள். ஒருவன் கத்தியை எடுத்து கழுத்தில் வைத்து என்னிடம் இருந்த அத்தனை காசையும் பிடுங்கினான். ரப்பர் பாய்க்கு கீழே தேடினார்கள். கால் சப்பாத்தை கழற்றி உதறிப் பார்த்த பின்னர் ‘போ’ என்று என்னை துரத்திவிடடார்கள். எனக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை. கார்ச் சாவியை கொடுப்பதற்கு தயாராக இருந்தேன். அவர்களுக்கு தேவை காசு மட்டுமே. என் அதிர்ஷ்டத்தை நம்ப முடியாமல் அதி மகிழ்ச்சியுடன் வீடு வந்து சேர்ந்தேன். என் மனைவி நினைத்தார் அன்று எனக்கு அதிக வரும்படி என்று. அவருக்கு தெரியாது அன்றைய பெரிய வருமானம் என்னுடைய உயிர் என்பது.

விடுக்கமுடியாத புதிர்போல என் மூளைக்கு அப்பால்பட்ட சில சம்பவங்களும் அவ்வப்போது நடக்கும். பெரிய அளவில் செக்ஸ் பெண்களை வைத்து தொழில் நடத்தும் ஒருவர் என் வாடிக்கையாளர். இவர் ரேடியோவில் அழைக்காமல் நேரடியாக என் செல்போனில் தொடர்புகொள்வார். எந்தப் பெண்ணை எங்கே அழைத்துச் செல்ல வேண்டும், எத்தனை மணிக்கு மீண்டும் திரும்ப வேண்டும் போன்ற விவரங்களை தருவார். அவருடைய கண்ட்ராக் கிடைத்தால் அன்று வேறு வேலை செய்யக்கூடாது. என்னுடைய சன்மானம் இரண்டு மடங்காக இருக்கும். பல வருடப் பழக்கம் என்பதால் என் மீது ஒருவிதமான நம்பிக்கை அவருக்கு இருந்தது.

ஒருநாள் அவரிடமிருந்து அழைப்பு வந்தது. 60மைல்தூர ஹொட்டலில் இருந்த பெண்ணை அழைத்துச்சென்று விமானத்தில் ஏற்றிவிட வேண்டும். அதிகாலையே போய் அவளுக்காக காத்திருந்தேன். சுழலும் கதவில் விடுபட்டு தேவதைபோல் தோன்றிய ஒரு



என்ன காரணத்துக்காக அப்பா உங்களை வீட்டைவிட்டு துரத்தினார்? காதல் விவகாரமா...?’

‘இல்லை. இல்லை. காதல் விவகாரம் என்றால் அவர்கள் சந்தோசப்படுவார்கள்.’

‘பரீட்சையில் பெயிலாகி விட்டீர்களா...?’

‘அதற்கு வாய்ப்பே இல்லை. நான் தொடர்ந்து A எடுக்கும் மாணவி.’

...?

பல்கலைக்கழக மாணவிதான் வெளியே வந்தாள். இப்படி தொழில் செய்யும் பெண் என்று எனக்கு தோன்றவே இல்லை. எத்தனையோ பெண்களை என்னுடைய காரிலே ஏற்றியிருக்கிறேன். இந்தப்பெண்ணின் சௌந்தர்யம் அபூர்வமானதாக இருந்தது. ஒடுங்கிய இடையை மேலும் சிறுக்கவைத்த நீண்ட ஸ்கர்ட். குதிவைத்த காலணிகள். எத்தியோப்பியாவில் இருந்து படிக்க வந்தவள் என்று பின்னால் அறிந்தேன். பைபிள் கதையில் சோலமன் அரசனை மயக்கிய எத்தியோப்பிய அழகி இப்படித்தான் இருந்திருப்பாள். கருகருவென்று சுருண்டு வளர்ந்திருந்த முடியை இழுத்து நேராக்கி சிறு சிறு பின்னல்களாக கட்டியிருந்தாள். கரிய பெரிய கண்களும், மினுங்கிய உடம்பும் அவளுக்கு விலைமதிக்க முடியாத வசீகரத்தை கொடுத்திருந்தது. காரில் ஏறியவுடனேயே இதற்கு முன்னர் பலதடவை சந்தித்தவள்போல கலகலவென்று பேசத் தொடங்கினாள். அவள் வார்த்தைகளால் கார் நிரம்பியது. ஒருவருடமாக ரொறொன்ரோ பல்கலைக்கழகத்தில் சமூகமானிடவியல் துறையில் முனைவர் பட்டம் படிப்பதாகச் சொன்னாள்.

‘கோடை காலம் முழுக்க உங்கள் திட்டம் போடப்பட்டு விட்டதா?’ என்று கேட்டேன். வெளிநாட்டு எழுத்தாளர்கள் புத்தக சுற்றுக்கு வரும்போது அவர்களை காரில் ஏற்றி வேறு வேறு இடங்களுக்கு அழைத்துச் சென்றிருக்கிறேன். ஒவ்வொரு மாகாணமாகச் சென்று புத்தகங்களை கையெழுத்திட்டு விற்பனை செய்வார்கள். இந்தப் பெண்ணுக்கும் பத்து மாகாணங்களுக்கும் மூன்று பிரதேசங்களுக்கும் திட்டம் போட்டுவிட்டார்கள். மூன்று மாத காலம் விடுமுறையில் அவள் நகரம் நகரமாகச் சுற்றுவாள். இன்ன தேதி இன்ன இடம் இன்ன நபர் இன்ன தொலைபேசி என்ற சகல விவரங்களும் அவள் கைப்பையில் இருந்தன. சுற்றுலாவுக்கு புறப்பட்டதுபோல அவள் உடம்பிலிருந்து மகிழ்ச்சி வீசி காரை ஓட்டிய என்னையும் தாக்கியது.

‘உங்கள் பெற்றோருக்கு நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்று தெரியுமா?’ ‘ஆண்டவனே, அம்மாவுக்கு தெரியாது. அப்பா இல்லை. அம்மா கிராமத்து சேர்ச்களில் போய் என் வெற்றிக்காக மன்றாடுகிறாள்.’ ‘உங்களுடைய ரேட் என்ன?’ என்று கேட்டேன். இப்படியான பெண்களுக்கு டாக்சி சாரதிகளின் நட்பு முக்கியம். அவர்கள் ஒன்றையும் மறைக்கமாட்டார்கள். ‘ஓர் இரவுக்கு 1500 டொலர். இரவும் பகலும் என்றால் 2000 டொலர்.’ உங்கள் பங்கு என்ன?’ ‘நாளுக்கு 1000 டொலருக்கு குறையாமல் கிடைக்கும்.’ ‘இந்த தொழிலை விரும்பி செய்கிறீர்களா?’ ‘இது என்ன கேள்வி. விருப்பமில்லாமல் ஒரு தொழில் செய்தால் அடுத்த வாடிக்கையாளர் கிடைப்பாரா?’ ‘எத்தியோப்பியாவில் இருந்து புறப்பட்டபோதே இப்படி உழைக்கவேண்டும் என்று திட்டமிட்டீர்களா?’ அவள் அதற்கு பதில் பேசவில்லை. சிறிது நேரம் பழைய நினைவில் இருந்தாள். பின்னர் தானாகப் பேசினாள்.

‘அடிஸ் அப்பா புனித மேரி பெண்கள் பள்ளிக்கூடத்தில் படித்தேன். நான் மிகவும் ஏழ்மையான குடும்பத்திலிருந்து வந்தவள். ஆனால் வகுப்பில் முதலாக வருவேன். ஒருநாள் ஆசிரியை கூம்பு வடிவத்தின் கொள் அளவை எப்படி கண்டுபிடிப்பது என்று கேட்டார். நானாக யோசித்து விடை சொன்னேன். அவர் எனக்கு ஒரு கைக்கடிகாரம் பரிசு தந்தார். அதுதான் முதன்முதலாக சொந்தமாக கிடைத்த பரிசு. அதன் பின்னர் யோசித்தேன். என் வழியை நானே கண்டுபிடிக்க வேண்டும் வேறு ஒருவர் எனக்காக உருவாக்க முடியாது.’ ‘இந்தப் பணத்தை என்ன செய்வதாக உத்தேசம்?’ என்று கேட்டேன். ‘பட்டப்படிப்பு கட்டணம் கட்டுவேன்’ என்று சொல்லுவாள் என எதிர்பார்த்தேன். ‘ஓ, நான் ஒரு எஸ் கிளாஸ் மெர்சிடிஸ் பென்ஸ்கார் வாங்குவேன்’ என்றாள் தயங்காமல். ‘அது 100,000 டொலர் அல்லவா?’ ‘அதற்கென்ன. பென்ஸ் கம்பனி தலைவர்கூட என் வாடிக்கையாளர் தான்’ என்றுவிட்டு மர்மமாகச் சிரித்தாள்.

‘பென்ஸ் கார் வாங்கவேண்டும் என்பது என் வாழ்நாள் ஆசை. அது இத்தனை இலகுவாக ரொறொன்ரோவில் கைகூடும் என்று நான் எதிர்பார்க்கவில்லை.’ ‘ஒரு மாணவியாக இருந்துகொண்டு பென்ஸ் காரில் போய் இறங்கும்போது உங்களுக்கு சங்கடமாக இருக்காதா?’ ‘விருந்துக்கு போனால் எப்படி கார் வாங்கினாய் என்று ஒருவரும் கேட்கமாட்டார்கள். என்னை ஒரு முறை அதில் ஏற்றிப்போவாயா என்றுதான் கேட்பார்கள்.’ ‘உங்கள் பட்டப் படிப்புக்கு என்ன நடக்கும்?’ ‘ஒன்றுமே நடக்காது. என் விடுமுறையில்தானே இதை செய்கிறேன். ஓர் அனுகூலம் உண்டு. பேராசிரியர் என்னுடைய எஸ் கிளாஸ் மெர்சிடிஸ் பென்ஸ் காரை பார்த்தபிறகு வாழ்க்கையில் வெற்றி பெற என்ன என்ன செய்யவேண்டும் என்று போதிப்பதை நிறுத்திவிடுவார்.’ அவள் பெரிதாக வாய்விட்டுச் சிரித்தாள். பியர்ஸன் விமான நிலையத்தில் நீண்ட கைப்பை தோளிலே தொங்க, சில்லு வைத்த பயணப்பெட்டியை நேராக உருட்டிக்கொண்டு கயிற்றுப் பாலத்தில் நடப்பதுபோல மெதுவாக நடந்து கடைசி தூரத்தை ஓடிக் கடந்தாள். திடீரென்று நினைவுக்கு வந்து ‘உங்கள் தொலைபேசி எண்?’ என்று கத்தினேன். அவளுக்கு கேட்கவில்லை. படம் எடுத்த பின்னர் சிரித்ததுபோல எனக்கு ஏமாற்றமாகிவிட்டது. இது நடந்து நாலு வருடங்கள் ஓடிவிட்டன. இன்றுவரை அவளை தேடுகிறேன். எஸ் கிளாஸ் மெர்சிடிஸ் பென்ஸ் காரை ஓட்டும் சமூகமானிடவியல் துறை பேராசிரியரை ஒருநாள் நான் சந்திப்பேன்.


இத்தனை அனுபவங்கள் என் வாழ்க்கையில் கிடைத்திருந்தாலும் கடந்த ஆண்டு டிசம்பர் மாத ஆரம்பத்தில் நடந்த சம்பவத்துக்கு அவை என்னை தயாராக்கவில்லை. ஒரு வீட்டுக்கு போகச் சொல்லி ரேடியோவில் எனக்கு தகவல் வந்தது. அந்த மனிதர் தமிழ் பேசும் சாரதி வேண்டும் என்று கேட்டிருந்தார். தாறுமாறாக உடையணிந்த 65 வயது ஆள் எனக்காகக் காத்துக்கொண்டு பழைய கட்டிடத் தொகுதி ஒன்றின் முன் தோள்மூட்டில் கிழிந்த மேலங்கியுடன் நின்றார். ஒரு கட்டடம் அதன் மேலேயே விழுவதுபோல அவர் உடம்பு உடைந்து கொண்டிருந்தது. மூச்சுவிட எடுக்கும் உழைப்புக்கான பிராண வாயு அவர் இழுக்கும் சுவாசத்தில் கிடைக்கவில்லை என்று நினைக்கிறேன். கைகள் இரண்டையும் மடித்து நெஞ்சுக்கு முன்னால் ஒரு பையை பிடிப்பது போல பிடித்திருந்தார். மெல்லிதாக விரல்கள் நடுங்கின. ‘நீங்கள்தானா தமிழ் பேசும் டிரைவரை கேட்டது?’ ’ஓம் நான் தான்.’ ‘என்ன விசயம்?’ ’நான் பொலீஸ் ஸ்டேசனுக்கு போய் ஒரு முறைப்பாடு கொடுக்கவேண்டும். நீங்கள் மொழிபெயர்க்கவேண்டும்.’ மனிதரைப் பார்க்க பாவமாக இருந்தது. ‘சரி’ என்றேன்.

ஒரு வாரமாக சவரம் செய்யாத முகம். முன்னுக்கு நீண்ட தாடை. அவர் கதைக்கும்போது கழன்று விழுந்துவிடுமோ என்று அச்சம் தோன்றும்விதமாக ஆடியது. கண்ணாடியில் பார்த்தேன். பின் சீட்டில் பெரும் யோசனையோடு அமர்ந்திருந்தார். மனதை என்னவோ செய்தது. ‘தனியாகவா இருக்கிறீர்கள்?’ ‘எனக்கு ஒரு மகள் இருக்கிறார். பெரிய உத்தியோகம். அடிக்கடி பயணம் செய்வார். எங்கே நின்றாலும் தொலைபேசியில் அழைப்பார். மூன்று நாட்களாக தகவல் இல்லை. எனக்கு வேறு ஒருவரும் இல்லை.’ மனிதர் விக்கி அழத்தொடங்கினார். ‘கவலைப்படாதீர்கள். அவர் எங்கோ பிஸியாக இருக்கிறார். உங்களுக்கு நல்ல சேதி வரும்.’ என்று ஆறுதல் கூறினேன்.

இதற்கிடையில் பொலீஸ் ஸ்டேசன் வந்துவிட்டது. வரவேற்பு யன்னலில் இரண்டு பொலீஸ்காரர்கள் கறுப்பு உடையில் அமர்ந்திருந்தார்கள். அவர்களிடம் விசயத்தை சொன்னேன். முதியவரிடம் பெயரைக் கேட்டார்கள். அவர் ‘சந்திரசேகரம்’ என்று சொன்னார். ‘உள்ளே போய் அமருங்கள். உங்கள் கேசை விசாரிக்கும் பொலீஸ்காரர் உங்களிடம் வந்து பேசுவார்.’ நாங்கள் உள்ளே போனோம். அங்கே இன்னும் சிலரும் காத்திருந்தார்கள். இருக்கை ஊத்தையாகிவிடும் என்பதுபோல பாதி சோபாவில் பாதி பிருட்டத்தை வைத்து உட்கார்ந்தார். நான் பக்கத்தில் அமர்ந்தேன். நடுவில் அச்சம் கிடந்தது. இரண்டு பக்கமும் திரும்பி திரும்பி பதற்றத்துடன் கிழவர் பார்த்தார். அவருடைய நடுக்கம் சற்று அதிகமானது.

எங்களுக்கு முன்னே இருந்த சுவரில் ‘காணாமல்போனவர்கள்’ என்ற தலைப்பின் கீழ் பல படங்கள் ஒட்டியிருந்தன. பெரியவர் உட்கார்ந்தவாறே அவற்றை பார்வையிட்டுக்கொண்டு வந்தார். ‘உங்கள் மகளின் பெயர் என்ன?’ என்று கேட்டேன். ’அழகுராணி. நான்தான் அழகுராணி அழகுராணி என்று அழைப்பேன். அவளுக்கு பிடிக்காது. அதைச் சுருக்கி ‘அல்கா’ என்று பெயர் வைத்திருந்தாள்.’ ‘அல்காவா?’ பெரியவர் பதில் சொல்லவில்லை. திடீரென்று எழுந்து நின்று ஒரு படத்தை உன்னிப்பாகப் பார்த்தார். நானும் எழுந்து நின்றேன். படத்தின் கீழே ‘அல்கா கென்யாட்டா’ என்று எழுதியிருந்தது. பெண்ணின் டீசேர்ட்டில் TAIBU என்ற வார்த்தை காணப்பட்டது. மூன்று நாட்களுக்கு முன்னரே கணவன் அவள் தொலைந்து போனதாக முறைப்பாடு செய்திருந்தான்.

‘மிஸ்டர் சந்திரசேகரம், மிஸ்டர் சந்திரசேகரம்’ என அழைத்தபடி ஒரு பொலீஸ்காரர் எங்களை நோக்கி வந்தார். பெரியவர் திரும்பியும் பார்க்கவில்லை. நெஞ்சுக்கு கிட்டப் பிடித்த அவருடைய கைவிரல்கள் கட்டுமீறி
ஆடத்தொடங்கின.



muththulingam.a@thaiveedu.com

# ஜெனா கே. சிவா இயக்கிய கனடியத் தமிழ்த் திரைப்படம் 'கோன்' முதல் காட்சி (Premiere) ஓகஸ்ட் 09, 2014 இல் யோர்க் சினிமாவில் நிகழ்ந்தபோது...












எமது புதிய அறிமுகம்!!
கஸ்தூரி மஞ்சள் உள்ளிட்ட
பல மூலிகைகள் கொண்டு
தயாரிக்கப்பட்ட கிரீம்
Total Herbal Face Care and
Herbal Whitening Solution!!
Kasturi TURMERIC TOTAL FACE CARE CREAM
Herbal Whitening Solution
Kasturi TURMERIC & SANDALWOOD Day Cream
White & Beautiful Skin
சருமத்தை பாதுகாப்பாகவும் பொழிவாகவும் பேண
நம் மூதாதையர் பாரம்பரியமாக பயன்படுத்திய
கஸ்தூரி மஞ்சள் கொண்டு தயாரிக்கப்பட்ட முக சரும பராமரிப்பு!!
25% OFF
Ervamatin
Hair Lotion
எவமாட்டின் மூலிகை
லோசன் மற்றும் சாம்பூ
ஒவ்வாமை அற்ற
முடி மை
மூலிகை தரும்
இன்னுமோர் அற்புதம்!!
Ervamatin Hair Lotion Loción Capilar
SHAMPOO
Dreamron HAIR CARE
semi-permanent
ECO
Hair Color
Specially for;
the people who are allergy to regular hair colorants
முடி உதிர்வை தடுப்பதுடன்
புதிய முடி வளர்ச்சிக்கு ஊக்கம்
அளிக்கிறது. கபாளத்தில் பொடுகைப்
போக்குவதுடன் மூலிகை முடியை செழிப்பாக
வைத்திருக்கு உதவுகிறது.
Specially for;
the people who are allergy to regular
Hair cololrants...
Dreamron
HENNA
Treated Natural Henna
மூலிகை
முடி மை!!
ஊழைச்சதை நீக்கி!!
Gluteala HERBAL DRINK
மூலிகைகள், உடலின் தேவைக்கதிமாக
உள்ள ஊழைச்சதையை நீக்கி
தேக ஆரோக்கியத்தைப் பேணுகின்றன.
சலரோக நிவாரணி!!
Diabina HERBAL DRINK
மூலிகைகள், உடலின் குளுக்கோஸ்
அளவை பராமரிப்பதுடன்
இரத்த ஓட்டத்தை சீராக வைத்திருப்பதற்கு
துணையாய் இருக்கின்றன.
SABONA & Gift
BBB ACCREDITED BUSINESS
Tel: 416 264 8787
www.amazonhealthcare.ca
2602, Eglinton Ave East. (Midland/Eglinton)



PROPERTY MAX
HIGHER ACHIEVEMENTS
Realty Inc. Brokerage
WHERE PROPERTIES SOLD AT IT'S BEST!
நீங்கள் என் மூலமாக வீடு வாங்கினாலோ விற்றாலோ
LEGAL FEE
PROPERTY EVALUATION
MORTGAGE COUNSELING
இலவசம்!!
SPECIALIZE IN RESIDENTIAL AND COMMERCIAL
Direct: 416.844.7390
Office: 416.291.3000 / Fax: 416.321.0413 Email: vkanapat@yahoo.ca
6888 14th Avenue E , Markham,On. L6B 1A8
Varna Kanapathipillai, B.Sc.(Eng.)
Sales Representative
Sold
Sold:$410,000
List:$419,900
41 Pleasantview Ave
Brampton Ontario L6X1W6
Brampton Brampton West Peel
Sold
Sold:$442,000
List:$459,900
142 Janray Dr
Toronto Ontario M1G1Y9
Toronto E09 Woburn Toronto 111-35-J
Sold
Sold:$420,000
List:$424,900
5 Northfield Rd
Toronto Ontario M1G2H3
Toronto E09 Woburn Toronto 111-37-J
B.V.F
BRIGHT VISION FINANCIAL CORP.
Securing your Family's Future
இல்
சேவை ஆற்றும் முன்னணிக் காப்புறுதி முகவர்கள்
சகலவிதமான காப்புறுதி தேவைகளுக்கும் இவர்களை அழையுங்கள்
416-623-4937
Varna Kanapathipillai, B.Sc.(Eng.)
Sales Representative
Direct: 416.844.7390
Vee Kanagasabai
Insurance Advisor
Panusha Poologasuntharanathan
Insurance Advisor
Jay Gandhi
Insurance Advisor
Param Nandakumar
Insurance Advisor
Priya Lloyd
Insurance Advisor
Goby Subramaniam
Insurance Advisor
Bruntha Ratnaganthy
Insurance Advisor
Prasatch Srirajah
Insurance Advisor
Vanaja Prasath
Insurance Advisor
Sathi Muthiah
Insurance Advisor
Vigneswaran Aiyadurai
Insurance Advisor
இதில் உங்கள் பெயரும் இடம்பெற
416-623-4937
SUPER VISA INSURANCE 100% REFUND
(ON VISA REJECTION)
416.623.4937 416.321.0413
80 Nashdene Road, Unit B28, Scarborough
உங்கள் வருமான வரித்தேவைகளை பூர்த்தி செய்ய
647.309.7177

# Agent of the Month
# August 2014

Inforce Life proudly recognises our
**Agent of the month**
for her hard work and dedication.

## Congratulations!

Insurance Solutions for
LIFE | HEALTH | GROUP
Investments

QUALITY ADVICE YOU CAN TRUST!



Nilani Chelliah

INFORCE LIFe
Financial Services Inc.

Bus: 416 321 6000
www.inforcelife.com
career@inforcelife.com
10 Milner Business Court, Suite 707, Scarborough ON M1B 3C6

## Join Our Dynamic Team



## *There is a treatment for Autism.....*





மதியிறுக்கமுள்ள குழந்தைகளை அடையாளம்
கண்டு சிகிச்சை அளித்தல்

*I may be*
**AUTISTIC,**
*but there is a*
**HERO**
*in me screaming to*
*be let out*



Putting the Pieces Together
ABA
TORONTO

*Center for Applied Behaviour Analysis*

தமிழிலும் உரையாடுவோம்

416-613-1922

www.abatoronto.com

190 Shorting Road, Toronto, ON. M1S 4A4

# இலக்கியத் திறனாய்வியலின் இயங்குநிலை

**பகுதி: 18**

- நா. சுப்பிரமணியன் -

இத்தொடரில் முன்னைய கட்டுரையின் பிற் பகுதியிலே தமிழரின் பண்டைய திறனாய்வியல் சிந்தனையாக விளங்கிய பொருளிலக்கண மரபு பற்றிய பார்வைக்குத்தோற்றுவாய் செய்யப்பட்டது. அவ்வகையில் அம் மரபின் வரலாறு, வளர்ச்சி மற்றும் மாற்றங்கள் என்பன தொடர்பான பொதுநிலை அறிமுகக் குறிப்புகள் அதில் பதிவாயின. அம் மரபின் காலமுதன்மையுடைய சான்றாதாரமான தொல்காப்பியத்தின் 'பொருளதிகாரப் பகுதியின் அமைப்பு தொடர்பான பொதுச் செய்திகளும் அங்கு முன்வைக்கப்பட்டன. மேற்படி பதிவுகளின் தொடர்ச்சியாக இங்கே மேற்படி பொருளதிகாரத்தின் ஊடாகப்புலப் பட்டுநிற்கும் பொருளிலக்கண மரபின் கோட்பாட்டுநிலைகள்சார்ந்த முக்கிய அம்சங்கள் கவனத்துக்கு இட்டு வரப்படுகின்றன.

## தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் கோட்பாட்டுநிலை முக்கிய அம்சங்கள்:

தொல்காப்பியத்தின் பொருளதிகாரம் சுட்டும் பொருளிலக்கண மரபானது தமிழின் தொன்மையான இலக்கியம் எனப்படும் சங்க இலக்கியம் சார்ந்த சூழலுடன் மிக நெருக்கமான தொடர்புடையதாகும். சங்க இலக்கியம் என்றவகையில் இன்று நமக்குக் கிடைக்கும் எட்டுத்தொகை மற்றும் பத்துப்பாட்டு நூல்களின் பாடல்கள் ஏறத்தாழ கி.மு. 300 ஆண்டுகள் முதல் கி.பி. 300 ஆண்டுகள் வரையான காலப்பகுதியின் ஆக்கங்கள் என்பது பொதுவாகப் பலராலும் ஒப்பு கொள்ளப்பட்ட கருத்தாகும். இப்பாடல்களின் காலகட்ட சமூகத்தில் நிலவிய இலக்கியம் தொடர்பான இலக்கணநிலைப்பட்ட சிந்தனைகளின் திரட்சியாகவே மேற்படி தொல்காப்பிய நூலின் பொருளதிகாரம் எமது கவனத்துக்கு வருகின்றது.

சங்கப் பாடல்கள் என்றவகையில் நமக்குக் கிடைப்பன புலவர்களின் ஆக்கங்களாக எழுத்து நிலையில் வெளிப்பட்டவையாகும். இவ்வாறான எழுத்துநிலைப் பதிவுகளான சங்கப்பாடல்களின் உருவாகத்துக்கு முன்னர் செழிப்பானதொரு வாய்மொழிப்பாடல் மரபு தமிழில் நிலவிவந்திருக்க வேண்டும் என்பது ஊகித்துணரப்படுவதாகும். மேற்சுட்டியவாறான வாய்மொழி மரபிலிருந்து எழுத்து நிலைக்குத் தமிழிலக்கியம் மாற்ற மடையத் தொடங்கிய காலகட்ட சூழலையே சங்க இலக்கியப்பரப்பு நமக்கு உணர்த்தி நிற்கின்றது. அவ்வாறான எழுத்திலக்கியங்கள் உருவானபோது அவற்றின் கட்டமைப்புகளை இலக்கண நிலைப்படுத்தும் சிந்தனைகளும் படிப்படியாக உருவாகி வளர்ந் திருக்கலாம் என்பது ஊகித்துணரப்பட வேண்டியதாகும். இவ்வாறான இலக்கணநிலைப் பட்ட சிந்தனைகளின் ஒரு காலகட்ட வளர்ச்சி நிலையையே மேற்படி தொல்காப்பியத்தின் பொருளதிகாரம் நமக்குக் காட்டிநிற்கிறது. அதன் நூற்பாக்களில் இடம்பெற்றுள்ள 'என்ப', 'என்மனார் புலவர்' முதலியனவாக அமைந்த கூற்றுகள் அந்நூலுக்குச் சம காலத்திலும் அதற்கு முன்னரும் நிலவிய இலக்கண நிலையிலான பல்வகைக் கருத் தாக்கங்களை அந்நூல் திரட்டித் தொகுத்து நோக்க முயன்றமையை உணர்த்துவன வாகும்.

இவ்வாறு தொல்காப்பியப் பொருளதிகாரம் கூறமுற்பட்ட பொருளிலக்கணத்தின் ஊடாகப் புலப்படும் அன்றைய காலகட்ட இலக்கியச் சிந்தனைகளில் நாம் கவனத்திற் கொள்ளவேண்டிய முக்கிய அம்சங்களை பின்வரும் மூன்று முக்கிய வகைகளில் அடக்கலாம் அவையாவன:

அ. இலக்கிய ஆக்கத்தின் உள்ளடக்கநிலை தொடர்பான கருத்துநிலைகள்

ஆ. இலக்கியத்தின் உணர்த்துமுறைக்கூறுகள் குறிப்பாக, உத்திமுறைமைகள் மற்றும் மொழிசார்ந்த கட்டமைப்புநிலைகள் என் பன தொடர்பான கருத்துநிலைகள்

இ. இலக்கியமானது வாசகரிடத்து ஏற்படுத்தக்கூடிய உணர்வுத்தாக்கம் மற்றும் அதன் பயன்பாட்டுநிலை என்பன தொடர்பான கருத்துநிலைகள். (குறித்த ஒரு ஆக்கத்தை வாசகர் பொருளுணர்ந்து புரிந்து கொள்ளல், அதனால் ஏற்படும் அநுபவத்தில் திளைத்தல் மற்றும் அவ்வாக்கத்தின் சமூகப் பயன்பாட்டுநிலை என்பனதொடர்பான கருத்தாக்கங்களையே இது சுட்டிநிற்கிறது.)

மேற்படி மூன்று அம்சங்கள் பற்றியும் தொல்காப்பியக்கால இலக்கியச்சமூகம் சிந்தித்துள்ளது என்பது இங்கு முதலிற் குறிப்பிடப்படவேண்டிய முக்கிய செய்தியாகும். மேற்படி அம்சங்கள் தொடர்பில் சில முக்கிய செய்திகளை இங்கு சுருக்கமாக நோக்கலாம்.

இலக்கிய ஆக்கத்தின் உள்ளடக்கநிலை தொடர்பாக...

தொல்காப்பியம் சங்க இலக்கியச் சூழலுடன் தொடர்புடையதுதென்பது மேலே நோக்கப் பட்டது. அவ்வகையிலே முதற்கண் சங்கப் பாடற்பரப்பின் உள்ளடக்க நிலைபற்றிய விளக்கக் குறிப்பொன்று இங்கு அவசியமாகின்றது.

சங்கப்பாடற் பரப்பின் ஒருவகையானவை புகழ்பாடுதல் குறிப்பாகத் தலைவர் புகழ் பாடுதல்' என்ற நோக்கில் அமைந்தவை யாகும். சமூகத்தில் அதிகார நிலையிலும் பொருள் நிலையிலும் உயர்ந்திருந்தவர்களான மன்னர்கள் மற்றும் குறுநில ஆட்சியாளர்கள் ஆகியோரும் வாரிவழங்கும் மனப்பாங்குடன் திகழ்ந்தவர்களான வள்ளல்களுமே இங்கு தலைவர்கள் எனச் சுட்டப்படுகின்றனர். அவ்வகையில் குறிப்பாகச் 'சமூக மட்டத்தில் வசதிகள்படைத்தவர்களும் அதிகாரச் சூழல்களை மையப்படுத்தியவர்களுமான மாந்தரைப் புகழ்ந்து பாடும் முறைமை'யாகவே இது அமைந்திருந்தது.

இவ்வாறான இப்பாடல் முறைமையிலே மேற் குறித்த வகையினரின் வீரம், ஆட்சித்திறன், கொடைச்சிறப்பு முதலியஅம்சங்களே பாடு பொருள்களாக அமைந்திருந்தன. இம்முறைமைக்கான முக்கிய சான்றுகளாக புறநானூறு தொகுப்பின் முற்பகுதியிலுள்ள பல பாடல்களைக் காட்டலாம்.

இவ்வாறான புகழ்பாடும் முறைமையானது நாளடைவில் தெய்வங்களின் ஆற்றல்களையும் அருள்திறன்களையும் பாடும் முறைமையாகவும் வளர்ச்சிபெறுவதைச் சங்கப் பாடல் மரபிலே நோக்கியுணரமுடியும். (உ-ம் பரிபாடல் மற்றும் திருமுருகாற்றுப்படை)

சங்கப் பாடற்பரப்பின் இன்னொருவகையானவை அறம் மற்றும் ஒழுக்கம் தொடர்பான சிந்தனைகளின் பதிவுகளாக அமைந்தவை யாகும். இவை அறிவுரைப் பண்புடையன. வேறொருவகைப் பாடல்கள் அக்காலச்சமூகவாழ்வியலின் பல்வேறுநிலைப்பட்ட அநுபவங்களின் பிரதிபலிப்புகளாக வெளிப்பட்டவையாகும். மேற்குறித்த புறநானூறுதொகுப்பிலே இத்தகு பாடல்கள் பல இடம் பெற்றுள்ளன.

மேற்குறித்தவை தவிர , சங்கப்பாடற்பரப்பின் பெரும் பகுதியான பாடல்கள் ஆண் - பெண் உறவு தொடர்பான – குறிப்பாக காதல் மற்றும் குடும்பவாழ்வியலுடன் தொடர்புடைய-கவித்துவவெளிப்பாடுகளாகும். உ-ம்.குறுந் தொகை, நற்றிணை முதலிய தொகுப்புகளிலமைந்த பாடல்கள் இவ்வகைமைக்குச் சான்றுளாக அமைவன.

மேற்படி வகைகளுள் முதல் மூன்றும் அக் கால இலக்கியப் பார்வையில் 'புறத்திணை' என்ற பெயரிலான ஒரு பொது இலக்கண வகைமைக்குள் அடக்கப்பட்டன. சமூகத்தின் புறநிலையான பொது வாழ்வியல் சார்ந்த விடயங்கள் என்பதே புறத்திணை என்பதன் விளக்கமாகும்.

நான்காவதான ஆண்-பெண் உறவு சார்ந்த பாடல்கள் மேற்படி இலக்கியப் பார்வையில் 'அகத்திணை' என்ற பெயர்சுட்டி வகைப்படுத்தப்பட்டன. இங்கே அகம் என்றசொல் உள்ளம் சார்பு என்ற பொருள் தந்துநிற்பதாகும்.

மேற்படி இரு வகைமைகளிலும் பாடல்கள் உருவாகும் முறைமைகளில் அக்காலத்தில் வேறுபாடுகள் நிலவிவந்துள்ளன. புறத்திணைப் பாடல்கள் பலவும் புலவர்களின் அநுபவங்களின் நேரடியான (உடனடியான) உணர்வெழுச்சிகளின் வெளிப்பாடுகளாக அமைந்தவையாகும். அதாவது அப்பாடல்களைப் பாடிய புலவர்கள் நேரடியாகவே –அதாவது புலவர் என்பதான தம் நிலையில் நின்றுகொண்டே- உணர்வுகளை வெளிப்படுத்தியுள்ளனர். அவ்வகையில் அவைபலவும் இயல்பான உணர்வெழுச்சிகளின்வெளிப்பாடுகளாகும்.

ஆனால், அகத்திணைப் பாடல்கள் அவ்வாறான இயல்பான உணர்வெழுச்சியின் வெளிப்பாடுகளல்ல. மாறாக, அவை புலவர்கள் தம்மை ஒரு பாத்திரமாக - அதாவது தலைவன் (காதலன்-கணவன்), தலைவி (காதலி- மனைவி), தோழி, செவிலித்தாய் (வளர்ப்புத்தாய், நற்றாய் (பெற்றதாய்) முதலான குடும்ப - சமூக மாந்தராகக் கற்பித்துக்கொண்டு நின்று பாடியவை.

மேற்படி புறத்திணை மற்றும் அகத்திணை சார் பாடல்களின் இன்னொரு முக்கிய வேறுபாட்டையும் இங்கு சுட்டுவது அவசியமாகிறது. புறத்திணைப் பாடல்கள் பலவும் சமூகத்தின் நிஜ மாந்தர்களை முன்னிறுத்துபவை. ஆனால் அகத்திணைப் பாடல்கள் கற்பனை மாந்தரையே மையப்படுத்தி உருவானவையாகும். அகத்திணைப்பாடல்களில் இடம்பெறும் மாந்தர்கள் 'இன்னார் பெயர்சுட்டி அறியப்படுபவர்களாக அமையக் கூடாது' என ஒரு வரையறை கூட அன்று நிலவியது என்பது இங்க குறிப்பிடப்பட வேண்டியதாகிறது.

சங்க இலக்கியம் புலப்படுத்திநிற்கும் இவ வாறான படைப்புச் செயற்பாடுகள் தொடர் பான அம்சங்களையே தொல்காப்பியப் பொருளதிகாரம் எடுத்துரைக்கின்றது. அதா வது மேற்படி சங்க இலக்கியப் படைப் புச்செயற்பாடுகள் தொடர்பான இலக்கண மயப்பட்ட சிந்தனைகளையே மேற்படி பொரு

> **வருகின்ற வழியில் உள்ள மலர்களில்**
> **துணைவியருடன் தேனருந்தும் வண்டினங்கள்**
> **தேரின் மணியோசையால்**
> **வெருட்சியடைந்துவிடக்கூடாது**
> **என்ற இரக்கவுணர்வு காரணமாக**
> **அவன் தனது தேரின் மணி நாக்கை**
> **இறுக்கிக் கட்டியுள்ளான்.**

தொடர்தல் 104ம் பக்கம்

சொர்க்கமே என்றாலும் அது சொந்த வீடு போல வருமா...

Uthayan Alex Sivasambu B.Sc. (Hons), M.B.A

Broker

Ottawa: 613.276.SALE (7253)

Toronto: 416.659.SELL (7355)

alex-sivasambu@coldwellbanker.ca, www.sivasamburealty.com

COLDWELL BANKER



# இலக்கியத் திறனாய்...

103ம் பக்கத் தொடர்ச்சி...

ளதிகாரம் தொகுநிலைப்படுத்தி எடுத்துரைக்கின்றது. அகத்திணை மற்றும் புறத்திணை ஆகிய பெயர்களிலமைந்த அதன் முதலிரு இயல்கள் இதனைத் தெளிவுபடுத்துவனவாகும். இவ்விரு திணைகள் சார்ந்தும் உருவாகும் உணர்வுக் கூறுகள் பற்றிச் சுட்டி அவை பாடலாக வெளிப்படும் முறைமையை அது விரிதந்துரைக்கின்றது.

தொல்காப்பியத்தின் புறத்திணையியலானது பெரிதும் மன்னர்களின் போர்ச்சூழலை மையப்படுத்திய பாடல்முறைமைகளைப் பற்றியே விரித்துப் பேசுகிறது என்பது இங்கு நமது கவனத்துக்குரியது. அகம்சார்ந்த உணர்வுக் கூறுகளை மேற்படி அகத்திணையியல் தவிர 'களவியல்' 'கற்பியல்' மற்றும் 'பொருளியல்' என்பனவும் விரித்துரைத்துள்ளன.

தொல்காப்பியப் பொருளதிகாரம் புலப்படுத்திநிற்கும் மேற்படி இலக்கிய உள்ளடக்க அம்சங்கள் தொடர்பாக இங்கு நாம் கவனத்திற் கொள்ளவேண்டிய முக்கிய அம்சம் அவை குறித்துநிற்கும் பொருண்மைக்கூறுகள் அக்கால உலகியல் வாழ்க்கை சார்ந்தவை என்பதாகும். அதாவது சூழவுள்ள குடும்ப - சமூக வாழ்வின் அநுபவங்களிலிருந்து பெறப்பட்டனவாகவே அந்த உள்ளடக்க அம்சங்கள் அமைந்தன என்பதே இங்கு நமது கவனத்துக்குரியதாகிறது.

## அகத்திணைப் பாடலின் உருவாக்கம் தொடர்பான சில சிறப்புச் செய்திகள்:

தொல்காப்பியப் பொருளதிகாரமானது அகப்பொருட்பாடலின் உருவாக்கம் தொடர்பாக சில சிறப்புச்செய்திகளை முன்வைத்துள்ளது. அவை தொடர்பான ஒரு சில விளக்கம் இங்கு அவசியமாகிறது.

பொருளதிகாரமானது அகப்பாடலின் அடிப்படையான உணர்வு அம்சத்தை உரிப்பொருள் எனக்குறிப்பிடும். அவ்வுரிப்பொருளானது பாடலாவதற்குத் துணை நிலையாக அமையும் சூழமைவுக்கூறுகளை அது முதற்பொருள் (நிலம், காலம்) மற்றும் கருப்பொருள் (சூழல்சார் பிற கூறுகள்) என்பனவாக அவ்விலக்கணம் சுட்டிவிளக்கி நிற்கிறது. இவ்வாறான விளக்கமுறைமையானது, இலக்கியத்துக்கான உணர்வம்சத்துக்கும் வாழ்வியற் சூழலுக்குமுள்ள உறவைப்பற்றிய விடயங்களை நுனித்து நோக்கி விளக்கியுரைப்பதில் அக்கால இலக்கணகாரர் கொண்டிருந்த ஆழமான ஈடுபாட்டை உணர்த்துவதாகும்.

*தாய்வீடு பத்திரிகை பற்றிய*
*விமர்சனங்களை*
*எதிர்பார்க்கின்றோம்.*
*விமர்சனங்கள் எம்மை ஓர்*
*ஆரோக்கியமான*
*பாதையில் இட்டுச்செல்லும்.*

*E-mail: info@thaiveedu.com*
*Fax: 416-849-0594*
*Tel: 416-646-3422*

குறித்த உணர்வம்சமான உரிப்பொருளானது இலக்கியமாக உருவாவதற்கான உணர்த்துமுறைச் செயற்பாடுகளை உத்திமுறைகள் என நாம் வழங்குகிறோம். இவ்வுத்திமுறைகள் இருவகைப்படுவன. இவற்றுளொன்று, குறித்த உணர்வம்சமானது இலக்கியமாவதற்கான பொதுநிலை அடிப்படை உத்தியாகும். இதனை அகவடிவம் அல்லது அகவுரு வடிவம் என நாம் வழங்குகின்றோம். இன்னொன்று இலக்கியமானது கட்டமைக்கப்படும் நிலையில் கவனத்திற் கொள்ளவேண்டிய செயன்முறை உத்தியாகும். இவ்விருவகை தொடர்பாகவும் தொல்காப்பியம் சில முக்கிய சிந்தனைகளை முன்வைத்துள்ளது என்பது இங்கு குறிப்பிடப்படவேண்டிய முக்கிய செய்தியாகிறது. இவை 'நாடக வழக்கு' மற்றும் 'நோக்கு' எனபனவாகும்.

## நாடக வழக்கு:

அகத்திணையியலில் அமைந்த 56ம் நூற்பா. 'நாடகவழக்கு', 'உலகியல் வழக்கு' மற்றும் 'புலனெறி வழக்கு' என மூன்று வழக்குகள் பற்றிப் பேசுகிறது. அந்நூற்பா வருமாறு:

"நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலநெறி வழக்கம்
கலியே பரிபாட்டு ஆயிரு பாவினும்
உரியதாகும் என்மனார் புலவர்.

இந்நூற்பாவின் முதலிரு அடிகளே இங்க நமது கவனத்துக்குரியன.

மேற்படி நூற்பா முதலிரு அடிகளுக்குப் பண்டைய உரையாசிரியர்களும் கடந்த நூற்றாண்டின் ஆய்வாளர்களும் பலநிலை விளக்கங்களைத் தந்துள்ளனர். உரையாசிரியர்களின் பார்வைகள் என்றவகையில் இளம்பூரணர் மற்றும் நச்சினார்க்கினியர் ஆகியோர் தரும் விளக்கங்கள் இங்கு நாம் நோக்கத்தக்க முக்கியத்துவமுடையன. இளம்பூரணர், 'நாடக வழக்காவது சுவைபட வருவனவெல்லாம் ஓரிடத்து வந்தனவாகத் தொகுத்துக் கூறுதல்' என்றும் 'உலகியல்வழக்காவது உலகத்தார் ஒழுகலாற்றோடு ஒத்து வருவது' என்றும் விளக்கம் தருகிறார்.

மேற்படி நூற்பாவரிகளுக்கு நச்சினார்க்கினியர் விளக்கம் தரும்பொழுது, 'நாடக வழக்கு' என்பதைப் 'புனைந்துரைவகை' என்கிறார். புலனெறிவழக்கு என்பதற்கு அவர் பொருள்கூறுமிடத்து, "புனைந்துரை வகையானும் உலக வழக்கத்தானும் புலவராற் பாடுதற்கமைந்த புலவராற்று வழக்கம்" என்கிறார். இத்தொடர்பில் அவருடைய உரை சுவைபட விரிந்து செல்கிறது.

மேற்குறித்தவாறாக நாடகவழக்கினும்... என்ற நூற்பாவுக்கு இளம்பூரணர் மற்றும் நச்சினார்க்கினியர் ஆகியோர் தந்துள்ள கருத்துகளைத் தொகுத்துநோக்கிய பேராசிரியர் தமிழண்ணல் அவர்கள், 'இளம்பூரணரின் உரையின்படி, உலகியல் வழக்கு என்பது பாட்டின் அடிக்கருத்தாக(Theme) ஆகக் கொள்ளக்கூடியது என்றும் நாடக வழக்கு என்பது இக்காலத்தார் குறிக்கோளியல்(Idealism) எனச்சுட்டுவதைக் குறிப்பது' என்றும் விளக்கம் தந்துள்ளார். இவ்வாறான விளக்கங்களின் நிறைவாக அவர், "ஒரு மனநிலையை-நிகழ்ச்சியை உலகியலினின்று எடுத்துக்கொண்டு அதனை இலக்கியமாக உருமாற்றும் புனைதிறனே நாடகவழக்கு என்பது போதருகின்றது... இலக்கியத்திற்கு அடிக்கருத்தை உதவும் அத்துணை அளவிற்றே உலகியல் வழக்கு. நாடகவழக்கே இலக்கியத்தை இலக்கியமாக்குவது"

என்ற குறிப்பை முன்வைத்துள்ளார். (தமிழண்ணல், சங்க இலக்கிய ஒப்பீடு. 1985. பக். 22-23).

மேற்படி நூற்பா மற்றும் அவற்றின் உரை என்பவற்றை நுனித்து நோக்கிய பேரறிஞர்களிலொருவரான பேராசிரியர் கா.சிவத்தம்பியவர்கள் நச்சினார்க்கினியர் கூறிய 'புனைந்துரை'பற்றிய விளக்கத்திலே,"புனைந்துரை என்பது புனையப்பட்ட, அதாவது இப்படியாக நிகழ்ந்தது என்று கற்பனைநிலைப்படுத்திக் கூறுதலாகும். இதனை ஆங்கிலத்தில் Imagined situation என்றோ அல்லது fictional situation என்றோ கூறலாம். அதாவது, 'உலகியலில் காணப்படுவதைப் புனைந்து கூறுவதாகும்' என்கிறார். (கார்த்திகேசு சிவத்தம்பி, தமிழின் கவிதையியல்-2007. ப.31 )

இவ்வாறான விளக்கங்களை நோக்கும்போது தொல்காப்பியம் நாடகவழக்கு எனச் சுட்டிய அம்சமானது இலக்கிய ஆக்கத்தின் அகவுரு என நாம் கருத இடமுண்டாகிறது. உலகியல் அநுபவங்களூடாகத் தேர்ந்து கொள்ளப்பட்ட அடிக்கருத்தானது புறநிலையான மொழி வடிவம் எய்துவதற்கு முன்னர் தன்னைக் கட்டமைத்துக் கொள்ளும் அகநிலை வடிவமே –அகவுருவே - நாடகவழக்கு என்பதால் சுட்டப்பட்டது என்ற முடிவுக்கு நாம் வரமுடிகின்றது.

நாடகவழக்கு பற்றிய இவ்விளக்கத்தை இத்துடன் நிறுத்தி, அடுத்து செயன்முறை உத்திகளிலொன்றான 'நோக்கு' என்பது பற்றி நோக்கலாம்.

## நோக்கு:

தொல்காப்பியச் செய்யுளியலிலே செய்யுளின் உறுப்புகளிலொன்றாக 'நோக்கு' சுட்டப்பட்டுளது. அதற்கான நூற்பா வருமாறு:

'மாத்திரை முதலா அடிநிலை காறும்
நோக்குதற் காரணம் நோக்கெனப் படுமே'

(தொல்... செய்யுளியல்-நூற்பா: 100)

'ஒரு பாடலில் பயிலும் அனைத்துச் சொற்களும் அவற்றின் ஓசைக்கூறுகளும் கூட பாடலின் மையப்பொருளான (உரிப்பொருளான) உணர்வு அம்சத்தைக் குவிமையப்படுத்தி கட்டமைக்கப்படும் முறைமையே 'நோக்கு' ஆகும்' என்பது இதன் தெளிபொருளாகும். ஒரு பாடலில் இடம்பெறும் மாத்திரை, அசை, சீர் ஆகிய ஓசைக் கூறுகளில் ஒன்றை மாற்றினாலும்கூட பாடலின் உணர்வம்சமானது குறைவுபட்டு விடும் என்கிற அளவுக்குப் பாடலை இறுக்கமாக அமைக்கும் செயற்பாடே இங்கு நோக்கு என்ற உத்திமுறையாகச் சுட்டப்படுகின்றது. திரும்பத்திரும்ப எவ்வகையில் நோக்கினாலும் எந்த ஒரு ஓசைக்கூறும் தவிர்க்கப்படத்தக்கதன்று என உணரப்படும் நிலையே இங்கு நோக்குதற் காரணம் என்பதால் சுட்டப்பட்டதாகும். இந்த உத்திமுறைமைக்குச் சிறந்ததொரு சான்றாக அகநானூறு என்ற எட்டுத்தொகை நூலின் நான்காவது பாடல் உரைகாரர்களால் எடுத்துக்காட்டப் படுகிறது. அப்பாடல் வருமாறு:

*முல்லை வைந்நுனை தோன்ற இல்ல மொடு*
*பைங்கால் கொன்றை மென்பிணி அவிழ*
*இரும்பு திரித்தன்ன மாயிரு மருப்பின்*
*புரலவல் அடைய இரலை தெறிப்ப*
*மலர்ந்த ஞாலம் புலம்புறக் கொடுப்ப*
*கருவி வானம் கதழுறை சிதறி*
*கார் செய் தன்றே கவின்பெறு கானம் !*
*குரங்குழைப் பொலிந்த கொய்சுவற் புரவி*
*நரம்பார்த்தன்ன வாங்குவள் பரிய*
*பூத்த பொங்கர்த் துணையொடு வதிந்த*
*தாதுண்பறவை பேதுறல் அஞ்சி*
*மணிநா ஆர்த்த மாண்வினைத் தேரன்*
*உதுக்காண் தோன்றும் குறும்பொறை நாடன்*
*கறங்கிசை விழவின் உறந்தை குணாது*
*நெடும் பெருங்குன்றத்து அமர்ந்த காந்தள்*
*போதவிழ் அலரின் நாறும்*
*ஆய்தொடி அரிவை மாணலம் படர்ந்தே.*

பிரிந்துசென்ற கணவனின் வரவுக்காக காத்திருக்கிறாள் காதல் மனைவி. மழைக்காலம் தொடங்கியதும் வரவேண்டிய அவன் வந்தடையவில்லையே என்பது அவளது ஏக்கம். அவன் இதோ வந்துகொண்டிருக்கிறான் என அவளுக்கு ஆறுதல் கூறுகிறாள் தோழி. இதுதான் இப்பாடல் தரும்செய்தியாகும்.

முதல் ஏழு அடிகள் கார்காலம் இப்போதுதான் தொடங்குகிறது என்பதைக் குறித்து நிற்பன. அடுத்த ஆறு அடிகள் கணவன் வந்து கொண்டிருக்கின்றான் என்பதை உணர்த்துவன. இறுதி நான்கு அடிகள் தலைவி தலைவனைப் பிரிந்து நெடுநாள் ஆகவில்லை என்பதை உணர்த்துவன. இப்பாடலை இவ்வாறு மூன்று பகுதிகளாகப் பகுத்துக்கொண்டு தொல்காப்பிய உரைகாரர்களிலொருவரான பேராசிரியர் தந்துள்ள விளக்கம் இலக்கிய ஆர்வலர்களுக்கு மிகு சுவை பயப்பதாகும்.

'தொழில் நிமித்தமாகப் பிரிந்துசென்ற கணவன் அதனை முடித்து மீண்டு வருகின்றான் என்றால் அவனது தேரின் மணியோசை கேட்கவில்லையே' என்ற ஐயம் மனைவிக்கு எழும். இந்த ஐயம் எழாத வகையில் தோழி நுட்பமாக ஆறுதல் கூறுகிறாள். "அவன் வருகின்ற வழியில் உள்ள மலர்களில் துணைவியருடன் தேனருந்தும் வண்டினங்கள் தேரின் மணியோசையால் வெருட்சியடைந்துவிடக்கூடாது என்ற இரக்கவுணர்வு காரணமாக அவன் தனது தேரின் மணி நாக்கை இறுக்கிக் கட்டியுள்ளான். அதனால்தான் மணியோசை கேட்கவில்லை" என்பதாகத் தோழியின் கூற்று அமைகிறது.

'தாதுண் பறவை பேதுறல் அஞ்சி
மணிநா ஆர்த்த மாண்வினைத் தேரன்'

என அமைந்த அடிகள் தரும் செய்தி இதுதான். இப்பாடலில் குறித்த உணர்வம்சத்தைக் குவிமையப்படுத்தும் முறைமையில் பாடலின் அனைத்துக் கூறுகளும் ஒருமுகப்பட்டு இயங்குவதைத் தரிசிக்கமுடியும்.


இவ்வாறாக, 'நோக்கு' அமையும் முறைமையை மேற்படி பாடலை மையப்படுத்தி விளக்கியவரான பேராசிரியர், 'நோக்கு அமையாத ஆக்கம் பாட்டு எனப்படாது' என்பதையும் தனது உரைப்பகுதியிற் பல இடங்களில் வலியுறுத்தியுள்ளார்.

*(தொடரும்)*



subramanian.n@thaiveedu.com





மனம் விரும்பியது போல் Brampton & Mississaugaவில் வீடு வாங்க விற்க அழையுங்கள்
CALL BEFORE YOU LIST & SEE THE DIFFERENCE
Airport/Bovaird
$329,999
Commercial Property, 3,324 sqft
Brampton, ON
Kennedy / Ellesmere
$359,900
Condo TwnHouse, 3+1 Bed, 2 Bath
Toronto, ON
Brisdale/Fairhill
$629,900
Detached, 4+2 Bed, 4 Batht
Brampton, ON
Castlemore Rd & Goreway Dr
$699,900
Detached, 5+1 Bed, 4 Bath
Brampton, ON
Hwy 7/9th Line
$709,900
Detached, 4+2 Bed, 4 Bath
Markham, ON
Dixie/Countryside
$834,900
Detached, 5 Bed, 4 Bath
Brampton, ON
Ruby Thambiah
Sales Representative
DIR 416.999.5337
BUS 905.456.1000
rubysri@hotmail.com
www.BuyandSellwithRuby.com
#1
RE/MAX
Realty Services Inc.
Brokerage*
295 Queen St E Brampton, ON L6W 3R1


To Win a New Tablet... Get a Mortgage, WinMe
iPads & Samsung Galaxies
Tablets RAFFLE
WinMe
* 2.89%
5 Yrs Fixed
* 2.40%
Closed VRM
WinMe
WinMe
Get a Mortgage & Enter automatically to WIN a Tablet,
Deal Must be submitted & funded Between Aug 1, 2014 and Nov 30, 2014
Too many inquires are not a good sign for underwriting purposes.
To avoid too many inquires in your credit report, let us do the shopping for you.
VIA FINANCIAL
Purchase / Renewal / Switch
Equity Take-out/Refinance
Debt Consolidation
Self-Employed
New Immigrants
www.viafinancial.ca
Dir: (416) 823-7976
Bus: (416) 321-2227
Waran Nathans AMP
Principal Broker
* Certain conditions, Broker fees, early pre-payment interest penalties, CMHC, Genworth and CG Insurance fees may apply. Interest rates are subject to change without notice.
301A-5200 Finch Ave. E. Toronto, ON. M1S 4Z5


யோகா வகுப்புக்கள்
முறையாகத் தொடர்ந்து செய்யப்படும் யோகா மூளைக்கு சீரான இரத்த ஓட்டத்தையும் மூளைக்கு புத்துணர்ச்சியையும் தரக் கூடியது. இதனால் மூளையில் செயல் திறன் அதிகரிக்கின்றது. உடலின் செயல்பாடுகள் சீராகுகின்றன. இதன் மூலம் ஞாபக சக்தி அதிகரிக்கின்றது. தூக்கமின்மை, ஓய்வின்மை, கவனக் குறைவு, குழப்பமான மனநிலை, தேவையற்ற பயம் ஆகியவை மூளையின் செயல்பாட்டிற்கு இடையூறு தரக் கூடியவை. யோகா இவற்றைப் போக்கி இத்தகைய பிரச்சனைகளிலிருந்து விடுபட்டு ஆரோக்கியமான மனநிலையையும் நல்ல மூளைச் செயல்பாட்டையும் ஞாபக சக்தியையும் தருகின்றது.
உடல் ஆரோக்கியமாக இருந்தால் தான் நமது மனம் ஆரோக்கியமாக இருக்கும். நமது மனம் ஆரோக்கியமாக இருந்தால் தான் நமது செயல்பாடுகள் ஆரோக்கியமாக நன்மையைத் தரும் விதமாக அமையும் யோகா என்பது நமது உடலையும் மனதையும் ஆரோக்கியமாக வைத்திருப்பதற்கான ஓர் ஒப்பற்ற பயிற்சியே ஆகும்.
உடல் பருமனைக் குறைப்பதற்கான பயிற்சிகள்
சிறுவர், பெரியோர், முதியோர்களுக்கான வகுப்புகள்
தொடர்புகளுக்கு
Raji - 647-780-7699
chandraleka28@gmail.com
Class Location
Unit 207, GTA Square (2nd Floor)
5215 Finch Ave E
Toronto , ON
(Finch & Middlefield)




# Game Over



பிறப்பும், இறப்பும் மனிதர்களுக்கும், மிருகங்களுக்கும், மரங்களுக்கும் தான் என்றில்லை. இதே தலைவிதி தான் பூமிக்கும், சூரியனுக்கும்.

ஏதோ ஒரு காலத்தில் ஒன்றன் பின் ஒன்றாக எல்லாமே மறைந்து போய் விடும். இது நடப்பதற்கு நிறைய காலம் இருக்கின்றது என்பது தான் இப்போதைய ஆறுதல்.

இவ்வளவு காலமும் கனடாவின் கடந்த காலத்திற்குள் சுற்றி சுழன்ற நாங்கள் சற்றே உலகத்தின் எதிர்காலத்திற்கும் போய் வருவோம்.

எங்களை, நாங்களே அழித்துப் போகின்ற சாத்தியங்களை சற்றுத் தள்ளி வைத்து விடுவோம். நாங்கள் பக்கா நல்ல பிள்ளைகளாக இருந்தால் கூட மனித குலத்திற்கு ஆயுள் ஒன்றை இயற்கை வைத்துத் தான் இருக்கிறது.

இன்றிலிருந்து பத்து மில்லியன் வருடங்களில் முதலாவது ஆபத்து காத்திருக்கிறது. எங்களிலிருந்து 3260 ஒளிவருடத்தில் ஒரு நட்சத்திரம் இருக்கிறது. அதன் பெயர் T Py xdl. தன் ஆயுள் முடிந்து அது வெடித்துச் சிதறும் போது எங்கள் பாடு சற்றுச் சங்கடம் தான். சூரியன் ஒன்று சிதறினால் சொல்லவா வேண்டும்? அது வெளிவிடுகின்ற காமா கதிர்வீச்சில் பூமி நன்றாகவே குளிக்கும். சில நொடிகளில் பெரும்பாலான உயிரினங்கள் பூமியில் இருந்த இடம் தெரியாமல் அழிந்தே விடும்.

சரி, அதிலும் கொஞ்சம் மனிதர்கள் தப்பிப் பிழைத்து விடுவார்கள் என்று வைத்துக் கொள்வோம். அடுத்த ஆபத்து அறுநூறு மில்லியன் வருடத்தில் வந்து சேரும். இந்த இடைவெளியில் பூமியின் நிலப்பரப்பு முற்றிலும் தலைகீழாக மாறி விடும். எல்லாக் கண்டங்களும் ஒன்றுடன் ஒன்று கை கோர்த்து ஒன்றாகி விடும். (ஆஹா! உலகத்தை சுற்றி வர கார் ஒன்றே போதும்).

இந்த காலத்தில் தாவரங்களில் நடக்கின்ற பச்சையத் தயாரிப்பின் ஒரு வகை (மொத்தம் மூன்று வகைகள் உண்டு) முற்றாக நின்று போய் விடும். இதனால் மரங்கள் பட்டுப் போய் விட, உணவின்றி 99 வீதமான உயிரினங்கள் இறந்தே போகும்.

அந்தக் காலத்தில் எங்கள் சந்ததிகள் படு புத்திசாலிகளாக இருந்து, இதற்கும் தப்பி விட்டார்கள் என்றால் கடைசி அழிவு அடுத்த நானூறு மில்லியன் வருடங்களில் வந்து சேரும். இந்த முறை தப்பிக்கவே முடியாது.

அப்போது சூரியனின் வெப்பம் கூடி, பூமி கொதிக்கத் தொடங்கும். சமுத்திரங்கள் எல்லாம் ஆவியாகி போய் விட, துருவப் பகுதிகளில் மட்டும் கொஞ்சம் தண்ணீர் மிஞ்சி இருக்கும். இந்த படு மோசமான சூழ்நிலையை ஒரு கல பக்ரீரியாக்கள் மட்டுமே தாக்குப் பிடிக்கும். இது தான் எங்கள் சந்ததிகளின் இறுதிக் கணம். மனித குலத்தின் Game over. Bye Bye மனிதா! (இருக்கும் போது என்ன ஆட்டம் போட்டாய்!)

அப்புறம் இன்னும் கொஞ்சக் காலத்தில் பூமி இன்னும் அதிகமாய் கொதித்து போக, மிஞ்சிக் கிடந்த பக்ரீரியாக்களும் அவுட். மொத்தத்தில் அத்தனை உயிரினங்களும் அழிந்து போய் பூமி வெறுமையாகப் போய், படு வெறுப்புடன் சூரியனைச் சுற்றிக் கொண்டிருக்கும். இது நடப்பது இன்றிலிருந்து மூன்று 'அற்புத' வருடங்களில். (பில்லியனுக்கு சுத்த தமிழ் 'அற்புதம்'. பில்லியனுக்கு மட்டுமல்ல அதற்கு அப்பாலும் கும்பம், நிகற்பம், முக்கோடி எனத் தமிழ் விரிகிறது. தமிழில் மகாயுகம் தான் கடைசி அலகு, ஒன்றுக்கு பின்னால் முப்பத்தேழு பூச்சியங்கள், ஆங்கிலத்தில் இதற்கு வார்த்தை கிடையாது).

பூமியில் சகலதும் செத்தொழிந்ததன் பின்னர், அடுத்து மரணிப்பது எங்களது ஒளி வீசும் சூரியன் தான்.

இன்றிலிருந்து 5.4 பில்லியன் வருடங்களில், சூரியனில் இருக்கின்ற முழு ஐதரசனும் தீர்ந்து போய்விடும். அதற்கு பிறகு அது ஒரு Red Giant ஆக மாறிப் போகும். அதன் பிறகு சூரியன் வீங்கத் தொடங்கும், கொஞ்சமாக இல்லை. 250 மடங்கு பெரிதாகும். புதன் கிரகமும், வெள்ளி கிரகமும் அப்படியே சூரியனுக்குள் அகப்பட்டு அழிந்தே போய் விடும்.

இங்கே தான் பூமிக்கு பெரும் மரண கண்டம் இருக்கிறது. சூரியன் இன்னும் கொஞ்சம் பெரிதானால், பூமியும் சூரியனின் சுழலுக்குள் அகப்பட்டு செத்துப் போய் விடும். இதில் தப்பி விட்டால் அதன் பின்னர் பூமி மிக, மிக நீண்ட காலத்திற்கு உயிர் வாழும்.

வீங்கிப் போன சூரியன் பிற்பாடு Black Hole ஆக மாறி விடும். பிரபஞ்சத்தில் மகா கெட்ட ஆசாமிகள் இந்த Black Hole கள் தான். கிட்ட வரும் எல்லாவற்றையும் தயவு தாட்சண்யமின்றி விழுங்கிக் கொண்டிருப்பது இவைகளின் பொழுதுபோக்கு. இப்போது கடவுள் ஸ்தானத்தில் இருக்கும் சூரியன் அப்போது வில்லனாகி மாறி அழிவுகள் மட்டுமே செய்து கொண்டிருக்கும்.

மகா பெரிய பிரபஞ்சத்தில் எங்கள் சூரியன் ஒரு இத்தனூண்டு குட்டிப் புள்ளி தான். எங்கள் சூரியனின் இறப்பிற்கு பின்னும் புதிய சூரியர்கள் நிறையப் பேர் பிறந்து, இறந்து போய்க் கொண்டிருப்பார்கள். பிரபஞ்சம் தொடர்ந்தும் இயங்கும், மிக, மிக நீண்ட காலத்திற்கு. ஆனால் அதற்கும் ஒரு முடிவு வரும்.

நூறு ட்ரில்லியன் (ஒன்றுக்கு பின்னால் பதினாலு பூச்சியங்கள்) வருடங்களுக்கு பிறகு, பிரபஞ்சத்தின் அத்தனை சூரியர்களும் சக்தி இழந்து போய் பிரபஞ்சம் இருட்டாகிப் போய் விடும். அப்போதும் பூமி உயிர் வாழ்ந்து கொண்டிருக்கும்.

எல்லாவற்றுக்கும் தப்பிப் பிழைக்கும் பூமி, கடைசியில் அழிவது எங்களின் சூரியனால் தான். பூமியின் பாதை கொஞ்சம், கொஞ்சமாக சுருங்கிக் கொண்டே வர, சூரியன் லபக்கென்று விழுங்கி விடும். உங்களது பரம்பரைக் காணிகளும், பார்த்து நடந்த பாதைகளும், காதலித்த பாறை மறைவுகளும் இல்லாமல் போவது இந்தக் கணம் தான். (ஒரு உல்டாவுக்காக சொன்னேன், அந்த நேரம் வெறும் கட்டாந்தரையாகத் தான் பூமி இருக்கும்)

சூரியன் போய் விட்டது. பூமி போய் விட்டது.

அடுத்தது எங்கள் அண்டத்திற்கு என்ன நடக்கும்?

பிரபஞ்சம் அழிவது அவ்வளவு சுலபம் கிடையாது. பிரபஞ்சத்தில் Dark Energy என்று ஒன்று இருக்கிறது. பிரபஞ்சத்தில் பெரும் பகுதியை நிறைப்பது இது தான். ஏறக்குறைய 70 வீதம். இன்று வரை பிரபஞ்சம் தொடர்ந்து விரிந்து கொண்டே போவதற்கு இந்தக் கண்ணுக்கு தெரியாத சக்தி தான் காரணம்.

பிரபஞ்சம் தொடர்ந்தும் விரியும் போது இந்த Dark Energy ன் செல்வாக்கு எப்படி இருக்

தொடர்தல் 108ம் பக்கம்

GP
TELECOM
இரமணன் திரு
(முன்னாள் பெல் கனடா ஊழியர்)
Security Camera Systems
Telephone and Voice Mail Systems
Voip Phone Systems - Wireless Networks
Surveillance Cameras
Voice and Data Structured Cabling
Professional Cable Fishing for
Residential and Commercial Buildings
416.203.0344


JRS College

International Students
Now we accept
international students

STUDENT TESTIMONIALS

One of the reasons I got over $32,000 funding from second career to do a diploma program at JRS College of business and Health Care Inc. because I chose one of their lengthy program, Accounting and Payroll administration which is 45 weeks in duration.
Deepa

I chose Early Childcare Assistant program and JRS College arranged day care placement in stouffville area which was close to my house. I was happy about the placement because I was offered employment there.Thanks to JRS College.
Biruntha

At JRS College, the instructors taught with enthusiasm, gave their undivided attention to all the students and made sure that every one understood the subject that was being taught. I had little difficulty in finding placement of my choice for Food Service Worker, but the administrator at JRS College insisted on keep trying and she never gave up until I found a placement that I like.Thanks, JRS College and the team for opening a new door in my life.
Sheryl Francis

I am coming from Ajax and I have chosen Early Childcare Assistant and I got placement close to my home in Ajax. I was also offered employment at the same day care centre where I did my placement .I would strongly recommend JRS College for studies where they provide quality training.
Gnana

10 Diploma Programs

- Accounting & Payroll Admin (Starts on Sept. 8, 2014) (45 Weeks)
- Pharmacy Assistant (Starts on Sept. 8, 2014) (46 Weeks)
- Community Service Worker (Starts on Sept. 8, 2014) (52 Weeks)
- Personal Support Worker (Starts on Aug. 11, 2014) (24 Weeks)
- Early Childcare Assistant (Starts on Sept. 29, 2014) (36 Weeks)
- Health office Administrator (Starts on Sept. 8, 2014) (40 Weeks)
- Office Assistant (16 Weeks)
- Computerized Accounting (24 Weeks)
- Accounting & Payroll Admin-PT (50 Weeks)
- Personal Support Worker-PT (35 Weeks)

Certificate Courses
Food Handler Training
Aug. 10, 2014@ 10.00 am (Sunday)
Food Service Worker
Starts on Sept. 9, 2014@ 6.00 pm (Tuesday)
Computer Basic Class
Starts on Sept. 14, 2014 @10.00 am

We open on Sundays
10.00 am - 2.00 pm

Contact info
(Midland & Finch)
330-4168 Finch Ave East
Scarborough, ON M1S 5H6
416-292-2455

(Registered as a Private Career College under the Private Career Colleges Act 2005.)

# Game Over...

107ம் பக்கத் தொடர்ச்சி...

கும் என்பதைப் பொறுத்துத் தான் அதன் முடிவு இருக்கும். இப்போதைக்கு பிரபஞ்சத்தின் மரணத்தைப் பற்றி சரியாக சொல்ல முடியாது.

விதி எங்களுக்கு எழுதி வைத்திருக்கும் கதை இது தான். ஆனால் அதற்கு முன்னாலேயே ஹிட்லர் மாதிரி ஒரு ஆசாமி வந்து உலகை பிடிக்கிறேன் என்று புறப்பட்டால அணு ஆயுதப் போரால் முழு மக்கள் அழிந்தாலும் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை.

இதைத் தவிர சின்ன சின்ன மற்ற ஆபத்துக்களும் இருக்கின்றன, பெரும் நோய்கள் வந்து உலகையே சுடுகாடாக்கிப போகலாம். விண்வெளிக் கற்கள் வந்து மோதி டைனசோர்களை கொன்றழித்தது மாதிரி எங்களையும் சங்காரம் செய்யலாம்.

யார் கண்டது? எதிர்காலத்தில் "இயந்திரன்" மாதிரி ரோபோக்களை நாங்கள் செய்து விட, அவை தடம் மாறி எங்களையே அழிக்கத் தொடங்கினாலும் தொடங்கலாம். (அந்த நேரத்தில் ரஜினி மாதிரி ஹீரோக்கள் வந்து எங்களைக் காப்பாற்ற மாட்டார்கள், தலை விதியே என்று செத்துப் போக வேண்டியது தான்.).

படங்களில் வருவது மாதிரி வேற்றுலக வாசிகள் பறக்கும் தட்டுகளில் வந்து, வயல்களில் பெரும் வட்டங்கள் போட்டு, கண்ட பாட்டுக்கு எங்களைச் சுட்டுத் தள்ளி பூமியை கைப்பற்றுவதெல்லாம் அதீதமான கற்பனை தான். நிஜத்தில் நடப்பதற்கு சந்தர்ப்பம் மிக மிக குறைவு.

இதைவிட வெகு சைலன்டாக எங்களுக்குப் பக்கத்தில் இன்னுமொரு பயங்கரம் இருக்கிறது.

சூரியனில் இருந்து அடிக்கடி காந்தப் புயல்கள் புறப்படுவதுண்டு. இந்தப் புயல்களின் பாதையில் பூமி அகப்பட்டுக் கொண்டால் நிலைமை படு கந்தல் தான். உயிராபத்துக்கள் பெரிதாக கிடையாது, ஆனால் பலம் வாய்ந்த காந்த சக்தியால் எலெக்ரோனிக்ஸ் கருவிகள் எரிந்து போய் விடும்.

1859ம் ஆண்டு பூமி ஒரு தரம் அகப்பட்டுக் கொண்டது. அந்த நேரத்தில் பெரிதாக தொழில்நுட்பம் இல்லாததால், அதிகம் பாதிப்பில்லை.

ஆனால் வெறும் இரண்டு வருடங்களுக்கு முன்னர், யூலை 23ம் திகதி 2012ம் ஆண்டு பெரிய காந்தப் புயல் ஒன்று சூரியனில் இருந்து புறப்பட்டது.

பூமி சூரியனைச் சுற்றி வரும் பாதையை அது வேகமாக கடந்து போனது. நாங்கள் செய்த புண்ணியம் அந்த நேரத்தில் பூமி அந்த இடத்தில் இருக்கவில்லை. வெறும் ஒரு கிழமைக்கு முன்னால் தான் பூமி அந்தப் புள்ளியை தாண்டி போயிருந்தது.

இந்தக் காந்தப் புயல் மட்டும் ஒரு கிழமைக்கு முன்னால் சூரியனில் இருந்து புறப்பட்டிருந்தால், பூமியில் பெரும் களேபரமே நடந்திருக்கும். உயிரிழப்புக்கள் பெரிதாக நடந்திருக்காது, ஆனால் எங்களின் வாழ்க்கை இரு நூறு வருடங்கள் பின்னோக்கி போயிருக்கும். உலகத்தில் அத்தனை மின்சார ட்ரான்ஸ்போமர்கள் வெடித்துச் சிதறி இருக்கும். தொலைத் தொடர்பு கோபுரங்கள் அத்தனையும் 'சொக்கட்டான்' மாதிரி நெருப்புப் பிளம்பாகி எரிந்திருக்கும்.

உங்களின் வீட்டில் அத்தனை மின்சார உபகரணங்களும் எரிந்து போயிருக்கும்.

செல்போன் இல்லாத, மின்சாரம் இல்லாத உலகம் எப்படியிருந்திருக்கும்?

வேலை முடிந்து போகும் போது, போனில் சாப்பாடு ஓடர் பண்ணி, வீட்டுக்குப் போனதும் மெசினில் உடுப்பு தோய்க்கப் போட்டு விட்டு, சாப்பிட்டபடி விஜய் ரிவியில் சுப்பர் சிங்கர் பார்க்கும் நபரின் வாழ்வு எப்படி தலைகீழாக மாறிப் போகும்?

விறகு அடுப்பில் நெருப்பு ஊதி, ஊதி சமைத்து, ஆற்றுக்குப் போய் உடுப்புத் தோய்த்து, மெழுகுதிரி விளக்கில் பிள்ளைகளுக்கு பாடம் சொல்லிக் கொடுத்து.... அப்பப்பா.. தலை சுற்றுகிறதா? இரண்டு வருடங்களிற்கு முன்பு, வெறும் ஏழு நாள் இடைவெளியில் தான் இந்த ஆபத்திலிருந்து தப்பியிருக்கிறோம்.

இப்படியான காந்தப்புயல்கள் அடுத்த பத்து வருடங்களுக்குள் மீண்டும் தாக்குவதற்கு கணிசமான சந்தர்ப்பங்கள் உண்டு.

எங்களின் வாழ்வு மட்டுமல்ல, எம்மைச் சுற்றி இருக்கும் பூமி, சூரியன், வானம், அதுவும் தாண்டிய அண்டம், எல்லாமே நிலையானது கிடையாது. எப்போதோ ஒருநாள் அத்தனையும் இல்லாமல் போய் விடும்.

இதற்குப் பிறகும் கனடிய குளிரைப் பற்றி சினந்து கொள்ளாமல், இந்த அற்புத நாட்டை அனுபவியுங்கள். அதன் அழகை இரசியுங்கள். பல்லின மக்களுடனான அனுபவங்களினால் சந்தோசமாக உங்களின் வாழ்க்கைப் பக்கங்களை நிரப்புங்கள்.

தொட்டில் நீங்கி தொலைதூரம் வந்த போது, பாசத்துடன் எங்களை தத்தெடுத்த கனடியத் தாயின் தாய்பால் குடித்து வளர்ந்தவர்கள் நீங்கள்.

உங்களது உழைப்புக்களையும், உங்கள் மழலைகளின் பெருமைகளையும், அவர் தம் சந்ததிகளின் சாதனைகளையும் பதிந்து வைக்க கனடிய வரலாறு தனது நெடிய புத்தகத்தின் பெரிய பக்கங்களை திறந்து வைத்து காத்திருக்கிறது.

எங்களின் சந்ததிகள் இந்தப் பக்கங்களை நிறையவே நிரப்பட்டும்.

(கனடாவின் கதை நிறைந்தது.)

**உசாத்துணை:**
- http://www.popsci.com/science/article/2013-01/the-human-race-will-come-to-an-end
- http://en.wikipedia.org/wiki/Human_extinction
- http://www.bbc.com/future/story/20140105-time-line-of-the-far-future
- http://ca.news.yahoo.com/nasa-world-almost-plunged-darkness-near-miss-huge-094444073.html
- http://en.wikipedia.org/wiki/Tamil_units_of_measurement
- http://www.bbc.co.uk/science/earth/earth_timeline/future_earth



nimal.nagaraj@thaiveedu.com

தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்.

விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.

E-mail: info@thaiveedu.com
Fax: 416-849-0594 Tel: 416-646-3422

# துயர் பகிர்வோம்



## திருமதி. சண்முகசுந்தரம் மனோன்மணி

நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சியை வதிவிடமாகவும் கொண்ட சண்முகசுந்தரம் மனோன்மணி (ஓய்வுபெற்ற மருத்துவ தாதி) அவர்கள் ஓகஸ்ட் 04, 2014 அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற சின்னதம்பி (நீளியார்), வள்ளியம்மை இணையரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கனபதிப்பிள்ளை, சின்னதங்கம் இணையரின் அன்பு மருமகளும் காலஞ் சென்ற சண்முகசுந்தரம் (பங்கராஷ்) அவர்களின் அன்பு மனைவியும் விமலாதேவி (கனடா), ரவீந்திரன் (இந்தியா), ஜெகதீஸ்வரன் (குழந்தை- இலங்கை), கலாவதி (கனடா), வைதீஸ்வரன் (ஈஸ்வரன்- இலங்கை) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்றவர்களான சேதுப்பிள்ளை, கதிரவேலு (பொலிஸ்), குமாரசாமி, நடராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் பசுபதிப்பிள்ளை (கனடா), சசீந்திரா (பிரான்ஸ்), நீலாவதி (இலங்கை), கைலாயபிள்ளை (கனடா), சிவகுமாரி (இலங்கை) ஆகியோரின் அன்பு மாமியாரும் சுதாகர், சோபனா, கோபிநாத், சஞ்சீவ், சுபரஞ்சன், பிரசாத், ரஜீஸ், ஜனிசியா, சன்சியா, ரகுபதி, கேதீஸ்வரன், குணபாலன், நகுலேஷ்வரன், ராதிகா, தர்ஷனா, தர்ஷன், நிஷா, சயந்தன், சங்கர், விநோத், அஜீவன், பிரியன், அபிஷா, திரிஷா, வினித், வேஜிதா ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஐஷ்சா, அர்வின், அவீன், ஆர்யன், லிவீபன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

| | | |
|---|---|---|
| விமலா(மகள்) | கனடா | 1416 356 5103 |
| ரவீந்திரன்(மகன்) | இந்தியா | 91442 247 5360 |
| கலா(மகள்) | கனடா | 1905 424 7758 |
| குழந்தை(மகன்) | இலங்கை | 9477 406 7456 |
| ஈஸ்வரன்(மகன்) | இலங்கை | 9477 248 7468 |
| சசீந்திரா(மருமகள்) | பிரான்ஸ் | 3395 399 7197 |



## திரு. காங்கேசு குமாரசாமி

நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சி திருவையாற்றை வதிவிடமாகவும் கொண்ட காங்கேசு குமாரசாமி (செல்வராசா - ஓய்வுபெற்ற சாலைப் பரிசோதகர், இ.போ.ச. கோண்டாவில்) அவர்கள் ஓகஸ்ட் 03, 2014 அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான காங்கேசு நாகமுத்து இணையரின் பாசமிகு புதல்வரும் காலஞ்சென்றவர்களான நாகநாதர் தங்கம்மா இணையரின் பாசமிகு மருமகனும் தங்கலெட்சுமி அவர்களின் பாசமிகு கணவரும் பிரதீபன் (மருத்துவர்-கிளிநொச்சி பொது வைத்தியசாலை), காலஞ் சென்ற ரதிதீபன், மலரவன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் தவமணி (லண்டன்), கனகமணி (திருவையாறு), முருகேசு (லண்டன்), சுந்தரலிங்கம் (ஆனந்தபுரம்), சாந்தலிங்கம் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் சுந்தரலிங்கம், சீதாதேவி, கனகேஸ்வரி, நவரட்ணராஜா, தியாகராஜா, நகுலேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் நிசாந்தினி அவர்களின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதி வணக்க நிகழ்வு ஓகஸ்ட் 05, 2014 அன்று இரணைமடுவில் நடைபெற்றது.

**முகவரி:**

இல.161A, 3ம் பகுதி,<br>
திருவையாறு,<br>
கிளிநொச்சி.

011 94 21 320 4590




## திரு. செல்வநாயகம் சரவணமுத்து

சுன்னாகம் கொத்தியாவத்தை அம்பனையைப் பிறப்பிட மாகவும் அல்வாயை வதிவிடமாகவும் தற்போது கனடா ஸ்கார்பரோவில் வாழ்ந்தவருமான திரு. செல்வநாயகம் சரவணமுத்து அவர்கள் ஓகஸ்ட் 30, 2014 அன்று காலமானார்.

அன்னார் சரவணமுத்து பராசக்தி (செல்லம்மா) இணையரின் சிரேஷ்ட புதல்வனும் கிருஷ்ணபிள்ளை தங்கம்மா இணை யரின் அன்பு மருமகனும் அரியமலர் அவர்களின் பாசமிகு கணவரும் குணபாலசிங்கம், புவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் மகேஸ்வரிதேவி, அமரர் விஜய- ரட்ணம், குணரட்ணம் ஆகியோரின் அன்பு மைத்துணரும் கௌரி அவர்களின் உடன்பிறவாச் சகோதரனும் மேகலா, கிரிதரன், சசிகலா, ஞானபகிரதன், ஜெயகலா ஆகியோரின் அன்புத் தந்தையும் முருகதாசன், நித்தியகலா, இரவீந்திர- நாதன், வாசுகி ஆகியோரின் அன்பு மாமனாரும் நரேன், மதன், கஜன், சகானா, ஆரணி, மகிழினி, நரேஷ், சுபாங்கி, கரீஷ், துர்க்கா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி வணக்க நிகழ்வு செப்ரெம்பர் 3ம் திகதி மாலை 5:00 மணி முதல் 9:00 மணிவரையும் மற்றும் செப்ரெம்பர் 4ம் திகதி காலை 8:00 மணிமுதல் 11:00 மணிவரையும் 8911 Woodbine Ave என்றும் முகவரியிலுள்ள Chapel Ridge Funeral Home மண்டபத்தில் நடைபெறும்.

| | | |
|---|---|---|
| அரியமலர் (மனைவி) | - | 416 261 2279 |
| ஞானபகிரதன் (மகன்) | - | 416 320 6156 |
| கிரிதரன் (மகன்) | - | 416 939 8800 |
| முருகதாசன் (மருமகன்) | - | 416 206 8421 |
| ரவீந்தரநாதன் (மருமகன்) | - | 416 839 6329 |



## திரு. வேலுப்பிள்ளை சுந்தரலிங்கம்

நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும், மருதடி வீதியை வதிவிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சுந்தரலிங்கம் (இளைப்பாறிய சங்கீத ஆசிரியர்) அவர்கள் ஓகஸ்ட் 06, 2014 அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை பராசக்தி இணையரின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற கந்தையா (ஆசிரியர்- நெடுந்தீவு) பொன்னம்மா இணைய- ரின் பாசமிகு மருமகனும் சரஸ்வதி (கமலம், தாதி- யாழ். போதனா வைத்தியசாலை) அவர்களின் அன்புக் கணவரும் பாமினி, காலஞ்சென்ற குமுதினி, தமிழ்மாறன் (லண்டன்), பன்னீர்செல்வன், சாந்தினி ஆகியோரின் பாசமிகு தந்தை யும் Dr. இராசலிங்கம் (லண்டன்) அவர்களின் பாசமிகு சகோதரரும் கிஷ்ணமூர்த்தி, மதிவதனி, ஜெயரஞ்சினி, லக்ஷ்மன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் சிவபாக்கியம், சிவபாதம், சறோஜாதேவி (இராணி), பத்மாவதி (பிள்ளை), மணிமேகலை (இராசு), சந்திரவதனா, பராசக்தி, வசந்த- குமார், தவபாதம் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், செல்வா, கரன், நீனா, பிரவீன், கிருஷ்ணா ஆகியோரின் பாசமிகு பெரிய தந்தையும் அபிரா, சசிகஜன், மயூரா, விஜயசாந், மதீரா, அஷ்வினி, கவின், லினேஷ்ராம், லக் ஷாஜினி, கரிஷ்ராம், ரிஷ்வி, ருஷ்வி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

| | | |
|---|---|---|
| மூர்த்தி | பிரித்தானியா | 44797 020 0137 |
| பன்னீர் | இலங்கை | 9421 222 5638 |
| லக்ஷ்மன் | பிரித்தானியா | 44788 223 4935 |



## திருமதி. கதிர்காமு தெய்வானைப்பிள்ளை

முரசுமோட்டை பழையகமத்தைப் பிறப்பிடமாகவும், வதிவிட மாகவும் கொண்ட கதிர்காமு தெய்வானைப்பிள்ளை அவர் கள் அவர்கள் ஓகஸ்ட் 29, 2014 அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற சிற்றம்பலம், வள்ளியம்மை இணையரின் அன்பு மகளும், திரு. திருமதி வல்லிபுரம் இணையரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கதிர்காமு அவர்களின் அன்பு மனைவியும் கமலாதேவி (இலங்கை), சாந்தலட்சுமி (இலங்கை), அகிலேஸ்வரி (லண்டன்), இராஜேஸ்வரி(லண்டன்), பிரபாகரன்(பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சிவராசா(இலங்கை), அம்பலவாண- பிள்ளை(இலங்கை), சரஸ்வதி(பிரான்ஸ்), கிருஷ்ணபிள்ளை (இலங்கை), திருச்செல்வம்(இலங்கை), மகேஸ்வரி(இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரியும் இராமநாதன்(இலங்கை), யோகராசா(இலங்கை), மதியழகன்(லண்டன்), நகுலேஸ் வரன் (லண்டன்), விஜயபாமினி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் சதீஸ்குமார், சஜிதா, அஜிதா, யதுநிலா, பிரதீபா, பிரணவன், வேந்தன், லோஜன், கேதா, சிவானி, கிருத்திகா, ஆதினி, சனா ஆகியோரின் பாசமிகு பேத்தி யும் ஆவார்.

அன்னாரின் இறுதி வணக்க நிகழ்வு செப்ரெம்பர் 01, 2014 அன்று முரசுமோட்டையில் நடைபெறும்.

| | | |
|---|---|---|
| சாந்தலட்சுமி | இலங்கை | 9477 181 3489 |
| பேபி | பிரித்தானியா | 44203 583 9421 |
| கௌரி | பிரித்தானியா | 44208 949 2347 |
| காந்தன் | பிரான்ஸ் | 3369 821 9672 |



## திருமதி. நல்லம்மா திருஞானசம்பந்தர்

யாழ். உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட நல்லம்மா திருஞானசம்பந்தர் அவர்கள் ஓகஸ்ட் 15, 2014 அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற சண்முகம் - செல்லாச்சி இணை யரின் அன்பு மகளும், காலஞ்சென்ற செல்லத்துரை - கனகம்மா இணையரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற திருஞானசம்பந்தர் அவர்களின் அன்பு மனைவியும் திவா- கரன் (நெதர்லாந்து), அனுஷா (உரும்பிராய்), கிருஷா (கனடா), சர்மிளா (கனடா), நிருஷா (உரும்பிராய்) ஆகி- யோரின் அன்புத் தாயாரும் மகாலிங்கம் (கனடா), காலஞ்சென்றவர்களான கனகலிங்கம், தர்மலிங்கம், சரஸ்வதி, மற்றும் ராஜேஸ்வரி, புஷ்பவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் கஜேந்திரன், சர்வேஸ்வரன், ஸ்ரீகாந்தகுமார், சுஜி ஆகியோரின் அன்பு மாமியாரும் திவிஷா, ஜனுஷன், நிவேதிகா, ஜதுஸ்மிக்கா, திவானுஷன் ஆகியோரின் அன்புப் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதி வணக்க நிகழ்வு ஓகஸ்ட் 18, 2014 அன்று உரும்பிராயில் நடைபெற்றது.

| | | |
|---|---|---|
| கஜேந்திரன் | இலங்கை | 9421 223 0983 |
| திவாகரன் | நெதர்லாந்து | 3147 532 2875 |
| சர்வேஸ்வரன் | கனடா | 1647 761 2559 |
| ஸ்ரீகாந்தகுமார் | கனடா | 1647 847 2169 |

# இசைக்கலாவாணி, கலாபூஷணம் திருமதி இராஜமணி சிங்கராஜா

**- வி. கந்தவனம் -**

அளவெட்டி அருணோதயக் கல்லூரியில் நான் அதிபராகக் கடமையாற்றிக் கொண்டிருந்த காலத்தில் அங்கு சங்கீத ஆசிரியராக வந்து சேர்ந்தவர் திருமதி இராஜமணி சிங்கராஜா அவர்கள். அதற்கு முன்னதாகவே அவரை நான் அறிந்திருந்தேன். இசை உலகில் அவர் பெரும் புகழ் பெற்றவர். எனினும் அருணோதயக் கல்லூரி அவருடன் நன்கு பழகவும் அவரது கற்பிக்கும் ஆற்றலை மதிப்பிடவும் குணவியல்புகள் மற்றும் வாழ்க்கைப் பின்னணியை அறிந்து கொள்ளவும் அரிய வாய்ப்புக்களை அளித்தது.

## வாழ்க்கை வரலாறு:

திருமதி இராஜமணி சிங்கராஜா அவர்கள் சோழநாட்டு இளவரசி மாருதப்புரவீகவல்லி தனக்குற்ற குதிரைமுக நோய்தீரப் பெற்ற தெய்வீகத் தலமாகிய மாவிட்டபுரத்தில் உருத்திராபதி - யோகாம்பாள் தம்பதிகளுக்குப் பிறந்தவர். தந்தை திரு. சோமசுந்தரம் உருத்திராபதி இணையற்ற நாதசுர வித்துவான். இசைச் சக்கரவர்த்தி என்று யாவராலும் போற்றப்பட்டவர். அவரே இராஜமணியின் இசைக்கலைக் குருவுமாவார்.

வீமன்காமம் மகா வித்தியாலயத்தில் ஆரம்ப கல்வியை முடித்துக்கொண்டு தந்தையாரிடம் தொடர்ந்து நான்கு வருடங்கள் இசை பயின்று கொண்டிருந்தகாலை இளவாலை திருக்குடும்பக் கன்னியர் மடத்து ஆசிரியர் கலாசாலையில் இவருக்கு இசை ஆசிரியர் நியமனம் கிடைத்தது. அப்பொழுது இவருக்கு வயது 15. அங்கு தமிழ்ப்பாடசாலை, ஆங்கில பாடசாலை, ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை ஆகிய மூன்றினதும் மாணவர்களுக்கு இசையும் நடனமும் கற்பிக்கும் பணியோடு அந்நிலையங்களின் விழாக்களின் கலை நிகழ்ச்சிகளுக்கும் இவர் பொறுப்பாக இருந்தார். அங்கு ஆசிரியராகப் பணியாற்றிய காலத்திலேயே (1945-50) சிரேட்ட தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியெய்தினார். ஆங்கில இசை நுணுக்கங்களை அறிந்து கொள்ளவும் இளவாலைக் கலாசாலை இவருக்கு வாய்ப்பாக இருந்தது.

வட இலங்கைச் சங்கீத சபையின் முதற் பரீட்சை 1948ல் நடத்தப்பட்டபோது அதற்குத்

**இலக்கிய உறவுகள் - 45**

தோற்றிய ஒருசில மாணவர்களில் இராஜமணியும் ஒருவர். முதல் முறையிலேயே அப்பரீட்சையிற் சித்திபெற்று ஆசிரிய தராதரப் பத்திரத்தையும் பெற்றுக் கொண்டார்.

## இல்லற இன்பம்:

இவருக்கும் அளவெட்டியைச் சேர்ந்த திரு. பசுபதி சிங்கராஜா அவர்களுக்கும் 26.09. 1954ல் திருமணம் நடந்தது. இவர்களது இல்லறமாகிய நல்லறத்தின் பயனாக கந்தராஜா, தருமராஜா, யோகராஜா, கோகிலத்வனி, ஆனந்தராஜா, ஹம்சத்வனி, மயூரத்வனி ஆகியோரை மக்கட் செல்வங்களாகப் பெற்றெடுக்கும் பேறுடையவர்களாயினர்.

## கல்விச் சேவை:

பின்னர் 1951 முதல் 1967 வரை தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியிற் பணிபுரிந்தார். 1968ல் வீமன்காமம் மகா வித்தியாலயத்துக்கு இடமாற்றம் பெற்று 1971 வரை அங்கு படிப்பித்தார். பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் முதன்முதலாக 1972ல் இசைத்துறையிற் சிறப்புக் கற்பித்தற் பயிற்சி தொடங்கப்பட்டபோது அப் பயிற்சி நெறிக்குத் தெரிவுசெய்யப்பெற்று இரண்டு ஆண்டுகளின்பின் (1972-73) சிறப்புத் தராதர இசை ஆசிரியர் தகைமைச்சான்றிதழையும் பெற்றார்.

அதனைத் தொடர்ந்து அளவெட்டி அருணோதயக்கல்லூரி (1974-77), வீமன்காமம் மகா வித்தியாலயம்(1978-90) ஆகியவற்றிற் கற்பித்து ஓய்வு பெற்றார். வீமன்காமத்தில் உப அதிபராகவும் இவர் பணியாற்றினார்.

## இசைப் பணி:

திருமதி இ. சிங்கராஜா அவர்கள் 1953ல் 'பிருந்தகானாலயா' என்ற பெயரிலே மாவிட்ட புரத்தில் இசைப்பாடசாலை ஒன்றை ஆரம்பித்தார்.

இவர் வாய்ப்பாட்டில் மட்டுமல்லாது வயலின் மற்றும் வீணை இசைகளிலும் வல்லவர். இலங்கை வானொலியிலும் பிற இடங்களிலும் இவரது கச்சேரிகள் நடந்ததுண்டு.

சீர் ஒழுங்கு, எதுகை, மோனை அமைப்பு கள்பற்றிய அறிவும் கவித்துவ உணர்வும் அதற்கு வேண்டும். திருமதி சிங்கராஜா அவர்களிடம் இவை இருப்பதை அவரது கீர்த்தனைப் பாடல்கள் காட்டி நிற்கின்றன.

கீர்த்தனைகள் சிறப்பாக இறைவனின் இயல் புகளையும் அருளையும் புகழ்ந்துரைக்கும் இசைப் பாடல்களைக் குறிக்கும். அதற்கேற்ப இவரது கந்தன் கீர்த்தனைகள் முருகன்புகழ் பாடுபவையாகவும் தெய்வீகக் கீர்த்தனைகள் பிறதெய்வங்களின் அருளைப் போற்றுபவையாகவும் உள்ளன.



தமிழ் நாட்டின் இரசிக இரஞ்சன சபாவின் இசை விழாக்களிலும் இவர் வயலின் வாசிக்க அழைக்கப்பெற்ற பெருமைக்குரியவர். அங்கு சில கோயில்களிலும் இவரது கச்சேரிகள் நடைபெற்றுள்ளன.

1995ம் ஆண்டு முதல் இவர் கனடாவில் வாழத்தொடங்கினார். வந்து இறங்கிய ஆண்டு முதலாகவே எமது கலை இலக்கிய உறவு தொடரலாயிற்று. அவரது எல்லா முயற்சிகளிலும் என்னையும் ஈடுபடுத்தினார். அதிபர் பொ. கனகசபாபதியையும் என்னையும் முன்னிலைப்படுத்தாது அவர் எந்தக் கூட்டங்களையும் நடத்தியதில்லை.

கனடாவிலும் 1995ல் பிருந்தகானாலயாவைத் தாபித்துப் பிள்ளைகளுக்கு இசைக் கலையைக் கற்பிக்கத் தொடங்கினார். இவருடன் இவரது மகள் கலாவித்தகர் ஹம்சத்வனி சிங்கராஜாவும் இணைந்து பிருந்தகானாலய இசைக் கல்லூரிமூலம் பாட்டு, வயலின், வீணை போன்றவற்றைக் கற்பித்து இசைக்கலையை வளர்த்து வந்தனர்.

## இசை நூல்கள்:

ஆசிரியை பல இசை நூல்களையும் இயற்றியிருக்கின்றார். 2001ம் ஆண்டில் கானாமிருத வர்ஷினி என்னும் சங்கீத சாத்திர நூலை வெளியிட்டார். 2008ல் கந்தன் கீர்த்தனை என்ற நூலையும் 2011ல் தெய்வீகக் கீர்த்தனைகள்: பகுதி 1 என்ற நூலையும் மகள் ஹம்சத்வனியின் உதவியுடன் வெளியிட்டார். இவை இரண்டும் ஸ்வர சாகித்தியங்களுடனும் பாடிக் காட்டும் இறுவட்டுக்களுடனும் கூடியவை என்பது குறிப்பிடத்தக்கது.

இசைக்குப் பாடல்கள் எழுதுவது என்பது தனியான திறமையை வேண்டி நிற்கும் ஒரு கலை. தமிழ் மொழியில் நல்ல பயிற்சியும்

முருகனை ஆசிரியை போற்றுவதற்குக்காரணம் உண்டு. அவரது குலதெய்வம் மாவை முருகன். அவரது அறிவு முருகனை அறியும் அறிவு. அவரது வாழ்வு கந்தபுராணக் கலாச்சார வாழ்வு. அதனால் மிகுந்த ஈடுபாட்டோடும் பக்தியுணர்வோடும் கீர்த்தனைகளை அமைத்திருக்கின்றார்.

தமிழில் கீர்த்தனைகளின் வரலாறு ஏறத்தாழ கி.பி. 14ம் நூற்றாண்டளவில் இருந்து தொடங்குகிறது என்பது அறிஞர் பலரதும் கருத்தாகும். எனினும் அவற்றின் இயல்புகள் பலவற்றை இக் காலத்துக்கு முற்பட்ட பள்ளு, குறவஞ்சி போன்ற பிரபந்த வகைகளிலும் காணக்கூடியதாகவுள்ளது. இவற்றுக்கும் முற்பட்ட சிந்து என்னும் நாட்டுப் பாடல் வடிவத்திலிருந்து கீர்த்தனை பிறந்திருக்கலாம் என்று பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் கருதுவர். மேலும் நாயன்மார்களினதும் ஆழ்வார்களினதும் பக்திப்பாடல்களும் கீர்த்தனைகளின் தோற்றத்துக்கு உதவியிருக்கின்றன என்பதும் ஆய்வாளரின் கருத்தாகும்.

தமிழில் முத்துத்தாண்டவர் என்பார் கீர்த்தனை ஆசிரியர்களுக்கு எல்லாம் முன்னோடியானவர் என்று போற்றப்படுகின்றார். இவர் கி.பி. 16ம் நூற்றாண்டளவில் வாழ்ந்தவர். இவரையடுத்து 'காலைத்தூக்கி நின்று ஆடுந் தெய்வமே' புகழ் மாரிபுத்தாபிள்ளை, 'இராம நாடகம்' புகழ் அருணாசலக் கவிராயர் போன்றோர் சிறந்த கீர்த்தனை ஆசிரியர்களாக விளங்கினர். திரிகூடராசப்பக் கவிராயர் பாடிய குற்றாலக் குறவஞ்சியில் இடம்பெற்றுள்ள கீர்த்தனைகளும் பெயர் பெற்றவை. தெலுங்கிலும் சமக்கிருதத்திலும் அதிகம் கீர்த்தனைகள் பாடியுள்ள சியாமா சாஸ்திரிகள் தமிழிலும் கீர்த்தனைகள் பாடியுள்ளார்.

கீர்த்தனைகளின் வளர்ச்சியில் கோபால கிருஷ்ண பாரதியாரின் பங்கு மிகவும் பெரிது. ஏராளமான தனிக் கீர்த்தனைகளையும் கீர்த்தனைகளாலான பல சமய நாடகங்களையும் இவர் இயற்றியுள்ளார். இவரது நந்தனார் சரித்திரம் மிகவும் பிரபலியமானது. இவரைப் பன்பற்றி இவரது சீடராகிய வேதநாயகம்பிள்ளையும் பல கீர்த்தனைகளைப் பாடியுள்ளார்.

இவர்களைத் தொடர்ந்து கீர்த்தனைகளை வளப்படுத்திய ஆசிரியர்கள் பலராயினும் அவர்களில் இராமலிங்க சுவாமிகள், பாபநாசம் சிவன் ஆகியோரின் கீர்த்தனைகள் இசைத்துறையில் நிலையான இடத்தைப் பெற்று விளங்குகின்றன.

தமிழீழத்தில் கீர்த்தனைகளை வளர்த்தவர்களாகப் பாவலர் துரையப்பாபிள்ளை, யோகர் சுவாமிகள், வீரமணி ஐயர் போன்றவர் போற்றப்படுகின்றனர். இவர்கள் வரிசையில் கலாபூஷணம் திருமதி இராஜமணி சிங்கராஜா அவர்களும் பேசப்படுவார் என்பது உறுதி. கனடாவிலும் அதிக கீர்த்தனைப் பாடியவர் என்ற பெருமையும் அவரைத் தொடரும்.

## இசை நாடகங்கள்:

ஆசிரியர் அவர்கள் சிறந்த நடன ஆசிரியருமாவார். இளவாலை திருக்குடும்பக் கன்னியர் மடத்துக் கல்லூரியில் இவர் நடனமும் கற்பித்திருக்கின்றார். இசை ஆசிரியராகப் பல இசை நாடகங்களையும் இயற்றியிருக்கின்றார். கல்லூரிகளுக்கிடையிற் கல்வி அமைச்சு நடத்திய இசைப் போட்டிகளிலும் இசைநாடகப் போட்டிகளிலும் பரிசுகள் பெற்றிருக்கின்றார். வீமன்காமம் மகாவித்தியாலயத்திற் கற்பித்த காலத்தில் இவர் தயாரித்த கம்பீரநாட்டை என்ற இசைநாடகமும் மயில் கிராமிய நடனமும் அகில இலங்கை மட்டத்திற் பரிசுகள் பெற்றிருக்கின்றன என்று அப்பொழுது அங்கு அதிபராக இருந்த திருமதி புவனேஸ்வரி சச்சிதானந்தன் பெருமைப்படுகின்றார்.

திருமதி சிங்கராஜா ஆசிரியர் தயாரித்து வட்டார, மாவட்டப்போட்டிகளிற் பரிசு பெற்ற பிற இசைநாடகங்களில் லயோற்பவம், பக்த நந்தனார், பத்மாவதி கல்யாணம், மாருதப் புரவீகவல்லி போன்றவை பெயர் பெற்றவை.

கனடாவில் கம்பீரநாட்டை மீண்டும் மேடையேற்றப்பட்டுப் பலரது பாராட்டுதல்களையும் பெற்றிருக்கின்றது. இசையின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் கூறும் இந் நாடகம் இசையுலகில் நிலைத்து நிற்க வல்லது.


## பாராட்டுக்கள்:

இவரது கல்விச் சேவையையும் இசைத் துறைக்கு ஆற்றிய பணிகளையும் மதித்துப் போற்றி 2000த் தாண்டு இலங்கை அரசு இவருக்கு 'கலாபூஷணம்' என்ற பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது.

2006ம் ஆண்டு இராஜமணியின் சேவையைப் பாராட்டிக் கனடா தமிழ் இசைக் கலாமன்றம் தங்கப் பதக்கம் சூட்டிப் பெருமைப்படுத்தியது.

இத்தகைய இசைக்கலாவாணி 10.02.2012ல் தமது 82ஆவது அகவையில் இறைவனடி எய்தியது இசையுலகத்துக்கு ஈடுசெய்யமுடியாத இழப்பாகும்.

வாழ்க
அவரது புகழ்!



kandavanam.v@thaiveedu.com

# Tax Preparation Doesn't Have to be Stressful

## Let an Expert do it for you



# MVK TAX

**12 ஆம் ஆண்டு வருமான வரி சேவையில் தொடர்ந்து**
**நிரந்தர வாடிக்கையாளர்களின் நம்பிக்கை பெற்றவர்..**

**இன்றே உங்கள் வருமான வரி படிவங்களை**
**பூர்த்தி செய்து சட்டப்படி அதிக வரிபணத்தை மீளப் பெறுங்கள்!!!**

- Personal Tax Returns
- Small Business Returns
- Self-Employed Returns
- Corporation Returns

Free for New Immigrants, Students & Seniors
who has less than $10000 annual income!!!

நீங்கள் முதியவரா? மாணவரா அல்லது புதுக்குடிவரவாளரா?
உங்கள் ஆண்டு வருமானம் +10000 குறைவானதா? — அப்படியானால் உங்கள்
வருமான வரி படிவங்களை இலவசமாக பூர்த்தி செய்து தருகிறோம்...
இன்றே வாருங்கள்!

Book Appointment and come...

## MVK TAX
## Consultants




**Phone: 416 880 6051**

# 'புளுகர் பொன்னையா' கணேசபிள்ளை

## ஆடித்து முத்துக்கள் 131

- சோக்கல்லோ சண்முகநாதன் -

28.06.1937ல் வரணியூரான் என்ற எஸ்.எஸ். கணேசபிள்ளை 'வரணி' எனும் சாவகச்சேரியிலிருக்கும் சிறு கிராமத்தில் பிறந்தார். கணேசபிள்ளையால் பின்னாளில் இக்கிராமம் மிகவும் புகழ்பெற்றது.

'வரணியூரான்' என்றாலும், 'புளுகர் பொன்னையா' என்றாலும் அவற்றின் மறுபெயர் கணேசபிள்ளை என்றாயிற்று. இவரது தந்தை செல்லையா ஒரு கூத்துக் கலைஞர். கணேசபிள்ளை கருவிலேயே திருவுடையவர்.



தந்தை வழியில் கணேசபிள்ளை நாட்டுக் கூத்து, நாடகம், நாடகப் பிரதிகள் எழுதுதல், நாடக நெறியாள்கை இப்படியான கவின் கலைகளில் மிகுந்த ஈடுபாடு காட்டினார்.

படிக்கின்ற காலத்திலேயே பாடசாலைக்கலை நிகழ்ச்சிகளில் கணேசபிள்ளை ஈடுபாடு காட்டினார். 1937ல் பிறந்த கணேசபிள்ளை, தொழில் ரீதியாக ஒரு வருமானவரி உத்தியோகஸ்தர். கொழும்பு இறைவரித்திணைக் களத்தில் வேலை செய்தவர். அங்கு இவரைச்சுற்றி ஒரு கலைஞர் பட்டாளமே இருந்தது. அதில் மறைந்த எமது கலைஞர் 'அண்ணைறயிட்' கே.எஸ். பாலச்சந்திரன் மிகவும் முக்கியமானவர், முதன்மையானவர்.

'கலைத்தென்றல் வரணியூரான்'தனது கலைத் திறமையை இலங்கையில் மட்டுமல்ல, கனடா, இங்கிலாந்து, சுவிஸ், நோர்வே போன்ற ஐரோப்பிய நாடுகளுக்கும் தமது குழுவினருடன் சென்று நிலை நிறுத்தியவர். 'கலைமாமலை', 'தமிழ்க் கலை வழுதி', 'கலைத்தென்றல்', போன்ற பட்டங்களின் சொந்தக்காரன். இப்பட்டங்களைவிட 'வரணியூரான்', 'புழுகர் பொன்னையா' போன்ற பட்டங்களே இன்றும் இவரை அடையாளப் படுத்துகின்றன.

திரைப்படப் பக்கம் தலைகூட வைத்துப்படுக்காத கணேசபிள்ளை, சிரிக்கச் சிரிக்க நல்ல பல கருத்துக்களை வனொலி, மேடை, தொலைக்காட்சி நாடகங்கள் மூலம் தந்தார்.

கணேசபிள்ளையின் நாடகப்பசிக்கு இலங்கை வானொலியும், ரூபவாகினிக் கூட்டுத்தாபனமும், தாய்நாடும், உலகத்தின் சில பாகங்களிலுள்ள மேடைகளும் தீனிபோட்டன. வேலணை வீரசிங்கம் என்ற ஒரு முற்போக்கான தொழில் அதிபர், இவரது நாடகத் 'தீ' அணைந்துவிடாது தொடர்ந்து எரிவதற்கு எண்ணை வார்த்தார்.

வானொலி இரசிகர்களின் பேரபிமானம் பெற்ற 'இரைதேடும் பறவைகள்' இலங்கை வானொலியில் 52 வாரங்கள் சக்கை போடு போட்டன. இந்த நாடகம் இவருக்கென்று ஒரு தனி முத்திரையைப் பதித்துச் சென்றது.

'அசட்டு மாப்பிள்ளை', 'ஆசை மச்சான்', 'கறுப்பும் சிவப்பும்', 'மனம் போல வாழ்வு', பாசச்சுமை, 'சுகுணாவின் காதலன்', 'சுந்தரி சாகவில்லை', இரைதேடும் பறவைகள், 'இராசமலர்க் களஞ்சியம் போன்ற நாடகங்களை எழுதிய கணேசபிள்ளை, தானும் பிரதான பாத்திரத்தில் நடித்ததோடு, தன்னோடு இறைவரித்திணைக்களத்தில் வேலை செய்த நாடகப் பித்துக்கொண்ட இன்னுமொரு கலைஞன் கே.எஸ். பாலச்சந்திரனையும் எல்லா நாடகங்களிலும் முக்கிய பாத்திரங்களில் நடிக்க வைத்தார். இவர்கள் இருவரும் இணைபிரியாத நண்பர்கள்.

கணேசபிள்ளையின் இன்னுமொரு நல்ல நண்பர் முகத்தார் யேசுரத்தினம். இவரும் ஒரு வானொலி நடிகரும் எழுத்தாளரும் ஆவர். கணேசபிள்ளையின் பல நாடகங்களில் இவரும் நடித்துள்ளார். இவர் நில அளவைத் திணைக்களத்தில் பணிபுரிந்தவர். இவர் 'பிரான்ஸ்' நாட்டில் அண்மையில் அமரரான ஒரு மூத்த கலைஞராவர். வரணியூரானால் எனக்கும் புகழ் கிடைத்தது என்று அடிக்கடி சொல்லும் கலைஞர் இவர். முகத்தாரின் நடிப்பு பார்த்தவரின் மனத்தில் அப்படியே பதிந்துவிடும். மிகமிக வித்தியாசமான நடிப்பு, இவரது மீசையும் புகழ்பெற்றது. இவரது வானொலி நிகழ்ச்சி 'வயலோடுவசந்தம்' மறக்கமுடியாது. வானொலி, தொலைக்காட்சி, மேடை, திரைப்படங்கள் இவற்றை முழுமையாக ஆக்கிரமித்த கலைஞன் முகத்தார். கணேசபிள்ளை, பாலச்சந்திரன், முகத்தார் நாடக உலகின் மும்மூர்த்திகள். மூவரும் இப்போது இல்லை. அவர்களின் நினைவுகளும் புகழும் இன்றும் இருக்கின்றன.

புளுகர்பொன்னையா என்ற நாடகம் இலங்கை வானொலியில் 31 வாரங்களாக ஒலிபரப்பாகியது. இந்நாடகத்தை கணேசபிள்ளையே எழுதி முக்கிய பாத்திரத்திலும் நடித்தார். புளுகர் பொன்னையாவில் கே.எஸ். பாலச்சந்திரன் இராஜேஸ்வரி சண்முகம், அவரது மகள் வசந்தி சண்முகம், கே. கந்தசாமி போன்றோர்கள் நடித்தார்கள். இது 1972களிலே இடம் பெற்றது. 'பிறவுண்சன் இண்டஸ்றிஸ்' என்ற நிறுவனத்தின் ஆதரவில் இந்நாடகம் இடம்பெற்றது. மேடை நாடகங்களுக்கும் இவர்களே அனுசரனை வழங்கினார்கள். நாடகம் முடிவடைவதற்கு முன்பே இதில் நடித்த பாத்திரங்களாகிய 'புளுகர் பொன்னையா', 'பொன்னம்மா', 'தம்பையா', 'மைதிலி போன்றோர் எல்லோரும் நன்கு அறிமுகமாகிவிட்டனர். 'பிறவுஞ்ச இண்டஸ்றிஸ்' அதிபர் வேலணை வீரசிங்கம் ஒரு நல்ல கலா ரசிகர். நடிகர்களுக்குரிய சன்மானங்களை தாராளமாக வழங்கினார். 'புளுகர் பொன்னையா' மேடையேற்றப்பட்டு வெள்ளி விழாவும் கண்டது. கணேசபிள்ளையுடன் 'புளுகர் பொன்னையா' ஒட்டிக் கொண்டது.

கணேசபிள்ளைதான் தனது நாடகக் குரு என்று பாலச்சந்திரன் குறிப்பிடுகின்றார். கணேசபிள்ளையின் குடும்பமே ஒரு கலைக் குடும்பம். இவரது சகோதரன் அச்சுதம்பிள்ளை வானொலிக்கு நாடகப் பிரதிகள் எழுதுபவர். அச்சுதம்பிள்ளையின் மகன் ரவி அச்சுதம்பிள்ளை கனடாவில் வாழ்கின்றார். இவர் 'கனவுகள்' என்றோர் திரைப்படத்தை எடுத்துள்ளார். வரணியிலுள்ள அச்சுதம்பிள்ளையின் வீட்டிற்கு நானும், கே.எம். வாசகரும் 'கிராமவளம்' நிகழ்ச்சி ஒலிப்பதிவுக்காகச் சென்றிருந்தோம். கணேசபிள்ளை அவர்களை நான் கொழும்பு வானொலி நிலையத்திலும், அவருடைய மருதானை வீட்டிலும் அடிக்கடி சந்தித்திருக்கின்றேன்.

கணேசபிள்ளை பழகுவதற்கு மிகவும் இனியவர், உண்மையானவர். என்னோடு மிகவும் அன்பாகப் பழகிய ஒரு வெள்ளை உள்ளம் கொண்ட அன்பர் கணேசபிள்ளை.

பாலச்சந்திரன் என்ற கலைஞனை உருவாக்கிய பெருமை கணேசபிள்ளையைச் சேரும். எந்தக் கலைஞனைப் பற்றி எழுதினாலும் பாலச்சந்திரனை புறம் தள்ளிவிட்டு எழுத முடியவில்லை. எப்படியோ ஒவ்வொரு கலைஞர்களோடும் அவர் சம்பந்தப்பட்டிருக்கிறார். கலையோடு பாலச்சந்திரன் இரண்டறக் கலந்திருக்கிறார்.

'பாசச்சுமை' இதுவும் கணேசபிள்ளையின் ஒரு வெற்றிகரமான நாடகம். இதிலே பாலச்சந்திரன் கணேசபிள்ளையின் தகப்பனாக நடித்தார். பாலச்சந்திரனுக்கு அப்போது வயது 29. கணேசபிள்ளைக்கு 36 வயது. இருந்தும், தகப்பன் மகனாக இருவரும் நடித்தார்கள். இந்நாடகத்தில் இவர்களுடன் விமல் சொக்கநாதன், வி.என் மதியழகன் போன்றோரும் நடித்தார்கள். இது வெள்ளவத்தை இராமகிருஷ்ணமிசன் மண்டபத்தில் அப்போதைய தபால் அமைச்சர் கௌரவ செல்லையா குமாரசூரியர் அவர்களுடைய தலைமையில் நடைபெற்றது. பாசச்சுமை பிலஹரியினுடைய சிறுகதை, இதை நாடகமாக்கியிருந்தார்கள். கணேசபிள்ளை முக்கிய பாத்திரத்தில் நடித்ததோடு, நாடகத்தை நெறிப்படுத்தியவரும் அவரே! அவருக்கு இந்நாடகம் நல்ல புகழைத் தேடித்தந்தது.

'இரைதேடும் பறவைகள்', 'அசட்டு மாப்பிள்ளை', 'புழுகர் பொன்னையா' போன்ற நாடகங்கள் கணேசபிள்ளையின் இருப்பை இன்றும் நினைவுபடுத்துபவை. நாடகத்தை மறந்திருந்தவர்களிற்கும் ஒரு ஆசையை ஏற்படுத்தியது.

கணேசபிள்ளை தொலைக்காட்சியையும் விட்டு வைக்கவில்லை. 'சமூக சேவகி', 'காத்திருந்தவன்' என்பவை இவரதுதொலைக் காட்சி நாடகங்கள். இவை, 1982 காலப் பகுதியில் இடம் பெற்றது. அப்பொழுது பி. விக்னேஸ்வரன் அவர்கள் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் தொலைக்காட்சி நாடகங்களுக்குப் பொறுப்பாகவிருந்தார். 'சமூக சேவகி' உள்ளரங்கில் செட் போடப்பட்டு எடுக்கப்பட்டது.

'சமூக சேவகி' தொலைக்காட்சி நாடகம் புத்தாண்டு சிறப்பு நாடகமாக இடம்பெற்றது. எஸ்.எஸ். கணேசபிள்ளை, கே.எஸ்.பாலச்சந்திரன், கமலினி செல்வராஜன், ஜெயஜோதி, சிறீதர் பிச்சையப்பா, பிறாங் புஸ்பநாயகம், றிச்சாட் ஜெயகரன் ஆகியோர் நடித்தார்கள். ஒரு பெண் தன் பணியின் நிமிர்த்தம் அடிக்கடி ஒரு வங்கி அதிகாரியைச் சந்திக்கின்றார். அவர்களிடையில் உறவு இருப்பதாக வதந்தி பரவ, அவளின் வீட்டில் பிரச்சினை ஏற்படுகின்றது. இறுதியில் சந்தோசமான முடிவு. தொலைக்காட்சி நாடகங்களைத் தயாரிப்பதில் அபாபோது பல பிரச்சினைகள் இருந்தாலும் அர்ப்பணிப்புள்ள தயாரிப்பாளர்களால் யாவும் சுலபமாக முடிகிறது.


'உதயத்தில் அஸ்தமனம்' யாழ்ப்பாணக் கலைஞர்களையும் முன்பு வானொலி தொலைக்காட்சி நாடகங்களில் நடித்தவர்களையும் இணைத்து எடுக்கப்பட்ட ஒரு வடிவம். கதை இந்து மகேசினால் எழுதப் பட்டது. இதில் இராஜேஸ்வரன், றேமன்ட் குமுதினி, ராஜி இம்மானுவேல், கமல்ராஜ், கே.எஸ். பாலச்சந்திரன், எஸ்.எஸ். கணேசபிள்ளை, பாய்க்கியம் கந்தசாமி, நிலானி



நாகரட்ணம் ஆகியோர் நடித்தார்கள். ஒரு திரைப்படம் தயாரிக்கும் உற்சாகத்தோடு ரூபவாஹினிக் கூட்டுத்தாபன உத்தியோகஸ்தர்கள் இதிலே ஈடுபட்டு இருந்தார்கள். இக்குழுவிலே பி. விக்னேஸ்வரன், திருமதி ஞானம் இரத்தினம் ஆகியோரும் அடங்குவர்.

கணேசபிள்ளையின் இன்னுமொரு தொலைக் காட்சி நாடகம் 'காத்திருந்தவன்', பி.விக்னேஸ்வரன் தயாரித்திருந்தார். கே.எஸ். பாலச்சந்திரன் உட்பட பலர் நடித்திருந்தார்கள். இத்துறைகளிலெல்லாம் ஈடுபட்டிருந்த எஸ்.எஸ். கணேசபிள்ளை திரைப்படத் துறையில் ஏனோ தனது தடங்களைப் பதிக்கவில்லை. கணேசபிள்ளையின் பெயர் இல்லாமலே ஈழத்து திரைப்பட வரலாறு எழுதப்பட்டுள்ளது.

திரை மூடப்பட்டது. கவின்கலைகளுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. கணேசபிள்ளை என்ற ஒரு மாபெரும் கலைஞன் முடக்கப் பட்டான். 30.08.1995ல் தனது ஐம்பத்தெட்டாவது வயதில் இவரது உயிர் பறிக்கப்பட்டது. இன்றும் நெஞ்சை நெருடும் நிகழ்ச்சி இது.



sanmuganathan@thaiveedu.com

# ஒப்பனைக் கலைஞர் பிலோமினா

## ஆழத்து முத்துக்கள் 132

- ப. ஸ்ரீஸ்கந்தன் -

கலை நிகழ்ச்சிகளிலும் திருமணம் போன்ற சமூக உறவுகளுள் நிகழும் விசேட நிகழ்வுகளிலும் ஒப்பனை என்பது இன்றியமையாத ஒன்றாகும். அழகை மேம்படுத்தவும் அல்லது ஒருவரை இன்றுமொரு பாத்திரமாக மாற்றவும் பயன்படும் இக் கலை இறைவன் அளித்திட்டவரப்பிரசாதம். ஈழத்தில் குறிப்பாக நாடகங்களில் ஒப்பனைக்குப் பெயர் போன பெஞ்சமின், ஸ்ரனிஸ் மாஸ்டர் போன்ற பெரியவர்களின் புகழை இன்றும் பேசக் கேட்கிறோம். நாகரீக வளர்ச்சியில் இன்று ஒப்பனை என்பது தவிர்க்க முடியாத விடயமாக அன்றாட வாழ்விலும் கலந்துவிட்டது.

இத்தகைய ஒப்பனைக் கலையின் உச்சத்தைத் தொட்டவர்தான் பிலோமினா அவர்கள். எல்லைகள் கடந்து துல்லியமான தனது ஒப்பனைத் திறனால் தமிழகத்தின் சினிமாத் துறையை ஆட்கொண்ட ஈழத்துப்பெண் என்ற பெருமைக்குச் சொந்தக்காரர் இவர். ஒப்பனைக் கலைஞர் என்ற ஒரு பதத்துக்குள் அடக்கிவிட முடியாத அளவுக்கு இவர் கைவினை, சிற்பவேலை, சிகை அலங்காரம்,



நூல் சித்திரம், தையல் வேலை, 'பற்றிக்' கலவை, மெழுகுச் சித்திரம், நவீன ஓவியம், கேக் அலங்காரம், பூவலங்காரம், கோலம் என்று எண்ணற்ற கலைகளை கைவரப்பெற்ற சகலகலா வல்லமைமிக்க கலைஞர்.

பிலோ அல்லது பிலோமினா என்று கலையுலக நண்பர்களால் அழைக்கப்படும் பிலோமினாவதி கிருஷ்ணபிள்ளை பிறந்து வளர்ந்தது எல்லாம் தேனாடும் மட்டுநகர் மண்ணிலே. சவரி பிரான்சிஸ் - மேரி திரேசா தம்பதிகளின் இரண்டாவது மகள். மட்டக்களப்பு சிசிலியா கொன்வென்றிலும் இந்துக்கல்லூரியிலும் கல்வி கற்றவர்.

இவ்விடத்தில், தனது மகளை கலையின் பக்கம் இழுத்துச் சென்ற பெருமகன் சவரி பிரான்சிஸ் அவர்களைச் சற்றுப் பதிவுசெய்வது பொருத்தமாக இருக்கும். மட்டக்களப்பில் பல பாடசாலைகளில் அதிபராகக் கடமையாற்றிய இவர் ஒரு பால பண்டிதர், ஆங்கில ஆசிரியர், சித்திர ஆசிரியர், சுவாமி விபுலானந்தரின் மாணாக்கர்.

பல்வேறு துறைகளில் புலமை பெற்றிருந்த சவரி பிரான்சிஸ் அவர்கள் சிறந்த நடிகராகவும், நெறியாளராகவும், நாடக எழுத்தாளராகவும் விளங்கியதுடன் பல வானொலி நாடகங்களிலும் பங்குபற்றியிருந்தார். பிரபல கலைஞன் எ.்.ப்.எக்ஸ். நடராஜா அவர்களுடன் இணைந்து பல நாடகங்களில் நடித்திருந்தார். இவை தவிர, நாடகங்களில் மேடையமைப்பு, ஒப்பனை என்பவற்றிலும் சிறந்து விளங்கினார். புகழ்பெற்ற எழுத்தாளரான அவர் 'வாழ்க்கைச் சுவடுகள்', 'மட்டுநகர் மண்ணில் ஒரு மனிதப் புனிதர்', 'நூறு வருட மட்டுநகர் நினைவுகள்', 'வேத உப தேசம்' ஆகிய நூல்களை எழுதி வெளியிட்டார்.

1972ல் தந்தையாரின் தலைமையில், மட்டுப் பிராந்திய கல்விப் பணிப்பாளர் வி.சங்கரலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட சித்திரக் கண்காட்சி தான் பிலோமினாவை இவ்வாறான கலைக்குள் ஈர்த்துக்கொள்ளக் காரணமாக அமைந்துபோனது.

பல்லுத் தீட்டும் பிரஷ், உரிமட்டை, பொச்சு போன்று கையில் கிடைக்கும் பொருட்களைக் கொண்டு வண்ணம் தீட்ட ஆரம்பித்த பிலோமினா அவர்கள் மெழுகுச் சித்திரம், நவீன ஓவியம், நூல்சித்திரம் போன்றவற்றில் தேர்ச்சி பெற்ற கலைஞராக விளங்கினார்.

இதன் பின்னர் மட்டுநகரில் நடைபெற்ற 'சியவச' பொருட்காட்சியில் பார்வைக்கு வைப்பதற்காக மட்டக்களப்பு கடற்கரையில் பல்வேறு விதமான சிப்பிகளைப் எடுத்து வந்து பிசினால் அவற்றை வெவ்வேறு சீர்வரிசைகளில் ஒட்டி பல கைவினைப் பொருட்களை உருவாக்கினார்.

சித்திரம் என்றால் சித்திரத்தின் சகல பரிமாணங்களையும் பயின்றது போல் கைவினைப் பொருட்கள் செய்வதிலும் பலவிதமான வகைகளையும், நுணுக்கங்களையும் தானாகவே முயன்று வெற்றியும் பெற்றவர். 'கற்பதை முழுமையாகக் கற்பது' என்ற இவரது குறிக்கோளுக்கு ஏற்ப தையல் கலையில் கம்பளித் தையல், குறுக்குத் தையல், சங்கிலித் தையல், எம்பிரோய்ட் போன்று அனைத்துத் தையல் வேலைப்பாடுகளையும் பயின்றார்.

தான் பயின்ற கலையை மற்றவர்களுக்கும் சொல்லிக் கொடுக்கும் சந்தர்ப்பம் அப்போதைய கல்விப் பணிப்பாளராக இருந்த K. முத்துராஜா மூலம் இவருக்குக் கிடைத்தது. பாடசாலைகளை விட்டு வெளியேறும் மாணவிகளுக்கு கைவினைப் பொருட்கள் செய்வது, துணிகளுக்கு 'பற்றிக்' கலவை சேர்ப்பது, தையல் வேலை, கேக் அலங்காரம், ஓவியம் வரைதல் போன்ற சுயதொழில் வாய்ப்புக்கான கல்வியைப் போதிக்கும் ஆசிரியையாக இவர் நியமனம் செய்யப்பட்டார். பெண்கள் சுயமாக இயங்கவேண்டும் என்பதில் விருப்பம் கொண்ட இவர் மட்டுநகரின் பல பாடசாலைகளுக்கு மோட்டார் சைக்கிளில் சென்று வந்தார். ஏறத்தாள 500 மாணவிகள் இவரால் பயன்பெற்றனர். பெண்ணிய சிந்தனைகள் மிக்க பிலோமினா அவர்கள் மட்டக்களப்பில் முதன் முறையாக மோட்டார் சைக்கிள் ஓட்டிய பெண்மணி என்று அறியப்பட்டவர். மேலும் அவர் பாடசாலையில் படித்த நாட்களில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தினகரன் விழாவில் பெண்களுக்கான சைக்கிலோட்டப் போட்டியில் கலந்துகொண்டு முதற்பரிசாக சைக்கிள் ஒன்றைப் பெற்றுக்கொண்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

நாட்டில் ஆரம்பமாகிய அசாதரண நிலைமை காரணமாக 1983ல் ஒரு ஆண் மகனும் இரு பெண்பிள்ளைகளும் கொண்ட இவரது குடும்பம் இந்தியாவுக்கு இடம்பெயர நேரிட்டது. குடும்பச் சுமை காரணமாக தமிழ்நாட்டில் வேலை தேடித்திரிந்த பிலோமினாவை சிவ தாணு என்ற திரைப்படத் துணை நடிகர் ஒருவர் நடிகை லஷ்மியிடம் அழைத்துச் சென்றார். இவரது நிலைமையை அறிந்து கொண்ட லஷ்மி சைதாப்பேட்டையில் உள்ள தனது வீட்டில் இவர்களைத் தங்கவைத்தார். அது மட்டுமல்லாது, பிள்ளைகளையும் நல்ல பாடசாலைகளில் சேர்த்துப் படிப்பித்தார். மேலும், அடையாறு அழகுக்கல்வி நிலையத்தில் ஒப்பனைக் கலைச்சான்றிதழ் கற்கை நெறியில் பிலோமினா அவர்களைச் சேர்த்துப் பேருதவி புரிந்தார்.

நடிகை லஷ்மியின் அன்பான அரவணைப்பில் பிலோமினாவின் கலை வாழ்வு 'ஒப்பனை' என்ற உயர்கலையின் உச்சத்தை நோக்கிப் பயணித்தது. விசுவின் 'சம்சாரம் அது மின்சாரம்' என்ற படத்தில் லஷ்மியின் ஒப்பனைக் கலைஞராக முதன் முதலில் திரைப்படத் துறையில் இவர் கால் பதித்தார். தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், ஒரிசா என்று ஏறத்தாள 300 திரைப்படங்களுக்கு ஒப்பனைக் கலைஞராக பணிபுரிந்த பிலோமினா அவர்கள் ஒரே நாளில் சென்னை, கோவளம். பெங்களூர் என்று விமானத்தில் பறந்து பணியாற்றும் அளவுக்குப் பேரும் புகழும் பெற்றார். லஷ்மி மட்டுமல்லாது, ஸ்ரீவித்யா, சித்தாரா, நளினி, சங்கராபரணம் ராஜலஷ்மி, மனோராமா, காந்திமதி போன்ற



நடிகைகள் இவரது கைவண்ணம் பெற்றவர்களில் சிலராகும்.

இவர் 'புத்தம் புதுப்பயணம்' என்ற படத்தில் ஒரு வோடனாக நடித்திருந்தார். 'குடும்பம் ஒரு கோயில்' படத்தில் சிவாஜியுடன் பணியாற்றியதும், 'ஒரு வடக்கன் வீரகதா' படத்தில் மம்முட்டி, கீதா ஆகியோருடன் பணிபுரிந்ததும் மறக்க முடியாத அனுபவங்களாகவும், 'சம்சாரம் அது மின்சாரம்' படத்தின் நூறாவது விழாவில் எம்.ஜி.ஆர் அவர்களிடமிருந்து பரிசுபெற்றது தனக்குக் கிடைத்த பெருமையாகவும் இவர் குறிப்பிடுகிறார்.

1996ல் கனடா வந்த பின்னர் Blossom Styles & Fashoin என்ற அழகியற் கல்விநிலையத்தை ஆரம்பித்து இம்மண்ணில் அழகியற்கலைக்கு உத்வேகம் கொடுத்த விடயங்களை நாடறியும். ஏழு தடவைகள் பாஷன் ஷோ நடத்தியமை, கேக் கண்காட்சி செய்தமை, சித்திரக்கண்காட்சி செய்தமை,ஒப்பனை செய்முறை பயிற்றுவிப்பு, மேடை, தொலைக்காட்சி நடிகர்களுக்கான ஒப்பனை, 'அழகாக இருப்பது எப்படி' என்ற DVD தயாரித்தமை, பூக்கள் அலங்காரம் செய்வது என்று இவரது முயற்சிகளும் செயற்பாடுகளும் தொடர்கின்றன.

இங்கும் ஏறத்தாள 500 மாணவிகளைப் பயிற்றுவித்த பிலோமினாவுக்கு 2005ல் கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனம் சிறந்த பெண் தொழிலதிபருக்கான விருதினை வழங்கிக் கௌரவித்தது.

இவர் வியாபித்திருக்கும் கலைகளின் வட்டத்துக்கு அப்பால் இவரது சமூக சேவையும் இங்கு நினைவு கொள்ளத்தக்கது.

பாடசாலை நாட்களில் மட்டக்களப்பில் உள்ள வயோதிபர் மடங்களில் தொண்டராக பணியாற்ற ஆரம்பித்த இவர் பின்னர் தமிழகத்தில் வாழும் நாட்களில் ஈழத்தமிழர்களின் அகதி முகாம்களில் ஆற்றிய பணி அளப்பரியது. முட்டுக்காடு, கோவளம், மண்டபம் அகதி முகாம்களுக்குச் சென்று சுயதொழில் விடயங்களைப் படிப்பித்தமை, பயின்ற 90 பிள்ளைகளின் கைவினைப் பொருட்களைக் கொண்டு கண்காட்சி நடத்தியமை, இதே போல் திருச்சி, கோயம்புத்தூர் முகாம்களைச் சேர்ந்தவர்களின் பல்வேறு திறமைகளை வெளிப்படுத்திய 5 நாள் கண்காட்சி என்பன என்றும் இவரின் பேர் சொல்லும்.

அழகியற் கலை நிபுணராக, சமூக ஆர்வலராக, ஒரு பெண்ணியவாதியாக பல்வேறு கோணங்களில் பிலோமினா அவர்களை நோக்கலாம். உடைந்த காப்புகள், சிந்திய தேயிலைத்துகள்கள் என்று கையில் கிடைக்கும் எந்தப் பொருளையும் பயன்படுத்தி அழகியற் கலைவடிவம் ஆக்கும் இவரது கைவண்ணங்கள் ஆச்சரியத்தைத்தருகின்றன.



sriskandan@thaiveedu.com

உங்களுக்குத் தெரிந்த கலைஞர்கள் பற்றி நீங்களும் எழுத வேண்டுமா?

Thaiveedu
Woodside Square, P.O.Box #63581
1571 Sandhurst Cir.
Toronto, ON. M1V 1V0

கலைஞர்கள் பற்றிய விபரங்கள், அவர்களுடைய புகைப்படங்களுடன்
உங்களுடைய பெயர், தொலைபேசி எண், புகைப்படம்
மற்றும் மின்னஞ்சல் முகவரியையும் தாய்வீட்டுக்கு அனுப்பிவையுங்கள்.

Fax : 416.849.0594
E-mail : info@thaiveedu.com

# சானா செ. சண்முகநாதன்

**ஆழத்து முத்துக்கள் 133**

**- தெளிவத்தை ஜோசப் -**

**இலங்கை நாடக வரலாற்றில் ஒரு சாகப்தம் சானா என்று அழைக்கப்படும் செ.சண்முகநாதன்:**

சானா என்றதுமே இலங்கை வானொலியின் நாடக தயாரிப்பாளர், மேடை நாடக நெறியாளர், 'லண்டன் கந்தையா'வின் நகைச் சுவை நடிகர் போன்ற சித்திரங்களே நம் மனக் கண்ணில் எழுவதுண்டு.

ஆனால் அவர் ஒரு ஓவியர். சென்னை College of Arts என்னும் அரசக் கலைக் கல்லூரியில் சித்திரம் பயின்று தராதரம் பெற்றவர். நியூட்டன் சினிமா என்னும் சென்னை தமிழ்பட தயாரிப்பு நிலையத்தில் உதவி கலை இயக்குனராக பணியாற்றியவர். யாழ் வின்சன்ட் ஆர்ட் கிளப்பில் சித்திர ஆசிரியராகப் பணியாற்றி சித்திரக்காரர்கள் பலரை உருவாக்கியவர், புலமை பரிசில் பெற்று பி.பி.சியில் 3 ஆண்டுகள் ஒலிபரப்பு பயிற்சி பெற்றபோது சேக்ஸ்பியர் தியேட்டரிலும் 4 மாதங்கள் பயிற்சி பெற்றவர், ஈழகேசரி இதழின் பிரதான ஓவியர் (1937), ஈழத்தின் முதல் நடைச் சித்திர நூலான 'பரியாரி பரமர்' என்னும் நடைச்சித்திர நூலின் ஆசிரியர் என்பது போன்ற தகைமைகளை நம்மில் எத்தனை பேர் அறிந்திருக்கின்றோம்.

'இன்று இலங்கை வானொலியில் நான் தயாரிக்கும் நாடகங்களை கேட்டு மகிழும் ரசிகர்களுக்கு இந்தச் சானாவை தெரியாது. என்னை ஒரு நகைச்சுவை நடிகனாக மட்டுமே தரிசிக்கும் அன்பர்களை நான் அறிவேன். யாழ்ப்பாணம் பரமேஸ்வராக் கல்லூரியில் படிக்கின்ற காலத்தில் தமிழ் வகுப்பை கட்பண்ணி ஆர்ட் கிளாசில் சித்திரம் வரைந்து கொண்டிருப்பேன். சித்திரத்தில் எனக்கு ஒரு வகை பைத்தியம்….' என்று சானாவே கூறுகின்றார். (பரியாரி பரமர் - நடைச்சித்திர நூல்- என்னுரை - 1964)

ஈழகேசரியின் ஆசிரியராக சோ.சிவபாதசுந்தரம் அவர்கள் இருந்த காலத்திலேயே ஓவியராக சானா இருந்தார். 'ஆனந்த விகடனுக்கு ஆசிரியர் கல்கியும் ஒவியர் மாலியும் இருந்ததுபோல் ஈழகேசரிக்கு சோ.சியும் சானாவும்' என்று எழுதுகின்றார் குழ.சபாநாதன் அவர்கள்.

1951ல் இலங்கை வானொலியின் நாடகப் பிரிவுக்கான ஒரு பொறுப்பாளராக சானா பதவியேற்றார். சினிமாப் பாட்டு கேட்கவும், செய்தி கேட்கவும் என்றிருந்த இலங்கை வானொலியை நாடகம் கேட்கவும் என்று உருவாக்கிக் காட்டியவர் சானா. ஒரு கால் நூற்றாண்டு காலம் இலங்கை வானொலியை ஆட்டிப்படைத்தவர் அவர்.

ஒரு மணிநேர நாடகம், அரை மணிநேர நாடகம், பதினைந்து நிமிட நாடகம், என்று ஒவ்வொரு மாதமும் ஐந்தாறு நாடகங்கள் தயாரித்து ஒலிபரப்பு செய்வார். மாதத்துக்கு ஐந்தாறு நாடகங்கள் என்றால் புதிது புதிதாக எத்தனையோ நாடகாசிரியர்கள் தோன்றினார்கள்.

ஒரு மாதத்தின் 30 நாட்களுக்குள் 5 நாடகங்கள் தயாரித்து ஒலிபரப்புவது என்பது லேசான காரியம் அல்ல. வந்து சேரும் நாடகங்களில் நல்லதை தேர்ந்தெடுக்க வேண்டும். அதற்கு பொருத்தமான நடிகர்களை தேட வேண்டும், நடிக்க வைக்க வேண்டும். ஒரு மணி நேர நாடகம் என்றாலும் அரைமணி, கால்மணி நேர நாடகமென்றாலும் குறித்த நேரத்தில் ஆரம்பித்து குறித்த நேரத்தில் முடிக்க வேண்டும். தயாரிப்பாளருக்கு எத்தனை கிரகிப்பு, எத்தனை எத்தனை நுட்பம்.

'நாடகத்துறையின் சாம்ராட் இந்தச் சானா' என்று எஸ்.பொவும்,

'சானா ஈடு இணையற்ற நாடக, தயாரிப்பாளர், நடிகர் எழுத்தாளர், வானொலி நாடகத்துறையில் அவரொரு சகாப்தம். அவர் குரு நாமவரது சீடர்கள்' என்று பேராசிரியர் கைலாசபதியும் புகழாரம் சூட்டியிருப்பது கவனிக்கத்தக்கது.

இலங்கை வானொலியின் நாடகப்பிரிவை சானா பொறுப்பேற்ற ஆரம்ப காலங்களில் நடிக்கப்படும் நாடகங்களை பதிவு செய்து கொண்டு பின் திருத்தியமைத்து ஒலிபரப்பும் முறை இருக்கவில்லை என்பதையும் நடிக்கப்படும் தளத்தில் இருந்தே நாடகங்கள் நேர் ஒலிபரப்பாகின என்பதையும் நாம் கவனத்தில் கொள்ளல் வேண்டும். அப்போது சானாவின் தனித்திறமை மேலும் புலனாகும்.



கலையரசு சொர்ணலிங்கம் அவர்களையே தனது நாடகக்குரு என்றும் தன்னை நாடகத்தில் தோய்த்தெடுத்து திழைக்க வைத்தவரும் அவரே என்றும் சானா அடிக்கடி கூறி மகிழ்வார் என்கின்றார் கலைப்பேரரசு ஏ.டி. பொன்னுதுரை அவர்கள். 1933ல் யாழ்ப்பாணம் றோயல் தியேட்டர் மண்டபத்தில் மேடையேறிய 'பாதுக பட்டாபிஷேகம்' நாடகத்தில் சொர்ணலிங்கத்துடன் முதல் தடவையாக சத்துருக்கன் பாத்திரத்தில் நடித்ததாகவும் அதனை தொடர்ந்து 'பாமா சபதம்' 'இழந்த காதல்' 'அசட்டு வேலைக்காரன்' 'உடையார் மிடுக்கு' 'வாணிபுறத்து வணிகன்' போன்ற நாடகங்களில் அவருடன் தொடர்ந்து நடித்ததாகவும் சானா ஒரு கட்டுரையில் குறிக்கின்றார்.

1939ல் அரங்கேறிய 'வாணிபுறத்து வணிகன்' என்ற நாடகத்தில் சானாவுக்கு ஒரு சிறிய பாத்திரமே கிடைத்திருந்தது. அந்தச் சிறிய பாத்திரத்தையும் மிக அருமையாக செய்திருக்கின்றார் சானா என்பதை கலையரசு சொர்ணலிங்கம் தனது நாடக நூலில் பதிவு செய்கின்றார்.

'எஸ்.சண்முகநாதன் இந்தப் பாத்திரத்தை மிகவும் அற்புதமாக செய்து ஈடில்லாப் புகழைப் பெற்றுள்ளார். இவரை நாடக முன்னணிக்கு கொண்டு வந்தது இந்த நாடகத்தின் இந்தப் பாத்திரமே என்று துணிந்து சொல்வேன்' என்கின்றார் கலையரசு.

1941ல் இதே வாணிபுறத்து வணிகன் கொழும்பு சென். பீட்டர்ஸ் கல்லூரியில் மேடையேறியபோது 'லாவண்ய கம்பீரன்' என்ற அதே சிறிய பாத்திரத்தில் மறுபடியும் சானாவே நடித்தார்.

சொர்ணலிங்கம் அவர்களின் ஒத்திகை பற்றி சானா ஒரு கட்டுரையில் இப்படி கூறுகின்றார் 'ஒவ்வொரு நாடகமும் குறைந்தது 40 நாட்கள் ஒத்திகை நடைபெறாமல் மேடையேறியதில்லை. ஒத்திகை என்றால் சாதாரண ஒத்திகை இல்லை. ஒவ்வொரு நாளும் கசறட்டுத்தான்… 'பாமா சபதம்' நாடக ஒத்திகை நடைபெறுகிறது நான் (சானா) கிருஷ்ணன், கந்தவனம் ஐயா நாரதர், 'நாராயண… நாராயண…' என்றபடி நாரதர் வர நான் எழுந்து குனிந்து நாரதரே வணக்கம் என்று கூறிய மறுகணம் தடால் என்று நாரதர் காலடியில் குப்புற விழுந்தேன். முன் பல்லிலிருந்து இரத்தம் ஒழுகுகிறது. நான் ஏன் குப்புற விழுந்தேன் என்று பார்க்கையில் பின்னால் நின்று கொண்டிருந்த சொர்ணலிங்கம் என்னை காலால் எட்டி உதைத்ததனால்தான் என்று தெரிந்தது.

'நாரதருக்கு கிருஷ்ணர் தலைகுனிந்து வணங்குவதோ' நீ என்ன செய்தாய் போய் முகத்தை கழுவிக் கொண்டு வா வந்து ஒத்திகையை பார் என்றார் கோபமாக. நான் போய் முகம் கழுவிக் கொண்டு திரும்பி வந்தபோது என்னுடைய கிருஷ்ணன் பாத்திரத்தை இன்னொருவர் பழகிக்கொண்டிருந்தார்.

இது இன்று நடந்திருந்தால் சொர்ணலிங்கத்தின் பாடு எப்படியிருக்கும் 'ஒருசில நடிகர்களை சேர்த்துக் கொண்டு இன்னொரு நாடக மன்றம் ஆரம்பித்து உதைபட்ட நடிகர் தானே இயக்குனராக மாறி… நாங்கள் நாடகத்தை விசுவசித்தோம். ஒரு பக்தியுடன் நாடகம் பழகினோம், பயின்றோம், ஒத்திகை செய்தோம்' எனவும் குறித்து வைக்கின்றார் சானா.

ஆங்கிலேயரைப்போல் அழகாக ஆங்கிலம் பேசும் கலை கைவந்த சானா மாணவ காலத்திலேயே சிறுவர் ஆங்கில நாடகங்களில் நடித்தவர்.

தெல்லிப்பழையில் பிறந்த சானா அமெரிக்க மிஷன் பாடசாலை என்று பெயர் பெற்றிருந்த தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் ஆரம்ப கல்வியையும் பரமேஸ்வராவில் எஸ். எஸ். சி வரையும் படித்து சித்தி பெற்றவர். அதனால் அழகாக ஆங்கிலம் பேசும் திறன் அவரிடம் இருந்தது.

நாடகத் தயாரிப்பு, நெறியாள்கை, நடிப்பு என்று ஒரு பன்முக ஆளுமை கொண்டிருந்தவர் சானா. முப்பதுகளிலிருந்தே மேடைக்கான நாடகங்களை நெறிப்படுத்தி வந்திருக்கின்றார். இவர் நெறியாள்கை செய்த பதினைந்துக்கும் மேற்பட்ட நாடகங்களில் லண்டன் கந்தையா, 200க்கும் மேற்பட்ட தடவைகள் இலங்கை எங்கும் மேடையேறிய நாடகம்.

வானொலிக்காக இலங்கையர்கோன் எழுதிய நாடகம் லண்டன் கந்தையா. வானொலி


**தொடர்தல் 117ம் பக்கம்**


## உங்களுக்குத் தெரிந்த கலைஞர்கள் பற்றி நீங்களும் எழுத வேண்டுமா?

கலைஞர்கள் பற்றிய விபரங்கள், அவர்களுடைய புகைப்படங்களுடன்
உங்களுடைய பெயர், தொலைபேசி எண், புகைப்படம்
மற்றும் மின்னஞ்சல் முகவரியையும் தாய்வீட்டுக்கு அனுப்பிவையுங்கள்.

**Thaiveedu**
**Woodside Square, P.O.Box #63581**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

**Fax : 416.849.0594**
**E-mail : info@thaiveedu.com**


Homelife Home Warranty Program
Flexible Commission | Free Market Evaluation
LIST YOUR HOME WITH PROFESSIONALS
SAVE YOUR TIME AND MONEY
WE CAN SELL YOUR HOME WITH TOP DOLLARS
HOMELIFE
HomeLife Today
Realty Ltd., Brokerage*
Mortgage can be
Arranged in Major Banks
$ 199,900
Midland/Lawrence
2 Bed Room, 2 Washroom
$ 215,900
Sheppard/Markham
2+1 Bed Room, 2 Washroom
$ 221,900
Markham/Sheppard
2+1 Bed Room, 2 Washroom
$ 224,900
Markham/401
2+1 Bed Room, 2 Washroom
$ 314,900
Mccowan/Ellesmere
2+1 Bed Room, 2 Washroom
$ 347,500
Lakeshore And Bathurst
1+1 Bed Room, 1 Washroom
$ 415,900
William Pkway/Chingcousy
3+1 Bed Room, 3 Washroom
$ 545,000
Warden/ Danforth
3 Bed Room, 3 Washroom
$ 549,900
Sheppard/ Meadowvale
3 Bed Room, 4 Washroom
$ 649,000
Salem/ Rossland
4 Bed Room, 4 Washroom
$ 679,900
Brnhmthrp/Cntrl Pkwy
4+1 Bed Room, 4 Washroom
$ 719,000
Hwy 50 / Cortelle
4 Bed Room, 4 Washroom
$ 799,900
Guildwood Pkwy
4 Bed Room, 3 Washroom
$ 879,000
Castlemore/ The Gore
4 Bed Room, 5 Washroom
$ 909,000
Williams Pkwy / Mississauga
5 Bed Room, 4 Washroom
BEFORE YOU LIST YOUR PROPERTY PLEASE CALL US! EXPLAIN OUR SERVICES.
club member
2011-2012 PLATINUM CLUB Member
2013 DIAMOND CLUB Member
Top 5% sales representatives within homelife/Canada
Hariharan Nadarajah
Sales Representative
Cell: 416-856-4276
harisells@gmail.com
Nima Hariharan
Sales Representative
Cell: 647-866-2642
nimah02@hotmail.com
Not intended to solicit buyers or sellers under contract.
Office: 416.298.3200

# PYRAMIDGROUP.COM

$599,000

Markham - Middlefield/14th Ave
3 Bedrooms, 3 Washrooms
Basement finished

$628,000

Stouffville - E 10th Line/N Mantle Ave
4 Bedrooms, 3 Washrooms

$658,800

Markham - W Of Markham Rd/N Of 16th Ave.
3 Bedrooms, 3 Washrooms

$716,000

Vaughan - Keele/Major Mackenzie
4 Rooms, 3 Washrooms

$719,900

Vaughan - Islington/Major Mack
4 Bedrooms, 4 Washrooms
Basement finished

$748,000

Richmond - Yonge/ Elgin Mills
4 Bedrooms, 3 Washrooms

$799,000

Richmond - Leslie/Elgin Mills
4 Rooms, 3 Washrooms
Basement finished

$878,000

Vaughan - Dufferin St/Autumn Hill Blvd
4 Rooms, 3 Washrooms

$899,000

Richmond - Leslie/Major Mac
4 Bedrooms, 4 Washrooms

$979,000

Vaughan - Dufferin & Major Mackenzie
4+1 Bedrooms, 4 Washrooms

$988,000

Richmond - Bayview/Hwy 7
4+1 Bedrooms, 4 Washrooms
Basement finished

$989,000

Vaughan - Islington/Rutherford
4+2 Bedrooms, 4 Washrooms
Basement finished

$349,649


Oshawa - Adelaide/Townline
4 Bedrooms, 3 Washrooms
Basement finished

$409,900

Whitby - Garden Sit Bm Dryden Blvd
3 Bedrooms, 4 Washrooms
Basement Finished | Sep Entrance

$445,000

Oshawa - Harmony/Taunton
4 Bedrooms, 3 Washrooms

$459,900

Ajax - Westney/Sullivan
4 Bedrooms, 3 Washrooms

$474,900


Ajax - Hwy 2/Westney
4+1 Bedrooms, 4 Washrooms
Basement finished

$498,800

Oshawa - Wilson/Coldstream
4 Bedrooms, 4 Washrooms

$589,000

Ajax - Harwood/Taunton
4 Bedrooms, 3 Washrooms

$659,000

Ajax - Harwood/Rossland
4 Bedrooms, 3 Washrooms



HomeLife/Future Realty Inc., Brokerage
#205-7 Eastvale Drive, Markham, ON L3S 4N8
**Bus : 905 201 9977 / Fax: 905 201 9229**
Independently Owned and Operated, REALTOR * Sales Representative

HOMELIFE HIGHER STANDARDS

| Uthayan Sivarajah | Sugan Sivarajah | Raj Sivarajah | SivaKumar Sivarajah |
|---|---|---|---|
| 416 301 5555 | 905 201 0066 | 416 843 3333 | 416 453 7777 |

# சானா செ. சண்முக...

114ம் பக்கத் தொடர்ச்சி...

நாடகங்களில் மேடைக்கு எது பொருந்தி வரும் என்பதை தெரிவு செய்யும் நுட்பம் சானா வுக்கு இருந்தது. அதை 'லண்டன் கந்தையா' உறுதி செய்தது. மக்களை சிரிக்க வைத்து



மகிழ்விப்பதையே மையமாகக் கொண்ட இந்த நாடகத்தின் பிரதானமான நகைச்சுவை பாத் திரத்தை ஏற்று நடித்தவர் சானா.

வானொலிக்காக என்.எஸ்.எம் ராமையா எழு திய 'ஒரு மின்னல்' நாடகத்தையும் மேடை நாடகமாக்கி வெற்றி கண்டவர் சானா.

ஷேக்ஸ்பியரின் வேணிபுறத்தின் இரு நண் பர்கள் (Two Gentlemen of Verona) மற்றும் சண்டமாருதம் (Tempest), பிரேன்ஞ் நாட காசிரியர் மோலியரின் 'உலோபி' (Miser) ஒஸ்கார் வைல்ட் டின் ஸ்ரீ மான் ஆனந்தம் (Importance of being earnest) மற்றும் பதி யூர் இராணி (Duches of paduwa) போன்ற ஆங்கில நாடகங்களை மொழி பெயர்த்தும் தழுவியும் மேடையேற்றியிருக்கின்றார் சானா.

1960ல் கே.பாலசந்திரனின் 'கொழும்பு கலைச் சங்கம்' லயனல் வெண்ட் திரையரங்கில் நடத்திய 3 நாடக விழாவில் இந்த பதியூர் இராணி, மற்றும் லண்டன் கந்தையா மேடை யேறியபோதும் 1968ல் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடந்த நிழல் நாடக விழாவில் எஸ்.பொன்னுதுரையின் 'சாணக்கியன்' நாட கத்தை சானா மேடையேற்றியபோதும் நாட கத் தயாரிப்பின் ஒவ்வொரு நுட்பமும் அங் கமும் துருவி ஆராயப்பட்டு வெளிக் கொண ரப்பட்டதை நாடகவல்லுனர்கள் கூறி மகிழ்ந் தனர். தான் ஒரு நாடகக்காரன் என்பதை சானா நிரூபித்துள்ளார் என்றும் கூறினார்.

'அரங்கக் கலைஞர் ஐவர்' என்ற தனது நூலில் கலைப்பேரரசு எ.டி.பொன்னுதுரை, அவர்கள் 'சானா இயக்கிய நாடகங்கள்' என்று கீழ்வருவனவற்றை ஒரு பட்டியலிட் டுள்ளார்.

1932 – ஷேக்ஷ்பியரின் நாடகத்தைத் தழுவி சானாவே எழுதிய 'வேணிபுறத்தின் இரு நண்பர்கள்'

1933 ஷேக்ஸ்பியரின் செம்பஸ்ட் நாடகத்தை தழுவி மாஸ்டர் சிங்கராயர் எழுதிய 'சண்ட மாருதம்'

1949 பேராசிரியர் கே.கணபதிப்பிள்ளையின் 'உடையார் மிடுக்கு'

1950 – ப்ரேன்ஞ் நாடகாசிரியர் மோலிய ரின் மைசர் நாடகத்தின் தமிழ் வடிவம் 'உலோபி'

1953 - ஹரிந்திரநாத் சட்றோ பாத்தியாவின் ஆங்கில நாடகமான 'சவப்பெட்டி'

1954 – 'லண்டன் கந்தையா' (230 மேடை யேற்றம் கண்டது)

1954 – ஒஸ்கார் வைல்ட்டின் நாடகத்தை தழுவி எழுதப்பட்ட 'ஸ்ரீமான் ஆனந்தம்'

1957 - இலங்கையர்கோன் மேடைக்கென எழுதிய 'மிஸ்டர் குகதாசன்'

1959 – திருச்சி சுந்தர் வானொலிக்கென எழுதிய 'சந்திப்பு'

1960 – ஒஸ்கார் வைல்ட்டின் நாடகம் மேடைக்காக சானா எழுதியது 'பதியூர் இராணி'

1961 – என்.எஸ்.எம்.ராமையாவின் 'ஒரு மின்னல்'

1962 – நவாலியூர் சோ.நடராசன் எழுதிய 'சகுந்தலா'

1962 – சி.சண்முகத்தின் மேடை நாடகம் 'பறந்தாயோ பைங்கிளி'

1962 – ரொசாயிரோ பீரிஸ் மேடைக்கென எழுதிய 'பதிவுத் திருமணம்'

1968 – எஸ்.பொன்னுதுரை வானொலிக் கெழுதிய 'வலை' நாடகத்தின் மேடை வடிவு சாணக்கியன்

சானாவின் வானொலி மற்றும் மேடை நாடக செயற்பாடுகள் அவரை ஒரு சகாப்தத்தின் பிரதிநிதியாகவே வரலாற்றில் பதிகிறது.



theliwathai.joseph@thaiveedu.com


# Vasuki Devadas Law Office

**For All Your Legal Needs......**

**Real Estate** - வீடு வர்த்தக நிலையம் வாங்குதல் - விற்றல்

"HST - New Housing Rebate and Residential Rental Property Rebate Claims/Appeals to CRA"

**Family Law** - குடும்பச் சட்டம்

**Immigration Law** - குடிவரவுச் சட்டம்

**Employment Law** - ஊழியச்சட்டம்

**Small Claim** - சிறு கோரிக்கைகள்

**Business Law** - வியாபார வர்த்தகச் சட்டம்

**Last Wills & Estate Planning** - உயில் சம்பந்தமான விடயம் இறுதி விருப்ப ஆவணங்கள் தயாரித்தல்

**Power of Attorney, Affidavits, Statutory Declaration** சத்தியப்பத்திரங்கள், தத்துவப்பத்திரம் தயாரித்தல்

**Notarization & Commissioning** - அத்தாட்சிப்படுத்துதல்



**Vasuki Devadas Law Office**
1415 Kennedy Road, Unit 3
(Next to RBC Bank @ Kennedy & Ellesmere),
Toronto, Ontario, M1P 2L6.
**416-266-1234**
vasuki@vdlaw.ca

**Vasuki Devadas**
Barrister, Solicitor & Notary Public

# ‘As Soon as possible and As Much as you can’



சிறீதரன் துரைராஜா
- ஆயுட் காப்புறுதி முகவர் -

### ஆயுட் காப்புறுதி ஏன், எதற்காக, எவ்வளவு தொகை, எப்போது பெற்றுக்கொள்வது?

ஆயுட் காப்புறுதி எந்த வயதில் பெற்றுக் கொள்வது அல்லது எவ்வளவு தொகைக்கு பெற்றுக் கொள்ள வேண்டும்; இப்படி பலர் கேள்வி எழுப்புவதை காணக்கூடியதாக இருக்கும். ஒருவர் எப்போது காப்புறுதி பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்கு தகுந்த பதில், ஒருவருக்கு நோய்கள் வருவதற்கு முன்பு அல்லது வயது கூடுவதற்கு முன்பு என்று கூறலாம். ஆனால், ஒருவருக்கு எந்த வயதில் நோய்கள் வரும் அல்லது அவரது ஆரோக்கியத்தில் பாதிப்பு ஏற்படும் என்று தெரிந்தால் அந்த நாளுக்கு முன்பு ஆயுட் காப்புறுதி பெற்றுக்கொள்ள முடியும்.

ஆனால், எங்களில் ஒருவருக்கும் நோய்கள் வருவதற்கான அல்லது மரணம் ஏற்படுவதற்கான தகவல்கள் அல்லது திகதிகள் தெரியாது இருப்பதால், ஆயுட் காப்புறுதியை எவ்வளவு விரைவாக அல்லது உடனடியாகப் பெற்றுக் கொள்வதே சிறந்தது.

எவ்வளவு தொகைக்கு காப்புறுதி தேவை என்பது ஒவ்வொருவரின் வசதிக்கேற்ப மாறு படும்.

உதாரணமாக நாங்கள் எவ்வளவு காலம் வாழப்போகின்றோம் என்ற கணக்கு சாியாகத் தெரிந்தால், அதற்கு முன்பு எவ்வளவு தொகை காப்புறுதி உங்களுக்கு தேவை என்று கேட்டால், அதற்கு என்ன பதில் கூறுவார்கள்? எவ்வளவுக்கு எவ்வளவு பெற முடியுமோ அவ்வளவுக்கும் அதிகமாக பெற்றுக்கொள்ள விரும்புவார்கள்.

எனவே நோய் அல்லது மரணம் எப்போது வரும் என்பது தெரியாதிருப்பதால் இயலுமானளவு அதிகமான தொகையை உடனடியாகக் காப்புறுதி செய்ய வேண்டும்.

‘As Soon as possible and as Much as you can’

(காப்புறுதி சம்பந்தமான உண்மைக் சம்பவம் ஒரு காப்புறுதி பத்திரிகையில் இருந்து) எழுபதுகளில் இந்தியாவில் இருந்து கனடாவுக்கு குடியேறிய ஒரு வர்த்தகர் ஆரம்பகாலத்தில் ஒரு தொழிற்சாலையில் வேலை புரிந்து கொண்டிருந்து விட்டு ஆறு மாதங்களின் பின்பு விடுமுறை எடுத்து இந்தியாவுக்கு திரும்பிச் சென்றார். அங்குள்ள அவரது குடும்பத்தினரின் உதவியுடன் இந்தியாவில் இருந்து சில லெதர் பொருட்களை (Leather Wares) இறக்குமதி செய்து அவற்றை கனடாவில் விற்பனை செய்ய ஆரம்பித்தார். அவர் வார இறுதி விடுமுறை நாட்களில் (Flea Markets) மற்றும் சிறு கடைகளில் இப்பொருட்களை விற்பனை செய்து வந்தார்.

மிகக் குறுகிய காலத்தில் அவரின் வியாபாரம் Wal-Mart, Winners போன்ற பெரிய நிறுவனங்களுக்கு விநியோகம் செய்யும் அளவிற்கு வளர்ந்து ஒரு பெரிய நிறுவனமாகிவிட்டது. அத்துடன் அவர் Chinaவில் உள்ள ஒரு தொழிற்சாலையிலும் பங்குதாரர் ஆகினார். 1980ம் ஆண்டில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியில் அவருடைய வியாபாரமும் வீழ்ச்சி யடைந்தது.

1985ம் ஆண்டளவில் இந்த வர்த்தகர் தன்னிடம் இருந்த பணம் வியாபாரம் செத்துக்கள் எல்லாவற்றையும் இழந்தார்.

ஆனால், அவர் வசதியாக இருந்த காலத்தில் ஒரு மில்லியன் டொலர்களுக்கு ஆயுட் காப் புறுதி பெற்றிருந்தார். தற்போது அதற்கான மாதாந்தக் கட்டணத்தைச் செலுத்துவதற்குக்கூட அவரிடம் பணம் இல்லை. அவருடைய சகோதரர் ஒருவர் அதற்கான மாதாந்தக் கட்டணத்தை செலுத்தி காப்புறுதியை தொடர்ந்து கொண்டிருந்தார். இந்தக் காப்புறுதி யைத் தவிர வேறு எதுவும் இவரிடம் இருக்க வில்லை.

இந்தக் காப்புறுதித் திட்டம் ஒரு நிரந்தரமான ஆயுட்காலம் வரை நீடிக்கும் திட்டமாக இருந்ததால் அதில் உள்ள ஒரு தொகைப் பணத்தை (Cash Surrender Funds) மீளப் பெற்று அவர் தொடர்ந்தும் தனது வியாபாரத்தை ஆரம்பித்தார். ஆறு வருடங்களில் அவர் மீண்டும் பழைய நிலையில் வியாபாரத்தை வளர்ச்சியடையச் செய்தார்.
அவர் ஆரம்பகாலத்தில் வசதியாக இருக்கும் போது அவரின் நண்பர் ஒருவர் ஆயுட் காப் புறுதி முகவராக இருந்தமையால் அவரின் வற்புறுத்தலால் அவர் ஒரு மில்லியன் டொலர் தொகைக்கு ஒரு ஆயுட்காலம் முழுவது நீடிக்கும் காப்புறுதியை பெற்றுக்கொண்டிருந்ததால் தற்போது அந்த ஆயுட்காப்புறுதித் திட்டம் அவருக்கு மிகவும் உதவியாக இருந்தது. எனவே ஒவ்வொருவரும் வசதிக்கேற்ப கூடிய தொகைக்கு ஆயுட் காலம் வரை நீடிக்கும் ஆயுட் காப்புறுதித் திட்டங்களை பெற்றுக் கொள்வதன் மூலம் பயனடைய முடியும்.

*ஆயுட்காப்புறுதி செயும்போது*

*உங்கள் சாரதி அனுமதிப்பத்திரம் (Driving Records)*

*பரிசோதனை செய்யப்படுகின்றது,*

*காரணம்*

*சாரதி அனுமதிப்பத்திரத்தில்*

*குற்றச்சாட்டு உள்ளவர்களின் ஆயுட்காலம்*

*ஆபத்தானது என்பதால்.* ”

மரணத்தின்போது நிதி ரீதியாகப் பார்த்தால் ஒரு மனிதனின் பெறுமதி மிகவும் குறைந்த நீலைக்கு வருகின்றது. வரும்போது அந்த மனிதனின் பெறுமதியை ஆயுட் காப்புறுதியின் தொகை நிர்ணயிக்கின்றது.

அண்மைகாலங்களில் பலரும் கூடிய தொகைக்கு ஆயுட்காப்புறுதி பெற்றுக்கொள்ள வேண்டும் என விரும்புகின்றார்கள். ஆனால், அவர்களின் ஆரோக்கியமின்மையால் கூடிய தொகைக்கு காப்புறுதி பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்படுகின்றது.

### ஆயுட் காப்புறுதி பெறுவதற்கு தடையாக இருக்கும் சில பிரதானமான காரணிகள்.

- அதிகளவு மதுபானம் அருந்துவது.
- போதைப் பொருட்களை உபயோகிப்பது.
- (Driving Record) வாகனம் ஓட்டுவதற்கான சாரதிப் பத்திரம் தடைசெய்யப்பட்டிருந்தால்.
- இருதயம், சிறுநீரகம் சம்பந்தமான நோய்கள் ஏற்பட்டிருந்தால் Heart Decease or Kidney Decease.
- புற்றுநோய் ஏற்பட்டிருந்தால் (Cancer).

நோய்கள் வருவத்கு முன்பு சிறிய வயதில் கூடிய தொகைக்கு காப்புறுதி பெற்றுக் கொள்வது சிறந்தது. எல்லாத் திட்டங்களுடனும் ஒப்பிட்டுப் பார்த்தால் ஆயுட் காலம் வரை நீடிக்கும் நிரந்தர ஆயுட்காப்புறுதியே எந்தக் காலகட்டத்திலும் சிறந்த திட்டமாக இருக்கின்றது. இப்படியான திட்டங்களால் ஒரு போதும் நாங்கள் மாதாந்தம் செலுத்தும் பணம் விரயமாகாது.

மிகவும் இலகுவான முறையில் செல்வந்தராக வருவதற்கான வழிகளில் ஒன்று மிகவும் சிறிய வயதில் ஆயுட் காப்புறுதியைப் பெற்றுக்கொள்வது. ஆனால் நாங்கள் இப்போது அதைத் தவறவிட்டிருந்தால் எங்கள் பிள்ளைகள் அல்லது பேரப்பிள்ளைகள் அதைத் தவறவிடாமல் பெற்றுக்கொள்வதற்கு நாங்கள் உதவி செய்ய முடியும்.

ஆயுட் காப்புறுதி அவசியம் தேவைதானா என்பதை அறிவதற்கு நாங்கள் எங்களிடம் சில கேள்விகளை கேட்டுப்பார்த்து அறிந்து கொள்ளலாம்.

- எதிர்பாராத விதமாக நான் நேற்று இறந்திருந்தால் இன்று எனது குடும்பத்தின் நிலைப்பாடு எப்படி இருக்கும்.
- நாங்கள் குடியிருக்கும் வீட்டுக்கான வாடகைப்பணம் அல்லது வீட்டுக்கடனுக்கான பணத்தை இன்று முதல் யார் எப்படி செலுத்துவது?
- எங்கள் குழந்தைகளின் கல்விக்கான செலவுகளை யார் கொடுப்பது?
- நாங்கள் உழைக்கும் பணம் முழுவதும் எங்கள் குடும்பத்திற்காகவே செலவு செய்யப்பட்டிருந்தால் நாங்கள் இல்லாத கட்டத்தில் எங்கள் குடும்பத்தின் தேவைக்கான பணத்தை எப்படி பெற்றுக்கொள்வது.

இப்படியான கேள்விகளை நாங்கள் ஒவ்வொருவரும் எங்களிடம் நாங்கள் கேட்டால் ஆயுட் காப்புறுதியின் அவசியத்தை அறிய முடியும்.

sritharan@thaiveedu.com

■ ■ ■

*தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்.*

*விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான*

*பாதையில் இட்டுச்செல்லும்.*

***E-mail: info@thaiveedu.com***

***Fax: 416-849-0594 Tel: 416-646-3422***

இறுக்கமான சூழலில் இலகுவான தீர்வு

Life100
INSURANCE & INVESTMENTS INC.

சிறீதரன் துரைராஜா
காப்புறுதி முகவர்
MDRT The Premier Association of Financial Professionals®
416.918.9771
info@life100.ca



Serving you in two locations
759 Warden Ave., Scarborough, ON M1L 4B5, Tel: 416-830-0386
10 Milner Business Court, Suite 208, Scarborough, ON M1B 3C6 Tel: 416.321.2500

# இறுக்கமான சூழலில் இலகுவான தீர்வு

$1மில்லியன் டொலருக்கான ஆயுட்காப்புறுதி- மாதாந்தக் கட்டணம்

ஆண் $41.40* | பெண் $27.90*

*based on current rates for 10 year term insurance to elite non smoker age 30

- நோய்வாய்ப்பட்டால் அல்லது விபத்துக்குள்ளானால் மாதாந்த வருமானத்துக்கான காப்புறுதி
- கொடிய நோய்களால் பாதிக்கப்பட்டால் 2 மில்லியன் வரை காப்புறுதி
- ஆயுட்காலம் வரை நீடிக்கும் ஆயுட்காப்புறுதி
- மருத்துவப் பரிசோதனை இல்லாத காப்புறுதி

Life100
INSURANCE & INVESTMENTS INC.

LIFE • CRITICAL ILLNESS
• MEDICAL INSURANCE FOR SUPER VISA
• HEALTH & DENTAL • MORTGAGE INSURANCE
• GROUP BENEFITS • RRSP • RESP
• DISABILITY INSURANCE • LONG TERM CARE

உங்களுக்கு உகந்த காப்புறுதித் திட்டங்களை பல்வேறு நிறுவனங்களுடன் ஒப்பிட்டு குறைந்த கட்டணத்தில் பெற்றுக்கொள்ள அழையுங்கள்.

**FREE CLASSES**
To Become RESP & INSURANCE ADVISORS

La Capitale · Desjardins · Manulife Financial · INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC. · Assumption Life · Canada Life

MDRT Member of Million Dollar Round Table



**Sritharan Thurairajah**
Chartered Life Underwriter, Certified Health Insurance Specialist
Direct: 416.918.9771
Business: 416.321.2500

- digi Media -

10 Milner Business Court, Suite 208, Scarborough, ON M1B 3C6
Web: www.life100.ca, E-mail: info@life100.ca



# கடன் தேவையா?

என்னை அழையுங்கள்
ரம்போ தர்மலிங்கம்

வீட்டுக்கடன்
வியாபாரக்கடன்
முதலீட்டுக்கடன்
வருமான உத்தரவாதம் இல்லாமலே பெற்றுக் கொடுக்கப்படும்

Residential Mortgages - Commercial Business Loans - Investments
1st and 2nd Mortgages - Private Funds Available
Debt Consolidation - Refinance
No Income Confirmation - No Down Payment Confirmation
Call me for more details...

August 01, 2014 to November 30, 2014
என்னிடம் மோட்கேஜ் செய்பவர்களுக்கு
iPAD இலவசம்*




Every deal Rewarded with ipad after the funded

VIA FINANCIAL SERVICES INC.

**Rambo Tharmalingam**
Mortgage Agent
Licence # M08008479
rambo@viafinancial.ca
647-290-3416 / 416-543-1111
5200 Finch Ave. E. Unit 302, Scarborough, ON. M1S 4Z5





















இம்மாதப் புகைப்படக் கலைஞர்

## சிவப்ரியா சிவகடாட்சம்

ரொறன்ரோவில் Tech Digital நிறுவனத்தின் தொழில்நுட்பப் பிரிவில் பணிபுரியும் இவர் தனது சுற்றுலாவின்போது பதிவு செய்த புகைப்படங்களில் சில.

**உங்களிடம், நீங்கள் எடுத்த அழகான புகைப்படங்கள் இருக்கின்றனவா? அவற்றை நாங்கள் பிரசுரிக்க விரும்புகிறோம்.**

புகைப்படம் எடுத்தவரின் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் என்பவற்றுடன் எடுக்கப்பட்ட காட்சி பற்றிய விபரங்களையும் குறைந்தது 8 நிழற்படங்களையும் mphoto@thaiveedu.com என்னும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவையுங்கள். நிழற்படங்கள் jpg வடிவத்தில் (format) 5”x7” அளவிற்குக் குறையாமல் 300dpi resolution இலும் இருக்கவேண்டும். நிழற்படங்கள் கணினியில் வரைகலை மாறுதல்கள் செய்யப்பட்டிருக்கக்கூடாது.

